2714

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XLIX NO: 2 and 3

April 11th and 12 1983

C

V211,31 N83

N83-49.2&3;1

136035

வெளியீடு 15-11-1983]

[Issued 15-11-1983

(12)

2214

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பதிவுத்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை ஏப்ரல் 11, 1983—தொகுதி XLIX எண் 2

Monday 11th April 1983—Volume XLIX No. 2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George

Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 Paise

V2ll,31 N83
N83.49. 24351
136035

உள்ளடக்கம்.

11—4—1983.

| | பக்கம் |
|---|---|
| 1. இரங்கல் குறிப்பு : | |
| முன்னாள் உறுப்பினர் திரு. பா. க. சி. முத்துசாமி மறைவு. | 233 |
| 2. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 234—262 |
| 3. தகவல் கோரல் : | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை. | 262—263 |
| 4. அறிக்கைகள் அளித்தல் : | |
| (அ) மதிப்பீட்டுக் குழு. | 263 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு. | 263—264 |
| 5. வரவு—செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். | 264—363 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 264—265<br>341—362 |
| திரு. பாபு ஜனார்த்தனன். | 265—268 |
| திரு. சு. முத்துக்கிருஷ்ணன். | 268—273 |
| திரு. எல். இளையபெருமாள். | 273—283 |
| திரு. கே. ஆர். கணபதி. | 283—285 |
| திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். | 285—287<br>288—290 |
| திரு. கோவைத்தம்பி. | 290—294 |
| திரு. தி. கா. நல்லப்பன். | 294—297 |
| திரு. ஆர். ரங்கசாமி. | 298—302 |
| டாக்டர் கே. சௌரிராஜன். | 302—307 |
| திரு. ஏ. சாகுல் ஹமீது. | 307—311 |

| | பக்கம் |
|---|---|
| திரு. கே. தனுக்கோடித் தேவர். | 311—314 |
| திரு. கு. பா. பழனியப்பன். | 314—318 |
| திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். | 318—321 |
| திரு. எஸ். சிவராமன். | 322—326 |
| டாக்டர் கே. சமரசம். | 326—330 |
| திரு. வி. கிருஷ்ணமூர்த்தி. | 330—341 |
| 6. அறிவிப்பு : மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1974-75. | 363 |
| 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் : | 363—364 |


---

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1983, ஏப்ரல் 11,

பங்குனி 28, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை "

போர்க்களத்தில் பலரிடையில் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அஞ்சாத வீரர் போல, குடியில் பிறந்தவரிடையிலும் தாங்க வல்லவர் மேல்தான் பொறுப்பு உள்ளது.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. பா. க. சி. முத்துசாமி மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பா. க. சி. முத்துசாமி அவர்கள் 9—4—1983-ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. க. சி. முத்துசாமி அவர்கள் 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரை தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியிலிருந்தும், மற்றும் 1977-ஆம் ஆண்டிலிருந்து 1980-ஆம் ஆண்டு வரை தர்மபுரி மாவட்டம் தர்மபுரி தொகுதியிலிருந்தும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

1958-ஆம் ஆண்டு முதல் பாளையம்புதூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1961-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை பாளையம்புதூர் உயர்நிலைப்பள்ளி கட்டிடக் குழுத் தலைவராகவும், மற்றும் 1961-ஆம் ஆண்டு முதல் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். மேலும், தர்மபுரி கூட்டுறவு ஒன்றியச் செயலாளராகவும், தர்மபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நெறியாளராகவும், சேலம் மத்திய நூல் நிலைய அதிகார சபை உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதைத் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்).

## 2. வினாக்கள் விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தொண்டியில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 712—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொண்டியில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) விரைவில், கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விரைவிலே என்றால் எப்போது ? துவக்க வேலைகள் ஏற்பாடாகி இருக்கிறதா ? அதற்கு என்ன எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி என்ற இடத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்காக மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக செயற்குறிப்பு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. 21-12-1982 ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் மத்திய அரசு ரூபாய் 41 இலட்சத்திற்கு மிகாமல் ஒரு துறைமுகம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலை அளித்திருக்கின்றது. ஆகவே இப்போதிருக்கின்ற சூழ்நிலையில் 41 இலட்ச ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கட்டிக் கொடுக்கப்படும் மீன்பிடி துறைமுகங்கள் விசைப்படகுகளுக்குத்தான் பயன்படுகின்றன. கட்டுமர மீனவர்கள் தங்கள் கட்டுமரங்களை தாங்களாகவேதான் கரைக்கு தூக்கி வருகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கட்டுமரத்தை நிறுத்தி வைக்க தனியாக துறைமுகம் அமைக்கப்படுமா? இல்லையென்றால் ஒவ்வொரு மீனவர் கிராமத்திற்கும் கட்டுமரத்தை தூக்கி வைக்க கிரேன் என்ற பளுதூக்கி இயந்திரம் [illegible]ங்கப்புடுமா என்று அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு துறைமுகத்தை எப்படிக் கட்டினாலும் கட்டுமரத்தைக் கொண்டு வந்து சேர்க்கவே முடியாது. கட்டுமரத்தினுடைய இயல்பும், வாகும் அதனுடைய அமைப்பும் கரையில் மண்ணிலேயிருந்து இழுத்துக் கொண்டு வந்துபோட்டு, மறுபடியும் தண்ணீரிலே தள்ளுவதற்கேற்ற வகையிலேதான் அமைந்திருக்கின்றது. தடுப்புச் சுவர் கட்டினாலும் கூட, கட்டுமரக்காரர்கள் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுகிறார்கள். ஆகவே கட்டுமரத்தைப் பொறுத்தவரையில் தனித்துறைமுகம் கட்டவேண்டிய அவசியமில்லை.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 41 இலட்சம் ரூபாய் செலவில் மீன்பிடி துறைமுகம் கட்டவிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதனுடைய செலவினங்கள், மற்றைய விவரங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ரூ. 41 இலட்சத்திற்கு மிகாமல் கட்டி முடிக்க வேண்டுமென்று மத்திய அரசு நமக்குத் தெரிவித்திருக்கிறது. அதிலே பாதிச் செலவை மாநில அரசு ஏற்கும். சரிபாதிச் செலவை மத்திய அரசு ஏற்கும். ஆனால், அதற்கான பணிகளுக்கு அனுமதி வந்துவிட்டதன் காரணமாக, இந்த ஆண்டிலே துவக்க இருக்கிறோம். ஆனால், இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டதா, இல்லையா என்ற விவரக் குறிப்பு இல்லை. அதைத் தனியாகச் சொல்லலாம், ஆனால், அனுமதி பெற்றுவிட்டதனால் அதனுடைய கட்டுமானப் பணிகள் விரைவிலே துவக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக் கொள்ளலாம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டியில் ஏற்படுத்தவிருக்கிற மீன் பிடிதுறைமுகம் தவிர, வேறு எங்கெங்கு மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகளை மீனள மானியக் கோரிக்கை வந்தபொழுது நான் தெளிவாக எடுத்துச் சொன்னேன். அது பற்றிய முழு விவரக் குறிப்புகள் இப்பொழுதில்லை. வேறு சில இடங்களுக்கும் ஒப்புதல் அளிக்கும்படியாக மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். வேறு சில இடங்களைப் பற்றியும் பெங்களூரில் இருக்கிற ஆய்வுக் குழுவினர் ஆராய்ச்சி செய்து எங்கே துறைமுகம் கட்டலாம் என்று அவர்கள் அறிவிப்பு தந்ததற்குப் பிறகு நாம் மத்திய அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பி வைக்க வேண்டுமென்று சில பல இடங்கள் பற்றியும் நாம் குறிப்புகள் அனுப்பியிருக்கிறோம். அது பற்றி முன்பு விரிவாகச் சொல்லியிருக்கிறேன். தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்கமுடியும்.

[1983 ஏப்ரல் 11

## மணச்சநல்லூரிலுள்ள அரிசி ஆலைகள்.

*வினா எண். 713.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: திரு. டி. மணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் அரிசி ஆலைகள் லெவி கொடுத்தது போக மீதமுள்ள இரண்டாயிரம் டன்களுக்கு அதிகமாக இருப்புள்ள அரிசியை கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு விற்பனை செய்ய முன் வந்ததை சிவில் சப்ளை அதிகாரிகள் அண்மையில் அனுமதி அளிக்க மறுத்துள்ளார்களென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) அதன்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) 16–2–1983 முதல் திருச்சி மாவட்டத்தில் லால்குடி முசிரி, குளித்தலை மற்றும் திருச்சிராப்பள்ளி வட்டங்களில் தனியார் மொத்த வியாபாரிகள் வாணிபம் செய்வது தடை செய்யப்பட்டதை தொடர்ந்து மொத்த வியாபாரிகள் அனைவரும் 16–2–1983க்கு முன்பாக வாங்கிய நெல், அரிசிக்கு லெவி கொடுத்துவிட்டனரா என்பதை கணக்கிட சில நாட்களுக்கு மொத்த வியாபாரிகளும் ஆலை அதிபர்களும் நெல் அரிசி விற்க அனுமதிக்கப்படவில்லை.

(இ) இப்போது மணச்சநல்லூர் வியாபாரிகள் சித்தாமணி சிறப்பு அங்காடிக்கு அரிசி விற்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்..

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் முதலிலே நமது கூட்டுறவுக்குத் தருவதற்குத் தயாராக இருந்தார்கள். அவைகளைக் கொள்முதல் செய்திருந்தால் அந்த வட்டாரத்தில் இருக்கக் கூடிய ஜனங்களுக்கு விநியோகிப்பதற்கும் உபயோகமாக இருந்திருக்கும். இன்னும் சொல்லப்போனால், அந்த அனுமதி கிடைக்காததன் காரணமாக, சுமார் 10,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சுமார் 1 மாதத்திற்கு மேலாகவே வேலையில்லாமல் இருந்தார்கள். இப்படிப்பட்ட காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு முன்வருமா ? இப்பொழுது அவர்கள் விற்ற நெல்லையெல்லாம் கூட்டுறவுக்கு கொடுத்திருக்கிறார்களா ? அல்லது வெளியே மற்ற மாவட்டங்களுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 16—2—1983 அன்று நாம் இந்த ஆணையைப் பிறப்பித்தோம். தஞ்சை மாவட்டத்திலே போடப்பட்டிருக்கிற அந்த ஆணை, தஞ்சை மாவட்டத்தை ஒட்டியிருக்கின்ற



1983 ஏப்ரல் 11]

திருச்சி மாவட்டத்திலே வருகின்ற தாலூகாக்களுக்கும் பொருந்தும் அதிலே, முசிறி, குளித்தலை எல்லாம் வருகிறது. 16–2–1983-லே ஆணை பிறப்பித்ததன் காரணமாக, ஏற்கெனவே லெவி கொடுத்தோ, அல்லது லெவி கொடுக்காமலோ, நெல்லை வாங்கி வைத்திருக்கிற வியாபாரிகள் விற்பனை செய்ய முடியாத அளவுக்கு ஒரு தடை ஏற்பட்டது. அந்த நிலையிலேதான் 16—2—1983 அன்று அவர்கள் தங்களிடத்திலே, லெவி கொடுத்தது போக மீதியிருக்கிற அரிசியைக் கூட்டுறவு அங்காடிகளுக்குத் தருகிறோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், லெவி கொடுத்தது, லெவி கொடுக்காதது என்ற கணக்கைப் பார்க்க சில பல நாட்களுக்கு மட்டும் தடை இருந்தது என்றும் பிறகு, அதையெல்லாம் சரிபார்த்ததற்குப் பிறகு, லெவி கொடுத்ததை விற்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றும்— ஏற்கெனவே லெவி கொடுத்த, பிற இடங்களுக்கு அத்தகைய சூழ் நிலைகள் இருந்ததாகத் தெரியவில்லை.—இப்பொழுது சிந்தாமணி சிறப்பு அங்காடிக்கே தருகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில நாட்களுக்கு மட்டும் அந்தக் கணக்குப் பார்ப்பதற்காக தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது. இப்பொழுது அந்தப் பிரச்சினை அங்கே இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கூட்டுறவு சிந்தாமணி சிறப்பு அங்காடிக்குக் கொடுக்க முன் வந்தார்களே, என்ன விலைக்குக் கொடுப்பதற்கு முன்வந்தார்கள் என்பதைப் பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் இருந்தால் அது பற்றி தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்ச நல்லூரிலே மட்டும் அல்ல, தமிழ்நாட்டிலே வேறு இடங்களிலே 50 சதவீத லெவியினாலே ஒரு டன்னுக்கு சுமார் ரூ. 600 நஷ்டம் ஏற்படுகிறது என்று மொத்த வியாபாரிகள் சொல்லி, இன்றைக்கு மொத்த வியாபாரிகள் வியாபாரம் செய்யாமல் அரிசி ஆலையிலே உள்ள தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிற தகவல் ஏதும் அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், தஞ்சை மாவட்டத்தை ஒட்டியிருக்கிற திருச்சி மாவட்ட தாலூகாக்களுக்கும் மட்டும் தான் முழு கொள்முதலையும் அரசே நேரிடையாக, விவசாயிகளிடத்திலேயிருந்து வாங்கிக் கொள்ளும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். மற்றைய இடங்களிலே எப்பொழுதும் போல் இருந்து வருகிற லெவிமுறைதான் இருந்து வருகிறது. 50 சதவீதம் லெவி நெல்லைக் கொடுத்துவிட்டு மீதி நெல்லை அவர்களுடைய விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். அதைத் தடுத்து

(முற்பகல் 9-10)

நிறுத்துவதற்கு நமக்கு உரிமை இல்லை. ஆகவே, ஒன் ஸோன் என்று இந்தியா ஆகிவிட்டதன் காரணமாக எங்கே வேண்டுமானாலும் அவர்கள் எடுத்துக் கொண்டு போக லாம். ஆனால் மற்ற இடங்களைப் பொறுத்தவரையில் இப்படிப் பட்ட பிரச்சினைகளுக்கு இடமே இல்லை. தஞ்சை, திருச்சி மாவட்டங்களைப் பொறுத்துத்தான், இந்த வியாபாரிகள் இப் பொழுது கொள்முதல் செய்ய முடியாத அளவிற்கு, தங்களுடைய வியாபாரம் நடக்கவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டிருக் கின்ற சூழ்நிலை இருந்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அரசே நேரடியாகக் கொள்முதல் செய்வ தாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் பிற மாவட்டங் களில் 50 சதவீதம் லெவியை அவர்கள் அரசுக்குக் கொடுத்து விட்டு, பாக்கியை என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம் என்ற முறை இருக்கிறது. இதனால் வாங்கிச் சாப்பிடுகின்ற மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே எல்லா மாவட்டங்களிலும், தஞ்சை, திருச்சி மாவட்டங்களைப் போல நேரடியாக அரசே கொள்முதல் செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, மற்ற பலயிடங்களிலே பற்றாக்குறை, விளைச் சலிலே மிகக் குறைவாக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், முழுக் கொள்முதலையுமே அரசே செய்து கொள்ளுகின்ற சூழ் நிலை ஏற்படுமேயானால் அரசின் சார்பாகப் பங்கீட்டு முறை களுக்குத்தான் அந்த அரிசி, நெல்லைப் பயன்படுத்த வேண்டி வரும். பிறகு வெளிச் சந்தைக்கே நெல்லோ, அரிசியோ வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதுமட்டுமல்லாமல் மற்ற பல இடங்களிலே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும், கிடைக்கின்ற அளவிற்குப் பலன் உள்ள தன்மைகள் பிற மாவட்டங்களுக்குக் கிடைக்கவில்லை, இப்பொழுது திருச்சி மாவட்டத்திலே போட்டிருக்கிறோமே தவிர அங்கே எதிர்பார்த்த பலன் வரவில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் இருப்பிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்திதான் தெரிகிறது. ஆனால் இரட்டை விலை முறைகள் என்பது, லெவிக்கு ஒரு விலை கொடுத்துவிட்டு, பிறகு அதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தை வெளிச் சந்தை விலையிலே அவர்கள் சரிக்கட்ட வேண்டுமென்ற கட்டங்கள் வருகின்றன. அது இந்தியா முழுவதும் இருக்கின்ற எல்லா மாநிலங்களைப் பொறுத்தும் அமைந்திருக் கின்ற ஒரு தன்மையாகும். எப்பொழுதும் போல இருந்து வரு கின்ற சூழ்நிலைதான் இப்பொழுதும் இருந்து வருகிறது. வெளிச் சந்தைக்கு அரிசி போவதற்கு 50 பர்செண்ட் லெவி தவிர மீதி நெல்லை அவர்களிடத்திலே விட்டு வைப்பதுதான் மிகப் பொருத்த மாக அமையும்.





திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, திருச்சி மாவட்டத்திலுள்ள திருச்சி தாலுக்கா, மணச்சநல்லூர் ஆகிய இடங்களில் லெவி கொள்முதலாக அரசு எவ்வளவு நிர்ணயித்துள்ளது? நிர்ணயிக்கப்பட்ட லெவி அள விற்கு வசூலிக்கப்பட்டு விட்டதா? இன்னும் எவ்வளவு லெவி வர வேண்டியிருக்கிறது, லெவி பாக்கி எவ்வளவு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தஞ்சை மாவட்டத்தை ஒட்டியுள்ள திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வட்டங்களைப் பொறுத்தவரையிலும் லெவி முறை களை இப்பொழுது நாம் வைக்கவில்லை. விவசாயிகள் தங் களுடைய தேவைக்குப் போக, மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் என்று சொல்லுகின்ற அளவிற்குச் சந்தையிலே விற்க வருகின்றபொழுது அதை அரசேதான் கொள்முதல் செய்யுமே தவிர தனியார் கொள்முதல் செய்யமாட்டார்கள். அரசு கொள்முதல் செய் கின்றபொழுது 122 ரூபாய் குவிண்டாலுக்கு, வறட்சிச் சலுகை என்ற முறையில் மேற்கொண்டு 15 ரூபாய் கொடுத்து வாங்கு வோம் என்ற முறை இருக்கிறது. விவசாயிகளிடத்தில் வாங்கும் பொழுது லெவி என்ற ஒரு அளவு முறை இல்லை.

### கும்பகோணம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்

*வினா எண் 717—திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அனைத்துப் பகுதிகளுக்கும் நிறைவேற்றப்பட்டு உள்ளதா?

(ஆ) இல்லையெனில் எப்போது நிறைவேற்றி முடிக்கப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) பாதாள சாக்கடை அமைக்க, கும்பகோணம் நக ராட்சி 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது பகுதியில் மட்டும் இத்திட்டம் 1969–70-ல் செயற்படுத்தப்பட்டது. மற்ற ஏனையப் பிரிவுகளுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க திருத்திய உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

[1983 ஏப்ரல் 11

திரு. எஸ். இளையபெருமாள்: : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப் பட்டு வருகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். முன் கூட்டியே முனிசிபாலிட்டி இதற்குத் தேவையான கட்ட வேண் டிய தொகையைக் கட்டியிருந்தும், மேற்கொண்டு அந்த வேலை நடைபெறாமல் இருப்பது உண்மையா? அப்படியானால் இப்பொழுது கும்பகோணத்தைப் பொறுத்தவரையில் அது பெரிய நகரம், போக்குவரத்துக்கும் தொந்தரவு இல்லாமல் இருந்து வரும் இடமாகவும் இருக்கிறது. பணம் கொடுத்தும் காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன அல்லது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, பாதாள சாக்கடை அமைப்பதற்கு 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 5-வது பிரிவில் வேலை முடிந்து விட்டது. 3, 4 ஆக எடுத்துக் கொள்ளலாம் என்று அங்கே யோசனை செய்தார்கள். ஆனால் 29-11-1978 அன்று நான் கும்பகோணம் சென்றிருந்தேன். அப்போது ஒவ்வொரு திட்டமாக எடுப்பதைவிட எல்லா திட் டங்களையும் சேர்த்து திட்டமிடுவதற்கு அனுப்புங்கள். அப் போது தான் கும்பகோணத்திற்கு நல்லது என்று சொன்னேன். அதன்படி 6 திட்டங்களில் 5-வது திட்டம் முடிவடைந்து, மற் றைய திட்டங்களுக்காக சுமார் 318·29 இலட்சத்திற்கு உத் தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு செயல்படுத்துவதற்காக 1979-ஆம் ஆண்டிலே அது வந்திருக்கிறது. அந்த உத்தேச மதிப்பீடு தமிழக குடிநீர் வடிகால் வாரியத்தில் 'எஸ்கலே ஷனை' மனதில்கொண்டு திருத்தப்பட்டு வருகிறது. அரசு அனு மதி கொடுத்துவிட்டால், கும்பகோணம் பூராவும் செயல்படுத்து வதற்கு உதவியாக இருக்கும்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, நடப்பு நிதி யாண்டில், கும்பகோணம் பாதாள சாக்கடைத் திட்டம் போல் தமிழகத்தில எத்தனை திட்டம் உருவாகியிருக்கிறது? அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் தரமுடியும்.

தஞ்சாவூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

* வினா எண் 718—திரு, இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—



1983 ஏப்ரல் 17]

தஞ்சாவூர் குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குடிநீர் அபி விருத்தித் திட்டம் முடிக்கப்பட்டு தஞ்சை நகர மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, தஞ்சாவூர் தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாகும். அங்கே பிரகதீஸ்வரர் ஆலயம் இருப்பதாலும், அது ஒரு சுற்றுலா ஸ்தலமாக இருப்ப தாலும், வர்த்தக மையமாக இருக்கின்ற காரணத்தாலும், அங்கே என்ன ஜனத்தொகையைக் கணக்கிட்டு குடிநீர்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது? அது சரியாக இருக்கிறதா? அங்கே தினசரி வந்துபோகிற மக்கட்தொகை கணக்கிட்டு இந்தத் திட் டம் திட்டமிடப்பட்டுவருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்த என்னுடைய சொந்த ஊர் என்பது மாண்புமிகு தாமரைக்கனி அவர்களுக்குத் தெரியும். மக்கட் தொகையை கணக்கெடுத்து, விளாங்குடியிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் சரியாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரியாக செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் சொன்னால் மேற்கொண்டு என்ன?

திரு. இரா. தாமரைக்கனி: இப்போது எவ்வளவு தான் திட்டம் திட்டப்பட்டாலும், இன்னும் தஞ்சாவூரில் தண்ணீர் பற்றாக்குறையாகத் தான் இருக்கிறது. வறட்சியான காலத்தில் தமிழகத்திற்கு, டில்லி மந்திரி எங்கெங்கே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறதோ அங்கு இரயில் மூலமாக தண்ணீர் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார். காவிரி நீர் கிடைக்காவிட்டாலும் கிருஷ்ணா நதி நீர் இரயில் மூலம் தஞ்சாவூருக்குத் கிடைக்க இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தஞ்சாவூரிலிருந்து அப்பேற்பட்ட கோரிக்கை வந்து அதை குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்து, அங்குள்ள நகராட்சித் தலைவர் அல்லது ஸ்பெஷல் ஆபிசர் மூலமாக ஏதாவது ரிப்போர்ட் வருமேயானால், அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என் இட்டப்பா: தஞ்சாவூர் குறிப்பாக ராஜராஜ சோழனும், ராஜேந்திர சோழனும் ஆட்சி புரிந்து தமிழகத்திற்கே பெருமை தேடித் தந்ததாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய சிறப்பு வாய்ந்த அந்த பூமிக்கு விரைவில் குடிநீர் திட்டத்தைக்

[1983 ஏப்ரல் 11

கொண்டுவர தஞ்சாவூர் மாவட்டத்திலே பிறந்து. வேறு மாவட்டத்திலே வளர்ந்து இருந்தாலும், தஞ்சாவூருக்கு உரித்தான மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கு வழிவகை காண முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தத் தஞ்சாவூரிலே வடக்கு வீதியில் உள்ள செயிண்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூலில் தான் படித்தேன். எனக்கும் தெரியும். தண்ணீர் விளாங்குடியிலிருந்துதான் கொண்டு வந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. வழியோரக் கிராமங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறைபாடுகள் இருக்கிறதென்று வருமேயானால் அதை மீண்டும் பரிசிலனை செய்யலாம்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கான லைசென்ஸ்.

*வினா எண். 719 திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிசை மாற்று வாரியத்தைச் சேர்ந்த குடியிருப்புகளில் குடியிருப்பவர்கள் செலுத்திவந்த லைசென்ஸ் தொகை உயர்த்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த அடிப்படையில் எவ்வளவு தொகை உயர்த்தப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.: (அ) ஆம்.

(ஆ) குடியிருப்பின் கட்டுமானச் செலவு அதிகரித்துள்ளதால குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு மாத வாடகை உயர்த்தப்பட்டுள்ளது. 30-8-1980-க்கு முன்பு வகுவித்த வாடகை வீதமும் தற்போது விதித்துள்ள வாடகை வீதமும் பின்வருமாறு :

| | முன்பு இருந்த வாடகை. | தற்போது விதித்துள்ள வாடகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| மின்சாரம் மற்றும் குடிநீர் வசதியுள்ள குடியிருப்புகள். | 15.00 ஆக இருந்தது. | 25.00 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. |
| மின்சாரம் மட்டும் உள்ள குடியிருப்புகள். | 13.00 ஆக இருந்தது | 23.00 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. |



1983 ஏப்ரல் 17]

| | முன்பு இருந்த வாடகை. | தற்போது விதித்துள்ள வாடகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| குடிநீர் மட்டும் உள்ள குடியிருப்புகள் | 12.00 ஆக இருந்தது. | 22.00 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. |
| மேற்கண்ட வசதிகள் இல்லாத குடியிருப்புகள். | 10.00 ஆக இருந்தது | 20.00 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. |

(முற்பகல் 9-20).

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் வசதி உள்ளது மின்சார வசதி உள்ளது. மற்றும் ஏனைய வசதியுள்ளவைகள் என்று 3 தரமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதே, அது ஆரம்பத்திலே அந்தக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைக் கட்டும்போதே இந்த வசதிகளை யெல்லாம், குடிநீர் வசதி; மின்சார வசதி கொடுப்பது போன்றவற்றை முதலிலே செய்யாமல், ஏன் பின்னால் செய்யப்படுகிறது. அதைக் கட்டுகிற நேரத்திலேயே இந்த வசதிகளையும் சேர்த்து செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வசதியைப் பொறுத்த வரையில் அது முதலில் கொடுக்கப்பட்டது. அதை சரியாக அவர்கள் உபயோகிக்காத காரணத்தால் மின்சார வசதி செய்து கொடுப்பதிலே வேண்டுமானால் என்.ஓ.சி. கொடுக்கலாம் என்று முடிவு எடுத்துவிட்டு அந்த முறை இருந்துகொண்டிருக்கிறது. எங்கெங்கே தண்ணீர் கிடைக்கிறதோ, அந்த தண்ணீரை மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, வீடுகளிலே குழாய் வைத்து குடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. சில இடங்களில் மட்டும், குறிப்பாக வாழைத்தோப்பு போன்ற இடங்களில் மட்டும் எந்த வசதியும் இல்லை என்ற காரணத்தால் அப்படி கொடுக்கவில்லை. ஆனால் கீழே வந்து குடிநீர் எடுப்பதற்குத் தண்ணீர் பப்ளிக் பவுன்டன், பொதுக் குழாய் மூலமாக அவர்களுக்குத் தரப்படுகிறது. இப்போது இன்னும் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கக் கூடிய இடங்களில் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுப்பதற்காக குடிசை மாற்று வாரியத்தின் லாரிகள் மூலமாகவும், குடிநீர் வழங்கு, மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்தின் லாரி மூலமாகவும் குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த குடிசை மாற்று வாரியத்தைச் சேர்ந்த குடியிருப்புகளில் போதுமான சுகாதார வசதி இல்லாமல், இருப்பதோடு, சரியானபடி மெயின்டெனன்சும் இல்லை. அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு ஒரு தடவை சொல்லும்போது இந்த

குடியிருப்புகளை அங்கு குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கும் ஒரு திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தச் சொந்தமாக்கும் திட்டம் இப்போது எந்த முறையில் இருக்கிறது ? அப்படிச் சொந்தமாக்கினால் அவர்கள் மாதா மாதம் கட்டவேண்டிய தவணைத் தொகை சுமாராக எவ்வளவு வரும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பிரச்சினை தான் இப்போது டிலே ஆகியிருக்கிறது. சொந்தமாக்கிவிடுவது என்பது முடிவாகிவிட்டது. எவ்வளவு அவர்கள் மாதா மாதம் இன்ஸ்டால்மெண்ட் கொடுக்கவேண்டியது என்பதைக் கணக்கிட்டு முடிவு எடுப்பதற்காக அமைச்சரவையில் அது வைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவை முடிவு எடுத்த பிறகு எந்தெந்த வீட்டுக்கு எவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்து, அது சொந்தமாக்கிக் கொடுக்கப்படும். சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும் என்பது முடிந்த முடிவு.

திரு. பி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தைச் சேர்ந்த குடியிருப்புகளில் குடியிருப்பவர்களில் சிலர் அதில் சிறிது காலம் இருந்துவிட்டு அதை வேறு படைத்தவர்களுக்கு கொடுத்துவிட்டு திரும்பவும் குடிசைக்கு வந்துவிடுகிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை வெளியேற்றிவிட்டு உரியவர்களுக்கே இடம் கொடுப்பதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அதற்கு ஆதரவு தரவேண்டும் என்றும் அவர்களை வெளியேற்ற வேண்டாம் என்று போராடாமல் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் மிகவும் பணிவன்போடு இந்த நேரத்திலே வேண்டிக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட வீடுகளில் டாக்டர் சந்தோசம் நகர், ஓட்டேரி சுடுகாடு—இடுகாடுக்கு எதிர்த்தார்ப்போல் உள்ள ராதா நகர், லாக்மா நகர் போன்ற இடங்களில் நாம் கட்டிக் கொடுக்க, வீடுகளிலே தண்ணீர் வசதி, லைட் வசதி சிறிது காலத்திற்குக் கொடுக்கப்பட்ட பிறகு, அவை தற்போது டிஸ்-கனெக்ட் செய்யப்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட இடங்களில் நாம் வாடகைக்கு கொடுத்திருக்கின்ற அந்த இடங்களிலே எல்லாம் ரிப்பேர் ஆனவற்றைச் சரி செய்து கொடுப்பதிலே காலதாமதம் மட்டும் அல்ல, கிட்டத்தட்ட 3 வருஷ காலமாக அதுபோன்ற இடங்களில் லைட் வசதி, தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பது பற்றி அரசுக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?



அல்லது [illegible] குறைந்த [illegible] அதை நிரந்தரமாகச் செய்து [illegible] இல்லாமல் செய்வதற்கு என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, [illegible] செய்து [illegible] அந்தமையும் [illegible] [illegible] [illegible] [illegible] செல்லமாட்டார்கள் என்று [illegible] அது [illegible] முறையிடுவதில்லை. [illegible] [illegible] அந்த வசதி எளிய மக்களுக்கு [illegible] செய்ய முடியுமோ அந்தளவிற்கு உதவி செய்வதற்கு முயற்சி செய்யும்.

திரு. [illegible] : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தைச் சேர்ந்த பகுதிகளில் குடிநீருக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். [illegible] லாக் நகர், அயோத்தியா [illegible] இடங்களில் குடிநீர் [illegible] [illegible] [illegible] குடிசை மாற்று [illegible] செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, [illegible] சொன்னேன். குடிசைமாற்று வாரிய நிர்வாகத்தின் அதிகாரிகள் இருக்கிற லாரிகள் மூலமாக தண்ணீர் தருகிறார்கள். எம். எம். டப்ளியூ. எஸ். எஸ். போர்டு மூலமாகவும் தருகிறார்கள். மேலும் குறைகள் இருக்குமானால் அவைகளை நிவர்த்தி செய்ய எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொள்ளும்.

ஓட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை.

*வினா எண். 720—திரு. [illegible]:—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 நவம்பர் மாதம் அமைக்கப்பட்டுள்ள ஓட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கான கமிட்டியின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்த அறிக்கையில் செய்யப்பட்டுள்ள சிபாரிசுகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை வழங்கியது:—

(1) ஓட்டல் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய விதங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

(2) நுகர்வோர் விலைவாசிப்படிக்கு ஏற்ப மாறுபடும் அகவிலைப்படி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(3) தொழிலாளருக்கு உணவு வழங்கப்படாத ஓட்டல்களில் அதனை ஈடுகட்ட உணவுப்படி வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து 16-2-1983 முதல் அமுலுக்கு வரும் வகையில் அரசு தகுந்த ஆணைகள் பிறப்பித்துள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, ஒரு தொழிலாளியை நிரந்தரமாக்குவதற்கு 480 நாட்கள் ஒரு இடத்தில் வேலை செய்தால்தான் அவரை நிரந்தரமாக்குகிறார்கள். 480 நாட்கள் என்று வருகிறபோது கிட்டதட்ட இரண்டு வருடங்களாகி விடுகின்றன. 480 நாட்கள் [redacted] வேலை செய்தால் அவன் நிரந்தர தொழிலாளியாகிறான். அப்போது அந்த ஹோட்டல் முதலாளி வேறு ஒரு இடத்திற்கு, தன்னுடைய லைசென்சை மாற்றிக் கொண்டு செல்லும்போது ஒரு சிக்கல் ஏற்படுகிறது. அப்படியிருந்தால் அவர்களுக்கு லைசென்ஸ் வழங்காமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி, குறைந்த பட்ச ஊதியம் பற்றியது.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, இந்த ஹோட்டல் தொழிலாளர்கள் அன் ஆர்கனைஸ்ட் வொர்க்கர்ஸ் என்ற அடிப்படையில் வருகிறார்களா அல்லது இவர்களுக்கு தொழிலாளர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படக்கூடிய வகையில் தமிழக சட்டங்கள் இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி, குறைந்த பட்ச ஊதியம் பொறுத்தது. இருந்தாலும் சொல்கிறேன், இந்தத் தொழிலாளர்களுக்கு தனியாக சட்டமே இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, ஹோட்டல் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த அடிப்படையில் எவ்வளவு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அது இராமாயணம் போன்று நீண்டதொரு பட்டியல். அந்த நிறுவனங்களையெல்லாம் ஐந்தாக வகைப்படுத்தி அந்தத் தொழிலாளர்களையும் வகைப்படுத்தி முதல் வகையில் வரக்கூடியவர்கள், இரண்டாவது வகையில் வரக்கூடியவர்கள் என்றெல்லாம் தொழிலாளர்களை பிரித்து தலைமைச் சமையல்காரர், இனிப்பு செய்யக்கூடியவர்கள், காரம் செய்யக்கூடியவர்கள் என்றெல்லாம் பட்டியல் பிரித்து—இத் தொழிலாளர்கள் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். மண்டலங்கள் என்று சொல்லி அ மண்டலம் ஆ மண்டலம்,இ மண்டலம் என்று சொல்லி ஏரியாக்களாகப் பிரித்து அதற்குத் தகுந்தாற்போல் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அது கெஸட்டில் வந்திருக்கிறது. இங்கே இதைப் படிப்பது என்று சொன்னால் 10 மணியாகும்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, இந்தக் குறைந்தபட்சக் கூலி பற்றி படிப்பது என்றால் பத்து மணியாகும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். குறைந்தபட்சம் என்ன சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? அடுத்து, அகவிலைப்படி நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த குறைந்தபட்சக் கூலி நிர்ணயக் குழு இந்த ஹோட்டல் தொழிலாளர்களுக்கு என்ன அகவிலைப்படி நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட அறிக்கையாக இருந்தால் அவையின் முன்பு அச்சிட்டு வைத்துவிடலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மினிமம் வேஜஸ் பற்றி கெஸட்டில் பப்ளிஷாகியிருக்கிறது. கெஸட்டில் வந்திருக்கிறது. அதைப் படித்துக் கொள்ளலாம். (குறுக்கீடு)

திரு. எல். இளையபெருமாள்: கெஸட் வாங்கி படி என்று சொல்வது நியாயமல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கெஸட் வாங்கி படி என்று சொல்லவில்லை. கெஸட் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இலவசமாக அனுப்பப்படுகிறது. அதைப் பார்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதியம் புள்ளி போது நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. அப்படி நிர்ணயிக்கப்படுவது, கெஜட்டிலே பப்ளிஷ் செய்யப்படுகிறது. இப்போது கூட விவசாயத் தொழிலாளர்களுக்கு 5-ஆம் தேதியிலிருந்து குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பப்ளிஷ் செய்யப்பட்டிருக்கிறது. ஓரிரு கேள்விகள் கேட்டால் அதற்கு பதில் சொல்லலாம். 'என்டையர் திங்' வேண்டுமென்று சொன்னால், அதற்குத் தான் நான் பதில் சொன்னேன்,—களுக்கு கெஜட் அனுப்பப்படுகிறது என்று. கட்டாயமாக மீண்டும் அனுப்ப வேண்டுமென்று நீங்கள் வலியுறுத்தினால், அதனுடைய நகலை அனுப்புவதிலே எங்களுக்கு சிரமமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால்—ஒரு புள்ளி உயர்வுக்கு 60 பைசா என்ற விகிதத்தில் அகவிலைப்படியை உயர்த்தி அரசு ஆணையிட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு சராசரி சென்னை நகரத்திலே நுகர்வோர் விலைவாசி எண்ணிக்கை 435 புள்ளியாக இருந்தது. மேற்கொண்டு உயரும்போது, அந்த விகிதத்தில் அகவிலைப்படி அளிக்கப்படும். அதன்படி 1982 ஜனவரி முதல் டிசம்பர் வரை சென்னை நகரில் சராசரி நுகர்வோர் விலைவாசியின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் முதலாக 1-4-1983 முதல் இத்தொழிலாளர்கள் அகவிலைப்படி பெறுவார்கள். இப்படி அகவிலைப்படி நிர்ணயிக்கப் பட்டிருப்பது ஒரு சிறப்பான அம்சம்.

### வீடு கட்ட கடன் வழங்கும் போது தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம்.

* வினா எண். 721—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமிய வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம் வீடுகட்ட கடன் வழங்கும்போது தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) தீ, வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிராம வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் பேரில் கடன்



விண்ணப்பங்களைப் பெற்று கடன் வழங்க ஆவன செய்யும்படி கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் பதிவாளருக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறதென்று பதிவாளர் தெரிவித்துள்ளார்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரையுடன் மாநில வங்கி ஆவன செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கடன் கிடைக்காமல், குடியிருப்பு இல்லாமல் இருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் எழுதியும், 150 குடியிருப்புகளுக்கு இதுவரை கடன் கொடுக்கப்படவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது, இப்படி தீ விபத்தினால் பாதிக்கப்படுகின்ற அரிசன குடும்பங்களுக்குக்கடன் கொடுக்கின்றபோது, அந்த மக்களுக்கு முன்னுரிமை அளித்து கடன் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம வீட்டு வசதிக் கூட்டுறவு சங்கங்களில் பதிவு செய்பவர்களுக்கு தகுதிக்கு ஏற்ப கொடுக்க வேண்டுமென்பது நியதி. அண்மையில் சில இடங்களில் சில குடிசைப் பகுதிகள் எரிந்து இருக்கின்றது. எனவே, அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வந்தது. அந்தக் கோரிக்கையை ஏற்று, அரசு அவர்களுக்கு கொடுக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறது. நிதி நிலைமைக்கு ஏற்பவும், ஏற்கனவே பதிவு செய்து, வெகு நாட்களாகக் காத்திருப்பவர்களுடைய மனம் புண்படாத அளவிலும் அவர்களுக்கு கடன் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேடச்சந்தூர் வி பி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கடன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதால், உண்மையிலே அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு குறைந்தபட்சம், தமிழகத்தில் ஆதி திராவிடர்கள் குடிசைகளுக்கு மட்டும் அவர்களிடம் இருந்து ஒரு பிரிமியத் தொகையைப் பெற்று, அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே குடிசைகளுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 எப்ரல் 11

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால், அதை பரிசீலித்து, என்னென்ன வகையிலே இவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கலாம் என்று பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவு சங்கங்களின் சார்பில் வழங்கப்படும் கடன்கள் தற்போது 3 தவணைகளில் பிரித்துக் கொடுக்கப்படுகின்ற காரணத்தால், அதை முழுமையாகப் பெறுவதற்கு ஓராண்டு காலம் கூட ஆகிவிடுகிறது. எனவே அதை 3 தவணைகளில் என்பதை இரண்டு தவணைகளில் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வினா மூலக் கேள்வியை ஒட்டியதாக இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பெறும் கடன்களைப் பொறுத்த வரையில் 3 தவணைகளில் கொடுக்கிறார்கள். அதற்கு ஓராண்டு காலம் ஆகிறது. கிட்டத்தட்ட மொத்தம் ரூ. 4,000 கடன் பெறுவதற்கு 3 தவணைகள் என்று சொன்னால், அது சிரமமாக இருக்கிறது. ஆகவே, அதை இரண்டு தவணைகளாக அல்லது குறுகிய காலத்தில் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இருப்பினும், இதற்கு முதல் தவணை என்பது சாங்ஷன் செய்யப்பட்டவுடனேயே கொடுக்கப்படுகிறது. பேஸ் லெவல் வந்தவுடனே 2 ஆவது தவணை கொடுக்கப்படுகிறது. ரூப் லெவல் வந்த உடனே 3 ஆவது தவணை கொடுக்கப்படுகிறது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், 30%, 40%, 30% என்ற அளவில் அந்தத் தவணைகள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் எப்படி வேலைகளை முடிக்கின்றார்களோ அந்த வேகத்தில் இந்த தவணை தொகை வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மூலக் கேள்வியை ஒட்டி துணை வினாக்கள் கேட்டால் விவரமான முறையில் பதில் தர வசதியாக இருக்கும்.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு இந்தக் கடன் வழங்குவதில் முன்னுரிமை தரப்படுவது இல்லை. என்னுடைய தொகுதியில் ஒரு இடத்தில் பதிவாளர் உத்தரவிட்ட பின்னர் கூட, அதற்கு துணைப் பதிவாளர் அனுமதி அளிக்க மறுத்து இருக்கிறார்கள். ஆகவே, இதிலே ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், இது போன்றவர்களுக்கு கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கவும் அரசு உத்தரவிடுமா ?



1983 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராம வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்கி வீடு கட்டியவர்களின் வீடுகள் தீ விபத்துக்களுக்கு உள்ளானால், அந்தக் கடன் தொகையை வசூலிப்பது தள்ளுபடி செய்யப்படுவது இல்லை. நகர வீட்டு வசதி சங்கத்தில் இப்படி கடன் வாங்கி வீடு கட்டியவர்கள் வீடு தீப்பிடித்து அழிந்துவிட்டது என்று சொன்னால், அவர்கள் இன்சூரன்ஸ் அடிப்படையில் அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யும் திட்டம் இருக்கிறது. கிராம வீட்டு வசதி சங்கத்திலும் இத்தகைய தள்ளுபடி செய்யும் முறையைக் கொண்டு வர அரசு பரசீலிக்குமா ? மேலும் இந்தக் கடன் தொகைகளை வசூலிக்க கிராம வீட்டு வசதி சங்கங்கள் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களே, அதை தடுத்து நிறுத்தி, தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தக் கடனை தள்ளுபடி செய்யும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இது ஒரு பாலிசி மேட்டர். அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்

*வினா எண். 714—திரு. ப. சுந்தரம், திரு. சி. கோபால், திரு. என். ஏ. பூங்காவனம், திரு. த. வேணுகோபால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தலைநகரம் எவை ? எவை ?

(இ) இதில் எந்த எந்த பகுதிகளை எப்படி, எப்படி சேர்க்க அரசு திட்டமிட்டு உள்ளது ?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால் அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர் களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்றுதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன்

**திரு. ப. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அப்படியானால் அது இரண்டாகப் பிரிக்கப்படுமானால், எந்தெந்த இடங்கள் தலைநகரங்களாக அவற்றிற்கு இருக்கும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகரமாக எதை வைப்பது என்று முன்பே சொல்லிவிட்டால், அது பிரச்னைக்குரியதாகிவிடுகிறது என்கிற நிலைமைகளை நாம் அறிந்து இருப்பதால், எது தலை நகரமாக வைக்கப்பட்டால் அது மக்களுக்கு நன்மை அளிப்பதாக இருக்குமோ அந்த இடம் தலைநகரமாக வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. கோபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, வடாற் காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். அப்படி பிரிக்கின்ற நேரத்தில், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சில பகுதிகளும் அந்த வடாற்காடு மாவட்டம் பிரிக்கப்படுகின்ற போது சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களைப் பிரிக்கின்றபோது ஒரே மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று சொல் கிறார்கள். வடாற்காடு பொறுத்தவரையில், தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்து ஒரு தாலுக்காவையும், செங்கை மாவட் டத்தில் இருந்து சில தாலுக்காக்களையும் சேர்த்து அதை மூன்றாகப் பிரிக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆக, இதைப் பார்க்கிற போது, எந்தெந்த தாலுக்கா சேர்க்கப்படும், எந்தெந்த தாலுக்கா விடப்படும் என்பதை அரசு நிலைமைக்கு ஏற்றவாறு, மக்களின் நன்மையைக் கருதி, அதற்கு ஏற்றவாறு அதை நடைமுறைக்குக் கொண்டு வரும்.

(முற்பகல் 9.40)

**திரு. என். ஏ. பூங்காவனம்:** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் தமிழக மக்கள் தொகையில் ஒன்பதில் ஒரு பகுதி மக்கள் தொகையைக் கொண்டதாக இருப்பதாலும் மிகப்பெரும் மாவட்டமாக இருப்பதாலும், தற்போது வறட்சி நிலை அதிக மாக இருக்கின்ற காரணத்தாலும் நிர்வாக வசதியை ஒட்டி உடனடியாக அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து வேலூரை தலைநகரமாகக் கொண்ட ஒரு மாவட்டம்



திருவண்ணாமலையை தலைநகரமாகக் கொண்ட ஒரு மாவட்டம் என்று அமைக்க அரசு ஆவன செய்யுமா? எப்போது அமைக்கப்படும் என்ற தேதியை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர் களே, நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். தலைநகர் எது என்பதை இப்போது சொல்லக்கூடாது. புதிதாக அமைக்கப்படும் மாவட்டத்திற்கு என்ன பெயர் என்பதையும் தலைநகரம் எது என்பதையும் பிரித்து அமைக்கும்போதுதான் அறிவிப்போம். வடாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, ஏற்கெனவே இந்தஅவையிலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் திருவண்ணாமலையை தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டம் அமைக்கப்படும் என்று அறிவித் திருக்கிறார்கள். தற்போது திருவண்ணாமலை, மாவட்டத்தலை நகராக இருப்பதற்குரிய எல்லா அந்தஸ்துகளும் பெற்றிருக் கின்றது. அதற்கு வேண்டிய அலுவலகங்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. இட வசதியும் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மட்டும் தான் திருவண்ணாமலைக்கு புதிதாக வரவேண்டியிருக்கிறது. அதுமட்டும் வந்துவிட்டால் தற்போதே மாவட்ட தலைநகர் தகுதி பெற்றதாக இருக்கிறது. அதனால் உடனடியாக வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றுக்கு திருவண்ணாமலை மாவட்டம் என்று பெயர் வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, நான் அறிவிக்காத ஒன்றை அறிவித்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகச் சாமர்த்தியமாகச் சொல்கிறார்கள். திருவண்ணாமலையை தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்று அமைக்கப்படும் என்று நான் வெளியிலும் சொல்லவில்லை ; இந்த அவையிலும் சொல்லவில்லை ; எங்கும் சொல்லவில்லை. ஆனால் நியாயமான கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சி. கோபால்:** தலைவரவர்களே, இப்படி வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது செங்கை மாவட்டத் திலுள்ள சில பகுதிகள் சேர வாய்ப்பு இருக்கிறது என்று மாண்பு மிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி சேர்த்து அமைக்கும் போது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை அந்த மாவட்டத்திற்குச் சூட்ட அரசாங்கம் முன்வருமா?

[1983 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, அண்ணாவின் பெயரைச் சூட்டுவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை ; எனக்கும் இல்லை. ஆனால் அண்ணாவின் பெயரைச் கொண்டிருக்கிற நாம் அண்ணாவின் கொள்கைகளை நல்லமுறையில் செயல்படுத்தி, அதிலே நாம் எல்லோரும் தீவிரம் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. பா. பழனியப்பன்:** தலைவரவர்களே, இந்தப் பிரிவினை கருத்து வந்த பிறகு ஒரு அச்சம் உருவாகியிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தின் ஒரு சில பகுதிகள் பிரிக்கப்படும் என்ற கருத்து நிலவுதால் இந்த அச்சம் ஏற்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டம் ஒரு பெரிய மாவட்டம், அதனால் அதை இரண்டாக பிரித்து, விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு மாவட்டம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கெனவே இருக்கிறது. அதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கவனித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, பிரிவினை வந்தாலே அச்சம் எப்போதும் எல்லோருக்கும் ஏற்படுகிறது. அந்த பிரிவினை இல்லாமல் இருக்கும்போது அவர்கள் அனுபவிக்கின்ற நலன்கள் இல்லாமல் போய்விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. ஆனால் இது அப்படிப்பட்ட பிரிவினை அல்ல. தென்னாற்காடு மாவட்ட மக்கள் இதற்காகப் பயப்படவில்லை. மற்றொன்று, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சில பகுதிகளை எடுத்து வடாற்காடு மாவட்டம் பிரிக்கப்படும் போது, சேர்க்கப்படும் என்று நான் அறுதியிட்டு சொல்லவில்லை. பல மாவட்டங்களைப் பிரிக்கும்போது இப்படிச் செய்யலாம் என்று ஒரு பொதுவான கருத்தைத் தெரிவித்திருக்கிறேன்.

### அகஸ்தீஸ்வரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண். 715—**திரு. சு. முத்துக்கிருஷ்ணன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அரசின் பரிலனையில் உள்ளது.



1983 ஏப்ரல் 11]

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அகஸ்தீஸ்வரம் தாலூகா மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள 3 இலட்சம் மக்களும் தங்களுடைய பிரச்சினைகளை அணுகுவதற்கு இருக்கிற ஒரே அலுவலகம்அகஸ்தீஸ்வரம் தாலூகா அலுவலகம்தான். அந்த தாலுகா அலுவலகம் நாகர்கோவிலில் இருக்கிறது. ஆகவே, மக்கள் வசதியை முன்னிட்டு இந்த தாலுகா அலுவலகத்தை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஏதாவது அறிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே உள்ள பல மாவட்டங்கள் பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. நான் முன்பே குறிப்பிட்டது போல 10 மாவட்டங்களுக்கும் மேலாக இப்படி பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும் வந்திருக்கின்றன. அவை எல்லாம் அரசு பரிசீலனை செய்து விரைவிலேயே நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, தற்போது கன்னியாகுமரி நகரியமும், அகதீஸ்வரம் பஞ்சாயத்து யூனியனும், ராஜாத்தி மங்கலம் பஞ்சாயத்து யூனியனும், நாகர்கோவில் நகராட்சி ஆகியவைகளும் சேர்ந்துள்ள இடங்கள் தான், அகதீஸ்வரம் தாலுக்காவாக உள்ளன. ஆகவே, நிர்வாக வசதிக்காக கன்னியாகுமரி நகரியமாகவும், அகதீஸ்வரம் தாலுக்காவாகவும் இரண்டு பகுதிகளாக உள் அடக்கி பிரித்து, கன்னியாகுமரியிலேயே, அதை தலைநகரமாக வைத்து, ஒரு தாலுக்கா அலுவலகம் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். அது மட்டும் அல்ல கன்னியாகுமரி பல்வேறு நாட்டு தலைவர்களும் ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் போன்ற பல்வேறு முக்கியப பிரமுகர்கள், வி.ஐ.பிக்கள் அடிக்கடி வருகை தருகிற பிரதேசமாக இருப்பதால், அவர்களை வரவேற்கக்கூட அங்கே அதிகாரிகள் இல்லாதநிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கன்னியாகுமரியிலேயே ஒரு தனி தாலுக்கா அலுவலகத்தை உடனடியாக எற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதிகாரிகள் இல்லாத குறையை அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்து போக்கும். ஆனால் தாலுக்காவைப் பிரிப்பது என்று வருகிறபோது, எந்தெந்தப் பகுதி, எந்தெந்த கிராமங்கள், எந்தெந்த ஒன்றியம் என்பதை யெல்லாம் மட்டும் உடனே சொல்வதற்கு முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 11

அமராவதி நொய்யல் ஆறுகளிலிருந்து ஆயில் என்ஜின் மூலம் பாசனம் செய்யும் விவசாயிகள்,

*வினா எண் 716—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் அமராவதி நொய்யல் ஆறுகளில் ஆயில் என்ஜின் மூலம் தண்ணீர் எடுத்துப் பாசனம் செய்யும் விவசாயிகளிடம் அதற்காக தனியாக வரி வசூலிப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இப்போது அந்த ஆறுகளில் தண்ணீர் இல்லாத நிலையில் மேற்படி வரி ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; (அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டில் அமராவதி நொய்யல் ஆறுகளில் போதுமான தண்ணீர் இல்லை என்றாலும், ஆயில் என்ஜின் மூலம் தண்ணீர் எடுத்து, முறையாகப் பாசனம் செய்துள்ளார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அமராவதி நொய்யல் ஆறுகளில் தண்ணீர் வராத காரணத்தால், பயிர்கள் காய்ந்து போய்விட்டன. அதைக் கருத்தில் கொண்டு, வரி வசூல் தள்ளி வைக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி, நொய்யல் ஆறுகளில் தண்ணீர் வரண்டு உள்ளது என்பதும், மழை பொய்த்து விட்டக் காரணத்தினால்தான் அந்த நிலை என்பதும் நன்றாகத் தெரியும். இது போன்ற ஆற்றுப் பாசனத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டுகள் விளையாமல் இருந்தால், அதாவது சதாரண நிலைமையில், தண்ணீர் வரக்கூடிய நிலைமையில், சராசரி ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு விளையுமோ அதைவிட 50 சதவீதம் குறைவாக விளைந்தால், தண்ணீர் தீர்வை, வாய்தா கட்டணம், மற்ற வரிகள் எல்லாமே பூரணமாக தள்ளுபடி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு அந்தப்பகுதியில் பயிர்கள் காய்ந்து விட்டது. அந்தப் பகுதியினை வறட்சி என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிக்காத காரணத்தினால், கூட்டுறவுக் கடன்களை வசூலிக்க அதிகாரிகள் வருகிறார்கள். ஆகவே, அங்கே உள்ள நிலையைக் கருத்தில் கொண்டு, அந்தக் கடன்களின் கால தவணையை மத்திய காலக் கடனாக மாற்றித் [illegible] ஆக பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்?



1983 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தெரிவித்தபடி சராசரியாக சாதாரண காலத்தில் எவ்வளவு விளையுமோ, எவ்வளவு விளைய வேண்டுமோ, அதைவிட 50 சதவீதத்திற்கு குறைவாக விளைந்தால், தண்ணீர் தீர்வை வாய்தா, மற்ற வரிகள் எல்லாம் கிடையாது. அப்படி தண்ணீர் தீர்வை வாய்தா போன்றவை அந்த நிலங்களுக்கு இல்லை என்றால், வருவாய்த் துறையினர் மானாவாரி சர்டிபிகேட் கொடுப்பார்கள். நாங்கள் கூட்டுறவு வங்கிகளுக்கு உத்திரவு கொடுத்திருக்கிறோம். எங்கெங்கே தண்ணீர் தீர்வை வாய்தா பணம் மற்ற வரிகள் போன்றவை கொடுக்கப்படவில்லையோ, அங்கே இருக்கிற கூட்டுறவு வங்கிக் கடன்களை தள்ளி வைக்க வேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை கடற்கரை—தாம்பரம் மின்சார இரயில் பாதையை அகலப்பாதைபாதை மாற்றும் திட்டம்.

*வினா எண் 722 — திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரை—தாம்பரம் மின்சார இரயில் பாதையை அகலப் பாதையாக (பிராட்கேஜ்) மாற்றப்படுவதற்கான நில ஆர்ஜித வேலைகள் நடைபெறுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் வரை செல்கிற மின்சார இரயில் இப்போது மீட்டர் கேஜாக உள்ளது. அதிலே தினசரி லட்சக் கணக்கான பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள். ஆகவே, அதை பிராட் கேஜாக மாற்றுவதற்கு மத்திய அரசை, மாநில அரசு கடிதம் மூலமாக கேட்டிருகிறதா? அப்படி இருந்தால் அது எந்த நிலையில் உள்ளது?

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு 4.97 லட்சம் மத்திய அரசாங்கம் ஒதுக்குவதாக ஒப்புதல்,—நில அளவைக்காக மட்டும் அந்தப் பணத்தை ஒதுக்

குவதாக ஒப்புதல்—தந்தார்கள். அது வுடைய பரிந்துரைகளையும் கூட நாம் அனுப்பியாகிவிட்டது. ஆனால் இப்போது திட்டக் குழுவிலே இருந்து நமக்குச் சொல்லியிருப்பது, மத்திய ரெயில்வே அமைச்சகத்திடமிருந்து, எந்தவிதமான தகவலும் திட்டக் குழு விற்கு இல்லாத கராணத்தால் இந்தத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளமுடியாத நிலைமையிலே இருக்கிறோம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே மீண்டும் அவர்களை வற்புறுத்தி அடுத்த திட்டத்திலேயாவது எடுத்துக்கொள்வதற்கான சூழ்நிலை யை உருவாக்கவேண்டும் என்று மாநில அரசு கேட்க இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான வண்டிகள்.

*வினா எண் 723—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்திற்கு எத்தனை வண்டிகள் 1980–81 இறுதி வரை உள்ளன?

(ஆ) அந்த ஆண்டில் Operating Cost என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 76 சுமையுந்துகள்

(ஆ) ரூபாய் 96.57 இலட்சம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொருள் போக்குவரத்துக் கழகத்திலே 76 வண்டிகள் இருப்பதாகச் சொன்னார்கள். இது நட்டத்தில் ஓடுகின்றதா அல்லது இலாபம் வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது நட்டத்திலே தான் நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இப்போது நட்டம் குறைவாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்லவன் பெருநகர் போக்குவரத்துக்குக் கடனளிக்க உலக வங்கி விதித்துள்ள நிபந்தனை.

*வினா எண் 724—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் பெருநகர் போக்குவரத்துக்கு கடனளிக்க உலக வங்கி நிபந்தனை விதித்துள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) இது குறித்த விவர அறிக்கை ** சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அதனுடைய இயக்கச் செலவு இயக்க வருமானத்தில் 99 விழுக்காடுக்கு அதிகரிக்கக் கூடாது என்றும் இயக்க வருமானம் பின் ஆண்டில் திருப்பித் தர வேண்டிய கடன் மற்றும் வட்டியை விட 1.5 மடங்கு அதிகமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் கண்டிஷன் போடப்பட்டதாகவும், சொல்லி இருக்கிறார்கள். அதே நேரத்தில் கடன் பெற்றதாகவும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே 1981–82 ஆம் ஆண்டிலே எவ்வளவு கடனை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏறத்தாழ 555 புதிய சேஸிஸ் வாங்குவதற்காக நாம் உலக வங்கியினிடத்திலிருந்து கடன் பெற்றிருக்கிறோம். 12 கோடி ரூபாய்க்கும் மேலே அந்தக் கடனைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அந்த வேலைகள் எல்லாம் முடிந்து 19 வண்டிகளைத் தவிர மற்ற அத்தனை வண்டிகளையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த கண்டிஷன்களை எல்லாம் போட்டிருந்தாலும் கூட அவை அந்த நேரத்தில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு இருந்தது. எனவே அந்தக் கடனை அவர்கள் அதற்காகக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இந்தக் கடனைப் பெற்றதன் காரணத்தால் சென்னை நகரத்திலே இப்போது ஓடிக் கொண்டிருக்கின்ற பேருந்துகளை அதிகமாக்குகின்ற நிலைமை ஏற்படுகின்றது என்றால் இன்னும் வருகின்ற ஆண்டிலே மேலும் கடனைப் பெற்று அதிகமான வண்டிகளை விடுவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்த பணம் 555 பேருந்துகளை வாங்குவதற்குத் தான். அவற்றிலே 19 வண்டிகள் தவிர மற்ற அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த 19 வண்டிகளுக்கும் பாடி கட்டும் வேலை முடிந்துவிட்டது. எனவே அதுவும் விரைவிலே பயன்படுத்தப்பட இருக்கின்றது. கூடுதலாக வேண்டுமானால் நாமே கூட விடலாம். உலக வங்கிக் கடனைப் பெற்றுவிடுவதற்குக் கூட வாய்ப்பு இருக்கின்றது.

**364–365-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு 555 பேருந்துகள் வாங்குவதற்கு உலக வங்கி 12 கோடி ரூபாய் கடன் வழங்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அந்தக் கடனுக்கு என்ன விகிதத்தில் வட்டி செலுத்த வேண்டும். எத்தனை ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளில் நாம் அதைத் திருப்பிச் செலுத்த வேண்டும். 10.5 விழுக்காடு என்ற விகிதத்தில் அதற்கு வட்டியை நாம் செலுத்த வேண்டும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் பெருநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கியிருப்பது போன்று மற்ற போக்குவரத்துக் கழகங்களின் சார்பாகவும் கடன்களைப் பெற்று அவற்றையும் சிறப்பாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நாம் முன்வந்தாலும் உலக வங்கி முன் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி கொடுத்திருக்கின்ற இந்தக் கடன் தொகை மத்திய அரசின் மூலமாக நம்முடைய அரசுக்குக் கொடுக்கப்படுகின்றது. உலக வங்கி மத்திய அரசுக்கு என்ன வட்டி விகிதத்தில் கடன் கொடுத்தது ? மத்திய அரசு மாநில அரசுக்கு அதற்கு மேல் எவ்வளவு வட்டி வைத்து கடன் கொடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5.5 விழுக்காடு வட்டியில் இந்தக் கடனை மத்திய அரசுக்கு உலக வங்கி கொடுக்கின்றது. மத்திய அரசு 10.5 விழுக்காடு என்ற வட்டி விகிதத்தில் நமக்குக் கொடுக்கிறார்கள்.

## தஞ்சை-சென்னை இடையே ஓடிக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக துரிதப் பேருந்து.

*வினா எண் 725—திரு. பி. தங்கவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையிலிருந்து உடையார்பாளையம் பேரூராட்சி வழியாக சென்னை சென்று கொண்டிருக்கும் திருவள்ளுவர் துரித வண்டியில் உடையார்பாளையம் பிரயாணிகள் ஏறுவதற்கு உடையார்பாளையத்தில் ஸ்டேஜ் அமைத்துக் கொடுக்கப்படுமா ?





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சாத்தியக்கூறு இல்லை.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலிருந்து உடையார்பாளையம் பேரூராட்சி வழியாகச் சென்னை சென்று கொண்டிருக்கும் திருவள்ளுவர் துரித வண்டியில் உடையார்பாளையம் மக்கள் ஏறுவதற்கு, உடையார்பாளையத்தில் ஸ்டேஜ் அமைத்துக் கொடுக்கப்படுமா என்று கேள்வி கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே இனிமேலாவது அங்கே எக்ஸ்பிரஸ் பஸ்கள் நிற்பதற்கு ஒரு ஸ்டாப்பை ஏற்படுத்தி மக்கள் ஏறுவதற்கு வசதி செய்து கொடுக்கப்படுமா? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

## திண்டிவனத்திலிருந்து திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு வரை நகரப் பேருந்து விடும் திட்டம்

*வினா எண் 726—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனத்திலிருந்து திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு வரை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : திண்டிவனத்திலிருந்து, திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு வரை உள்ள தூரம் 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ளதால் இந்த வழித் தடத்தில் நகரப் பேருந்து விட இயலாது.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்திலிருந்து, திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு வரை உள்ள தூரம் 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ளதால் இந்த வழித் தடத்தில் நகரப் பேருந்து விட இயலாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எனவே திண்டிவனம்-திருச்சிற்றம்பலம் ரூட்டில் உள்ள கிளியனூருக்கு பஸ் விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 30 கிலோ மீட்டருக்கு கீழே இருந்து பேருந்து இயக்கப்படாத சூழ்நிலை இருந்து, அங்கே மக்கள் பேருந்து இல்லாமல் இருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்குமானால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 11

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திண்டிவனத்திலிருந்து கிளியனூருக்குத் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஒரு பேருந்தை விட்டிருந்தது. அந்த பஸ் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து மறுபடியும் அந்த ரூட்டில் பஸ் விட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு பேருந்து அங்கே ஓடிக்கொண்டிருந்து தற்போது நிறுத்தப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள். அப்படி நிறுத்தப்பட்டுவிட்டது என்ற காரணத்திற்காக மறுபடியும் பேருந்தை விடமுடியாது. தேவைக்கு அதிகமாக அங்கே பஸ்கள் ஓடி அதனால் நிறுத்தினார்களா என்பதைப் பார்க்க வேண்டும். தேவைக்கு அதிகமாக ஓடும் இடங்களிலிருந்து பஸ்களை நிறுத்தி தேவையான இடத்தில் நாம் பஸ்களை விட்டுக்கொண்டு இருக்கிறோம். எனவே, என்ன காரணம் என்பதை ஆராய்ந்து அதற்கு பின்னால் தான் பதில் சொல்ல முடியும் எனவே, இந்த கேள்விக்கு இப்பொழுதே பதில் சொல்ல முடியாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களே, நான் ஒரு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, உலக வங்கி மத்திய அரசுக்கு எவ்வளவு சதவீதத்தில் கடன் கொடுக்கிறார்கள் என்று கேட்டதற்கு 5.5 சதவீதம் என்று சொன்னேன். அது 0.5 சதவீதம் என்று எனக்கு இங்கே குறிப்புகள் கொடுத்து இருக்கிறார்கள். அது சரியா என்பதை நான் பார்த்து பின்னால் அவருக்குத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை ஜெயிலில் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து ஒரு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள். அதுபற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்...........



1983 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானம் வந்திருக்கிறது. நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் பேட்டைவாய்த்தலை கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தி செய்து தரும் உற்பத்தியாளர்கள் தங்களுக்கு நியாயமான விலை......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது ஒரு வழியில் கொண்டு வாருங்கள். ஒத்திவைப்புத் தீர்மானமாகவாவது அல்லது கவன ஈர்ப்பு தீர்மானமாகவாவது கொண்டு வாருங்கள் நீங்கள் ஒரு கட்சியின் துணைத் தலைவர். நீங்கள் இப்படி ஒரு முன்மாதிரியை உருவாக்கக்கூடாது. பொதுப்பிரச்சினை ஏதாவது இருந்தால் சொல்லலாம்.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) மதிப்பீட்டுக் குழு.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் என்ற முறையில் கால்நடைப் பராமரிப்புத் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன் :—

*(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1973–74 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து பொது கணக்குக் குழு (1977–78) அளித்த ஐந்தாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை.*

*(ஆ) 1972–73 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த நான்காம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை.*

(இ) 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத்தணிக்கைத் துறைத் தலைவரின்(வருவாய் வரவினங்கள்) மீதான அறிக்கையில் வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறை மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஒன்றாம் அறிக்கை (பாகம்-1).

(முற்பகல் 10–00)

(ஈ) 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) அறிக்கையில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி இரண்டாம் அறிக்கை (பாகம்-2).

5. வரவு–செலவுத்திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

" மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ 10,22,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் பிள்ளைகள் படிப்பதற்கு உபகாரச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 10,22,26,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. தி. கா. நல்லப்பன் :** தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 10,22,26,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு** இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே விரிவாகவும் விளக்கமாகவும் பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றின்மீது உறுப்பினர் பெருமக்கள் எடுத்துச் சொல்கிற விவாதங்களின் அடிப்படையில் இறுதியுரை ஆற்றுகிறேன் என்று சொல்லி இந்த கொள்கைக்குறிப்பினை என்னுடைய முன்னுரையாக ஏற்று அவை நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன்:** தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1983–84 ஆம் ஆண்டிற்கு 10 கோடியே 22 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய்க்கான மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிற்பட்ட வகுப்பினருக்கு செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக செய்யப்படாமல் இருக்கின்றன. பிற்பட்ட வகுப்பினருக்கு கழகத் தலைவர் கலைஞர் ஆட்சியிலே தனியாக அதற்காக அமைச்சர் அவர்கள் இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு பிற்பட்ட வகுப்பினருக்கு தனி அமைச்சர் இல்லாத காரணத்தினாலே ஒரே அமைச்சரிடத்திலே அந்த இலாகாவைக் கொடுத்திருக்கிற காரணத்தினாலே அது சம்பந்தப்பட்ட பல கோரிக்கைகள் தீர்க்கப்படாமல் அதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அந்தத் தமிழ் இன மக்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே தனியாக இதற்கு ஒரு அமைச்சர் இருந்தது போல இன்னும் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கிற காரணத்தினால் தனியாக அதற்கு ஒரு அமைச்சர் இருந்தால் அவர்களுடைய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதால் அந்த வகையிலே அமைச்சரவையிலே பிற்பட்ட வகுப்பினருக்காக ஒரு தனி அமைச்சர் இருந்தால் இந்தத் துறையிலே இருக்கிற மக்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும். பிற்பட்ட வகுப்பிலே சேரவேண்டுமென்று பல இன மக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் பல கோரிக்கைகளைக் கொடுத்து இருக்கிறார்கள். இங்கே பிற்பட்ட இன மக்களுக்காக ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 329.18 இலட்சம் அளவுக்கு இதற்காக செலவு செய்யப்படுவதாக புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள் ஆனால் இதிலே சேர்க்கப்பட வேண்டியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாடு மலைக்குறவர் சாதியினர் இருக்கிறார்கள். அவர்கள் குற்றப் பரம்பரையினராக தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறார்கள். அந்த தமிழ்நாடு மலைக்குறவர் என்று தமிழகத்திலே வாழுகின்றவர்களில் பல்வேறு பிரிவுகள் இருக்கிறார்கள். அதிலே முக்கியமான பிரிவு என்ற முறையிலே 1. மலைக் குறவர், 2. வேடன், 3. வேடர், 4. குறச் செட்டி, 5. குறவர் மகாஜனம், 6. உப்புக்

**365–411-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது

குறவர், 7. தப்பைக் குறவர், 8. கருவேப்பிலைக் குறவர், 9. ஈயம் பூசும் குறவர், 10. காட்டு நாய்க்கன், 11. கிரிஜன இயக்கம் என்று பிரிவுகளாக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அதிலே சப்கேஸ்டும் இருக்கிறது. இவர்களுக்கு நாம் நன்மை செய்யவில்லையென்றாலும் கூட இன்னலையாவது தராமல் இருக்கலாம். எங்காவது திருடு நடைபெறுகிறது, வழிப்பறி நடைபெறுகிறது என்றால், தமிழ்நாட்டில் இந்த இன மக்களைத்தான் காவல்துறையினர் கைது செய்து சிறையிலே வைக்கிறார்கள்.

எந்த அளவிற்குத் தீங்கு விளைவிக்க முடியுமோ அதைச் செய்து, அவர்களைக் குற்றப் பரம்பரையாகவே நடத்துகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் பெரணமல்லூரில் மலைக்குறவர் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு மாநாட்டைத் நடத்தினார்கள். அதிலே நம்முடைய மதிப்பிற்குரிய ஜனதா கட்சித் தலைவர் இஸ்மாயில் பாய் அவர்களும் கலந்து கொள்வதாக இருந்தது. நானும் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே கலந்து கொள்வதாக இருந்தோம். ஆனால், சட்ட மன்ற பணிகள் காரணமாக கலந்துகொள்ள இயலவில்லை. அவர்கள் தங்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று கோரிக்கையை வைத்துள்ளனர். பல்வேறு மாவட்டங்களில் அவர்களை ஷெட்யூல்ட் கேஸ்ட் பிரிவிலே சேர்த்திருக்கிறார்கள். ஒரு சில மாவட்டங்களில் பேக்வார்ட் கிளாசில் சேர்த்திருக்கிறார்கள். அந்த மக்கள் கடுமையாக பாடுபட்டு விவசாயம் செய்து அல்லது பன்றிகளை வளர்த்து அல்லது இன்னும் இதுபோன்ற பல காரியங்களில் ஈடுபட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு சிலர் தவறு செய்யலாம். ஆனால், ஒரு சிலர் தவறு செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக அத்தனை மக்களையும் குற்றப்பரம்பரை இனத்திலே வைத்திருப்பது நாம் அவர்களுக்கு செய்கிற துரோகமாகும். தமிழ் நாட்டில் மலைக்குறவ ஜாதி மக்கள் 12 இலட்சத்திற்கும் மேலே இருக்கிறார்கள். அந்த மக்கள் பல்வேறு மாவட்டங்களில் இருக்கிற காரணத்தால், எங்காவது களவு ஏற்படுகிறது, கன்னக்கோல் ஏற்படுகிறது, அல்லது வழிப்பறி ஏற்படுகிறது என்று சொன்னால், இவர்கள் குற்றப் பரம்பரை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று காவல் துறையினர் சிறையிலே வைத்துவிடுகிறார்கள். ஆகவே, இவர்களுக்கு நன்மை செய்வதற்காக குற்றப்பரம்பரையிலேயிருந்து இவர்களை விடுவித்து, ஷெட்யூல்ட் ட்ரைப் இனத்தில் சேர்த்து இவர்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல பெரியகுளம் வட்டத்தில் உறிக்கார நாயக்கர் வகுப்பைச் சேர்ந்த சவரிமுடி தொழிலாளர்கள் பல இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். பெரியகுளம் நாடாளுமன்றத் தேர்தலின் போது அவர்கள் வாக்களிக்க முடியாது என்று சொன்ன நேரத்தில், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த மக்களைச் சந்தித்து தமிழ்நாடு உறிக்கார வகுப்பைச் சேர்ந்த





அவர்களைப் பிற்படுத்தப்பட்ட நாயக்கர் பட்டியலிலே சேர்க்கிறேன் என்று வாக்குறுதி அளித்து, அதற்கு பின்னால்தான் அந்த மக்கள் தேர்தலிலே கலந்து கொண்டு, அமைச்சர் அவர்கள் வாக்களித்தார்கள் என்று நம்பி, வாக்களித்தார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் பெரிய குளம் தேர்தலில் ஏதோ நான் ஒரு வாக்குறுதி அளித்ததாகக் கூறி, அதனால் அந்த பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் வாக்களித்தார்கள் என்ற குற்றச்சாட்டை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நான் அப்படி எந்த வாக்குறுதியும் அங்கே அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: துணைத் தலைவர் அவர்களே, அந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தேர்தலை புறக்கணிப்பதைத் திரும்பப் பெறுமாறு, மதுரை மாவட்டம், சின்னமனூரில் தங்களை அணுகிய தமிழ்நாடு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் கோரிக்கை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, எங்கள் இனத்தைத் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் பிரிவில் பதிவு செய்ய வேண்டிய நடவடிக்கையை எடுப்பதாக வாக்குறுதி அளித்தார்கள்; அதனை ஏற்று தாங்கள் வாக்களித்ததாகச் சொன்னார்கள். இதனை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. இந்த இன மக்கள் பலபேர்கள் அந்த வார்த்தையை........

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ ஒரு கூட்டத்தில் பேசி அவர்களுக்கு வாக்குறுதி அளித்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியில்லை. அவர்கள் மனுவை கொடுத்திருக்கலாம். மனுவை நான் பார்வை செய்து எந்தத் துறைக்கு அனுப்ப வேண்டுமோ அல்லது எந்த அமைச்சர் அவர்களுக்கு அனுப்ப வேண்டுமோ அப்படி அனுப்பியிருக்கலாம். எந்தக் கூட்டத்திலும் நான் வாக்குறுதி அளிக்கவில்லை.

[முற்பகல் 10-10]

திரு. பாபு ஜனார்த்தனன்: அந்தப் பகுதி மக்கள் அரசால் புறக்கணிக்கப்படுகின்றோம். ஆகவே, தங்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே, ஷெடியூல்ட் டிரைப் வகுப்பிலே சேர்த்து தங்களை உயர்த்த வேண்டுமென்ற முறையிலே, தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக அந்த நேரத்தில் வாக்களிக்கவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர், அவர்களைச் சந்தித்து, நீங்கள் வாக்களியுங்கள். நாங்கள் அந்த இனத்தில் சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கிறோம் என்று வாக்களித்தார்கள். ஆகவே, தமிழ்நாடு உரிக்காறர் வகுப்பினரைப் பிற்பட்ட வகுப்பிலே சேர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சரவையிலே எடுக்கும்படி இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, மதுரை மாவட்டத்திலே பிறமலைக் கள்ளர் சமுதாயம் முன்னேற்ற ஆலோசனைக் குழுவிடமும் பல வாக்குறுதிகளை அளித்திருக்கிறார்கள். அந்தப் பிறமலைக் கள்ளர் சமுதாயம் நல்ல முறையிலே முன்னேறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்படி தமிழ்நாட்டிலே பலதரப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் கவனிப்பாரற்று, கேட்பாரற்று, அவ்வப்போது குற்றப் பரம்பரையில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்த அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, பிற்படுத்தப்பட்டோர் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடுதிகள் தமிழ்நாட்டிலே மிகவும் பாழடைந்த நிலைமையிலே இருக்கின்றன. பல இடங்களிலே கட்டிடங்கள் இடிந்து விழும் நிலைமையிலே இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய செய்யாறு தொகுதியிலே பிற்படுத்தப்பட்டோர் பிள்ளைகளுடைய இல்லங்கள் எந்த நேரத்திலும் இடிந்து விழுமோ என்ற ஆபத்தான நிலையிருக்கிறது. கீரல் ஏற்பட்டு, கட்டிடங்கள் குமுறிவிடுமோ என்ற நிலையிலே அந்த மாணவர்கள் அங்கேயிருக்கிறார்கள். இதைப் பலமுறை அரசிடத்திலே நான் தெரிவித்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் தெரிவித்திருக்கிறேன். செய்யாறிலே இருக்கிற பிற்படுத்தப்பட்டோர் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடுதிக் கட்டிடம் மிக மோசமான நிலைமையிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல, பல இடங்களிலே இருக்கிற பிற்படுத்தப்பட்டோர் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற விடுதிகள்பற்றி இங்கே கூட ஒரு பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அந்த விடுதிகள் மிக மோசமான நிலைமையிலே இருக்கின்றன. பல இடங்களிலே வாடகைக் கட்டிடத்திலே இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் நல்ல முறையிலே தமிழ்நாட்டிலே கட்டிடங்கள் கட்டி அவர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதி செய்து தர வேண்டுமென்று, இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, தமிழ் நாட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென்று, கலைஞர் ஆட்சியிலே ஒரு அமைச்சர் இருந்து, அவர்களைக் கவனித்ததைப் போல, அவர்களுக்கென்று தனியாக ஒரு அமைச்சரை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. க. முத்துக்கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே, பல்வேறுவிதமான மக்களிடையே, பல்வேறு விதமான எண்ணங்களும், பல்வேறு விதமான கருத்துக்களும் இன்று நாட்டிலே நிலவிக்கொண்டிருக்கின்றன. அண்மையிலே இரண்டு தினங்களுக்கு முன்பாக



பாரதத்தினுடைய பிரதம அமைச்சர் அவர்கள் கவர்னர்களுடைய மாநாட்டினை நடத்தினார்கள். அந்த மாநாட்டை நடத்திய நேரத்திலே, ஆளுநர்கள் தங்களுடைய மாநிலங்களில் எழுகின்ற ஜாதிச் சண்டைகளைத் தடுக்க வேண்டும், வராத முறையிலே தடுக்க வேண்டுமென்ற கருத்தை, பாரதத்தினுடைய பிரதம அமைச்சர் அவர்கள் மாநிலத்தை ஆளுகின்ற கவர்னர்கள் முன்னிலையிலே பேசியிருக்கிறார்கள்.

நாம் சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் ஆகியும், இந்தியாவிலே சுதந்திரம் வந்த நேரத்திலே பல்வேறு காலச் சூழ்நிலைகளுக்காக, பல்வேறு சலுகைகளைப் பெரிய தலைவர்கள் வழங்கியிருக்கலாம். ஜாதிச் சண்டைகள் இல்லாத ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று பிரதம அமைச்சர் மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் விரும்பினாலும், இன்றுள்ள நிலையைப் பார்க்கின்ற நேரத்திலே, உண்மையிலேயே வருத்தம் அடைய வேண்டிய சூழ்நிலையிலேதான் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். குறிப்பாக, மத்திய அரசு செய்ய வேண்டிய காரியம் இது என்பதை நான் முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். அகில இந்திய அளவிலே ஜாதிகள் ஒழிய வேண்டுமென்ற அளவிலே பேசுகின்ற தலைவர்கள் முதலிலே அரசின் மூலமாக, பல்வேறு மனுக்கள் மூலமாக, மாணவர்கள் மத்தியிலே 5 வயதிலேயே, பள்ளியிலே சேர்கின்றபொழுது, நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்பதைக் கேட்டு, அரசாங்கம் தான் ஜாதியைத் தூண்டி விடுகிறது என்ற உண்மையை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இது மாநில சர்க்கார் மட்டும் கையாள வேண்டிய ஒரு பிரச்னை அல்ல. இந்தியா முழுவதிலும் ஐந்து வயதுக் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களிலே சேர்க்கின்ற நேரத்திலே ஜாதியைப் புகுத்துகின்ற நிலைமை இருக்கிறது. இந்திய நாட்டிலேதான் இப்படிப்பட்ட ஒரு கேவலமான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஏன் ஒரு மாணவன் ஜாதியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்? அவனுடைய வயதை மட்டும் குறிப்பிட்டால் போதாதா? தகப்பனார் பெயரை மட்டும் குறிப்பிட்டால் போதாதா? பல்வேறு இலாக்காக்களிலேயும் சேர்க்கும்பொழுதும் மாணவர்களின் பல்வேறு அட்மிஷன்களின்பொழுதும் எதற்காக ஜாதியின் பெயரைக் குறிப்பிட வேண்டுமென்ற நிலைமையை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும்? ஒருமாநிலத்தில் மட்டும் இந்த நிலையில் மாறுதல் ஏற்படுத்தினால், இந்த நிலையை நீக்கினால் அதனால் மற்ற பல மாநிலங்களிலேயும் பிரச்னைகளை ஏற்படுத்திவிடும் என்பதால் இந்தப் பிரச்னையை அகில இந்திய அளவிற்குப் பார்த்து, இந்தியா பூராவும் ஜாதிகளே இல்லை என்ற அளவிற்கு ஒரு திட்டத்தைப் பாரதப் பிரதம அமைச்சரவர்கள் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா உண்மையிலேயே ஜாதி சமயம் இல்லாத ஒரு அரசாக அமையும் என்ற உண்மையை மக்கள் உணர்வார்கள்; மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதை இந்த

நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாரதப் பிரதம
அமைச்சரவர்களும், இன்னும் பல்வேறு தலைவர்களும் விரும்பு
கின்ற நிலைமை, விரும்புகின்ற நோக்கம் அப்பொழுதுதான்
ஏற்படும் என்பதை இந்த நாட்டு மக்கள் தங்கள் கருத்திலே
கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். மாணவப் பருவத்திலேயே இப்படிப்பட்ட
பிரச்னைகள் எழுப்பப்படுகின்ற காரணத்தினால்தான் இந்தியாவின்
பல்வேறு இடங்களிலேயும் ஜாதிச் சண்டைகள் தலை தூக்கு
கின்றன.

அடுத்து இன்னொரு கருத்தையும் நான் மெத்த வருத்தத்
தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று நமது
நாட்டிலே ஜாதியின் பெயராலே கட்சிகளேகூட இயங்குகின்றன.
எந்த நாட்டிலேயும் ஜாதியின் பெயராலே கட்சிகள் இயங்கு
கின்றனவா என்ற ஒரு நிலையை நாம் அருள்கூர்ந்து பார்க்க
வேண்டும். பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கலாம்.
பல்வேறு மதத் தலைவர்கள் அவர்கள் விரும்புகின்ற கட்சியிலே
இருந்துகொள்ளலாம்; அதில் தவறு இல்லை. ஆனால் ஜாதியின்
பெயராலே கட்சிகளை அமைத்து ஜாதிகளின் பெயரைச்
சொல்லியே மக்களிடத்திலே ஓட்டுக் கேட்கின்ற நிலைமை
இந்தியாவிலேயிருந்து அகற்றப்பட வேண்டும். எனவே, இந்தி
யாவில் ஜாதியின் பெயரால் இயங்குகின்ற எல்லாக் கட்சிகளையும்
தடை செய்ய வேண்டும். எந்த ஜாதியில் இருந்தாலும் சரி,
அவற்றைத் தடை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில்
வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இன்றைக்குப்
பல்வேறு மாநிலங்களில் இந்தப் பிரச்னைகள் ஏற்படுகின்றன.
அதற்கு இது ஒரு மூல காரணமாக அமைந்து, பூதாகரமாக
உருவாகி, நிலைமைகள் விசுவரூபம் எடுத்துக் கொண்டிருக்
கின்றன. ஒரே ஜாதியைச் சேர்ந்த கட்சியில் இருப்பவர்கள்
மற்றவர்களைப் பார்த்துக் குறை சொல்கிறார்கள். ஏன் இந்த
நிலைமை என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். ஒரு ஜாதியின்
பெயரிலே இருக்கின்ற கட்சியின் தலைவர் மற்றவர்களைப்
பார்த்து நீங்கள் இப்படிப் பேசுகிறீர்களே, உங்களுக்கு இது
தகுதியா என்ற கேள்வியை இந்த நாட்டில் மக்கள் எழுப்பிக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தியா சமயச் சார்பற்ற
ஒரு நாடாக நல்ல முறையில் திகழ வேண்டுமென்றால் இந்தியப்
பேரரசு செய்ய வேண்டிய முதல் நடவடிக்கை ஜாதியின் பெயரால்
இயங்குகின்ற எந்தக் கட்சியானாலும், அது எந்த ஜாதியாக
இருந்தாலும் சரி, அந்த ஜாதியின் பெயரால் கட்சி இயங்குகின்ற
நிலைமையை முதன் முதலில் ஒழித்துக்கட்ட வேண்டுமென்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள் வேண்டுமானால் அவர்கள்
விரும்புகின்ற கட்சியில் சேர்ந்து கொண்டு பணியாற்றலாம்.
அப்படிப்பட்ட ஒரு நிலையை இந்த அரசு, குறிப்பாக பாரதப்



பிரதம அமைச்சரவர்கள் இந்தியா பூராவும் செயல்படும் திட்டத்தினை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, தமிழகத்தைப் பொறுத்த அளவிற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மக்கள் முன்னேற வேண்டுமென்றால்—பல்வேறு மதங்களிலேயும், பல்வேறு ஜாதிகளிலேயும் இருக்கின்ற எல்லா இனத்திலேயும் ஏழை மக்கள் இருக்கிறார்கள். இதிலே ஒரு இனத்திலே உள்ள எல்லா மக்களும் ஏழைகளாக இருக்கிறார்கள்; இன்னொரு ஜாதியிலே இருப்பவர்கள் அத்தனை பேர்களும் பணக்காரர்களாக இருக்கிறார்கள் என்ற நிலைமை இந்த நாட்டிலே எந்த ஜாதியிலேயும் இல்லை. ஆகவே தான் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையிலே அமைந்த அரசு ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தது. அதாவது, பொருளாதார அடிப்படையிலே சலுலைகளை வழங்க வேண்டுமென்ற திட்டத்தை, இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு இங்கே கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமையில், ஸ்லாப் சிஸ்டத்தைக் கொண்டு வந்து உதவித் தொகை வழங்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட திட்டத்தை அந்த நேரத்திலே சில அரசியல் கட்சிகள் எதிர்த்தன. ஏன் அதை எதிர்த்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. 9,000 ரூபாய் வருமான வரம்பு என்பதைச் சற்று உயர்த்தியிருக்கலாம் என்று சொல்லியிருந்தால் உண்மையிலேயே அதை அத்தனை பேர்களும் வரவேற்றிருப்பார்கள். ஆனால் அதை விடுத்து, இந்தச் சலுகையே கூடாது. ஜாதி அடிப்படையிலேதான் சலுகைகள் வழங்க வேண்டுமென்றுகேட்டபொழுது, எந்த நோக்கத்திற்காக அவர்கள் இந்த மக்களுக்காகப் பாடுபடுகிறவர்கள் என்று பலமுறை சிந்தித்தும் அதற்கான விடை எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஏனென்றால், ஏழைகள், வாழ வேண்டும், ஏழை மக்கள் எங்கே இருந்தாலும் கைதூக்கிவிடவேண்டும் என்ற எண்ணம் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இருக்க வேண்டும். ஆகவே, பொருளாதார அடிப்படையிலே சலுகைகளைக் கொடுப்பது என்று புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்த அந்தத் திட்டத்தை மறுமுறையும் ஆராய்ந்து பார்த்து, நிச்சயமாக, கண்டிப்பாக எதிர்காலத்திலே எல்லாச் சமுதாய மக்களும், எல்லாச் சலுகைகளையும் பெறுகின்ற வகையில் பொருளாதார அடிப்படையிலே கொண்டு வரவேண்டும். ஜாதி அடிப்படையிலே தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—20)

பொருளாதார அடிப்படையிலே அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படவேண்டுமென்ற முடிவினை புரட்சித் தலைவருடைய அரசு மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இன்று நம்முடைய நாட்டிலே இதைப் போன்ற நிலைமைகள், ஜாதிச் சச்சரவுகள், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் என சிலபேர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தில்ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துக்கொண்டால், பல்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களை தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று சொல் கிறார்கள். இந்த நிலைமை என்று தீரும் என்பதை அத்தனை பேரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்கள் ஜாதியை மறந்து வாழ்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு மாவட்ட வாரியாக மக்கள் சொல்கிறார்கள். ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் அதாவது பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்னொரு மாவட்டத்தில் முற்பட்ட மக்களாக இருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக இந்திய அரசு ஜாதியை, ஒழித்து, த குதியின் அடிப்படையில் கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்புகின்ற அதே நேரத்தில், தற்போது இருக்கின்ற நிலைமை பாதிக்கப்படாத அளவில், ஒரு மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை, மற்றொரு மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அளிக்கப்படும் சலுகை பாதிக்கப் படாத அளவில், சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாக சேலம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், துளுவ வெள்ளாளர் என்ற இனம் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற வெள்ளாளர் இனம் பின்தங்கிய பட்டியலில் வரவில்லை என்ற உண்மையை நாங்கள் பலமுறை அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். எனவே சேலம் மாவட்டத்தில் அந்த துளுவ வெள்ளாளர் இனத்தை பிற்பட்டோர் வகுப்பில் சேர்த்தாற்போல இதர மாவட்டங்களில் அப்படிப் பாதிக்கப் பட்டவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த அரசு கொண்டு வந்திருக்கிற பல நல்ல த்திட்டங்களை சிறப்பாக செயலாற்றி, இந்த பிற்பட்டோர் நலனுக்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களை இன்று அமல்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய கோரிக்கைகளாக மூன்றை வைக்க விரும்புகிறேன். (1) இன்று இந்தியா பூராவும் ஜாதியில்லை என்ற ஒரு நிலையை மத்திய அரசு எடுக்கவேண்டும். (2) பொருளாதார அடிப்படையிலே சலுகைகளை வழங்கவேண்டும். (3) இப்போது இருக்கின்ற நிலைமையில் இந்த வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி, நெல்லை, தென்னாற்காடு, மாவட்டங்களில் இருப்பவர்களை, சேலம் மாவட்டத்தில் துளுவ



வெள்ளாளர்களை சேர்த்திருப்பதுபோல் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்காக உடனடியாக உத்தரவிடவேண்டுமென்று எங்கள் பகுதியிலுள்ள மக்களுடைய கோரிக்கையாக வைத்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்று பின்தங்கிய வகுப்பினர் மானியக் கோரிக்கை மீது இந்திய தேசீய காங்கிரஸ் கட்சி சார்பில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, இந்திய தேச மக்களிலே, கோடிக்கணக்கான மக்கள் எல்லா வகையிலும் பின்தங்கி வாழ்வது கண்டு, தேச அரசாங்கம் இதற்கு அவர்களுடைய முன்னேற்றத்திற்காக வழி வகுத்தது என்பதை நான் இந்தச் சமயத்தில் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் பின்தங்கிய சமுதாயத்தினருடைய நிலைமை, கோடிக்கணக்கான மக்கள் மட்டுமல்ல, பல ஆயிரக்கணக்கான ஜாதிப் பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து பட்டியலை உருவாக்குவதற்காக காகா கலேல்கர் என்பவர் தலைமையிலே இந்திய அரசு ஒரு கமிட்டியை நியமித்தது. அந்தக் கமிட்டிக்குப் பிறகு கடைசியாக மண்டல் கமிஷன் வரையிலும் கிட்டத்தட்ட 35 ஆயிரம் ஜாதிப் பிரிவுகளுக்கு மேற்பட்டு பின் தங்கிய சமுதாய மக்கள் அந்த லிஸ்டிலே கொண்டுவரப்பட்டார்கள். எனக்கு முன்பு பேசிய சகோதரர் முத்துக்கிருஷ்ணன் பேசுகின்றபோது மிக அழகாக சொன்னார்கள். ஆனால், கடைசியிலே முடிக்கிறபோது, கன்னியாகுமரி, சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள வெள்ளாளர்களையும் இந்த லிஸ்டிலே சேர்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆளும் கட்சி நண்பராக இருப்பதால் இதிலே எதை நாம் சரி என்று எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை யோசிக்கவேண்டும். அரசாங்கமும் யோசிக்கவேண்டும். ஏன் என்றால் ஆளும் கட்சி உறுப்பினர்கள்............

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நான் பேசுகின்ற போதுஇந்தியா பூராவும் ஏற்படுத்தப்பட வேண்டிய நிலை பற்றி நான் தெளிவாக முதலிலே பேசினேன். ஆனால் அந்த நிலைமை ஏற்படுகிற வரையில் இன்று ஏற்பட்டாலும் கூட அதை வரவேற்கக் காத்து இருக்கிறோம். நான் பின்னாலே பேசியது தேவையில்லை. ஆனால் அந்த நிலை இந்தியா முழுவதும் ஏற்படும் வரை தற்போது இருக்கின்ற சலுகை அடிப்படையிலே சில இடங்களிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்நம்மிடத்திலே சொல்லுகின்ற கருத்துக்களை இங்கே நாம் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆகவே இந்திய அரசு..

திரு. எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவர் அவர்களே. நண்பர் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. அதிலே எந்தவித ஆட்சே பணையும் இல்லை. அவர்கள் முன்னாலே நன்றாக பேசிய பிறகு, சிலரைச் சேர்க்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர் கள் சொன்ன விளக்கத்தை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள் கிறேன். ஆனால் நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த பின்தங்கிய சமுதாய மக்களுக்கு தமிழ்நாட்டிலே ஒரு நல்ல நிலைமையை உருவாக்குவதற்கு கலைஞர் காலத்திலே நல்ல எண்ணத்தோடு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அதனுடைய வளர்ச்சியிலே ஈடுபட்டுள்ள அரசாங்கத்தை நான் பாராட்டு கிறேன். ஆனால் ஒன்று மட்டும் இதிலே நாம் முடிவு எடுக்கவேண் டும். பின்தங்கிய மக்கள் யார் என்று இன்னும் வரையறுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஆனால் ஜாதி காரண மாக உயர்ந்த மக்களாக இருந்தாலும், பொருளாதாரத்திலே தாழ்ந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பிரிவு இல்லாத நேரத்திலே தங்களுக்கு குறிப்பிட்ட இன மக்கள் அரசியல் காரணமாக அல்லது வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் காரணமாக ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு மாதிரியாக ஒரு சில இனத்தைச் சேர்ப்பது, ஒருசில இனத்தை விடுவது என்ற ஒரு அவல நிலை இல்லாமல், ஒன்று பொருளாதாரம் என்று வைத்து முடிவு எடுக்க வேண்டும். அல்லது சமுதாய ரீதியிலே அவர்கள் எல்லா வகையிலேயும் பின்தங்கியவர்கள் என்ற முறையிலே இருந்தால் ஏதோ ஒரு குறிப்பிட்ட 5 சதவீதம், 10 சதவீதம், இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத்திலே முன்னேறி இருந்தால், 90, 95 சதவீத ஒரு குறிப்பிட்ட இன மக்கள் எல்லா வகையிலேயும், கல்வி, பொருளாதாரம், உத்தியோகம் இவை களிலே பின்தங்கி இருந்தால் அப்படி எடுத்துக்கொள்கிறோம் என்று ஏதாவது ஒரு முடிவுக்கு, இது ஒரு முக்கியமான முடிவாக இருப்பதாலே நாம் அதைச் செய்ய வேண்டும். இதை இந்திய அரசாங்கம் செய்யவேண்டுமென்று மாநில அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். மாநில அரசாங்கமும், முடிவு எடுப்பதற்கு முன்பு தீர்க்கமாக யோசித்து இதில் பின்தங்கிய சமுதாயத்தின் தலைவர் களையும் கூட்டிவைத்து, பேசி, இதிலே நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளாக நான் சொல்ல விரும்புகிறேன்.

அதே சமயத்திலே 1971–72-லே நம்முடைய குறிப்புப்படி 1,61,40,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1983–84-லே 10,22,26,000 ரூபாய் செலவு என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பணம் ஒதுக்குவதிலே ஒன்றும் பஞ்சமில்லை. ஆனால் அதைச் செலவழிப்பதில் அந்த மக்களுக்கு நேரடியாக அது போய்ச் சேருகிறதா என்பதுதான் இதிலே நாம் யோசிக்கவேண் டிய விஷயமாக இருக்கிறது. நிர்வாகச் செலவுக்கே பாதிக்கு மேல் பணம் செலவழிக்கப்படுகிறது. அதனுடைய வளர்ச்சிக்கு அந்தப் பணம், நிர்வாகச் செலவுக்குப் போக மீதமுள்ள தொகை





அவர்களுக்குச் செல்வது மிகக் குறைவாக செல்கிறது. இதில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கள்ளர், மறவர். தேவர் இன்னும் தென் ஆர்க்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் படையாட்சிகள், வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண் டால் கவுண்டர்கள், நாயக்கர்கள், என்று பல பிரிவுகளாக இருக் கிறது. நாம் இவைகளுக்கு எல்லாம் ஜாதி காரணமா அல்லது பொருளாதார நிலை காரணமா என்பதை ஒரு தீர்க்கமாக முடிவு செய்வதற்கு அரசாங்கம் அரசியல் கண்ணோட்டத்தோடு நினைக்காமல், இருக்கின்ற ஏழை சமுதாய மக்கள் வாழ்வுக்கு, அவர்கள் நல்ல வாழ்வு அடைவதற்கு வேண்டிய ஒரு திட்ட வட்டமான முடிவு நாம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–30)

அதே போல் நரிக்குறவர்கள் நரிக்குறவர்கள் பின்தங்கியவர் கள், நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். குறிப் பாக தமிழ்நாட்டிலே இருக்கின்றன உப்பு நரிக்குறவர்கள் குடை, முறம் கட்டும் குறவர்கள். காட்டு நாயக்கன்கள் என்று நரிக்குறவர்களிலே இப்படி பல பிரிவுகளாக அவர்களுக்குள்ளே வைத்திருக்கிறார்கள். இந்தப் பிரிவினருக்காக மக்கள் தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில், தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் பகுதியில் நரிக்குறவமங்கலம் என்று ஒரு இடத்தை உருவாக்கி, அங்கே 100 நரிக்குறவர்களுக்கு வீட்டுவசதி, நில வசதி எல்லாம் ஈசய்து கொடுத்தார்கள். ஆனால் அந்த நிலத்தில் அவர்கள் வேலைகள் செய்வதற்குத் தேவையான மாடுகள் போன்றவை கள் வாங்கிக்கொடுக்க முடியாமல் போனதால், 1967-க்குப்பின் பிறகு அவர்கள் கவனிப்பார் அற்றுப்போய், அந்த இடத்தை விட்டே அவர்கள் ஓடிவிடும் நிலை வந்து விட்டது. அதற்குப் அந்த இடத்தில் வேறு எந்தச் சமுதாயத்தை சேர்ந்த மக்கள் வந்து குடியேறி விட்டாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் அதையும் 1968-லே நான் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னேன். இதுவரையில் அந்த நிலங்களும் அந்த ஆக்கிரமிப் பாளர்களிடம் இருந்து மீட்கப்படவில்லை. ஓடிப்போன அந்த நரிக்குறவ மக்களும் திரும்பி வரவில்லை. ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் நாம் அங்கே செலவு செய்து இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் குறித்து இலாகா மூலம் விசாரிக்கச் சொல்லி அந்த நிலங்களை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்குடி தாலுக்காவில், வீராணூர் என்ற கிரா மத்தில் வீராணூர் பஞ்சாயத்தில் நரிக்குறவ மக்கள் 20 குடிசை களைப் போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்களை அங்கே யுள்ள முன்தங்கிய மக்கள், அல்லது பின் தங்கிய மக்கள், அல்லது நிலச்சுவான்தார், அல்லது சினிமாக்கொட்டகை முதலாளி தினம்தினம் விரட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலத்

அரசாங்க நிலம் ஆகவே, அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்துவிட்டால், அந்த நிலைமை தவிர்க்கப்படும். இதைப்பற்றியும் அரசாங்கத்திற்குப் பலமுறை எழுதியும் இது வரையில் எதுவும் செய்யப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக இதிலே கவனம் செலுத்தி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கனவே இது பற்றி எழுதிக்கொடுத்ததற்கு எனக்கு பதில் வந்து இருக்கிறது—அந்த மக்கள் அங்கே குடியிருக்கவில்லை என்று. இது உண்மைக்குப் புறம்பான தகவல். தாசில்தார் மட்டத்திலோ அல்லது கீழ்மட்டத்திலோ இப்படிப்பட்ட ஒரு தவறான தகவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றும் அந்த மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி பின்தங்கிய அலுவலர்கள் இருந்தும் இப்படி நிலைமை இருப்பது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் நலனில் இந்தத் துறை சில முன்னேற்றங்களைச் செய்து இருக்கிறது என்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். புத்தகம் கொடுக்கிறபோது, டிநோடிபைட் கம்யூனிட்டி, பேக்வார்ட் கம்யூனிட்டி என்று வித்தியாசம் செய்து, டிநோடிபைட் கம்யூனிட்டி என்று சொன்னால் அவர்களுக்கு 3 ஆம் வகுப்பில் இருந்து புத்தகங்களும், பேக்வார்ட் கம்யூனிட்டி என்று சொன்னால் அவர்களுக்கு 9 ஆம் வகுப்பில் இருந்து புத்தகங்களும் கொடுக்கப்படுகின்றன. கள்ளர், மறவர் மற்றும் பிற பகுதியினர் எல்லோரும்ஒன்றுதான். அவர்கள் எல்லோருமே வாழ வழியில்லாமல் இருக்கும் நிலையில் தான் இருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் டிநோடிபைட், என்றும் பேக்வார்ட் என்றும் பிரித்து வைத்ததற்குக் காரணம், அரசாங்கத்தில் அதிகார பூர்வமாக அந்தப் பிரிவினை ஏற்படுத்தியதற்குக் காரணம், இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டு இருந்த காரணத்தால், அவர்கள் எல்லாம் ஒன்று திரண்டு நம்மை எதிர்த்து விடக்கூடாது என்பதற்காக அதைச் செய்தார்கள். இந்தியாவில் இந்து-முஸ்லிம் என்ற பிரிவினையைக் கூட மிகைப்படுத்தி கிளப்பினார்கள். மற்றும் பல்வேறு பிரிவினைகளை ஏற்படுத்தினார்கள். அன்றைக்கு ஏற்படுத்திய அந்தத் தவறான நிலைமைகளை மேலும் நீடிக்கக்கூடாது. மாநில அரசாங்கமும் செய்யக்கூடாது. மத்திய அரசாங்கமும் செய்யக்கூடாது. நல்லதொரு நிலைமையை உருவாக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான், பின்தங்கிய சமுதாயம் நல்ல முறையில் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற நிலைமையின் அடிப்படையில்தான் இந்தியாவில் உள்ள 35,000 ஜாதி மக்களை ஒன்று இணைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், கலேகர் கமிட்டி அளித்த அறிக்கையின் அடிப்படையிலும், மண்டல கமிஷன் அடிப்படையிலும், மாநில அரசுகளைக் கலந்து, மைய அரசு முடிவு எடுக்க இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் கொண்டுவரப்படு





மானால், அந்தச் சமுதாயம் நல்லமுறையில், படிப்படியாக முன்னேற்றம் அடைய முடியும். இந்த சமுதாயம் முன்னேற்றம் அடையவேண்டும் என்று விரும்பிய எந்தத் தலைவரும் குற்றப் பரம்பரையினர், பேக்வார்ட் கிளாஸ் கம்யூனிட்டி என்று சொல்ல வில்லை. பெரிய குற்றம் செய்தவர்கள், சிறிய குற்றம் செய்த வர்கள், பின் தங்கியோர், மிகவும் பின் தங்கியோர் என்று பிரிக்கவில்லை. பெரியார் போன்றவர்கள் அப்படிச்சொல்ல வில்லை. காந்தியடிகள் சொல்லவில்லை. பண்டித நேரு அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் சொன்னதெல்லாம், இந்த மக்களும் மனிதர்களாக வாழவேண்டும், பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணவேண்டும். கல்வி அறிவு பெறவேண்டும். விஞ்ஞான அறிவில் வளர்ச்சி பெறவேண்டும். அந்த வகையில் அவர்களுடைய முன்னேற்றம் இருக்கவேண்டும் என்று தான் விரும்பினார்கள். ஆகவே, இந்தக் கருத்துக்களை அடிப்படை யாக வைத்து அந்த மக்களை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் முன்முயற்சி எடுக்கவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று பள்ளிப் பிள்ளைகளுக்குச் சீருடை சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. ஒன்றை குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்தக் குறிப்பில் 12 ஆவது பக்கத்தில் 48 விடுதிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே சென்னை மாநகரில் 5 விடுதிகள் இருக்கின்றன. என்னுடைய எழும்பூர் தொகுதியில் கூட ஒரு விடுதி இருக்கிறது. அந்த விடுதிக்கு சொந்தக் கட்டடம் கிடையாது, வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. மழை பெய்தால் எல்லா இடமும் ஒழுகுகிறது; ரிப்பேர் செய்யப்படவில்லை. இந்த இலாகா டைரக்டர் கொஞ்சம் இரக்கமுள்ளவர். நான் அவரிடம் நேரில் சொன்னேன். அதைக் கவனத்திலே வைத்து சிலவற்றைச் செய்தார். இப்படி ஒருவர், இருவர் நல்லவராக இருந்துவிட்டால் அந்த டிபார்ட்மென்ட் மொத்தமும் நன்றாக இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. அப்படி ஒத்துக்கொள்ள முடியாது.

இன்னொன்று. பின்தங்கிய மாணவர்கள் வாழுகின்ற இடம் அல்லது விடுதி என்று ஒரு 'நேம் போர்டு' கூட இந்த இலாகாவினால் வைக்கப்பட முடியாமல் இருக்கிறது. எந்த ஜில்லாவிலும் இந்த போர்டு வைத்திருப்பதாகத் தெரியவில்லை அந்த மக்களுக்காக கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்குகிறோம். அதிலே பாதி பணம் நிர்வாகத்திற்கு என்று ஒதுக்கி வைக்கிறோம், மீதி இருக்கிற பாதி பணம் கூட அவர்களுக்கு செம்மையாக செலவழிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட பாவமான காரியம் நடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்கள் இதிலே கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விடுதிகள் மிகவும் மோசமான நிலையிலே நடந்து கொண்டிருக்கின்றன. மேசை கிடையாது, நாற்காலி கிடையாது. டெஸ்க் கிடையாது, போர்டு கிடையாது. இந்த நிலைமைகளைப் போக்க வேண்டும். அது மட்டுமல்ல. 50 கட்டிடங்களில் 25 கட்டி முடிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாக்கி இருக்கிற 25 கட்டடங்களைக் கட்டி முடிக்க இன்னும் எவ்வளவு நாள் ஆகுமோ தெரியவில்லை. போதுமான அளவுக்கு இடவசதி இல்லாததால் அந்த சமுதாய மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். விரைவிலே கட்டடங்களை கட்டி முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோமுகி டாம் ஓரத்தில் மலைவாழ் மக்களும் பின்தங்கிய மக்களும் வாழுகின்ற அந்தப் பகுதியில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. அதற்கு போதிய இடவசதி இல்லை. மேசை, நாற்காலி இல்லை, பாத்திரங்கள் இல்லை. அவற்றை எல்லாம் சீர்படுத்த வேண்டும். நான் இதை குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அமைச்சரவர்கள் எத்தனையோ பொறுப்புகளை வைத்திருப்பதால் இந்தப் பொறுப்பிலேயும் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதைப்போன்று மதுரை மாவட்டத்தில் கள்ளர் ரெக்ளமேஷன் இருக்கிறது. அதாவது கள்ளர்களை சீர்படுத்த என்று சித்தாலை மேல்பட்டு, செக்கானூர், கே. காரைப்பட்டி, கப்பலூர் போன்ற இடங்களில் எல்லாம் பள்ளிக் கூடங்கள் வைத்து நடத்துகிறார்கள். ஆனால் அங்கே எந்தவிதமான வசதியும் இல்லை. பள்ளிக்கூடம் இருக்கிறது. பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் தேவையான வசதி வாய்ப்பு இல்லை; அங்கே போதுமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் ஆஸ்டல்கள் வைத்திருக்கிறார்கள். கல்லூரி மாணவர்களுக்கு என்று 5 ஆஸ்டல்கள் நடத்துகிறார்கள். அவைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும். அதை ஒன்றாகச் சேர்த்து, ஒரே இடத்தில் கட்டினாலும் எனக்கு ஆட்சேபம் இல்லை. அல்லது சென்னை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என்று ஐந்தாகப் பிரித்து ஐந்து இடங்களில் கட்டினாலும் சரி. எப்படிச் செய்தாலும் அந்த விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் உருவாக வேண்டும்; அங்கே வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அதை ஒரு போர்க்கால நடவடிக்கையாக எடுத்துச் செய்ய வேண்டும். இந்த மாதிரியான காரியங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் போதுமானதாக இல்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே இந்த பின் தங்கிய இலாக்காவுக்கும் பொறுப்புவகிப்பதால் இதற்கு கொஞ்சம் அதிகமான நிதியை ஒதுக்கி, இந்த பிள்ளைகளுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்னொரு முக்கியமான பிரச்சினையையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் கிராமத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு கிராமத்திலுள்ள மாணவர்கள் நிலைமை நன்றாகத் தெரியும். கிராமத்தில் படிக்கின்ற மாணவர்கள் ஒரு பின்தங்கிய மாணவன், ஆதி திராவிட மாணவன் மிகவும் அவலமான நிலையில், கேவலமான சூழ்நிலையில் படிக்கிறான். அங்கே அந்தச் சூழ்நிலையில் படித்துவிட்டு சென்னைக்கு வந்து ஐ.ஏ.எஸ்., ஐ. பி. எஸ். படிப்புக்கு வரும்போது அவலநிலை ஏற்படுகிறது. அதனால் அவர்கள் உத்தியோகங்களுக்கும் வரும்போது அந்த அவலநிலை ஏற்படுகிறது. அதனால் அந்த மாணவர்கள் சென்னைக்கு வந்த பிறகாவது நான் குற்றப்பரம்பரையைச் சேர்ந்தவன், கள்ளர் பரம்பரையைச் சேர்ந்தவன், சமுதாயத்தில் இப்படிப்பட்ட இடத்திலிருந்து வந்திருக்கிறேன் என்ற இழிவான, கேவலமான எண்ணம் வராமல் இருக்க வேண்டும். அந்த எண்ணத்தைப் போக்க வேண்டும். நகரத்திற்கு வந்த பிறகு மற்ற கல்லூரி மாணவர்களைப்போன்று அவர்களும் வசதியாக இருக்க நல்லமுறையிலே 5 விடுதிகளை ஏற்படுத்த வேண்டும். அந்த விடுதிகளை ஐந்து இடங்களில் கட்டினாலும் சரி, அல்லது ஒரே இடத்தில் கட்டினாலும் சரி, அதை விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் தேவர் பரம்பரை வீரப்பரம்பரை என்று சொல்கிறார்கள். ஆனால் வெளியேதான் இப்படிச் சொல்கிறார்களே தவிர, உண்மையில் அவர்களுடைய நிலைமையும் மோசமாகத்தான் இருக்கிறது. அண்மையில் ஒரு சம்பவம் நடந்தது. உஞ்சனை என்ற இடத்தில் நடந்த ஒரு சம்பவம். அந்த சம்பவத்தில் 5 பேர் இறந்து போனார்கள். அங்கே ஒரு கோவில், அதிலே உயர்ந்த ஜாதிக்காரர்கள் 5 மண் குதிரைகளை நிறுத்திவார்கள், ஆதிதிராவிட மக்கள் 5 மண் குதிரைகளைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். காற்று அடித்து உயர்ந்த ஜாதியினர் நிறுத்திய குதிரைமீது தாழ்ந்த ஜாதிக்காரர்கள் குதிரை விழுந்து, அந்தக் குதிரைகளை வீழ்த்திவிட்டது. அதன் காரணமாக ஒரு கொல்யூஷன் ஏற்பட்டு கலவரம் எற்பட்டு, அதுதான் சண்டைக்கு ஆரம்பமாக இருந்தது. அதிலே 5 பேர் இறந்து போனார்கள். அதற்காக அரசாங்கத்திலே இன்னமும் கேஸ் இருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், கள்ளர் விடுதி, பறையர் விடுதி, பின் தங்கிய மாணவர் விடுதி என்று பெயர்கள் குறிப்பிட்டு போடுவதற்கு பதிலாக, ஏழை மாணவர்கள் விடுதி என்று போட்டுவிடலாம். இதை நான் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேகூட குறிப்பிட்டேன். இதற்கு முன்னாலே

காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, அரசு மாணவர் விடுதி என்றும், அரிசன மாணவர் விடுதி என்றும் இரண்டு பெயர்களில் தான் விடுதிகள் இருந்தன. ஆகவே, இப்படி பள்ளர் விடுதி, பறையர் விடுதி, கள்ளர் விடுதி என்று போடுவதை விட பொதுவாக அரசு ஏழை மாணவர் விடுதி என்று எல்லோருக்கும் ஒன்றாக வைத்து போட வேண்டும்.

நான் பின்தங்கிய வகுப்பினருக்கு என்று தனியாக விடுதி வைக்கிறோம். அதேபோல ஒவ்வொரு பிரிவினருக்கும் அந்தந்த பிரிவுகளில் பெயர்களை வைத்து விடுதிகள் வைக்கிறோம். நான் இந்திய அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அமைத்த கமிட்டியின் சேர்மேனாக இருந்தபோது கூட, அதற்கென்று நான் தயாரித்து கொடுத்த ரிப்போர்ட்டில் கூட, தீண்டாமை என்பது எப்போது ஒழியும் என்று சொன்னால், பொருளாதார ரீதியில் அனைத்து மாணவர்களையும் ஒன்று சேர்க்க வேண்டும். அப்போதுதான் ஒழியும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அவன் ஏழை மாணவனாக இருந்தால், அவன் பிராமணனாக இருந்தாலும் சரி, முஸ்லீமாக இருந்தாலும் சரி, கிறித்துவனாக இருந்தாலும் சரி, வேறு இந்துவாக இருந்தாலும் சரி, எந்த மதத்தை எந்த இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் ஏழைகள், பொருளாதார ரீதியிலே பின் தங்கியவர்கள் என்ற முறையில், எல்லோருக்கும் பொதுவான விடுதியை அமைத்து, அதில் அவர்களுக்கு தேவையான சலுகைகளை கொடுத்து வந்தால், நாளடைவில் தானே தீண்டாமை மறைந்து விடும். நான் இப்போது பிற்பட்டோர் நலத்துறையின் மானியக் கோரிக்கையிலே பேசினாலும் கூட, அதைக்குறிப்பிடுவது அவசியம் என்று நினைத்துக் குறிப்பிடுகிறேன். அந்த நிலையை கொண்டு வந்தால்தான், தீண்டாமை என்ற அவல நிலைமை ஓரளவாவது ஒழியும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இதே அடிப்படையில் சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது மிக நல்ல திட்டம் தான். வரவேற்க வேண்டிய திட்டம் தான். ஆனால் அதன் செயல்முறைகளில் என்னென்ன நடக்கிறது. சிதம்பரம் வட்டத்திலே காட்டுமன்னார் கோவில் தாலூக்காவிலே, குமராட்சி-அரசூர் என்ற ஒரு இடத்தில் இந்த சத்துணவு திட்டத்திலே, ஒரு ஏழை அரிசனப் பெண்ணை சமையல்காரியாக வைத்தார்கள் என்பதற்காக, பிள்ளைகளை பள்ளிக்கூடம் அனுப்புவதை நிறுத்தியிருக்கின்றனர். அதனாலே பள்ளிக்கூடமே நிறுத்தப்பட்டது. பிறகு கமிஷனரிடத்திலே ரிப்போர்ட் போய் அவரும்வந்துபார்த்து, ஆன மட்டும் சொல்லிப் பார்த்தார், ஒன்றும் முடியவில்லை. கமிஷனர் என்னுடைய பள்ளியில் படித்தவர். கடைசியில் அந்த பெண்ணை அந்த வேலையைவிட்டு நீக்க வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டதற்கு பின்னால்தான், நிலைமை அங்கே சீரடைந்தது.



இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், தமிழகம் இவைகளை ஒழிப்பதில் முன்னணியில் இருக்க வேண்டும். இந்தியாவிலேயே எல்லா வகைகளிலும், எந்த முக்கிய தேசியப் பிரச்னையானாலும் தமிழகம் தான் முன்னணியில் இருந்து, நாட்டுக்கு வழிகாட்டியிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், மகாத்மா காந்தியின் காலத்தில், வெள்ளையனை எதிர்த்து தேசியப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் கூட, தமிழகம் தான் அந்த தேசீய இயக்கத்தில் முன்னணியில் வந்தது. பண்டித ஜவஹர்லால் எப்போதும் சொல்வார்—தமிழகம் சென்றால் தான் நன் நிம்மதியாக எப்போதும் திரும்பி வருகிறேன் என்று—அப்படி பல வழிகளிலே இந்தியாவிலேயே தமிழகம் தான் முன்னணியில் நிற்பதால்; இதிலும் முன்னணியில் வந்து, இந்த தீண்டாமை முதலில் ஒழிந்தது தமிழகத்தில்தான் என்று பெயர் பெறவேண்டும். அந்த வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசுக்கு எழுதுங்கள். பொருளாதார ரீதியிலே ஏழைகள் என்று எங்கிருக்கிறார்களோ அவர்கள் அரிசனங்கள், பிற்பட்டோர், பள்ளர், பறையர், குறவர், பிராமணன் என்று இல்லாமல், எல்லாப்பிரிவுகளிலும் அவர்கள் எங்கிருக்கிறார்களோ, அவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி பொதுவாக ஒரு விடுதியை அவர்களுக்கு என்று ஏற்படுத்தி அரசாங்கத்தின் மூலமாகவே நடத்தியிருக்கிறோம்—அவர்கள் அனைவருக்கும், அவர்கள் பொருளாதார ரீதியில் ஏழைகள் என்ற காரணத்தால்—ஒன்று திரட்டி நடத்தியிருக்கிறோம். அதற்கு மத்திய அரசும் ஏதாவது பொருளுதவி தந்து உதவ வேண்டும் என்று கேட்டு, இந்தியாவிலே முன் மாதிரியாக முன்னணியாக இதை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தென்னாற்காடு மாவட்டத்திலே வன்னியர் படையாச்சி சமூகத்தைச் சேர்ந்த ஏழை மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பின் தங்கியவர்கள், அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் சலுகையைக் கூட பயன்படுத்திக் கொண்டு அனுபவிக்கத் தெரியாதவர்கள். அந்த காரணத்தால் அவர்கள் அனைவருமே பின் தங்கிய மக்களாக, மிகவும் ஏழைகளாக, இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கொடுக்கப் பட்டதாகச் சொல்கிறார்கள். எப்படிக் கொடுத்தார்கள் என்று எனக்கு விவரம். தெரியவில்லை. ஏதோ பத்தாயிரம் பேர்களுக்காவது கொடுத்திருப்பார்களா என்று தெரியவில்லை. அதுவுமில்லாமல், அதற்கான முழு பணமும் அவர்களுடையதா? இல்லை பாதி அவர்கள் தந்து, மீதியை அரசாங்கம் தந்ததா? இல்லை கடனாகக் கொடுக்கப்பட்டதா என்ற விவரம் எதுவும் இந்தக் குறிப்பிலே இல்லை. இதை நான் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை.

இதுபோன்ற விவரங்களைக் கொடுக்கும்போது எந்தெந்த இடங்களில் எத்தனை பேர்களுக்கு, என்னென்ன உதவிகளைச் செய்தீர்கள், சலுகைகள் கொடுத்தீர்கள் என்று விவரமாகக் கொடுத்திருந்தால் நலமாக இருக்கும். அதைப் போலவே குறவர் பிரிவினருக்கு என்ன நன்மைகள் செய்திருக்கிறீர்கள். தொண்டை மண்டல ஆதிசைவ வேளாளர்கள் என்று ஒரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்கள் தங்களுக்கு இந்தச் சலுகைகள் வேண்டும் என்று கேட்கின்றனர். அதுபோலவே வண்ணார்கள் கேட்கிறார்கள். நான் சொல்வது எல்லாம், ஏதோ அரசாங்கத்தைக் குறை சொல்லவேண்டும் அல்லது குழப்பமாக உரையை முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை.

நீங்கள் தீர்க்கமாக, நிதானமாக இதிலே சிந்தித்துச் செயல் பட வேண்டும். தமிழக அரசாங்கம் இதற்கென்று ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். பொருளாதார ரீதியிலே என்று நீங்கள் கொள்கை எடுத்துக்கொண்டால், அதை யார் எதிர்த்தாலும் சரி, எப்படிப்பட்ட அரசியல் காரணமாக இதற்கு எதிர்ப்பு வந்தாலும் சரி, அதை ஏற்று தைரியமாக முயற்சி செய்து நடத்த வேண்டும். அதோடு நாங்கள் பின் தங்கியவர்களுக்காக, ஆதிதிராவிடர்களுக்காக இன்னின்ன நன்மைகளைச் செய்திருக்கிறோம், என்று குறிப்பிட்டுச் சொல்லிவிடுங்கள். ஆட்சேபனை இல்லை. இந்த ரிப்போர்ட்டிலே கூட 25ஆவது பக்கத்திலே "The Government haue launched special scheme during 1981-82 for acquring lands for assignment of house s tes to the poor among the Backward Classes particularly the occupaticnal communities such as Oddar, Navithar, Tannar, Narikoravar who are found to be worse than Adi dravidars. 99.69 acros were acquired........

என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதிலே நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர்களை விட இவர்கள் கீழானவர்கள், மேலானவர்கள் என்று எதுவும் சொல்லவில்லை. அந்த ஆதிதிராவிடர்களை விட இந்த பாதி திராவிடர்கள் found to be wo se than Adi Dravidars என்று சொல்லுகிறீர்களே, அது சரியானது அல்ல. இந்தப் பாதி திராவிடர்களுக்குத் தீண்டாமை என்ற பாவம் கிடையாது. அவர்கள் எவ்வளவு பின்னடைந்திருந்தாலும் சரி, பேண்ட் போட்டு வந்தாலும், வேட்டி கட்டி வந்தாலும், கண்ணாடி போட்டிருந்தாலும் போட்டிருக்காவிட்டாலும், அவர்கள் எப்படி இருந்தாலும் சரி, தீண்டாமை என்ற பாவம் அவர்கள் மீது ஒட்டிக் கொள்ளவில்லை. ஆனால் ஆதிதிராவிடர்கள், அவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும் சரி, ஐ.ஏ.எஸ்.ஸாக இருந்தாலும் கூட சரி, அவர்கள் மத்தியிலே தீண்டாமை இருக்கிறது. இதை நான் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே





இருந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்களுடைய காலத்திலே கூட, இந்த பாதி திராவிட மக்களின்—ஒரு சாதாரண ஆர்.டி.ஓ. போய் ஒரு கிராமத்தில் போய் ஏதாவது கேட்டால் கூட, கணக்குப் பிள்ளை, மணியக்காரர், தோட்டி, தொண்டான் என்று எல்லோரும் வருவார்கள்.

ஆதிதிராவிட வெல்ஃபேர் ஆபீஸர்களும், கலெக்டர்களும் போய்க் கேட்டால் ஒரு ஆள் கூட வரமாட்டான். அப்படிப் பட்ட நிலைமை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். எனக்கு ஒரு சந்தேகம். அதிகாரிகளுக்கே தீண்டாமை பற்றி புரியவில்லையோ என்பதுதான். எனவே ஆதி திராவிடன் பணக்காரனாக இருந்தாலும், ஐ.ஏ.எஸ். ஆபீஸராக இருந் தாலும், ஐ.பி.எஸ். ஆபீஸராக இருந்தாலும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு எந்தவிதமான சலுகையும் கிடையாது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தவறாகக் கருதுகிறார்கள். ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு எல்லாம் இல வசம் என்றும், அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் இலவச மாகப் படிக்கிறார்கள் என்றும் தவறாகக் கருதுகிறார்கள். ஆனால் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத் திலேயே பி.யூ.சி. வரையிலும் எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர் களும் இலவசமாகப் படிக்கலாம் என்ற ஏற்பாட்டினைச் செய்து விட்டார்கள். ஆகவே ஆதி திராவிடர்களின் பிள்ளைகளுக்கு அதற்கு மேல் 3 வருடம் வரைக்கும்தான் உதவி கிடைக் கின்றது. எனவே ஆதி திராவிடர்கள் தீண்டாமைக் கொடுமை யால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இருக்கின்ற வித்தி யாசங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி இருந்த காலங்களில் பிற்பட்ட வகுப்பினர்களுக்காக செலவு செய்யப்பட்ட தொகையை விட புரட்சித் தலைவர் காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் தான் கணிசமாக, அதிகமாக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்படுவதற்கு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டநாதன் கமிஷனுக்குப் பிறகு பிற்பட்ட வகுப்புகள் பற்றி ஆராய ஒரு கமிஷனை நியமித்து அந்தக் கமி ஷனுக்கு மிகவும் பிற்பட்ட வகுப்பை சார்ந்த ஒருவரை தலைவ ராகப் போட்டதற்கு புரட்சித் தலைவரை எதிர்க் கட்சித்தலை வர்களும் பாராட்டக் கடமைப் பட்டவர்கள். இந்தியப் பேரரசு மண்டல் கமிஷனை நியமித்த நேரத்தில் அம்பாசங்கர் தலைமை யில் கமிஷன் நியமித்தது பொருத்தமானது. ஏற்கனவே பிற்

பட்ட வகுப்பு பட்டியலில் பல வகுப்புகள் இருக்கின்றன. பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் இருப்பதனாலேயே உயர் நிலைப் பள்ளியானாலும், கல்லூரியானாலும் சம்பளத்தில் சலுகை காட்டப் படுவதில்லை. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 5,000 வருமானத்திற்குஉட்பட்ட குடும்பத்து பிள்ளைகளுக்கு மாத்திரம்தான் சலுகை வழங்கப்படுகின்றது. அதே போல் ஆதி திராவிடர்களாக இருந்தால் கூட ஆண்டு வருமானம் குறைந்து இருந்தால் தான் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன என்று நினைக்கிறேன்.

சமூகத்தாலும், படிப்பாலும் பிற்பட்ட மக்கள் தான் சலுகை பெற அருகதை உள்ளவர்கள் என்று சொல்லப் பட்டாலும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கான ஆண்டு வருமானம் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் முற்போக்கு ஜாதிகள் என்று சொல்லப்படும் ஜாதிகளில் ஆண்டுக்கு 1,000 அல்லது 2,000 கூட வருமானம் இல்லாதவர்களின் குழந்தைகளுக்கு பிற்பட்ட வகுப்பினர் பெறுகின்ற சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முற்போக்கு ஜாதியினருக்கு இந்த அரசு பிற்பட்ட ஜாதி என்று முத்திரை குத்த வேண்டாம். பிற்பட்ட ஜாதி என்று லேபிள் ஒட்டுவது முக்கியமல்ல. முற்போக்கு ஜாதியினர் பட்டியலில் உள்ள தரித்திரம் தாண்டவமாடும் குடும்பங்களிலுள்ள குழந்தைகளுக்கும் பிற பட்ட வகுப்பு குழந்தைகளுக்குக் கொடுக்கின்ற சலுகைகளைக் கொடுக்க அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பிற்பட்டவர்களுக்கு 50 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதம் என்று ரிசர்வேஷன் செய்கின்றபோது எஞ்சியுள்ள 32 சதவீதம் என்ற குறைவான சதவிகிதத்திலேயும் பிற்பட்ட வகுப்பு மற்றும் ஆதிதிராவிடர் வகுப்பிலே உள்ளவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது நியாயம்தானா என்பதை இந்த அரசு யோசித்துப் பார்க்க வேண்டும்.

பிற்பட்ட வகுப்புகளில் கூட, ஒரு சில பிற்பட்ட வகுப்புகளே, பிற்பட்ட வகுப்புகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளை 75 சதவீதம் அனுபவிக்கின்றன. குறிப்பாக தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தலைவர், உறுப்பினர் பதவிகளில் பலவித பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். குரூப் 1, குரூப் 2 பதவிகளில் ஒரு சில பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களே தேர்ந்தெடுக்கப்படாமல் பல பிற்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளும் தேர்ந்தெடுக்கப் பட அரசு உத்தரவாதம் செய்ய வேண்டும்.

பிற்பட்ட வகுப்பிலும் ஆதிதிராவிடர் வகுப்பிலும் கூட குடும்பக் கட்டுப்பாட்டை அமல் படுத்தும் நோக்கத்தில் 2 குழந்தைகள் வரைதான் சலுகைகள் தரப்படும்; 3 வது குழந்தை பிறந்தால் கொடுக்க முடியாது என்று உத்தர விட வேண்டும்.



இன்று செய்தித் தாளில் பார்த்தேன். 3வது பிரசவத்திற்கு லீவு கிடையாது என்பது போல் ஏன் நாம் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு அளிக்கும் சலுகைகளிலும் கடைபிடிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் விடுதிகளை மேலும் அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது 50 மாணவர்கள் என்று சீலிங் வைத்து இருப்பதை மேலும் அதிகமாக்கி அதிக மாணவர்கள் சலுகைகளைப் பெற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொண்டை மண்டல ஆதி சைவ வேளாளர் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளனர். இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தமிழக அரசையும், மாண்புமிகு முதலமைச்சரையும் அச்சங்கத்தின் தலைவர் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும், ஆகவே அந்த இனத்தவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் போன்ற இடங்களில் உள்ள பிற்பட்ட வகுப்பில் உள்ள குழந்தைகளுக்கும் பிற்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப் போல் அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நான் இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பி ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் பற்றிய மானியத்தின் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துக்களை நான் சொல்ல கடமைப் பட்டுள்ளேன். முதன் முதலாக இந்த தமிழ்நாடு அரசினுடைய ஒதுக்கீடு இப்போது பிற்பட்டோர் வகுப்புக்கு ஒதுக்கீடு என்ற முறையில் ஒதுக்கப்பட்டிருப்பதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. அதாவது 50 சதவீதம் வரை பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டிருப்பதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த பிற்பட்டோர் யார் யார் என்பதை பற்றி எல்லாம் பல்வேறு விதமான சர்ச்சைகள் இன்று ஏற்பட்டு இருக்கின்றன. அதன் காரணமாக இந்த அரசினுடைய சார்பில் கொண்டு வந்து இருக்கக் கூடிய இந்த மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் 25 வது பக்கத்தில் 22 வது பாராவில் தமிழ் நாடு இரண்டாம் பிற்பட்டோர் உயர் ஆணைக் குழு—தமிழ் நாடு அரசு இரண்டாவது பிற்பட்டோர் உயர் ஆணைக் குழுவினை

திரு. ஜே.ஏ. அம்பாசங்கர், இ.ஆ.ப., (ஓய்வு பெற்றவர்) அவர்களின் தலைமையின் கீழ் 18 உறுப்பினர்களுடன் அமைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது அதிலே ஒரு வேடிக்கை என்னவென்று சொன்னால் அந்தக் குழு அமைக்கப்பட்டதிலே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா கட்சி போன்ற கட்சிகளைச் சேர்ந் தவர்களை அந்தக் குழுவில் கொஞ்சம் கூட இடம் பெறச் செய்ய வில்லை. அந்தக் கட்சிக்காரர்களுக்கு இடம் கொடுக்காமல் குழு அமைத்து இருப்பது சரியல்ல என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டுள்ளேன். இந்தக் குழு சொல்லக் கூடிய ஆலோசனை அடிப்படையில் பின்னர் அரசாங்கம் எடுக்கக் கூடிய பல்வேறு பரிந்துரைகளை அமுல் நடத்துவதற்காக முயற்சிக்கப்படும் என்று சொல்லக் கூடிய இந்த முக்கியமான குழுவில் இந்த மூன்று கட்சிகளுக்கு இடம் ஒதுக் காமல் இருப்பது சரியல்ல என்பதை இந்த நேரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். இந்த ரிசர்வேஷனைப் பொறுத்த மட்டில் பிற்பட்ட மக்களுக்கு ஒதுக்கக் கூடிய ஒதுக்கீடு யாருக்கு ஒதுக்க வேண்டும்? யார் பிற்பட்டோர் என்ற முறையில் முன்னால் பரிசீலிக்கின்ற போது அரசாங்கம் ஒரு கொள்கையை கொண்டு வந்தது. அதாவது 9 ஆயிரம் ரூபாய்க்குக் கீழ் வருமானம் வருபவர்கள்தான் இந்த பிற்பட்டோர் சலுகையை பெற முடியும் என்ற முறையில் அரசாங்கம் ஒரு வரம்பை நிர்ணயித்து கொண்டு வந்தது. இதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி வரவேற்றது. அந்த வரம்பை மாத்திரம் இப்போது இருக்கக் கூடிய பணவீக்கம் காரணமாக அந்த 9 ஆயிரம் ரூபாயை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று அன்று கோரி அது அமுலுக்கு வருகின்ற நேரத்தில் பல் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும், பல்வேறு நபர்களும் பிற் பட்டோர் என்ற முறையில் வருபவர்கள் நாங்கள் பாதிக்கப் படுகிறோம் என்று அவர்கள் நடத்திய பல இயக்கங்களின் காரண மாக இந்த பிற்பட்டோர்க்கு நல்ல முறையில் கொடுக்கின்ற சலுகைகளை, அனுபவிப்பதற்கான வாய்ப்புகளை தடுக்கின்ற முறையில் நடத்தப்பட்ட இயக்கத்திற்கு அரசு பணிந்து பின் வாங்கியது சரியல்ல. ஆகவே அரசு அந்தப் பழைய சட்டத்தை அமுல் நடத்த முன் வர வேண்டும் என்று மார்க் ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மீண்டும் வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

வருமானத்தைப் பொறுத்தமட்டில் எவ்வளவு என்பதை நமக்குள் இந்த சட்டமன்றத்தில் பேசி நிர்ணயித்துக்கொள்ள லாம். ஆகவே வருமானத்தின் அடிப்படையில் தான் பிற்



பட்டோர் சலுகைகள் இருக்க வேண்டுமே தவிர வருமானம் இல்லாத நிலை ஏற்பட்டால், வருமானம் வரையறுக்கப்படா விட்டால் வசதிப் படைத்தவர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய அந்த சலுகைகளை உபயோகப்படுத்தி......

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்ட சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் அவர் களுடைய இட ஒதுக்கீடு சலுகைகளுக்கு வருமான வரம்பு வைக்க வேண்டும்;அதுதான் மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை என்று சொன்னார்கள். ஏற்கனவே அவர்களுடைய கொள்கை யும் அதுதான். நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைப் பொறுத்த மட்டில் அதே அணுகு முறைதானா ? அதற்கும் இதற்கும் ஏன் வேறுபாடு ?

திரு. என். சங்ஙரய்யா: : தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஏற்கனவே இங்கே விளக்கப்பட்டுவிட்டது. தாழ்த்தப்பட்ட சமுதாயம் அந்த அளவுக்கு வளர்ச்சி அடைய வில்லை என்ற காரணத்தினால் அதற்கு பொருளாதார வரம்பு வைப்பது இன்றைய கால கட்டத்திலே சரியில்லை என்று மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆனால் பிற்பட்டோர் என்ற விஷயத்திலே பொருளாதார வரம்பு விதிப்பது என்பது முற்றிலும் சரியானது. அப்போதுதான் சமுதாய ரீதியிலும் கல்வி ரீதியிலும் பிற்பட்டவர்கள் என்பதிலேயே பொருளாதார ரீதியிலே பிற்பட்டவர்கள் அப்படிப்பட்ட வசதிகளை அனுபவிப் பதற்கு வழி உண்டு. இன்றைக்கு அந்த வசதிகளை மிகவும் வசதி படைத்தவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்ற காரணத்தினால் பொருளாதார வருமான வரம்பை பிற்பட்டோர் விஷயத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

திரு. எஸ். இளையபெருமாள்: : தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவரவிரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சகோதரர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதைப்போல கான்ஸ்ட்யூஷனல் சேப்கார்ட் கொடுக்கப்பட்டது. தீண்டாமை என்ற ஒரே ஒரு குற்றம் நாளைக்கே நீக்கப்படுவதற்கு இந்திய சமுதாயமும் தமிழக சமுதாயமும் ஒத்துக் கொள்ளுமானால் எங் களுக்கு அந்த தனிச் சலுகைகள் தேவையில்லை என்பதைசொல்லிக் கொள்வதோடு கான்ஸ்டிட்யூஷனல் சேப்கார்ட் அன்டச்சபிலிட்டி இருப்பதால் கொடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு அவர்கள் ஆண்டாண்டு காலமாக சமுதாயத்தில் சாதியின் பெயரால் தாழ்த்தப்பட்ட காரணத்தினால் அந்தச் சலுகைகள் தேவை. அதை நான் வர வேற்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக. ஆனால் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் சனாதன தர்மத்தின்

முன்னால் சூத்திரர்கள் என்று அழைக்கப்பட்டு அவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களாக சோசியலி எஜூகேஷனலி—அதைத்தான் பண்டித நேரு அரசியல் சட்டத்தை வரையறுக்கிறபோது தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்—சட்டபூர்வமானதுதான் அது.

**திரு. என் சங்கரய்யா :** தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் ஆயிரம் ரூபாய் என்று வருமான வரம்பு கொண்டுவந்த போது மார்க்கிஸ்ட் கட்சி ஆதரித்து இருக்கிறது. அரசாங்கம் அதை கைவிட்டு விட்டது தவறு என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அபிப்பிராயம். காரணம் என்னவென்றால் இப்போது 50 சதவீதம் வைத்திருக்கிறோம், அதை பெரிய பதவிகளிலே உத்தியோகங்களிலே இருக்கிறவர்கள், வசதி படைத்தவர்கள் பறித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே உண்மையிலே சகல வசதியும் இல்லாதவர்களுக்கு ரிசர்வேஷனுடைய பயன் கிடைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கட்சிக்கொள்கை.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தாற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த வருமானத்தைப்பற்றிச் சொல்கிறபோது ஏற்கெனவே சில சலுகைகள என்று வருகிறபோது 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக ஆண்டு வருமானம் இருக்கிறவர்களுக்கு இந்தச் சலுகைகள் கிடையாது என்றும் 1,500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு முழுச் சலுகை என்றும் 1501 ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர்களுக்கு அரை சலுகை என்றும் சொல்லப்படுகிறது. அது எப்போதோ போடப்பட்ட வருமான வரம்பு என்று கருதுகிறேன். இன்றைக்கு பண வீக்கம் மிகவும் அதிகமாகிவிட்டது, சாதாரணமாக குறைந்த சம்பளம் வாங்குகிறவர்கள்கூட வருடத்திலே 1500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறார்கள் என்ற நிலை இருக்கிறது எனவே இந்த வருமான வரம்பை உயர்த்தவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து மாணவர்களுடைய விடுதிகளிலே தங்குகிற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறபோது வருமான வரம்பை பிரதானமாக வைத்து ஒதுக்குகிறார்கள். பல இடங்களிலே பல நேரங்களிலே பூர்த்தி செய்யமுடியாத அபாயம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்த வருமான வரம்பையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே மாதத்திற்கு 60 ரூபாய் என்று சாப்பாட்டிற்காகவும் மற்றச் செலவுகளுக்காகவும் கொடுக்கப்படுகிறது. இன்றுள்ள நிலையில் ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிடுவது என்ற அடிப்படையில் வைத்துக்கொண்டாலும்கூட ஒரு மாதத்திற்கு 60 ரூபாய் போதுமானதாக இருக்காது என்பதால் அதையும் உயர்த்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





(முற்பகல் 11-00)

அடுத்தபடியாக இந்த மாணவர்கள் விடுதிகள் இன்னும் பல இடங்களில் வாடகைக் கட்டிடங்களிலேயே இருந்து வருகின்றன. அந்த நிலையை போக்க அரசாங்கம் முன் வரவேண்டும் அப்படிப்பட்ட கட்டிடங்கள் எங்கே இருக்கின்றன என்பதை கணக்கெடுத்து அங்கெல்லாம் அரசுக் கட்டிடங்களைக் கட்டவேண்டும். அந்த கட்டிடங்களில் சுகாதார வசதிகளையும், பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தி மாணவர்கள் படிப்பதற்கான நல்லதொரு வசதியான நிலையை ஏற்படுத்த வேண்டும். சில இடங்களில் கலைக்கல்லூரிகளுக்காக கட்டப்பட்ட இடங்களில் கூட அந்த விடுதிகள் சரியான முறையில் உபயோகப்படுத்தாமல் காலியாக இருக்கிற நிலை இருக்கிறது. உதாரணமாக குடியாத்தத்தில் அரசினர் ஆண்கள் கலைக்கல்லூரியில் இருக்கிற அந்த மாணவர் விடுதியில் 100 மாணவர்கள் தங்கி படிகக வாய்ப்பிருந்தும் கூட அது சரியாக உபயோகப்படுத்திக் கொள்ளப்படவில்லை. பொதுவாக விடுதி என்பதற்கு பதிலாக பிற்பட்டவர்களுடைய விடுதி என்பதாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வர வேணடும்.

பிற்பட்டோர் லிஸ்ட்டிலே கூட சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். குறிப்பாக எடுத்துக்கொண்டால் நம்முடைய பாலிசி நோட்டிலே இதுபற்றி கொடுத்திருக்கிறார்கள். முடிதிருத்தும் தொழிலைச் செய்கின்ற அனைவருமே நாவிதர் என்று இருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் அவர்களை நாவிதர் என்று லிஸ்டிலே கொண்டு வராமல் வேறு ஒரு ஜாதிப் பெயரில் சேர்த்து அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காமல் இருக்கின்றன. ஆகவே அநத தொழில் அடிப்படையில் நாவிதர் என்ற முறையில் விளக்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கிற நாவிதர்களை கூட இநத லிஸ்டிட்லே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சணிகர்கள், அவர்களை பொறுத்தவரையில்மிகவும பிற்பட்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களோடு சேர்த்திருக்க வேண்டும். அதேபோல சலவைத் தொழிலாளர்கள் சலவைத் தொழிலாளர்கள் மிகவும் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களுக்கு துணிகளை சலவை செய்து கொடுத்து ஒரு நல்ல பொதுத் தொண்டை செய்து வருகிறார்கள். தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் சார்பாக அவர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அண்மையில் திருவாரூர் சலவைத் தொழிலாளர் மாநாட்டில் கூட அப்படிப்பட்ட கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக பல்வேறு கருவிகள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டுமென்பதோடு. பல இடங்களில் சலவைத் துறைகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்

முடைய பாலிசி நோட்டிலே பார்த்தால் மிகவும் குறைந்த பகுதிகளில் தான் அந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பல நகரங்களில் நூற்றுக்கு குறைவான எண்ணிக்கையுள்ள இடங்களில்தான் இந்த துறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மேலும் பல இடங்களில், நகரப் பஞ்சாயத்துகளிலும், நகரசபைகளிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நகர சபை நகராட்சிகளின் சார்பில் பாதி மானியமாகவும், பாதி அரசாங்கத்தின் மானியமாகவும் கொடுத்து அந்த தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியல் சாசனத்தின்படி கல்வி, சமூகம் என்ற அடிப்படையை வைத்து பிற்பட்டோர் நலத்துறை என்பதை பிரித்து, வசதிகள், வாய்ப்புகள், அதிகாரங்கள், இவைகளை இந்த ஜனநாயக நாட்டில் பங்கிட்டு கொடுப்பதை, முறையாக பல்வேறு மாநிலங்கள் செயல்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, கல்வி, சமூகம் என்பது அரசியல் சாசனத்தில் இருப்பதற்கு உதந்ததாக இல்லாமல், அடுத்தபடியாக வருமானம் என்ற ஒன்றை கணக்கிட்டு இந்த பிற்பட்டவர்களுக்கு ஏற்படுகிற சலுகைகளை இந்தியா முழுவதும் அளித்து வருவதை நாம் கண்கூடாக கண்டு கொண்டிருக்கிறோம். சற்று முன்பு நடந்த விவாதத்தில் கூட அரசு உச்சவரம்பு என்று வருமானத்தை நிலையாக வைத்து, அந்த வருமானத்தின் அடிப்படையில் பிற்பட்டோர் பட்டியலில் அவர்களை சேர்த்து, ஜாதி வெறிகளை ஒழிக்கக்கூடிய ஒரு செய்கையை தமிழக அரசு கொண்டு வந்ததை, ஏன் அமல் நடத்தவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேள்வி எழுப்பப்பட்டது. இந்த கேள்வி நியாயமான கேள்வி என்ற உணர்வோடு, நானும் ஏற்றுக்கொண்டு, ஜாதிகளை ஒழிக்கவேண்டும்மென்று சமுயதாயத்தில் புரட்சிகரமான கருத்துக்களை சொல்கின்றவர்கள் அரசியல் சாசனத்தைத் திருத்தி கல்வி, சமூகம் என்ற அடிப்படையோடு வருகிற வருமானத்தை கணக்கிட்டு வாழ்வதற்கு அந்த பிற்பட்டவர்களுக்கு வழி விடுகின்ற சூழ்நிலையை தவறாக அடையாளம் காட்டி நாட்டு மக்களை தட்டி எழுப்ப முயற்சி செய்கின்றவர்களின் முகமூடிகளை கிழித்து எறிவதற்கு இந்த மாநில அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயத்தால் இன்று சீரழிந்து கொண்டிருக்கிற இந்தப் பிற்படுத்தப்பட்டோர், சர்க்காரின் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு—எல்லோரும்—முன்னுக்கு வருகிறார்களா என்றால் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தைரியமாகச் சொல்ல முடியும். பொருளாதாரத்தில் மாற்றங்கள் என்ற அடிப்படையில் சர்க்கார் அளிக்கின்ற சலுகைகள் மூலமாக வேண்டுமானால் ஒருசிலர் உயரக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்



கிறது என்பதையும் உண்மையிலே சமுதாயத்திலே அவர்களுக்கு மதிப்பு ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்த அரசியல் சாசன சட்டப்படி அல்லது திட்டப்படி எதையும் செய்யமுடியாது என்பதையும் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசியல் சாசனம் சொல்லுகின்ற கருத்துப்படி சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தை இந்தப் பிற்படுத்தப்பட்டவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமென்றால், கல்வியிலும் சமூகத்திலும் மாத்திரம் ஒரு புரட்சியை ஏற்படுத்தினால், பிற்படுத்தப்பட்டோர் எல்லோரும் முன்னுக்கு வந்து விடுவார்கள் என்று நினைப்பது, முடவன் கொம்புக்குத் தேனுக்கு ஆசைப்பட்டது போல் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்து கொள்கிறேன்.

சமுதாய மாற்றத்தை, ஒரு ஜனநாயக சர்க்கார், செய்ய வேண்டுமென்றால், கல்வியின் நிலையால் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களுக்குப் பிறகு, சில அரசியல் சாசன திருத்தங்கள் செய்தால்தான் செய்ய முடியும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். சுதந்திரம் கிடைத்த 35 ஆண்டுக்காலத்தில், இந்தச் சுதந்திர இந்தியாவில், இந்தப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பட்டியலில் உள்ளவர்களுடைய நீளம்தான் நீண்டிருக்கிறதே ஒழிய, ஜாதிகளுடைய எண்ணிக்கை தான் பெருகியிருக்கிறதே ஒழிய, சலுகைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் கணக்குதான் உயர்ந்திருக்கிறதே ஒழிய, உண்மையில் இந்தச் சலுகைகளையும், இந்தச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொண்டு, இந்த ஜனநாயகத்தில் முன்னுக்கு வந்தவர்கள், இந்தப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களின் பட்டியலில் மிகமிகக் குறைவு என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சலுகைகள் என்று யாருக்காவது அளிக்கப்பட்டிருக்கிறதா என்றால், பல்வேறு ஜாதிகள், பல ஆயிரக்கணக்கான ஜாதிகள் இந்தியாவிலே இருந்தாலும், குறிப்பிட்ட ஒருசில ஜாதிகள் தான் அந்தச் சலுகைகளைப் பெற்றிருக்கின்றன என்பதையும், ஆகவே, இந்தச் சலுகைகளை எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்றால், ஜாதிகள் இல்லையடி பாப்பா என்ற அந்தப் பாரதியினுடைய கனவை நனவாக்கவேண்டுமென்றால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற அந்தப் பொருளாதார அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர் என்ற நிலையை ஏற்றுக்கொள்ளவேண்டும், இந்தியப் பேரரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் ; அரசியல் சாசனத்தைத் திருத்துவதற்கு மத்திய சர்க்கார் முனைந்து முன் வரவேண்டும். இதற்கு எதிரான கோஷங்களைக் கிளப்பி நாட்டு மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைச் சொல்லி, அரசியல் சூறாவளியில் தங்களுடைய படகுகளைப் பத்திரமாகக் காப்பாற்றிக்கொள்'

கிறவர்கள், அதைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, தாங்கள் அழிந்தாலும் பரவாயில்லை, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ வேண்டுமென்ற உணர்வோடு வாழக்கூடிய ஒரு சூழ்நிலையில் புரட்சித் தலைவர் கொண்டு வந்த அந்த சுலோகங்களை ஏற்றுக் கொள்பவர்களாகத் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அந்த நிலைமையில் எதிர்ப்பு கிளம்புமானால், இந்த மானியத்தைக் கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தத் தமிழக அரசு மக்கள் மத்தியில் இந்தத் துறை கணிக்க வேண்டிய விதத்தைச் சொல்வதோடு, அடையாளம் காட்ட வேண்டியவர்களை, நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்டக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் பதவி பெற்றவர்களுடைய பட்டியலை நீங்கள் பார்ப்பீர்களானால், அது தமிழ் நாடாக இருந்தாலும், ஆந்திராவாக இருந்தாலும், கர்நாடகமாக இருந்தாலும் எந்த மாநிலமாக இருந்தாலும் யார், யார் தங்களுடைய குடும்பங்களில் ஐ.ஏ.எஸ். ஆக இருக்கிறார்களோ, அவர்களுடைய குடும்பங்களில் உள்ளவர்கள்தான் ஐ.ஏ.எஸ். ஆக வந்திருக்கிறார்கள். பெரிய, பெரிய அதிகாரியாக வந்திருக்கிறார்கள். மற்றைய குடும்பங்களில் உள்ளவர்களுடைய விழுக்காடு மிகமிகக் குறைந்து கொண்டுவந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு ஞாபகப்படுத்த விரும்புகிறேன் ஆகவே, நம்முடைய கோரிக்கை, இந்திய நாட்டினுடைய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கோரிய அந்தக் கருத்துபடி, கல்வி, பொருளாதாரம், சமூகம் என்ற அடிப்படையில் அரசியல் சாசனத்தைத் திருத்தி, இந்தப் பிற்படுத்தப்பட்டோர் துறையில் தீர்வு காண்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள் சூறாவளியாகக் கிளறிக் கொண்டிருக்கிறது என்பதையும் அந்தச் சூறாவளியில்கூட இந்தப் பிற்படுத்தப்பட்டோரில் ஒருசில ஜாதிகளே இந்தச் சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற தன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த மன்றத்திலே தைரியமாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 108 ஜாதிகள் அல்லது 1,008 ஜாதிகள் இருந்தாலும் கூட ஒருசில ஜாதிகள்தான் தாங்கள், தங்கள் பால் அமைக்கப்பட்டிருக்கிற அந்த ஜாதியின் உயர் பதவிகளை வைத்துக் கொண்டிருப்பவர்களை வைத்துக் கொண்டு அந்த பதவிகளை அல்லது அதற்குத் தேவையான நிலைகளை, சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களே ஒழிய வேறொன்றும் இல்லை என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.



(முற்பகல் 11-10).

மாணவ விடுதிகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். அந்த மாணவ விடுதிகளிலேகூட, அந்த மாணவர்களுக்குத் தினம் தினம் எந்த வகையான உணவு கொடுக்கப்படுகிறது என்ற மதிப்பீடுகளையெல்லாம் டைப் செய்தோ அல்லது அச்சடித்தோ ஒட்டக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக மனைப்பட்டாக்கள் வழங்குவதைப்போன்று, பிற்பட்டோர் நலத்துறையிலேயும், பிற்பட்டோர் பட்டியலில் சேர்ந்திருப்பவர்களுக்கு நிலம் ஒதுக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் இந்த அரசு நிதி ஒதுக்கியிருப்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் கலை நுட்ப வல்லுநர்கள் என்று சொல்லத்தக்க அளவிற்கு இருக்கின்ற மட்பாண்டம் செய்வோர், துணி துவைப்போர், நாவிதர் போன்ற நிலையில் இருப்பவர்களுக்கு அரசு மனைப் பட்டாக்களைக் கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்த நிலையில் மனைப் பட்டாக்களைக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்கிறதோ அதேபோன்ற முயற்சிகளைச் செய்து தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர் விடுதிகளில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது, மூன்று மைல், ஐந்து மைல் தூரத்தில் உள்ள மாணவர்களைத்தான் சேர்த்துக் கொள்ள முடியும், உள்ளூரில் இருக்கின்ற மாணவர்களைச் சேர்க்க முடியாது என்ற நிலைமை இந்தத் துறையில் இருப்பது விரும்பத் தக்கதல்ல. காரணம், உண்மையிலேயே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற, இந்த பிற்பட்டோர் நலத் துறையில் உள்ள அந்த மாணவர்கள், அந்த விடுதி இருக்கின்ற ஊரில் இருப்பவர்கள் படிக்கக் கூடிய திறமையும் ஆற்றலும் பெற்றிருந்தால் அந்த வசதிகள் அவர்களுக்கு இல்லாமல் போகிறது. அந்த வசதிகளை அவர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதாரத் துறையில் பிற்படுத்தப்பட்ட சூழ்நிலையில் உள்ளவர்கள் முன்னுக்கு வர வேண்டுமென்ற அடிப்படையில் பத்து கோடிக்கு மேல் நிதி ஒதுக்கியிருப்பது பாராட்டுதற்குரியது. நீங்கள் பத்து கோடி அல்ல, நூறு கோடி அல்ல, ஆயிரம் கோடி அல்ல, பத்தாயிரம் கோடியாக இருந்தாலும் அரசியல் சாசனப்படி கல்வி, சமூகம் என்ற அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்களைத் தலை நிமிரச் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலையை நாம் எடுப்போமேயானால் அது ஒரு பரிதாபத்துக்குரிய நிலையில்தான் போய் முடியும். பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டுமென்ற மாண்புமிகு

பரட்சித் தலைவரவர்களின் கருத்துக்களை வலியுறுத்தி, பொருளாதார அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற சூழ்நிலையை இந்த அரசு உருவாக்குவதற்கு முழு முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

*திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1983-84-ஆம் ஆண்டிற்கான பிற்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளதைப் போன்று, பிற்பட்ட மக்களின் தொகை வருஷா வருஷம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வருஷா வருஷம் அதிகரித்துக் கொண்டு வருவதற்குக் காரணம் ஏற்கெனவே இருந்த முற்பட்ட ஜாதியில் இருந்தவர்களுக்குப் பொருளாதார சூழ்நிலையின் காரணமாகத் தங்களுக்குச் சலுகைகள் இல்லை என்ற நோக்கத்தோடு தங்களையும் அந்த இனத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசுக்குத் தாக்கீது அனுப்புவதும், அரசு பரிசீலனை செய்து இம்மாதிரியான நிலையில் ஒதுக்கீடு செய்வதுமான ஒரு அம்சமாக இருக்கிறது.

1974 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாள் தனியாக இந்த இலாக்காவுக்கு ஒதுக்கப்பட்டு, வருஷா வருஷம் இந்தத் துறை வளர்ந்து கொண்டே வருகிறது என்று அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தொகையையும் நாம் கூடுதலாக ஒதுக்க வேண்டிய ஒரு நிலையில் இருக்கிறோம். காரணம், இந்தப் பிற்பட்ட வகுப்பினருக்குக் கல்வி சலுகை மட்டுமல்லாமல் இதர தொழில்களிலேயும்கூட, அவர்கள் ஈடுபடுவதற்கு ஒரு வருஷத்திற்கு ஒதுக்கக்கூடிய நிதி நிலையிலே அடுத்த வருஷம் அதே தொழில் செய்யும்போது அதிகமான நிதி ஒதுக்க வேண்டிய ஒரு சூழ்நிலையிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பிற்பட்டோருக்குச் சலுகைகள் செய்ய வேண்டுமென்ற அந்த நோக்கத்தோடு, அவர்கள் படிப்பதற்காகச் சலுகைகளை ஒதுக்க சான்றிதழ் வாங்கச் செல்லும்பொழுது, அவர்கள் ஏற்கெனவே பள்ளியிலே படிக்கும்பொழுது இன்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள், பிற்பட்டவர் என்பது பள்ளிச் சான்றிதழிலே இருக்கும். ஆனால் அந்தப் பள்ளிச் சான்றிதழில் இருக்கக் கூடிய அதனை அப்படியே நகல் எடுத்து சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்ப முடியாமல் மீண்டும் அதிகாரி இடத்திலே செல்லுகின்றபோது, ஒவ்வொரு முறையும், அவர்கள் பல நாட்கள் இழுத்தடிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனை மாற்றி, அவர்களுடைய பள்ளிச் சான்றிதழை அப்படியே நகல் எடுத்து அனுப்பக்கூடிய நிலையை இந்தச் சட்டத்திலே திருத்தம் வேண்டியிருக்கிறது.

குற்றவியல் பட்டியலில் இருக்கக் கூடிய அந்த இனத்தவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், முதல் வகுப்பிலிருந்து 3 ஆம் வகுப்பு வரையிலும், 9 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம்



வகுப்பு முடியவும். அவர்களுக்கு இந்தப் புத்தகங்களை இலவசமாக வழங்கினாலும், அப்படி வழங்குகிறபோது, ஒரு குறிப்பிட்ட நேரத்தில்—பள்ளிகள் திறந்த ஒரு வாரத்திற்குள்ளாக சம்பந்தப்பட்ட குழந்தைகளுக்குப்புத்தகம் கிடைக்காத காரணத்தால் அவர்கள் படிப்பிலே முனைப்பாக ஈடுபடமுடியாமல் வேறு இடங்களிலே அவர்கள் புத்தகம் வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதல் 2-ஆவது 3-ஆவது படிக்கக்கூடிய சிறு குழந்தைகளுக்கு பொருளாதார சூழ்நிலை காரணமாக நாம் இலவசமாக புத்தகம் வழங்குகின்ற சூழ்நிலையில் ஓராண்டிற்கு ஒரு செட் இல்லாமல் இரண்டு செட் புத்தகம் கொடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட இந்தச் சமயத்தில் ஆசைப்படுகிறேன்.

மேலும் கல்லூரி, பள்ளிகளிலே படிக்கக் கூடிய மாணவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தால், ரூபாய் 5,000 வரை வருமானம் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் அந்தச் சலுகையைப் பெறமுடியும் என்ற நிலை அறிக்கையிலே இருக்கிறது.

1980-81-ல் இன்னும் குறைவாக இருந்து, 1981-82ஆம் ஆண்டிற்கு அதை ரூபாய் 5,000 ஆக திருத்தப்பட்டிருப்பினும், இந்த ரூபாய் 5,000 என்ற தொகையை ஒரு வருடத்திற்கு கணக்கெடுப்போமேயானால் அதிகமாக இருக்குமா? ஆனால் இன்றையத்தினம் ஒதுக்கியிருக்கக் கூடிய பணத்தைப் பார்த்தால், விவசாயத் தொழிலாளிக் கூலிச் சட்டத்தைக் கணக்குப் போட்டால்கூட, சாதாரண விவசாயத் தொழிலாளிக்கு அந்த நிதி அதிகமாக பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு விவசாயத் தொழிலாளி ஆண் மகனுக்கு ரூபாய் 11 கூலியாகவும், அதே சமயத்தில் ஒரு பெண்ணுக்கு ரூபாய் 5 என்று நிர்ணயிக்கப்பட்ட இந்தச் சூழ்நிலையில் நாம் கணக்கிட்டால் ஏறக்குறைய ரூபாய் 480 வருமானம் வருகிறது. ஆனால் அறிக்கையில் குறிப்பிட்டபடி கணக்குப் பார்த்தால், சற்றேறக்குறைய ரூபாய் 416 மாதம் ஒன்றுக்கு வருமானமாக வருகிறது. ஆகவே இந்தத் தொகையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981-82 ஆம் ஆண்டு அந்த மாணவர்கள் சலுகைகளைப் பொறுத்தவரையில், 1,69,413 மேல்நிலை மாணவர்களும், கல்லூரியில் இருக்கக் கூடிய 7,438 மாணவர்களும் இந்தச் சலுகைகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது வரவேற்க வேண்டிய அம்சமாக இருந்தாலும், இது போதுமானதாக இருக்குமா என்பதை சற்று யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழைப் போதனா மொழியாக எடுத்துப் படிக்கின்ற மாணவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகைகள், அவர்கள் படிப்பதற்கு மனதார ஆசை இருந்து, எடுத்துப் படிக்கவேண்டிய நிலை இருந்தாலும் படித்து வெளியேறியவுடன், அந்த தமிழிலே

படித்த மாணவர்களுக்கு சரியான வேலை கிடைக்காத சூழ்நிலை
இருக்கிறது. தமிழை எடுத்துப் படிக்கின்ற. ரூபாய் 5001
லிருந்து ரூபாய் 10,000 வரை வருமானம் வரக்கூடிய அந்த
மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் என்கின்ற முறையிலும், நிதி
ஒதுக்கப்படுகிறது. அந்த நிதியிலே ஒரு குறிப்பிட்ட நிதியை 50
சதவீதத்திலிருந்து அந்த மாணவர்கள் மதிப்பெண்கள் பெற்று,
அவர்கள் கடனுக்கு விண்ணப்பம் செய்வார்களேயானால், நிச்சய
மாக விண்ணப்பிக்கக் கூடிய அத்தனை மாணவர்களுக்கும்
சலுகையை நீட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து மாணவர்கள் இல்லங்களைப் பொறுத்தவரையில்
என்னுடைய ஊரிலே பெருந்துறை மேல்நிலைப் பள்ளி பிற்பட்ட
மாணவர்களுக்காக அங்கே ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
அந்த இடத்தைப்பொறுத்தவரையிலும், கட்டிடத்தைப்பொறுத்த
வரையிலும், முறையாக ஏற்கெனவே ஒரு தொழிற்சாலைக்காக
கட்டப்பட்ட அந்தக் கட்டிடத்திலே அந்த மாணவர்களுடைய
இல்லங்கள் இருந்தாலும், அங்கே அந்த மாணவர்களுக்கு குடிப்ப
தற்குக்கூட தண்ணீர் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த
மாணவர்கள் தினசரி $1\frac{1}{2}$ மைல் தூரம் சென்று தண்ணீர்
கொண்டு வரவேண்டிய ஒரு நிலைமையிருக்கிறது. இப்படி
மாணவர்கள் இல்லங்களிலே பல்வேறு வசதிக் குறைவுகள், கழிவு
அறைகள், குடிநீர் வசதிகள், மின்சார வசதி போன்ற பல்வேறு
வசதிகள் இல்லாத நிலைமையிருக்கின்றது. மேலும் இந்த
மாணவர்கள் இல்லங்கள் புதிதாக ஏற்படுத்துவதற்கு நாம் பிற
இடங்களிலே சென்று ட்டிடங்கள் கட்டாக முதல் ஆண்டு
மாணவர்கள் இல்லங்கள், மாணவியர்கள் இல்லங்கள் ஆரம்பிப்ப
தற்காக ஏற்போமானால் பல்வேறு இடங்களிலே கட்டிடம்
இருந்தும் இடத்தை நமக்கு ஒதுக்கிக் கொடுக்க முடியாத ஒரு
நிலை இருக்கிறது. அதை நாம் ஆரம்பிக்கின்றபோதே முன்கூட்டி
இந்த மாதிரியான வசதிக்கு ஏற்பாடு செய்வதோடு இன்றைய
தினம் பி.யு.சி. வகுப்பு கல்லூரியிலே இருந்து எடுக்கப்பட்டு
மேல்நிலைப் பள்ளிகளிலே 11, 12 வகுப்புக்கள் என்று ஆரம்பிக்
கப்பட்டு இருக்கிற இந்த நேரத்திலே அனைத்து மேல்நிலைப்
பள்ளிகளிலே பிற்பட்டவர்கள் நலன் விடுதிகளை ஆரம்பிப்ப
தோடு, ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு இருக்கிற மாணவர் விடுதிகள்
அதாவது கல்லூரி என்றால் சற்றேறக்குறைய 100 மாணவர்களும்
மேல்நிலைப்பள்ளிகளுக்கு 50 மாணவர்களுக்கு என்று இருக்கின்ற
நிலையை மாற்றி அந்த மாணவர்களுடைய தொகையை அதிகப்
படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து முடிதிருத்துபவர்களுக்கு சென்ற ஆண்டு 3,000 பேர்
களுக்கு மட்டுமே கருவிகள் கொடுத்திருக்கிறோம். மற்றவர்கள்
அந்தக் கருவிகளை வாங்கிக் கொள்ளாததால், 445 சலவைத்
தொழிலாளிகளுக்கு இதர சாமான்கள் வாங்குவதற்காக
கொடுக்கப்பட்டு இருப்பதாக இந்த அறிக்கையிலே சுட்டிக்



காட்டப்பட்டிருக்கின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையில்
378 ஒன்றியங்களும், இதர நகரசபைகளும் இருக்கின்றன. ஒவ்
வொரு ஒன்றியத்திற்கு ஒரு 10 பேர்கள் விண்ணப்பம் செய்
திருந்தால் அதிலேயிருந்து சற்று மாறுபட்டு இருக்கும் என்பதை
நான் இந்தச் சமயத்திலே சுட்டிக் காட்டுவதோடு, கொடுக்கக்
கூடிய சலுகைகள் முறையாக அந்தச் சம்பந்தப்பட்ட வகுப்பினர்
களுக்கு கிடைக்காத ஒரு சூழ்நிலை காரணமாக ஏற்கெனவே
ஒதுக்கப்படுகிற அந்த நிதி பிற வகுப்பினர்களுக்கு கொடுக்கக்
கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட
ஆசைப்படுகிறேன். மேலும் சலவையாளர்களுக்கு துவைக்க
கூடிய அந்தத் துறைகள் கட்டுவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகை
யினை அரசு ஒதுக்கி, ஏனைய தொழில்களுக்கு தேசியமயமாக்கப்
பட்ட பாரத வங்கியில் அவர்கள் பெறவேண்டுமென்று இந்த
அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் அரசு
மானியமாக கொடுக்கின்ற அந்தத் தொகை போக தேசிய
மயமாக்கப்பட்ட வங்கியில் சென்று அவர்கள் கேட்கின்றபோது
நிச்சயமாக அந்த வங்கியிலே பிற்பட்டவர்களாக இருந்தாலும்
சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, வசதி உள்ளவர்கள்
அந்த வங்கியிலே டெபாசிட் செய்யக்கூடியவர்களாக
இருந்தால் மட்டுமே சலுகைகள் கிடைக்கின்றன. கடன்கள்
கிடைக்கின்றன என்பதை நான் இந்தச் சமயத்திலே சுட்டிக்
காட்டஆசைப்படுகிறேன். இதைப் பொறுத்தவரையில் இந்த பிற்
பட்டவர்களுக்கு அதாவது கூட்டுறவு வங்கியிலே இருந்து, தமிழக
சர்க்காருக்கு உட்பட்டு இருக்கிற அந்தக் கூட்டுறவு வங்கியிலே
இருந்து அவர்களுக்கு இந்த மானியம் நீங்கலாக கடன்களைக்
கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்தச்
சமயத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து கல் உடைக்கும் தொழிலாளர்களுக்காக அவர்களுக்கு
100 ரூபாய் கருவிகள் வாங்குவதற்காக என்ற இந்த அறிக்கையிலே
சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. கல் உடைக்கும் தொழிலாளர்
கள், இவர்களைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதி
யிலே ஏறக்குறைய 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேலே இருக்
கிறார்கள். புதிதாக நாம் அறிவிப்பு கொடுத்து, இருப்பது
பல்வேறு மாவட்டங்களிலே இருந்து மேல்நாடுகளுக்கு அந்தக்
கல்லைக் கடத்திச் செல்லுகிறார்கள் என்பதற்காக நாம் போட்டு
இருக்கிற அந்தச் சட்டம் சாதாரணமாக ரோடுகளிலே சல்லி
உடைத்து விற்கக்கூடிய அவர்களையும் இது பாதித்து இருக்கிறது.
அவர்களுக்கு நாம் கருவிகள் வாங்குவதற்காக ஏற்பாடு செய்து
கொடுத்தால் மட்டும் போதாது. இந்தக் கல் வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்பதை பரிசீலிப்பதோடு, மண்டல்
கமிஷனுடைய பரிந்துரைப்படி பிற்பட்டவர்களுக்கு $22\frac{1}{4}$
சதவீதம் மத்திய அரசில் வேலை கொடுக்கவேண்டும் என்று
இருப்பதை இந்த அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். ரங்கசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற பிற்பட்டோர் நலத்துறையின் இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1983-84 ஆம் ஆண் டுக்கு 10 கோடியே 22 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டு, அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு எடுத்து இருக்கின்ற இந்த நடவடிக்கைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசை நான் மனதார பாராட்டு கிறேன். 1967-68-லே இந்தத் துறைக்கு 1 கோடியே 61 இலட் சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. அதைப் படிப்படியாக உயர்த்தி இன்றைக்கு 10 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கி அந்த மக்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களை இந்த அரசு தீட்டி இருக்கிறது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் துறை மூலம் செயல்படுத்தப் பட்டு வந்த இந்தத் துறை, மறைந்த மாமேதை நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் திட்டமிட்டு, 1969 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தனியாக பிற்பட்டோர் நலத் துறையாக அந்த மக்களுக்கு என்று தனித்துறையாக ஏற் படுத்தி, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரியப்படுத்திக் கொள்கிறேன். நம் முடைய நாட்டில் ஆண்டாண்டு காலமாக, பரம்பரை பரம்பரை யாக குற்றப் பிரிவினர் என்று ஒரு பிரிவினரை ஒதுக்கி வைத்து, அவர்களைக் குற்றவாளிகளாக்கிப் பார்க்கின்ற காரணத்தால், அந்தக் குற்றங்களைச் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியே இல்லை என்ற அளவிற்கு அவர்கள் மீது முத்திரை குத்தப்பட்டு இருந்ததை மாற்றி, குற்றப் பிரிவினர் பட்டியலில் இருந்து அவர்கள் விலக்கப்பட்டு, அவர்களுடைய குழந்தைகளின் கல்வி வசதிக்காக புத்தகங்கள் வழங்குவதற்கும், படிப்பு உதவித் தொகை வழங்குவதற்கும் இந்த ஆண்டு தோறும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் மனதார வாழ்த்தி, பாராட்டுகிறேன்.

பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தி, ஆண்டுக் காண்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் 1969-70-ல் 160.89 இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு வந்தது. 1982-83-ல் 329.18 இலட்சம் ரூபாய் என்ற அளவில் அது உயர்த்தப்பட்டு, அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, கல்வித்தரம் உயர, இந்த அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்ட மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக மாணவ, மாணவியருக்கு விடுதிகள் திறக்கப்பட்டு, ஆங்காங்கு செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக அந்த மாண





வர்கள் அந்த விடுதிகளில் தங்கிப் படிக்கவும், அவர்கள் வாழ்க்கையில் வேகமாகவும் முன்னேற்றம் அடையவும் முடியும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் 1969-70-ல் 11 விடுதிகளில் 979 மாணவர்கள் தங்கிப் படித்தனர் என்ற நிலை இருந்ததை, 1982-83-ல் 375 விடுதிகள் என்று அதை உயர்த்தி, அதன் மூலம் 21,028 மாணவர்கள் விடுதிகளில் தங்கி பயன்பெறும் வாய்ப்பு மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் இது இமாலய வெற்றி என்பதையும், பெரியதொரு சாதனை என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11–30)

குற்றப்பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு 1969-70-ல் 37 விடுதிகள் இருந்தன. அது 1982-83-ல் 65 விடுதிகளாக உயர்த்தப் பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக அரசு 227 மேல்நிலை, உயர்நிலை, நடுநிலை, ஆரம்ப பள்ளிகளை நடத்தி, அவர்களுடைய குழந்தைகள் இன்றைய தினம் மற்ற சமுதாய குழந்தைகளைப் போன்று சிறப்பாக கல்வி கற்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

சவரத் தொழிலாளர்களுக்கு, சலவைத் தொழிலாளர்களுக்கு தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த ஆட்சியில் அந்த இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆண்டுக்காண்டு அதிகமான பேர்களுக்கு இந்தக் கருவிகளை இந்த அரசு வழங்கி வருகிறது. 1976-77 ஆம் ஆண்டில் 3,695 பேர்களுக்கு கருவிகள் வழங்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் 7,445 பேர்களுக்கு இரண்டு மடங்குக்கும் அதிகமாக அந்த மக்களுக்கு தொழில் கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைய தினம் நவீன முறையிலே அவர்கள் சவரக் கடைகளை ஏற்படுத்தவும், நவீன முறையிலே சலவைக் கடைகளை ஏற்படுத்தவும் அரசு மானியம் வழங்குவதோடு வங்கியிலிருந்து நிதி உதவி பெற்று அவர்கள் சிறப்பாக தொழிலை செய்வதற்கு இந்த அரசிலேதான் திட்டங்கள் தீட்டப் பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்..

தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த எந்த அரசுமே இந்த கல் உடைக்கும் தொழிலாளர்களைப் பற்றி எண்ணிப்பார்த்ததில்லை என்பது நமக்குத் தெரியும். இங்கே இருந்து ஆந்திராவுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் தொழில் செய்ய

சென்று கொத்தடிமைகளாக இருந்தவர்கள் இந்த கல் உடைக்கும்
தொழிலாளர்கள்தான் என்பதை பத்திரிகை செய்திகள் மூலம்
நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். இப்படி ஒதுக்கப்பட்ட கல்
உடைக்கும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு வந்த பிறகு
தொழில் கருவிகள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது என்பதை
நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1979-80ஆம்
ஆண்டிலிருந்து அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. மாண்பு
மிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் கொண்டுவரப்பட்டது
என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைய தினம் ஆதி திராவிடர், பழங்
குடி மக்களுக்கு வீட்டுமனைகளை அரசு இலவசமாக வாங்கிக்
கொடுக்கிறது. நம்முடைய அரசு வந்த பிறகுதான், சென்ற ஆண்டி
லிருந்து தான் இலவசமாக வீட்டுமனைகளை வாங்கிக் கொடுக்
கின்ற திட்டத்தை கொண்டு வந்திருக்கின்றார்கள். கல் உடைக்
கும் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள், சலவைத்
தொழிலாளர்கள், இன்னும் பிற்பட்டோர் பட்டியலில் இடம்
பெற்றிருக்கின்ற மக்கள் ஆகிய அத்தனை பேர்களுக்கும் இலவச
மாக வீட்டுமனைகளை வாங்கிக்கொடுக்கின்ற ஒரு திட்டத்தை
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான்
கொண்டுவந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
இளையபெருமாள் அவர்கள் ஒவ்வொரு முறையிலும் தாழ்த்தப்
பட்டவர்களைப் பற்றிச் சொல்லி, அவர்கள் ஒதுக்கப்படுகிறார்
கள், மறுக்கப்படுகிறார்கள், என்ற அந்த பாட்டை ஒவ்வொரு
முறையும் பாடிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு
தாழ்மையான வேண்டுகோளாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட பழங்குடி மக்கள்
என்று ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்
கின்ற அந்த மக்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறார்களா,
ஒருவருக்கொருவர் தீண்டத்தகாதவர்கள் என்று நினைக்காமல்
இருக்கிறார்களா என்பதை அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள
விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் அந்த நிலை, அதாவது
அவர்கள் ஒருவருக்கொருவர் தீண்டத்தகாதவர்கள் அல்லர் என்
பதை முதலிலே ஏற்படுத்துவார்களா என்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றவர்கள் யாரும் அவர்களை ஒதுக்குவதில்லை; தீண்டத்
தகாதவர்களாக நினைப்பதில்லை, எல்லோரும் பேரறிஞர்
அண்ணா அவர்களுடைய கொள்கைப்படி "ஒன்றே குலம்,
ஒருவனே தேவன்" என்ற தத்துவத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.
ஆனால் ஆதிதிராவிட நலத்துறையில் இருக்கிற அந்த இனத்தைச்





சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் தீண்டத்தகாதவர்கள் அல்ல
என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அருந்ததியினர் மற்றவர்களை
ஏற்றுக்கொள்வதில்லை; மற்ற ஆதிதிராவிட பழங்குடி மக்கள்
அருந்ததியினரை ஏற்றுக்கொள்வதில்லை; அவர்கள் குடியிருக்
கும் இடத்தில் இவர்கள் குடியிருக்க மறுக்கிறார்கள்; இவர்கள்
குடியிருக்கும் இடத்தில் அவர்கள் குடியிருக்க மறுக்கிறார்கள்.
கிணறுகளை ஒரே இடத்தில் வெட்டிக் கொடுத்தால் கூட, ஒரே
கிணற்றில் எல்லோரும் தண்ணீர் எடுக்க மாட்டோம் என்கிறார்
கள், ஒருவரை ஒருவர் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று மறுக்கி
றார்கள். ஆகவே, நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்
வது, அவர் தமிழகம் முழுவதும் சென்று, ஆதிதிராவிட
பழங்குடி நலத் துறையிலே இருக்கின்ற அந்த இனத்தைச் சேர்ந்த
வர்களையெல்லாம் ஒன்றாக்கிவிடுகிற, ஒற்றுமைப்படுத்தி, ஒரே
இனமாக்கி விடுகிற ஒரு நிலையை அவர்கள் ஏற்படுத்தி விட்டு,
இந்த மாமன்றத்திலே வந்து அந்தக் குற்றத்தைச் சொல்ல
வேண்டும் என்பதை என்னுடைய பணிவான வேண்டுகோளாக
இந்த நேரத்திலே நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அது மட்டும் அல்லாமல், இந்த நேரத்திலே பிற்படுத்தப்பட்ட
மக்களுக்கு சில சலுகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்
என்று நான் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஆதி
திராவிட, பழங்குடி மக்களுக்கு, கிராம வீட்டு வசதி சங்கத்தின்
மூலமாக வீடு கட்டுவதற்கு கடன் கொடுக்கப்படுகின்றது. மானி
யத்தோடு வட்டியில்லாத கடன் அவர்களுக்கு கொடுக்கப்படு
கிறது. அந்தச் சலுகையை இந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்
கும் இந்த அரசு விரிவுபடுத்த வேண்டும் என்று என்னுடைய
பணிவான வேண்டுகோளாக இந்த அவையிலே சொல்லிக் கொள்
கிறேன்.

என்னுடைய தொகுதியில் வடமல்லி என்ற இடத்தில் குற்றப்
பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக நடுநிலைப் பள்ளி
ஒன்று இயங்கி வருகிறது. அந்தப் பள்ளியை உயர்நிலைப்
பள்ளியாக மாற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு அந்தப் பள்ளி
பெரிதும் பயன் தரத்தக்க அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவுடன்
கேட்டுக் கொள்கிறேன். சத்தியமங்கலத்தில் நீண்ட நாட்களாக
மாணவர்கள் விடுதி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. அந்த
விடுதி வாடகை கட்டிடத்தில் தான் நடத்தப்படுகிறது. அந்த
விடுதி மாணவர்களுக்கென்று சொந்தமாக ஒரு கட்டிடத்தைக்
கட்டிக் கொடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
தாளவாடியில் சென்ற ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களுடைய அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணத்தால்
அங்கே ஒரு மாணவர் விடுதி துவக்கப்பட்டுள்ளது. அதற்காக, என்னுடைய இதய பூர்வமான நன்றியைத்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

VXII, 31 N83
N83-19-2
136035

அதேபோல பள்ளிப்பட்டி என்ற பகுதியில் 2 ஆயிரம் பேர்கள் கல் உடைக்கும் தொழிலாளர்களும், மற்றப் பிறபடுத்தப்பட்ட மக்களும் வசிக்கிறார்கள். அங்கே 2 மேல் நிலைப் பள்ளிகளும், 2 உயர் நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அந்தப் பகுதியில் ஒரு மாணவர் விடுதியினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொண்டு, மிக வேகமாக வளர்ந்து வருகின்ற இந்தத் துறையை நான் பாராட்டி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை மானியம் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித் தமைக்கு நன்றி. சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த நாட்டிலே பிற்பட்டோர் நலத்துறை என்ற ஒரு துறையை இன்னமும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அது உள்ளபடியே நாம் அனைவரும் மிகவும் வருத்தப் பட வேண்டிய ஒரு நிலைமையாகும்.

சுதந்திரத்திற்கு முன்பு சமுதாயத்திலே, தாழ்த்தப்பட்டவர் கள் தீண்டத் தகாதவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் இருந் தார்கள். அது, அந்த சமுதாயத்தினுடைய உயர் சமூகத்தினர் அவர்களுக்குச் செய்த அநீதி என்று விமர்சனம் செய்து, அண்ணல் காந்தியடிகள் உள்ளபடி அவர்கள் சமுதாயத்தினுடைய ஒரு அங் கம் என்பதற்கு எடுத்துக் காட்டாக, அவர்களை வாழ வைக்க வேண்டும், வளர வைக்க வேண்டும் என்பதற்காகவே, தாழ்த்தப்பட்டவர்கள் நலத் துறை என்பதை உருவாக்கினார்கள்.

அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், அவர்கள் சமுதாயத்தால் அநீதியாகத் தாழ்வு கண்டவர்கள். பின் தங்கியவர்கள் என்று சொல்லுகிறபோது அவர்களை யாரும் சமுதாயத்திலே தள்ளி வைக்கவில்லை, ஒதுக்கி வைக்கவில்லை, சலுகைகள் மறுக்கப்பட வில்லை. ஆனால் பிற்பட்டவர்கள், பின் தங்கியவர்கள், இந்த உலகத்திலே The theory of natural selection and survival of the fittest என்பதுதான் விஞ்ஞான பூர்வமான உண்மை. அவர்கள் பின் தங்கியவர்களாக ஆகிவிட்டார்களே ஒழிய, அவர்களை யாரும் பிற்படுத்தவில்லை. சமுதாயம் அவர்களுக்கு எந்தவிதமான அநீதியோ, துரோகமோ செய்யவில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதைத்தான் நம்முடைய அவையின் மாண்புமிகு உறுப்பினர் கோவைத் தம்பி அவர்கள் சொன்னதைப்போல, சலுகைகள் வழங்கப்பட்ட நிலையிலும் கூட, அதே theory of natural selection and survival of the fittest என்று பார்க்கிற நேரத்தில், அந்த பிற் படுத்தப்பட்ட பிரிவினர்களுக்குள்ளே கூட, படித்துப் பட்டம் பெற்றவர்கள் தான் அவர்களுடைய பிள்ளைகள்தான் மேலே





மேலே வளர்ந்துக் கொண்டே போகிறார்களே, தவிர அந்த பிற் படுத்தப்பட்ட சமுதாயத்தின் அடித்தளத்திலே வாழ்கின்றவர் களுக்கு இந்த சலுகைகளினால்எந்தவிதமான லாபமும் ஏற்பட வில்லை, கிடைக்கவில்லை என்பதுதான், நிதர்சனமான உண்மையாகும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

(முற்பகல் 11–40)

வேகமாக வளர்ந்து வருகின்ற பொருளாதார, விஞ்ஞான சூழ்நிலையில் இன்று பிற்பட்டவர்கள் என்று சொல்வதே தவ றாகும் என்பது என்னுடைய தாழ்வான அபிப்பிராயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பிற்பட்ட சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள், முற்பட்ட சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் என் பதை எல்லாம் பார்க்கின்றபோது, நம்முடைய நாடு வளர்ந்துக் கொண்டிருக்கிறதா என்று கேட்டால் இந்தப் பிற்பட்ட ஜாதி யினருக்கான பட்டியல்தான் வருஷா வருஷம் வளர்கின்றதே தவிர நாடு வளரவில்லை. இன்னும் வெகு விரைவில் பார்ப்பா னையும், ஐயரையும் தவிர மற்ற எல்லா ஜாதியினைச் சேர்ந்தவர் களும் பிற்பட்டவர்கள் என்று சொல்லிவிடுகின்ற நிலைமை உரு வானால் கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆகவே, ஜாதி களை மேலும் வளர்க்கின்ற சூழ் நிலைதான் உருவாகும். ஆகவே இந்த பிற்பட்டோர் பட்டியல் என்று சொல்வது உள்ளபடியே இருக்கின்ற நிலைமையை மாற்றுவதற்குரிய சூழ்நிலையினை உருவாக்குகின்றதா என்றால் உருவாக்கவில்லை என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். பிற்பட்டவர்கள் என்று சொல்கின்ற நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். இன்று சமுதாயத்தில் ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் சமுதாயத்திலே சம அந்தஸ்து கிடைத்து அவற்றை நாம் அனு பவிக்கிறோமே தவிர பிற்பட்டவர்கள் என்பதற்காக யாரையும் எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும், பொது இடங்களிலும் ஒதுக்கி வைப்பதில்லை, சரிசமமான அந்தஸ்துதான் ஒரு நாயுடுவாக இருந்தாலும், முதலியாராக இருந்தாலும், நாயக்கராக இருந் தாலும் வழங்கப்படுகின்றன. அப்படி இருக்கின்ற நேரத்தில் பிற்பட்டோர் என்று ஒரு பிரிவினை உருவாக்கி—ஜாதிகளை ஒழிப்போம் என்று சொல்லிவிட்டு, ஜாதிகளை வளர்க்கின்ற

வகையில்——ஜாதிகள் அடிப்படையில் யார், யார் ஓட்டு மொத்தமாகச் சங்கங்கள் வைத்திருக்கின்றார்களோ அவர்களை எல்லாம் இந்த அரசியல்வாதிகள் அணுகி, உங்கள் ஜாதியினைப் பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்கிறேன், ஆகவே எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்கின்ற நிலைமை இருக்கின்றது. 'It has become a hunting ground for political parties and politicians. எனவே இந்த பிற்பட்டோர் நலத்துறை என்பதே இன்றைக்கு அரசியல் வாதிகள் ஒரு வேட்டைக் களமாக மாறிக் கொண்டு வந்திருக்கின்ற காட்சியினைத்தான் நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். பிராமணர்களின் சங்கம் கூட வெகு விரைவிலே ஒன்றாக இணைத்து எங்களிடத்திலே 10 இலட்சம் வாக்குகள் இருக்கின்றன என்று சொல்லிவிட்டால் நிச்சயமாக அடுத்த ஆட்சிக்கு வருகின்ற அரசியல் கட்சிகள் எங்களைக் கூட பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தால் கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன். அந்த சூழ்நிலை இன்றைக்கு உருவாகின்றது என்பதை நினைத்துப் பார்க்கின்ற நேரத்தில் பிற்பட்டோர் நலத்துறை என்பதைவிட உண்மையான பிற்பட்டோர் என்பதற்காக 'criteria for assessing man for backwardness என்று சொல்கின்ற நேரத்தில் இதற்காக இப்போது இருக்கிற இந்த ஜாதிகளின் அடிப்படையோ அல்லது இப்போது கொடுக்கப் படுகின்ற அந்த அளவுகோலோ சரியானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் புரட்சிகரமான ஒரு கருத்தினை உருவாக்கினார்கள். அதாவது வருமான அடிப்படையைக் கொண்டுவர வேண்டும் என்று புரட்சிகரமான கருத்தை உருவாக்கினார்கள். ஆனால் இந்த் ஜாதிகள் என்ற நிலைமையில் குழம்பிய குட்டையிலே மீன் பிடிக்க வேண்டும் என்று கருதுகின்ற அரசியல்வாதிகள் அதை எதிர்த்தார்கள் என்றால் அது மிகையாகாது. ஆகவே இன்று இருக்கின்ற சூழ்நிலையில் பிற்பட்டவர்கள் என்று சொல்கின்ற போது அதை 3 தரமாகப் பிரித்துக் கொள்ளலாம். முதலிலே சோஷியலி பேக்வார்ட் அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள், அவர்களுக்கு சமுதாயம் அநீதி இழைத்துவிட்டது. அவர்களைத் தனியாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அதற்கடுத்தபடியாக எஜுகேஷனலி பேக்வர்ட், எகானமிக்கலி பேக்வர்ட் என்ற இரண்டு விதமான வகுப்புகளை பிரித்துக் கொள்ள முடியும். எஜுகேஷனலி பேக்வர்ட் என்று சொல்கின்றபோது தாயும், தகப்ப



னும், இரண்டுபேரும் ஐ. ஏ. எஸ்., அதிகாரிகளாக அல்லது இரண்டு பேரும் ஆசிரியர்களாக பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அதே நேரத்தில் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படுகின்றவனின் அப்பனும் ஆயியும் 10-ம் கிளாஸ் கூட படிக்காத கோயில் குருக்களாகவும் சமையல் செய்பவர்களாகவும், புரோகிதர்களாகவும் இருக்கிறார்கள். அதாவது ஐ. ஏ. எஸ்., அதிகாரிகளாக பணி புரிபவர்களின் குழந்தைகளுக்குச் சலுகை. ஆசிரியர்களாகப் பணி புரிபவர்களின் குழந்தைகளுக்குச் சலுகை. ஆனால் தாயும் தகப்பனும் 5 ஆம் வகுப்பு கூட படிக்காமல் இருக்கின்றவர்கள் என்ற நிலைமையில் அவர்கள் உயர்ந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப் படுகின்ற ஒரே காரணத்தால் அவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகை இல்லை. இது என்ன சமுதாய நீதி என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு சமுதாயம் என்கின்ற அளவிலே மொத்தமாக ஒப்பிட்டுக் காட்ட வேண்டுமே தவிர இண்டிவிஜுவல் அதாவது தனிப்பட்டவர்களை எடுத்துக் கொண்டு ஒப்பிட்டுக் காட்டுவது என்பது இந்த வாதத்திற்குப் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாற்றுத் தலைவர் அவர்களே, குருக்கள் என்று சொல்கின்றபோது அவர்கள் எல்லாம் இண்டிவிஜுவல் என்ற வகையில் சொல்லவில்லை. குருக்கள் என்பவர்கள் எல்லாம் முன்னேறிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காக புரோகிதனும், பிணம் தூக்குகிறவனும் எந்தவிதமான சலுகையும் பெறுவதில்லை. சமுதாயம் முன்னேறிய சமுதாயம் என்பதற்காக தனிப்பட்ட நபர் முன்னேறியவனா என்றால் இல்லை. அவனுடைய தாயும் தகப்பனும் 5-ம் க்ளாஸ் வரை கூட படிக்காத நிலைமையில் கோயிலிலே இருந்து கொண்டு குருக்கள் என்ற நிலைமையில் மணியடித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையும், சமையல் செய்கின்ற நிலைமையும் இந்த நாட்டிலே இருக்கின்றது. ஆனால் முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற ஒரே குற்றத்திற்காக அவன் என்ன வேண்டி விரும்பி தவம் செய்து வரம் கேட்டு பெற்றானா அவன் பார்ப்பனனாக அல்லது ஐயராக வேண்டும் என்று குழந்தை தவமா செய்தது. குழந்தை தவம் செய்து நான் இந்த ஜாதியில் தான் பிறக்க வேண்டும் என்று அது தவம் செய்யவில்லை.

"Birth is only an accident" ஆகவே இந்த அடிப்படையில் பார்க்கின்ற நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த பொருளாதார அடிப்படையில் நாம் சலுகைகள் வழங்க வேண்டும் என்று சொல்கின்ற நியாயமான, அர்த்தபூர்வமான, ஆக்க பூர்வமான வாதம் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

அதேநேரத்தில் இன்னும் ஒன்று என்னுடைய யோசனையாக
அதாவது பொருளாதாரத்தில் பின் தங்கியிருந்தால் மாத்திரம்
போதாது அதே நேரத்தில் கல்வியிலும் அவர்கள் பின் தங்கியவர்
களாக இருக்க வேண்டும். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட தாழ்த்
தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் தகப்பனும், தாயாரும் படித்
தவர்கள். அவர்கள் குழந்தைகளுக்கு சலுகைகள் வழங்குகின்ற
நேரத்தில் அதே சமுதாயத்தை சேர்ந்த தகப்பனும், தாயாரும்
படிக்காதவர்கள் அவர்கள் குழந்தைகள் வருகின்ற நேரத்தில்
அந்த குழந்தைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமே ஒழிய
இருவரும் ஒரே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்
தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வதால் இந்த படிக்காத தாய்
தந்தையின் குழந்தைகள் வருகின்ற நேரத்தில் நாம் அதிகமான
சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய
வாதம் ஆகும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல
கடமைப்பட்டுள்ளே

அடுத்து, ஒரு புரட்சிகரமான கண்ணோட்டத்துடன் தமிழ்
நாடு குறிப்பாக கடந்த 5 ஆண்டு காலங்களில் பல புரட்சிகரமான
திட்டங்களுக்கு இந்தியாவிலுள்ள பல மாநிலங்களுக்கு வழி காட்டி
யாக இருந்து வந்திருக்கிறது. சத்துணவுத் திட்டம் என்பது ஒரு
புரட்சிகரமான திட்டம், ஒரு முற்போக்கான திட்டம் என்பதை
இந்த நாட்டிலுள்ள எல்லா மாநிலமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.
அதிலே பல குறைகள் இருக்கலாம். அதைப்பற்றி விமர்சனம்
செய்ய நான் தயாராக இல்லை. ஆனால் எண்ணத்தின் அடிப்
படையில், லட்சியத்தின் அடிப்படையில், கொள்கையின் அடிப்
படையில் பார்க்கின்றபோது இது புரட்சிகரமான திட்டம் என்
பதை அனைத்து மாநிலங்களும் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள்.
அதேபோல் பின்தங்கியவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று
சொல்லுகின்ற நேரத்தில் இதில் ஒரு புரட்சிகரமான கண்ணோட்
டத்துடன் எஜுகேஷனலி பேக்வார்டு, எக்னாமிக்கலி பேக்வார்டு
இவைகள் இரண்டும் சேர்ந்து தான் நிர்ணயிக்கப்படவேண்டும்
என்ற அந்த ஒரு அடிப்படையில் உருவாக்கலாமா என்பதை
மாண்புமிகு நாவலர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்
பதை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்
ளேன். எக்கனாமிக்கலி பேக்வார்டு என்று சொல்கின்ற நேரத்தில்
எந்த அடிப்படையில் ஒரு ஜாதியை நாம் எக்கனாமிக்கலி பேக்
வார்டு பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் என்ற கண்ணோட்
டத்துடன் பார்ப்பதில் சில சங்கடமான காரியங்களாக இருக்க
லாம். உதாரணமாக ஒட்டுமொத்தமாக கர்நாடக மாநிலத்தை
எடுத்துக் பார்த்தால் அங்குள்ள பிராமணர்கள் முற்போக்கு
அடைந்த சமுதாயம் என்று சொல்லக்கூடிய அவர்களுடைய
ஒட்டுமொத்தமாக வருமானத்தை கணக்கெடுத்து தனி நபர் வரு
மானத்தை பார்க்கின்றபோது நாட்டினுடைய வறுமைக் கோட்
டுக்கு கீழே உள்ளவர்களுக்கும் கீழே இருந்துகொண்டு இருக்
கிறார்கள். ஆகவே ஒரு சமுதாயம் அல்லது ஒரு ஜாதி என்று
நிர்ணயிக்கின்ற நேரத்தில் அந்த ஜாதியைச் சேர்ந்தவர்களுடைய



ஒட்டுமொத்தமான வருமானம், மொத்த நபர் வருமானம்,
அங்கே உள்ள சாதியைச் சேர்ந்தவர்களுடைய மொத்த கணக்கு
எடுத்து அதை வகுக்கின்ற நேரத்தில் எவ்வளவுவருகிறதுஎன்பதை
கணக்கு எடுத்துப் பார்ப்போமானால் அந்த அடிப்படையில் ஒரு
ஜாதியினுடைய பொருளாதார தரத்தை நிர்ணயிக்கவேண்டும்
என்பதை எடுத்துச்சொல்லி எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு
நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 11-50)

*திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த பிற்பட்டோர் நலத்துறை மானியத்தில் இந்திய யூனியன்
முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பு அளித்த
மைக்காக நான் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிற்பட்டோர் நல
னுககு ஆட்சியிலே அமர்ந்திருக்கிறவர்கள் ஒரு துறையை
அமைத்து அந்தத் துறையின் மூலமாக பிற்பட்ட சமுதாயம்
முன்னேறவேண்டுமென்று நல்ல அடிப்படையில் அமைத்திருக்
கிறார்கள். பிற்பட்ட நலத் துறை வந்த பின்பு பிற்பட்ட
வகுப்பைச் சேர்ந்தவர்கள் போதுமான வாய்ப்புப் பெற்றிருக்
கிறார்களா முன்னேறி இருக்கிறார்களா என்று பார்த்தால் அது
உண்மையிலேயே இல்லை என்றுதான் வருத்தத்தோடு தெரிவிக்
கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு பிற்பட்டோர் நலத்
துறையை எடுத்துக்கொண்டால் ஏறக்குறைய 237 சாதிகள் இருக்
கின்றன என்று கருதுகிறேன். அதிலே மிகவும் பிற்பட்ட
சாதியினர் 39 சாதியினர் இருக்கிறார்கள், அதிலே பிற்பட்டோர்
என்று இருக்கிற காரணத்தினால் மைனாரிட்டி சமுதாயம் என்ற
முறையிலே முஸ்லீம் சமுதாயம், கிறித்துவ சமுதாயம் ஆகிய
சமுதாயங்களும் பிற்பட்ட நலத் துறையிலே இணைக்கப்பட்
டிருக்கிறார்கள். மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு
பிற்பட்ட துறை மூலமாகவும் இந்த ஆட்சி மூலமாகவும் உரிய
உயர்வுகள் கிடைத்திருக்கிறதா என்று பார்த்தால், உரியவாய்ப்பு
கள் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்
பதைத்தான் வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியிருக்கிறது.
அது மட்டுமன்று, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், பேரறிஞர்
அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலே டாக்டர் கலைஞர்
அவர்கள் ஆட்சிக் காலத்திலே முஸ்லீம் மைனாரிட்டி சமுதாயம்
பெற்ற உரிமைகள் என்ன அந்த நேரத்திலே கொடுக்கப்பட்டது?
ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற உயர் பதவிகளிலே மருத்துவக்
கல்லூரிகளிலே, எஞ்சினியரிங் கல்லூரிகளிலே, பொறியியல் கல்
லூரிகளிலே, பாலிடெக்னிக்குகளிலே அவர்கள் பெற்ற இடங்கள்
எவ்வளவு என்பதையும் அதேபோல அறிஞர் அண்ணா அவர்கள்
காலத்திலேயும் டாக்டர் கலைஞர் ஆட்சி காலத்திலேயும் அவர்
களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் எவ்வளவு என்பதையும் அதே
நேரத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக
ஆட்சியிலே அந்த விகிதம் காப்பாற்றப்பட்டு இருக்கிறதா அந்த

விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் எண்ணிப் பார்த்
தால் நிச்சயமாக அந்த விகிதாச்சாரம்கூட கிடைக்கவில்லை
என்பதுதான் உண்மை. இது மிகவும் வருந்தத் தக்கது என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்கள் அளித்த சலுகைகளின்
பட்டியலை எங்களிடம் அவர்களாகவே தந்திருக்கிறார்கள்.
அறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்திலேநாங்கள் கொடுத்தது
இவ்வளவு, கலைஞர் ஆட்சிக் காலத்திலே கொடுத்தது இவ்வளவு
என்று ஒவ்வொரு துறையிலும் அவர்கள் அளித்த சலுகைகளின்
பட்டியலைத் தருகிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எவ்வளவு பதவிகள்
கொடுத்து இருக்கிறோம் என்ற பட்டியலைக் கேட்டும் கொடுக்க
வில்லை, பட்டியல் இருந்தால் தான் ஒப்பிட்டுச் சொல்வதற்குப்
இதிலே கருத்துச் சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கும். ஐ.ஏ.எஸ்.,
ஐ.பி.எஸ். போன்ற உயர்பதவிகளுக்கு வருவதற்கு பயிற்சிநிலையம்
அமைத்திருக்கிறார்கள். அந்தப் பயிற்சியிலே இந்த மைனா
ரிட்டி சமுதாயம் எத்தனை பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்
என்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆகவே தெரிவிக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு லப்பைகளுக்கு
சான்றிதழ் பெறுவதில் பெரிய இடர்ப்பாடு பள்ளியில் படிக்கிற
மாணவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய கலைஞர்
ஆட்சிக் காலத்திலே பிற்பட்டவர்களுக்கு தமிழ்பேசுகின்ற,
உருது பேசுகின்ற முஸ்லீம்கள் அனைவரும் பிற்பட்டவர்கள்,
லப்பைகள் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்
திலே கூட 2, 3 மாதங்களுக்கு முன்பு ராவுத்தர்கள், மரக்கா
யர்கள், சாயபுகள் எல்லாம் பிற்பட்டவர்கள் என்று அறிவிக்கப்
பட்டதைப் பார்த்தேன். இன்றைக்கு நீங்கள் தாலுகா மட்டத்
திலே தாசில்தார்களுக்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கும்
தெளிவாக தெரிவிக்க வேண்டும். முஸ்லீம் பெருமக்கள் பிற்
பட்டவர்கள் எந்த சான்றிதழை அவர்கள் தரும்படி நீங்கள்
தெளிவாக கடைப்பிடித்தால் பள்ளிகளிலே அவர்கள் படிக்கிற
நேரத்திலே உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அது மட்டுமல்ல, பிற்பட்டோர் குழு ஒன்று
அமைக்கப்பட்டிருக்கிறது, நான் அதை வரவேற்கிறேன். அந்தக்
குழுவில் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அங்கம் அளிக்கப்பட்
டிருக்கிறது. மேலவையிலே இருக்கிற உறுப்பினர்களுக்கும் பேரவை
யிலே இருக்கிற உறுப்பினர்களுக்கும் கட்சிவாரியாக அங்கம் அளித்
திருக்கிறீர்கள். எங்கள் கட்சியை மாத்திரம் ஏன் புறக்கணித்
திருக்கிறார்களோ தெரியவில்லை. மேலவையிலே கண்ணியம்
நிறைந்த காயிதே மில்லத் அவர்களின் மகன் மியாகான் இருக்
கிறார்கள், இந்த அவையிலே நான் இருக்கிறேன். எல்லோருக்கும்
இடம் கொடுத்துவிட்டு முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக எங்கள்
இருவரில் ஒருவரை போட்டிருந்தால் சிறப்பாக இருந்து இருக்கும்.
ஆகவே நான் வேண்டிக்கொள்வது எல்லாம் நீங்கள் செய்கிற



காரியங்களை தெளிவாகச் செய்யுங்கள். முஸ்லீம் லீக்கை சேர்ந்த
வர்களைப் போடுங்கள். மற்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்
களுக்கு எந்த உரிமைகளைத் தருகிறீர்களோ அந்த உரிமை
களைத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னைப்
போடுங்கள் என்று நான் கேட்கவில்லை. கண்ணியம் நிறைந்த
காயிதே மில்லத் மகன் திரு. மியாகான் அவர்களையாவது அந்தக்
குழுவிலே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். அது மட்டுமல்ல, பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம்
என்று அமைத்திருக்கிறார்கள், அந்த மேம்பாட்டுக் கழகத்தின்
மூலமாக பிற்பட்டோர் சமுதாயம் பயன்பெற வேண்டுமென்ற
நல்ல நோக்கத்தோடு செயல்படுகிற அந்தப் பணியிலே மைனா
ரிட்டி சமுதாயத்திற்கு இந்தத் துறை எவ்வளவு சலுகைகளை
அளித்திருக்கிறது என்ற விவரம் தெரிந்தால் உதவியாக இருக்கும்.
அது மட்டுமல்ல, அந்த மேம்பாட்டுக் கழகத்திலே எல்லா கட்சி
களைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக இருந்தால் பயனுடைய
தாக இருக்கும். குறிப்பாக 50 சதவீதம் என்ற ஒதுக்
கீட்டிலே உரிய சலுகைகள் மைனாரிட்டி மக்களுக்கு கிடைப்ப
தில்லை. முஸ்லீம் மக்களுக்குக் கிடைப்பதில்லை. அ.இ.
அ.தி.மு.க. உறுப்பினர் மரியாதைக்குரிய மதிப்பிற்குரிய உறுப்
பினர் திரு. கோவைத்தம்பி கூறினார்கள், ஒரு சிலருக்கு
சலுகைகள் கிடைக்க மற்றவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்
என்று, அது உண்மை. பிற்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட
சலுகைகளின் காரணமாக ஒரு குறிப்பிட்ட சமுதாயம்தான் பயன்
பெறுகிறதே தவிர மைனாரிட்டி மக்கள் பயன்பெறவில்லை.
ஆகவே தமிழகத்திலே எல்லா மக்களுக்கும் அவரவர்கள் ஜனத்
தொகை அடிப்படையிலே விகிதாச்சார அடிப்படையிலே பிற்
பட்டோர் நிலை முற்பட்டோர் நிலை என்று இல்லாது ஏகமாக
எல்லோருக்கும் கொடுத்தால் பாகுபாடு இருக்காது, முற்போக்கு
பிற்போக்கு என்று தேவை இல்லை. சாதியினுடைய விகிதாச்
சாரபடி பிரதிநிதித்துவம் கொடுக்கிறபோது அதிலே பிரச்சினை
எழாது. அதைக்கொடுத்தால் அதை அமலுக்குக் கொண்டுவந்
தால் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்கு வக்ப் வாரியத்தைப் பற்றி
இங்கே சில கருத்துக்களை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
குறிப்பாக வக்ப் வாரியம் செயல்படுகிற விதத்தைப் பார்த்தால்
இஸ்லாமிய அறநிலையமான அந்த நிறுவனம் இன்றைக்கு செயல்
படுகிற முறை அது சமுதாயத்தின் மதிப்பை சம்பாதிக்கின்ற
அளவிலே இல்லை. அதிலே ஏகப்பட்ட குறைபாடுகள் இருக்
கின்றன. உதாரணமாக ஜமாத்களுடைய தலைவர்களுக்கு
டிமான்ட் நோட்டீஸ் அனுப்பாமலேயே ஆர். ஆர். நோட்டீசும்
வாரண்ட் நோட்டீசும் பிறப்பித்து விடுகிறார்கள். அது முறை
யல்ல. அம்பாசமுத்திரம் தாலுகா, பாபநாசம் பகுதியில் ஒரு
வக்ப் போர்ட் சத்திரம் இருக்கிறது. அந்த சத்திரத்திலே வாட்ச்
மேன் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு, 1½ ஆண்டுகாலமாகியும்
அவருக்கு சம்பளம் அளிக்கப்படவில்லை. இதுபோன்ற சூழ்நிலை
வக்ப் போர்டு வாரியத்தைப் பொறுத்த
இருந்து வருகிறது.

வரையில், இன்ஸ்பெக்டர், சூப்பரிண்டென்ட்கள் பதவிகளில் இருக்
கின்றவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்
சஸ்பெண்ட் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் அவர்களைக்
கூப்பிட்டு விசாரிக்கவில்லை. வக்ப் வாரியத்திலே ஏகப்பட்ட
கேஸ்கள் கோர்ட்டிலே தீர்க்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே
இதுபோன்ற குறைபாடுகளை நீக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மதுரை மாவட்டம், பழனி தாலுகா பெரிச்சம்
பாளையம் என்ற இடத்திலும், கோவை மாவட்டம், பல்லடம்,
திருப்பூர், பெரிய பள்ளி போன்ற இடங்களிலும் அங்கே இருக்
கிற நிலங்களில் வருமானம் இல்லையென்ற காரணத்தால் அந்த
நிலங்களை விற்றுவிட்டு, வருமானம் வருகிற அளவில் கட்டிடங்
களைக் கட்டி வாடகைக்கு விட்டு வருமானத்தைப் பெருக்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கத்தின் கெஜட்டிலும்,
பத்திரிக்கைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. வக்ப் போர்ட்
ஆய்வாளர்களை வைத்துக்கொண்டு ஏலத்திற்கு அந்த நிலங்களை
விட்டு அதன்மூலமாக வந்த பணம் வங்கிகளில் போடப்பட்
டிருக்கிறது. சம்பந்தப்பட்ட துறை பத்திரப் பதிவு செய்து
கொடுக்காததால் அந்தப் பணம் வங்கியில் முடக்கப்பட்டுள்ளது.
பள்ளிவாசல்களின் வருமானத்தைப் பெருக்கும் திட்டத்திற்குக்
கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

நம்முடைய ஆளுநர் உரையில் பள்ளிவாசல்களுக்கும், மதரசாக்
களுக்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று
சொன்னார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையில் பார்க்கிற
போது பள்ளிவாசல்களுக்கும், மதரசாக்களுக்கும் அப்படி பணம்
ஒதுக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசு வந்த பிறகுதான் உலமாக்களுக்கு பென்ஷன்
அளித்திருக்கிறீர்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம், வர
வேற்கிறோம். உலமாக்களுக்கு ஓய்வூதியம் அளித்திருப்பதை
நான் எங்கள் இயக்கத்தின் சார்பாக, சமுதாயத்தின் சார்பாக
வரவேற்கிறேன். ஏறக்குறைய 600, 700 பேர்கள் இன்றைக்கு
இந்த ஓய்வூதியம் கேட்டிருக்கிறார்கள். அதிலே 60 அல்லது
70 பேர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி
யிருக்கிற உலமாக்களுக்கும் பென்ஷன் வழங்கவேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில் அமைக்கிற குழுவில்
இஸ்லாமிய அறிஞர்களுக்கு இடம் அளிக்க வேண்டுமென்று கேட்
டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இன்னொன்றைச் சொல்ல
விரும்புகிறேன். சேலம் செட்டிசாவடி ஜாஹிர் என்ற இடத்தில்
ஏறக்குறைய 3,000, 4,000 ஏக்கர் வக்ப் நிலங்கள் இருக்கின்றன.
அவை பிறருடைய ஆக்கிரமிப்பிலே இருக்கின்றன. அந்த ஆக்கிர
மிப்பிலே இருந்து விடுவிக்கப்பட்டு வக்ப் போர்ட் பொறுப்பிலே
கொண்டு வந்தால் அதனால் கிடைக்கக்கூடிய வருமானத்தை
வைத்துக்கொண்டு அந்த வாரியம் சமுதாயத்திற்குச்சேவை செய்ய
முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



புளியங்குடியைப் பொறுத்தவரையில் அங்கே நடைபெற்ற
கலவரத்தின்போது பல பொய் வழக்குகளைப் போட்டிருக்கிறார்
கள். அந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் வாங்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். மைனாரிட்டி சமுதாயமாகிய
இஸ்லாமிய சமுதாயத்திற்கு உரிய சலுகைகளை வழங்கவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி
முடித்துக் கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

* திரு கே. தனுஷ்கோடித் தேவர் : மாண்புமிகு மாற்றுத் தலை
வர் அவர்களே, இன்று நமது நிதி அமைச்சர் அவர்கள் அவைமுன்
வைத்திருக்கிற பிற்பட்டோர் நலத்துறையினுடைய கோரிக்கையை
நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்ட் பிளாக்
கட்சியின் சார்பாக வரவேற்று, பிற்பட்டோர் நலத்துறை என்ற
பெயரால் இன்றைக்கு ஒரு அதிசயமான மாறுதல் பேச்சினை
நான் கேட்டேன். அதை நான் வரவேற்கிறேன். இந்த நேரத்
தில், மதிப்பிற்குரிய இளையபெருமாள் அவர்கள், இந்த நாட்
டிலே வாழ்கின்ற மக்களுக்குப் பொருளாதார அடிப்படையிலே
தான் சலுகைகள் வழங்க வேண்டுமென்று பேசியதை உண்மை
யிலேயே நான் பாராட்டுகிறேன். அதை இங்கே சொல்வதோடு,
நண்பர் இளையபெருமாள் அவர்களும், அவருடைய இயக்கத்தைச்
சேர்ந்த நண்பர்களும் ஆண்டு கொண்டிருக்கிற மைய அரசுக்கு
வேண்டுகோளாக வைக்க வேண்டுமென்று நான் அகில இந்திய
பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வேண்டுகோள் விடுகின்
றேன்.

பிற்பட்டோர் நலத்துறை என்று மத்திய அரசால் கொண்டு
வரப்பட்டதை, மாநில அரசு பலதரப்பட்ட முறையில், இந்த
அரசு பொறுப்புக்கு வந்தபிறகு, நல்ல சலுகைகளை அளித்திருப்
பதை நான் வரவேற்கிறேன். அதே போல, பிற்பட்டோர் நலத்
துறைக்கு போர்டு வைத்து, அந்த போர்டு மூலமாக, பிற்பட்
டோருக்கு நல்ல சலுகைகள் வழங்கவேண்டுமென்ற நல்ல நோக்
கோடு காரியங்கள் செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

பிற்பட்டோர் என்ற பட்டியலில் குற்றப் பரம்பரை என்ற ஒரு
இனம் இருக்கிறது. அவர்களுக்குச் சில சலுகைகள் அளிப்பது
சாலச்சிறந்தது என்ற முறையில் மத்திய அரசும் மாநில அரசும்
நல்ல ஒரு முறையைக் கையாண்டிருக்கிறார்கள். குற்றப் பரம்
பரை என்றால், அவர்கள் செய்த குற்றத்திற்காக அந்தப் பெயர்
அல்ல. ஏகாதிபத்திய கொள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட
பொழுது, இந்தத் தமிழகத்தில் மட்டுமல்ல, வடக்கே இருக்கிற
மகாராஷ்டிரா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே குற்றப் பரம்
பரை என்ற கேலிச் சட்டத்தைக் கொண்டு வந்து, தேச முற்
போக்குவாதிகளாக இருந்த, தேச பக்தர்களாகப் போராடியவர்
களை இழிவு செய்வதற்காக, கை ரேகைச் சட்டம் என்று வைத்து

அந்த மக்கள் பகல் பூராவும் வேலை செய்தால், மாலை 7
மணியிலிருந்து அடுத்த நாள் காலை 7 மணி வரை, காவல் நிலை
யத்திலேயே இருந்து, அதற்குப் பிறகுதான் வெளியே செல்ல
வேண்டுமென்ற தாக்கீதைப் பெற்றிருந்தார்கள் என்பது நான்
சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. இந்த மன்
றத்திலே உள்ளவர்களுக்குச் சட்டரீதியாகத் தெரியும் என்று நான்
சொல்லிக்கொள்கிறேன. ஆகவே, வெள்ளைக்காரன்தான் குற்
றப் பரம்பரை என்ற பெயரை வழங்கினானே தவிர, சொந்த
மாக அவர்கள் குற்றம் செய்ய வில்லையென்பதை இந்த நேரத்
திலே கூறிக்கொள்கிறேன். ஆகவே, கிட்டத்தட்ட 40 ஆண்டுக்
காலம் இந்தக் குற்றப் பரம்பரை சட்டத்திற்கு உட்பட்ட மக்கள்,
வாழ்க்கையில் முன்னுக்கு வராத காரணத்தால், அவர்களுக்குச்
சில சலுகைகள் வழங்க வேண்டுமென்று மத்திய, மாநில சர்க்
கார் கொண்டு வந்த திட்டங்களை இன்னும் விரிவுபடுத்த வேண்
டும்.

மழைக்காலத்தில் ஒழுகாத முறையில் இருப்பதற்கு வீடில்லாத
நிலை உள்ளதால், இப்பொழுது புரட்சித் தலைவர்
ஆட்சியில் என் தொகுதியில், கிட்டத்தட்ட 600 வீடுகள் கட்டி
யிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதே போல, மற்ற இடங்
களிலே உண்மையிலே வீடில்லாத பிற்படுத்தப்பட்டவர்களுக்கு
வீடு கட்டித் தரும்படி கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்குப்
பொருளாதார அடிப்படையில் ஏற்றம் அளிக்க வகை செய்ய
வேண்டும். இந்தத் தேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம்
சமத்துவம் என்று மத்திய அரசு என்றைக்குக் கொண்டு வருமோ,
அந்த நிலை வருகின்றவரை, எல்லா மக்களுக்கும் அளிக்கின்ற
உதவியைப் போல, இந்த மக்களுக்கும் அளித்திட வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, அதற்கு முன்பாக, இந்த மக்கள் முன்னேற்றப்
பாதைக்கு வருவதற்கு அதை இன்னும் விரிவுபடுத்துவதற்கு
முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இளையபெருமாள் அவர்கள் இன்னும் ஒரு நல்ல
கருத்தைச் சொன்னார்கள். எங்களுடைய மாவட்டத்திலுள்ள
உஞ்சனியில் ஒரு கலவரம் நடந்ததாகச் சொன்னார்கள். அந்தக்
கலவரம் எப்படி நடந்தது என்று மதிப்பிற்குரிய இளையபெரு
மாள் அவர்களுக்குத் தெரியும். மண்குதிரைகளைக் கொண்டு
வந்ததாகவும், இரண்டு குதிரைகளும் மோதிக்கொண்டதால்
கலவரம் ஏற்பட்டதாக அவர் சொன்னார். உண்மை அது
அல்ல. மதிப்பிற்குரிய இளையபெருமாள் அவர்கள் என்னுடன்
வந்தால், நடந்த உண்மை என்ன என்பது அவருக்கு நேரில்
தெரிந்துகொள்ள வழியேற்படும். தற்போது முகவை மாவட்
டம் அமைதியாக இருக்கிறது. கலவரம் முடிந்த நிலையில் இருக்
கிறது. அதை மீண்டும் எழுப்ப வேண்டாம் என்று உங்களைப்
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலை உருவாக
விடக்கூடாது. அங்கே வாழ்கின்ற மக்கள் சுமுகமாக வாழவேண்டு



மென்று நாங்கள் பாடுபடுகிற நேரத்தில், அதற்கு ஆக்கமும்
ஊக்கமும் தரவேண்டுமே ஒழிய, மீண்டும் அதை கிளப்ப வேண்
டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மானியக் கோரிக்கையில், என்னுடைய
தொகுதிக்கு இரண்டு பெண்கள் இல்லங்கள் கொடுத்திருக்கிறார்
கள். கமுதியில் ஒன்றும், முதுகுளத்தூரில் ஒன்றும் ஆக, இரண்டு
மாணவர்கள் விடுதியைக் கட்டுவதற்கு அரசு அறிவிப்பு கொடுத்
ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு, வாடகைக் கட்டிடத்
திலே வைக்காமல்—அப்படி வைத்தால் இரவு நேரத்தில் படிக்க
பெண் குழந்தைகளுக்குக் கஷ்டமாக இருக்கும் என்பதால்
தேவையான கட்டிடங்களை அரசு கட்டித் தரவேண்டுமென்று
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மாணவர்கள் தங்கிப் படிக்
கின்ற கட்டிடங்கள் பழுதடைந்திருக்கின்றன. அவைகள் பழுது
பார்க்கப்படாமல் மோசமான நிலையில் இருக்கின்றன. அவை
களையும் பழுது பார்த்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் இந்தப் பத்தாண்டுக் காலத்
தில் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்ற முனைப்புத்
திட்டங்களாகப் பல திட்டங்கள் வந்திருப்பதன் காரணமாகப்
படிக்க விரும்புகின்ற குழந்தைகள் நிறைய இருக்கிறார்கள்;
ஆனால் சேர்க்கின்ற எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அத
னால் பல குழந்தைகளுக்கு இடமில்லாத சூழ்நிலை ஏற்படுகிறது.
எனவே, படிக்க விரும்புகின்ற குழந்தைகளைச் சேர்ப்பதற்காக
இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுகொள்
கிறேன்.

பத்தாவது வகுப்பை முடித்து விட்டு காலேஜுக்குச் செல்ல
வேண்டிய நிலையில், அந்த மாணவர்களுக்கு ஹாஸ்டலில் இடம்
கிடைக்காத காரணத்தால் தாய் தந்தையர்கள் கஷ்டப்படுகிறார்
கள். அந்தப் பகுதி முன்னுக்கு வர வேண்டுமென்று அரசு விரும்பு
மேயானால் அங்குள்ள குழந்தைகளுக்குக் கூடுதல் எண்ணிக்கை
தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரத நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் வாழ வேண்டு
மென்ற நல்லெண்ணத்தோடு அரசு கொண்டு வரும் திட்டத்திலே,
குறிப்பாக நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்வதெல்லாம்,
பிராமண சமுதாயம் என்று ஒரு சமுதாயம் இருக்கிறது. அவர்
கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். எந்த அள
விற்கு ஒதுக்கப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். என்
னுடைய தொகுதியில் உள்ள ஒரு இடத்தில் 40 குடும்பங்கள்
இருக்கின்றன. அந்த 40 குடும்பங்களிலும் உள்ள பிராமணர்
சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எந்த நிலையில் வாழ்கிறார்கள்
என்பது குறித்து அரசுக்கு ரிப்போர்ட் வேண்டுமானாலும்

தருகிறேன். அன்றாடம் மாட்டுச் சாணத்தை எடுத்து அதைத் தட்டி கூடையில் வைத்துக்கொண்டு விற்கின்ற சூழ்நிலை இருக் கிறது. அந்தச் சமுதாயத்தின் மீது கருணைக் கண்கொண்டு வாழ்க்கைத் தரத்தில் மிகவும் மெலிந்திருக்கின்ற மக்களுக்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அரசு கொண்டு வந்திருக்கின்ற நல்ல காரியங்களை அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய தொகுதியில் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ் கின்ற பிற்பட்ட மக்களுக்கு இன்னும் கூடுதலாகச் சலுகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக் கம்.

*திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர வர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான பிற்பட்டோர் நலத்துறை மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சில கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகிறேன்.

பிற்பட்டோர் சமுதாயம் என்பது இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கின்ற பெரும்பாலான மக்களைக் கொண்ட தாகும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களையும், முற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையும் மொத்தமாகப் பிரித்து மிகுதியைத் தனியாகப் பார்த்தால் ஏறக்குறைய 75 சதவீதத்திற்கும் மேல் இருப்பவர்கள்தான் பிற்பட்ட சமுதாயத்திலே இருக்கிறார்கள். இவர்களின் நலன்களுக்காக அரசு ஒதுக்கியிருப்பதே 10,22,26,000 ரூபாய் தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை நிச்சயமாகப் போதாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிற்பட்டோர் நலனுக் காக கமிஷன் அமைக்க வேண்டுமென்ற உத்தரவாதத்தை அன் றைக்குப் போராடிப் பெற்றுத் தந்த பெருமை டாக்டர் அம்பேத் கார் அவர்களுக்கு உண்டு. பிறகு அவரே தான் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களிடத்திலே வற்புறுத்திக் கேட்டு, முதன் முதலாக அந்தக் கமிஷனை அமைக்க ஏற்பாடு செய்தார் என்ற செய்தியையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. பிறகு தான் காகா கலேல்கார் கமிஷனை அமைத்தார்கள். அதைத் தொடர்ந்து மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டு, அதன் அறிக்கை யும் வெளி வந்திருக்கிறது. அதை நிச்சயமாக விரைவில் நிறை வேற்ற வேண்டுமென்ற கோரிக்கை நாடு முழுவதும் எழுந்திருக் கிறது. மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்ற வகை யில் நம்முடைய மாநில அரசு வேண்டுமானால் இந்த மாமன்றத் திலேயே கூட ஒரு தீர்மானமாக நிறைவேற்ற முற்படுமேயானால் அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக உறுதுணை யாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்





(பிற்பகல் 12-10)

மண்டல் கமிஷன் அறிக்கையை பொறுத்த வரையில், இந்த அரசாங்கத்தினுடைய எண்ணம் தான் என்ன என்பதை வெளிப் படையாகச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், இன்றைக்கு ஆளுகின்ற கட்சியைச் சார்ந்த ஒரு சிலர் பத்திரிகையில் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித் துள்ளார்கள். குறிப்பாக 'தாய்' பத்திரிகையில் வந்து இருக்கிறது. அரசாங்கம் இதைக் கவனித்து மண்டல் கமிஷனு டைய பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இட ஒதுக்கீடுகள், கல்வியிலே சலுகைகள், பொரு ளாதார உதவிகள், சமுதாய அமைப்பிலே காண வேண்டிய முன்னேற்றங்கள், இன்னும் பல்வேறு வகையான பரிந்துரைகளை மண்டல் கமிஷன் தெரிவித்திருக்கிறது. அவைகளை எல்லாம் செயல் படுத்துவதற்காக ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

1971–72-லே தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடத்தில் இருந்த காலத்தில் தான், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஆட்சி இருந்த காலத்திலேதான் இந்தத் துறை தனியாக ஒரு துறையாக அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் பரவலாக்கப் பட்டு, மிகவும் அதிக அளவிலே செயல்படுத்தப்பட்டதை நாம் அறிவோம்.

இப்போது கூட உதவித் தொகை, பள்ளி மாணவர் களுக்கு, கல்லூரி மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஜூன் மாதத்திலே கிடைத்தால்தான் அதிலே முழுமை யான பலன் இருக்கும். பல்வேறு காலக் கட்டங்களிலே பார்க்கி றோம். நவம்பர், டிசம்பர் மாதங்களில் தான் அந்த உதவித் தொகை கிடைக்கிறது. தேவையான நேரத்திலே தவிர்த்து, அந்த நேரத்திலே கடன் உடன்பட வேண்டியவர்கள் பட்ட பிறகு, காலங் கடந்து கிடைக்கும் உதவித் தொகை நிச்சயமாக முறை யாக இல்லை என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இனி வரும் ஆண்டிலாவது ஜூன் மாதத்திற்குள், கிடைக்க வேண்டிய நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக '' மெரிட் ஸ்காலர்ஷிப் '' கிடைக்கிறவர்களுக்கு ஏறக்குறைய ஓராண்டு காலத்திற்குப் பிறகே கிடைக்கிறதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத் திலே நெய்யூர் என்ற ஊரிலே ஓராண்டு கழித்து, மறு ஆண்டு தான் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக தகவல் வந்து இருக்கிறது. அரசாங்கம் இப்படி இருக்கக் கூடாது. நிச்சயமாக அந்த ஆண்டே கிடைப்பதற்கான வழி வகையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீருடைகளைக் கூட ஆண்டு ஆரம்பத்திலே கொடுக்க வேண்டும். 3, 4 மாதங்களுக்குப் பிறகுதான் சீருடைகள் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. அதையும் அரசாங்கம் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்குகிற திட்டம் வரவேற்கக் கூடிய திட்டம். மாதம் ரூ. 50 உதவித் தொகையாகத் தருகிறார்கள். அதிலே கூட சில வரை முறைகளை வைத்திருக்கிறார்கள். 5 ஆண்டு காலத்திற்கு அவர் கள் வேலையற்று இருந்த பிறகு தான் அவர்களுக்கு அந்த உதவித் தொகை என்பது போல் இருக்கிறது. குடும்பத்தினு டைய சுமையைக் குறைப்பதற்கு தன்னுடைய பிள்ளைகள் வேலைக்குப் போவார்கள் என்று நினைத்து பெற்றோர்கள் படிக்க வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் படித்து முடித்து விட்டு, அந்தக் குடும்பத்திற்குச் சுமையாக இருக்கிற ஒரு காட்சி இன்று தமிழகத்திலே இருக்கிறது. எனவே அந்தச் சுமையைக் குறைப்பதற்காக இந்த அரசாங்கம் படித்து முடித்துவிட்ட அத்தனை பேருக்கும் அந்த உதவித் தொகையைக் கொடுப்பதற்கு வழி வகையை, அதிலும் குறிப்பாக, பிற்படுத்தப்பட்டவர் களுடைய குழந்தைகளுக்கு கிடைக்கச் செய்வதற்கு முன்வர வேண்மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர்களுக்குக் கருவிகளை தருகிறார்கள். அந்தக் கருவிகளை ஏதோ குலுக்கல் சீட்டு போல் போட்டு குறைந்த எண்ணிக்கையிலே அவைகள் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. பல்வேறு வகைகளில் அவர்களுக்கு மிகவும், அவசிய மான, தேவையான நிலையில் கிடைப்பதற்கான சூழ்நிலை மிகவும் குறைவாகவே இருக்கிறது. அதனை இப்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் நோக்கமே, அவைகளை எல்லாம் விரைவாக அத்தனை பேருக்கும் கிடைக்கும் படியான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான்.

அடுத்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற படிப்பிற்காக, பயிற்சி கொடுப்பதற்காக ஒரு பயிற்சி நிறுவனம் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனத்தின் முயற்சிகள் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகிறேன். எனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிற அந்த புத்தகத்திலே கூட 1973—74 ஆம் ஆண்டிலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்விலே இங்கே பயிற்சி பெற்ற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1974—75 ஆம் ஆண்டில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. 1975—76-ல் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் ஆனால் அதற்குப்பிறகு பூச்சியம், பூச்சியம்....ஆகஇருக்கிறது. இதற்கு என்ன காரணம்? சரியான மாணவர்கள் சேர்க்கப்பட வில்லையா அல்லது பயிற்சி பெறுவதற்கான மாணவர்கள் கிடைக்கவில்லையா, அல்லது கிடைத்த மாணவர்களுக்கு போது மான அளவிற்கு பயிற்சி கொடுத்தும், தேர்ச்சி பெறாத நிலைமை எப்படி ஏற்பட்டது? இது 1976-க்கு பிறகு தான் ஏற்பட்டிருக் கிறது என்பதை நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அடுத்து எங்கள் மாவட்டத்தைப் போலவே பல்வேறு மாவட் டங்களிலும்,வன்னியகுல க்ஷத்திரியர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அவர்கள் சமுதாயத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். அவர்களுக்கு கிடைக்கிற சலுகைகள் மிக மிக மோசமாக குறைந்த பட்சமாகத்தான் இருக்கிறது. அவர் களுடைய எண்ணங்கள் எல்லாம் இன்றைக்கு அரசாங்கத்தினு டைய கவனம் அவர்கள்பால் ஈர்க்கப்படவில்லையே என்ற நிலையிலே இருக்கிறார்கள். அவர்களை மிகவும் பிற்பட்டோர் என்று சொல்லி, அதிக சலுகைகள், தேவைக்கேற்ற சலுகைகள் தருவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

அதைப் போலவே, மண்டல் கமிஷன் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதைப் போலவே, சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள், மீனவர் மற்றும் கிராமத் தொழில்களிலே ஈடு பட்டவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு முழுமையான சலுகைகளை—பலனை அவர்கள் அடைவதற்கான ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும், அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வறுமை, அறியாமை, ஏழ்மை நிலைகளில் பெரும்பான்மை யான மக்கள் இன்றும் உழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம். பிற்பட்டோர் பட்டியலிலே இருப்பதனால் தான் சில சலுகைகளை அனுபவிக்க முடிகிறது. அந்த அளவிலே, கல்வியிலோ, சமுதாயத்துறையிலே மெல்ல மெல்ல முன்னேறி வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக சொல்ல வேண்டும் என்று சொன்னால் அகமுடையார், துளுவ வெள் ளாளர் என்று சொல்கிறார்கள். இவர்களை பிற்பட்டோர் பட்டியலில் தொடர்ந்து இருப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்குக்கூட தொண்டை மண்டல ஆதி சைவ வேளாளர் கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களையும், பிற்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்கவேண்டுமென்று சொல் கிறார்கள். அரசாங்கம் அதை முறையாக பரிசீலனை செய்து, அவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பள்ளிக்கூடங்களில் சேருகின்ற போது சான்றிதழ் களிலே இந்த ஜாதிப் பெயரை குறிப்பாக ஒழுங்காக எழுதுவதற் கான உத்தரவுகளை இட வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு இடங்களிலே இந்தப் பிரச் சினைகள் வருகிறது. முதலியார் என்று குறிப்பிட்டு விடுகிறார் கள். முதலியார் என்று சொன்னாலே முற்பட்டவர்கள் வகுப் பிலே இருக்கிறார்கள், இன்னும் சில பேர்கள் பிற்பட்ட வகுப் பிலே இருப்பவர்கள் முதலியார் என்று தெரியாத் தனமாக போட்டு விடுகிறார்கள். அப்படிச் சேர்த்துக் கொள்வதாலே

வாழ்க்கை பூராவும் அந்த இனத்தைப் சேராதவர்களாக இருந்தும் கூட அவர்களுக்கு வாழ்க்கையிலே முன்னேறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்தச் சலுகைகள் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கம் முறையாக உத்தரவிட்டு பள்ளிகளிலே சேருகின்றபோது இந்த ஜாதிப் பெயர்களை எல்லாம் முறையாக சரி செய்து ஒழுங்காக அது சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியான விழுப்புரத்தைப் பொறுத்த வரையில் அரசினர் கலைக் கல்லூரி இருக்கிறது. ஆனால் அங்கே மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் சரியான விடுதியில்லை. பிற்பட்டவர்களின் நலனிலே அக்கறை கொள்ள வேண்டிய இந்த அரசு—அக்கறை இருப்பதாக சொல்கின்றபோது நிச்சயமாக இவைகளை ஏற்படுத்தித் தர முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் மாநில அரசு நியமித்துள்ள பிற்பட்டோர் ஆணைக் குழுவிலிருந்து ஒரு கேள்வித்தாள் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை 15–4–83க்குள் பதில் அனுப்ப வேண்டும் என்று தெரிவித்திருக் கிறார்கள். தயவு செய்து இன்னும் சில காலம் அதிகமாக நீட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் இப்போதுதான் கிடைத்திருக்கிறது. எனவே காலத்தை நீட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதி சமுதாயத்தின் எண்ணங்களிலிருந்து மறைகின்ற வரை, சாதி மக்கள் மனதிலிருந்து மறைகின்ற வரை சர்க்காருடைய ஏடுகளிலிருந்து மறையக்கூடாது என்ற தந்தை பெரியார் அவர்கள் சொன்னதை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு ஜாதி சமுதாய அடிப்படையிலே உள்ள சலுகைகள் தொடர வேண்டும். அதற்கான மண்டல கமிஷனுடைய அறிக்கையை வற்புறுத்தி அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவாக இருக்கிறது என்று மீண்டும் எடுத்துச் சொல்லி எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிற்பட்ட நலத்துறையினுடைய மாற்றுக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு மானியக் முதற்கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு பிற்பட்டோர் நலத்துறை ஆரம்பகாலத்திலே இந்த நலத்துறையோடு இணைந்து பின்னால் இந்தத் ஆதி திராவிட லாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற துறைக்கு கூடுத இந்தத் துறை தனியாக பிரிக்கப்பட்டு இந்தத் நோக்கத்தோடு நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் துறைக்கு என்று இந்தத் துறையை கூடுதலாகக் கவனிக்கக்கூடிய பொறுப்பேற்றபிறகு காணிக்கக்கூடிய ஒரு நிலை தமிழகத்திலே அல்லது கண் கிறது. அதுவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்படுத்தப்பட்டிருக் ஒரு மாவட்ட நல





அதிகாரிகள் என்று நியமனம் செய்யப்பட்டு அந்த நல அதிகாரிகள் மூலம் இந்த பிற்பட்ட நலத்துறையைச் சேர்ந்த சமுதாயத்தினர்களை கூடுதலாகக் கவனிப்பதற்காக வழிவகைகள் நம்முடைய நாவலர் அவர்கள் செய்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பிற்பட்டவர்கள் நலனுக்காக மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு ஒன்று 1974-லே ஆரம்பிக்கப்பட்டு, அதற்குப்பிறகு நம்முடைய அரசும் இந்த ஆண்டு தமிழ்நாடு இரண்டாம் பிற்பட்டவர்கள் உயர் ஆணைக்குழு ஒன்றை திரு. ஜே. ஏ. அம்பாசங்கர் அவர்கள் தலைமையிலே இன்று ஒரு குழுவினை நியமித்து இருக்கிறார்கள். அந்தக் குழுவிலே தமிழகத்திலே 75 லட்சம் மக்கள் வாழ்கின்ற செங்குந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்று யாரும் பிரதிநிதிகளாக நியமிக்கவில்லை. 5 கோடி மக்கள் வாழ்கின்ற இந்தத் தமிழகத்திலே 70-ல் இருந்து 75 லட்சம் மக்கள் தொகை கொண்டுள்ள அந்தச் செங்குந்தர்சமுதாயத்தினரின் பிரதிநிதிகளை அந்தக் குழுவில் போட வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் குழுவிலே இவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இவர்களையும் பிரதிநிதிகளாக சேர்த்துக் கொள்ள நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் செங்குந்தர், வன்னியர் போன்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இக் குழுவில் அவர்களுடைய மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநித்துவம் கொடுக்கப்படவும் இச்சமுதாய மக்களை மிகப் பின்தங்கிய பிரிவினராக அறிவிக்கவும் ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பிற்பட்டோர் நலத்துறை மூலமாக பல்வேறு வகையான நன்மைகளை தமிழகத்திலே நம்முடைய அரசு செய்து வருகிறது. குறிப்பாக படிப்புக்கு உதவித் தொகை, படிப்புக்கு கட்டணச் சலுகை என்று பல்வேறு வகையான திட்டங்களை நம்முடைய அரசு செய்கின்றது. ஆனால் இந்தத் துறைக்கு என்று ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை போதுமானதாக இல்லை. இந்த திட்டங்களால் பலன் பெறவேண்டியவர்கள் லட்சக்கணக்கிலே இருக்கின்ற காரணத்தால் அந்தகடன் உதவித்தொகையை, கட்டண உதவி தொகையை கூடுதலாக்கி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

தற்போது அரசு மாணவர் இல்லங்கள் நல்ல முறையில் பணியாற்றினாலும், அந்த மாணவர் இல்லங்களில் போதுமான வசதிகள் இல்லை. ஒரு அறையில் ஒட்டுமொத்தமாக 4—5 மாணவர்கள் தங்கிப் படிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த மாணவர் இல்லங்களைக் கூடுதலாக்கி அங்கே அதிகப்படியான மாணவர்கள் நல்ல வசதியுடன் தங்கிப்படிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தினால், அந்த மாணவர்களுக்கு பேருதவி செய்வதாக இருக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்,

விளையாட்டு மற்றும் பல்வேறு திட்டங்களுக்காக இதே
நிதி ஒதுக்கீடு செய்து இருந்தாலும், அந்த பிற்பட்ட மக்கள்
மேலும் விளையாட்டுத் துறையில் ஆர்வத்தோடு பங்கேற்கும்
வகையில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான வசதி
களையும் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., Chartered Accountant போன்ற
பதவிகளில் ஆரம்ப காலத்தில் தமிழர்கள் அதிகமாக இருந்
நிலை மாறி, இன்று தமிழர்களே அந்தப் பதவிகளில் காண முடி
யாத அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது என்பதை மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்
தமிழர்கள், இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். Charte ed
Accountant போன்ற பணிகளில் அதிகமான அளவிற்கு வரும்
வகையில் பயிற்சிகளைத் தருவதற்கான நடவடிக்கைகளை நல்ல
முறையில் எடுத்து, அதிகமான எண்ணிக்கையில் தமிழர்கள் அந்தப்
தேர்வுகளில் வெற்றிபெற்று வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக
இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் கூடுதலாக்க
வேண்டும். அப்படி கூடுதலாக்கிக் கொடுப்பதன் மூலம் அவர்
களுக்கு டிரெயினிங் கொடுப்பதற்கும் intensive coaching.
கொடுப்பதற்கும் நல்ல முறையில் வழிவகைகள் செய்யமுடியும்
என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்
கிறேன்.

புத்தகங்கள், எழுதுபொருள்கள் வழங்கும் முறைபற்றி
நான் குறிப்பிட விரும்புகிறேன். அவை காலத்தில் அந்த
மாணவர்களுக்குப் போய் சேருவது இல்லை. பள்ளி ஆண்டு
தொடங்கிய உடனேயே அவைகள் அந்த மாணவர்களுக்குக்
கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

சலவைத் துறைகள், மற்றும் தையல் பயிற்சிப் பள்ளிகள்
மூலம் இந்தத் துறைஅந்தமக்களுக்கு அதிகமான அளவிற்கு வேலை
வாய்ப்பு பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருந்தபோதி
லும், மேலும் கூடுதலான இடங்களில் அவைகளை அமைப்பதால்
அந்த மக்கள் மேலும் அதிக அளவில் உதவி பெறுவார்கள் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, இந்த சலவைத்
துறைகள், மற்றும் தையல் பயிற்சிப் பள்ளிகள் செங்கற்பட்டு
நகரத்தில், ஒன்றும் காஞ்சீபுரம் நகரத்தில் ஒன்றும்
ஏற்படுத்திக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்கள் அதன் மூலம்
நல்ல பயனைப் பெறும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.



வேலையற்றோருக்கு உதவித் தொகை ரூ. 50 வழங்கப்
படுகிறது. அந்தத் தொகை போதுமானதாக இல்லை. ஆகவே
அவர்கள் விரைவில் வேலை பெறுவதற்கான வாய்ப்பை நம்
முடைய தமிழக அரசு செய்து தந்தால் அந்த ஏழைக் குடும்பங்
கள் பலன் பெற வாய்ப்பு இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்
கிறேன். வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையும் பிற்
பட்டோர் லிஸ்டில் சேர்த்து, அந்த மக்களும் அந்த பிற்பட்டோர்
நலத்துறை வழங்கும் சலுகைகளையும், வசதி வாய்ப்புகளையும்
பெறுவதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொண்டு, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.
வணக்கம்.

*திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இன்றையதினம் பிற்பட்டோர் நலத்துறை மானியக்
கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி
கூறி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
இன்றையதினம் தமிழகத்தில் பிற்பட்டோர் நலத் துறை
என்று சொல்லி, அதன் மூலம் தமிழகத்தில் உள்ள
மக்களுக்கு பல நன்மைகளை இந்தத் தமிழக அரசு
செய்து கொண்டு வருகிறது என்று சொன்னாலும்,
அந்தப் பிற்பட்டோர் முற்பட்டோராக வரவில்லை என்கிற
நிலைமைதான் இருக்கிறது என்ற காரணத்தால், அந்தத்
துறையின் செயல்பாட்டை தீவிரப்படுத்த வேண்டும் என்ற
வகையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில்
பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் என்று தனியாக ஒரு
அமைச்சரை அதற்காக நியமித்து இருந்தது. அதைப்போலவே
இன்றைக்கு தமிழக அமைச்சரவை விரிவுபடுத்தப்படும்
என்று அடிக்கடி சொல்லப்பட்டு வருகின்ற நிலையில்,
இந்தத் துறைக்கென தனியாக ஒரு அமைச்சரை நியமிக்க
முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றையதினம் கிராமத்தில் மட்டுமல்ல, தமிழகத்தில்
உள்ள அனைத்து இடங்களில் உள்ள மாணவர்களுக்கும்
இலவச பாடபுத்தகங்கள் வழங்குவது என்ற முறையில் 9-வது
வகுப்பில் இருந்து வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்
அடிப்படை கல்வி பெறுவதற்கே வாய்ப்பு இல்லாத நிலையில்
அவன் 9-ம் வகுப்புக்கு எவ்வாறு செல்ல முடியும் என்பதை
சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, அவர்களுக்கு 6-ஆம்
வகுப்பில் இருந்து இலவசப் புத்தகமும், உதவித் தொகையும்
அளிக்கவேண்டும். அதுவும் காலாகாலத்தில் கொடுக்கும் முறை
உருவாக்கப்படவேண்டும்.

அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்களும் மற்றவர்களும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைக் கொடுக்காமல் அவற்றை தனியார் கடைகளில் விற்றுவிடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் பார்க்கும்போது பெருமங்கலம், சிறுவத்தூர் என்ற இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர் களுக்கு முறையாகக் கொடுக்க வேண்டிய உதவித் தொகை களையும் பாடப் புத்தகங்களையும் கொடுக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. நான் உள்ள நிலைமைகளைத்தான் சொல்கிறேனே தவிர குறைசொல்ல வேண்டுமென்ற எண்ணத்தில் இவைகளை எல்லாம் சொல்லவில்லை.

பிற்பட்ட மாணவர்களுக்கு என்று விடுதிகளைக் கட்டு கிறார்கள். சிறுவத்தூர், நயினார்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் 1966-ல் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பள்ளிகளுக்கு இன்றுவரையில் அரசாங்க கட்டடம் இல்லை. அந்த வட்டாரத்தில் சுமார் 20 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலுள்ள மாணவர்கள் எல்லாம் அங்கேதான் படிக்கிறார்கள். அங்கே ஒரு பிற்பட்ட மாணவர் விடுதியை அமைக்க வேண்டுமென்று முயற்சி செய்தோம்; இதுவரையில் அது முடியவில்லை. கடந்த ஆண்டு கோரிக்கை ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். அதன்மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதிக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் வந்தார்கள். அவர்களுக்கு அங்குள்ள மக்கள் நிலைமை நன்றாகத் தெரியும். அப்போது கோரிக்கை ஒன்றை அவர்களிடம் கொடுத்தேன். அந்த மக்கள் நிலையை எண்ணிப் பார்த்து, அங்கே ஒரு பிற்பட்ட மாணவர்கள் இல்லத்தை விரைவிலே அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் 'படகர்' என்ற ஒரு இனம் வாழ்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரம், உணவு, உடை, திருமணம் இதர பழக்க வழக்கங் கள் எல்லாம் மற்ற மக்களிலிருந்து தனியாக இருக்கிறது. அந்த மக்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் அகில இந்திய அடிப்படையில் பார்த்தாலும் சுமார் 3 இலட்சம் பேர்கள் தான். நீலகிரி மாவட்டத்தில்தான் இருக்கிறார்கள். அவர் களை பின்தங்கியவர் பட்டியலில் சேர்த்திருப்பதினால் அவர் களுக்கு கிடைக்க வேண்டிய உரிமை கிடைக்கவில்லை, பாதுகாப்பு கிடைக்கவில்லை. ஆகவே அவர்களை மலை வாசிகள் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு உரிய சலுகைகள் அத்தனையையும் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று ஒட்டர்கள், போயர்கள், பார்பர்கள், சலவைத் தொழிலாளர் போன்றவர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதில் அரசாங்கம் சலுகை காட்டுகிறது. ஆனால் என்னுடைய கள்ளக்குறிச்சி தாலுகாவில் அந்த சலுகை



யாருக்கும் கிடைக்கவில்லை. இதுகுறித்து இயக்குநர் அலுவலகத்தில் இருக்கிற அதிகாரிகள் அந்தந்த தாலுக்கா வுக்குச் சென்று அந்த தாலுக்காவில் எந்த எந்தப் பிரிவினருக்கு எத்தனை பேர்களுக்கு வீட்டுமனை கொடுத்திருக்கிறார்கள் என்பதை பரிசீலிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் உரியவர்களுக்கு கொடுக்க வாய்ப்பு ஏற்படும்.

தற்போது கிராமங்களில் இருக்கிற வசதி படைத்தவர்கள் தரிசு நிலங்களை, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து, தங்களுக்குச் சொந்தம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் எடுத்து அங்கே இருக்கிற சலவைத் தொழிலாளர்கள், போயர்கள், ஒட்டர்கள், பார்பர் களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் வீடு கட்ட, கறவை மாடு வாங்க, சிறு தொழில் செய்ய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கொடுக்கிறோம். ஆனால் அவர்களுக்கு அந்தக் கடன் சரியாகக் கிடைப்பதில் சில இடையூறுகள் இருக்கின்றன. ஆகவே, மத்திய அரசு, மாநில அரசுகள் கொடுக்கின்ற உதவிகளை சரியாகக் கொடுக்க, அதற்கென்று தனியாக ஒரு வங்கியை ஆரம்பிக்க அரசு முன்வர வேண்டும். மலைவாழ் மக்கள், ஆதிதிராவிட மக்கள், பின்தங்கிய மக்கள் ஆகியோருக்கு அரசு அளிக்கும் சலுகைகளை அந்த வங்கியின் மூலம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசு, மாநில அரசு கொடுக்கின்ற உதவித்தொகைகளை அந்த வங்கியில் டிபாசிட் செய்து, அவர்களுக்குக் கடன் கொடுக்க வசதி செய்து கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அந்த உதவிகளைப் பெறுவதிலே இருக்கிற இடை யூறுகள் ஓரளவுக்கு போக்க வசதியாக இருக்கும்; பிற்பட்ட பிரிவு மக்கள் அதனால் வசதிபெற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் போன்றவர்களுக்கு கடன் கொடுக்கும் போது அந்தக் கடன் அவர்களுக்கு சரியாகக் கிடைக்காமல், கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கும் இந்த தனி வங்கி மூலம் கொடுக்க ஏற்பாடு செய்தால் அவர்கள் சுலபமாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

அது மட்டுமல்ல, மலைவாசிகள் என்று சொல்லும்போது கல்வராயன் மலையில் இருக்கிற மாணவர்களுக்கு சரியாக விடுதி வசதி இல்லை; பள்ளிவசதி இல்லை. அங்கே நாற்காலி இல்லை. பெஞ்சு இல்லை. தரையில் உட்கார்ந்து படிக்கவேண்டியிருக்கிறது. அந்த வசதிகளைச் செய்து கொடுக்க

(திரு. எஸ். சிவராமன்) [1983 ஏப்ரல் 11

வேண்டும். பிற்பட்ட மாணவர்களுக்கு என்று தனி விடுதி
இல்லை; பிற்பட்ட மக்களுக்கு அங்கே நல்லமுறையில்
ஒரு விடுதி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் பல பிற்பட்ட பிரிவு
மக்கள் இருக்கிறார்கள். குறிப்பாக வன்னியர்கள், போயர்கள்,
ஒட்டர்கள், தேவர்கள் போன்ற சமூகத்தினர் எங்களை
மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று
சொல்லி, பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஆனால்
நம்முடைய நாட்டில் அரசியல்வாதிகள் வாக்கு சேகரிப்
பதற்கு மட்டும் அவர்களை ஆதரிக்கிறார்கள்; பிறகு
கவனிக்காமல் விட்டு விடுகிறார்கள். எல்லா வகையிலும்
முன்னோடியாக இருக்கிற தமிழகம் இந்தத் துறையிலே பல
வகைகளிலே பின்னோக்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இன்றைக்கு கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில்
இருக்கக்கூடிய பின்தங்கிய மக்களும், மிகவும் பின்தங்கிய மக்களும்
தாழ்த்தப்பட்ட மக்களும் சிலபல பிரிவுகளை வைத்திருக்
கிறார்கள். அதன் மூலமாக எந்த சமூகத்தினர் மிகவும்
மோசமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு என்று ஒரு தனி
வாரியம் அமைத்து சலுகைகள் அளிக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

இன்றையதினம் வன்னியர்களைப் பற்றி பலர் சொன்னார்
கள். அவர்கள் சில சலுகைகளைக்கேட்டு போராட்டம்
நடத்திக்கொண்டிருந்தாலும் அவற்றைக் கேட்க ஆள் இல்லை;
கேட்க நாதியில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டு
மென்றால் இன்றையதினம் அம்பாசங்கர் தலைமையிலே
ஒரு பிற்பட்டோர் நல கமிஷன் வைத்திருக்கிறோம்.
அந்தக் கமிஷனிலே வன்னியரைச் சேர்ந்தவர்கள் யாரும்
கிடையாது. ஆனால் அந்தத் துறையிலே தலைவராக
இருக்கக்கூடிய அம்பாசங்கர் அவர்கள் வன்னியர் சமுதாயத்
தைச் சேர்ந்தவர்கள். இன்றையதினம் தலைவர் அவர்கள்,
தலைவரின் இருக்கையிலே உட்கார்ந்திருக்கிறார்கள் என்றால்
அவர்கள் தனிப்பட்ட முறையிலே தங்களுடைய கருத்துக்களை
இங்கே சொல்ல முடியாது. நாங்கள் சொல்வதைப் பரிசீலித்து
நடவடிக்கை எடுக்கவும் அவர்களால் முடியாது. இந்த
அவையினைக் கட்டுப்படுத்தி நடத்திச் செல்லலாமே தவிர,
பிரச்னைகளுக்குத் தீர்வு காண அவரே நடவடிக்கைகளை
எடுக்க முடியாது. அந்த அடிப்படையிலேதான், தலைவர்
பொறுப்பினை ஏற்றிருக்கிற அம்பாசங்கர் அவர்களும் இருக்



1983 ஏப்ரல் 11] (திரு. எஸ். சிவராமன்)

கிறார்கள். அவர் தலைமைப் பொறுப்பினை ஏற்றிருக்கிற
காரணத்தால், அவரால் அந்தச் சமுதாயத்திற்குத் தேவையான
கருத்துகளைத் தாமே எடுத்துச் சொல்ல முடியாது. மற்றவர்
கூறுகின்ற கருத்துக்களை ஏற்றுக் கொண்டு பரிசீலிக்க
வேண்டுமே தவிர, அவர்கள் தனிப்பட்ட கருத்துக்களை
எடுத்து வைக்க முடியாது. ஆகவே வன்னியர் சமுதாயத்தைச்
சேர்ந்தவர்கள் வேறுயாரையாவது இதிலே அங்கம் வகிக்கும்படி
ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு அதிலே பிரதி
நிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,
எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன்
அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கமிஷனின்
ரிப்போர்டை 16-ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்று
சொன்னார்கள். அதை ஓரிரு வாரம் நீட்டித்து கொடுத்தாலும்
சரி, அதனுடைய உண்மையான தன்மைகளை, சட்டமன்ற
உறுப்பினர்களும், பொது மக்களும், பிற்படுத்தப்பட்ட
சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், அதனுடைய கருத்துக்களைத்
தெரிந்து கொள்ளும் வகையில் அளிப்பதோடு, அவர்கள்
எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல
வாய்ப்பளிக்க முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

அத்தோடு இன்றைய தினம் விலைவாசி ஏறியிருக்கின்ற
காரணத்தால் மாணவர்களுக்கு—அவர்களுக்குக் கொடுக்கின்ற
உதவித் தொகை 65, 95 ரூபாய் என்ற அளவிலே மட்டும் தான்
இருக்கிறது. அது தற்போதைய நிலையில் பற்றாக்குறைதான்.
பாதி நாட்கள் அவர்கள் பட்டினிதான் கிடக்க வேண்டும். ஆகவே
தற்போதுள்ள விலைவாசிக்கேற்ப அந்த மாணவர்கள், பசியில்லா
மல் உண்பதற்கு, வயிறார உண்பதற்கு, பட்டினியில்லாமல்
நன்றாக உண்டு, தங்கள் கல்வித் தன்மையை, கவலையில்லாமல்
வளர்த்துக் கொள்வதற்கு உதவி செய்யும் வகையில், அந்த உதவித்
தொகையைச் சற்று அதிகமாக கூட்டிக் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு தற்போதுள்ள பிற்
படுத்தப்பட்ட மக்களுக்கு உள்ள விடுதிகளில் 50 மாணவர்கள்
தான் சேர்க்கப்பட வேண்டும் என்று எண்ணிக்கை வரையறுக்கப்
பட்டு, விதி போடப்பட்டுள்ளது. இது மிகவும் குறைவாக
இருக்கக்கூடிய நிலைமை. அந்த நிலையை மாற்றி, 100 மாணவர்
களாவது இருக்கலாம் என்று வைத்தால், பின் தங்கியவர்கள்,
தாழ்த்தப்பட்டவர்கள், வசதியில்லாதவர்கள் ஆகிய அத்தனை
பேரும் ஒன்றாகச் சேர்ந்து படிக்க வசதியாக அது இருக்கும்.
50 மாணவர்கள்தான் என்று ஒரு புள்ளி வைத்து விட்டால்,
அதிகப்படியான மாணவர்களை இப்படி இந்த அடிப்படையில்
சேர்க்க முடியாது. ஆகவே, அந்த நிலையை மாற்றுவதற்கு
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

(திரு. எஸ். சிவராமன்) [1983 ஏப்ரல் 11

என்னுடைய தொகுதியிலே பெரிய சிரவத்தூர், நயினார் பாளையம் போன்ற பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட யாணவர் கள் நிறைய பேர்கள் பயிலுகிறார்கள். அவர்களுக்கு ஒரு விடுதி ஏற்படுத்தி தரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் சார்பாக, மாண்புமிகு நிதியமைச்சர். டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வந்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கை எண் 32, பின்தங்கியோர் நலன் குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார் பாக என்னுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

இந்தியத் துணை கண்டத்திலே, பிற்படுத்தப்பட்டோர் நல னுக்காக மிக நல்ல முறையில் இயங்கக் கூடிய செயல் திட்டங்களை உருவாக்கி கொண்டிருப்பது, தமிழ்நாடு தான் என்று விரலைச் சுட்டிச் சொல்லக் கூடிய அளவுக்கு, இன்றைய தினம் தமிழகத் தினுடைய நிலைமை இதில் இருக்கிறது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் நம்முடைய கொள்கையாக இருந்த போதிலும் கூட, இருக்கக்கூடிய சூழ்நிலை சந்தர்ப்பங்களின் விளை வாக, இந்தியத் துணைக் கண்டத்திலே பாதிக்கப்பட்டவர்களு டைய நிலை, பிற்படுத்தப்பட்டவர்களுடை நி..ல மாறி, அரிசனங் களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும், தாழ்த்தப்பட்டவர் களையும், வேகமாக முன்னுக்கு கொண்டு வந்து, அனைவரையும் ஒரு நிலைப்படுத்திய பிறகு, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அந்த நிலைமைக்கு நாட்டு மக்கள் அனைவரையும் கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையிலே, நாம் அவர்களுக்கென்று பல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான், எங்கே ஃபார்வேர்டிலே இருப்பவர்களே மேலும் மேலும் மேலுக்குப் போய்க் கொண்டே இருப்பார்களோ என்ற அடிப்படையிலேதான் 3 குழந்தைகளுக்கு மேற்பட்டவர்களுக்குச் சலுகைகள் இல்லை என்ற சட்டம் வந் திருக்கிறது. ஏனெனில் படித்தவர்களுடைய குழந்தைகள் எல் லாம் மேலும் மேலும் படித்துக் கொண்டே போய் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிற காலத்தில், 3 குழந்தைகளுக்கு மேற் பட்டவர்களுக்கு அந்தச் சலுகைகள் இல்லை என்று சொன்னால், அதிலே இன்னும் கொஞ்சம் தேக்கம் ஏற்படும். படிக்காத குடும்பங்களில் உள்ள மற்றக் குழந்தைகளுக்கு அந்த வாய்ப்பு உபயோகப்படும். அது மட்டும் அல்லாமல், குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு என்று தனிப்பட்ட ஏற்பாட்டையும் கொண்டு வந்திருக்கிறோம். இவைகளை எல்லாம் வரையறுக்கப் படாத சூழ்நிலையில் சலுகைகளை வழங்கினால், தனிப்பட்ட நிலைமையில் ஃபார்வேர்டு என்று சொல்லக் கூடியவர்கள் எங்கே



1983 ஏப்ரல் 11] (டாக்டர் கே. சமரசம்)

கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்கு போய் விடுவார்களோ• பிற்படுத்தப்பட்ட ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காமல் போய்விடுமோ என்று தான், இப்படி அவைகளை வரையறை செய்து, பல சட்டங்களையும் திட்டங்களையும் இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை எடுத்துச் சொன் னால், அது மிகையாகாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு பழனியப்பன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் முன்பு ஒன்றி ரண்டாவது இருந்தது, இப்போது அதுவும் போய் விட்டது என்று குறைபட்டுக் கொண்டார்கள். அதை உணர்ந்துதான். நமது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிக்கக் கூடியவர்களுக்காக ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இருந்து ஆண்டுதோறும் 10 பேர்களைத் தேர்ந்தெடுத்து, யார் யார் முதன்மையாக ஃபர்ஸ்ட் ரேங்கில் வருகிறார்களோ, அவர்களைத் தேர்ந்தெடுத்து, ராவ் கமிட்டிக்கு அனுப்பி, அங்கே அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆக்கக் கூடிய அளவுக்கு சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த ஏற்பாட்டினை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சமரசம் அவர்கள் பேசுகின்றபோது இந்த ஆண்டிலே இருந்து அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருக்கின்றது என்று சொன்னார் கள். அவரது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வுக்கான பயிற்சி நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த பயிற்சி நிறுவனங்களிலே இருந்து 1975–76 ஆம் ஆண்டுகளிலே ஒவ்வொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக் கிறார்கள் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர, இப்போது இல்லை என்பதைத்......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): அரசாங் கத்தினிடத்திலே கோரிக்கை வைக்கிறார். எனவே நீங்கள் ஏன் அவருக்குப் பதில் சொல்ல வேண்டும்?

திரு. கு. பா. பழனியப்பன்: மாற்றுத் தலைவர் அவர்களே, தவறான தகவல் கொடுக்கக் கூடாது. புத்தகத்தில் கொடுக்கப் பட்டிருப்பதைச் சொல்கிறேன். அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருப்பதைத் தவறு என்று சொல்கிறாரா?

டாக்டர் கே. சமரசம்: நான் இன்றைய தினம் அரசு எடுத்திருக் கின்ற நடவடிக்கையைச் சொல்கிறேன்.

'10 top ranking first class candidates belonging to backward class would be deputed to Dr. Rau's I. A. S. Study circle New Delhi, in order to enable them to compete in the Union Public Service Commission Examination in I. A. S. and I. P. S. conducted by the Union Public Service Commission for three years.

என்று நாம் கொடுத்திருக்கிறோம். இப்போது கொடுத்திருக்கின்ற ஆர்டரை நான் சொல்கிறேன். முயற்சி எடுத்திருப்பதை அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த பேக்வர்ட் என்ற நிலையில் உள்ளவர்கள் ஒருவர் அல்லது இரண்டு பேர் மட்டுமே போய்க் கொண்டிருந்தார்கள். அங்கே 10 அல்லது 20 பேரைக் கொண்டு வர முடியவில்லையே என்பதை ஆராய்ந்து பார்த்து அப்படிப்பட்ட சூழ்நிலையில் சரியானபடி தேர்ந்தெடுக்கின்ற சூழ்நிலையில் கண்டிப்பாக இப்படிச் செய்தாக வேண்டும் என்று சட்டத்தை உருவாக்கித், திட்டத்தை உருவாக்கித் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். இதனால் இந்தியத் துணைக் கண்டத்திலே மேலும் பெருமை தரத்தக்க வகையில் உயர்வதற்குரிய சாத்தியக் கூறுகளை உருவாக்கி இருக்கிறோம் என்பதை அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்படி எல்லாம் உயர்வு ஏற்பட்டதற்குக் காரணம் ப்ளஸ் 2 என்ற கல்வியினை நாம் கொண்டு வந்ததுதான். கிராம வாழ்க்கையைக் கொண்டு வந்தோம். தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே பொறியியல் கல்லூரியில் சேர்பவர்கள் 3 சதவீதம், 4 சதவீதம் என்ற நிலைமை தான் 1974, 1975, 1976 ஆகிய ஆண்டுகளில் இருந்தது. 1982 ஆம் ஆண்டிலே பார்க்கிறபோது 19 சதவீதத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள். காரணம் நாம் எடுத்துக் கொண்ட கல்வியினால் ஏற்பட்ட முன்னேற்றம்தான். கிராம வாழ்க்கையில் ப்ளஸ் 2 படிப்பினைக் கொடுத்ததன் அடிப்படையில் மார்க்குகளை அவர்கள் பார்டர் என்ற அளவிலே கூட இல்லை. 65 சதவீதத்திற்கும் மேலாக தாழ்ந்தப்பட்ட ஷெட்யூல்ட் காஸ்ட் வகுப்பினைச் சேர்ந்தவர்கள் வாங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டிலே சாப்பிட்டுக் கொண்டே கல்வி கற்கின்ற புது முறையினை, அப்படிப்பட்ட அவசியமான முறையை ஏற்படுத்துவதில் இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணத்தால் இந்த அளவுக்கு மேம்பாடு பெற்றிருக்கிறோம் என்பதை நண்பர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ் நாடு என்ன நிலைமையில் இருக்கின்றது என்பது ஹிண்டு பேப்பரிலேயே வந்திருக்கின்றது. அந்தச் செய்தியினைப் படித்தால் பொருத்தமாக இருக்கும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு தான் "Commission finds "s'ronger reaction" to res rvat ons in Northern Sta es." என்ற தலைப்பிலே இன்றையதினம் வந்திருக்கின்ற செய்தியினைப் படித்தால் நன்றாக அவர்களுக்குப் புரியும் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்று வட மாநிலங்களிலே இருப்பவர்கள் எல்லாம் ஃபார்வர்ட்தான். அவர்கள் தான் மிக அதிகமாக இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.
In Bihar and U,P., the forward caste youth depended heavily on Government Jobs. Therefore driven to desparation they have reacted violently to Job reservations, says the report. என்று வருகின்றது. தமிழ்நாட்டிலே இன்றையதினம் என்ன நிலைமை என்பதை அவர்கள் சொல்கிறார்கள்.





'Similarly in he south clashes betw en Scheduled Castes and he backward p esan castes were rather mild.' In the North, these cleavages were much sharper often resulting in acts of violence. " This it says 'has further w akened the backward classes solidarity in the North" என்று சொல்கிறார்கள். தென் இந்தியாவிலேயே தமிழகத்திலும், கர்நாடகத்திலும் தான் இந்த பேக்வர்ட் க்ளாஸ் என்றிருப்பவர்களை முன்னேற்றக் கூடிய அளவுக்குத் தனி கவனம் செலுத்தி இருக்கிறோம். சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு ஓரளவுக்கு மனநிம்மதியைத் தரக்கூடிய அளவுக்கு பேக்வர்ட் க்ளாஸஸ் ஓரளவு முன்னேறி இருக்கின்றது என்றால் அது இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலும், கர்நாடகத்திலும் தான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஹிண்டு பேப்பர் செய்தி சொல்கின்றது.

(பிற்பகல் 12-40)

ஆனால் வட நாட்டில் எல்லாம் பார்வர்டு தான் இருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார்கள். டெல்லியினுடைய அதிகாரப் பட்டியலைக் குறிப்பிட்டு சொல்லி பார்வர்டு எத்தனை பேர், பேக்வர்டு எத்தனை பேர், ஷெடியூல்டு எத்தனை பேர், அங்கே டெல்லியில் பதவியில் இருக்கிறார்கள் என்பதை இங்கே பட்டியல் போட்டுக் காட்டினார்கள். அந்தப் பட்டியல் நீளக்கூடாது.. அது மாற வேண்டும். தமிழகத்திலே இருக்கக்கூடியவர்கள் பேக்வர்டாக இருக்கக்கூடியவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் நந்த இடத்திற்கு வரவேண்டும் என்பதற்குத்தான் இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு கொண்டு வந்தது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அது மாத்திரம் அல்ல. எந்த எந்த அளவுக்கு முடியுமோ, எதை எதை எப்படி எப்படி சேர்க்க முடியுமோ அந்த அளவுக்கு மேலும் மேலும் ஊக்கம் தரக்கூடிய வகையில் இன்றையதினம் இருக்கிறது. இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் 9-வது பக்கத்தில் பார்த்தால் புதிய விடுதிகளைத் திறப்பது பிற்பட்டவர்களுக்கு 10, அதில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு 3, மதுரை மாவட்டம் கள்ளர் சீரமைப்பு, மேல்நிலைப் பள்ளிக்கூடத்திற்கு அந்த அறிவியல் கூடங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குவது, கழிவறைகள் அமைப்பது, இதற்காக இன்றைக்கு இங்கே ஒதுக்கீடு. மேல்நிலை வகுப்பில் படிக்கும் மாணவ மாணவியர்களில் வருகின்ற தேர்வில் முதன்மை மதிப்பீடுகள் பெற்றவர்களுக்கும், அந்த குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் ஒரு ஆயிரம் ரூபாய் அலவன்ஸ் என்று பரிசு கொடுக்கக்கூடிய திட்டம். அது மட்டும் அல்லாமல் இப்படி வீட்டு மனை கொடுக்கும் காரியங்களாக இருந்தாலும் சரி, தொழிலாக

(டாக்டர் கே. சமரசம்) (1983 ஏப்ரல் 11

இருந்தாலும் சரி, வட ஆற்காடு மாவட்டம் அரும்பரித்தி கிராமத்தில் வசிக்கும் 76 நரிக்குறவர்கள் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தருவது இப்படி பல்வேறு வகையில் எந்த எந்த வகையில் வீக்கர் செக்ஷன் என்பதை எடுத்துப் பார்த்து, எண்ணிப்பார்த்து, ஆராய்ந்து பார்த்து அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் நாம் செய்கிறோம். இவை எல்லாம் இந்த நாட்டில் 'இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி' என்று சொன்ன ஒளவையின் கொள்கையை நிலைநாட்டக்கூடிய மாண்பாக இவர்களைத் தயார் செய்தால் ஒழிய வேறு வழி இல்லை. இந்த பேக்வார்டு கிளாசில் இருக்கக்கூடியவர்கள் பொருளாதாரத் துறையில் [illegible] வளர்ச்சி பெறும் என்று [illegible] தலைமையில் இன்று பிற்பட்டவர்கள் [illegible] செய்து இருக்கிறார். [illegible] 100 ரூபாய் [illegible] அது 10 இலட்சம் [illegible] அளவுக்கு [illegible] முதலீட்டில் செய்யக்கூடிய [illegible] வாய்ப்பினை [illegible] கற்றுக்கொள், [illegible] என்று சொல்லியிருக்கிறார்கள். [illegible] தொழில் இருந்தால், திறமை இருந்தால் [illegible] வைத்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேற [illegible] அடிப்படையில்தான் இவைகளை எல்லாம் [illegible] எ[illegible] சொல்லி இப்படிப்பட்ட [illegible] வரவேற்று அமைகிறேன், நன்றி வணக்கம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் [illegible], பிற்பட்ட நல இலாக்கா சம்பந்தமாக உணவோடு [illegible] இருந்ததை ஏற்கனவே நடைபெற்ற விவாதத்திலிருந்து [illegible] நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் இதற்கு என்று தனியாக ஒரு தினத்தை ஒதுக்கி உறுப்பினர்களுடைய கருத்தைக் கேட்பதற்கு ஏற்பாடு செய்ததற்கு என்னுடைய பாராட்டுதலை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பிற்பட்டவர்கள், மிகவும் பிற்பட்டவர்கள் இவர்களுடைய வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டும் என்பதற்கான ஆலோசனைகள் பற்றி இதுவரையில் பல உறுப்பினர்கள் பேசினார்கள். பிற்பட்டவர்கள் என்றால்யார் பிற்பட்டவர்கள்? வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட சமயத்தில் எவ்வளவு மக்கள் பிற்பட்டவர்களாக இருந்தார்கள்? சுதந்திரம் வந்த பிறகு எவ்வளவு மக்கள் பிற்பட்டவர்களாக ஆகியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் இந்த சுதந்திரத்தினால் [illegible] இல்லை என்பது போல் தெரிகிறது. ஏன் என்றால் வெள்ளைக்காரன் இருந்த சமயத்தில் ஒரு குறிப்பிட்ட [illegible] வகுப்பினர்கள் மிகவும் பிற்பட்டவர்கள் என்று பாகுபாடு வைத்து இருந்தார். சுதந்திரம் வந்த பிறகு இந்தப் பட்டியல் அனுமார் வால் நீளுவது போல் நீண்டுகொண்டே போகிறது. என்ன காரணம். இதில் இருக்கக்கூடிய மிக முக்கியமான நோக்கம் எல்லாம் வாக்குகள், தேர்தல்கள் இவைகளை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு



1983 ஏப்ரல் 11) (திரு வி. கிருஷ்ணமூர்த்தி)

ஜாதியினரும் நாங்கள் பிற்பட்டவர்கள், எங்களுக்குச் சலுகைகள் வேண்டும் என்ற காரணத்தினால் போராட்டத்தை எழுப்பவும் சரி, அவர்களைச் சேர்த்துக் கொண்டால் இத்தனை லட்சம் வாக்குகள் நமக்குக் கிடைக்குமே என்று தமிழ்நாட்டை ஆண்டு வந்த எல்லாக்கட்சிகளும், நான் இன்ன கட்சி என்று சொல்ல வில்லை, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, அதற்குப்பிறகு நாங்கள் வந்த சமயத்திலும் சரி, இன்றையதினம் இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வாக இருந்தாலும் சரி இந்த வாக்குகளை அதிகமாகப் பெறவேண்டும் என்ற நோக்கம் தான் தலையாயது என்று ஒவ்வொரு வகுப்பினரையும் திருப்திப் படுத்த வேண்டும், அதனால் ஆட்சியில் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை காரணமாகத்தான் இன்றையதினம் பிற்பட்டவர்கள் பட்டியலில் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போய்க்கொண்டிருக்கிறது.

சுதந்திரம் வந்து பல ஆயிரக்கணக்கான, பல கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்ததற்குப் பிறகு மக்கள் முன்னேற வேண்டும், பிற்பட்ட மக்களாக இருப்பவர்கள் அந்தப் பட்டியலிலிருந்து விடுபட வேண்டும். அப்படி விடுபட்டார்கள். என்றால் உள்ளபடியே முன்னேறுவதற்கு அறிகுறி. ஆனால் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பார்த்தால் ஏற்கெனவே எத்தனை சாதிகள் இருந்தன என்று பார்த்துவிட்டு 1947 ஆம் ஆண்டிற்கு முன்னால் எத்தனை சாதிகள் இருந்தன, 1951 இல் எத்தனை சாதிகள் இருந்தன, 1957 இல் எத்தனை சாதிகள் இருந்தன, 1962 இல் எத்தனை சாதிகள் இருந்தன, 1967 இல் எத்தனை சாதிகள் இருந்தன, 1971 -க்குப் பிறகு எத்தனை சாதிகள் சேர்ந்தார்கள் என்று பார்த்தால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே எல்லா மக்களும் பிற்பட்டவர்கள் என்ற போர்வையில் வந்திருக்கிறார்கள். ஷெட்யூல்ட் கேஸ்ட்ஸ், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் நீங்கலாக அத்தனை பேர்களும் பிற்பட்ட மக்கள் என்று சொல்லிக் கொள்வதிலே அந்தச் சலுகைகள் கிடைக்கும் என்ற காரணத்தினால் வந்து இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள், பொருளாதார ரீதியில் [illegible] வேண்டும், பொருளாதார ரீதியிலே கொடுத்தால்தான் சீராக அமையும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அது அவரவர்கள் கட்சியின் கருத்தாக, சொந்தக் கருத்தாக இருப்பதில் தவறு இல்லை. இதற்கு ஒரு சரித்திர பாரம்பரியமே இருக்கிறது. எப்படிப் பிற்பட்டவர்களுக்கு இருந்த உரிமைகள் பாதிக்கப்பட்டது என்பதை யோசித்துப் பார்த்தால் நம்முடைய நாவலர் அவர்கள் ஆரம்பகாலத்திலிருந்தே இந்த இயக்கத்திலே இருந்தவர்கள், அவர்களுக்கு என்னைவிட நன்றாகத் தெரியும். ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்த திரு. முத்தையா முதலியார் அமைச்சராக இருந்தபோது கம்யூனல் ஜீ.ஓ. என்ற உத்திரவைப் பிறப்பித்தவர். அவர்தான் பாதர் ஆப் தி கம்யூனல் ஜீ.ஓ. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தினுடைய வேண்டுகோளை அடிப்படையாக வைத்து பிற்பட்டவர்களுக்குப்

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1983 ஏப்ரல் 11

பாதுகாப்பு கொடுக்க வேண்டும், அவர்களுக்கு உத்தியோகத் துறையிலே, கல்வித் துறையிலே பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற முறையிலே ஏற்படுத்தப்பட்டதுதான் அந்த ஜி.ஓ. ஆகும். அது வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டவரை யில் நடைமுறையில் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய அரசியல் சட்டத்தை யார் உருவாக்கினார்களோ அவர்களே, இந்தஜி.ஓ.-வை எதிர்த்து 1956 இல் என்று கருதுகிறேன், சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்காடினார்கள். அந்த ஜி.ஓ. ஆர்ட்டிக்கிள் 14-க்கு விரோதமானது. ஆகவே, ரத்து செய்ய வேண்டுமென்று அரசியல் சட்டத்திற்கு அல்லாடி கிருஷ்ணசாமி ஐய்யர் போன்றவர்கள் எல்லாம் எப்படித் தங்களுடைய திறமையை எல்லாம் அளித்து அந்தச் சட்டத்தை உருவாக்கினார் களோ அவர்களே முன்னின்று வாதாடி இந்த ஜி.ஓ.வே தமிழ் நாட்டில் இருக்கக்கூடாது. என்சினியரிங் கல்லூரிகளிலே, மருத்துவக் கல்லூரிகளிலே இடம் இந்த கம்யூனல் ஜி.ஓ.அடிப்படை யிலே கொடுப்பது தவறு என்று 1950 இல் வாதாடி உயர் நீதி மன்றம் அந்த ஜி.ஓ.-வை ரத்து செய்துவிட்டது. அதற்குப் பிறகு பச்சையப்பன் கல்லூரியிலே அப்போதுதான் மாண்புமிகு திரு. கிருஷ்ணசாமி போன்றவர்கள் எல்லாம் அந்தக் கல்லூரி யிலே நுழைந்தார்கள் என்று கருதுகிறேன், நாவலருடைய மைத்துனர் ஸ்டூடன்ஸ் சேர்மனாக இருந்த காலம் சென்ற திரு. சுப்பையா அவர்கள், திண்டிவனம் இராமமூர்த்தி போன்றவர்கள் அன்றைய தினம் நாங்கள் எல்லாம் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தோம். எல்லா மாணவர்களும் ஒன்று சேர்ந்து முதன்முதலிலே அந்த ஜி.ஓ. இருக்க வேண்டும் என்று போராடி முதல் குரலை எழுப்பியவர்கள் பச்சையப்பன் கல்லூரியிலே இருந்த மாணவர்கள் தான். அன்றைய தினம் போராட்டம், தனியாக வந்து மாலை 3 மணி இருக்கும் என்று கருதுகிறேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுடைய கூட்டத்திலே 1950 இல் கடற்கரையில் பேசினார்கள், குருசாமி அவர்கள் அந்தக் கூட்டத்திலே பேசினார்கள் அமைச்சர் முத்தையா முதலியார் எப்படி ஜி.ஓ.-வைப் போட்டார்களோ அவர்களுடைய தலைமையிலேயே சென்னை கடற்கரையிலே மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரையில் அந்தக் கூட்டம் நடைபெற்று அந்த ஜி.ஓ. இருக்க வேண்டுமென்று மாணவர்கள் முதன் முதலிலே தீர்மானம் போட்டவர்களிலே பங்குகொண்ட வன் என்ற முறையிலே எனக்கு அதில் இருக்கக்கூடிய பற்றைத் நான் சொல்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதற்குப் பிறகுதான் தமிழகத்திலே போராட்டம் ஏற்பட்டு, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் எல்லாம் பக்க பலமாக இருந்து, பெரியார் அவர்களின் துணை கொண்டு, அண்ணா அவர்களும் மற்றவர்களும் வலிவாக வற்புறுத்தியதற்குப் பிறகுதான், பண்டித நேரு அவர்கள் இப்படிப்பட்ட ஜி ஓ.



1983 ஏப்ரல் 11] (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

இருப்பது அவசியம் என்று கருதியதற்குப் பிறகுதான் 1951-ல் அரசியல் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தத்தின் மூலமாகத்தான் அவர்கள் ஆர்ட்டிக்கிள் 15-ல் ஷரத்திலே நான்காவது உப பிரிவைச்செலுத்தினார்கள். பாராளுமன்றத்திலே அரசியல் சட்டமாகவே கொண்டு வந்தார்கள். அதிலே சொல்லப்படுகிற மிக முக்கியமான வாசகம், Nothing in this Article shall prevent the State from making any special provision for the advancement of anysocially and educationally backward classes. அன்றைய தினம் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடியமக்கள் அத்தனைபேரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பண்டித நேரு அவர்கள் நம்முடைய நலனைப் பாதுகாப்பதற்காக, இந்த கம்யூனல் ஜி.ஓ. என்ற பெயரில் இல்லாமல், இந்தச் சமுதாயத்தில் பின்தங்கி இருக் கக்கூடிய மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்திலே அந்தப் பிரிவைக் கொண்டு வந்தார்கள். இன்றைய தினம் பேசுகிறார்கள், பொருளாதார ரீதியிலே கொண்டு வந்தால் சிறந்தது என்று சொல்வது போற்றத் தகுந்ததுதான். அதை நான் குறை சொல்லவில்லை. ஆனால் இந்தியாவில் ஜாதிகள் இருக்கிற வரையில், மதத்தால், பிரிவுகள் இருக்கிற வரையில், தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள், பிற் பட்டவர்கள் என்கிற நிலை இருக்கிற வரையில் இந்த அரசியல் சட்டத்திலே கூறப்பட்ட 15-வது ஷரத்திலே 4-வது பிரிவு மாற்றப் படாமல் இருக்க வேண்டும் என்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் மிகுந்த பற்றினை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே சென்ற ஆண்டு நான் பேசினேன். அப்போது ஒன்றை நான் சொன்னேன். பிற் பட்டவர்கள் என்று ஏறக்குறைய 150,160 ஜாதிகள் இருக்கின்றன தமிழ் நாட்டிலே இருக்கிற அந்த பட்டியலிலே இருக்கக்கூடிய வர்கள். அதிலே ஒரு பிரிவு மிகவும் பிற்பட்டவர்கள் என்று இருக்கிறார்கள். ஏறக்குறைய 39 ஜாதிகள் இருக்கின்றன. இந்த மிகவும் பிற்பட்டவர்களுக்கு நீங்கள் என்னதான் பிற்பட்டவர் களுக்கு ஒதுக்குவதை அதிகப்படுத்தினாலும், அது போய்ச் சேர்கிறபோது அந்த மிகவும் பிற்பட்டவர்களுக்குச் சேராமல் அவர்கள் மிகவும் பிற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர் களுக்கு இந்த அனுகூலங்கள் போய்ச் சேரவில்லை. பிற்பட்ட வர்களில் மிகவும் முற்போக்கு அடைந்துள்ளவர்கள் அந்தச் சலுகைகளை எல்லாம் பயன்படுத்துகிற காரணத்தால் மிகவும் பிற்பட்டவர்களுக்கு அவைகள் சேரவில்லை என்று ஆணித்தர மாக எடுத்து வைத்து வாதாடினோம். இன்றைய தினம் என்ன நிலை இருக்கிறது? யார் மிகவும் பிற்பட்டவர்களுடைய பட்டியலிலே இருக்கிறார்கள்? சலவைத் தொழிலாளி, கிராமங் களில் துணிகளை வெளுக்கக்கூடியவர்கள்; அதே போல சவரத் தொழிலாளி; கிராமங்களிலே இருக்கக்கூடிய முடிதிருத்து வோர்கள்; இவர்கள் எல்லாம் இன்றைய தினம் மிகவும் பிற்பட்ட வர்களுடைய பட்டியலிலே இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளில் எத்தனை பேர்கள் உத்தியோகத்திற்கு வருகிறார் கள்? எத்தனை பேர்கள் மேல்நிலைக்கு வருகிறார்கள்

என்று நீங்கள் பார்க்கவேண்டும். இன்றைய தினம் இருக்கக் கூடிய நிலை என்னவென்றால், 'சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளுக்கு மேலாகியும் கிராமங்களிலே இருக்கிற சலவைத் தொழிலாளர்கள், கிராமங்களிலே இருக்கிற முடிதிருத்துவோர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைத் தயவுசெய்து நாவலர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகரங்களிலே அந்த நிலைமை சீர்திருந்திவிட்டது. ஆனால் இன்னமும் கிராமங்களிலே அவர்கள் வீடு, வீடாகச் சென்று துணி எடுத்து வருகிறார்கள். நதிக் கரைக்கு எடுத்துச் செல்கிறார்கள், அங்கே வெளுக்கிறார்கள். மாலையிலே வந்து வீட்டிலே கொடுக்கிறார்கள். வருடத்திற்கு ஒன்று என்ன கொடுக்கிறாமோ அதை வாங்கிக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இந்த இரண்டு ஜாதிகளைச் சேர்ந்தவர்களின் வீட்டுப் பெண்மணிகள்தான் இரவு நேரங்களிலே பாத்திரத்தை எடுத்துக்கொண்டு—முடிதிருத்துவோர் வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் சரி, சலவைத் தொழிலாளி வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் சரி—ஒவ்வொரு வீடாகச் சென்று, அங்கே போய், அம்மா, சோறு போடம்மா என்று கேட்கக்கூடிய நிலை இன்றைய தினம் இருக்கிறதே, இதைவிடக் கேவலமான நிலை தமிழ் நாட்டில் அல்லது வேறு எங்கே இருக்க முடியும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். நம்முடைய கோவைத்தம்பி அவர்கள் இந்தியா முழுவதும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இவைகளை எல்லாம் ஒழிக்கவேண்டும். தமிழ் நாட்டிலே இருக்கிற அரசாங்கம், புரட்சித் தலைவர் என்று சொல்கிறீர்களே, அவர் தலைமையில் இருக்கிற அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நீங்களாவது இதைச் சீர்திருத்தக் கூடாதா என்பதைத் தான் கேட்க விரும்புகிறேன்.

ஏன் இந்த இழி நிலை இருக்கவேண்டும்? சலவைத் தொழிலாளர்களுடைய பெண்கள், சவரத் தொழிலாளர்களுடைய பெண்கள், கிராமங்களிலே பிச்சை எடுத்து, இரவு நேரத்திலே சாப்பிட வேண்டுமென்ற நிலை இன்னும் இருப்பது எவ்வளவு கேவலமான காரியம் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். அவர்கள் எத்தனை பேர்கள் இருக்கப்போகிறார்கள்? மொத்தமாகத் தமிழ் நாட்டிலே எடுத்துப் பார்த்தால், அவர்களுடைய கணக்கே 10,000, 20,000 அல்லது லட்சம் பேர்கள் இருக்கலாம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 20,000 ஒதுக்குங்களேன். அவர்கள் ஒரு லாண்டரிக் கடை வைத்துக் கொள்ளட்டும் அல்லது அந்தக் கிராமத்திலேயே ஒரு சலூனை வைத்துக் கொள்ளட்டும். நகரங்களிலே இருக்கக்கூடியவர்கள் நாகரீகமாக வாழ்கின்றார்கள். அவர்களுக்கு இந்த இழி நிலை கிடையாது. ஆனால், கிராமங்களிலே இருக்கிறவர்கள் இன்னும் இந்த இழி நிலையிலேதான் தள்ளப்படுகிறார்கள். அவர்களும் முன்னேறுவதற்கு ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு



தொழிலாளிக்கும் ரூ. 25,000 மானியமாகக் கொடுங்கள்; அவன் ஒரு கிராமத்திலே ஒரு சலூனை வைத்துக் கொள்ளட்டும், ஒரு கிராமத்திலே ஒரு சலவைக் கடை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யுங்கள். தேவையானவர்கள் அந்த சலூனிலே போய் தங்களுடைய வேலையை முடித்துக் கொள்ளட்டும். ஒரு லாண்டரியை ஏற்படுத்துங்கள், இனாமாக, அப்படிச் செய்தால் அந்தக் கிராமத்திலே உள்ள மக்கள் துணியைக் கொண்டு வந்து, லாண்டரியிலே போட்டுவிட்டு, 20 பைசா, 30 பைசா கட்டணம் செலுத்தினால், அந்தச் சலவைத் தொழிலாளியும் முன்னேற வழி பிறக்கும்; அவர்களைச் சீர்திருத்த வழி பிறக்கும்.

என்னுடைய அருமைச் சகோதரர் கோவைத்தம்பி சொன்னதைப் போல, இன்னமும் அந்த ஜாதிகளைச் சேர்ந்த பெண்கள் அம்மா சோறு போடு என்று இரவு 12 மணி வரையிலே ஒவ்வொரு வீட்டுக்கும் போய், பிச்சை எடுத்து, தன்னுடைய கணவனும் தானும் குழந்தைகளும் சாப்பிடக்கூடிய அவல நிலைதான் தமிழ் நாட்டிலே இருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். அவர்களுடைய மாநாட்டிலே முடிவு செய்து, கலெக்டர் அலுவலகத்துக்கு முன்னாலே அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன கருத்தை நான் சொன்னதாகச் சொல்கிறார். அவர் தமிழ்நாட்டில், இப்படி இரவில் 'சாப்பாடு போடு' என்று கூக்குரல் கிளம்புகிறது என்று சொல்கிறார். நான் இந்தியா முழுவதும் இருக்கிற நிலை என்று சொன்னேன். 35 ஆண்டுக் காலம் சும்மா விட்டுவிட்டு இன்று பொருளாதாரத்தின் அந்தப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் ஒரு பெரிய மாற்றம் செய்யவேண்டுமென்று சொல்லும்போது, அதையும் எதிர்த்து விட்டு, இப்படிப் பேசுவது நியாயம்தானா?

திரு. எஸ். இளையபெருமாள்: இந்தியா பூராவும் சாப்பாடு இருக்கிறது. தொழில் செய்துவிட்டு, உணவுக்காகப் பிச்சை எடுப்பது வட நாட்டிலே கிடையாது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இதைவிடக் கொடுமையாக பீகாரில் இருக்கிறது, உத்தரப் பிரதேசத்திலே இருக்கிறது. நான் வேண்டுமானாலும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இழிநிலையிலே இருப்பதைத் தடுத்தாக வேண்டும்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்ட சமுதாயத்திலேயே இப்படி இந்த வேலையைச் செய்கிறவர்கள் இழிவாக நடத்தப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள்

அவர்களுக்குள்ளேயே பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று பிரித்துக் கொண்டு அவர்களுக்குள்ளேயே இன வெறியைக் காட்டி அந்த மக்களை இப்படிக் கெடுப்பது நியாயம்தானா? ஒரு மாற்றுக் கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு சொல்வார்களா என அறிய விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: The H n. Member's assertion is inreleva nt to my speech here. நான் ஏற்கனவே சொன்னபடி சென்னை போன்ற பெரு நகரங்களிலே இந்த நிலை கிடையாது. ஆனால், கிராமங்களிலே இன்னும் இந்த இழி நிலை இருக்கிறது. ஆகையினால், அந்த இழிநிலை நீக்கப்பட வேண்டு மானால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 25,000 மானியமாகக் கொடுத்து, ஒவ்வொரு கிராமத்திலேயும் அந்தச் சலவை வசதிக் குண்டான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, வசதிகள் அளிக் கப்படவேண்டும். அந்தத் தொழில்களைச் செய்ய இலவசமாகவே வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அது போன்ற சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும்.

(பிற்பகல் 1–00)

இன்னும் ஒன்று சொல்கிறேன். மேலவையிலே அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லையென்று கேட்டிருக்கிறார்கள். மேலவையிலே நாமினேஷன் கொடுக்க முடியாது. மேலவையிலே இந்த இரண்டு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு ஏதாவது நாமினேஷன் கொடுக்கிறீர்களா என்றால், ராஜா சர் முத்தையா செட்டியார் போன்றவர்களுக்கு நாமினேஷன் தருகிறீர்கள். இந்தத் துறையிலே அவர்கள் இருப்பது ஒன்றும் தெரியவில்லையா? அவர்களில் யாராவது இரண்டு பேர்களுக்குத்தந்தால் அவர்கள் அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்குப் பாடுபடுவார்களே. ஏன் இந்த நிலைமைக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டில் நான் பேசுகின்ற சமயத்தில் மாண்புமிகு நாவலர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். பிற்பட்டவர்கள் என்ற போர்வையில், கிடைக்கக் கூடிய சலுகைகளையெல்லாம், மிகவும் பிற்பட்டவர்களுக்கு என்று கொடுக்கப்படுகின்ற சலுகைகளையெல்லாம் அவர்களுக்குக் கிடைக்க விடாமல் மேலே இருப்பவர்கள் எடுத்துக் கொண்டிருப்பதன் காரணமாக, நியாயமாகக் கிடைக்க வேண்டியவர்களுக்கு அந்தச் சலுகைகள் செல்லவில்லை. எனவே, கம்பார்ட்மெண்டல் ரிசர்வேஷனுக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டேன். சென்ற ஆண்டு நிதியமைச்சரவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில் அது குறித்தும் சொன்னார்கள். ஏற்கனவே 25 சதவீதமாக இருந்ததை கலைஞர் அவர்கள் பிற்பட்டவர்களுக்கு 31 சதவீதம் என்று உயர்த்தினார்கள். 31



சதவீதம் என்று இருந்ததை நம்முடைய முதலமைச்சரவர்கள் பதவியேற்ற பிறகு 50 சதவீதம் என்று உயர்த்தினார்கள். ஆனால் 25 சதவீதம் என்பது 31 சதவீதம் என்று மாறினாலும் சரி, 31 சதவீதம் என்பது 50 சதவீதம் என்று மாறினாலும் சரி, மிகவும் பிற்பட்டவர்கள் என்று நான் சொல்கிறேனே அவர்கள் இந்தச் சலுகைகளின் பலன்களை அனுபவிக்க முடியாமல்தான் இருக்கிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், குறிப்பிட்ட சில ஜாதிக்காரர்கள், சலவைத் தொழிலாளி, சவரத் தொழிலாளி போன்றவர்களை ஷெட்யூல் காஸ்டில் சேர்க்க வேண்டுமென்ற கருத்தை தமிழக அரசாங்கம் நீண்ட காலமாக ஏற்படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் அது மாதிரி செய்யாமல் தடை ஏற்படுவதற்கு என்ன காரணம்? அதற்குக் குறுக்கே யார் நிற்கிறார்கள்? அவர்களை ஏன் ஷெட்யூல் காஸ்டில் சேர்ந்துவிடக் கூடாது என்பதற்கான பதிலையும் நமக்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

ஆனால் சென்ற ஆண்டு நம்முடைய நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள். 50 சதவீதத்தில் பிற்பட்டவர்களுக்கு இவ்வளவு என்றும், மிகவும் பிற்பட்டவர்களுக்கு இவ்வளவு என்றும், மக்கள் தொகை அடிப்படையில் கொடுப்பது சம்பந்தமாக ஆராயும்படி துறையினரை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படிக் கேட்டார்களா? என்ன முடிவு செய்யப்பட்டது? சட்டமன்றத்தில் சொன்னார்கள். ஆனால் திடீரென்று இப்பொழுது ஒரு கமிஷனை ஏற்படுத்தி விட்டார்கள். அம்பாசங்கர் தலைமையில் இயங்கக் கூடிய அந்தக் கமிஷனை ஏற்படுத்தி விட்டார்கள். ஏற்கனவே சட்டநாதன் குழு அளித்த பரிந்துரைகள் என்ன ஆனது? அந்தப் பரிந்துரைகள் ஏன் அமுல்படுத்தப்படவில்லை? பிறகு 31-ஐ 50-ஆக மாற்றினாலும், கம்பார்ட்மெண்டல் ரிசர்வேஷனை ஏன் செய்யவில்லை? செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிகாரம் போதவில்லையோ அல்லது முதலமைச்சர் ஒத்துக்கொள்ளவில்லையோ தெரியவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாக மேலவையில், என்ன காரணத்தினாலோ இந்தச் சட்டமன்றத்திலே சொன்ன கருத்தை குறைத்து டைலூட் செய்யும் விதத்தில், மேலவையில் விளக்கம் சொல்லுகின்ற நேரத்தில் கம்பார்ட்மென்டல் ரிசர்வேஷனைப் பற்றி மீண்டும் புனர்பரிசீலனை செய்யும்படியான நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்று கருதுகிறேன். ஒருவேளை அவரே முதலமைச்சராக இருந்து சொல்லியிருந்தால் அவர்கள் சொன்னது அன்றைக்கே உத்தரவாக வந்திருக்கும். ஆனால் முதலமைச்சர் வேறாக இருப்பதால் இவரால் செயல்படுத்த முடியவில்லையோ என்னவோ எனக்குத் தெரியவில்லை.

திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழக்கறிஞர். உச்ச நீதிமன்றத்தில் இம்மாதிரி பிற்பட்ட வகுப்பினருக்கு கம்பார்ட்மெண்டல் ரிசர்வேஷன் கூடாது என்று சொல்லியிருப்பதை அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய நாவலர் அவர்கள் இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாக, ஒரு வாரத்திற்குள்ளாக மேலவையிலே சொன்னார்கள். கிளாரிபிகேஷன் கொடுக்கின்ற நேரத்தில் இந்த மன்றத்தில் இருந்த எங்களுக்கு ஆறுதலாக இருந்தது. இந்து பத்திரிக்கையில்கூட பெரிதாகப் போட்டார்கள். ஒரு அஷ்யூரன்சை நம்முடைய அமைச்சரவர்கள் கொடுத்து விட்டார்கள், மிகவும் பிற்பட்டவர்களுக்கு இது வரப்பிரசாதம் என்றெல்லாம் பெரிதாகச் சொன்னார்கள். ஆனால் ஒரு வாரத் திற்குள்ளே அத்தனையிலிருந்தும் மேலவையிலே நழுவிச் செல்லும் நிலைமை ஏற்பட்டு விட்டது.

இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். மண்டல் கமிஷனைப் பற்றிச் சொல்லிவிட்டு பிறகு வரலாம் என்று நினைக் கிறேன். இத்தனை சதவீதம் என்ற அளவிற்கு வேலைகளும், மற்றவைகளும் கொடுக்க வேண்டுமென்று சில மாநிலங்களில் மற்ற உறுப்பினர்கள் சொன்னதைப்போல, பேக்வார்ட் கிளாசுக்கு பீகார், குஜராத் போன்ற இடங்களில் கிடையாது.

ஆனால் தென்னாட்டிலிருந்துதான் எதுவும் முதன் முதலாகக் கிளம்பும். பிறகு அது வட மாநிலங்களுக்கு கொஞ் சம் கொஞ்சமாகப் போகும். இங்கே பகுத்தறிவு வாதத்தினால் ஏற்பட்ட நிலைமை இது. சுதந்திரத்திற்குக் கூட அடிப்படையே தமிழகத்திலேயிருந்து, தெற்கேயிருந்து கிளம்பி, சுதந்திரம் வேண்டுமென்ற குரலே தென் நாட்டிலேயிருந்துதான் வட நாட்டுக்குச் சென்றது. அதைப்போல இந்தக் கோரிக்கையும் ஆரம்பகாலத்திலே தமிழகத்திலே இருந்து, பிறகுதான் குஜராத். பீகார் இன்னும் மற்ற மாநிலங்களிலே இந்தக் குரல் கேட்க ஆரம்பித்திருக்கிறது.

மண்டல் கமிஷன் ரிப்போர்ட் பற்றி பல மாநிலங்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டின் நிலைமை என்ன? மண்டல் கமிஷன் ரிப்போர்ட் பற்றி தமிழ்நாடு அரசாங்கம் எடுத்த முடிவு என்ன? மந்திரி சபை எடுத்த முடிவு என்ன? அது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எப்படிப் பட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார்கள், என்பதை இந்த அவையிலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் ஹெக்டே அவர்களுடைய தலைமையில் இயங் கக் கூடிய அந்த மந்திரி சபையில் அவர்கள் கவர்னர் உரையிலே, அதனுடைய பாலிசி நோட்டிலே சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை அமல்படுத்துவோம்



என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏன் இந்த கவர்னர் உரையிலே சொல்லவில்லை? பாலிசி நோட் டிலே ஏன் சொல்லவில்லை? மாண்புமிகு எஸ். டி. எஸ். அவர்கள் மதுரையிலே பத்திரிக்கையாளர்களிடத்திலே பேசுகின்ற சமயத் திலே, மண்டல் குழு பரிந்துரைகளை நாங்கள் அமுல்படுத்து வோம் என்று பேசினார்களே தவிர இதுவரையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏன் கருத்துத் தெரிவிக்கவில்லை? மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை ஏன் தமிழ்நாடு அரசாங்கம் ஏற்கும், அமல்படுத்தும் என்று முதலமைச்சரவர்கள் சொல்லவில்லை? ஆகையால் தான் நீங்கள் இந்த விஷயத்திலே நழுவிக் கொண்டிருக்கிறீர்கள்? எப்படி இதிலே தப்பித்துக் கொள்ளலாம், சிலரைக் காப்பாற்றுவதற்கு சிலருடைய சிபாரி சுகள் வேண்டுமென்பதற்காக இதிலே எப்படி நழுவலாம் என்று எடுத்துக் கொண்டிருக்கிற முறையிலே இந்த அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறதோ என்று என் போன்றவர்கள் எண்ணாமல் இருக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் இருக்க, சுப்ரீம் கோர்ட்டிலே ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு முன்பாகத் தான் தீர்ப்பை வழங்கினார்கள். 31லிருந்து 50 சதவீதமாக உயர்த்தியது சரியல்ல என்று வழக்கு போட்டிருப்பதன் காரண மாக தமிழக அரசின் சார்பிலே அங்கு வாதாடப்பட்டு, இப்போது அது நமக்கு சாதகமாக, இந்த அரசாங்கம் செய்த முடிவு சரி தான் என்று சொல்லக்கூடியவிதத்திலே அவர்கள் ஒத்துக்கொண் டிருந்தாலும், ஏற்புடையதாக இருந்தாலும், தமிழ்நாடு சார்பிலே வாதாடக்கூடிய வழக்கறிஞர்கள் இது சம்பந்தமாக நாங்கள் இதை இன்னென்ன வகுப்புகள் என்று அடிக்கடி புனர்பரிசீலனை செய் கிறோம், மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப நாங்கள் பரிசீலனை செய்கிறோம் என்று அண்டர்டேகிங் கொடுத்ததை சுப்ரீம் கோர்ட்டிலுள்ள நீதிபதிகள் — நான் அன்றைய தினம் டில்லியில் இருந்தேன். (குறுக்கீடு) ஆகையால் அது என்ன தீர்ப்பு என்று அன்றையதினமே எனக்குத் தெரியும். அந்த அண்ட டேக்கிங்களை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இன்னும் ஒரு 2, 3 ஆண்டுகளுக்குள்ளாகவே நாங்கள் புனர்பரிசீலனை செய்கின்றோம் என்று சொன்னதன் அடிப்படையிலேதான் அன்றைய தினம் அம்பாசங்கர் தலைமையிலே குழுவினை நியமித்திருக் கிறார்கள். அம்பாசங்கர் தலைமையிலே நியமித்திருக்கக்கூடிய குழுவைப்பற்றி நான் அதிகமாக சொல்லவிரும்பவில்லை. காரணம் அவர் ஏற்கனவே ஒரு அதிகாரி. அதிகாரியாக இருந்து ரிடையர் ஆனவர். நம்முடைய ** என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): * * என்று குறிப்பிட்டுச் சொன்னதை நீக்குகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சரி இருக்கட்டும். இன்றைய தினம் ஒரு குழுவை ஏற்படுத்தியிருக்கிறார்களே, தமிழ்நாடு அர சாங்கம் எப்படி ஏற்படுத்தி யிருக்கிறார்கள்? எத்தனை பேர்கள்?

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அதிலே உறுப்பினர்கள் 18 பேர்கள். அம்பாசங்கர் மற்றும்
18 உறுப்பினர்கள் என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட எலிமெண்
டரி ஸ்கூல் மாதிரி. இந்த 18 பேர்கள் எதற்காக? அது ஒரு
காண்ட்ரவர்ஷியல் இஷ்யூ. நாவலர் அவர்களிடத்திலே கூட
சொன்னேன். யார் பாதிக்கப்படுகிறார்களோ யாருடைய நலன்
புறக்கணிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறோமோ அவர்கள்எல்லாம்
இந்தக் கமிட்டியிலே இருக்கக் கூடாது. இன்னும் சொல்லப்
போனால், தமிழகத்திற்குஅப்பால்இருக்கக்கூடியவர்கள் யாராவது
வந்து பார்த்தார்களேயானால், நியாயமாக எதற்கு இந்த கமிட்டி
மிட்டிக்கு பேக்வார்டு, மோஸ்ட் பேக்வார்டு, எதற்கு இந்த
உதவி வேண்டுமென்று சொல்லலாம். என்னை கமிட்டியிலே
போட்டால், நான் என்ன பண்ணுவேன்? எனக்கு வேண்டியவர்
களுக்கு அதை எப்படி எப்படி சாதகமாக எழுதமுடியுமோ அப்
படித்தான் செய்ய முடியும். ஆகையால்நான் இந்தக் குழுவை
நியமிப்பதை காலங்கடத்துவதற்கு, இந்த நடைமுறை செய்வதற்கு
இந்த அடிப்படை உரிமைகளை, சமூகத்திற்கு தேவையான சலுகை
களை இப்போதைக்கல்ல, இன்னும் 10 ஆண்டுகளுக்கு அது
கிடைக்காமல் இருப்பதற்கு என்ன வாய்ப்புகள் இருக்குமோ..
இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஏற்பாடு செய்
திருக்கிறார்கள் என நான் கருதுகிறேன். இல்லையென்றால்
ஒரு கமிட்டி போட்டால், 2, 3 அல்லது 5 பேர் இருப்பார்கள்.
இதற்கு யார் அந்த ஜாதியைச் சார்ந்தவர்கள் இல்லை
என்று வால் போஸ்டர் ஒட்டுகிறார்களோ, அந்த அடிப்படை
யிலே ஊர்வலம் வருகிறார்களோ, அடுத்த நாளைக்கே அந்த
ஜி. ஓ. வைப் போட்டு, இப்படி சேர்த்துத்தான் 18 பேர்
வந்திருக்கிறது. இன்னும் சில பேரைச் சேர்த்தால், ஒரு நூறு
தில் 50 பேர் சேர்ந்தால், எலிமெண்டரி ஸ்கூலுக்குப் பதிலாக
ஹையர் எலிமெண்டரி ஸ்கூலாக அந்த ஸ்ட்ரெங்த்துக்கு வந்து
விடும். ஏற்கனவே சட்டநாதன் குழுவில் 3 பேர்கள் இருந்தார்
கள். அந்த மூன்று பேரில் ஒருமித்த கருத்து வரவில்லை.
ஒருவர் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். மற்ற இரண்டு பேர்
களும் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்கிறார்கள். ஆக
மூன்று பேர் இருக்கும்பொழுது ஒருமித்த கருத்து வரவில்லை.
அப்படியிருக்க, 37 பேர் வைத்து சீக்ரெட் பேலட் வைக்கப்
போகிறீர்களா? இல்லை, கை தூக்கி மெஜாரிட்டி, மைனா
ரிட்டி தீர்ப்பளிக்கப் போகிறீர்களா? என்னால் புரிந்துகொள்ள
முடியவில்லை. குழு என்ன சிபாரிசு செய்யப்போகிறது?
யாரை சிபாரிசு செய்ய முடியும்? ஏனென்றால் எல்லா ஜாதிக்
காரர்களும் அதிலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு விட்டார்
கள். அப்புறம் பிற்படுத்தப்பட்டவர் யார்? தமிழகத்தில்
இருக்கக் கூடிய, எஸ். சி. எஸ். டி., ஒருவருமே கிடையாது,
தவிர மீதமிருக்கிறவர்கள் அத்தனை பேர்களும் இருக்கி
றார்கள்.



(பிற்பகல் 1-10)

அப்படி இருக்கிற காரணத்தால் எந்தவிதத்திலே அவர்கள் நியாயம் செய்யப் போகிறார்கள்? நம்முடைய அமைச்சரவையிலே எந்த இஷ்யூவுக்கும் முடிவு செய்வது கிடையாது. என்னத்திற்கு காண்ட்ரவர்சியல் இஷ்யூவிலே எல்லாம் போயிட்டு அவர்களை எடுக்க வேண்டுமா, இவர்களை எடுக்க வேண்டுமா என்று இதிலே எல்லாம் நாம் போனால் பிறகு அவர்கள் எல்லாம் நாளைக்கு புல் டவுன் பண்ணிவிட்டால் என்ன செய்வது, அரசாங்கத்திற்கு ஒரு பாதகம் வந்துவிடுமே என்ற நல்ல எண்ணத்தினாலேதான் இந்த ஜாதி, அந்த ஜாதி என்று எதுவும் வேண்டாம். எப்படி முனிசிபாலிட்டிக்கு எலக்ஷன் இல்லையோ, பஞ்சாயத்துக்கு எலக்ஷன் இல்லையோ, கார்ப்பரேஷனுக்கு எலக்ஷன் இல்லையோ, அதேமாதிரி இதற்கும் ஒரு முடிவு வேண்டாம், இதை எடுத்து கிணற்றிலே போட்டுவிட்டால், அது அப்படியே கிடக்கட்டும் நம்முடைய ஆட்சி போகின்ற வரையிலும் என்ற ஒரு நல்ல எண்ணத்திலேதான் இன்றையதினம் இந்தக் கமிஷன் ஏற்பாடு செய்து இருக்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். ஏற்கனவே நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, இந்த பிற்பட்டோர் நலக்குழு முடிவு செய்து, அதை அரசாங்கம் பரிசீலனை செய்து அதற்கு ஒரு முடிவு ஏற்படுகின்ற வரையிலே இப்போது ஒரு மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ் என்று ஏன் அதற்கு கம்பார்ட்மெண்ட்டல் ரிசர்வேஷன் என்று அதற்கு ஒரு உத்தரவு தான் போட்டுப் பாருங்களேன். யாராகிலும் ஹைகோர்ட்டிலே போய் சாலஞ்சுப் பண்ணட்டும், சுப்ரீம் கோர்ட்டிலே சாலஞ்சுப் பண்ணட்டும். ஒரு உத்தரவை சும்மா வேண்டுமானாலும் ஒரு கண்துடைப்புக்காக இருந்தாலும் போட்டுப் பாருங்களேன். அதிலே வேண்டுமானால் பிரயோஜனம் கிடைக்கிறதா என்று பார்க்கலாமே? ஏன் நீங்கள் சட்டமன்றத்திலே உறுதிமொழி கொடுத்துவிட்டு பேரவையிலே போய் அதிலே பின்வாங்குகிறீர்கள்? என்று நான் கேட்டு, இது சம்பந்தமாக கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். பிற்பட்டோர் நலத்துறை மூலமாக ஆற்றிவருகின்ற பணிகளைப்பற்றியும் இனி ஆற்ற வேண்டிய சீரிய பணிகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். பிற்பட்டோர் நலத்துறையினுடைய வரலாறு, இன்னும் மற்றவைகளை எல்லாம்கூட இங்கே எடுத்து தெரிவித்திருக்கிறார்கள். யார் பிற்பட்டோர் என்று ஆராய்ச்சிகூட இங்கே நடைபெற்றது. யார் தாழ்த்தப்பட்டோர்,

யார்பிற்பட்டோர் என்று ஆராய்ச்சி முறைகள் பற்றிக்கூட இங்கே
எடுத்துச்சொன்னார்கள். அதுபற்றிய வரலாற்றுக் காரணங்கள்,
அதுபற்றிய சம்பிரதாயக் காரணங்கள், அதுபற்றிய சாஸ்திரக்
காரணங்கள், அதுபற்றிய ஜாதிமத, பழக்கவழக்கக் காரணங்கள்,
அதுபற்றிய பல்வேறு காரணங்களைப் பற்றி இப்போது நான்
ஆராய்ந்துகொண்டு இருக்க விரும்பவில்லை. ஆனால் தாழ்த்தப்
பட்டவர்கள் என்பதற்கான தன்மைகளைக் காண்கின்றபோது
இவர்கள் பிற்பட்டவர்களே தவிர, பிற்படுத்தப்பட்டவர்கள்
அல்ல என்ற புதிய வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் சௌரி
ராஜன் அவர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள்
பல்வேறு காரணங்களாலே பிற்படுத்தப்பட்டவர்கள்தான். நாம்
சொல்கின்றபோது பின்தங்கியவர்கள், பிற்பட்டோர், பிற்படுத்தப்
பட்டோர் என்று சொல்வதற்கு எளிதாக இருக்கின்ற வகையிலே
பிற்பட்டோர், பின்தங்கியோர் என்று சொல்கிறோமே தவிர,
உள்ளபடியே தாழ்த்தப்பட்டவர்கள் எப்படியோ, அப்படித்
தான் இவர்களும் பிற்படுத்தப்பட்டவர்கள். சமூகத்துறையிலே
பொருளாதாரத்துறையிலே, பின்தங்கியவர்கள் பிற்படுத்தப்பட்ட
காரணத்தாலே அவர்கள் கல்வித்துறையிலே பின்தங்கியவர்க.
என்பது வரலாற்றுக் குறிப்புகளாக வந்திருக்கின்ற தன்மைகளை
நாம் பார்க்கிறோம். இவைகளை எல்லாம் செய்யவேண்டியது
அவசியம்தானா என்பதைப்பற்றி எல்லாம்கூட பல்வேறு
உறுப்பினர்கள் இங்கே பிரச்னைகளை எழுப்பினார்கள்.
நம்முடையநாட்டைப் பொறுத்தவரையிலே மண்டல் குழு
எடுத்துத் தெரிவித்த கருத்துப்படி இரண்டு ஆயிரத்தி நானூற்றுச்
சில்லரை வகுப்புகள் இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்
களிலே மொத்தமாக இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலே
மட்டும் 200-க்கும் மேற் பட்டவர்கள் இருந்ததை
சட்டநாதன் குழுவினர் ஓரளவுக்கு ஒழுங்குபடுத்தி
சிலவற்றை ஒன்று சேர்த்துக் கொண்டு வந்துகடைசியில்
177 என்று பட்டியலிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
பிற்பட்ட வகுப்பினர்களுடைய பட்டியல் 177 என்று கொண்டு
வந்து நிறுத்தினார்கள். இதிலே 39 பிரிவுகள் மிகவும் பின்தங்கிய
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாக இருக்கிறார்கள்
என்ற கணக்கும் நமக்கு தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஏன்
பல்வேறு சலுகைகளை அளிக்கவேண்டும்,ஜாதியில்லாமலேசெய்து
விடலாமா, ஜாதி வேண்டுமா என்று எல்லாம் கேட்டார்கள்.
ஜாதி வேண்டுமென்று சொல்கிறவர்கள் யாருமே இருப்பதாகவும்
தெரியவில்லை. ஜாதி வேண்டாம் என்றுதான்
சொல்கிறார்கள். ஜாதிப்பெயர் இருக்க வேண்டுமா, அது போடப்
படவேண்டுமா என்று கூட மாண்புமிகு உறுப்பினர் முத்து
கிருஷ்ணன் அவர்கள்கூட கிளப்பினார்கள். அது இல்லாமல்
இருந்துவிடலாமே என்று. எப்படிப்பட்ட அடையாளங்கள் காட்டி
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, நூறு நூறு ஆண்டுகளாக ஒதுக்கப்
பட்டார்களோ, பிற்படுத்தப்பட்டார்களோ, தாழ்த்தப்பட்டார்
களோ, எந்த அடையாளம்காட்டிக் காட்டி சிலபல ஆண்டுக்
காலத்திற்காவது இவர்களை தூக்கிவிட்டாலொழிய அவர்



களுடைய நிலை சமநிலைக்கு வராது என்பதற்காக நாம் அடை
யாளம் காட்டவேண்டியிருக்கிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டு
களாக அடையாளம் காட்டி, அடையாளம் காட்டி யார் யாரை
கீழே தள்ளினார்களோ, இன்ன காரணத்தால், இவன் தாழ்ந்
தவன், இன்ன காரணத்தால் இவன் பிற்பட்டவன், இன்ன
காரணத்தால் இவன் தீண்டப்படாதவன் இன்ன காரணத்தால்
இவன் தொடப்படாதவன் என்று காரணம் காட்டி, காரணம்
காட்டி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகாலம் ஒதுக்கி வைத்தார்
களோ அதே காரணம் காட்டி, எந்த அளவிற்கு அவர்கள் வீழ்த்தப்
பட்டார்களோ அதே அளவிற்கு நாம் அவர்களைக் கை தூக்கி
விடவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். பள்ளத்தில் விழுந்து
விட்ட யானையை கரையில் இருக்கும் யானை கொஞ்சம் சிரமப்
பட்டுத்தான் கை கொடுத்து தூக்கி விடவேண்டுமே தவிர
எப்படியோ கரையில் உலவுகிற யானை காட்டில் நாம் பாட்டுக்கு
உலாவலாம், பள்ளத்தில் விழுந்து விட்ட யானை வீழ்ந்ததாக
இருக்கட்டும் என்று கரையில் ஏறியிருக்கிற யானை எங்கோ
சுற்றிக்கொண்டிருந்தால் அது பொருந்தி வராது. பள்ளத்திலே
விழுந்து விட்ட யானையை மேலே இருக்கும் யானை கை
கொடுக்கத்தான் செய்யவேண்டும். கீழே இருக்கும் யானை
தும்பிக்கை கொடுத்து எம்பத்தான் செய்யவேண்டும். அவை
இரண்டும் சேர்ந்துதான் ஓரளவிற்கு வரவேண்டும் என்பதற்குத்
தான் இந்தச் சலுகைகளை எல்லாம் தரவேண்டும் என்று தரப்
படுகின்றன. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்தச் சலுகைகள்,
உரிமைகள் ஆனாலும் சரி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்
படும் சலுகைகள், உரிமைகள் ஆனாலும் சரி, சமூக நீதியின்
அடிப்படையிலேதான் நாம் இவைகளையெல்லாம் வழங்கிக்
கொண்டு இருக்கிறோம்.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் நாம் அவர்களுக்காகச்
செய்யவேண்டிய காரண காரியங்களை, விளக்கங்களை மிகச்
சிறப்பாக செய்து கொண்டு வருகிறோம். அந்த வகையிலே
தான் யார் தாழ்த்தப்பட்டவர்கள், மற்றவர்கள் என்று காணு
கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே சமுதாயத்திலே
மிக மிக பிற்படுத்தப்பட்டவர்கள், கல்வித் துறையிலே
மிக மிக பிற்படுத்தப்பட்டவர்கள், இந்த இரண்டிலுமே பிற்படுத்
தப்பட்டவர்களாக இருப்பார்களானால், ஆட்டோமேடிக்காக
அவர்கள் பொருளாதாரத்திலே பிற்படுத்தப்பட்டவர்களாகத்
தான் இருப்பார்கள் என்பது தான் வரலாற்று உண்மை. ஆகவே
தான் யார் யார் தாழ்த்தப்பட்டவர்கள், யார் யார் பிற்படுத்தப்
பட்டவர்கள் என்று அடையாளம் காட்டுகின்ற தன்மை—இந்த
இருபதாம் நூற்றாண்டில்—அதுவும் 1983-ல்—கடினமான ஒன்று
தான். ஆனால் நூறு ஆண்டு காலம், 150 ஆண்டு காலம்
முன்னாலே, வெள்ளைக்காரர்கள் வெளிநாட்டில் இருந்து வந்த
வர்கள், இந்த நாட்டைக் குறிப்பிட்டுக் காணுகிறபோதுதான்
அவர்களுடைய மனதில் எதுவெது, யார்யார் தாழ்த்தப்பட்டவ
வர்கள், யார் யார் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று அவர்களுடைய

மனத்திற்கு முதன்முதலில் பட்டு, நூறு ஆண்டு காலம், 150 ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே 'கெஜட்டீர்' எழுதி, ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய குறிப்புகளில் உள்ளது உள்ளவாறு விருப்பு, வெறுப்புக்கு இடம் இல்லாத வகையில் எழுதி இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பார்க்கிறபோதுதான் உண்மையான தன்மையைக் காணமுடியும். இப்போது கலந்து கட்டியாகி விட்டது. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சொன்ன மாதிரி இப்போது அடையாளம் காட்டுவது மிக மிகக் கடினம். இந்த அவையிலே பார்த்தால் கூட, நம்முடைய தாத்தாவுக்கு, தாத்தாவுக்கு, தாத்தாவுக்கு, தாத்தாவுக்கு, தாத்தாவைப் பார்ப்போமானால், ஒவ்வொருவரையும் பிரித்து அடையாளம் காட்ட முடியும். ஆனால் இப்போது இங்கே வீற்றிருக்கிற யாரையாவது காட்டி இவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. அந்த அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. மாற்றங்கள் ஏற்பட்ட பிறகு அடையாளம் காட்டுவது என்பது கடினம் தான். மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னால் ஏற்படுத்தப் பட்ட பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப் பட்டவர்கள் பட்டியல், அடிப்படையில் பல சலுகைகள் தருகின்ற அளவிற்கு நாம் இருந்திருப்போமானால்—அதற்கு மாண்புமிகு கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சொன்ன மாதிரி அதற்கு முன்னால் இருந்த பட்டியல் அப்படியே இருந்து இருக்குமானால், அந்தச் சலுகைகள் உண்மையிலேயே யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய் சேர்ந்து இருக்கும். எல்லாக் கட்சிகளும் அதற்குப் பிறகு அதிலே சேர்த்துக் கொண்டு விட்டார்கள். இப்போது பலர் அதிலே சேர விரும்புகிறார்கள். என்னிடத்தில் ஏராளமான மகஜர்கள் வந்து இருக்கின்றன. அம்பாசங்கர் தலைமையின் கீழ் குழு அமைக்கப்பட்டவுடன் ஏராளமான மனுக்கள் வந்து கொண்டு இருக்கின்றன. ஏறத்தாழ 27 வகுப்பினர் தங்களை அதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார் நாங்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், எங்களை சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். தொண்டை மண்டல முதலியார் கொடுத்து இருக்கிறார்கள், தங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று. அதைப் போலவே திருநெல்வேலி சைவப் பெருமக்கள் தங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கொடுத்து இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்ட சைவப் பெருமக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் முத்துகிருஷ்ணன் அவர்கள் வாதாடினார்கள். நண்பர் சௌரிராஜன் அவர்கள் கூட பிராமணர் சங்கத்திலே இப்போது அதிகமாக ஈடுபாடு கொண்டு ஆங்காங்கு கருத்துக்களைப் பரப்பி வருகிறார்கள். அவர்களுக்கு அந்த எண்ணம் இருக்கிறதோ இல்லையோ, பல பல இடங்களிலே இருந்து பிராமணர் சங்கங்கள் தீர்மானம் போட்டு



எங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அனுப்பியிருக்கிறார்கள். ஆக அத்தனை பேருக்கும் இருக்கும் நோக்கம் என்ன என்று கேட்டால், அந்தச் சலுகைகள், உரிமைகள் நமக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்தப் பட்டியலில் தங்களைச் சேர்க்க வேண்டும் என்று கேட்கிறார்கள். நம்மிடத்தில் வசதிகள், வாய்ப்புகள் மற்றவைகள் குறைவாக இருப்பதால்தான் குறிப்பிட்டவர்களுக்கு, நலிந்தவர்களுக்கு, உண்மையில் போய் சேர வேண்டியவர்களுக்கு, சம நிலையில் அவர்கள் வருகின்ற வரையில் தந்து தீர வேண்டும் என்ற அடிப்படையில் தான் நாம் தாழ்த்தப் பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கி வைத்து இருக்கிறோம். அதற்காக தனித்துறை ஏற்படுத்தி, அதனுடைய தன்மையை எடுத்துச் சொல்லி, அதனுடைய அவசியம் நாளுக்கு நாள், ஆண்டுக்காண்டு வளர்ந்து வரும் பாங்கினை நாம் மிகச் சிறப்பாகக் காண்கிறோம்.

(பிற்பகல் 1-20)

அந்த வகையிலேதான் 1967-68 ஆம் ஆண்டில் கூட இந்த பிற்பட்டோர் நலத் துறைக்கு 161 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டு அந்தத் துறை இயங்கி வந்தது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், 1983-84 ஆம் ஆண்டில் அந்தத் தொகை 10 கோடியே 22 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த 10 கோடியே 22 இலட்சம் ரூபாயில் நிர்வாகச் செலவுக்கு பெரும் பகுதி போய்விடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சரியல்ல. இந்த 10 கோடியே 22 இலட்சம் ரூபாயில் 59,54,000 ரூபாய் தான் நிர்வாகச் செலவுக்குப் போகிறது; மீதி 9,62,72,000 ரூபாய் இதன் நலப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது.

பிற்பட்ட நலத் துறை என்று சில பல குறிப்பிட்ட திட்டங்களை வைத்து இந்தத் தொகை அடிப்படையில் பணியாற்றி வருகிறோம் என்றாலும் இந்த ஒரு துறைதான் அரசின் சார்பில் பிற்பட்டோர் நலப் பணிகளைக் கவனிக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிவிடக் கூடாது. நேரம் இருந்தால் எந்த எந்தத் துறையின் மூலம் அவர்களுக்கு என்னென்ன பணிகள் செய்யப்படுகின்றன என்ற புள்ளிவிவரங்களை சேகரித்துக் கொடுத்திருப்பேன். நேரம் இல்லாததால் அதை விட்டு விடுகிறேன்.

சமூக நலத் துறையின் மூலமாக நல்வாழ்வுத் திட்டங்கள் பல பிற்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் போய்ச் சேருகின்றன. அது மட்டுமல்ல. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமும் நலிந்த பிரிவினருக்கு, பின்தங்கியோருக்கு, தாழ்த்தப்பட்டோருக்கு சலுகைகள் தந்து, குறைந்த வட்டியில் கடன் தந்து, வேறு பல வசதிகளையும் செய்கிறோம்

என்று பார்க்கும்போது, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்
திட்டத்தின்கீழ் 376 ஒன்றியங்களிலும் செய்கின்ற பணிகள், அதன்
பலன்கள் எல்லாம் அந்த மக்களுக்குப் போய்ச் சேருகின்றன.
அது மட்டுமல்ல. ஊனமுற்றோர்களுக்கு என்று
சில பல வகைகளில் நிதி ஒதுக்கி, சலுகைகள் அளித்து வருகிறோம்
என்றாலும் அதிலும் பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்
பெருமளவுக்கு பயன் பெற்று வருகின்றார்கள். விதவைகள்
பாதுகாப்புத் திட்டம், அதைப் போன்று கலப்புத் திருமணம்
செய்து கொண்டவர்களுக்கு தனித் திட்டம் என்று வைத்திருக்
கிறோம். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு
சலுகை அளிக்கிறோம். 5,000 ரூபாய் பரிசுத் தொகையாகவும்
7 ஆண்டு காலம் கழித்து 10,000 ரூபாயாகப் பெற்றுக் கொள்ள
லாம் என்ற வசதி, அந்த இருவரில் பெண்ணோ அல்லது பிள்ளை
யோ யாராவது ஒருவர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராகவும்
மற்றவர் வேறு வகுப்பினராகவும் இருந்தால் அவர்களுக்கு 4,000
ரூபாய் வழங்கப்படுகிறது. அதை 7 ஆண்டு கழித்து 8,000
ரூபாயாகத் திரும்பத் தரப்படும் என்ற சலுகைகள் எல்லாம்
இருக்கின்றன. இப்படிப் பார்த்தால் இந்த ஒரு துறை மட்டும்
தான் அவர்களுடைய வளர்ச்சியை, அவர்களுடைய வளத்தை,
அவர்களுடைய மேம்பாட்டை கவனிக்கிறது என்று சொல்ல முடி
யாது. சில பல திட்டங்கள் என்று வைத்து அவற்றை இந்தத்
துறையின் மூலமாகச் செய்கிறோம். வேறு பல துறைகளின்
மூலமாகவும் அவர்களுக்கு நலப் பணிகள் செய்யப்படுகின்றன.

சமூக நலத்துறையின் சார்பில் இப்போது செருப்பு தைக்கிற
தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் 7,500 ரூபாய் மானியமாகத்
தந்து, பெட்டிக்கடைகள் தந்து, கருவிகள் தந்து, உதவி செய்
கிறோம். அந்த வகையில் 500 பேர்களுக்கு 35,00,000 ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. செருப்புத் தைப்பவர்கள் மிக மிக பின்
தங்கிய பட்டியலில் இருப்பவர்கள்; அவர்களுக்கு இந்தச் சலுகை
அளிக்கப்படுகிறது.

அதைப்போன்று மீனளத் துறையிலே 7.5 கோடி ரூபாய்
மொத்தத்தில் செலவிடுகிறோம். அதில் நிர்வாகச் செலவு என்ற
முறையில் 39 இலட்சம் ரூபாய் ஆகிறது. பாக்கியுள்ள தொகை
முழுவதும் அவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடடையச் செய்
வதற்காகச் செலவிடப்படுகிறது. பிற்பட்ட சமுதாயம் முன்
னேற வேண்டும் என்பதற்காக அதைச் செய்கிறது இந்த அரசு.

நான் எதற்காக இதை எல்லாம் சொல்லுகிறேன் என்றால்
இப்படிப்பட்ட உதவித் தொகை வழங்குவதிலே பிற்பட்ட
மக்களுக்கும் குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட மக்களுக்கும்
ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படும் தொகை வளர்ந்து கொண்டே
வருகிறது என்பதற்குத்தான். இன்னும் விவரமாகச் சொல்
லாம் என்றால் நேரம் போதாது. ஆகவே மற்றவற்றை எல்லாம்
இப்போது சொல்லாமல் விட்டுவிடுகிறேன்.



இப்படி பல்வேறு வகைகளிலே நிதிகளை ஒதுக்கி, ஆண்டுக்காண்டு இயன்ற அளவுக்கு அதிகமாக உதவிகளைச் செய்து வருகிறோம். 1969-70 ஆம் ஆண்டில் பிற்பட்டோருக்கும் குற்றமரபிலிருந்து நீக்கப்பட்டவருக்கும் என்று கிட்டத்தட்ட 48 விடுதிகளை நடத்தி வந்தோம். அது 75 ஆகி, 246 ஆகி, 1977-78-ல் 284 ஆகி, 1982-83-ல் 440 விடுதிகளாக வளர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மேற்கொண்டும் 43 விடுதிகள் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே 40 பிற்பட்ட மக்களுக்கும் 3 குற்றமரபிலிருந்து நீக்கப்பட்டவருக்கும் என்று நாம் ஒதுக்கியிருக்கிறோம். நிதி வசதிகளுக்கு ஏற்ப நாம் அவற்றை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதிலே இருக்கிற மாணவர்களுக்கு என்றும் மற்றவர்களுக்கு என்றும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் ஆதி திராவிட மாணவர்களாக இருக்க வேண்டும் என்றும், அதே போல ஆதி திராவிட மாணவர்களுக்கு என்று வைக்கப்பட்டிருக்கிற விடுதிகளில் குறிப்பிட்ட சதவீதத்தினர் பிற்படுத்தப்பட்ட மாணவர்களாக இருக்க வேண்டும் என்றும் விதிகள் வரையறுக்கப்பட்டு, அவைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மற்றும் பல்வேறு பிரச்சனைகளைப் பற்றியும், ஊதியம் உயர்த்த வேண்டும்என்பது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்போது தருவது போதாது என்று எடுத்துச் சொன்னார்கள். உயர்த்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். 60 ரூ, 70 ரூ, 80 ரூ. என்று கொடுப்பது போதவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு உதவித் தொகையாக அளிக்க வேண்டும் என்று தான் தருகிறோமே தவிர, அவர்களுடைய செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்டு உதவித் தொகையாக வழங்குவது வழக்கம் இல்லை.

இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு பெரும் பகுதியாகச் செய்கிற பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களுக்கு, மேம்பாடு திட்டங்களுக்கு மத்திய அரசு பெரும் வகையில் உதவி செய்து வருகிறது. பல்வேறு தன்மைகளிலே 50 சதவீதத்திற்கு மைய அரசு தருகிறது. மாநில அரசு 50 சதவீதத்தைப் போட்டு, ஆதி திராவிட பெருங்குடி மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். ஆனால் பிற்படுத்தப்பட்டோர் என்று வருகிறபோது, மத்திய அரசிடமிருந்து எந்த உதவித் தொகையும் வருவது இல்லை. மாநில அரசின் மூலமாகத்தான் அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் சிறப்பாகச் செய்து தரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாணவர்களுக்கு புத்தகங்கள் தருவது, மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவது போன்றவற்றை ஆண்டுக் காண்டு உயர்த்திக் கொண்டு தான் வருகிறோம். இவற்றை எல்லாம் விரிவாக எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக் கிறேன் என்றாலும் நேரம் இல்லாத காரணத்தால் நிறுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாணவர்களுடைய உதவித் தொகையை உயர்த்த வேண்டும் என்ற செயற்குறிப் பினைக் கூட பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் இயக்குநர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள் . . . (குறுக்கீடு).

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஸ்காலர்ஷிப் கொடுப்பது பற்றிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அதை உயர்த்தச் சொல்லிச் சிறப்பாகச் சொல்லவில்லை. விடுதி களிலே தங்கியிருக்கக்கூடிய ஆதி திராவிட மாணவர்கள், பின் தங்கிய வகுப்பின் மாணவர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்படு கின்ற 95 ரூபாய் என்ற உதவித் தொகையை 150 ஆக வாவது மாற்றிக் கொடுக்க வேண்டும். விலைவாசிகள் ஏறியிருக் கின்றன. இந்த ஆண்டிலாவது அதைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதிகளிலே இருந்து உணவு உண்டு படிக்கின்றவர்களுக்கு சென்ற ஆண்டுதான் ரூ. 10, ரூ. 15, ரூ. 20 உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அது போதும் என்று சொல்ல வரவில்லை. இருக்கிற நிதி ஆதாரங்களின் அடிப்படையை வைத்துத்தான் நாம் திட்டமிட்டு கொடுத்துக் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், நாம் நடத்துகின்ற விடுதிகளில் இல்லாமல், வேறு விடுதிகளிலே இருந்து படிப்பவர்களுக்கு நாம் 60 ரூபாய் என்று தந்துகொண்டு வருகிறோம். அவர்களுக்கு தற்போதுள்ள விலைவாசி நிலையில் ரூ. 150, ரூ.200 செலவாகிறது. அரசு தருகிற ரூ.60 பற்றாக்குறை யாகத்தான் இருக்கிறது. எனவே அதை கூடுதலாக்கித் தரவேண் டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது ஓரளவிற்கு பரிசீலனை செய்ய வேண்டிய ஒன்று என்று எண்ணி அரசு அதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அப்படித் தருகிறபோதுகூட, 40 எண்களுக்கு மேல் மார்க்குகள் வாங்குபவர்களுக்கு மட்டும்தான் தரப்பட வேண்டும் என்கிற ஒரு முறையை வைத்திருக்கிறோம்.

அதிலே கூட, ஓரளவுக்கு ஊக்கம் தந்து, ஆக்கம் தந்து தரலாமா என்று யோசனை இருக்கிறது. காரணம் 40 மார்க்கு கள் தானே என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும், சிறப்பாகப் பயில வேண்டும், ஏனோ தானோ என்ற நிலைமை இருக்கிறது, அது போக்கப்பட வேண்டும்.



அலட்சியப்போக்கு இருக்கக்கூடாது என்ற நிலைமையில் இதனை ஓரளவு வரையறுந்துத் தரலாமா என்று அந்தத் துறை யோசித்துக் கொண்டிருக்கிறது.

75 மார்க்குகளுக்கு மேல் அவர்கள் வாங்கியிருந்தால் மிக மிகக் கூடுதலாகத்தந்து ஊக்குவிக்கவும், 60 மார்க்குகளுக்கு மேல் வாங்கி யிருந்தால் ஓரளவிற்குத் தருவதற்கும்; இப்படி ஒரு விகிதாச் சாரத்தைப் போட்டுத் தந்தோமானால், நாம் அதிகம் படித்து நிறைய மார்க்குகள் வாங்கினால்தான் அதிகத் தொகையை வாங்க முடியும் என்ற ஊக்கத்தை அவர்களுக்குத் தர முடியும் என்ற வகையில் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப் பல நிலைமைகளில் ஆராய்ந்து பார்க்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது போன்ற ஒரு நிலை மையைப்பெற முடியும் என்று நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்லாமல், தற்போது பிற்பட்டோர் நலத் துறையைப் பொறுத்தவரையில் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. அவர்களுக்கு என்று இடங்கள் ஒதுக்கீடு செய்ததன் காரணமாக, மற்ற உதவிகளின் காரணமாக, அகில இந்தியாவிலேயே நாம் இந்தத் துறையிலே சிறப்புற்று விளங்குகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். அப்படி எடுத்துச் சொல்கிற போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இந்த வகுப்பு வாதப் பிரிவினைகள் எப்படி ஏற்பட்டன என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றி நான் நீண்ட விளக்கங்கள் கூற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டவர்களுடைய நலன்கள் கருதி, அவர் களுக்கு உதவிகள், உரிமைகள், சலுகைகள் வழங்கி, அவர்களுக்கு உதவி செய்கிறபாங்கினைத் தமிழகம் நீண்ட நெடுங்காலமாகவே கொண்டிருக்கிறது என்பதை, மண்டல் குழு தம்முடைய அறிக்கையிலே, பல இடங்களிலே, திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறது.

மண்டல் குழு அறிக்கையைப் பற்றி விரிவாக எடுத்துப் பேச விரும்பவில்லை. ஏனென்றால் அதைப்பேசுவது என்றால் நீண்ட நேரமாகும். அது மட்டுமல்லாமல், எல்லாக் கட்சித் தலைவர்களும், எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும், அந்த அறிக்கையின் மீது பேச வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டி ருக்கிறார்கள். அப்படி அதனை அவையிலே விவாதித்து, விரிவாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறபோதுதான், இந்த மாமன்ற உறுப்பினர்களும், நாட்டிலே இருக்கிற பொது மக்களும் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு வசதி ஏற்படும். ஆனாலும் அதைப்பற்றி ஓரளவு பின்னால் பேச இருக்கிறேன். ஆனால் இந்த மண்டல் கமிஷன் தம்முடைய குறிப்பிலே, வால்யூம் 1, 2 பக்கம் 61 -லே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால்—

"Madras Government took the lead——by Grant-in aid code——in 1885 to regulate financial aid to educational institutions, for backward class students .....
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல்1.30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1885 ஆம் ஆண்டிலேயே பிற்பட்ட மக்களுக்கும், மற்றவர்களுக்கும் கிராண்ட்-இன் எய்ட் கோட் என்று ஒன்று உருவாக்க வசதி செய்கின்ற தன்மையை சென்னை மாநில அரசு ஏற்றுக் கொண்டது என்று சொன்னது மட்டுமல்லாமல்—இதுபற்றிப் பின்னால் விரிவாக பேசுகிறேன் என்றாலும், ஒரு சில குறிப்புகளை மட்டும் இப்போது சொல்கிறேன். மண்டல் குழுவினர் என்ன கூறியிருக்கிறார்கள்?
Unlike some other States an open conflict between the Harijans and other Backward classse has not developed in Tamil Nadu.
பிற்பட்டவர்களுக்குச் சலுகை அளிக்கப்படுகிறது, தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகை அளிக்கப்படுகின்றது என்ற காரணத்தை வைத்துச் சண்டை சச்சரவுகள் தமிழகத்தை பொறுத்தவரையில் ஏற்படாத அளவுக்கு மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றிய தன்மைகளை நான் பின்னால் சொல்ல இருக்கிறேன் என்றாலும் ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். பல ஆண்டுக்காலமாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1927 ஆம் ஆண்டிலே மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டது போல், உயர்திரு. முத்தையா முதலியார் அவர்கள் அமைச்சராக இருந்து கம்யூனல் ஜி.ஓ. கொண்டுவந்து தந்தை பெரியார் அவர்களாலும் மற்றவர்களாலும் பாராட்டப்பெற்று அது நடைமுறைக்குக் கொண்டுவரப்பெற்றது. அதற்குப் பின்னாலே ராஜாஜி அவர்கள் ஆண்ட காலத்தில் கூட அதிலே மாற்றங்கள் ஏற்படாமல் அவர்களும் ஏற்றுக் கொண்டு அதன் பின்னர் காங்கிரஸ் ஆட்சி வந்து அவர்களும் மாற்றம் இன்றி தொடர்ந்து அதை ஏற்றுக்கொண்டார்கள். அதுபற்றிய காரண காரிய விளக்கங்கள் எல்லாம் சொல்லப்பட்டன. இது பற்றி எல்லாம் மண்டல் குழுவின் அறிக்கை விவாதத்திற்கு வருகின்றபோது விரிவாக நான் எடுத்துச் சொல்லலாம் என்று இருந்தேன். பல ஆண்டுக் காலமாக தமிழகத்திலே பார்க்கின்ற போது தமிழகத்திலே மட்டும்தான் 3 தட்டுக்களை வைத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், இவர்கள் யாருமே இல்லாத முற்போக்கு வகுப்பினர் என்ற வகையில் மூன்று தட்டுக்களை வைத்திருக்கிறோம். நாம் தென்மாநிலங்களிலே மட்டும் அதாவது நான்கு மாநிலங்களிலே மட்டும்தான் இப்படி மூன்று தட்டுகள் வைத்திருக்கிறோம். தாழ்த்தப்பட்டவர்கள்,





பிற்படுத்தப்பட்டவர்கள், இவர்கள் அல்லாத முற்போக்கு வகுப்பினர் என்ற அளவுக்கு மூன்று தட்டுக்களை தென்னகத்தில் 4 மாநிலங்களில் மட்டும்தான் வைத்திருக்கிறோம். ஆனால் வடக்கு மாநிலங்களிலே இரண்டே இரண்டு தட்டுத்தான் வைத்திருக்கிறார்கள். அதாவது தாழ்த்தப்பட்டவருக்கு என்று ஒரு தட்டு வைத்து, மற்றவர்கள் அத்தனைபேரையும் அடுத்த ஒரே இடத்திலே கொண்டு வந்து சேர்த்ததன் காரணத்தால்தான் அங்கே மாச்சரியங்கள் கிளம்பி, மண்டல் குழு அமைக்க வேண்டிய அவசியம் வந்து அவர்கள் சிபாரிசு செய்ய வேண்டிய தன்மைகள் எல்லாம் வந்தன. அதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னது குறித்து இப்போதே சொல்லலாம் என்று கருதுகிறேன். மண்டல் குழுவின் அறிக்கை என்பது உள்ளபடியே விரிவாக எடுத்து வைத்து விரிவாகச் சொல்லவேண்டியதாக இருக்கின்றது. மண்டல் குழுவின் அறிக்கையைப் பொறுத்தவரையில் அரசின் கருத்தினைத் தெரிவிக்கவில்லை என்று சொன்னார்கள். மண்டல் குழுவைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு முழுக்க முழுக்க வரவேற்கின்றது என்பதை நான் பல சந்தர்ப்பங்களிலே சொல்லியது மட்டுமல்லாமல் 4 நாட்களுக்கு முன்னாலே டெல்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்களும் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றி பின்னால் சொல்கிறேன் என்று நான் சொன்னேன். ஆனால் இந்தக் கருத்தினை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மண்டல் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பல பரிந்துரைகள் பல்லாண்டு காலத்திற்கு முன்பிருந்தே சிறப்பாகவும், செம்மையாகவும் இன்னும் சொல்லப்போனால் அதைவிடக் கூடுதலாகவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் சில பரிந்துரைகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்றதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது சில பரிந்துரைகளை வேறு பல மாநிலங்களின் சூழ்நிலைக்கேற்ப செய்திருக்கிறார்கள். அவற்றைத் தமிழகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது பொருந்தி வராது. சில பரிந்துரைகள் தமிழகத்திற்குத் தேவையற்றது என்று கருதப்படுகின்றன. ஆனால் வேறு சில மாநிலங்களுக்கு அப்படிப்பட்ட பரிந்துரைகள் தேவை. சில பரிந்துரைகளைப் பொறுத்தவரையில் வாய்ப்புகள், வசதிகள் மற்றும் சென்சஸ் புள்ளிவிவரங்கள் எல்லாம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. சென்சஸ்லே இருக்கின்ற புள்ளி விவரங்களை எல்லாம் வைத்துத்தான் விவரங்களைக் காணவேண்டும். சென்ற முறை சென்சஸ் எடுப்பதற்கு முன்பே தமிழகத்தின் சார்பாக சென்சஸ் கமிஷனுக்கு எழுதினோம். ஜாதிப் பெயரைப் பொறுத்தவரையில்

விளம்பரப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. கூடுமான வரையில் அதிலே பெண்கள் கடைப்பிடிக்கிற அளவுக்கு ஆண்களும் கடைப்பிடித்தால் மிக மிக நல்லது. ஏனென்றால் முனுசாமி முதலியார் என்றுதான் இருக்குமே தவிர முனியம்மாள் முதலிச்சி என்று கிடையாது. அதேபோன்று சென்னியப்ப செட்டியார் என்றுதான் இருக்கின்றதே தவிர செல்லம்மாள் செட்டிச்சி என்று இல்லை. அவர்கள் ஜாதிப் பெயரைப் போடுவது இல்லை. இந்த ஒரு வகையிலாவது பெண்களை எல்லோரும் பின்பற்றி அந்த ஜாதிப் பெயரை விளம்பரப்படுத்தாமல் தான் யார் என்று காண்பிக்காமல் இருந்து விளம்பரப்படுத்துகின்ற முறை தேவை அற்ற ஒன்று. அது கூடாது. ஆனால் இந்தச் சலுகைகளை அளிக்க வேண்டிய அளவுக்கு, உணர்த்த வேண்டிய நேரத்தில் உணர்த்த வேண்டிய இடத்தில் மட்டும் உணர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவேதான் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பதியும்போதும் சரி, வேலைக்குச் செல்லுகின்ற போதும் சரி, வேலைக்கு தேர்ந்தெடுக்கும் போதும் சரி, அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யும்போதும் சரி, கல்லூரியில், மருத்துவக் கல்லூரியில், கால்நடைக் கல்லூரியில் மற்றும் வேளாண்மைக் கல்லூரியிலும் சரி இடம் ஒதுக்கிடும் போது உணர்த்த வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக உணர்த்துவதற்கு இதைப் பயன்படுத்தவேண்டுமே தவிர விளம்பரத்துக்கு அல்லது பகட்டான காரியங்கள் செய்து கொள்ள, தாங்கள் உயர்ந்தவர்கள் என்று காட்ட நாங்கள் எல்லாம் ஒரு காலத்தில் ஆண்டவர்கள், இன்றைக்கு இப்படி ஆகிவிட்டோம் எல்லா ஜாதியையும் பார்க்கிறோம். ஆளாத ஜாதியே எதுவும் இருப்பதாக தெரியவில்லை. எல்லா ஜாதியும் மாநாட்டிலே போடு கிற தீர்மானங்கள் இந்த நாட்டை நாங்கள்தான் ஆண்டோம், எங்களுடைய பரம்பரைதான் ஆண்டது. எங்களுடைய ஏமாந்த தனத்தால்தான் நாங்கள் விட்டுவிட்டோமே தவிர என்று சொல்கிற தன்மை அப்படிப்பட்ட வீண் ஆடம்பரங்கள் இல்லாமல் உணர்த்தவேண்டிய இடத்திற்கு மட்டும் உணர்த்தவேண்டும். மற்ற இடத்தில் நீங்கள் என்ன ஜாதி என்று கேட்டால் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. விளபரம் கூடாத ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அது நல்லது. அந்தவகையில் தான் மண்டல் குழுவின் பரிந்துரைகளைப் பெரும்பாலும் நிறைவேற்ற வேண்டிய நிலையிலும் கடப்பாட்டிலும் இப்போது குறிப்பாக மத்திய அரசும், வட பகுதி மாநிலங்கள் பலவும் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் பல பரிந்துரைகளை நாம் உளமாற ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் 27 சதவீதம் ஒதுக்க சொல்லியிருக்கிறார்கள். நாம் ஏற்கனவே 50 சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம். பொருளாதாரச் சலுகைகள் என்ன என்ன வகையில் தரவேண்டுமென்று சொல்கிறார்களோ அவர்கள் தர சொல்லுகின்றதற்கு மேலாகவே நாம் கூடுதலாகத் தந்து இருக்கிறோம். அதனுடைய குறிப்புகளை எல்லாம் கூட அனுப்பி யிருக்கிறோம். ஆனால் அதை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை. என்கிறார்கள், எந்த மத்திய அரசு அதற்கு ஆணை இட்டதோ



அது இன்னும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. மத்தியஅரசு 2 நாட்களுக்கு முன்னால் ஒரு கமிட்டியைப்போட்டிருக்கிறார்கள். கமிட்டி போட்டு ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்று சொன்னால் இப்போது கூட்டிய அனைத்து முதலமைச்சர் மாநாட்டில் வட நாட்டைச் சேர்ந்த பல மாநில முதலமைச்சர்கள் கடுமையாக இந்த மண்டல் குழுவின் அறிக்கையை எதிர்த்து இருக்கிறார்கள். தென்னக மாநில முதலமைச்சர்கள் அத்தனை பேரும், மூன்று குறிப்பிட்ட சிலபேரும் திரிபுரா முதலமைச்சரும் மற்றவர்களும் இதை முழுக்க முழுக்க ஆதரித்து இருக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் முழு மூச்சுடன் எதிர்த்து இருக்கிறார்கள். மத்திய அரசிலே சிலருக்கு எதிர்க்கிற மனப்பான்மை இருக்கிறது. ஆகவேதான் நாங்கள் ஆதரிக்கிறோம் இருந்தாலும் ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம் என்று போட்டிருக்கிறார்கள். கமிட்டி போட்டு சிபாரிசு செய்து மத்திய அரசு ஏற்றுக்கொண்டு இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வருகிறபோது நாமும் மறுபடியும் ஆராய்ந்து அதில் எதை, எதை நடைமுறைப்படுத்த இயலுமோ, எது எது தேவை என்பதைப் பார்த்து செய்யவேண்டும். நமக்கு இதிலே கடுமையான தன்மைகள் எதுவும் இல்லை என்பதையும் நாம் அதை விட மிஞ்சித்தான் இருக்கிறோம் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவேதான் சில பரிந்துரைகள் இருந்தாலும் கூட நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு, பிற்பட்டவர்களுக்குச் சலுகைகள், உரிமைகள் வழங்குவதை கடுமையாக எதிர்ப்பவரோ அல்லது எதிர்க்கும் உறுப்பினர்களோ இப்போது இல்லை. இதற்கு நாம் நன்றி செலுத்த வேண்டியது பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர் களுக்கும் அவர்கள் ஆற்றிய பணியால்தான் இந்த சூழ்நிலை ஏற்பட்டதே தவிர இல்லாவிட்டால் குஜராத், பீகார் மாதிரி தமிழகமும் ஆகியிருக்கும். இப்போது இந்தச் சலுகை ஏன் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்கு ஒரு ஆள் கிடையாது. இந்த வாய்ப்பை ஏன் பிற் பட்டவர்களுக்குத் தருகிறீர்கள் என்று தைரியமாகக் கேட்பவர் கள் யாரும் இல்லை. எங்களுக்கு அதைத் தாருங்கள் என்று கேட்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்களே தவிர அவர்களுக்கு தருவதை எங்களுக்கும் தாருங்கள் என்றுதான் கேட்கிறார்கள். ஆனால் ஏன் தருகிறீர்கள், கொடுக்காதீர்கள் என்று தைரிய மாகச்சொல்கிறவர்கள் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இல்லாமல் நல்ல ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. மண்டல் குழுவின் பரிந்துரைகளைப் பெரும்பாலும் நிறை வேற்ற இருக்கிறோம். தமிழக அரசை வரையில் மண்டல் குழுவின் அறிக்கையின் சப் பொறுத்த வரவேற்கிறது என்பதிலும் ஆதரிக் பல பரிந்துரைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு எந்தவித ஐயப்பாடும் வேண்டாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். யாரும் எதிர்க்கவில்லை. நாம் யாரும் மண்டல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 14

குழுவின் அறிக்கையை முழுமையாக சரியாகப் படிக்கவில்லை.
பத்திரிகையில் வந்ததைப் பார்த்து விட்டு என்ன வந்திருக்
கிறது என்று தெரியாமல் சில பேர் மண்டல் குழு என்று சொல்லிக்
கொண்டு இருக்கிறார்கள். ஆக மண்டல் குழு என்பது மண்டல்
பெயரால் வைக்கப்பட்டிருக்கிற குழு. அதை இன்னும் விரிவாக
விவாதிக்கும்போது தமிழகத்தைப் பற்றி எல்லாம் எவ்வளவு
சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் 2, 3 சேப்டர்களில்
இந்த வரலாறுகளை எல்லாம் நம்மை விட இன்னும் தெளி
வாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்
திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன வரலாறுகளை இன்னும்
தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விரிவாக விவா
தத்திற்கு வரும்போது அவற்றைப்பற்றியெல்லாம் எடுத்து
வைத்துப் பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.
ஆகவே எவ்வளவுக்கு எவ்வளவு நன்மைகள் மற்றவைகள் செய்
கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. இதில் எப்படி
நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை உங்களுக்கு நான் உணர்த்த
ஆசைப்படுகிறேன். ஏராளமான உதாரணங்கள் சொல்லலாம்
என்றாலும் கூட நாம் இட ஒதுக்கீடு செய்து முதலில் 25
சதவீதத்திலிருந்து 31 சதவீதம் ஆக்கி இப்போது 50
சதவீதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்து
இருக்கிறோம். அதே சமயத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு
15 சதவீதத்திலிருந்து 16 சதவீதம் ஆகி பிறகு 18 சதவீதம்
ஆகியிருக்கிறது. 18இடங்கள் ஒதுக்கித் தகுந்த அளவுக்கு செய்து
இருக்கிறோம்.

(பிற்பகல் 1-40.)

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 54 சதவீதத்தினர்
1971 வது ஆண்டு இருக்கிற சென்சஸ் கணக்குப்படி பிற்பட்ட
வர்களாக வருகிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள்
பழங்குடியினர்களைப் பொறுத்தவரையில் 18 சதவீதத்
தினர் வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் பழங்குடியினரைப்
பொறுத்தவரையில் 18 சதவீதம் ஒதுக்கித் தந்திருக்கிறோம்.
ஆனால் 54 சதவீதம் கொண்ட பிற்பட்டவர்களுக்குக் கூடுதலாக
50 சதவீதம் வரையில்தான் வந்து நிற்கிறோம். மண்டல்
குழுவினர் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால் இந்தியா முழு
வதும் கிட்டத்தட்ட 50 சதவீதத்தினருக்கு மேல் பிற்பட்டவர்
கள் இருக்கிறார்கள், ஆனால் சுப்ரீம் கோர்டினுடைய ஜட்ஜ்
மெண்டை வைத்துப் பார்க்கிறபோது அகில இந்திய அளவை
எடுத்துப் பார்க்கிறபோது தாழ்த்தப்பட்ட மக்கள் பழங்குடியினர்
$22\frac{1}{2}$ சதவீதத்தினர் இருக்கிறார்கள், 50 சதவீதத்திலே 23 சத
வீதத்தைக் கழித்துப் பார்த்து மீதம் உள்ள 27 சதவீதத்தை
நாம் அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறோம், 50 சதவீதம் அவர்
களுக்கு ஒதுக்குவதுதான் முறையென்றாலும் சுப்ரீம் கோர்டி
னுடைய தீர்ப்புக்கு இணங்கி 50 சதவீதத்திற்குள்ளாக ரிசர்
வேஷன் இருக்க வேண்டும், அதற்கு மேல் செல்லக்கூடாது



1983 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று வைத்திருப்பதன் காரணமாக நாங்கள் 23 ஐக் கழித்து
27 என்று சொல்லியிருக்கிறோம் என்று அவர்கள் எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருப்பதன் காரண
மாக எப்படியிருக்கிறது என்பதற்காக ஒரு புள்ளிவிவரத்தை நான்
குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அண்ணா பொறியியல் பல்கலைக் கழகத்தில் 1982-83 ஆம்
ஆண்டிற்கு எவ்வளவு மாணவர்கள் விண்ணப்பித்தார்கள்,
எவ்வளவு பேர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்ற ஒரு கணக்கைச்
சொன்னால் இந்த அளவுக்குச் சலுகைகள் அளித்ததன் காரண
மாக பிற்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் வளர்ந்தோங்கி
வந்திருக்கிற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெளி
வாகச் சொல்லலாம். அங்கே மொத்த இடங்கள் இருப்பது 279,
தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த இடங்கள் 279. அதற்கு
மொத்தம் விண்ணப்பித்தவர்கள் 4,752 ; அதிலே பழங்குடி
யினர் ஆதிதிராவிடர்கள்—விண்ணப்பித்தவர்கள்—மட்டும் 520
பேர்கள் ; அதிலே பிற்பட்டவர்கள் மிகவும் பிற்பட்டவர்கள்
2,373 பேர்கள். அதிலே முற்போக்கு வகுப்பினர் என்று கருதக்
கூடியவர்கள் 859 பேர்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற
கணக்கை எடுக்கிறபோது அதிலே 50 பேர்கள் பழங்குடியினரும்
ஆதிதிராவிடர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது
279 இல் 18 சதவீதத்திற்குச் சரியாக வருகிறது. பிற்படுத்தப்
பட்ட மக்களிலே 170 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்
கள். விண்ணப்பித்தவர்கள் 2,373 பேர்களில் தேர்ந்தெடுக்கப்
பட்டவர்கள் 170 பேர்கள் என்றால் 61 சதவீதம் வருகிறார்கள்.
ஒதுக்கப்பட்டது 50 சதவீதம் என்றாலும் அப்படி ஒதுக்கப்பட்ட
சதவீதத்திற்கு மேலும் மெரிட் என்று வருகிறபோது மற்ற
முற்போக்கு வகுப்பினரோடு போட்டி போட்டு வெல்லுகின்ற திற
மையை 11 சதவீதத்தினர் பெற்றிருக்கிறார்கள் என்று காட்டுகிற
அளவுக்குப் பிற்பட்டவர்கள் 61 சதவீதம். இவர்கள் இரண்டு
பேர்களுக்கும் போக முற்போக்கு என்று 31 சதவீதம் பொதுவாக
இருக்கவேண்டுமென்று சொன்னாலும் அவர்கள் பெற்றிருப்பது
21 சதவீதம். அவர்கள் வாங்கியிருக்கிற மார்க்கின் அளவை
நீங்கள் பார்ப்பீர்களானால் வியப்புக்குரியதாக அமைந்
திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 95-க்கும்
100-க்கும் இடையிலே ஒரு அரிசன் வாங்கியிருக்கிறார். 90-க்கும்
95 மார்க்குக்கும் இடையே இடம்பெறுகிற அளவுக்கு ஆதி
திராவிட மக்கள் வளர்ந்தோங்கி வந்திருக்கிறார்கள். 95க்கும்
100-க்கும் இடையிலே ஒரு எஸ்.சி. வாங்கியிருக்கிறார், 90க்கும்
95-க்கும்இடையிலே 9 எஸ்.சி.க்கள் வாங்கியிருக்கிறார்கள் என்று
சொன்னால் அந்தச் சலுகைகள் தந்து அடிமட்டத்திலிருந்து
வருவதன் மூலமாக இந்த அளவுக்குப் போட்டி போடுகிற
திறமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை மிகச்
சிறப்பாக நீங்கள் காணலாம். பிற்பட்ட வகுப்பினர் ஏராள
மாக இருந்தாலும்கூட அவர்களிலே 60லிருந்து 70 வரை ஒருவர்
கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை, 70லிருந்து 75 வரையில் ஒருவர்

கூட இல்லை, 80லிருந்து 85 வரையில் ஒருவர்கூட இல்லை.
85லிருந்து 90 வரையிலும் ஒருவர் கூட எடுக்கப்படவில்லை,
90லிருந்து 95 மார்க்கு வாங்கிய பிற்பட்டவர்கள்
எடுக்கப்பட்டிருக்கிறார்கள். 90 மார்க்கிற்கு கீழே இறங்கிய
ஒரு பிற்பட்டவர்கூட தேர்ந்தெடுக்கப்படுகிற லிஸ்டிற்கு வராத
அளவுக்கு வந்து நிற்கிறார்கள். அதிலே கூட 90 லிருந்து 95
வரை மார்க் வாங்கிய பிற்பட்டவர்கள் மொத்தம் 275. ஆனால்
செலக்ட் பண்ணியது 97 பேர்கள் தான். அதேமாதிரி 95-லிருந்து
100 மார்க் வாங்கிய பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 77 பேர்
கள். நான்கு பேர்கள் ஆப்சென்டீஸாக இருந்ததால், அந்த 4
பேர்கள் போக 73 பேர்கள் அதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்
கிறார்கள். இந்தச் சலுகைகளை எல்லாம் அடிமட்டத்திலே
யிருந்து தந்து, தந்து வந்து, வாய்ப்பும், வசதியும் தரப்படுமே
யானால் எந்த அளவிற்குப் பிற்படுத்தபட்டவர்களும், மற்றவர்
களும் கல்விச் சலுகை மற்றவைகளையும் பெற்று உயர்ந்தோங்கி
நிற்க முடியும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்
கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்களும் மற்றவர்
களும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிற்சி பற்றி தெரிவித்தார்கள்.
ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு பெறுவதற்காக பிற்படுத்தப்பட்ட
வர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சிறந்த நிலையைப் பெறுவதற்
காக இந்தத் துறையின் மூலமாக தனிப்பயிற்சி அளித்து வருகி
றோம். அதற்காகத்தான் கோவை, மதுரை, திருச்சி, திருநெல்
வேலி ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் இன்றைக்கு
அரசின் பூர்வாங்க தேர்விற்கு மட்டும் பகுதிநேர பயிற்சி வகுப்பு
கள் நடத்தி அவர்களை ஊக்குவித்து வருகிறோம். 1976—
77-க்குப் பிறகு எதுவுமில்லை என்று சொன்னார்கள். 1977—
78-ஆம் ஆண்டில் மத்திய அரசு பணிகளுக்கு ஒருவரும், 1979 ஆம்
ஆண்டு ஒரு ஐ.ஏ.எஸ்-ஸும், ஒரு ஐ.பி.எஸ்.ஸும் மத்திய அரசுப்
பணிக்கும், 1980-ஆம் ஆண்டிலே இருவர் மத்திய அரசுப் பணி
களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தகவலை
இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன் ஆனால் நாம் பயிற்சி
கொடுப்பதற்கு 50 பேர்கள், 60 பேர்கள் என்று எடுத்தாலும்
நாளடைவில் கரைந்து, கரைந்து வந்து கடைசியில் 20 பேர்கள்
நின்று, ஒருவர், அல்லது இரண்டு பேர்கள் தேர்ந்தெடுக்கப்
படுவது மகிழ்ச்சிக்குரியதல்ல. பயிற்சியில் சொல்லிக்
கொடுக்கக்கூடியவர்கள் மிகத் திறமையானவர்களாக இருக்க
வேண்டும். நாம் கல்லூரிகளில் கேட்கிறபோது அங்கே வேண்டா
தவர்களை இதற்கு அனுப்பிவிடுகிறார்கள். அவர்களை எல்லாம்
வேண்டாம் என்று தள்ளி, எங்கே போடலாம் என்று பார்த்து
இங்கே அனுப்பிவிடுகிறார்கள். ஸ்பெஷல் ட்ரெயினிங் என்று
நாம் கொடுக்கிறபோது மிகத் திறமைபடைத்தவர்கள் வர
வேண்டும். நாம் யார் ஐ. ஏ. எஸ்., ஆக வேண்டும்; அல்லது
ஐ. பி. எஸ். ஆகவேண்டும் என்று விரும்புகிறவர்களை எடுத்துக்
கொண்டால் வெற்றி பெறமுடியாது. யார் தகுதி படைத்தவர்





களோ அவர்களைத்தான் எடுக்க வேண்டும். எல்லா கல்லூரி
களையும் சேர்ந்த முதல்வர்கள் அந்தக் கல்லூரியில் முதல் நான்கு
மாணவர்கள் அல்லது ஆறு மாணவர்கள் இவர்கள்; சிறந்த
மதிப்பெண்களை இவர்கள் வாங்கியிருக்கிறார்கள், ஐ. ஏ. எஸ்.
வாங்க, ஐ. பி. எஸ். வாங்க தகுதி படைத்தவர்கள் என்று
சிபார்சு செய்ய வேண்டும். அப்படி சிபார்சு செய்தால் நாமே
எழுதிக் கேட்கலாம். நீங்கள் திறமையான மாணவர் என்று
உங்களுடைய முதல்வர் எழுதியிருக்கிறார். ஐ. ஏ. எஸ். படிக்க
விருப்பமா? ஐ. பி. எஸ். படிக்க விருப்பமா? என்று கேட்டு
அப்படிப்பட்டவர்கள் தேர்வு செய்யப்பெற்றால், அவர்கள்
மேலும் பயிற்சி பெற்று பரீட்சை எழுதுவார்களானால் பிற
மாநிலங்களோடு, டெல்லியோடு போட்டி போடக்கூடிய
தன்மை வரும். இந்த ஆண்டு ஒரு புதிய திட்டத்தைக் கூட
ஆரம்பித்திருக்கிறோம். இங்கே பயிற்சி தருவது மட்டுமல்லாமல்,
மாநில அளவில் முதலில் வெற்றி பெற்ற முதல் 10 மாணவர்களை
எடுத்து அவர்களை இப்படி பரீட்சை எழுத விருப்பமா என்று
கேட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் பணமும் தந்து, அவர்களை
10 நாட்கள் இந்தப் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பவிருக்கிறோம்.
டெல்லியிலே பயிற்சி நிலையத்தை வைத்திருக்கிறார்கள். அவர்கள்
டாக்டர் ராவ் பயிற்சி நிலையம் என்று வைத்திருக்கிறார்கள்.
அதிலே பயிற்சி கொடுத்து, பூர்வாங்கத் தேர்வு மட்டுமல்லாமல்,
வைவோ—வோசி தேர்விற்கும் அனுப்பி அதிலே வெற்றி பெறுகிற
அளவிற்கு பயிற்சி கொடுக்கிறார்கள். இந்த ஆண்டு ஏழு
பேர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்
குரிய பணம் பத்தாயிரம் ரூபாய் ஆனாலும் பரவாயில்லை என்று
ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் கூடுதல்
செலவானாலும், ஐ. ஏ. எஸ். ஐ. பி. எஸ். அதிகாரிகள் இதிலே
வரவேண்டுமென்று இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை ஆரம்
பித்திருக்கிறோம். மேலும் வெற்றி பெறுமானால் இதை மேலும்,
மேலும் ஆக்கமும், ஊக்கமும் தருகிற அளவிற்குக் கொண்டு
செல்லலாம் என்று ஒரு எண்ணமும் அரசிற்கு இருக்கிறது என்பதை
இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வீட்டு மனைப்பட்டா, மற்றவைகளைப் பற்றியெல்லாம்
மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச்சொன்னார்கள்.
சென்ற ஆண்டு அவர் குறிப்பிட்டதாகவும், நான் ஏற்றுக்கொண்ட
தாகவும், இப்போது கைநழுவி விட்டதாவும் சொன்னார்கள்.
அந்தக் கருத்திலே நான் இன்றைக்கும் அழுத்தமாக இருக்கிறேன்.
அதையும் எடுத்துச் சொல்கிறேன். ஆகவே 50 சதவீதம் பிற்
படுத்தப்பட்டவர்களுக்கென்று ஒதுக்கியிருப்பதாலே, மிகவும்
பிற்படுத்தப்பட்டவர்களின்—மக்கள்—எண்ணிக்கையைப் பார்த்து
அந்த ரேஷியோவின் அடிப்படையில் 50 சதவீதத்தில் ஒதுக்கித்
தருவது என்ற கொள்கையை நான் இன்றைக்கும் ஏற்றுக்
கொண்டிருக்கிறேன். இன்னும் அதில் வலிவாக இருக்கிறேன்.
அதற்கான புள்ளிவிவரங்களைத் திரட்டுகிறபோது ஒரு இயக்குந

ரால் அதைத் திரட்டிக் கொடுக்க முடியவில்லை. ஆகவேதான் இப்போது டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் கொடுத்திருப்பதிலே கூட அம்பாசங்கர் குழுவிற்கு இதையும் சேர்த்து நீங்கள் ஆராய்ந்து சுப்ரீம் கோர்ட் எடுத்துச் சொன்ன கருத்துக்களைத் தெளிவு படுத்துவது மட்டுமல்லாமல்,இந்தக் கருத்துக்களையும் ஆராய்ந்து நீங்கள் சிபார்சு செய்யவேண்டும். அந்தக் கருத்துக்கள் சிபார்சு செய்யப்படுமானால், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் களுக்கு என்று சில குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்படுமானால் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இடம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தான் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1—50.)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் கருத்திற்கு நான் நன்றி சொல்லுகிறேன். ஆனால், கொள்கை அளவிலே, நீங்கள் ஒரு முடிவு எடுத்துவிட்டீர்கள். அது 20 சதவீதமா, 22 சதவீதமா, 25 சதவீதமா என்பதுதான் பிரச்னைக்குரியதே தவிர, மினிமம் பர்சண்டேஜ் 50-லே 20 சதவீதம் என்று பூர்வாங்கமாக ரிசர்வேஷன் முதலிலே போடுங்கள். பிறகு, குழு அறிக்கை வந்ததற்குப் பிறகு நீங்கள் 22 அல்லது 23 என்று பர்சன்டேஜ் நிர்ணயிங்கள். அப்பொழுது அதை ஏற்றுக்கொள்ளலாம். பூர்வாங்கமாக, மோஸ்ட் பாக்வார்ட் கிளாசுக்கு 20 சதவீதம் நிர்ணயிக்கிறேன் என்று அரசாங்கம் ஏன் சொல்லக்கூடாது. அந்தக் குழுவின் பரிந்துரை வருவதற்கு எத்தனை வருஷம் ஆகும்? அதற்குப் பிறகு நடைமுறைப்படுத்த எத்தனைக் காலம் ஆகும் ?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: : ஆக்கப் பொறுத்தவர்கள் கொஞ்சம் ஆறவும் பொறுத்தால் நல்லது. இந் தத் தன்மைகளை ஆராய்ந்து குழு வழிகாட்டும். பின்னால் யாரும் ஒரு குறையும் சொல்லக்கூடாது என்பதோடு மட்டுமல்லா மல், அவர்கள் ஆராய்ந்து ஒரு ஆண்டுக்குள்ளே அறிக்கை தர வேண்டுமென்று நாம் ரெஃபரன்சில் சொல்லியிருக்கிறோம். இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளே கட்டாயம் இந்தக் குழு அறிக்கை தந்து, அதன்மீது நடவடிக்கை எடுத்து, நடைமுறைப் படுத்தித் தீரவேண்டும். இல்லாவிட்டால், சுப்ரீம் கோர்ட்டி னுடைய தீர்ப்பு இருக்கிறது. அங்கே நமக்கு ஏற்பட்ட சங்கடம் என்னவென்றால், 31 சதவீதத்திலேயிருந்து 50-க்கு எப்படி வந்தீர்கள் ? அதற்குக் காரணங்களைச் சொல்லுங்கள் என்று கேட்டதுடன், அவர்கள் அத்தனையும் கேட்டுவிட்டார்கள், புள்ளி விவரங்களோடு. அவர்கள் படிப்பு எப்படி, போன்ற அத்தனையையும் உடனடியாக எடுத்துக் கொண்டு போய் கொடுத்து, அதை விவாதித்து நிலை நாட்டுவதற்காகத்தான் மறுபடியும் குழு வைத்து அந்த நிலைமையை அறிவிக்கலாம் என்பதாலே, அமைத்திருக்கிறோம். சுப்ரீம் கோர்ட்டுத் தலைமை நீதிபதி உட்பட 5 பேர்கள் உட்கார்ந்து விசாரித்தபோது, இந்தக் குழு அமைக்கிறோம் என்று தமிழக அரசு சொல்லியதன் காரண



மாக, அந்த ரிட் பெட்டிஷனை அவர்கள் தள்ளிவிட்டு 1-1-1985க் குள்ளாக இந்தக் குழுவின் அறிக்கையை வாங்கி, அரசு அந்தக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். மறுபடியும் எங்களிடம் கொண்டு வரவேண்டும்,நாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்றுநல்ல வேளையாக அவர்கள் சொல்லவில்லை. ஆகவே, அதற்குள்ளாக நாம் செய்தே தீரவேண்டும். 1—1—1985-க்குள்ளாக அறிக்கை வராவிட்டால் 1980-81-லே போட்ட ஆர்டர் செல்லாது; இந்த 50 சதவீதம் மறுபடியும் 31 சதவீதம் ஆகப் போய்விடும். இந்த ரூபாய் 9,000 வருமான வரம்பு என்று நிர்ணயித்தது நிற்கும்—இந்த இரண்டும் நிற்கும் என்று சொல்லி விட்டார்கள். ஆகவே, மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி சொன்ன தைப் போல, நாங்களே காலம் கடத்த விரும்பினாலும், சூழ் நிலை காலம் கடத்த விரும்பாது, இடம் கொடுக்காது. இந்த ஓராண்டுக்குள் அறிக்கை தர வேண்டுமென்று சொல்லியிருக்கி றோம். நாம் ஓராண்டுக்குள் அறிக்கை பெற்று, பிறகு ஆய்ந்து, பரிசீலனை செய்து, 1—1—1985க்குள்ளாக இன்ன, இன்ன பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டோம் என்று தெரிவிப்போமா னால் பிறகு அதில் பிரச்னைகள் வராது. ஆகவே, அந்தக் கால அளவு இருக்கிறது. கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலே சிக்கலே வராமல் தீர்த்து விடுவோமானால் நல்லது என்றுதான் இதை நடைமுறைப் படுத்துகிறோமே தவிர, அதிலேயிருந்து எந்த வகையிலும் பின் தங்கி விடவில்லை யென்று கூறிக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் 16-11-81—லே பதிவு செய்யப்பெற்று 25—2—1982 முதல் இயங்கி வருகிறது. அதற்கு திரு. பொன் பரமகுரு அவர்கள் தலைவராகவும், மேலாண்மைப் பொறுப்பாளராகவும் இருந்து பணியாற்றுகிற அளவுக்கு அமைத்து, அதிலே வேறு பல துறைகளைச் சேர்ந்த வர்களும் மற்றவர்களும் உறுப்பினர்களாக இருந்து, பிற் பட்ட மக்களுடைய தன்மைகளைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி மேம்பாடு செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

பிற்பட்டோர், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட் டோர் ஆகியோர் பொருளாதார மேம்பாடு பெற, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்க முதலீடு தொகை (மார்ஜின் மணி) கடனாக அளித்து ஊக்கப்படுத்துவது இந்தக் குழுவினுடைய முக்கிய நோக்கமாக இருந்திருக்கிறது. வருமானம் ரூபாய் 5,000-க்கு உட்பட்டவர்களுக்கு மட்டுமே இந்தத் திட்டம் பயன்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

தொழில் துவக்கத் தேவைப்படும் நிதியில் ஐந்தில் ஒரு பங்கை மேம்பாட்டுக் கழகம் 4 சதவீத வட்டியிலே தரும். மீதி ஐந்தில் நான்கு பங்கை ஏதேனும் ஒரு வங்கி தரும். வங்கிகள் கடன் தருவதற்கும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். குறைந்த வட்டியிலே தருவதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்க தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும்

ரூபாய் 5,000-க்கு மேற்படாத அளவுக்குக் கழகத்தால் கடன்
தொகை வழங்கப்படும். வங்கிகளிலிருந்து ஒவ்வொருவருக்கும்
ரூபாய் 20,000 தொகைக் கடனாக வழங்கப்படும்.
பட்சமாக ஒருவர் ரூபாய் 25,000 முதலீடு வைத்து. அதிக
னர்கள், 30 உறுப்பினர்கள், 40 உறுப்பினர்கள் என்ற அளவுக்கு
முதலீடுகள்-ரூபாய் 5,000 உச்சத் தொகை வைத்து. 20 உறுப்பி
ரூபாய் 2,000 கூட பங்குத் தொகை வைத்து. ரூபாய் 1,000
ஆனால், இந்த ஒவ்வொரு மூலதனமாகத் தரலாம்.
செலுத்த வேண்டிய பணம் 12 ரூபாய், பிற்படுத்தப்பட்டவர்களும்,
சீட்டுக்காகச் செலுத்த வேண்டும். ஆகபன்னிரண்டரை ரூபாய்தான்
அவர்கள் செலுத்த வேண்டும். 50 காசு நுழைவுச்
அரசும் தரும். அதன் மூலம் வருகின்ற மீதித் தொகையை வங்கிகளும்,
பெற வேண்டும். அதன் மூலம் வட்டியையும், வருமானத்தை அவர்கள்
தற்குப் பிறகு அந்தக் கூட்டுறவுத் தொழிற் சங்கம் அசலையும் கட்டிய
பயன்படும் அளவிற்கு வரும் என்பதைச் சொல்லி, அவர்களுக்கே
பாட்டுக் கழகத்திலே, மாண்புமிகு உறுப்பினர் இந்த மேம்
மூர்த்தி அவர்கள் வற்புறுத்தியதை நான் திரு. கிருஷ்ண
விட்டேன். இதிலே என்ன செய்திருக்கிறேன் நடைமுறைப்படுத்தி
ரேண்டம் செய்யலாம் என்று சொன்னார்கள். என்றால், அட்
குழுவின் மூலம் கடன் வழங்கும்பொழுது பிற்படுத்தப்பட்டவர்கள்
குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மேம்பாட்டுக்
சதவீதமும், மிகுதியுள்ள பிற்பட்டவர்களுக்கு 60
தரலாம் என்றும் அட் ரேண்டமாக வைத்து, 40 சதவீதம்
டிருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு அதிக சதவீதமாக மிகமிகப் பிற்பட்
லாம் என்று 60 : 40 என்ற அளவிற்கு நடைமுறைப்படுத்தும் ஒதுக்க
அளவிற்கு அதிலே நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.
உள்ளபடியே இருக்கின்ற நிலைமைகள் வரும்பொழுது ஆனால்
களுக்கு இட ஒதுக்கீடு, வேலைவாய்ப்பு பெருகுதல் ஆகியவற்றை அவர்
யெல்லாம் அம்பாசங்கர் குழு அறிக்கை தந்த பிறகு விரிவாக
எடுத்துச் செய்யும் தன்மைகள் இருக்கின்றன.

இப்பொழுது ஐந்து மாவட்டங்களிலே துவங்குவதற்கான முயற்சி
கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டம்,
மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், புதுக்கோட்டை,
செங்கற்பட்டு ஆகும். 20 இலட்சம் ரூபாய் நாம் தருகிறோம்
என்றால் 80 இலட்சம் ரூபாய் கடன் வாங்கி, ஒரு கோடி
ரூபாய் திட்டத்தை மதுரையிலே; ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தை
திலே திருநெல்வேலியிலே ; கிட்டத்தட்ட 1 கோடியே 25
இலட்சம் ரூபாய் திட்டத்தை இராமநாதபுரத்திலே; கிட்டத்தட்ட
75 இலட்சம் ரூபாய் திட்டத்தைப் புதுக்கோட்டையிலே என்று
போட்டு அடுத்த ஆண்டு மீதியுள்ள 10 மாவட்டங்களுக்குக்
கொண்டு வருவோமேயானால், இந்த பத்து கோடி ரூபாய்
இதற்கு முதலீடு செய்து அதை நிரந்தர வைப்பு நிதியாக
வைத்து, ஆண்டு ஒன்றுக்கு 1 கோடி ரூபாய், ஒன்றரை கோடி
ரூபாய் வட்டி வருகிற மாதிரி வைத்து, அதையும் இந்த மேம்
பாட்டுக் கழகத்திற்கு ஆங்காங்கு தருவிக்க, கிட்டத்தட்ட இரண்
டாயிரம், மூவாயிரம் பேர்களுக்கு வருஷத்திற்குத் தொழில்





துவக்கி மேம்பாடு எய்துகின்ற அளவிற்குத் தரலாம் என்று திட்டம் போட்டு அது நல்ல முறையில் நடக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதையெல்லாம் நடைமுறைப் படுத்தி யிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லி, வேறு பல பிரச் னைகளையும் மற்றவைகளையும் எடுத்துச் சொன்னார்கள்.

குழுவுக்கு அனுப்ப நேரம் போதாது என்று சொன்னார் கள். ஏப்ரல் மாதம் போட்டது, ஏற்கனவே ஆணையிட்டு செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன, மே மாதம் 16 ஆம் தேதி வரையில் இந்தப் பதிலை அனுப்பலாம் என்ற அளவிற்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். மே மாதம் 16 ஆம் தேதி அளவிற்கு அனுப்பப்பட்டவைகளை வைத்துக் கொண்டு, இதில் வருகின்ற புள்ளி விவரங்கள் இந்தக் குழு ஆராய்ந்த பிறகுதான் தெரியும்.

இந்தக் குழுவிலே பலபேர் இடம் பெற வேண்டும் என்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்; விண் ணப்பம் தந்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி சொல்லியது மாதிரி, சட்டநாதன் குழுவிலே மூன்று பேர்தான் இருந்தார்கள்; மண்டல் குழுவில் ஆறு பேர்தான் இருந்தார்கள். என்னுடைய எண்ணமும் ஐந்தாறு பேர்கள் என்று போட்டிருந்தால்தான் இந்தக் காரியம் நடைபெறும் என்பது. ஆக, வற்புறுத்தலின் காரணமாக 18-லே வந்து இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலேயும் சொன்னேன், இனிமேல் வற்புறுத்தலுக்கு இணங்க வேண்டா மென்று. கட்சி அடிப்படையிலோ, ஜாதி அடிப்படையிலோ போடவில்லை; பொதுவாகப் போடப்பட்டது. ஆனால் அவர் கள் சிபார்சு செயவதை அப்படியே ஏற்றுக் கொள்ளப் போவ தில்லை. அதற்குப் பிறகு அரசு ஆராயும். அப்படி ஆராயும் பொழுது வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கலந்து கொண்டு, தங்களுடைய கருத்துக்களைத் தெரி விக்கின்ற அளவிற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்பதை யும், நாம் சிந்திக்கலாம்.

இப்பொழுது அவரவர்களுடைய எண்ணங்களையும், மற்றவை களையும் எடுத்து வைப்பதற்குத் தனிப்பட்டவர்களுக்கும் உரி மையிருக்கிறது; அமைப்பினருக்கும் உரிமையிருக்கிறது. அந்த பார்மை வாங்கி தனிப்பட்டவர்களும் எழுதி அனுப்பலாம்; அமைப்பு முறையிலேயும் அனுப்பலாம். ஜாதி அடிப்படையிலே கூட அனுப்பலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதையெல்லாம் எடுத்துத் தெரிவிக்கின்ற அளவிற்கு அந்த அந்த வகுப்பினர்கள், மற்றவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை விரிவாக எடுத்துச் சொல்லலாம். ஒவ்வொரு கல்லூரியிலும் கேட்கிறோம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலேயும் கேட்டிருக் கிறோம்; எப்படிப் பட்ட நிலையிலே பிற்படுத்தப்பட்டவர்கள் இருந்தார்கள்; தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலை என்ன,

டிராப் அவுட்ஸ் என்ன, எந்த அளவிற்கு வந்தார்கள் என்ற விவரங்களெல்லாம் அதிலே கேட்கப் பட்டிருக்கின்றன. அந்த விவரங்களெல்லாம் வருமேயானால் மிகச் சிறப்பான முறையில் அநத அறிக்கையைத் தயாரித்து நடைமுறைப் படுத்துவதற்கு ஏதுவாக அது பரிந்துரை செய்யும் என்று கருதுகிறேன். இந்த வகையிலே பல்வேறு கருத்துக்களை........

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாநிலத்திலே ஜில்லாவாரி யாகப் பார்த்தால்கூட ஒரு இலட்சத்திற்கும்மேலே நரிக்குற வர்கள் இருக்க மாட்டார்கள். அதிலேயும் அரசாங்க மனையிலே இருப்பவர்கள் இந்த ஒரு இலட்சத்தில் பத்தாயிரம் பேர்கள்தான் இருப்பார்கள். எனவே, கலெக்டர்களுக்கு ஒரு ஸ்பெஷல் ஆர்ட ராவது கொடுத்து நரிக்குறவர்கள் தங்கி வாழ்கின்ற ஒரு நிலைமையிருக்கும்பொழுது, அவர்கள் குடியிருக்கின்ற இடங்களை உடனடியாக அவர்களுக்குப் பட்டா செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா? மேலும் அவர்கள் குடியிருக்கும்படியான இடத் தைப் பறித்துக் கொண்டவர்களிடமிருந்து நிலம் கைப்பற்றப் படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நரிக்குறவர்களைப் பெறுத்தவரையிலும் அவர்கள் மிகவும் பிற்படுத்தப் பட்டவர் களாக இருப்பதன் காரணமாக, அவர்களுக்கு வசதி வாய்ப்பு களைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறோம். பலயிடங்களில் ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். பலயிடங்களில் வீடுகள் கட்டிக் கொடுத்து சொந்தமாக்கப் பட்டிருக்கிறது. அந்த வீடுகளையெல்லாம் அவர்கள் காலி செய்து விட்டுப் போய் விட்டார்கள். தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் இடையிலே இருக் கின்ற இடங்களிலுள்ள வீடுகள் அப்படியே இருக்கின்றன. விருத் தாசலத்திற்கும் பெண்ணாடத்திற்கும் இடையிலே கட்டப்பட்ட வைகளும் அப்படியே இருக்கின்றன. ஆனால் சில குறிப்பிட்ட இடங்களிலே இருக்கிறார்கள். அப்பொழுதுதான் நான் யோசிக்கும் படியாகத் துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஏதேனும் தொழில் கொடுத்து, அந்தத் தொழில்களை அவர் கள் நடத்தி, அதன் மூலமாக அவர்களுக்கு வருமானம் வரு கின்ற அளவிற்குச் சூழ்நிலை ஏற்பட்டால்தான் தங்குவார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்குப் பெயர் நாடோடிதான். இந்த நிலைமைகளை கவனித்து, அரசு எந்தெந்த அளவிற்கு அவர் களை தங்கவைத்து, அவர்களுடைய நிலைமைகளையெல்லாம் மாற்றி, மற்றைய சமுதாயத்தினர்போல் கொண்டு வருவதற்கு என்னென்ன வாய்ப்பு கூறுகளை ஆராய்ந்து செய்ய வேண்டுமோ அதைச் செய்ய ஆயத்தமாக இருக்கும் என்று சொல்லி, மாண்பு மிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும், என்னுடைய நன்றியை தெரிவித்து, என்னுடைய இந்த உரையை இந்த அளவோ நிறுத்திக்கொள்கிறேன்.



"திருவாளர்கள் த. வேணுகோபால், தி. கா. நல்லப்பன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனு மதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

"மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,22,26, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## 6. அறிவிப்பு.

### மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1974-75.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1974–75ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 13–4–1983 ஆம் தேதி, புதன்கிழமையைக் குறித்துள் ளார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 12-4–1983 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

---

பின்னர் பேரவை 2.01 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும். எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

168. கால்நடைப் பராமரிப்புத்துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை (தமிழ்).

169. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1973–74 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த ஐந்தாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

170. 1972–73 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின்மீதும், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த நான்காம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை (தமிழ்).

171. 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) மீதான அறிக்கையில் வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறை மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஒன்றாம் அறிக்கை (பாகம் 1) (தமிழ், ஆங்கிலம்).

172. 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) அறிக்கையில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி இரண்டாம் அறிக்கை (பாகம் 2) (தமிழ், ஆங்கிலம்).

173. கோரிக்கை எண். 32. பிற்பட்டோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

174. பிற்பட்டோர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம் 1983–84 (ஆங்கிலம்).

## இணைப்பு I.

(259-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 724-க்கான விடையைக் காண்க).

(அ) ஆம்.

(ஆ) 1977–78-லிருந்து 1980–81 வரையிலான சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ் உலக வங்கி கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்துள்ளது :—

(1) 1977–78 ஆம் ஆண்டிற்கு இயக்கச் செலவு (தேய்மானம் உட்பட வட்டி நீங்கலாக) இயக்க வருமானத்தில் 99 விழுக்காடுக்கு அதிகரிக்கக் கூடாது. இந்த விழுக்காடு படிப்படியாக 1980–81 ஆண்டில் 95 விழுக்காடாக குறைக்கப்பட வேண்டும்.

(2) இயக்க வருமானம் பின் ஆண்டில் திருப்பித்தரப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டியைவிட 1.5 மடங்கு அதிகமாக இருந்தாலொழிய பல்லவன் போக்குவரத்துக் கழகம் நீண்ட கால கடன் பெறக் கூடாது.

1980–81 முதல் 1984–85 வரை சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2-ன் கீழ் பல்லவன் போக்குவரத்துக் கழகம் தமிழக அரசு மூலமாக உலக வங்கியிடமிருந்து கடன் பெற்றுள்ளது.



இதற்கான ஒப்பந்தம் 14–1–1981 அன்று கையெழுத்தாகியது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் 1982–83 முதல் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2-ன் கீழ் பணிகளை தொடங்கியது.

உலக வங்கி சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2-ன் கீழ் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு (பெருநகர்) கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்து உள்ளது.

(1) இயக்கச் செலவு (தேய்மானம் உட்பட வட்டி நீங்கலாக) இயக்க வருமானத்தில் 95 விழுக்காடுக்கு அதிகரிக்கக் கூடாது.

(2) இயக்க வருமானம் பின் ஆண்டில் திருப்பித்தர வேண்டிய கடன் மற்றும் வட்டியைவிட 1.5 மடங்கு அதிகமாக இருந்தாலொழிய பல்லவன் போக்குவரத்துக் கழகம் நீண்ட காலக்கடன் பெறக் கூடாது.

(3) நடப்புச் சொத்து நடப்புப் பொறுப்பை விட 1.5 மடங்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

## இணைப்பு II.

(265-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண். 32.

### பிற்பட்டோர் நலத் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1983–84 ஆம் ஆண்டுக்கான ரூ. 10,22,26,000 மானியக் கோரிக்கையை நான் இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் ஆகியோரின் நலனுக்காக தமிழக அரசு முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள் 1983–84 ஆம் ஆண்டில் எடுக்கவிருக்கும் முன்னேற்றப் பணிகள் ஆகிய விவரங்களைக் கீழே தருகிறேன்:—

2. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்புவரை பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர் நல ஆணையாளரால் ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றுடன், ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம்; காவல் துறையினரால் கவனிக்கப்பட்டு வந்தது. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளில் ஆதி திராவிடர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டு, ஆதி திராவிடர்கள், பழங்குடிகள், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், பிற்பட்டோர் ஆகியோரின் நலன்கள் அத்துறையால்

கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர், மக்கள் தொகையில்
பெரும் பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய
முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில், பிற்பட்டோர்
நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு 1969 ஆம் ஆண்டு மே
திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. அதுவரை ஆதி திராவிடர்
நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம்,
குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம்
தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.

3. இத்துறை இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி
ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 ஆம்
ஆண்டு வரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல
அதிகாரிகள் கவனித்து வந்தனர். 1974 ஆம் ஆண்டு மே திங்கள்
17 ஆம் நாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில்
மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டு
உள்ளனர். இந்த அதிகாரிகள் மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப்
பார்வையில் பணி புரிகின்றனர்.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி
ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத்துறை
அமைச்சரின் தலைமையில் ''மாநில பிற்பட்டோர் நல
ஆலோசனைக் குழு'' ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு 1974
ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது.
இக்குழுவை மீண்டும் திருத்தி அமைக்கும் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளது. இதுபோன்று மதுரை மாவட்டத்தில்
பிரமலைக்கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனை
கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக்
குழு செயல்பட்டு வருகிறது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971–72 முதல்
தனியாக மானியக் கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967–68-ல்
பிற்பட்டோர் வகுப்பினர் நலனுக்காக ரூ. 1,61,40,000 ஆக
இருந்த மானியத் தொகை ஆண்டு தோறும் வளர்ந்து 1983–84-ல்
ரூ. 10,22,26,000 ஆக எட்டியுள்ளது. இது பிற்பட்டோர் நல
னுக்கென அரசு மேற்கொண்டு வரும் தீவிர நடவடிக்கைகளைக்
காட்டுகிறது.

5. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு
மேற்கொள்ளும் பல்வேறு பொது திட்டங்கள் பிற்பட்ட
வகுப்பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வரு
கின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்தத்
துறையின் முக்கியமான பணிகள் சிலவற்றைக் கோடிட்டு காட்ட
விரும்புகிறேன்.

6. (i) படிப்பு உதவித் தொகை.—பிற்பட்ட வகுப்பினைச்
சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால் தான்
பிற்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள்
எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத்தைக் கருத்



தில் கொண்டு கல்வி மேம்பாட்டிற்கு வழி வகை செய்வது மிக
அவசியம். எனவே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும்,
குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்
களுக்கும் கல்வி வசதிக்காக படிப்பு உதவித்தொகை மற்றும்
உண்டி, உறையுள் வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது.
பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும்
குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து
மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித்
தொகை வழங்கப்படுகிறது. மேலும், இந்த இனத்து மாணவர்
களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப்புத்தகங்கள் இலவசமாக
கல்வித் துறை மூலம் அளிக்கப்படுகிறது. இந்த உதவித் தொகை
பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம்
ரூ. 5,000-க்குள் இருக்க வேண்டும். இந்தப் புதிய வருமான
வரம்பு 1981–82 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

உதவித்தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள்
முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண் பெற்
றிருக்க வேண்டும். ஆனால், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து
நீக்கப்பட்ட அனைத்து மாணவர்கள் முந்தைய ஆண்டுத்
தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. பிற்பட்ட
வகுப்பு மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்
ஒரு இலட்சம் ரூபாயுடன் 1948–49-ல் தொடங்கப்பட்டு 609
மாணவர்களுக்கு பயனளித்தது. பின்னர் இத் தொகை
1949–50 ஆம் ஆண்டில் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்ந்ததில்
2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960–61-ல் 19,900
மாணவர்களுக்கு ரூ. 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

1981–82 ஆம் ஆண்டிற்கு முன்பு வரை கல்லூரிகளில் படிக்கும்
மாணவர்களுக்கான உதவித்தொகை சென்னை பிற்பட்டோர்
நல இயக்குநரின் நேர்முக உதவியாளராலும், அந்தந்த மாவட்ட
பிற்பட்டோர் நல அலுவலர்களாலும், மதுரை கள்ளர் சீரமைப்பு
தனித் துணை ஆட்சியர் அவர்களாலும் வழங்கப்பட்டு வந்தது.

1982–83 ஆம் ஆண்டிலிருந்து அரசு கல்வி உதவித் தொகை
வழங்கும் திட்டத்தை மாற்றி அமைத்துள்ளது. கல்வி நிறு
வனங்கள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனங்களில் பயிலும்
மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு அந்தந்த கல்வி நிறுவனத்
தலைவர்களே உதவித்தொகை வழங்குவதற்கான அதிகாரத்தை
வழங்கி, பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பரம்பரை இனத்தைச்
சார்ந்த மாணவர்கள் பயிலும் கல்வி நிறுவனத்தாலேயே உதவித்
தொகை வழங்க வழிவகை செய்யும் புதிய நடைமுறை
அமுலாக்கப்பட்டு செயல்முறையில் உள்ளது. புதிய உதவித்
தொகை கோரும் மனுக்களுக்கு தகுதிக்கான அட்டைகளும்
இத்துறை அலுவலர்கள் மூலமாக கல்லூரிகளுக்கும் வழங்கப்
படுகின்றன. புதிய திட்டத்தின் மூலமாக உதவித் தொகைகளும்
வழங்கப்பட்டு வருகிறது. தகுதியான மாணவர்களுக்கு உதவித்
தொகைகள் வழங்குவதற்கு கல்லூரி நிறுவனங்களுக்கு முன்

[1983 ஏப்ரல் 11

வருடம் வழங்கப்பட்ட உதவித் தொகையில் 90 சதவீதம் முதல் தவணையாகவும் இந்தத் துறை மூலமாக வழங்கப்படுகிறது. இது பின்னால் சரிகட்டப்படுகிறது.

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காட்டும் :—

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இனத்தவர் எண்ணிக்கை.

| ஆண்டு. | | உயர்நிலைப் பள்ளிப் படிப்பு. | கல்லூரிப் படிப்பு. | ரூபாய் இலட்சங்களில் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1969–70 | .. | 41,361 | 2,828 | 21.16 |
| 1970–71 | .. | 53,769 | 3,173 | 25.55 |
| 1971–72 | .. | 60,614 | 3,805 | 30.85 |
| 1972–73 | .. | 67,772 | 4,638 | 34.29 |
| 1973–74 | .. | 65,876 | 4,338 | 34.38 |
| 1974–75 | .. | 60,661 | 4,673 | 35.66 |
| 1975–76 | .. | 61,845 | 3,964 | 29.64 |
| 1976–77 | .. | 57,026 | 3,985 | 33.65 |
| 1977–78 | .. | 1,10,639 | 4,183 | 29.80 |
| 1978–79 | .. | 1,84,772* | 3,002 | 31,08 |
| 1979–80 | .. | 1,71,486 | 6,939** | 33.66 |
| 1980–81 | .. | 1,65,820 | 6,398 | 35.16 |
| 1981–82 | .. | 1,69,413 | 7,438 | 38.69 |
| 1982–83 | .. | .. | .. | 43.82 |

(ஒதுக்கீடு.)

* இந்த ஆண்டில் 1977–78 ஆம் ஆண்டும் அடக்கம்.

** 1978–79 ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளி படிப்பு படித்த மாணவர்களுக்கான உதவித் தொகைகள்—அரசாணை பெறப் பட்ட பின்னர் 1979–80 ஆம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப் பட்டது. ஆதலால் 1979–80 ல் பயன் பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால் 1980–81-ல் அங்ஙனம் உதவித் தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

பிற்பட்ட வகுப்பினர் :

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 1969–70 | .. | 42,515 | 48,050 | 160.80 |
| 1970–71 | .. | 74,842 | 59,407 | 201.20 |
| 1971–72 | .. | 92,694 | 72,281 | 290.53 |
| 1972–73 | .. | 1,04,486 | 87,652 | 324.60 |
| 1973–74 | .. | 94,032 | 80,025 | 318.8 |
| 1974–75 | .. | 88,897 | 86,494 | 331.68 |
| 1975–76 | .. | 90,620 | 71,433 | 317.08 |
| 1976–77 | .. | 80,372 | 78,741 | 295.00 |
| 1977–78 | .. | 1,07,501 | 74,469 | 291.53 |
| 1978–79 | .. | 1,02,490 | 66,341 | 264.83 |
| 1979–80 | .. | 1,02,672 | 1,03,911 | 261.61 |
| 1980–81 | .. | 1,07,073 | 94,456 | 275.49 |
| 1981–82 | .. | 1,10,155 | 1,04,779 | 293.25 |
| 1982–83 | .. | .. | .. | 329.18 |



1983 ஏப்ரல் 11[

(ஒதுக்கீடு)

குறிப்பு :—

(1) 1977–78 ஆம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி மாணவர்களுக்கான உதவித் தொகை பொருள் வடிவில் அதாவது புத்தக வடிவில் வழங்கப்பட்டது. சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் நேரிடையாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்தப் படுகின்றன.

(2) 1978–79-ஆம் ஆண்டில் இவ்வுதவித் தொகையினால் பயனடைந்தோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்குக் காரணம் உதவித் தொகை வழங்க +1, +2 வகுப்புகளைப் பாகுபடுத்த மைய அரசின் விளக்கமும், அரசு ஆணையும் காலம் கடந்து பெறப்பட்டமையாகும்.

(3) 1979–80 ஆம் ஆண்டில் கல்லூரி வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக அதிகரித்துள்ளது. ஆனால் செலவினத்தில் அதன் மாறுதல் காட்டப்படவில்லை. காரணம் முந்தைய ஆண்டுகளில் கல்லூரி விடுதிகளில் தங்கியிருந்த புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு விடுதி வசதியுடனான உதவித்தொகை வழங்கப்பட்டது. ஏனெனில் ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 மாணவர்கள் மேல் நிலைப் பள்ளிகளைச் சார்ந்திருந்தனர். மேலும் இப்பள்ளிகளில் அவைகளுக்கான சொந்த விடுதிகள் பொதுவாக நடத்தப்படுவதில்லை.

(4) 1978-79 ம் ஆண்டு மேல் நிலைப் பள்ளி படிப்பு படித்த மாணவர்களுக்கான உதவித் தொகைகள் அரசாணை பெறப்பட்ட பின்னர் 1979-80 ம் ஆண்டில் தான் சேர்த்து வழங்கப்பட்டது. ஆதலால் 1979-80-ல் பயன் பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால் 1980-81-ல் அங்ஙனம் எந்த படிப்பிற்கும் உதவித்தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டும், மேலும், கலை, அறிவியல் , மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புகளுக்கும் உதவித் தொகை வழங்கப்

[1983 ஏப்ரல் 11

படுகிறது. தகுதி பெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்களும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களும் படிப்பு உதவித் திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். மேலும் பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) பயிற்சிக்காக 1973-74 ம் ஆண்டு முதல் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு :

| ஆண்டு. | உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1973—74 | 32 |
| 1974—75 | 40 |
| 1975—76 | 47 |
| 1976—77 | 72 |
| 1977—78 | 68 |
| 1978—79 | 67 |
| 1979—80 | 65 |
| 1980—81 | 61 |
| 1981—82 | 45 |

1982—83, (1982 டிசம்பர் திங்கள் 31ம் நாள் வரை) 26
1983—84, ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்றுவரும் உண்டி மற்றும் உறைவிடச் செலவுகள் 1971-72 ம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும் படிப்பு வகையும். | சென்னையில் | | வெளியூர்களில் | |
|---|---|---|---|---|
| | பி.வ.* | கு.ப.நீ.இ.** | பி.வ.* | கு.ப.நீ.இ.** |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ஒவ்வொரு மாதத்திற்கான ரூபாய்) | | | |
| 1. கலை, விஞ்ஞானம் சட்டம். | 60 | 70 | 50 | 55 |
| 2. மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருந்துவம் ஆகியவை. | 60 | 75 | 55 | 70 |
| 3. தொழில் நுட்பக் கல்வி. | 50 | 60 | 45 | 50 |

* பி.வ.—பின்தங்கிய வகுப்பினர்.
** கு.ப.நீ.இ.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.



1983 ஏப்ரல் 11]

(v) உதவித் தொகை வழங்குவதற்காகக் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | செலவு 1981-82 | மதிப்பீடு 1982-83 | திருத்திய மதிப்பீடு 1982-83 | மதிப்பீடு 1983-84 |
|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| பிற்பட்டோர் வகுப்பு மாணவர்கள். | 2,93,76 | 3,28,78 | 3,28,22 | 3,28,22 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள். | 38,59 | 43,82 | 43,82 | 43,82 |
| மொத்தம் .. | 3,32,35 | 3,72,60 | 3,72,04 | 3,72,04 |

7 (அ) படிப்புக் கட்டணச் சலுகைகள் :—மேல் நிலைப் பள்ளி படிப்பு வரை (ப்ளஸ் 2) சாதி பாகுபாடில்லாமல் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மேல் நிலைப் பள்ளிப் படிப்பில் (ப்ளஸ் 2 தமிழை போதனா மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் எந்த விதமான படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை, ஆனால் மேல் நிலைப் படிப்பில் (ப்ளஸ் 2) ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடிமக்கள், மற்றும் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்டு மேல் நிலைப் பள்ளி கல்வி கற்கும் மாணவர்கள் தமிழ்நாடு கல்வி விதிகள் 92-ன் கீழ் வழங்கப்படும் படிப்புக் கட்டணச் சலுகைகள் பெறத் தகுதியுடையவராவர்.

மேல் நிலைப் பள்ளி (ப்ளஸ் 2) வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித் துறையின் மூலமும் பிற்பட்டோர் நலத்துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன :

[1983 ஏப்ரல் 11

| வருமானப் பிரிவு. | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பிற்பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு | முழுச் சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண். 92-ன் படி. | முழுச் சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண். 92-ன் படி. | அரைச் சம்பளச் சலுகை தமிழ் நாடுகல்வி விதி எண். 92-ன்படி படி மிகுந்த அரைச் சம்பளம் இத்துறையின்மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங் கப்படுகிறது. |
| ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,501 முதல் 5,000 வரை வருமானம் உள்ளவர் வர்களுக்கு. | மூன்று பிரிவினருக்கும் அரைச் சம்பளச் சலுகை பிற்பட்டோர் நலத்துறையின் முலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |

7 (ஆ) கடன் உதவித் தொகை.—தொழில் நிறுவனங்களில் படிக்கும் மாணவ—மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோர்/ பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 5,001 லிருந்து ரூ. 10,000க் குட்பட்டு இருந்தால், வருடத்திற்கு ரூ. 500 விதம் ஒரு குறிப் பிட்ட படிப்பிற்கு படிக்கும் காலம் முழுவதற்கும் அதிக பட்சம் ஐந்து வருட காலத்திற்கு ரூ. 2,500 க்கு மேற்பாடது இத்துறை யின் மூலமாக கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த புதிய வருமான வரம்புகள் 1981-82-ம் ஆண்டிலிருந்து நடை முறைக்கு வந்துள்ளன.

8 (i) அரசு மாணவர் இல்லங்கள்.—மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ் விடுதிகளில்



1983 ஏப்ரல் 11

பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப் படுகின்றனர்.

| | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான விடுதிகள். | பின்தங்கிய வகுப்பினருக்கான விடுதிகள். | தாழ்த்தப் பட்ட வகுப்பினர் விடுதிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (விழுக்காடு). | |
| பிற்பட்ட வகுப்பினர் | 10 | 65 | 70 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | 60 | | |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர். | 25 | 25 | 75<br>5 |
| இதர வகுப்பினர் | 5 | 10 | |
| மொத்தம் .. | 100 | 100 | 100 |

பெற்றோர்/பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000க்கு மிகை படாது இருக்கும் மாணவர்கள் இவ்விடுதிகளில் சேர்வதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும், குற்ற மரபினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இனத்து மாண வர்களுக்காகவும் நடத்தப் பெறும் விடுதிகளின் விவரங் கள் :—

| ஆண்டு. | பிற்பட்ட வகுப்பினர். | | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து. நீக்கப்பட்ட இனத்தவர்கள். | |
|---|---|---|---|---|
| | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969-70 | 11 | 979 | 37 | 3,619 |

[1983 ஏப்ரல் 11

| ஆண்டு | பிற்பட்ட வகுப்பினர். | | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்கள். | |
|---|---|---|---|---|
| | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | | (4) |
| 1970-71 | 28 | 2,144 | 40 | 4,039 |
| 1971-72 | 82 | 5,333 | 46 | 4,369 |
| 1972-73 | 123 | 7,608 | 46 | 4,369 |
| 1973-74 | 144 | 9,348 | 54 | 5,099 |
| 1974-75 | 177 | 11,210 | 54 | 5,099 |
| 1975-76 | 196 | 12,060 | 53* | 5,069 |
| 1976-77 | 215 | 13,305 | 54* | 4,919 |
| 1977-78 | 227 | 14,065 | 57 | 5 219 |
| 1978-73 | 237 | 14,565 | 57 | 5,219 |
| 1979-80 | 261 | 15,533 | 60 | 5,369 |
| 1980-81 | 295 | 17.263 | 62 | 5,469 |
| 1981-82 | 335 | 19,263 | 62 | 5,469 |
| 1982-83 | 375 | 21,028 | 65 | 5,684 |

*தேவையான மாணவர்கள் இல்லாததினால் மூன்று குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோருக்கான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டன.

(3) மேலே குறித்த 440 விடுதிகளில் 56 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்கானவை.

(4) 1983-84 ம் ஆண்டில் மேலும் நாற்பது பிற்பட்ட மணவர்கள் விடுதிகளும், மூன்று குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் விடுதிகளும் ரூ. 23.19 இலட்சங்கள், ரூ. 1.91 இலட்சங்கள் செலவில் முறையே திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

5 (அ) விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு குறைந்த பட்ச மரச்சாமான்கள் (பர்னிச்சர்) வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் நான்காம் கட்டமாக 1983-84 ஆம் ஆண்டில்



1983 ஏப்ரல் 11]

6,000 மாணவர்களுக்கு மரச்சாமான்கள் வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 483 விடுதிகளையும் பராமரிக்க 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 3,08,12,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டு முதல் மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுச் செலவுத் தொகை கீழ்க் கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| | சென்னை | வெளியூர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூபாய் | ரூபாய் |
| 1 கல்லூரி மாணவர் விடுதிகள் .. | 95 | 80 |
| 2 தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 95 | 80 |
| 3 இதர விடுதிகள் .. .. | 60 | 60 |

குறிப்பு 1 :—(1) அனைத்து மாணவியர்க்கும் ஒப்பனைக்காக மேற்குறித்த தொகையை விட அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும், மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு மேலும் ரூபாய் ஒன்றும் அதிகம் அளிக்கப்படுகிறது. மேலும், சில்லறைச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 2 வீதமும் ஒவ்வொரு மாணவியர்க்கும் மாதம் ரூ. 1 வீதமும் அளிக்கப்படுகிறது.

(2) அரசு உணவு விடுகளில் இது நாள் வரை ரூ. 55 மற்றும் ரூ. 65 வீதம் மாதத்திற்கு சம்பளமும், இலவச உணவும் பெற்று வந்த சமையற்காரர்கள் அனைவருக்கும் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 150-5-200-10-300 என்ற அடிப்படை சம்பள விகிதத்தில் எல்லா இதர படிகளும் சேர்த்து சம்பளமும் விடுதிகள் திறந்திருக்கும் காலங்களில் இலவச உணவும் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

6. மாணவர் விடுதிக்கான கட்டிடங்கள்.—மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக் கொண்டு தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 50 விடுதிகளில் 25 விடுதிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. 1981-82-ல் புதிதாக மூன்று விடுதிகள், விழுப்புரம் தென்னாற்காடு மாவட்டம், ஆரணி வடாற்காடு மாவட்டம் மற்றும் திருத்தணி செங்கல்பட்டு மாவட்டம் இவைகளில் கட்ட அரசு ரூ. 2. இலட்சங்கள் ஒப்பளிப்பு செய்தது.

[1983 ஏப்ரல் 11

அவற்றில் ரூ. 15 இலட்சங்களை 1981–82-லும், மீதி ரூ. 9.05
இலட்சத்தை 1982–83 ஆண்டிலும் செலவிடவும் ஆணையிடப்
பட்டிருந்தது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
முடிக்கப் பெறாத நிலையில் உள்ள ஏழு விடுதி கட்டிட
வேலைகளை முடிப்பதற்காகவும், புதிய கட்டிடம் கட்டவும்
அரசு 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 70.40 இலட்சங்கள் ஒப்பளிப்பு
செய்துள்ளது.

9. (i) பள்ளிகள்.—குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காக செயல்பட்டு வரும் 277 பள்ளிகளின் விபரம் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| மாவட்டங்கள். | மேல்நிலைப்பள்ளி. | | உயர்நிலைப்பள்ளி. | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ-மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ-மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 வட ஆற்காடு .. | .. | .. | .. | .. |
| 2 தென்னாற்காடு | .. | .... | .. | .. |
| 3 மதுரை (கள்ளர் சீரமைப்பு). | 2 | 1,576 | 8 | 1,955 |
| 4 இராமநாதபுரம் | .. | .. | .. | .. |
| 5 திருநெல்வேலி | .. | .. | .. | .. |
| 6 சேலம் | .. | .. | .. | .. |
| 7 பெரியார் | .. | .. | .. | .. |
| 8 கோவை | .. | .. | .. | .. |
| 9 தர்மபுரி | .. | .. | .. | .. |
| மொத்தம்.. | 2 | 1,576 | 8 | 1,955 |

| மாவட்டங்கள். | நடுநிலைப் பள்ளிகள். | | ஆரம்பப் பள்ளிகள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ-மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ-மாணவியர். |
| | (6) | (7) | (8) | (9) |
| 1 வட ஆற்காடு | .. | .. | 4 | 445 |
| 2 தென்னாற்காடு | .. | .. | 1 | 225 |



1983 ஏப்ரல் 11]

| மாவட்டங்கள் | நடுநிலைப் பள்ளிகள் | | ஆரம்ப பள்ளிகள் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ-மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ-மாணவியர். |
| | (6) | (7) | (8) | (9) |
| 3 மதுரை (கள்ளர் சீரமைப்பு). | 30 | 12,207 | 208 | 29,497 |
| 4 இராமநாதபுரம் | 1 | 390 | 5 | 1,057 |
| 5 திருநெல்வேலி | 1 | 322 | 9 | 1,098 |
| 6 சேலம் | 1 | 170 | 1 | 261 |
| 7 பெரியார் | 1 | 350 | 1 | 272 |
| 8 கோவை | .. | .. | 1 | 36 |
| 9 தர்மபுரி .. | 2 | 430 | 1 | 122 |
| மொத்தம்.. | 36 | 13,869 | 231 | 33,013 |

மொத்த பள்ளிகள்—277

மொத்த மாணவர்கள்—50,413

9 (ii) அரசு இத்துறை மூலம் மதுரை மாவட்டத்தில் நடத்தும் 2 கள்ளர் மேல் நிலைப்பள்ளிகளுக்காக அறிவியல் சோதனைக் கூடங்கள் கட்ட ரூ. 5.00 இலட்சங்கள் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9 (iii) இவ்விரு மேல் நிலைப் பள்ளிக்காக கட்டப்படவிருக்கும் 2 அறிவியல் சோதனைக் கூடங்களுக்குத்தேவையான உபகரணங்கள், பொருள்கள் வாங்கி வழங்க ரூ. 2.00 இலட்சங்கள் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9 (iv) ஆசிரியர் மாணவர்களுக்கு நவீன கழிவறை வசதி செய்து தரவேண்டிய அவசியத்தை முன்னிட்டு அரசு இத்துறை மூலம் மதுரை மாவட்டத்தில் நடத்தப்படும் 2 கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் 8 உயர்நிலைப் பள்ளிகளிலும் கழிவறைகள் கட்டுவதற்காக ரூ. 3.00 இலட்சங்கள் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9 (v) மாணவர்களைச் சிறந்த முறையில் பயிலுவிக்க மேலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு இத்துறை மூலம் மதுரை மாவட்டத்தில் நடத்தப்படும் 2 கள்ளர் மேல் நிலைப் பள்ளிகளிலும் மற்றும் 8 உயர்நிலைப் பள்ளிகளிலும் போதனை உபகரணங்கள் (உம்) உலகப்படங்கள் முதலியன வாங்கி வழங்க ரூ. 0.16 இலட்சம் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9. (vi) இத்துறை மூலம் நடத்தப்படும் பள்ளிகளில், விளையாடுமிடம் உள்ள பள்ளிகளுக்கு ரூ. 3,000 விதமும், விளையாடுமிடம் இல்லாத பள்ளிகளுக்கு ரூ.1,500-ம் விளையாட்டு கருவிகள் (பந்துகள், வலைகள், பந்தடிக்கும் மட்டைகள முதலியன) வாங்கி வழங்க வகை செய்யும் வகையில் அனு மதித்துள்ளது. இதற்கென ரூ. 0.20 இலட்சம் 1983–84-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு எட்டாவது மற்றும் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் மற்றும் அடுத்த அதிக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவியருக்கு முதல் மற்றும் 2-வது பரிசு வழங்க ரூ. 4,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் மாணவியர் ஒருவருக்கும் தலா ரூ. 500 மதிப்பில் பரிசு வழங்கப் படுகிறது.

மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| | | ரூபாய். |
| பள்ளி இறுதி தேர்வு — | | |
| | முதற் பரிசு.. .. .. .. .. | 100.00 |
| | இரண்டாவது பரிசு .. .. .. .. | 50.00 |
| எட்டாவது வகுப்பு— | | |
| | முதற் பரிசு .. .. .. .. .. | 50.00 |
| | இரண்டாவது பரிசு .. .. .. .. | 10.00 |

மேல்நிலைப் பள்ளித் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப் பெண் பெறும் 1 மாணவன், 1 மாணவிக்குப் புதிதாக பரிசு வழங்கு திட்டத்தையும் 1983–84 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட வாறு அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி ஆண்டு தோறும் ரூ 1,000 மதிப்பில் இரு பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கென ரூ 0·04 இலட்சம் 1983–84-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

பரிசு பெற தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவன் தான் கடைசி யாகப் பயின்ற மாவட்டத்தில் இல்லாமல் வெளி மாவட்டத்தில் வசித்தாலோ அல்லது மேற்படிப்பைத் தொடர்ந்து கொண்



டிருந்தாலோ பரிசு பெற்றுக்கொள்ள போக்குவரத்துச் செலவுக்கு
உதவிப் பணமாக ரூ. 100-ம் அவ்வாறில்லாமல்தான் கடைசியாக
படித்த மாவட்டத்திலேயே இருந்தாலோ அல்லது படிக்
துக் கொண்டிருந்தாலோ பரிசு பெற போக்குவரத்துச் செலவுக்கு
உதவிப் பணமாக ரூ. 50 கொடுக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது.

கல்விச் சுற்றுப் பயணம்.—ஒவ்வொரு ஆண்டும் குற்றமரபினர்
பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் பள்ளிகளில்
படிக்கும் மாணவர்களின் பொது அறிவு மற்றும் பாட அறிவு
வளர்வதற்காக அவர்கள் கல்விச் சுற்றுப் பயணம் அழைத்துச்
செல்லப்படுகின்றனர்

பகுதி நேரப் போதனை.—பிற்பட்ட வகுப்பினர் மற்றும்
குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவ/
மாணவியர் உணவு விடுதிகளில் சேர்ந்து படிக்கும் ஒன்பது
மற்றும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவ/
மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்
கள் சமூகத்தில் மற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு
சரிசமமான அறிவினைப் பெறவும் எல்லா உயர்நிலைப் பள்ளி
விடுதிகளிலும், பகுதிநேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்
பட்டுள்ளனர்.

10 மதிய உணவு.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து
நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் தம் வறுமையின் காரணமாக
பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளி
களை விட்டுச் செல்லாமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக இப்
பள்ளிகளில் அம் மாணவர்களுக்கு மதியஉணவு அளிக்கப்படுகிறது.
இதனால் மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்
டிருக்கின்றது. அரசு இதற்கான அதிகச் செலவினத்தைத் தவிர்க்க
அம் மாணவர்களுக்கு (கேர்) நிறுவனத்தின்மூலமாக மதிய உணவு
வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இது அரசுப் பள்ளிகளில்
மார்ச் 1975 ஆம் ஆண்டு முதற்கொண்டும் திருநெல்வேலி,
இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளி
களில் சனவரி திங்கள் 1976 ஆம் ஆண்டு முதற்கொண்டும் நடை
முறையில் இருந்தது. பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் நகர்ப்
புறம் மற்றும் நாட்டுப்புறங்களில் நடத்தப்படும் எல்லா குற்றப்
பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பள்ளிகளிலும்
1—7—1982-லிருந்து முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்
செயல்பட்டு வருகிறது. ஒரு சத்துணவின் மதிப்பு 45 பைசா
வாகிறது. முதலமைச்சரின் புதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ்
எல்லா பள்ளி மாணவர்களுக்கும் அதாவது 5 முதல் 9 வரை
மற்றும் 10 முதல் 14 வயதுவரை உள்ள மாணவர்கள் பயன்பெறு
கின்றனர். 1983–84 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்காக
ரூ. 23,82,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

[1983 ஏப்ரல் 11

11. உணவு மானியங்கள்:—(1) தனிப்பட்ட நபர்களாலும் சமூக நல நிலையங்களாலும் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு 1955–56 ஆம் ஆண்டு வரை ஆதி திராவிடர் நலத்துறை உணவு மானியம் வழங்கி வந்தது. 1956–57 ஆம் ஆண்டு முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதிகளைப் புதியதாக அங்கீகரிக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்து தேவையான இடங்களில் அரசே விடுதி களைத் திறந்து வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கப்; படாத தனியார் விடுதிகளையும் அரசே எடுத்து அரசாங்க விடுதி களாக மாற்றி நடத்தி வருகின்றது. தற்பொழுது பிற்பட்டோர் நலத்துறை உதவி பெறும் தனியார் உணவு விடுதிகள்48 ஆகும். இவைகளுக்கு உணவு செலவுக்காக பத்து மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. 1981–82 ஆம் ஆண்டு முதல் சென்னை மற்றும் மாவட்ட, வட்ட தலை நகரங்களில் உள்ள மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ. 45 ஆகவும் மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ. 40 ஆகவும் உணவு மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக அங்கீகரிக்கப்பட் டுள்ள விடுதிகளின் விவரம் கீழ்வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர். | | அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளின் எண் ணிக்கை. |
|---|---|---|
| சென்னை | .. .. .. .. | 5 |
| செங்கற்பட்டு | .. .. .. .. | 4 |
| வட ஆற்காடு | .. .. .. | 2 |
| தென்னாற்காடு | .. .. .. | 3 |
| தஞ்சாவூர் | .. .. .. .. | 14 |
| திருச்சிராப்பள்ளி | .. .. .. | 2 |
| மதுரை | .. .. .. .. | 10 |
| இராமநாதபுரம் | .. .. .. | 2 |
| திருநெல்வேலி | .. .. .. | 3 |
| கோயம்புத்தூர் | .. .. .. | 1 |
| பெரியார் | .. .. .. .. | 1 |
| நீலகிரி | .. .. .. .. | 1 |
| மொத்தம் | .. | 48 |



1983 ஏப்ரல் 11]

உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாண வர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 2,500 லிருந்து ரூ 5,000-க்கு 1981–82 ஆண்டு முதல் உயர்த்தப்பட் டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டுக்கு ரூ. 10,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2, கல்லூரிப் படிப்பு :—கல்லூரிகளில் படிக்கும் மாணவர் களுக்கு இவ்வளவு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியைச் சார்ந்த விடுதி களில் தங்கிப் படித்தாலும், கல்வித்துறையினர் அல்லது ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் அங்கீகாரம் பெற்றுள்ள விடுதிகளில் தங்கிப் படித்தாலும், அவர் களுக்குப் படிப்பு உதவித் தொகையுடன் உணவுச் செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விடுதி களின் விபரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | மாவட்டம். | | விடுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1 | சென்னை | .. .. .. | 4 |
| 2 | திருச்சிராப்பள்ளி | .. .. | 1 |
| | மொத்தம் | .. | 5 |

தற்போது புதிதாக எந்த தனியார் விடுதியையும் அங்கீகரி ப தில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. இம் மாணவர்களுக்கு உண்டி மற்றும் உறையுள் தொகை பத்தி 6 (iv)-ல் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் வழங்கப்படுகிறது.

12 புததகங்களும், எழுது பலகைகளும் —அரசினர் நடத் தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக புத்தகங்களும், எழுது பலகைகளும் வழங்கப்படுகின்றன இவ் வாறு இலவச உதவி பெற்ற மாணவர்கள் 1969–70 ஆம் ஆண்டில் 7,600. பேர்கள். அதனால் பயன்பெறும் மாணவர்களின் எண். ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப்பள்ளி களில் முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரைபடிக்கும் மாண வர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களும் மற்றும் எழுது பலகை களும், 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குப்புத்தகங்களும் நோட்டுப்புத்தகங்களும் அளிக்கப் படுகின்றன. இதனால் 1982–83 ஆம் ஆண்டில் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 40,108 ஆகும். 1983–84 ஆம் ஆண்டில் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 42,000 ஆக உயரும்.

13. (i) சீருடைகள் வழங்குதல் —மதுரை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் உள்ள குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியர்களுக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும், இரண்டுமுறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. முதல் முறை பள்ளி ஆரம்பித்தவுடன் அல்லது தீபாவளிக்கு முன்பாகவும், இரண்டாவது முறை பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகின்றன. முதல் முதலாக இவ்வாறு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969–70 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு முறை மட்டும் சீருடைகள் வழங்கப்பட்டது. இப்பொழுது இருமுறை வழங்கப் படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972–73 ஆம் ஆண்டில் 3,91,000 ரூபாயும், 1973–74 ஆம் ஆண்டில் 8,06,000 ரூபாயும், 1974–75 ஆம் ஆண்டில் 6,58,000 ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 10,39,000 ரூபாயும், 1976–77 ஆம் ஆண்டில் 8,94,000 ரூபாயும் 1977–78 ஆம் ஆண்டில் 10,47,000 ரூபாயும் 1978–79 ஆம் ஆண்டில் 9,37,000 ரூபாயும், 1979–80ஆம் ஆண்டில் 9,08,000 ரூபாயும், 1980–81 ஆம் ஆண்டில் 14,25,000 ரூபாயும் 1981–82 ஆம் ஆண்டில் 19,05,000 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் நடைமுறையில் இருந்து வருவதுபோல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட இனத்தவருக்கான பள்ளிகளில் எட்டாம் வகுப்புவரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இரண்டு செட் சீருடைகள் 1981–82 ஆம் ஆண்டு முதல் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 22,71,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டில் 24,18,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1971–72-ஆம் ஆண்டு முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட வகுப்பு பள்ளி மாணவ, மாணவியர் உணவு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் ஆண்டு தோறும் இரண்டு முறை சீருடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973–74-ஆம் ஆண்டில் 1,67,000 ரூபாயும். 1974–75 -ஆம் ஆண்டில் 2,16,000 ரூபாயும், 1975–76-ஆம் ஆண்டில் 2,38,000 ரூபாயும், 1976–77-ஆம் ஆண்டில் 2,98,000 ரூபாயும் 1977–78-ஆம் ஆண்டில் 3,03,000 ரூபாயும், 1978–79-ஆம் ஆண்டில் 3.80,000 ரூபாயும், 1979–80-ஆம் ஆண்டில் 4,05,000 ரூபாயும், 1980–81-ஆம் ஆண்டில் 5,33,000 ரூபாயும், 1981–82 -ஆம் ஆண்டில் 6,97,000 ரூபாயும் செலவிடப்பட்டது. 1982–83 -ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 8,62,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983–84-ஆம் ஆண்டில் 9,23,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(i) நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல்.—கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், ஆதி திராவிட மாணவர்களுக்கும் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில், அதிகத் திறமைப் பெற 1975–76-ஆம் ஆண்டு முதல் தனிப்பயிற்சி திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு 1982–83 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கப்பட்டது. 1983–84-ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

14. ஆசிரியர்கட்கு வீடுகள்.—குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ. 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 1983–84-ஆம் ஆண்டில் 13 வீடுகள் கட்டுவதற்கு ரூ1.35 இலட்சங்கள் ஒதுக்கப் பட்டுள்ளது.

15. ஐ.ஏ.எஸ். ஐ.பி.எல். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான சிறப்பு பயிற்சிக் கூடம் — 1971–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் உயர் அரசு பணிகளுக்கான தேர்வுகள் எழுத பயிற்சி அளிக்கும் வகையி சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் நடந்த யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் கலந்து கொண்டு தேறிய மாணவர்கள் விவரங்கள் பின்வருமாறு—

[1983 ஏப்ரல் 11

பழைய முறை.

| அணி எண். (1) | ஆண்டு. (2) | சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. (3) | யு. பி. எஸ். ஸி. தேர்விற்குச் சென்றவர்கள். (4) | நேர்முக தேர்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். (5) | நேர்முக தேர்விற்கு பின் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். (6) | ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். (7) | மத்திய அரசுப் பணிகள். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1971–72 | 12 | 8 | 3 | .. | .. | .. |
| 2 | 1972–73 | 57 | 34 | 6 | 1 | .. | 2 |
| 3 | 1973–74 | 46 | 33 | 4 | 1 | 1 | .. |
| 4 | 1974–75 | 55 | 46 | 8 | .. | 1 | 2 |
| 5 | 1975–76 | 60 | 52 | 3 | .. | 1 | .. |
| 6 | 1976–77 | 40 | 35 | 2 | 1 | .. | .. |
| 7 | 1977–78 | 42 | 38 | 1 | .. | .. | 1 |

புதிய முறை.

| அணி எண். (1) | ஆண்டு. (2) | பூர்வாங்கத் தேர்விற்குச் சேர்க்கப்பட்டவர்கள். (3) | அதில் தேறியவர்கள். (4) | யு.பி.எஸ்.ஸி. தேர்விற்கு சென்றவர்கள். (5) | நேர்முகதேர்விற்கு தேர்வு செய்யப்பட்டவர்கள். (6) | நேர்முகத் தேர்வில் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட வர்கள் (7) | ஐ.ஏ. எஸ்., ஐ பி.எஸ். (8) | மத்திய அரசுப் பணிகள் (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1979 | 48 | 12 | 16 (12+4*) | 4 | 1 | .. | |
| 9 | 1980 | 49 | 22 | 27 (22+5*) | 6 | .. | .. | 2 |
| 10 | 1981 | 42+ 90** | 8+4** | 4+3** | | | | |
| 11 | 1982 | 38+ 62** | 5+5** | 5+5** | .. | .. | .. | .. |

முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

* வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

** துணைப் பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்பட்டவர்கள்.



1983 ஏப்ரல் 11]

இது தவிர, இந்நிலையத்தில் பயிற்சிப் பெற்ற 19 மாணவர்கள் பல்வேறு துறைகளில் கீழ்க்கண்டவாறு பதவி பெற்றனர்.

| பதவியின் பெயர். | எண்ணிக்கை |
|---|---|
| 1. துணை ஆட்சியாளர்கள் .. .. | 3 |
| 2. இணை வணிக வரி அலுவலர் .. .. | 1 |
| 3. துணை பேராசிரியர்கள் .. .. | 7 |
| 4. ரிசர்வ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அரசு உடைமையாக்கப்பட்ட வங்கிகள் (இளநிலை அலுவலர்). .. .. | 3 |
| 5. வருமான வரி முதல் வகுப்பு அலுவலர் .. | 1 |
| 6. காப்பீட்டுக் கழகம் பயிற்சி அலுவலர் .. | 1 |
| 7. மாவட்ட கல்வி அலுவலர் .. .. | 1 |
| 8. கல்வெட்டுக்கலை உதவி அலுவலர் (கர்நாடக அரசு). | 1 |
| 9. எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கழகம். .. .. .. .. | 1 |

சென்னையில் உள்ள இந்தப் பயிற்சிக் கல்லூரிக்கு இறுதித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதற்காக மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஒவ்வொரு நகரங்களிலும் 50 மாணவர்களைக் கொண்ட ஒரு மாலை நேர துணைப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து அங்கு பூர்வாங்கத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார்படுத்த அரசு ஆணை பிறப்பித்தது. இந்தத் துணைப் பயிற்சி நிலையங்கள் 1981-ஆம் ஆண்டில், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் துவக்கப்பட்டன. 1982 ஆம் ஆண்டு முதல் திருநெல்வேலியிலும் செயல்படுகிறது.

துணை பயிற்சி நிலையங்களில் 1982 ஆம் ஆண்டு பயிற்சி பெற்றவர்களின் விவரங்கள் கீழ் வருமாறு :—

| | |
|---|---|
| கோயம்புத்தூர் .. .. .. .. | 11 |
| மதுரை .. .. .. .. .. | 26 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 14 |
| திருநெல்வேலி .. .. .. .. | 11 |
| மொத்தம் ... | 62 |

[1983 ஏப்ரல்

இத்துடன் ஒரு முன்னோடி திட்டமாக பல்கலைக் கழகங்களில் முதுநிலைப் பட்டப் படிப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் 10 பிற்பட்ட வகுப்பு மாணவர்களை, புதுடில்லியில் உள்ள '' டாக்டர் ராவின் அனைத்திந்திய ஆட்சிப் பணி பயிற்சி மன்றம், புதுடில்லி '' என்ற நிறுவனத்தின் மூலமாக மத்திய அரசு நடத்தும் தேர்வாணைக் குழுவின் குடிமைப் பணி தேர்வுக்க தல்ல பயிற்சி அளித்து அனுப்பி வைப்பது என்று அரசு உத்தேசித் துள்ளது.

மேலும் இந்திய அரசின் தேர்வாணைக் குழு நடத்தும் அகில இந்தியத் தேர்வுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 15 பிற்பட்ட வகுப்பு மாண வர்களுக்கும், 15 ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது. அம்மாணவர்களுக்கு கைச் செலவுக் காகவும், போக்குவரத்துச் செலவுக்காகவும், மாதம் ரூ. 40 வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியில் பலன் பெற்றவர்கள் எண் ணிக்கை பின் வருமாறு :—

| வரிசை எண். | | வருடம். | அனுமதிக்கப் பட்டவர்கள். | | தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | | | பிற்பட்ட வகுப்பினர். | தாழ்த்தப் பட்டவர் கள். | பிற்பட்ட வகுப்பினர். | தாழ்த்தப் பட்ட வர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | 1 | 1973–74 | 6 | 3 | .. | .. |
| 2. | 2 | 1974–75 | 15 | 7 | 2 | .. |
| 3. | 3 | 1975–76 | 15 | 6 | 1 | .. |
| 4. | 4 | 1976–77 | 14 | 2 | .. | .. |
| 5. | 5 | 1977–78 | 15 | 1 | 2 | .. |
| 6. | 6 | 1978–79 | 12 | 3 | 3 | .. |
| 7. | 7 | 1979–80 | 11 | 5 | .. | .. |
| 8. | 8 | 1980–81 | 5 | 1 | .. | .. |
| 9. | 9 | 1981–82 | 13 | 2 | .. | .. |
| 10. | 10 | 1982–83 | 15 | .. | .. | .. |

16. (i) பொருளாதார வளர்ச்சி.—இத்திட்டத்தின்கீழ் முடி திருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்து வர தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1971–72 ஆம் ஆண்டு முதல் சென்னை நகரத்திற்கும் விரிவாக்கப்பட்டது.



1983 ஏப்ரல் 11]

சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந் தோரின் எண்ணிக்கை பின்வருமாறு :

| ஆண்டு. | | | பயன் அடைந்த நபர்கள். |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| 1969–70 | .. | .. | 1542 |
| 1970–71 | .. | .. | 1512 |
| 1971–72 | .. | .. | 1633 |
| 1972–73 | .. | .. | 1654 |
| 1973–74 | .. | .. | 4081 |
| 1974–75 | .. | .. | 3961 |
| 1975–76 | .. | .. | 3506 |
| 1976–77 | .. | .. | 3695 |
| 1977–78 | .. | .. | 4095 |
| 1978–79 | .. | .. | 7240 |
| 1979–80 | .. | .. | 8000 |
| 1980–81 | .. | .. | 8000 |
| 1981–82 | .. | .. | 8000 |
| 1982–83 | .. | .. | 7445* |

*முடி திருத்தும கருவிகளுக்கு அதிக தேவை இல்லாததால் இவ்வாண்டில் 3000 முடிதிருத்தும் கருவிகள் மட்டும் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளன. உபரியாக இருந்த தொகையில் மேலும் 445 சலவைத் தொழிலாளிகளின் கருவிகள் வாங்கி விநி யோகிக்கப்பட்டன.

(ii) 1982–83 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின் கீழ் ரூ. 19,42,000-ம் 1983–84 ஆம் ஆண்டிற்கு, ரூ. 19,42,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவை தவிர சலவைத் தொழிலாளர்கள் இயங்கும் சலவையகம் நடத்த பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூ. 165 மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ரூ. 1,050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு வங்கியிலிருந்து கடன் பெற வசதியாக ஒவ்வொரு சலவைத் தொழிலாளர் களுக்கும் ரூ. 210 மான்யமாகவும் வழங்கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,000 அடையாள ஒதுக்கீடாக ஒதுக்கப் பட்டுள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் திட்டம் 1979–80-ல் ஆரம் பிக்கப்பட்டது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூ. 100 ஆகும். இதன் மதிப்பு 1981–82 முதல் ரூ. 150 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் சேலம், தென்னாற்காடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் செயலாக்கப்பட்டது. இது 1979–80 ஆம்

[1983 ஏப்ரல் 11

ஆண்டில் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தர்மபுரி மற்றும்
திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.
1982–83 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 75,000-ம்
1983–84 ஆம் ஆண்டிற்கு ரூ. 75,000-ம் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது.

1982–83 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினால், பயனடை
வோரின் எண்ணிக்கையை 250-லிருந்து 500 ஆக எல்லா மாவட
டங்களுக்கும் உயர்த்தி விரிவாக்கப்பட்டுள்ளது. (சென்னையைத்
தவிர).

(iii) சலவைத் துறைகள் கட்டுதல்— சலவைத் தொழி
லாளர்கள் தங்கள் தொழிலை திறம்பட செய்வதற்கு சில இடங்
களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை
சுகாதார முறைகளில் அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்கும்,
நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.
மொத்த செலவில் பாதித் தொகை கடனாகவும், மீதித் தொகை
மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இதுவரை
57 உள்ளாட்சி மன்றங்களுக்கு சலவைத்துறைகள் கட்ட நிதி
உதவி செய்யப்பட்டுள்ளது.

1980–81 ஆம் ஆண்டிலிருந்த மாநகராட்சிகளையும் இந்தத்
திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற அங்கீகரித்து ஆணை பிறப்பிக்கப்
பட்டுள்ளது.

(iv) சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்
ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணிமனை
கள் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்
களின் உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள்
இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்
டம் செக்கானூரணியிலும், திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்
புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத் துறை
இயக்குநரின் மேற்பார்வையில் 25–2–1981 வரை இருந்தன.
தற்போது அவைகள் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்
கள் நேரடி பராமரிப்பின் கீழ் கொணரப் பட்டுள்ளன. இவை
களில் பற்ற வைத்தல், சேர்த்தல் மற்றும் இரும்பு தொழிற்
கூடம் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படு
கிறது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்ற மரபினர் பட்டியலி
லிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் நலத்திற்காக கீழ்க்கண்ட
இடங்களில் தொழிற்பயிற்சி கூடங்கள் நடத்தப்படுகின்றன.

1. தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சிக் கூடம்'
ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

2. தையற்பயிற்சிக்கூடம், செக்கானூரணி, மதுரை|மாவட்டம்.

3. பிரம்பு மற்றும் நார்ப்பொருள்கள் செய்யும் பயிற்சி
நிலையம், (1) தக்கலை, (2) குழித்துறை, கன்னியா
குமரி மாவட்டம்.



1983 ஏப்ரல் 11]

4. மேலும் 1978–79 ஆம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்
பதற்காக புதியதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் கீழ்க்கண்ட
இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு நிலையம் ஒன்றில் 20 பேருக்கு
பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது—

(i) கிருஷ்ணன்கோயில் .. கன்னியாகுமரி மாவட்டம்.

(ii) அஜீஸ்நகர் குடியிருப்பு தென்னாற்காடு மாவட்டம்.

(iii) கம்பம் .. .. மதுரை மாவட்டம்.

(iv) திருவாடனை .. இராமநாதபுரம் மாவட்டம்.

(v) தேவர்குளம் .. .. திருநெல்வேலி மாவட்டம்.

இப்பயிற்சி கூடங்களையும், பொதுநோக்கு பொறியியல் பணி
மனைகளையும் பராமரிப்பதற்காக ரூ. 6.02 இலட்சங்கள்
1981–82-ல் செலவிடப்பட்டது. 1982–83-ல் திருத்திய மதிப்
பீட்டில் ரூ. 8.01 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
1983–84-ல் இதற்காக ரூ. 7.90 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது.

**விவசாயம்.**—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட
இனத்தவர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப்
பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றுக்கு ரூ. 2,500
வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1982–83-க்கு திருத்திய
மதிப்பீட்டில் ரூ. 1.53 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டன. இதன்
மூலம் 64 நபர்கள் பயனடைந்தனர். 1983–84 மதிப்பீட்டில்
ரூ. 1,43,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**வீட்டுவசதி.**—1956–57 ஆம் ஆண்டு முதல் குற்ற மரபினர்
பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக கடன் மற்றும்
மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்
இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு ரூ. 1,200 மதிப்பீட்டில்
கட்டப்பட்டது. இதில் கடன் ரூ. 300 மானியம் ரூ. 900
1975–76 ஆம் ஆண்டிலிருந்து வீடு கட்டுவதற்கான மொத்தத்
தொகை ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூ. 2,025
மானியமாகவும் ரூ. 675 பொருளாகவோ உழைப்பாகவோ,
பணமாகவோ பயனடைவோர் பங்காகவும் இருந்தது. இத்
தொகை 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 4,300 ஆக உயர்த்தப்
பட்டது. இதில் மானியம் ரூ. 3,225 ஆகவும் பயனடைவோர்
பங்கு ரூ. 1,075 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1979–80,
1980–81-ம் ஆண்டுகளில் முறையே 665 மற்றும் 392 வீடுகள்
''தாட்கோ'' நிறுவனம் மூலமாக கட்டுவதற்கு நிதி வழங்கப்
பட்டுள்ளது. கட்டுமான தளவாடங்களின் விலைகள் மற்றும்
கூலி உயர்வு காரணமாக ஒரு வீட்டிற்கு அனுமதிக்கப்பட்ட
தொகையை மேலும் உயர்த்தும் யோசனை பரிசீலனையில் உள்
ளது. 1983–84 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில்

உள்ள அரும்பருதி கிராமத்தில் வசிக்கும், நரிக்குறவர்களுக்கு 76 வீடுகள் தலா ரூ. 5,600 என்ற விகிதத்தில் கட்டித் தருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 4,27,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1982–83-ல் திருச்சி மாவட்டம் தேவராயனேரியில் உள்ள நரிக்குறவர் காலனியில் உள்ள சமூக கூடத்தில் ஒரு சமையல் அறையும் உண்ணும் அறையும் கட்ட ரூ. 15,000 அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

19. குழந்தைகள் காப்பகம், அஜீஸ் நகர் குடியிருப்பில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியாக பராமரிக்கும் பொருட்டு அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் 1977–78 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளன. இவை சமூக நலத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. அப்படி இருந்த போதிலும் இவைகளுக்கான செலவினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. 'கேர்' நிறுவனத்தின் உதவியும் இவைகளுக்கு சமூக நல இயக்கத்தின் மூலமாக கொடுக்கப்படுகிறது. இவைகளில் பேறு காலத்தை எதிர் நோக்கும் தாய்மார்களும் குழந்தைகளும் சத்துணவு வழங்கப்பட்டு ஐந்து பால சேவிகாக்களால் பராமரிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்திற்காக 1982–83 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 17,000-ம் 1983–84-க்கு ரூ. 17,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. பிற்பட்ட வகுப்பினருக்காக வீட்டு மனைகள் கையகப்படுத்துதல்.—பின் தங்கிய வகுப்பினரில் சிலர் ஆதி திராவிட மக்களைவிட நலிந்த நிலையில் உள்ளனர். இத்தகைய ஏழை மக்களுக்கு குறிப்பாக தொழில் அடிப்படையிலான பிற்பட்ட வகுப்பினரான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் முதலியோருக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க நிலங்கள் கையகப்படுத்த 1981–82 முதல் அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மேற்படி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 99·69 ஏக்கர் நிலம் கையகப்படுத்த ரூ. 6·77 இலட்சங்கள் செலவிடப்பட்டு. 1,065 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

1983–84 ஆம் ஆண்டிற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

21. தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.—பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ''தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்'' என்ற அமைப்பை நிறுவி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீடு ரூ. 100 வீதம் 10 இலட்சம் சமபங்குகளாக ரூ. 10 கோடியாக வரையறுக்கப்பட்டுள்ளது.



திரு. பொன். பரமகுரு, இ.கா.ப., இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்கள் மேற்படி கழகத்திற்கு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக அரசால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். அக்கழகத்தில் கீழ்க்கண்ட நபர்கள் பொறுப்பாளராகவும் அங்கத்தினர்களாகவும் இருக்கிறார்கள்:—

1 ஆணையர் மற்றும் செயலாளர், அங்கத்தினர் சமூக நலத்துறை, சென்னை.

2 ஆணையர் மற்றும் செயலாளர், அங்கத்தினர் தொழில்துறை, சென்னை.

3 ஆணையர் மற்றும் செயலாளர், அங்கத்தினர் விவசாயத்துறை, சென்னை.

4 இணை செயலாளர், நிதித்துறை, அங்கத்தினர் சென்னை.

5 பிற்பட்டோர் நல இயக்குநர், அங்கத்தினர் சென்னை.

இக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

1. பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேப்பாட்டிற்காக குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார தொழில் முயற்சிகளுக்கு மார்ஜின் தொகை (மார்ஜின் மணி) அளித்தல்.

2. பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக தேவையென்று கருதப்படும் வர்த்தக, வணிக, தொழில் ரீதியான பல திட்டங்களை நேரிடையாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளுதல்.

இக்கழகம் அரசு நிதி பெறுவதுடன், வங்கிகள், இதர நிறுவனங்கள் மற்றும் இதர வகையில் நிதி உதவி பெற்று இயங்கும். இக்கழகம் மாநில ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற ஏனைய பொருளாதார திட்டங்களில் தீவிர முறையில் பங்கேற்கும்.

இம்மேம்பாட்டுக் கழகம் 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டு 25–2–1982 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி கழகம் சென்னை அண்ணாசாலையில் உள்ள இலக்கம் 807 என்ற கட்டிடத்தில் (5-வது மாடியில்) இயங்கி வருகிறது.

22. தமிழ்நாடு இரண்டாம் பிற்பட்டோர் உயர் ஆணைக் குழு.—தமிழ்நாடு அரசு இரண்டாவது பிற்பட்டோர் உயர் ஆணைக் குழுவினை திரு. ஜே. ஏ. அம்பாசங்கர், இ. ஆ. ப., (ஓய்வு பெற்றவர்) அவர்களின் தலைமையின்கீழ் 18 உறுப்பினர்களுடன் அமைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இயக்குநர், பிற்பட்டோர் நலத்துறை, சென்னை, இக்குழுவின் உறுப்பினர் செயலர். இந்தக் குழு சென்னை ஆழ்வார்பேட்டையில் சர். சி. வி. ராமன் ரோட்டில் க. எண். 27 இலக்கமிட்ட கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

[1983 ஏப்ரல் 11

இக்குழு உச்ச நீதி மன்றத்தின் பல்வேறு
கருத்தில் கொண்டும், விஞ்ஞான மற்றும் சரியான முடிவுகளை
களை மேற்கொண்டும், பிற்பட்டோர் இன புலனாய்வு
ஆய்வு செய்வதோடு அவர்களுடைய பட்டியல்களை
அறிந்து அவர்கள் முன்னேற எடுக்க வேண்டிய உண்மை நிலையை
களைப்பற்றி இந்திய அரசியல் அமைப்பின் நடவடிக்கை
உட்பிரிவு (4) மற்றும் 16 உட்பிரிவு (4) இவைகளின் விதி எண். 15
படையில் பரிந்துரைகள் வழங்க அரசு ஆணை அடிப்
இருக்கிறது. பிறப்பித்

இவ்வாறாக பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. எனவே, பிற்பட்டோர் நல மான்யக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக்கொள்கிறேன்.

அட்டவணை 'அ'.

கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84-ஆம் ஆண்டு.

1983–84-ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்).

மொத்தம் : 10,22,26
நிர்வாகத்தில் : 59,54
திட்டத்தில் : 9,62,72

| திட்டத்தின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,76,70: பிற்பட்ட வகுப்பினருக்காக. | ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,76,70: குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. | திட்டத்தில் இல்லாதவை 6,86,02: பிற்பட்ட வகுப்பினருக்காக. | திட்டத்தில் இல்லாதவை 6,86,02: குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்). | | | |
| உதவி தொகை .. | 13,14 | 7,41 | 3,15,08 | 36,41 |
| பள்ளிகள் .. .. | .. | 3,88 | .. | 1,44,40 |
| மதிய உணவு .. | — | 5,00 | — | 16,82 |
| புத்தகம் மற்றும் துணி. | 6,40 | 25,87 | 2,83 | 4,15 |
| உணவு மானியம் .. | 1 | .. | 10,33 | 18 |
| விடுதிகள் .. | 1,38,50 | 26,18 | 1,10,18 | 33,26 |
| பல்கலைக் கழகத்திற்கு மானியம் .. | .. | .. | 3,00 | .. |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் .. .. | .. | 1,35 | .. | .. |
| விவசாயம் .. | .. | 1,43 | .. | .. |
| தொழிற்பயிற்சி .. | 30 | 5,96 | 1,02 | 62 |
| இலவசக் கருவிகள் .. | 20,18 | 31 | .. | .. |
| குடிநீர் .. .. | .. | .. | .. | 25 |
| சலவைத்துறை .. | 1,25 | .. | .. | .. |
| தனிப் பயிற்சி நிலையம் .. .. | .. | .. | 4,69 | .. |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடுகள் .. | .. | 4,27 | .. | .. |
| வீட்டு மனைகள் ஆர்ஜிதம் .. | 15,00 | .. | .. | .. |
| சிறப்பு பயிற்சி .. | .. | .. | 40 | .. |
| பட்டயக் கணக்கர் படிப்பு .. .. | .. | .. | 40 | .. |
| சிறந்த மாணவர்களுக்கு பரிசு .. | 8 | .. | .. | .. |
| குழந்தைகள் காப்பகம் | .. | 17 | .. | .. |
| விடுதிகள் கட்டுதல், சில்லரை வேலைகள். | 1 | .. | .. | .. |
| மொத்தம் .. | 1,94.87 | 81,83 | 4,47,93 | 2,38,09 |



1983 ஏப்ரல் 11]

அட்டவணை ' ஆ '

அரசு பிற்பட்டோர் விடுதிகள், 1982–83.

| | | அனுமதிக்கப்பட்ட மாணவ/மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| **சென்னை மாவட்டம்—** | | |
| 1 | கல்லூரி மாணவர் விடுதி, தென் சென்னை .. | 105 |
| 2 | கல்லூரி மாணவர் விடுதி, தியாகராயநகர் .. | 105 |
| 3 | கல்லூரி மாணவர் விடுதி, வட சென்னை .. | 105 |
| 4 | தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, சென்னை-12 .. .. .. .. | 75 |
| 5 | மாணவியர் விடுதி, திருவான்மியூர் .. | 120 |
| 6 | மாணவியர் விடுதி, திருவல்லிக்கேணி .. .. | 70 |
| 7 | கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை .. | 50 |
| 8 | கல்லூரி மாணவர் இல்லம், சூளை, சென்னை | 50 |
| **செங்கல்பட்டு மாவட்டம்—** | | |
| 9 | கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம் .. | 100 |
| 10 | கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு .. | 50 |
| 11 | கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி .. .. | 50 |
| 12 | மாணவர் விடுதி, வங்கனூர் .. .. | 50 |
| 13 | மாணவர் விடுதி, கனகம்மாசத்திரம் .. | 50 |
| 14 | மாணவர் விடுதி, மதுரமங்கலம் .. .. | 50 |
| 15 | மாணவர் விடுதி, சாலவாக்கம் .. .. | 25 |
| 16 | மாணவர் விடுதி, பெரிய பாளையம் .. .. | 25 |
| 17 | மாணவர் விடுதி, கருங்குழி .. | 50 |
| 18 | மாணவர் விடுதி, அத்திமாஞ்சேரிபேட்டை | 30 |
| 19 | மாணவர் விடுதி, பாதிரிவேடு .. | 50 |
| 20 | மாணவர் விடுதி, சுண்ணாம்புக்குளம் .. | 50 |
| 21 | மாணவர் விடுதி, சோமங்கலம் .. | 40 |
| 22 | மாணவர் விடுதி, ஒரத்தி .. | 25 |



| | | |
|---|---|---|
| **செங்கல்பட்டு மாவட்டம்.—தொடர்ச்சி.—** | | |
| 23 | மாணவர் விடுதி, வாலாஜாபாத் | 100 |
| 24 | மாணவியர் விடுதி, வாலாஜாபாத் | 60 |
| 25 | மாணவியர் விடுதி, மதுராந்தகம் | 40 |
| 26 | மாணவியர் விடுதி, திருத்தணி | 50 |
| 27 | மாணவர் விடுதி, ஆவடி | 50 |
| 28 | மாணவர் விடுதி, மதுராந்தகம் | 50 |
| 29 | மாணவர் விடுதி, பேரம்பாக்கம் | 50 |
| 30 | மாணவர் விடுதி, மானாம்பதி | 50 |
| 31 | மாணவர் விடுதி, வள்ளியூர் | 50 |
| 32 | மாணவர் விடுதி, நந்திவரம் | 50 |
| **வட ஆற்காடு மாவட்டம்—** | | |
| 33 | கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 34 | கல்லூரி மாணவர் விடுதி, செய்யாறு | 60 |
| 35 | கல்லூரி மாணவர் விடுதி, வேலூர் | 50 |
| 36 | கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி | 50 |
| 37 | கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாப்பேட்டை | 50 |
| 38 | மாணவர் விடுதி, பொன்னை | 50 |
| 39 | மாணவர் விடுதி, திருவண்ணாமலை | 50 |
| 40 | மாணவர் விடுதி, திருப்பத்தூர் | 50 |
| 41 | மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 42 | மாணவர் விடுதி, ஜோலார்ப்பேட்டை | 50 |
| 43 | மாணவர் விடுதி, ஆரணி | 50 |
| 44 | மாணவர் விடுதி, போளூர் | 50 |
| 45 | மாணவர் விடுதி, செங்கம் | 50 |
| 46 | மாணவர் விடுதி, ஆற்காடு | 50 |
| 47 | மாணவர் விடுதி, வந்தவாசி | 50 |
| 48 | மாணவியர் விடுதி, செங்கம் | 50 |
| 49 | மாணவர் விடுதி, அரக்கோணம் | 50 |
| 50 | மாணவர் விடுதி, பேரணாம்பட்டு | 50 |
| 51 | மாணவர் விடுதி, கே. வி. குப்பம் | 50 |
| 52 | மாணவர் விடுதி, பேரணமல்லூர் | 50 |

வட ஆற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 53 | மாணவர் விடுதி, சேத்துப்பட்டு. | 50 |
| 54 | மாணவர் விடுதி, வேட்டவலம் | 50 |
| 55 | மாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம் | 50 |
| 56 | மாணவர் விடுதி, ஆலங்காயம் | 50 |
| 57 | மாணவர் விடுதி, தேசூர் | 50 |

தென்னாற்காடு மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 58 | கல்லூரி மாணவர் விடுதி, கடலூர் | 75 |
| 59 | கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் | 50 |
| 60 | கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாசலம் | 150 |
| 61 | கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் | 50 |
| 62 | மாணவர் விடுதி, விருத்தாச்சலம் | 100 |
| 63 | மாணவர் விடுதி, பெண்ணாடம் | 90 |
| 64 | மாணவர் விடுதி, பெரியகுப்பம் | 70 |
| 65 | மாணவர் விடுதி, சேத்தியாத்தோப்பு | 140 |
| 66 | மாணவர் விடுதி, திருநாவலூர் | 50 |
| 67 | மாணவர் விடுதி, சிறுபாக்கம் | 75 |
| 68 | மாணவர் விடுதி, கம்மாபுரம் | 50 |
| 69 | மாணவர் விடுதி, தேவபண்டலம் | 50 |
| 70 | மாணவர் விடுதி, சோமந்தர்குடி | 50 |
| 71 | மாணவர் விடுதி, வடக்கநேந்தல் | 50 |
| 72 | மாணவர் விடுதி, தொழுதூர் (தற்போது புவனகிரி) | 50 |
| 73 | மாணவியர் விடுதி, பரங்கிப்பேட்டை (தற்போது புவனகிரி). | 40 |
| 74 | மாணவியர் விடுதி, தியாகதுர்க்கம் | 50 |
| 75 | மாணவர் விடுதி, இல்லோடு | 50 |
| 76 | மாணவர் விடுதி, சித்தலிங்கமடம் | 50 |
| 77 | மாணவர் விடுதி, ஆனந்தபுரம் | 50 |
| 78 | மாணவர் விடுதி, கிடார் | 50 |
| 79 | மாணவர் விடுதி, ப. முட்லூர் | 50 |
| 80 | மாணவர் விடுதி, மஞ்சக்கொல்லை | 50 |
| 81 | மாணவர் விடுதி, சின்னசேலம் | 50 |
| 82 | மாணவர் விடுதி, சித்தேரிப்பட்டு | 50 |



தென்னாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 83 | மாணவியர் விடுதி, அன்னியூர் | 50 |
| 84 | மாணவர் விடுதி, ஒரத்தூர் | 50 |
| 85 | மாணவர் விடுதி, ரெட்டணை | 50 |
| 86 | மாணவர் விடுதி, கிள்ளை | 50 |
| 87 | மாணவியர் விடுதி, கள்ளக்குறிச்சி | 50 |

தஞ்சாவூர் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 88 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-1 | 175 |
| 89 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-2 | |
| 90 | கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம் | 50 |
| 91 | கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர் | 50 |
| 92 | கல்லூரி மாணவியர் விடுதி, மயிலாடுதுறை | 50 |
| 93 | கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் | 40 |
| 94 | மாணவர் விடுதி, பேராவூரணி | 50 |
| 95 | மாணவர் விடுதி, மகாதேவபட்டினம் | 50 |
| 96 | மாணவர் விடுதி, மன்னார்குடி | 100 |
| 97 | மாணவர் விடுதி, நீடாமங்கலம் | 75 |
| 98 | மாணவர் விடுதி, உம்பளச்சேரி | 30 |
| 99 | மாணவர் விடுதி, வேதாரண்யம் | 50 |
| 100 | மாணவர் விடுதி, ஆலத்தூர் | 40 |
| 101 | மாணவர் விடுதி, கண்ணத்தான்குடி | 50 |
| 102 | கல்லூரி மாணவர் விடுதி, மயிலாடுதுறை | 75 |
| 103 | மாணவர் விடுதி, மதுக்கூர் | 40 |
| 104 | மாணவர் விடுதி, செம்பனார் கோவில் | 50 |
| 105 | மாணவர் விடுதி, பூம்புகார் | 50 |
| 106 | மாணவர் விடுதி, கனி | 50 |
| 107 | மாணவர் விடுதி, பாபநாசம் | 50 |
| 108 | மாணவியர் விடுதி, வலங்கைமான் | 50 |
| 109 | மாணவியர் விடுதி, நன்னிலம் | 40 |
| 110 | மாணவியர் விடுதி, குத்தாலம் | 50 |
| 111 | மாணவியர் விடுதி, சுச்சாங்கோட்டை | 50 |
| 112 | கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் | 50 |
| 113 | மாணவியர் விடுதி, நாகப்பட்டினம் | 50 |
| 114 | மாணவர் விடுதி, திருவிடைமருதூர் | 50 |
| 115 | மாணவர் விடுதி, வைதீஸ்வரன் கோவில் | 50 |

தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 116 | மாணவர் விடுதி, திருவோணம் | 50 |
| 117 | மாணவர் விடுதி, முத்துப்பேட்டை | 50 |
| 118 | மாணவர் விடுதி, மணக்குடி | 50 |
| 119 | மாணவியர் விடுதி, பட்டுக்கோட்டை | 5 |
| 120 | மாணவர் விடுதி, அம்மாப்பேட்டை | 5 |
| 121 | மாணவர் விடுதி, சிவ ஞர் | 5 |
| 122 | மாணவர் விடுதி, கொரடாச்சேரி | 50 |
| 123 | மாணவர் விடுதி, பூதலூர் | 50 |

சேலம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 124 | கல்லூரி மாணவர் விடுதி, சேலம் சந்திப்பு | 100 |
| 125 | கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல் | 40 |
| 126 | கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் | 50 |
| 127 | மாணவர் விடுதி, எலம்பிள்ளை | 90 |
| 128 | மாணவர் விடுதி, கொங்கனாபுரம் | 70 |
| 129 | மாணவர் விடுதி மகுடஞ்சாவடி | 70 |
| 130 | மாணவர் விடுதி, கண்ணங்குறிச்சி | 50 |
| 131 | மாணவர் விடுதி, தாரமங்கலம் | 70 |
| 132 | மாணவர் விடுதி, தீவட்டிப்பட்டி | 70 |
| 133 | மாணவர் விடுதி, எடப்பாடி | 70 |
| 134 | மாணவர் விடுதி, எருமைப்பட்டி | 70 |
| 135 | மாணவர் விடுதி, எலச்சிபாளையம் | 70 |
| 136 | மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் | 70 |
| 137 | மாணவர் விடுதி, வாழைப்பாடி | 70 |
| 138 | மாணவர் விடுதி, ராமாபுரம் | 50 |
| 139 | மாணவர் விடுதி, ஆட்டையாம்பட்டி | 40 |
| 140 | மாணவர் விடுதி, ஆதனூர் | 40 |
| 141 | மாணவர் விடுதி, சாத்தப்பாடி | 50 |
| 142 | மாணவர் விடுதி, வீரகனூர் | 75 |
| 143 | மாணவியர் விடுதி, தாராமங்கலம் | 50 |
| 144 | மாணவர் விடுதி, காரைக்குறிச்சிபுதூர் | 50 |
| 145 | மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |
| 146 | மாணவர் விடுதி, மங்களாபுரம் | 50 |
| 147 | மாணவர் விடுதி, விட்டம்பாளையம் | 5 |
| 148 | மாணவர் விடுதி, சேலம் | 5 |
| | | 50 |



சேலம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 149 | மாணவர் விடுதி, கொளத்தூர் | 50 |
| 150 | கல்லூரி மாணவியர் விடுதி, சேலம் | 50 |
| 151 | மாணவர் விடுதி, கீரிப்பட்டி | 50 |

தர்மபுரி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 152 | கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி | 150 |
| 153 | மாணவர் விடுதி, ஹோசூர் | 50 |
| 154 | மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை | 50 |
| 155 | மாணவர் விடுதி, பாலக்கோடு | 50 |
| 156 | மாணவர் விடுதி, போச்சம்பள்ளி | 50 |
| 157 | மாணவர் விடுதி, ஊரூர் | 40 |
| 158 | மாணவர் விடுதி, தொகரப்பள்ளி | 40 |
| 159 | மாணவர் விடுதி, காரிமங்கலம் | 40 |
| 160 | மாணவர் விடுதி, அஞ்செட்டி | 50 |
| 161 | மாணவர் விடுதி, பெண்ணாகரம் | 50 |
| 162 | மாணவர் விடுதி, மாரண்டஹள்ளி | 50 |
| 163 | மாணவர் விடுதி, கோணங்கிநாயக்கன்ஹள்ளி | 50 |
| 164 | மாணவர் விடுதி, கோட்டப்பட்டி | 50 |
| 165 | மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி | 50 |
| 166 | மாணவியர் விடுதி, காவேரிப்பட்டினம் | 50 |
| 167 | மாணவர் விடுதி, திருமலவாடி | 50 |
| 168 | மாணவர் விடுதி, மொரப்பூர் | 50 |
| 169 | மாணவர் விடுதி, கெலமங்கலம் | 50 |
| 170 | மாணவியர் விடுதி, லளிகம் | 50 |
| 171 | மாணவர் விடுதி, பேரிகை | 50 |
| 172 | மாணவர் விடுதி, சூளகிரி | 50 |
| 173 | மாணவர் விடுதி, குன்னத்தூர் | 50 |
| 174 | மாணவர் விடுதி, பாலதொட்டனப்பள்ளி | 50 |

கோயம்புத்தூர் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 175 | கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர் | 100 |
| 176 | கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர் | 100 |
| 177 | மாணவர் விடுதி, தொண்டாமுத்தூர் | 50 |

[1983 ஏப்ரல் 11

கோயம்புத்தூர் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 178 | மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம் | 50 |
| 179 | மாணவர் விடுதி, சொக்கம்பாளையம் | 50 |
| 180 | மாணவர் விடுதி, பெத்திக்குட்டை | 50 |
| 181 | மாணவர் விடுதி, உடுமலைப்பேட்டை | 50 |
| 182 | மாணவர் விடுதி, பல்லடம் | 50 |
| 183 | மாணவர் விடுதி, இணைத்துக்கடவு | 50 |
| 184 | மாணவர் விடுதி, ஆனைமலை | 50 |
| 185 | மாணவர் விடுதி, கோட்டூர் | 50 |
| 186 | மாணவர் விடுதி, பொங்கலூர் | 50 |
| 187 | மாணவர் விடுதி, கோயில்பாளையம் | 50 |
| 188 | மாணவர் விடுதி, மடத்துக்குளம் | 50 |
| 189 | மாணவியர் விடுதி, சின்னத்தடாகம் | 50 |

பெரியார் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 190 | கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு | 50 |
| 191 | கல்லூரி மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் | 100 |
| 192 | மாணவர் விடுதி, பெருந்துறை | 50 |
| 193 | மாணவர் விடுதி, சத்தியமங்கலம் | 60 |
| 194 | மாணவர் விடுதி, குருவாரெட்டியூர் | 40 |
| 195 | மாணவர் விடுதி, அந்தியூர் | 40 |
| 196 | மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் | 50 |
| 197 | மாணவியர் விடுதி, புஞ்சைப்புளியம்பட்டி | 50 |
| 198 | மாணவர் விடுதி, புஞ்சைப்புளியம்பட்டி | 50 |
| 199 | மாணவர் விடுதி, சிவகிரி | 50 |
| 200 | மாணவர் விடுதி, சென்னிமலை | 50 |
| 201 | மாணவர் விடுதி, தாராபுரம் | 50 |
| 202 | மாணவர் விடுதி, காங்கேயம் | 50 |
| 203 | மாணவர் விடுதி, தாளவாடி | 50 |
| 204 | மாணவர் விடுதி, மூலனூர் | 50 |
| 205 | மாணவர் விடுதி, வெள்ளகோவில் | 50 |
| 206 | மாணவியர் விடுதி, பெருந்துறை | 50 |



1983 ஏப்ரல் 11]

நீலகிரி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 207 | கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம் | 100 |
| 208 | கல்லூரி மாணவியர் விடுதி, உதகமண்டலம் | 50 |
| 209 | மாணவர் விடுதி, கூனூர் | 30 |
| 210 | மாணவர் விடுதி, தேவர்சோலை | 40 |
| 211 | மாணவர் விடுதி, அம்பலமூலா | 50 |
| 212 | மாணவர் விடுதி, தூதூர்மடம் | 50 |
| 213 | மாணவர் விடுதி, எருமாடு | 50 |
| 214 | மாணவர் விடுதி, கூடலூர் | 30 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 215 | கல்லூரி மாணவர் விடுதி, தென்னூர், திருச்சி | 100 |
| 216 | கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை, திருச்சி | 125 |
| 217 | கல்லூரி மாணவர் விடுதி, கரூர் | 40 |
| 218 | கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர் | 40 |
| 219 | கல்லூரி மாணவியர் விடுதி, உறையூர் திருச்சிராப்பள்ளி | 40 |
| 220 | மாணவர் விடுதி, கொளக்குடி | 50 |
| 221 | மாணவர் விடுதி, திருவெறும்பூர் | 100 |
| 222 | கல்லூரி மாணவர் விடுதி, புதூர் | 75 |
| 223 | மாணவர் விடுதி, பெரம்பலூர் | 50 |
| 224 | மாணவர் விடுதி, ஜெயங்கொண்டான் | 60 |
| 225 | மாணவர் விடுதி, லாலாப்பேட்டை | 75 |
| 226 | மாணவர் விடுதி, பஞ்சப்பட்டி | 50 |
| 227 | மாணவர் விடுதி, கண்ணனூர் | 50 |
| 228 | மாணவர் விடுதி, துங்காபுரம் | 50 |
| 229 | மாணவர் விடுதி, அரியலூர் | 75 |
| 230 | மாணவர் விடுதி, மருவத்தூர் | 100 |
| 231 | மாணவர் விடுதி, மணப்பாறை | 100 |
| 232 | மாணவர் விடுதி, பொன்பரப்பி | 50 |
| 233 | மாணவர் விடுதி, வி. களத்தூர் | 40 |
| 234 | மாணவர் விடுதி, குலக்காநத்தம் | 40 |
| 235 | மாணவர் விடுதி, உடையார்பாளையம் | 50 |

**1983 ஏப்ரல் 11**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் — தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 236 | மாணவியர் விடுதி, செட்டிக்குளம் | 50 |
| 237 | மாணவர் விடுதி, திருமழப்பாடி | 50 |
| 238 | மாணவியர் விடுதி, மேட்டுப்பாளையம் | 30 |
| 239 | மாணவியர் விடுதி, இராமலிங்கபுரம், திருச்சிராப்பள்ளி | 30 |
| 240 | மாணவர் விடுதி, தரகம்பட்டி | 50 |
| 241 | மாணவர் விடுதி, கூத்தூர் | 50 |
| 242 | மாணவர் விடுதி, நொய்யல் | 50 |
| 243 | மாணவர் விடுதி, திருமானூர் | 50 |
| 244 | மாணவர் விடுதி, டி. பழூர் | 50 |
| 245 | மாணவர் விடுதி, தோகைமலை | 50 |
| 246 | மாணவர் விடுதி, மீன்சுருட்டி | 50 |
| 247 | மாணவர் விடுதி, துவரங்குறிச்சி | 50 |
| 248 | மாணவர் விடுதி, கீழப்புலியூர் | 50 |
| 249 | மாணவியர் விடுதி, சின்னத்தாராபுரம் | 50 |

புதுக்கோட்டை மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 250 | கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை | |
| 251 | கல்லூரி மாணவர் விடுதி, (கூடுதல்) புதுக்கோட்டை | 175 |
| 252 | மாணவர் விடுதி, திருமயம் | 75 |
| 253 | மாணவர் விடுதி, ஆலங்குடி | 50 |
| 254 | மாணவர் விடுதி, விராலிமலை | 40 |
| 255 | மாணவர் விடுதி, இலுப்பூர் | 75 |
| 256 | மாணவர் விடுதி, வடகாடு | 50 |
| 257 | மாணவர் விடுதி, சுப்ரமணியபுரம் | 50 |
| 258 | மாணவர் விடுதி, மணமேல்குடி | 50 |
| 259 | மாணவர் விடுதி, பொன்பேத்தி | 50 |
| 260 | மாணவியர் விடுதி, அறந்தாங்கி | 40 |
| 261 | மாணவர் விடுதி, ஆவுடையார் கோயில் | 40 |
| 262 | மாணவர் விடுதி, திருக்களம்பூர் | 50 |
| 263 | மாணவர் விடுதி, அண்டக்குளம் | 50 |
| 264 | மாணவியர் விடுதி, அரிமளம் | 50 |
| 265 | மாணவர் விடுதி, கீரமங்கலம் | 50 |
| 266 | மாணவர் விடுதி, கீரனூர் | 50 |
| | | 50 |



1983 ஏப்ரல் 11]

புதுக்கோட்டை மாவட்டம்—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 267 | மாணவர் விடுதி, கரம்பக்குடி | 50 |
| 268 | மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 50 |
| 269 | மாணவர் விடுதி, பூவைமாநகர் | 50 |
| 270 | மாணவர் விடுதி, கிள்ளுக்கோட்டை | 50 |

மதுரை மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 271 | கல்லூரி மாணவர் விடுதி, மதுரை | 50 |
| 272 | மாணவர் விடுதி, திண்டுக்கல் | 50 |
| 273 | கல்லூரி மாணவர் விடுதி, மேலூர் | 100 |
| 274 | கல்லூரி மாணவியர் விடுதி, மதுரை | 40 |
| 275 | மாணவர் விடுதி, அலங்காநல்லூர் | 104 |
| 276 | மாணவர் விடுதி, திருநகர் | 80 |
| 277 | மாணவர் விடுதி, தல்லாகுளம் | 110 |
| 278 | மாணவர் விடுதி, தர்மபுரி (பெரியகுளம் தாலுக்கா) | 60 |
| 279 | மாணவர் விடுதி, திருமங்கலம் | 50 |
| 280 | மாணவர் விடுதி, பெரியகுளம் | 80 |
| 281 | மாணவர் விடுதி, சேக்காப்பட்டி | 75 |
| 282 | மாணவர் விடுதி, மேலவளவு | 50 |
| 283 | மாணவர் விடுதி, போடிநாயக்கனூர் | 120 |
| 284 | மாணவர் விடுதி, தி. வாடிப்பட்டி | 80 |
| 285 | மாணவர் விடுதி, அச்சம்பட்டி | 70 |
| 286 | மாணவர் விடுதி, மட்டப்பாறை | 40 |
| 287 | மாணவர் விடுதி, பாப்பநாயக்கன்பட்டி | 50 |
| 288 | மாணவர் விடுதி, கே. பெருமாள்பட்டி | 50 |
| 289 | மாணவர் விடுதி, ஏழுமலை | 50 |
| 290 | மாணவர் விடுதி, கருங்காலக்குடி | 50 |
| 291 | மாணவர் விடுதி, பழனி | 50 |
| 292 | மாணவர் விடுதி, சின்னாளப்பட்டி | 90 |
| 293 | மாணவியர் விடுதி, சின்னாளப்பட்டி | 60 |
| 294 | மாணவர் விடுதி, பேரையூர் | 50 |
| 295 | மாணவியர் விடுதி, தி. கல்லுப்பட்டி | 50 |
| 296 | மாணவியர் விடுதி, ஆண்டிப்பட்டி | 50 |
| 297 | மாணவர் விடுதி, கூடக்கோயில் | 50 |
| 298 | மாணவர் விடுதி, வெம்பர்பட்டி | 50 |

மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 299 | மாணவர் விடுதி, கொடைக்கானல் | 50 |
| 300 | மாணவர் விடுதி, சேடப்பட்டி | 50 |
| 301 | மாணவர் விடுதி, நெய்க்காரப்பட்டி | 50 |
| 302 | மாணவர் விடுதி, கே. இராமநாதபுரம் | 50 |
| 303 | மாணவர் விடுதி, ரெங்கசமுத்திரம் | 50 |
| 304 | மாணவர் விடுதி, கோட்டம்பட்டி | 50 |

இராமநாதபுரம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 305 | கல்லூரி மாணவர் விடுதி, விருதுநகர் | 50 |
| 306 | கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம் | 100 |
| 307 | கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை | 40 |
| 308 | மாணவர் விடுதி கண்டரமாணிக்கம் | 30 |
| 309 | மாணவர் விடுதி, வடக்கு சமுத்திரம் | 50 |
| 310 | மாணவர் விடுதி, திருக்கோஷ்டியூர் | 70 |
| 311 | மாணவர் விடுதி, காரியாப்பட்டி | 40 |
| 312 | மாணவர் விடுதி, புதுவயல் | 50 |
| 313 | மாணவர் விடுதி, திருத்தங்கல் | 60 |
| 314 | மாணவர் விடுதி, மண்டலமாணிக்கம் | 40 |
| 315 | மாணவர் விடுதி, கூமாபட்டி | 50 |
| 316 | மாணவர் விடுதி, பரமக்குடி | 50 |
| 317 | மாணவர் விடுதி, பெரியக்கோட்டை | 50 |
| 318 | மாணவர் விடுதி, செய்தூர் | 50 |
| 319 | மாணவர் விடுதி, தேவிப்பட்டினம் | 50 |
| 320 | மாணவர் விடுதி, சாயல்குடி | 50 |
| 321 | மாணவியர் விடுதி, பாகனேரி | 30 |
| 322 | மாணவியர் விடுதி, நாட்டரசன்கோட்டை | 40 |
| 323 | மாணவியர் விடுதி, தேவக்கோட்டை | 50 |
| 324 | மாணவியர் விடுதி, குள்ளூர்சந்தை | 75 |
| 325 | மாணவியர் விடுதி, பிரான்மலை | 50 |
| 326 | மாணவியர் விடுதி, காரியப்பட்டி | 50 |
| 327 | மாணவர் விடுதி, பெருநாளி | 50 |
| 328 | மாணவர் விடுதி, மண்டபம் | 50 |
| 329 | மாணவர் விடுதி, நரிக்குடி | 50 |
| 330 | மாணவர் விடுதி, ராஜபாளையம் | 50 |



இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 331 | மாணவர் விடுதி, திருவாடனை | 50 |
| 332 | மாணவியர் விடுதி, இராமேஸ்வரம் | 50 |
| 333 | மாணவர் விடுதி, ஜோகில்பட்டி | 50 |
| 334 | மாணவர் விடுதி, மானாமதுரை | 50 |
| 335 | மாணவர் விடுதி, அபிராமம் | 50 |
| 336 | மாணவர் விடுதி, சிக்கல் | 50 |
| 337 | மாணவர் விடுதி, தொண்டி | 50 |

திருநெல்வேலி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 338 | கல்லூரி மாணவர் விடுதி, திருநெல்வேலி | 50 |
| 339 | கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி | 50 |
| 340 | கல்லூரி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 40 |
| 341 | மீனவர் மாணவர் விடுதி, தூத்துக்குடி | 150 |
| 342 | மாணவர் விடுதி, ஏருவாடி | 30 |
| 343 | மாணவர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு | 150 |
| 344 | மாணவர் விடுதி, சாமிநாதபுரம் | 49 |
| 345 | மாணவர் விடுதி, மேலப்பாளையம் | 50 |
| 346 | மாணவர் விடுதி, இடிந்தகரை | 60 |
| 347 | மாணவர் விடுதி, மணப்பாடு | 70 |
| 348 | மாணவர் விடுதி, விளாத்திகுளம் | 40 |
| 349 | மாணவர் விடுதி, பழவூர் | 50 |
| 350 | மாணவர் விடுதி, எட்டையாபுரம் | 50 |
| 351 | மாணவியர் விடுதி, புதூர் | 75 |
| 352 | மாணவியர் விடுதி, நாங்குனேரி | 40 |
| 353 | மாணவியர் விடுதி, தூத்துக்குடி | 50 |
| 354 | மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 50 |
| 355 | மாணவர் விடுதி, பேட்டை | 50 |
| 356 | மாணவர் விடுதி, கூட்டப்புலி | 50 |
| 357 | மாணவர் விடுதி, கழுகுமலை | 50 |
| 358 | மாணவர் விடுதி, இடைக்கல் | 50 |
| 359 | மாணவியர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு | 50 |
| 360 | மாணவியர் விடுதி, கருங்குளம் | 50 |
| 361 | மாணவியர் விடுதி, கூட்டப்புலி | 5 |

திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 632 | மாணவியர் விடுதி, சங்கர்நகர் | 50 |
| 633 | மாணவர் விடுதி, பேட்டைக்குளம் | 50 |
| 364 | மாணவர் விடுதி, உவரி | 50 |
| 365 | மாணவர் விடுதி, இராதாபுரம் | 50 |

கன்னியாகுமரி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 366 | கல்லூரி மாணவியர் விடுதி, நாகர்கோவில் | 50 |
| 367 | கல்லூரி மாணவியர் விடுதி, குழித்துறை | 50 |
| 368 | கல்லூரி மாணவியர் விடுதி, அகஸ்தீவரம் | 50 |
| 369 | மாணவியர் விடுதி, குளச்சல் | 50 |
| 370 | மாணவியர் விடுதி, குலசேகரம் | 50 |
| 371 | மாணவியர் விடுதி, பூதப்பாண்டி | 50 |
| 372 | மாணவியர் விடுதி, தக்கலை | 50 |
| 373 | மாணவர் விடுதி, ஆரல்வாய்மொழி | 50 |
| 374 | மாணவியர் விடுதி, கருங்கல் | 50 |
| 375 | மாணவியர் விடுதி, இரணியல் | 50 |

சுருக்கம்.

| | | மொத்தம். |
|---|---|---|
| 41 | கல்லூரி மாணவர் விடுதிகள் | 3,260 |
| 15 | கல்லூரி மாணவியர் விடுதிகள் | 710 |
| 263 | உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகள் | 14,183 |
| 55 | உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள் | 2,800 |
| 1 | தொழிற் பயிற்சி விடுதி | 75 |
| 375 | | 21,028 |





அட்டவணை 'இ'

அரசு குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர் விடுதிகள்

1982-83

| | | அனுமதிக்கப்பட்ட மாணவ/மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| | **செங்கல்பட்டு மாவட்டம்—** | |
| 1 | மாணவியர் விடுதி, பல்லாவரம் | 50 |
| | **வடஆற்காடு மாவட்டம்—** | |
| 2 | மாணவியர் விடுதி, பி. எல். தண்டா | 50 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்—** | |
| 3 | மாணவர் விடுதி, அவினாசி | 50 |
| 4 | மாணவர் விடுதி, திருப்பூர் | 50 |
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—** | |
| 5 | மாணவர் விடுதி, இருதயபுரம், திருச்சிராப்பள்ளி | 50 |
| 6 | மாணவர் விடுதி, மேலமாயனூர் | 50 |
| | **புதுக்கோட்டை மாவட்டம்—** | |
| 7 | மாணவர் விடுதி, கந்தர்வகோட்டை | 50 |
| 8 | மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 44 |
| 9 | மாணவர் விடுதி, பொன்னமராவதி | 50 |
| 10 | மாணவர் விடுதி, கொத்தமங்கலம் | 50 |
| | **மதுரை மாவட்டம்—** | |
| 11 | தொழிற்பயிற்சிப்பள்ளி விடுதி, கோ. புதூர், மதுரை | 100 |
| 12 | தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, தேனி | 50 |
| 13 | மாணவர் விடுதி, திருமங்கலம் | 125 |
| 14 | மாணவர் விடுதி, திண்டுக்கல் | 180 |
| 15 | மாணவர் விடுதி, உசிலம்பட்டி | 650 |
| 16 | மாணவர் விடுதி, ஞானஒளிவுபுரம், மதுரை | 60 |
| 17 | மாணவர் விடுதி, செக்கானூரணி | 22 |
| | மாணவர் விடுதி, நாட்டார்மங்கலம் | 120 |

மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 19 | மாணவர் விடுதி, உத்தமபாளையம் | 200 |
| 20 | மாணவர் விடுதி, வத்தலக்குண்டு | 140 |
| 21 | மாணவர் விடுதி, கடமலைக்குண்டு | 60 |
| 22 | மாணவர் விடுதி, பாப்பாப்பட்டி | 80 |
| 23 | மாணவர் விடுதி, ராஜதானி | 70 |
| 24 | மாணவர் விடுதி, அல்லி நகரம் | 60 |
| 25 | மாணவர் விடுதி, மேலகால் | 50 |
| 26 | மாணவர் விடுதி, விளாம்பட்டி | 50 |
| 27 | மாணவர் விடுதி, போடி | 50 |
| 28 | மாணவர் விடுதி, தும்மக்குண்டு | 50 |
| 29 | மாணவர் விடுதி, கம்பம் | 50 |
| 30 | மாணவர் விடுதி, ராயப்பன்பட்டி | 50 |
| 31 | மாணவர் விடுதி, வெள்ளையம்மாள்புரம் | 50 |
| 32 | மாணவியர் விடுதி, உசிலம்பட்டி | 650 |
| 33 | மாணவியர் விடுதி, திருமங்கலம் | 125 |
| 34 | மாணவியர் விடுதி, சின்னமனூர் | 100 |
| 35 | மாணவியர் விடுதி, கம்பம் | 50 |
| 36 | மாணவியர் விடுதி, செக்காணூரணி | 50 |
| 37 | மாணவியர் விடுதி, கூடலூர் | 50 |
| 38 | மாணவியர் விடுதி, திண்டுக்கல் | 50 |
| 39 | மாணவர் விடுதி, கூடலூர் | 50 |
| 40 | மாணவர் விடுதி, விளாத்தூர் | 45 |
| 41 | மாணவர் விடுதி, கள்ளப்பட்டி | 50 |
| 42 | மாணவர் விடுதி, கருணக்காமுத்தன்பட்டி | 50 |

இராமநாதபுரம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 43 | மாணவர் விடுதி, கோவிலாங்குளம் | 5 |
| 44 | மாணவர் விடுதி, கமுதி | 150 |
| 45 | மாணவர் விடுதி, அருப்புக்கோட்டை | 100 |
| 46 | மாணவர் விடுதி, நைனார்கோயில் | 75 |
| 47 | மாணவர் விடுதி, முதுகுளத்தூர் | 100 |
| 48 | மாணவர் விடுதி, பொம்மநேந்தல் | 50 |



இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.—

| | | |
|---|---|---|
| 49 | மாணவர் விடுதி, கடலாடி | 60 |
| 50 | மாணவர் விடுதி, மேலக்கிடாரம் | 50 |
| 51 | மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை | 50 |
| 52 | மாணவியர் விடுதி, கமுதி | 50 |
| 53 | மாணவியர் விடுதி, முதுகுளத்தூர் | 50 |

திருநெல்வேலி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 54 | மாணவர் விடுதி, கயத்தார் | 50 |
| 55 | மாணவர் விடுதி, கோவில்பட்டி | 60 |
| 56 | மாணவர் விடுதி, சங்கரன்கோவில் | 110 |
| 57 | மாணவர் விடுதி, அம்பாசமுத்திரம் | 75 |
| 58 | மாணவர் விடுதி, பாளையங்கோட்டை | 75 |
| 59 | மாணவர் விடுதி, தென்காசி | 60 |
| 60 | மாணவர் விடுதி, வீரகேரளம்புதூர் | 40 |
| 61 | மாணவர் விடுதி, வெள்ளாங்குளம் | 40 |
| 62 | மாணவர் விடுதி, வன்னிக்கோநேந்தல் | 30 |
| 63 | மாணவர் விடுதி, சாயமலை | 30 |
| 64 | மாணவர் விடுதி, வாசுதேவநல்லூர் | 50 |
| 65 | மாணவியர் விடுதி, சங்கரன்கோவில் | 50 |

| | சுருக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 49 | உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகள் | 4,109 |
| 14 | உயர் நிலைப் பள்ளி மாணவியர் விடுதிகள் | 1,425 |
| 2 | தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 150 |
| 65 | | 5,684 |

அட்டவணை ஈ.

(அ) பிற்பட்டோர் நலத் துறை மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநரின் கீழ் நடப்பவை.

| தொழிற்பயிற்சிக்கூடங்கள். | துவங்கப்பட்ட வருடம். | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை. | உதவி பண விகிதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர், இராமநாதபுரம். | 1961 | 30 | 45 |
| 2 பொதுநோக்கு பொறியியல், பட்டறை, செக்கானூரணி மதுரை. | 1963 | 15 | 45 |
| 3 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, வீரகேரளம்புத்தூர். திருநெல்வேலி. | 1965 | 15 | 45 |
| 4 பிரம்பு பயிற்சி நிலையம், தக்களை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 15 | 30 |
| 5 தும்பு பயிற்சி நிலையம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 25 | 30 |

(ஆ) சமூக நல இயக்குநரின் கீழ் நடப்பவை

| | | | |
|---|---|---|---|
| 1 தையல் மற்றும் ஆயத்த ஆடை நிலையம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி. | 1970 | 20 | 30 |
| 2 தையல் மற்றும் எம்ப்ராய்டரி நிலையம், செக்கானூரணி, மதுரை. | 1971 | 50 | 30 |



| தொழில் பயிற்சிக் கூடங்கள் | துவங்கப்பட்ட வருடம் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | உதவி பண விகிதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3 தையல் பயிற்சி நிலையம், ஊமங்கலம், தென்னாற்காடு மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 4 தையல் பயிற்சி நிலையம், கம்பம், மதுரை மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 5 தையல் பயிற்சி நிலையம், திருவாடணை, இராமநாதபுரம் மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 6 தையல் பயிற்சி நிலையம், தேவர் குளம், திருநெல்வேலி மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 7 தையல் பயிற்சி நிலையம், ருஷ்ணன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம். | 1978 | 20 | 30 |

S.No.141/55/6

## உள்ளடக்கம்

12—4—1983


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் :— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 413—449 |
| 2. தகவல் கோரல் :— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 449—451 |
| 3. அறிவிப்பு :— | |
| பேரவை அலுவல் .. | 451—452 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானம் :— | |
| பேட்டைவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலை கரும்புக்குக் கொடுக்கும் விலை குறித்து விவசாயிகள் போராட்டம் .. | 452—458 |
| 5. கவன ஈர்ப்புகள் :— | |
| (அ) சேலம் மாவட்டம், தாதம்பட்டியில் வரதட்சணை கொடுமைக்கு ஒரு பெண் பலியானது. | 458—461 |
| (ஆ) செவிலியர் பயிற்சிக்கு அனுமதிக்கப் பெற்ற இடங்கள் அனைத்தும் நிரப்பப் பெறாதது. | 461—464 |
| 6. வரவு-செலவுத் திட்டம், 1983–84, வாக்கெடுப்பு (தொடர்ச்சி). | 464—568 |
| கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | |
| கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம். | |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 464—467<br>484—486<br>546<br>548—567 |
| திரு. அ. ரகுமான்கான் | 467—478 |
| திரு. பி.ஜி. நாராயணன் | 478—482 |


128/66—1

6. வரவு–செலவுத் திட்டம், 1983-84, விவாதம்—
(தொடர்ச்சி)

திரு. நா. சுந்தரராஜ் 483—495
திரு. செ. செம்மலை 496—502
திரு. ஜே. ஹேமச்சந்திரன் 502—507
திரு. செ. சிவசாமி 507—513
திரு. செ. இராமலிங்கம் 513—518
திரு. எஸ்.டி. உகம்சந்த் 518—521
திரு. என்.எஸ்.வி. சித்தன் 521—529
டாக்டர் கே.பி. இராமலிங்கம். 530—534
திரு. ஜே. எஸ். இராக 534—548

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் : 569—570

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1983 ஏப்ரல் 12

பங்குனி 29, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

''கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு''

செயலுக்கு உரிய கருவியும், ஏற்ற காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லவன் அமைச்சன்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 727 மற்றும் 728, மாண்புமிகு மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத் திருப்பணி.

*வினா எண். 729.— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் திருப்பணிகள் முழுமையாக நடந்து முடிந்து விட்டனவா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலின் கிழக்கு மற்றும் மேற்கு இராஜ கோபுரங்களின் திருப்பணி வேலைகள் முடிக்கப்

பட்டு விட்டன. தெற்கு இராஜ கோபுரத்தின் வேலைகள் முடிக்
கப்பட்டு வர்ணம் பூசும் வேலை மட்டும் நிலுவையில் உள்ளது.
வடக்கு இராஜகோபுரத்தின் ஐந்து நிலைகளின் வேலைகள் முடிக்
கப்பட்டு மீதி ஐந்து நிலைகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு
தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தெற்கு
வடக்கு ஆகிய 2 கோபுரங்களில் தற்போது செய்யப்பட்டு
வரும் வேலை நிலைமைகளைப் பற்றி இங்கே விளக்கமாகக்
கூறினார்கள். அந்த வேலைகள் எப்போது துவங்கப்பட்டன ?
எவ்வளவு காலமாக அந்தவேலைகள் நிலுவையில் இருக்கின்றன
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டிலே திருப்பணிக் குழு
அமைக்கப்பெற்று அந்த திருப்பணிகள் தொடங்கி நடைபெற்று
வருகின்றன. ஏறக்குறைய 17 வேலைகளுக்கு நிர்வாக
அனுமதிகள் வழங்கப் பெற்று அதிலே கிட்டத்தட்ட 15 வேலை
கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. பாக்கி வேலைகளுக்காக
அவ்வப்போது இந்த நிர்வாக அனுமதிகளுக்காக அனுப்பப்
பெற்று அவைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிற சூழ்நிலை
யில் அந்த திருப்பணி இந்த அளவிற்கு நடைபெற்று வருகின்றது.

திரு. இல. பலராமன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இதற்கான மதிப்பீடு எவ்வளவு ? இதிலே அரசு
வழங்கிய தொகை எவ்வளவு ? எவ்வளவு தொகை பொது
மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டது ? மேலும் இருக்கக்
கூடிய குறை வேலைகளை முடிப்பதற்கு எவ்வளவு காலம் அரசு
அவகாசம் கொடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, இந்த 17 திருப்பணிக்களுக்கான மதிப்பீடு
தொகை சுமார் 13,68,200 ரூபாய். இதிலே முடிக்கப்பட்ட
அளவு சுமார் 12,97,270 ரூபாய். இந்த திருப்பணிக்காக அரசு
மானியம் 7,25,000 ரூபாய். ஆணையர் பொதுநல நிதியிலிருந்து
1,50,000 ரூபாயும், இதர திருக்கோயில்களிலிருந்து 3,06,112
ரூபாய். நன்கொடையாக வசூலிக்கப்பட்டது, 2,01,033
ரூபாய். உண்டியல் மூலமாக வரவு, 4,32,015 ரூபாய். திருப்
பணிக்காக டிக்கட் விற்பனை மூலமாக வரவு 1,36,913
ரூபாய். ஆக, 21,51,703 ரூபாய். வருமானக் கணக்கிலே



உள்ளது. இப்போது இந்த திருப்பணி வேலைகள் முடிந்த பிறகு
சுமார் மூன்று லட்சத்துச் சொச்சம் ரூபாய் வங்கியின் இருப்பில்
இருப்பதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வேலைகள்
ஏன் தாமதப்பட்டன என்பதைப்பற்றி அரசு கேட்டிருக்கிறது.
ஆகவே இதை முடிப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்பட்டு வருகின்றன. அப்படி ஒரு வேளை அந்த
திருப்பணிக் குழு அக்கறை காட்டாமல் இருந்தால் புதிய திருப்
பணிக் குழு அமைத்தாவது அந்த வேலைகளை துரிதப்படுத்த
வேண்டுமென்று அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கு
தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் வடக்கு
தெற்கு கோபுரங்கள் இரண்டும் அதனுடைய ஒப்பந்தக்காரர்கள்
மதிப்பீடு தொகை போதுமானதாக இல்லை என்பதாலும், அத
னால்தான் வேலைகளைத் துரிதமாகச் செய்யாமல் இதிலே
காலதாமதம் ஏற்படுகிறதாகவும் சொல்லப்படுகிறது. ஏற்கனவே
இந்த வேலைகளுக்காக கட்டிய சாரங்கள் எல்லாம் இடிந்து
கோயிலுக்குள் செல்வதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. எனவே
அந்த திருப்பணியை உடனடியாக செய்து, அந்தப் போக்கு
வரத்து இடைஞ்சலை மாற்றுவதற்கு அரசு முன் வருமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த வடக்கு ராஜ
கோபுரத்திலே 5 நிலைகள் வரை வேலைகள் முடிக்கப்பட்டு
மீதமுள்ள 5 நிலைகளில் வேலைகள் முடியாமல் இருப்பதற்குக்
காரணம், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த தகவலைப் போல்,
அந்த ஒப்பந்தக்காரர்கள் அந்த மீதமுள்ள வேலையைச் செய்ய
மறுத்து இருக்கிறார். ஆகவே, 30—4—1981 தேதியில் அந்த
ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு விட்டது. மீதமுள்ள வேலையை
முடிக்க இப்போது உள்ள புதிய கட்டிட கட்டண விதிகளின்படி
மதிப்பீடுகள் தயார் செய்து, அந்த மதிப்பீடு, அங்கீகாரத்திற்
காக நம்முடைய ஆணையர் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறார்
கள். ஆணையாளர் அதைப் பரிசீலித்து, அனுமதி அதற்கு
அளித்த உடனே வேலைகள் துவங்கப்படும் என்று அறிவிக்கப்
பட்டு இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இதுபோன்ற—அந்த வேலைகள் விரைவாக முடிக்கப்
படும் என்று—இரண்டாண்டுகளுக்கு முன்னதாகவே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையில் சொன்னார்கள். ஆனால்

[1983 ஏப்ரல் 12

இன்னும் அந்த வேலைகள் முடிக்கப்பெறாமல்
இருக்கின்றன. இப்போது புதிய மதிப்பீடு தயார் அப்படியே
இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் திருப்பணிக் செய்து
வேலைகளைச் சரியாக கவனிக்கவில்லை குழு அந்த
நிர்வாகமே, அந்த வேலைகளை என்பதால், கோயில்
இருக்கும் வேலைகளை முடிக்க எடுத்துக்கொண்டு பாக்கி
செய்யுமா? அரசு உத்தரவிட ஆவன

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் தெரிவித்ததுபோல் இரண்டாண்டுகளுக்கு முன்னாலே
அது விரைவில் முடிக்கப்படும் என்ற பதிலை இந்த அவையில்
நான் தெரிவித்ததை என் கவனத்திற்குக் கொண்டு வந்த
பின்னாலே தான் இதைப்பற்றி ஆணையரிடத்திலும், அந்த
நிர்வாக அதிகாரிகளிடத்திலும் கேட்டு இருக்கிறேன். பல
இடங்களில் திருப்பணிக் குழு என்று தனியாக ஒன்றும், நிர்
வாகக் குழு என்று தனியாக ஒன்றும் இருக்கிறது. அந்தத்
திருப்பணிக் குழுவில் மிகப்பெரிய மனிதர்களாக இருப்பவர்
களைப் போட்டு விடுகிறார்கள். அந்தப் பட்டியலைப் பார்த்
தால், அங்கே இருப்பவர்கள் யாருமே—திருவண்ணாமலையில்
இருப்பவர்கள் ஓரிருவர்தான் இருப்பதாகத் தெரிகிறது. அந்த
ஊரில் இருப்பவர்கள் இல்லை. தமிழகம் முழுவதும் உள்ள பல
பேர் அங்கே அந்தக் குழுவில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட
வேலைகளில் சிலர் தங்களை ஒப்படைத்துக் கொண்டு பணி
யாற்றினால் தான், பாடுபட்டால் தான் அந்தப் பணிகள்
விரைவாக நடக்கும். ஆகவே, அப்படிப்பட்ட முயற்சியில்
அந்தப் பெரியவர்கள் ஈடுபடாத காரணத்தால்தான் இன்று
அது தடைபட்டு இருப்பதாகத் தெரிகிறது.

ஏன் இதை அந்தத் துறையே எடுத்து நடத்தக்கூடாது என்று
கேள்வி கேட்கப்பட்டது. இத்தகைய பணிகளை அந்த நிர்வாக
அதிகாரியின் பொறுப்பிலோ, அல்லது அறங்காவலர்கள் பொறுப்
பிலோ அல்லது அந்தத் துறையின் பொறுப்பிலோ செய்வது
என்று சொன்னால், எல்லாப் பணமும் அந்த ஆலயங்களில்
இருந்து தரவேண்டிவரும். இப்படிப்பட்ட திருப்பணிகள் பொது
மக்களின் உதவியோடும், உற்சாகத்தோடும் நடக்க வேண்டும்.
இதிலேகூட சுமார் 7½ லட்ச ரூபாய் பொதுமக்களிடமிருந்து
திரட்டப்பட்டு இருக்கிறது. ஆகவேதான் பொதுமக்களைக்
கொண்ட திருப்பணிக்குழு அமைக்கப்படுகின்றது. மாண்புமிகு
உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்
கும் இந்தக் கேள்வியின் மூலம், அறநிலையத்துறையிடம் நான்
இன்னும் கொஞ்சம் கண்டிப்பாக, இவ்வளவு நாள் காலதாமதம்



1983 ஏப்ரல் 12]

ஆனதற்கு யார் காரணம், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கூட கேட்டு அறிவுரை வழங்கப்பட்டு
இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : துணைத் தலைவர் அவர்களே,
நாட்டிலே கடுமையான வறட்சி நிலவுகின்ற தன்மையை மனதில்
கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு அரசர்கள்
செய்ததைப்போல எல்லாக் கோயில்களிலும் திருப்பணி வேலை
கள் துவங்கப்படவேண்டும் என்று உத்தரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர்
அவர்களே, அரசு உத்தரவிடுவதன் மூலம் ஆலயத் திருப்பணி
களை நடத்திவிட முடியாது. எவ்வளவோ வறட்சி இருந்தாலும்
ஆங்காங்கு இருக்கும் மக்கள் அவர்களுக்கு எவ்வளவு துயரங்கள்
இருந்தாலும், எவ்வளவு தொல்லைகள் இருந்தாலும் ஆலயத்
திருப்பணிகள், ஆலயப் பணிகள், ஆலய விழாக்களை மிகச்
சிறப்பாக நடத்திக்கொண்டுதான் வருகிறார்கள். நான் நேற்று
கூட ஒரு கிராமத்திற்குச் சென்று ஒரு தேர்த்திருவிழாவில் கலந்து
கொண்டேன். அங்கே ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்
கலந்து கொண்டனர். அந்த மக்கள் இந்த வறட்சியை
போக்கும் நிலையிலோ அல்லது வேறு காரணத்திற்காகவோ இத்
தகைய விழாக்களை நடத்துகிறார்களா, ஈடுபடுகிறார்களா
என்று நாம் சொல்ல முடியாது. ஆகவே, அரசு ஆணை பிறப்
பித்து இத்தகைய திருப்பணிகளைச் செய்வது என்பது முடியாது.

பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்.

*வினா எண். 730—திரு. க. அங்குசாமி : மாண்புமிகு செய்தி
அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் தமிழ் செய்திப்
பத்திரிகைகளில் செயல்படுத்தப்படுவதில்லை என்பதை அரசு
அறியுமா ?

(ஆ) அமல்படுத்தாத பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரம்
மறுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): தற்சம
யம் எழுத்து சீர்திருத்தத்தினை நடைமுறையில் கடைபிடிக்காத

பத்திரிகைகளுக்கு விளம்பரம் நிறுத்துவது பற்றிய கருத்துரு
எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. ச. அங்குசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இன்றையதினம் பத்திரிகை படிக்கின்ற வாய்ப்புகள் மக்
களுக்குப் பெருகிக்கொண்டு வருகின்றன. இந்த அரசு ஒரு நல்ல
கொள்கையை எடுத்து இருக்கிறது. அந்தக் கொள்கையை வலி
யுறுத்துவதற்காகவாவது பத்திரிகைகளில் பெரியாரின் எழுத்
துச் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களால் அறிமுகப்
படுத்தப்பட்ட, கடைபிடித்து வந்த எழுத்துச் சீர்திருத்தத்தை
இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அரசின் சம்பந்தப்
பட்ட துறைகள், அரசின் தொடர்பான நிறுவனங்கள் எல்லா
வற்றிலும் இந்த எழுத்துச் சீர்திருத்தம் கண்டிப்பாகக் கடைப்
பிடிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களிடத்திலும் அதை ஏற்
றுக் கொண்டு இருப்பவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள்.
ஆனால் இங்கே இருக்கும் கேள்வியின் அடிப்படையில், பத்திரிகை
களில் அல்லது நாம் விளம்பரம் தரும் அந்தப் பத்திரிகைகள்
அதைக் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்த முடி
யாது. ஆனால் அதைப் பயன்படுத்துவதற்கு, அரசின் சார்
பிலும், தமிழ் மொழியின் வளர்ச்சியில் அக்கறை இருக்கின்றவர்
கள் யாராக இருந்தாலும், அவர்கள் இந்த எழுத்துச் சீர்திருத்
தத்தைக் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். பத்திரிகைகளும்
அருள் கூர்ந்து அந்த எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைபிடிக்க
வேண்டும் என்றும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும்
இந்த நேரத்திலே நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

திரு. த. மாரிமுத்து : துணைத் தலைவரவர்களே, எழுத்துச்
சீர்திருத்தம் பற்றி குழு ஏதாவது அமைக்கப்பட்டுள்ளதா? எழுத்
துச் சீர்திருத்தத்திலே அந்த எழுத்துக்களை எல்லோரும்
ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சில மாற்றங்கள் செய்து
அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவ
ரவர்களே, இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை பெரியார்
[illegible]ற்றாண்டு விழாவை ஒட்டி அமுல்படுத்துவதற்கு 30–3–1979





ஆம் ஆண்டிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின்
பணிகளை 1980–ல் ஆராய்ந்து பார்த்தபோது குழு உறுப்பினர்
களிலே மாறுபட்ட கருத்து கொண்டவர்கள், இந்த எழுத்துச்
சீர்திருத்தத்தை விரும்பாதவர்கள் இருப்பதால் வேகமாக
பணி நடைபெற முடியவில்லை என்ற கருத்து அரசின் கவனத்
திற்கு வந்தது. ஆகவே அந்த குழு 1981 ஆம் ஆண்டில் திருத்தி
அமைக்கப்பட்டது. அந்தக் குழுவும் பெரிய குழுவாக இருந்த
காரணத்தால், குழு பெரிதாக அமைந்து விட்டால் காரியங்
கள் தாமதமாக நடைபெறும் என்ற நடைமுறைக்கு ஏற்ப,
பணி தாமதமாக நடைபெற்றது. அதற்குப் பின்னால் 6–12–1982
முதல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை தலைவராகவும்
தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் வி. ஐ. சுப்பிரமணியம்
அண்ணா பொறியியல் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
டாக்டர் வ. செ. குழந்தைசாமி, முத்தமிழர் காவலர் கி. ஆ. பெ.
விஸ்வநாதன், வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன், டாக்டர்
ஔவை நடராஜன், ஆகியோரை உறுப்பினர்களாகவும் புலவர்
மா. நன்னன் அவர்களைச் செயலாளராகவும் கொண்ட ஒரு
குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழு மிகுந்த தீவிரமான
முயற்சிகளை மேற்கொண்டு இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை
நடைமுறைப்படுத்துவதற்கான முறைகளைச் சொன்னது. எல்
லோரும் ஏற்றுக் கொள்கிற வகையில் எழுத்துச் சீர்திருத்தத்தில்
மாற்றம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எல்லோரும்
ஏற்றுக்கொள்கிற கருத்தைக் கேட்டு, அதையும் ஏற்றுக்
கொண்டிருக்கிறது, ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களும்
தந்தை பெரியார் கருத்துப்படி, 'அய்' 'அவ்' என்று
எழுதப்படவேண்டும். ஆனால் மொழி வல்லுநர்கள்,
நிபுணர்கள் தெரிவித்த கருத்துக்களை ஒட்டி ஐ, ஔ
என்ற இரண்டு எழுத்துக்களுக்கும் அப்படியே இருக்கலாம் என்
பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏனென்றால் வேறுபல
இடங்களில் அந்த ஒலி வரும்போது சில பிரச்சனைகள் வரு
கின்றன. எனவே அந்த இரண்டு எழுத்துக்களும் பழைய முறை
யிலேயே எழுதப்படலாம், அப்படியே இருக்கலாம் என்பது
ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சிலர் ஒரு புதிய சீர்திருத்தத்
தத்தை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற உணர்வோடும்
இருக்கிறார்கள். சிலர் வைதீக மனப்பான்மை என்று சொல்வார்
களே, அப்படி அந்த வைதீக மனப்பான்மையிலும் இருக்கிறார்
கள். இப்படி எழுதினால் என்ன வந்துவிடப் போகிறது, அப்
படியே எழுதிக்கொண்டு இருப்போமே என்ற அலட்சிய போக்
கும் இருக்கிறது. ஆனால் மொழி வளர வேண்டுமென்று விரும்
புகிறவர்கள் யாராக இருந்தாலும், இந்த மொழியை மற்ற
வர்கள் நிறைய எழுத்துக்களைக் கற்று கொண்டு பின்பற்று
வதிலே இருக்கிற சங்கடங்களைத் தெரிந்து, அந்த சங்கடங்
களைத் தீர்த்து, இந்த மொழி வளர்ச்சிக்கு ஆவன செய்ய

வேண்டுமென்ற முறையில் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை இது. இது யாருடைய கருத்து, அல்லது எண்ணம் என்று பரிசீலிக்கும் முன் தமிழ் அறிஞர்கள் நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு முறை, தமிழ் வளர்ச்சிக்கு இருக்கிற ஒரு முறை என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களால் முடிந்த அளவுக்கு, நான்கு எழுத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்தால் முதலில் அந்த நான்கு எழுத்துக்களை ஏற்றுக்கொண்டு, பின்னர் முடிந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கான போனஸ்.

* வினா எண். 731—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்பட்டதா ?

(ஆ) இல்லையேல் போனஸ் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) 1965 ஆம் ஆண்டு போனஸ் சட்டம் அரசு துறையினால் நேரடியாக நிர்வகிக்கப்படும் நிறுவனங்களுக்குப் பொருந்தாது. எனவே, கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்க இயலாது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும் என்பதற்காக நடந்த வேலை நிறுத்தம் சம்பந்தமாக, அவைகள் வாபஸ் பெற்றதற்கு பிறகு, அந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட தொழிலாளர்கள் எவரையும் பழி வாங்கக் கூடாது என்று 15-3-1983 அன்று சென்னை, தொழிலாளர் துணை ஆணையாளர் முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறி அங்கே சில பழி வாங்கும் நடவடிக்கைகள் அதிகாரிகளால் எடுக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா ?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதைத் தனிக் கேள்வியாக போட வேண்டும்.

1980 ஆம் ஆண்டு இறுதிவரை வட்டிக்கடை நடத்த உரிமம் பெற்றோர் எண்ணிக்கை.

*வினா எண். 732—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1980 ஆம் ஆண்டு இறுதிவரை வட்டிக் கடை நடத்த உரிமம் பெற்றவர்கள் எவ்வளவு பேர் ?

(ஆ) வெளிமாநிலத்தவர் எவ்வளவு பேர் ?

(இ) தமிழகத்தைச் சார்ந்தவர்கள் எவ்வளவு பேர் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 18,215 பேர். இவர்களில் 15,066 பேர் தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர்கள், 3,149 பேர் 1957 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றவர்கள்.

(ஆ) 3,949 பேர்.

(இ) 14,266 பேர்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, எத்தனை பேர் வட்டிக்கடை வைப்பதற்கான உரிமங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். பொருள்களின் மதிப்பீட்டில் இத்தனை சதவீதம் கடன் தொகையாகத் தரவேண்டும் என்று சொல்கிற அரசு விதி ஏதாவது இருக்கிறதா ? வட்டி இத்தனை சதவீதம் தான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை ஏதாவது விதிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பான் புரோக்கர்களைப் பொறுத்தவரையில் 12 சதவீதம் என்று இருக்கிறது. மணி லெண்டர்ஸ் ஆக்டில்

'if it is a secured loan' என்று ஈட்டுக் கடனாக இருக்குமேயானால் 9 சதவீதம் வட்டி என்றும், ஈடற்ற கடன் என்றால் 12 சதவீதம் வட்டி என்றும் இருக்கிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சட்டங்களின் கீழும் ஒருவரே பதிவு செய்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா ? இருந்தால் அப்படிப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இரண்டு சட்டங்களின் கீழேயும் ஒருவரே பதிவு செய்வதற்கு தடை ஏதும் இல்லை. அவர்கள் எத்தனை பேர் என்பது பற்றிய தகவல்கள் ஏதும் தற்போது இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர்ந்த பட்ச வட்டி விதம் இவ்வளவுதான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதை மீறி வட்டி வசூலிப்பவர்கள் மீது நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தை மீறுகிறவர்கள் அவ்வப்போது தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அந்த அடிப்படையில் கிட்டதட்ட பான் புரோக்கர்ஸ் சட்டத்தின் கீழ் 9 பேர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 195 பேர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு பேருக்கு ஃபைன் போடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, மணி லெண்டர்ஸ் சட்டத்தின் கீழ் 13 பேர்களுடைய உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. 5 பேர்கள் மீது கிரிமினல் வழக்கு போடப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட சட்டத்திலே இருக்கிற சந்து பொந்துகளை வைத்து, அதனுள்ளே நுழைந்து அவர்கள் அதிகமாக வட்டி வசூல் செய்துக் கொண்டு, அதே நேரத்தில் ஏழைகளுக்கு பாதிப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், அதை தவிர்க்கும் வகையில், புதியதாக ஒரு சட்டத் திருத்தத்தை அரசு கொண்டு வர இருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிக்க துணைச் சபாநாயகர் அவர்களே, சந்து பொந்துகளிலே எல்லாம் புகுந்துக் கொண்டு அந்த வட்டிக் கடைக்காரர்கள் பொது மக்களை ஏமாற்றுவதாக நமக்கு அமைச்சரிடமிருந்து தகவல் தெரிய வந்திருக்கிறது. 1977-லே, இப்போது ஆளுகின்ற கட்சி, இப்படிப்பட்ட ஏமாற்று





களை நடக்காமல் செய்ய வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, அஞ்சலகங்களின் மூலமாக தபால் ஆபீஸ்களின் மூலமாக கடன் கொடுப்பதாகச் சொன்னார்களே, அது பற்றிய நடவடிக்கைகளை அரசு ஏதாவது எடுத்திருக்கிறதா, பரிசீலித்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மணி லெண்டர்ஸ் ஆக்ட் மற்றும் பான் புரோக்கர்ஸ் ஆகிய இரண்டு சட்டங்களின் பிரகாரம், தனிப்பட்ட நபர்கள் உரிமம் பெற்று, அந்த உரிமங்களின் அடிப்படையில், இதுபோன்ற கடன்களைத் தருகிறார்கள். அப்படி கடன் தருகிறபோது குறைந்தபட்சம் 9 சதவீதம் வட்டி அல்லது 12 சதவீதம் வட்டி என்று எழுதி வாங்கிக் கொண்டு, கொடுக்கிறபோது கிட்டத்தட்ட 36 சதவீதம் கூட வாங்குகிற அளவுக்கு, அசலிலிருந்து முதலிலியே வட்டியைப் பிடித்துக் கொண்டு கொடுப்பது என்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால், ஏழைகள் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

(முற்பால் 9-20)

இதைக் களையவேண்டும்; ஏழைகளை இந்தக் கொடுமையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் சட்டத்திருத்தம் தேவைப்படுகிறது. இது போன்ற சந்தேகங்கள் ஏற்படுகின்றபோது அல்லது பூர்வாங்க பிரைமா ஃபேஸிகேஸ் இருக்கும்போது உரிமங்களை ரத்து செய்வதற்கும் கூட சட்டத்தில் வழிவகை இல்லாமல் இருந்தது. மணி லெண்டர்ஸ் ஆக்டிலே வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. பான் ப்ரோக்கர் ஆக்டிலேயும் வழி வகை செய்வதற்கு சட்டமுன்வடிவை அறிமுகம் செய்திருக்கிறோம். அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் திடீரென்று சென்று ஒரு குறிப்பிட்ட கடையிலே சோதனையிடுகின்றபோது, அந்தக் கடையிலே அவர்கள் கடன் கொடுக்கின்றபோது முன்பணமாக வட்டியை எல்லாம் அசலில் கழித்துக்கொண்டு பிறகு கொடுப்பதனால் அதிகப்படியான பணம் கணக்கில் இருந்தாகவேண்டும். அப்படியல்லாமல் கணக்குப் புத்தகத்தில் இருப்பதை விட அதிகப்படியான பணம் அந்தக் கடையிலே இருக்குமேயானால் அது ஏழைகளை உறிஞ்சுகின்ற வகையில் வந்த பணம் என்ற முறையில் கடுமையான நடவடிக்கையை அவர்கள் மீது எடுக்கவேண்டும் என்ற வகையில் அது ஒரு பெருங்குற்றமாகக் கருதப்படவேண்டும் என்று சட்டத்திலே கொண்டுவரப்பட இருக்கின்றது. அந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவருகின்றபோது மாண்புமிகு உறுப்

பினர் அவர்கள் எண்ணுகின்ற எண்ணம் எல்லாம் பான் ப்ரோக்கர்ஸ் சட்டத்தின்படியும் மணி லெண்டர்ஸ் சட்டத்தின்படியும் ஈடேறும் என்று அரசு நம்புகின்றது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஏழைகளுக்கு அளிக்கப்படக்கூடிய கொடுமைகளில் மிகக் கடுமையான கொடுமை இந்த வட்டிக் கொடுமை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டிக் கடைகள் 12 சதவீதம் வட்டிதான் வாங்கவேண்டும் என்று நிர்ணயித்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் வட்டிக்கடைக்காரர்கள் 12 சதவீதம் வாங்குவதாகத்தான் எழுதுகிறார்கள். ஆனால் அசல் 100 ரூபாய் என்று சொன்னால் 200 ரூபாயாக எழுதுகிறார்கள். இதற்கெல்லாம் எத்தனை சட்டம் கொண்டு வந்தாலும் ஏழை மக்களைப் பாதுகாக்க முடியாது. ஆகவே தனியார் வட்டிக்கடைகள் முழுவதையும் ரத்து செய்துவிட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கூறியபடி தபால் ஆபீஸ் மூலமாக கொடுக்க முடியாது. ஆகவே கிராம கூட்டுறவு சங்கங்கள், நகர கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மூலம் இந்தக் கடனை 12 சதவீதம் வட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டு முழுவதுமாக தனியார் வட்டிக் கடைகளைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளால் மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இல்லை. அதற்கான சில இடையூறுகளும் இருக்கின்றன. மத்திய அரசினைப் பொறுத்த வரையில் செக்யூர்ட் லோன் அன்செக்யூர்ட் லோன் என்று சொல்லக்கூடிய கடன்கள் கூட்டுறவு வங்கிகளின் மூலமாகக் கொடுக்கின்றபோது முழுமையாக அதனை ஏழைகளுக்கும், நலிந்த பிரிவினருக்கும் கொடுக்கின்றபோது அந்த பணத்திற்கு Refinancing facility is not yet agreed to by The Reserve Bank. அந்த டெப்பாசிட்டை வைத்து அல்லது அந்தப் பொருள் மீது ஒரு குறிப்பிட்ட பணத்தை வாங்குகின்றபோது அந்தப் பொருளின் மீது ரீஃபைனான்ஸிங் ஃபெசிலிட்டிக்கு மத்திய அரசும் ஒத்துக்கொள்ளவில்லை, ரிசர்வ் வங்கியும் ஒத்துக்கொள்ளவில்லை. நாட்டுடைமை என்ற பெயரால் ஏழைகளின் நலனுக்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் என்று சொல்லப்படுகின்ற அந்த நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கூட இந்தப் பிரச்சினையில் ஏழைகளின் பிரச்சினையை தீர்க்கக் கூடிய அளவுக்கு வரவில்லை. அவர்கள் இதில் ஈடுபடவேண்டும் என்று மைய அரசினை மாநில அரசு பல முறை



கேட்டிருக்கின்றது. மைய அரசு ரிசர்வ் வங்கியின் மூலமாக நபார்ட் என்ற அமைப்பின் மூலமாக ரீஃபைனான்ஸ் ஃபெசிலிட்டி என்று சொல்லக்கூடிய அந்த வாய்ப்பினை கூட்டுறவு வங்கிகளுக்கும், சங்கங்களுக்கும் தர இசைகின்ற போது தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவது போன்று கூட்டுறவுச் சங்கங்களும், வங்கிகளும் ஏழைகளின் துயரினைத் துடைக்கின்ற வகையில் குறைந்த வட்டியில் இதுபோன்ற கடன்களைக் கொடுக்க இயலும்.

திரு. என். இட்டய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1980-ஆம் ஆண்டு இறுதி வரை வட்டிக் கடை நடத்த உரிமம் பெற்றவர்கள் எந்தத் தகுதியின் கீழ் அத்தகைய உரிமங்களைப் பெற்றார்கள் என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த குறிப்பிட்ட தாசில்தார் அல்லது இன்டிபென்டன்ட் ஸ்பெஷல் தாசில்தார் ஆகியோரின் ஜூரிஸ்டிக்ஷன் என்று சொல்லக்கூடிய அந்த எல்லைக்குள் அவர் இருக்கவேண்டும், வட்டிக்கடை சம்பந்தப்பட்ட குற்றங்களைப் புரிந்து தண்டனைக்கு உட்படாமல் இருந்தால் வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை, அவர்களுக்கு அந்த உரிமத்தினை வழங்கலாம் என்ற நிலைமை இருக்கின்றது. அந்த அடிப்படையில் தாராளமாக எல்லோரும் பெறுகிறார்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த வட்டிக்கடை என்பதே நிலப்பிரபுத்துவ காலத்தில் உருவானது. பாங்க்வட்டி இன்றைக்கு தொழில் வளர்ச்சி காலத்தில் உருவானது ஆகவே வீதிக்கு நாற்பது வட்டிக்கடைகள் என்று இன்றைக்கு திண்டுக்கல், மேலூர் போன்ற நகரங்களில் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவெனில், மூலதனத்தை ஓரளவு போட்டு மிகச் சுலபமாக மக்களைச் சுரண்டுவதைத் தடுக்க மக்களுக்கு நன்மை செய்வதற்கு அதைத் திருப்பிவிட வேண்டும் என்பதை ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் பார்த்தாலும்கூட இந்த பாங்கிங் முறைக்குத் திருப்பிவிடுவதற்கு படிப்படியாக இந்த வட்டிக் கடைகளை எடுத்துவிடுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நிலப்பிரபுத்துவ தத்துவம் நடைமுறையில் இருந்தபோது கொண்டுவரப்பட்ட முறைதான் இது. அந்தத் தத்துவம்

நாளாவட்டில் மாறி நகரப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழைகளையும் சுரண்டக்கூடிய வகையில் நகர்ப்புறத்தில் இருப்பதையும் நாம் அறிவோம். கிராமங்களில் மட்டுமல்ல, நகரப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழைகளுக்கு விமோசனம் தரக்கூடிய அளவிற்கு இதிலே கண்டிப்பாக மாற்றம் வந்தாகவேண்டும் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது. நான் ஏற்கனவே விளக்கமாகச் சொன்னதுபோல் வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் அல்லது நான்-நாஷனலைஸ்ட் ஷெட்யூல்ட் பாங்க்ஸ் அல்லது நான்-ஷெட்யூல்ட் பாங்க்ஸ் என்று சொல்லக்கூடிய வங்கிகள் எல்லாம் மைய அரசினுடைய அட்மினிஸ்ட்ரேடிவ் கண்ட்ரோலில் இருப்பதால் அவர்கள் முன்வந்து ஏழைகளுக்கும், நலிந்த பிரிவினருக்கும் தாராளமாக ஷெட்யூல்ட் அண்ட் அன்-ஷெட்யூல்ட் லோன்ஸ் கொடுக்க வேண்டுமென்று வந்தால் அது உகந்ததாகயிருக்கும். ஆனால் இம்மாதிரி ஒரு இரண்டு மூன்று ஆண்டு காலம் இதை நடைமுறைப்படுத்திவிட்டு கொடுத்த கடன்களையெல்லாம் திருப்பிப் பெற முடியவில்லையென்ற காரணத்தால் அவர்கள் கடன் கொடுப்பதை பெரும்பான்மையாக நிறுத்திவிட்டார்கள், மைய அரசை அணுகுகிறபோது மாநில அரசுக்கு கிடைத்த பதில் இதுதான். ரிசர்வ் வங்கியைப் பொறுத்தவரையில் மைய அரசு உத்தரவு வாங்கித்தான் — நபார்ட் என்று ரிசர்வ் வங்கியில் ஓர் அமைப்பு இருக்கிறது—கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாக இந்தக் கடன்களைத் தரலாம், அதற்கும் மைய அரசு இசைவு தேவைப்படுகிறது. மைய அரசை மாநில அரசு பலமுறை வலியுறுத்திவருகிறது, மைய அரசும் இதை ஆய்ந்து வருகிறது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஒரு தெளிவான கருத்தைச் சொன்னார்கள். வட்டிக்கடைக்காரர்கள் சுரண்டுகிறார்கள், அதிகப் பணம் வாங்குகிறார்கள் என்பது அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. அதற்கு சட்டத் திருத்தம் கொண்டுவரப்போகிறோம் என்று சொன்னார்கள். கடைகளில் வட்டிக்கு வைக்கும்போது கடையில் அதிகப் பணம் இருந்தால் அது கூடுதலாக வாங்கியது என்று நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று, அப்படி ஒரு திருத்தம் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். வட்டிக் கடைகளில் அப்படி வைப்பதில்லை. வட்டிக்கு வைத்துப் பார்த்தால்தான் தெரியும். வீட்டுக்குள்ளே ஒரு இடத்தில் இருந்து எடுத்து வந்து அதிகப் பணத்தை எடுத்து அப்படியே அங்கு வைத்து விடுகிறார்கள். வேறு இடத்தில் வைத்துவிடுகிறார்கள். ஆகவே போலீஸ், விஜிலன்ஸ்



டிப்பார்ட்மெண்டில் உள்ள அதிகாரிகள் நகைகளை அடகு வைப்பதுபோல் சென்று அதைப் பார்த்து உடனடியாக சட்டம் வருவதற்கு முன்னாலே வட்டிக் கடைகாரர்கள் மேல் நடவடிக்கை எடுக்க ஒரு அதிகாரிகள் குழு போட்டு ஸர்ப்ரைஸ் விஸிட் செய்து தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இதுபோன்று குற்றம் புரிபவர்கள் மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் சட்டத்திருத்தத்தையொட்டிய விதிகளின் அடிப்படையில் மற்றும் நடவடிக்கைகள் முழுமையாக செம்மையாக எடுக்கமுடியுமா என்றால் கண்டிப்பாக அதை விட கெட்டிக்காரர்களாக தவறுகள் செய்கிறவர்கள் இருக்கிற காரணத்தால் பலநேரங்களில் முடியாமல் போய் விடுவது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் விதிமுறைகளை நாம் கடைப்பிடிக்கிறபோது கண்டிப்பாக This would be creating a deterrent fear in the minds of the offenders. என்ற முறையில் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனையை அரசாங்கம் ஏற்று பரிசீலிக்கும்.

கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி

*வினா எண். 733—திரு. இல. பலராமன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–1982-ல் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இதற்காக அரசு செலவழித்த தொகை யாது?

(இ) இதற்கு மத்திய மைய அரசு நிதி எவ்வளவு?

(ஈ) இதனால் கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு வளர்ச்சிக்கு நன்மை யாது?

[1983 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 1981—82-ல் நடேசன் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் ஆண்கள் 1,202-ம் பெண்கள் 31-ம் ஆக மொத்தம் 1,233 மாணவர்கள் பயின்றனர்.

(ஆ) தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதுநிலை ஆய்வாளர் மற்றும் துணைப் பதிவாளர் அவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்படும் சம்பளம், மற்ற இதர படிகள் தமிழ்நாடு அரசு அளிக்கிறது. இதற்காக 1981—82-ல் அரசு ரூ. 53,711.00 செலவு செய்துள்ளது. பயிற்சி கல்லூரி செலவினங்களுக்காக இதே ஆண்டு தேசிய, கூட்டுறவு பயிற்சி அமைப்பு ரூ. 10.91 லட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ. 1.40 லட்சம் செலவிட்டுள்ளது.

(இ) இதற்கு மைய அரசு 1981—82-ல் நேரடி நிதி உதவி அளிக்கவில்லை ஆயினும் தேசிய கூட்டுறவு பயிற்சி அமைப்பிலிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

(ஈ) கூட்டுறவு கொள்கையின் படி கூட்டுறவு நிறுவனங்களை திறமையாக நிர்வகிக்க தகுந்த கல்வியும் நடைமுறை பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதனால் கூட்டுறவு சங்கங்கள் திறமையாக நடைபெறுவதற்கு வழி வகுக்கின்றது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றது என்ற சித்தாந்தத்தை நாம் ஏற்றுக்கொண்டிருந்தாலும் இதை தனி பயிற்சி நிலையங்களாக ஆக்கி தொழிலுக்கென உத்தியோகத்திற்கென பயிற்சி அளிப்பது என்ற நிலையில், இளம்பிராயத்தில் பள்ளி மாணவர்களுக்கு கல்லூரி மாணவர்களுக்கு இதைப் போதிப்பதற்கு அரசாங்கம் பல்கலைக்கழகங்களுக்கு அல்லது கல்வித் துறைக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா ? இல்லையென்றால் எதிர்காலத்தில் அதற்கான ஒரு திட்டத்தை வகுக்கும் சூழ்நிலையை அரசு உருவாக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி பள்ளியைப் பொறுத்த வரைக்கும் ஜெனரல் மேனேஜ்மெண்ட்,



1983 ஏப்ரல் 12]

மேனேஜ்மெண்ட், பைனான்சியல் மேனேஜ்
அட்மிஸ்ட்ரேடிவ் மேனேஜ்மெண்ட், கிரெடிட் மேனேஜ்
மெண்ட், கன்சியூமர்ஸ் மேனேஜ்மெண்ட் என்று பல வகையான
மெண்ட், புரெ டியூசர்ஸ் மேனேஜ்மெண்ட் பயிற்சி இங்கே அளிக்கப்படு
கூட்டுறவுப்பணிகளை நிர்வகிக்கின்ற பயிற்சி இங்கே அளிக்கப்படு
கின்றது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு
தத்துவத்தினுடைய உயரிய நோக்கங்களையெல்லாம் இளம் பிரா
யத்திலேஇளைஞர் மத்தியில் பாடப் புத்தகங்களிலே கொண்டு
வரவேண்டுமென்று கூறுகிறார் என்று கருதுகிறேன். இது குறித்து
நடவடிக்கை எடுக்கப்பட்டதா, இல்லையா என்பது எனக்குத்
தெரியாது. ஆனால், இதுகுறித்து கல்வித் துறையோடு கலந்து
ஆலோசிக்கப்படும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் ஆலோசிக்கப்படும் என்று கூறினார்கள். மற்ற மாநிலங்களிலே இந்தமாதிரியான நிலை இருப்பது நமது அரசுக்குத் தெரியுமா? அதுபோன்ற நிலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் முயற்சியை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலை என்ன என்று தெரியாத காரணத்தினால்தான் ஆலோசிக்கப்படும் என்று சொன்னேன். ஆலோசித்து அதிலே முடிவு எடுக்கப்படும்.

திரு. இரா. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு பயிற்சி கல்லூரியில் மாணவ, மாணவிகள் சேர்க்கப்பட்டதன் எண்ணிக்கையைத் தெரிவித்தார்கள். அப்படி பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளில் எத்தனை பேர் கூட்டுறவு ஸ்தாபனப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்களில்
இந்தப் பயிற்சியை முடித்தவர்கள்தான் இருக்க வேண்டுமென்ற
விதியிருக்கிறது. கூட்டுறவுத் துறையில், டெபுடி ரிஜிஸ்திரார்,
சீனியர் இன்ஸ்பெக்டர், கூட்டுறவு சப்-ரிஜிஸ்திரார் போன்றவர்கள்
பதவிக்கு வந்த பிறகு. Per odically they are sent for training to
this particular Institute. படிப்படியாக பயிற்சிக்கு அனுப்பப்
படுகிறார்கள். ஒரு கால கட்டத்திற்குள் அனைவரும் இந்தப்
பயிற்சியைப் பெறவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது

இஅனும் எவ்வளவு பேர்கள் இதுகாறும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள், இன்னும் எவ்வளவு பேர் பயிற்சி, பெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது 1,233 நபர்கள் இந்தப் பயிற்சியிலே சேர்க்கப்பட்டதாகச் சொன்னார்கள். அவர்களிலே பின் தங்கிய, மலைவாழ், ஆதி திராவிட மக்கள் எத்தனை பேர்கள்? வருங்காலத்தில் இவர்களையும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுமா? இப்போது இதிலே குறையிருப்பதாக எனக்குத் தகவல். அமைச்சர் அவர்களிடம் இதுபற்றிய தகவல் இருந்தால், அந்த நிலை என்ன என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே குறை ஒன்றும் இருக்க வாய்ப்பில்லை. காரணம், இந்தப் பயிற்சிக்கு கூட்டுறவு சப்-ரிஜிஸ்திரார், சீனியர் இன்ஸ்பெக்டர், டிபுடி ரிஜிஸ்திரார் போன்ற, ஏற்கனவே கூட்டுறவுத் துறையிலே பணி புரிகின்றவர்கள்,—அவர்களைப் பொறுத்தவரையில்—அவர்களைத் தேர்ந்தெடுப்பது தேர்வாணைக்குழு. தேர்வாணைக்குழுவைப் பொறுத்தவரைக்கும், 'ரூல் ஆப் சர்வீஸ்' என்ற முறை கடைப்பிடிக்கப்படுகிறது என்று கருதுகிறேன். 18 சதவீதம் 'ரூல் ஆப் ரிசர்வேஷன்' தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்று கருதுகிறேன். இந்த 18 சதவீதத்திலே கண்டிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் இருக்கக்கூடும். ஆனால் எவ்வளவு பேர்கள் என்ற எண்ணிக்கை தற்போது இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பயிற்சி கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்தப் பயிற்சியிலே அவர்கள் தேற வேண்டுமென்ற விதி ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. It is only a training, it is not a test.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்தக் கூட்டுறவு பயிற்சிப் பள்ளிகள் எத்தனை இடங்களிலே எங்கெங்கே இருக்கின்றன? எந்த அடிப்படையிலே இந்த மாணவர்கள் அங்கே சேர்க்கப்படுகிறார்கள்? அந்தப் பயிற்சி எவ்வளவு நாட்களுக்கு நடத்தப்படுகிறது? அந்தப் பயிற்சி முடிந்த பிறகு, அவர்களுக்கெல்லாம் வேலை கூட்டுறவுத் துறையிலே கொடுக்கப்படுகிறதா? என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறுவதெல்லாம், தமிழகத்திற்கு மட்டுமல்ல; தென்னகத்திலே உள்ள ஐந்து மாநிலங்களிலே இருக்கின்ற, ஏற்கெனவே குறிப்பிட்டது போல், அரசுப்பணியிலே பொறுப்பிலே இருக்கின்ற பொறுப்பாளர்களுக்கு நடேசன் பயிற்சி நிலையத்தைப் பொறுத்தவரைக்கும் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொன்னது போல், தமிழக தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு இந்த பயிற்சி அளிக்கப்படுகின்றது.

நீதிமன்ற கட்டணங்களை ரத்து செய்யும் திட்டம்.

*வினா எண். 734—திரு. என். பழனிவேல், திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோர்ட் கட்டணங்களை ரத்து செய்வது குறித்து மாநில அரசின் கருத்தை மத்திய சட்ட அமைச்சர் கேட்டுள்ளாரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) : நாடாளுமன்ற கலந்தாலோசிக்கும் உபகுழு(Pariiamentary Consultaetive Sub-Comm tt e) நீதிமன்ற கட்டணங்களை ரத்து செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை நாடாளுமன்ற கலந்தாலோசிக்கும் குழு ஏற்றுக் கொண்டது. ஜனவரி திங்கள் 1982 ஆம் ஆண்டு, மத்திய அரசு , நீதிமன்ற கட்டணங்களை ரத்து செய்வதைக். குறித்த நாடாளுமன்ற கலந்தாலோசிக்கும் குழுவின் கருத்துருவின்மீது மாநில அரசின் கருத்துக்களைக் கோரியுள்ளது. இதற்கிடையில் இப்பொருளின் முக்கியத்துவத்தைக்கருதி மத்திய சட்ட அமைச்சர், மாநில சட்ட அமைச்சர்கள் அடங்கிய மாநாட்டை, நாடாளுமன்ற கலந்தாலோசிக்கும் குழுவின் பரிந்துரையை விவாதிப்பதற்காக 17–5–1982 அன்று புது டில்லியில் ஏற்பாடு செய்தார். இம் மாநாடு நீதிமன்ற கட்டணங்கலை ரத்து செய்யவேண்டாம் எனவும் பதிலாக அதைச் சீர்திருத்தலாம். (Rationalisation) எனவும் கருத்தை தெரிவித்தது. இது குறித்து ஆராய மத்திய சட்ட அமைச்சரை கூட்டுநராகக்

கொண்ட 5 மாநில சட்ட அமைச்சர்களடங்கிய உபகுழு ஒன்றை
இம் மாநாடு நியமித்துள்ளது. உபகுழுவின் அறிக்கை இன்னும்
பெறப்படவில்லை.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்று நீதி என்பது பின்தங்கிய மக்க
ளுக்கு எட்டா கனியாக இருக்கிறது. நம்முடைய உயர்நீதி
மன்றத்தில் ஒரு ரிட் மனுவை பைல் செய்யவேண்டும் என்று
சொன்னால் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் தேவைப்
படுகிறது. அரிசன மக்களோ அல்லது சாதாரண விவசாய
தொழிலாளர்களோ, பின்தங்கிய மக்களோ, பழங்குடி மக்களோ
ஒரு ரிட் மனுவை இன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய
முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய
மாநில அரசு இந்த கட்டணங்களை ரத்து செய்யவேண்டும்
என்று மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா? இந்த பிரிவினருக்
காவது நம்முடைய மாநில அரசு அந்த கட்டணங்களை ரத்து
செய்ய நடவடிக்கை எடுக்குமா' என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்
தினுடைய ஆர்ட்டிகில் 226 ரிட்டைப் பொறுத்தவரைக்கும்
ஆயிரம் ரூபாய் கட்டணம். வழக்கறிஞர்களுக்கு வேண்டு
மானால் செலவு அதிகமாகலாம். அது தனிப்பட்ட
பிரச்சனை. ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரைக்கும்
நலிந்த பிரிவினர்களுக்கு, ஏழைகளுக்கு, சாதாரண மக்கள்
குறிப்பிட்ட நடுத்தர மக்களுக்கு கூட நீதிமன்றத்தில் கட்ட
ணங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் நீதி கோரி
நீதிமன்றத்திற்கு செல்ல முடியாத நிலையில் இருக்கும்
அவர்களுக்கு ஒரு வழி வகை செய்வதற்காக இதை பரிவோடு
அரசு பரிசீலித்து வருகிறது. வருகின்ற 16, 17ம் தேதியில்
டெல்லியில் நடைபெறப்போகின்ற மாநாட்டில் மாநில
அரசின் கருத்துக்களை கூட நாம் எடுத்து வைக்க இருக்கிறோம்.
இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் ஒரு குறிப்பிட்ட வருமானத்
திற்கு கீழே உள்ள அனைவருக்கும் நீதிமன்றத்தில் கட்ட
ணத்தை முழுமையாக ரத்து செய்யலாமா என்றும்
அல்லது ஒரு குறிப்பிட்ட சூட்-வேல்யூவை பொறுத்த
வரைக்கும் அல்லது குறிப்பிட்ட வழக்கினுடைய மதிப்பீடு
குறைந்த அளவு இருந்தால் அந்த அளவுக்கு கீழே
இருக்கின்ற அனைவருக்கும் இதிலிருந்து விமோசனம் பெற
வேண்டும் என்றும் அதைப்போலவே தற்போது நம் மாநிலத்தில்
எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு லேபர் டிரிபுனலைப்
பொறுத்தவரைக்கும் யாருக்குமே கட்டணம் இல்லை என்று





நாம் 2 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வந்து இருக்கிறோம்.
அதைப்போலவே எம்.ஏ.சி.டி. மோட்டார் ஆக்சிடெண்ட்
கிளைம் டிரிபுனல் பொறுத்தவரைக்கும் இத்தகைய சலுகை
களை அளிக்கலாமா என்று கூட நாம் யோசித்து வருகிறோம்.
அதைப்போலவே குடும்ப விவகாரம் சம்பந்தப்பட்ட வழக்
குகள் எதுவாக இருந்தாலும் டைவர்ஸ். மெயின்டனன்ஸ் சூட்,
ஓ.பி. போன்ற எதுவாக இருந்தாலும் அதிலும் கட்டணம்
இல்லாமல் இருக்கலாம் என்றுகூட அரசு ஆலோசித்து வருகிறது.
இது குறித்து இன்னும் அரசு முடிவு எடுக்கவில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றங்களிலே இன்றைக்கு
கட்டணங்கள் செலுத்துவதிலே அதிகமான கட்டணங்கள்
என்பது ஒரு புறம் இருந்தாலும், கோர்ட்டுகளிலே தங்க
ளுடைய வழக்குகள் சம்பந்தப்பட்ட ரெக்கார்டுகளை வாங்கு
வதற்கு பல பேர் மனு செய்தால், பல மாதங்கள் ஆனாலும்
அதை கொடுக்க மறுக்கிறார்கள். அதிலே லஞ்சலாவண்யம்
அளவுக்கு மீறி விளையாடுகிறது. அப்படியிருந்தாலும்
கூட கால தாமதம் ஏற்படுகிறது இதைத் தீர்ப்பதற்கும் அவர்
களுக்கு உடனடியாக ரெக்கார்டுகள் கிடைப்பதற்கும் அரசு
நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை
யின் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற இன்னல்கள்
நீதித்துறையில் மக்களுக்கு இழைக்கப்படுவதை மத்திய சட்ட
அமைச்சர் அவர்கள் அண்மையில் நடந்த சட்ட அமைச்சர்
மாநாட்டில் சுட்டிக் காட்டினார்கள். ஒவ்வொரு உயர் நீதி
மன்றத்திற்கும் இது குறித்து அந்த அந்த மாநில அரசு எழுதி,
மத்திய அரசும் உச்ச நீதி மன்றத்தின் மூலமாக உயர் நீதிமன்றங்
களுக்கு எழுதி நீதிமன்றங்களின் சாதாரண மக்கள் ஜட்ஜ்மெண்டு
காப்பி மற்ற ஆர்டர்கள் போன்றவைகளையும் 'ஆல்ரெடி
பைல்டு டாகுமெண்ட்ஸ்' போன்றவைகளை பெறுவதற்கு
காலதாமதம் ஆகிறது. அதைப் பெற முயலுகிறபோது பணச்
செலவும் மற்ற குறைகளும் அங்கே நிகழ்கின்றது என்பதை பல
மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்த அந்த சட்ட அமைச்ச
ருடைய குழுவில் சுட்டிக்காட்டிய பிறகு உயர்நீதிமன்றங்களுக்கு
இது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது உயர் நீதிமன்றத்தி
னுடைய அதிகார எல்லையின் கீழ் இருக்கின்ற காரணத்தால்
நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும் உயர் நீதிமன்றத்
திற்கு இருக்கிறது. மத்திய அரசும் மாநில அரசும் இது குறித்து
மிக அக்கறையாக செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-40).

[1983 ஏப்ரல் 12

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே. கோர்ட்டுகளுக்கு வாய்தாவுக்கு அரசியல்வாதிகளும் பொது மக்களும் செல்கிறார்கள். கேஸ் கட்டை எடுப்பதற்கு கோர்ட் செலவுக்கு என்று சில தொகைகள் கொடுத்தால் கேஸ் கட்டை எடுக்கிறார்கள். இல்லாவிட்டால் சாயந்திரமாக்கிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாட்டைப் போக்குவதற்காக விஜிலன்ஸ் மாதிரி பறக்கும் படை ஒன்று அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அளித்த பதிலிலே விளக்கம் தந்திருக்கிறேன். உயர்நீதிமன்றத்தினுடைய அதிகார எல்லைக்குள் அதன்கீழ் நடைபெறுகின்ற நீதிமன்றங்களிலே எந்தப்பிரச்சினை என்றாலும் மாநில அரசோ மத்திய அரசோ தலையிட முடியாது. அரசாங்கத்தின் மூலமாக நாம் ஆலோசனை கூறலாம். மக்களின் நலன் கருதி குற்றங்கள் இருப்பதாகவும் குறைபாடுகள் இருப்பதாகவும் உயர்நீதிமன்றத்திற்குச் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம். தொடர்ந்து அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் நாம் வற்புறுத்தலாம். சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து இந்தப் பிரச்சினையை தீர்ப்பது சம்பந்தமாக மைய அரசு தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. மாநில அரசும் மைய அரசுக்கு இதுகுறித்து தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறது.

### திருவையாறு தாலுக்கா தலைமையிடத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 735—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக பிரிக்கப்பட்ட தாலுக்கா தலைமையிடங்களில் அரசு மருத்துவமனை இல்லாத இடங்களில் அரசு மருத்துவ மனை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திருவையாறு தாலுக்கா தலைமையிடத்தில் புதிய மருத்துவமனை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1983 ஏப்ரல் 12]

திரு. தி. கா. நல்லப்பன் : துணைத் தலைவர் அவர்களே, பிரிக்கப்பட்டுவிட்ட தாலுகா தலைமையிடங்களிலே மருத்துவ மனைகளை அமைப்பதற்கு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். ஏற்கனவே பிரிக்கப்பட்டு 3 ,4 ஆண்டுகள் ஆகியுங்கூட சம்பந்தப்பட்ட பகுதிகளிலிருந்து மனுக்கள் வந்தும் கூட இது அமலுக்கு வராமல் இருக்கிறது. ஆகவே இதைத் துரிதப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, துரிதப்படுத்துவதற்காக அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது. திருவையாறைப் பொறுத்த வரையில்—அதைப்பற்றி தான் குறிப்பாக இங்கே கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது—ஏற்கெனவே செயல் பட்டுக் கொண்டு வருகின்ற மருந்தகம் தஞ்சாவூரில் இருக்கிற சத்திரத்தினுடைய மேற்பார்வையில் செயல்பட்டு வந்தது. சத்திரத்தினுடைய அதிகாரியினிடத்தில் நாம் கேட்டோம், உடனடியாக அந்த ஏற்பாட்டைச் செய்யுங்கள் என்று. அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஒரு தொகையைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். 50 ஆயிரம் கொடுப்பதாகச் சொன்னார்கள். கலெக்டர் தான் தலைவர், அவரிடம் சொன்ன நேரத்திலே 50 ஆயிரம் கொடுக்க முடியாது, நிதி நிலை சரியாக இல்லை என்பதால் முடியாது என்று சொன்னார்கள். அதனால்தான் கால தாமதம் ஏற்பட்டது. இப்போது அந்த தாமதத்தைத் தவிர்த்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு அந்த மருந்தகத்தை தாலுகா மருத்துவ மனையாக ஆக்க 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக ஆக்குவதற்கு திட்டங்கள் தீட்டியிருக்கிறோம். அதுதான் அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதாகச் சொன்னேன். இன்னும் பல்வேறு தாலுகா மருத்துவ மனைகள்—எங்கெங்கே புதிதாக தாலுக்காக்கள் பிரிக்கப்பட்டு இருக்கிறதோ—அங்கே தாலுகா மருத்துவ மனைகளாக ஆக்குவதற்கு அதையும் நாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்த எந்த தாலுகா தலைமையிடங்களில் அரசு மருத்துவ மனைகள் இல்லை என்பதை அறிவிக்க இயலுமா ? அரசு மருத்துவ மனை இல்லாத தாலுகா தலைமையிடங்களில் எத்தனை ஆண்டுக் காலத்திற்குள்ளாக அந்த குறையை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற இடங்கள் பட்டியலின் அடிப்படையில் 24 இடங்களில் தாலுகா மருத்துவ மனைகளாக ஆக்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. அந்த 24 இடங்களில் தாலுகா தலைமையிடங்களில்—அவை தாலுகா தலைமையிடங்களாக மாற்றப்பட்டிருக்கிறது—தாலுகா மருத்துவ மனைகளாக ஆக்க வேண்டுமென்று நாம் திட்டமிட்டிருக்கிறோம். அந்த 24 இடங்களில் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்றால் 12 இடங்களில் மருத்துவக் கல்வி மூலமாக மருந்தகங்கள், மருத்துவ மனைகள் நடந்து வருகின்றன. 8 இடங்களில் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் மூலமாக நடைபெற்று வருகின்றன. இன்னும் நான்கு இடங்களில் சாதாரண சிகிச்சை செய்யக்கூடிய நிலைமைதான் இருந்து வருகிறது. ஆகவே இதையெல்லாம் பார்த்து இந்த 24 இடங்களில் தாலுகா மருத்துவ மனைகள் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் எல்லா இடங்களிலும் கூட தாலுகா மருத்துவமனைகள் நிச்சயமாக வரும்.

### பயிற்சி பெறும் டாக்டர் உதவித் தொகையை உயர்த்தும் திட்டம்.

*வினா எண். 736—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயிற்சி பெறும் டாக்டர்கள் உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி, ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தற்போது மாதமொன்றிற்கு உதவித் தொகையாக வழங்கப்படும் ரூ. 325 ஐ உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் நோயாளிகளை நேரடியாக கவனிக்கும் பணிகளை இந்த பயிற்சி டாக்டர்கள்தான் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு வெளியே பிராக்டீஸ்



செய்து சம்பாதிக்கும் வாய்ப்பு, வசதி கிடையாது. ஆனால் அதே சமயத்தில் அங்கே பணியாற்றும் டாக்டர்கள் வெளியே பிராக்டீஸ் செய்து சம்பாதிக்க முடிகிறது. எனவே முழுநேர டாக்டர்களுக்குக் கொடுப்பதைப் போல இந்தப் பயிற்சி டாக்டர்களுக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சற்று கூடுதலாக கொடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் ஆசையும் கூட, இருந்தாலும் 325 ரூபாய் என்பதை 400 ரூபாயாக உயர்த்துவதனால் 6 லட்சத்து 21 ஆயிரத்து 900 ரூபாய் அதற்காக கூடுதலாக செலவாகும் என்கிற குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. ஆகவே நம்முடைய நிதிநிலைமையைப் பொறுத்த இந்த கருத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தபயிற்சி டாக்டர்களுக்கு சிறிதளவு உதவித் தொகையை உயர்த்துவதற்காகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு உண்மையான டாக்டராக இருப்பதால் அவருடைய இனத்தைச் சேர்ந்த இந்த டாக்டர்களின் கோரிக்கையை கனிவாக மீண்டும் பரிசீலிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதில் சொன்னேன். இதை உயர்த்த வேண்டும் என்பதுதான் நமக்கு இருக்கக்கூடிய ஆசை. அதற்கு கூடுதலாக ஆகக்கூடிய செலவையும் நான் சொன்னேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே பிரையாரிட்டி என்ற அடிப்படையில் எதற்கு முக்கியத்துவம் முதலில் கொடுக்க வேண்டும் என்ற அளவில்தான் இதை கவனிக்க இயலும்.

### அரசு மருத்துவ மனைகளில் அளிக்கப்படும் மாத்திரைகள்

*வினா எண். 737—திரு. பி. எம். தங்கவேல்ராஜ் மற்றும் திரு. சி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் மாத்திரைகள் ஒரே மாதிரியாக 'த' என்ற எழுத்தும், வெள்ளை நிறத்தோடு

இருப்பதால் மாத்திரையின் வித்தியாசம் தெரியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் இந்தக் குறையை போக்க அரசின் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இந்திய அரசு விதித்துள்ள மருந்து செய்முறை விதிகளின்படி அதிகமான செயற்கை நிறங்கள் உபயோகிக்க இயலாது. தயாரிக்கப்படும் மாத்திரைகளின் ரகங்கள் பல்வேறாக இருக்கின்றன. ஆனால் அனுமதிக்கப்பட்ட செயற்கை நிறங்கள் குறைவாக உள்ளன. ஆகையால் பல நிறங்களில் மாத்திரைகள் தயாரிக்க முடியாத நிலை உள்ளது.

(ஆ) மருத்துவ மனைகளில் கொடுக்கப்படும் மாத்திரைகள் யாவும் வெள்ளை நிறத்தில் இல்லை. சில வெள்ளை நிறத்தி லும், சில மஞ்சள் சிவப்பு, போன்ற நிறங்களிலும் இருக்கின்றன. மேலும் மாத்திரைகள் வெவ்வேறு அளவில் உள்ளன. மாத்திரை களை நோயாளிகளுக்கு கொடுக்கும்போது மருந்தாளுநர் வித்தி யாசங்களையும், சாப்பிட வேண்டிய முறைகளையும் எடுத்துக் கூறுகின்றனர்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகளில் கொடுக்கிற மாத்திரை கள் இன்னென்ன நோய்களுக்கு இந்தெந்த மாத்திரைகள் என்பதை நோயாளிகள் அறிந்து கொள்ள முடிவதில்லை. தலைவலி, கால் வலி, தடுமன், கண்வலி என்று வந்தால் எல்லா வற்றிற்கும் ஒரு வெள்ளை மாத்திரை என்று சொல்கிற அளவிலே தான் இருக்கிறது. இன்னென்ன மாத்திரைகள், இன்னென்ன வியாதிக்கு என்பதைப்போல ஒரு குறியீடு இருக்கிற அளவிலே மாற்றியமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நோயாளிகளைப் பொறுத்த வரை யில் எந்தெந்த மாத்திரைகள் எந்தெந்த வியாதிக்கென்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. டாக்டர்கள் கொடுக்கக் கூடிய மருந்தை ஒழுங்காக சாப்பிட்டால் அதுவே போதும். வெள்ளை மாத்திரைகளை வெவ்வேறு கலர்களில் இருக்கக் கூடிய மாத்திரைகளை உருவாக்கலாமா என்பது மூலக்கேள்வி.



(முற்பகல் 9-50).

அங்கே இருக்கக்கூடிய பிரச்னையெல்லாம் சில அனுமதிக்கப் பட்ட கலர்களைத் தான் நாம் போடமுடியும். நாம் கலர் கொடுப்பதற்காக வெவ்வேறு கலர் போட்டால், அந்தக் கலர் இருக்கிற காரணத்தினால் வேறு ஏதாவது வியாதி வந்துவிடும். ஆகவே, கலரே போடக்கூடாது. இன்னும் சொல்லப் போனால் ஸ்வீட்ஸ் இருக்கிறதே, அதிலே கூட கலர் போடக் கூடாது, கூடிய வரையிலே. ஆகவே, எந்த மாத்திரை என்று வித்தி யாசம் கண்டுபிடிக்க வேண்டிய தேவையில்லை. கம்பவுண்டர் கொடுக்கக் கூடிய மாத்திரையை இந்த மாத்திரையைச் சாப்பிடுங் கள் என்று சொன்னால், அந்த மாத்திரையைச் சாப்பிட்டால் போதும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாத்திரைகள் கொடுக்கிற முறையையும், அத னுடைய தன்மைகளையும் எல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கி னார்கள். ஆனால், ஒரே கலரில் இருக்கக்கூடிய அந்த மாத் திரையை அரசுத் தலைமை மருத்துவ மனைகளில் கையிலேயே கொடுக்கிறார்கள். குறைந்தபட்சம் காகிதத்திலே வைத்துக் கொடுத்தால்தான் தனித்தனியாகப் பிரித்து, தரவாரியாகப் புரிந்து கொள்வதற்கும், எந்த, எந்த மாத்திரை, எந்த, எந்த வேளையில் சாப்பிட வேண்டுமென்று தெரிந்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, வேவ்வேறு காகிதங்களில் கொடுத்து, இந்த, இந்த மாத்திரையை இன்ன, இன்ன நேரத் தில் சாப்பிட வேண்டுமென்று குறித்துக் கொடுத்தால்தான் நோயாளிகளுக்குச் சாப்பிட சௌகரியமாக இருக்கும். அந்த முறையில்லாமல், எந்த மாத்திரையை, எந்த நேரத்தில் சாப்பிட வேண்டுமென்று நிலை இல்லாமல் இருப்பதைத் தவிர்க்க, அரசு மருத்துவ மனைகளுக்கு அரசு காகிதம் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேராவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கு என்னுடைய பதில், ஏற்கனவே பாக் மாத்திரைகளுக்கு மேலே ஸ்டிரிப்ஸ் என்ற வகையிலே, ஸ்டிரிப்ஸை காகிதத்திலே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவை தவிர, மற்றவைகளை வேறு காகிதங்களிலே பொட்டலமாக கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். நான்

பொறுப்பேற்ற பிறகு, எல்லா மாத்திரைகளையும் நல்ல பாக்கட் செய்து கொடுக்க வேண்டுமென்றால், எவ்வளவு செலவாகும் என்று கணக்கு எடுத்திருக்கிறோம். அதிலே இருக்கக் கூடிய சங்கடம் என்னவென்றால், அப்படி பார்த்தபோது, பல இலட்சம் ரூபாய் அந்தக் காகிதத்திற்கு மட்டும், பாக்கெட்களுக்கு மட்டும் செலவாகக் கூடிய நிலைமை இருக்கிறது என்று தெரிகிறது. (குறுக்கீடு) உறுப்பினர் ஒரு நல்ல யோசனைதான் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகேற்ப நாம் செயல்படுவோமானால், அதற்கு நிறைய செலவாகும். ஆகவேதான், எல்லா டாக்டர்களுக்கும் எல்லா காம்பவுண்டர்களுக்கும் நாம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறோம், ஓரல் இன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ் கொடுத்திருக்கிறோம். 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான கெசட்டுகள், பழைய பேப்பர்கள் இருந்தால், அவைதச் சுத்தமாக வைத்து, கூடிய வரையிலே அந்த பேப்பர்களிலே மடித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இது ஒரு நல்ல யோசனை. அதற்காக, நாங்கள் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாத்திரைகளுடைய நிறங்களை மாற்ற முடியாது என்று கூறினார்கள். குறைந்தபட்சம், அந்த மாத்திரைகளுடைய வடிவங்களையாவது மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மருந்துகளை, பெரிய, பெரிய இண்டர்நேஷனல் கம்பெனிகள் தயார் செய்கிறார்கள். சில மாத்திரைகள் கேப்சூல்கள் வடிவிலே வருகின்றன. சில மாத்திரைகள் வட்டமாக இருக்கின்றன. அவைகளை எல்லாம் நாம் மாற்றிக் கொடுப்பதன் மூலமாக, எதையும் சாதிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. தேவையில்லாத ஒரு சிரமத்திற்கு நாம் ஆளாக வேண்டிய அவசியம் இல்லை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரியாக, கொடுத்த மாத்திரையை, ஒழுங்காக, சுத்தமாக வைத்துக்கொண்டு, நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு என்ன, என்ன இன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதைச் செய்தாலே போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறது.





## BIM Course-ஐப் பயிற்றுவிக்கும் வகையில் மேலும் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவும் திட்டம்.

*வினா எண். 738—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்திய மருத்துவமுறை (BIM Course) ஐப் பயிற்றுவிக்கும் வகையில் மேலும் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பி.எஸ்.எம். & எஸ். சித்த மருத்துவப் பட்டப் படிப்பிற்கு பயிற்சி அளிக்கும் வகையில், இரண்டாவது சித்த மருத்துவக் கல்லூரி தொடங்குவது அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு ஏதேனும் இடத்தை அரசு தேர்வு செய்திருக்கிறதா? அப்படியிருந்தால், எந்த அடிப்படையிலே அந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதற்காகப் பழனி தேவஸ்தானம் அவர்களிடத்திலே நாம் கேட்டிருக்கிறோம். அந்த மலை ஓரமாக ஒரு இடம் கொடுப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு கலெக்டரிடத்திலே நாம் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அந்த பகுதி இரண்டாவது சித்த மருத்துவக் கல்லூரிக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெரிதாக இருக்கின்ற புகழ் பெற்ற சிறப்பு வாய்ந்த கோயில்களில் இந்த சித்த மருத்துவத்தினுடைய சேவையை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு நான்கு நாட்களுக்கு முன்பாக இந்த அவைக்கு வரவில்லை என்று நான் கருதுகிறேன். அதற்கு நீண்ட விரிவானதொரு பதிலை நம்முடைய மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை

அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே அளித்திருக்கிறார்கள். பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. உறுப்பினரவர்கள் அதை பார்க்கவில்லை என்று கருதுகிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்திய மருத்துவப் பயிற்சி நிலையத்தில் இது வரையில் எத்தனை மாணவர்கள் பயின்று வெளி வந்திருக்கின்றார்கள். புதிய பயிற்சி நிலையத்தில் எத்தனை மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முன்பு இந்திய சித்த மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையில், பாளையங்கோட்டையில், 35ஆக இருந்ததை 40ஆக ஏற்படுத்தி, சென்ற இரண்டு ஆண்டுகளாக 75 மாணவர்களை நாம் அங்கே சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கல்லூரியில் 50 மாணவர்களைச் சேர்த்தால் சரியாக இருக்கும் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். தற்போதுள்ள திட்டத்தின் அடிப்படையில் 50 ஆக இருக்கும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்குப் போதிய சாத்தியக் கூறுகள் கொல்லிமலையில் இருக்கின்றன. எனவே, அடுத்த கல்லூரியை கொல்லிமலையில் அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலில் இரண்டாவது சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்த பிறகு அதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

பெரியார் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 654—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

பெரியார் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆர்.



திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெரியார் மாவட்டத்தில் புதிதாக சர்க்கரை ஆலை அமைப்பதாகக் கூறினார்கள். பெரியார் மாவட்டத்தில் எந்த இடத்தில் அந்த ஆலை அமைக்கப்படவிருக்கிறது? எவ்வளவு பொருட் செலவில் அது அமைக்கப்படும்? அந்த ஆலை செயலுக்கு வரும் பொழுது எவ்வளவு டன்கள் உற்பத்தியாகும் என்ற விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தாராபுரம் சுகர்ஸ் மற்றும் கெமிகல்ஸ் லிமிடெட் என்கிற நிறுவனம் குள்ளப்பாளையம், தாராபுரம் வட்டம் ஆகிய பகுதிகளைக் கரும்பு பயிரிடுகிற ஏரியாவாகக் கொண்டு பெரியார் மாவட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலை தனியார் துறையிலே சுமார் ஏழு கோடியிலே அமைப்பதற்காக மனுச் செய்து மாநில அரசாலே அது மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு மைய அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. அதைப் போலவே, பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் என்கிற நிறுவனம் மலையடிப் புதூர் கிராமம், சத்தியமங்கலம் வட்டம் ஆகிய பகுதிகளைக் கரும்பு பயிரிடுகிற பகுதிகளாகக் கொண்டு பெரியார் மாவட்டத்திலே சுமார் ஏழு கோடியில் அதே 1,250 டன் பிழி திறன் கொண்ட சர்க்கரை ஆலை அமைக்க மனுச் செய்து அதுவும் மாநில அரசாலே பரிந்துரை செய்யப்பட்டு மைய அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். விஜயபாலன் : தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் இதைப் போன்ற சர்க்கரை ஆலைகள் அமைக்கின்ற செயற்குறிப்பு உள்ளது? குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் தரங்கம்பாடி வட்டத்தில் அமைக்கின்ற செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேள்வி, பெரியார் மாவட்டத்திலே சர்க்கரை ஆலை அமைப்பது பற்றி. பதில் இருந்தாலும், தொழில் துறை மானியங்களைப் பற்றிய விவரங்களை நாளைக்குச் சொல்கிறேன்.

## குடியாத்தம் தாலுகாவை தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கும் திட்டம்.

*வினா எண் 655—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுகாவை தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அரசு அறிவிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அறிவிக்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே 13 தாலுகாக்களில் மிகவும் பின்தங்கிய தாலுக்கா என்ற முறையிலும், எந்தவிதமான தொழிலும் அந்தத் தாலுக்காக்களிலே இல்லாத காரணத்தாலும், குறிப்பாக பீடி, கைத்தறி, பஞ் சாலை மற்றும் சர்க்கரை ஆலைகள் இரண்டும் இருக்கின்றன. இவை தவிர, அந்தத் தாலுக்காக்களிலே வேறு தொழில் கிடை யாது. மேலும் வறட்சி இருக்கிற காரணத்தாலும், அரசு மீண்டும் அதைப் பரிசீலித்து அந்த தாலுக்கா தொழிலில் மிகவும் பின்தங்கிய தாலுக்கா என்று அறிவிக்க ஆவன செய்யுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் சொன்னது போல இரண்டுசர்க்கரைஆலைகளும், வேறு பல ஆலைகளும் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஒன்றுமே இல்லாத சில தாலுக்காக்கள் அந்த மாவட்டத்திலே இருக்கின்றன. மாநில அரசு 4 தாலுக் காக்களையும், மத்திய அரசு 4 தாலுக்காக்களையும், ஆக 8 தாலுக்காக்களை தொழில் துறையில் பின் தங்கிய வட்டங்களாக அறிவித்திருக்கின்றன. ஒன்றுமே இல்லாத வட்டங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வட்டத்தைப் பொறுத்த வரைக்கும், இப்போது அந்தப் பிரச்சினை அரசினு டைய பரிசீலனையில் இல்லை.





திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் துறையில் பின் தங்கிய பகுதி என்று எந்தத் தகுதியின் அடிப்படையில் அரசு அறிவிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவ ரவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கிற நிலத்தினுடைய மதிப்பு அல்லது விலை, அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களுடைய பொருளாதார நிலை, அங்கே அமைந்திருக்கிற தொழிற்சாலை கள், வேலை பார்க்கிற தொழிலாளர்கள், இப்படி பல்வேறு நிலைகளை கருத்திலே கொண்டு, தொழில் துறையிலே பின் தங்கிய வட்டங்களாகத் தேர்வு செய்யப்படுகின்றன.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத்துணை தலைவரவர்களே, தொழில்துறையில் பின்தங்கிய தாலுக்காவாக பெரியார் மாவட்டத்தில் இதுபோன்று ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவரவர்களே, கேள்வி குடியாத்தம் தாலுக் காவை தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியாக அரசு அறிவிக்குமா ? மற்ற எந்தெந்த மாவட்டங்கள் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதை நாளைக்குப் பேசலாம்.

திரு. கோ. விஸ்வநாதன் : துணைத் தலைவரவர்களே, சென்ற 10 ஆண்டுகளுக்கு மேலாக வடாற்காடு மாவட்டத்திலே குடியாத்தம் தாலுக்கா பின்தங்கிய பகுதியாக அறிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்துகொண்டிருக்கிறார் கள். சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாவட்ட தொழில் மையமும் சிபாரிசு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பகுதியை இந்த ஆண்டு அறிவிக்கப்படுகின்ற தாலுக்காக்களில் ஒன்றாக சேர்த்து அறிவிக்க இயலுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு தொழில் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. இதிலே எல் லோரும் விவாதித்துப் பேச இருக்கிறார்கள். நான் பதில் சொல்ல

[1983 ஏப்ரல் 12

இருக்கிறேன். ஆகவே அந்த அடிப்படையிலேதான் நான் நாளைக்குப் பதில் கிடைக்கும் என்று குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டாம்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையில் விவாதம் எழுகிறபோது அந்தப் பிரச்னைகள் பல்வேறு கோணத்திலே இங்கே விவாதிக்கப்படும். அதற்குப் பதில் சொல்கிறபோது எல்லாப் பிரச்னைகளுக்கும் பதில் சொல்லி முடித்த ஒரு வரலாறே இந்தச் சட்டசபையில் கிடையாது. எனவே எழக்கூடிய பிரச்னைகளுக்குப் பதில் சொல்கிற அவசியம் இருக்கிறபோது, இவைகள் முழுவதும் சொல்வது என்பது இயலாத நிலையில், யாருக்கும் இயலாத நிலையில், இன்றைக்குக் கேட்கப்படுகிற கேள்விகளுக்கு நாளைக்குப் பதில் என்று சொன்னால், ஒரு வேளை இன்னும் 2 நாட்கள் கழித்து மானியம் வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், அல்லது காவல்துறை மானியம் போல, 4 நாட்கள் மாறிமாறி வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்போது சொல்லப்படுகிற ஒவ்வொரு கருத்துக்கும் இந்த அவையில் பதில் சொல்லாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக ஆகிவிடும். எனவே கேள்வி நேரத்தை அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதாமல், மானியக் கோரிக்கையிலே பதில் சொல்வதாகச் சொல்வது, கேள்வி நேரத்தினுடைய முக்கியத்துவத்தை, மதிப்பைக் குறைப்பதாக ஆகிவிடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போய் இவ்வளவு பெரிய பிரச்னையாக ஆகிவிடும் என்று நான் நினைக்கவில்லை. தெளிவாக உறுதியாக பதில் சொல்ல வேண்டும் என்றால், இப்போது அது பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தாலுக்கா மிகவும் பிற்படுத்தப்பட்ட தாலுக்காவாக அறிவிக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குடியாத்தம் தாலுக்காவைவிட ஆரணித் தாலுக்கா மிகவும் பின்தங்கிய தாலுக்காவாக, முழுக்க முழுக்க நெசவாளிகளும் மற்றவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அங்கே எந்தவிதமான



1983 ஏப்ரல் 12]

தொழிற்சாலையும் இல்லை. எனவே ஆரணி தாலுக்காவை பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து மூலக்கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியை மட்டும் அனுமதித்தால் நானும் நாளைக்கு பதில் சொல்கிறேன் என்று சொல்கிற அந்த நிலைமைகள் வராமல் இருக்கும். ஆகவே தயவு செய்து இந்தக் கேள்வியை கவனிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே மிகப் பெரிய தாலுக்கா குடியாத்தம் தாலுக்கா. 3 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டது. இந்தத் தாலுக்காவில் இருக்கின்ற தொழில்கள் என்பது மிகவும் பின்தங்கிய தொழில்களாகும், குறிப்பாக பீடித் தொழில், கைத்தறி போன்ற தொழில்கள்தான் இருக்கின்றன. இந்த தாலுக்காவிற்கு அடுத்த தாலுக்காவாக இருக்கின்ற வாலாஜாவிலே மிகப் பெரிய தொழில்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே ......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குடியாத்தம் தாலுக்காவைப் பற்றிய கேள்வி. வேறு ஏதாவது கேட்டால் இல்லை என்று தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் மூலம் மின்னணுக் கைக்கடிகாரங்கள் தயாரிக்கும் திட்டம்.

*வினா எண் 656—டாக்டர் கே. பி. இராமலிங்கம் ;<br>திரு. ஏ. எம். சேதுராமன் ;<br>திரு. பெ. க. திருவேங்கடம் ; மற்றும்<br>திரு. சி. சிவப்பிரகாசம் : } மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா ?

(அ) தமிழக அரசு எலக்ட்ரானிக் கடிகாரத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை வகையான கடிகாரங்கள் தயாரிக்கப்படும் ?

(இ) இந்தத் திட்டத்திற்கு அரசு முதலீடு எவ்வளவு ?

(ஈ) வெளிநாட்டு கம்பெனியின் கூட்டோடு செய்யப்படு கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் மின்னணுக் கைக்கடிகாரங்கள் தயாரிப்பில் ஈடுபட் டுள்ளது.

(ஆ) பன்னிரெண்டு வகையான மின்னணுக் கைக்கடி காரங்கள் தயாரிக்கப்படும்.

(இ) ரூ. 10 இலட்சம்.

(ஈ) கடிகாரங்கள் தயாரிப்பதில் ஹிட்டாச்சி (Hitachi) என்ற ஜப்பான் நாட்டு நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியை சண்டிகாரிலுள்ள "செமி கண்டக்டர் காம் ப்ளக்ஸ்" என்ற இந்திய அரசு நிறுவனத்தின் மூலம் "எல் காட்" நிறுவனம் இந்த டெக்னாலஜியைப் பெற்றுள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுவரை எவ்வளவு கடிகாரங்கள் விற் கப்பட்டு இருக்கின்றன ? அதனுடைய மொத்த விலை எவ்வளவு ? வியாபாரத்தைப் பெருக்கும் பொருட்டு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கடிகாரம் என்ற வீதத்தில் நாளைக்கு தொழில்துறை மானியம் இருக்கின்ற காரணத் தால் நாளைக்கு வழங்கப்படுமா, விளம்பரத்திற்காக என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, கடிகாரத்தினுடைய விலை 230 லேயிருந்து ஆரம்பித்து 550 வரைக்கும் பல்வேறு நிலை களிலே இருக்கிறது. இப்போது 50 ஆயிரம் கடிகாரங்கள் உற் பத்தி செய்யப்படுகின்றன. இதை இரண்டு லட்சமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. மார்க்கெட்டிலே வந்து ஒரு மாதம் தான் ஆகிறது. சில ஆயிரங்கள்தான் விற்பனையாகி இருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கடிகாரம் வழங்குவது பற்றி, நாளை பிரச்னைபற்றி இன்றைக்குப் பேச முடியாது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் நம்முடைய தமிழ் நாட்டிலேயும், மற்றும் இந்திய துணைக் கண்டம் முழுவதும் அதிகமாக வெளிநாட்டு கடிகாரங்களைத்தான் விரும்பிக் கட்டு கிறார்களே, நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப்படுகின்ற இந்தக் கடிகாரங்கள் சிறப்பு வாய்ந்தவை, அல்லது தர மானவை என்று சொல்லி, அதிகமான அளவில் கடிகாரங்கள் விற்பனை ஆவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சிகள் மேற் கொண்டு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 10—10.)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, எல்காட் கைக்கடிகாரங் கள் மிகத் தரமானவை. துல்லியமாக நேரத்தைக் காட்டக் கூடியது. உங்கள் கையில் கட்டிப்பாருங்கள், அழகாக இருக் கும் என்று இப்படியெல்லாம் விளம்பரம் செய்கிறோம். இங் கும் சொல்கிறேன், நீங்களும் அதை உள்ளன்போடு வாங்க வேண் டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். நிச்சயமாக மக்கள் அதை விரும்பி வாங்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கலவை காவல் நிலையத்தில் கார்த்திகேயன்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பற்றி காலை யில் தான் அறிவிப்பு கொடுத்து இருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே. அண்ணா சதுக்கத்தில் உள்ள சிறு வியாபாரிகள் கடைகள் எல்லாம் அகற்றப்பட்டு விட்ட காரணத்தால் 500-க்கும் மேற்பட்டவர்கள் இன்றைக்கு நடுத்தெருவில் இருக்கிறார்கள். அது பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ஆய்வில் இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, பாளையம் கோட்டை சிறைச்சாலையில்...........................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் கூட எழுப்பினார். இதைப் பற்றியெல்லாம் எடுத்த எடுப்பில் அவையில் எழுப்பக் கூடாது.

திரு. இ ா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, அண்ணா சமாதி புனிதமான இடம், அதிலே உள்ள கடைகள் அகற்றப்பட வேண்டும் என்று எல்லாக் கட்சி சார்பிலும் கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பற்றி ஏற்கனவே சொல்லியாகிவிட்டது.

திரு. செ. இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி செய்த விவசாயிகள் 14 மாதம் கழித்துத்தான் கட்டிங்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆய்வுக்குப் பின்னர் அது எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். பழனிவேல் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் குடிநீர் இல்லாத காரணத்தால் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ஆய்வில் இருக்கிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்த ஒரு அறிவிப்பு பற்றி, சபைக்கு வெளியிலே, அவையை அவமதிக்கும் வகையில் பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பற்றியெல்லாம் முறைப்படி எழுதி நோட்டீஸ் கொடுத்து விட்டுத்தான் அவையில் எழுப்ப வேண்டும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள 3 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பற்றி தாங்கள் கொடுத்துள்ள நோட்டீஸ் ஆய்வில் இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உலக வங்கி வட்டி வீதம் பற்றி இன்று அறிவிப்பதாகச் சொன்னார்கள். அது இன்றைக்கு அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பற்றி அறிவிக்க தற்போது அந்த அமைச்சர் அவையில் இல்லை.

### 3. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்று(11—4—1983) மாலை கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

| | |
|---|---|
| 13—4—1983 (புதன் கிழமை). | மாறுதல் இல்லை. |
| 14—4—1983 (வியாழக்கிழமை). | விடு முறை— ஏற்கனவே அறிவித்தபடி. |
| 15—4—1983 (வெள்ளிக்கிழமை). | எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். |

| | |
|---|---|
| 16—4—1983 (சனிக்கிழமை). | எண் 15—காவல் துறை மற்றும் எண் 16—தீயணைப்புப் பணிகள் குறித்து மானியக் கோரிக்கைகள் மீது மேலும் விவாதமும் பதிலுரையும். |
| 17—4—1983 (ஞாயிற்றுக்கிழமை). | விடுமுறை. |
| 18—4—1983 (திங்கட்கிழமை) முதல் 21—4—1983 (வியாழக்கிழமை) முடிய. | மாறுதல் இல்லை. |

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பேட்டைவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலை கரும்புக்குக் கொடுக்கும் விலை குறித்து விவசாயிகள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், சோ. அழகர்சாமி, செ. சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, எம்.செல்லமுத்து, மற்றும் கே.ஆர். சுந்தரம் ஆகியோர் "திருச்சி மாவட்டம், பேட்டைவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலையில் கரும்பு கொள்முதல் செய்யப்படுகின்ற குறைந்த பட்ச விலை மிகவும் குறைவாக இருப்பதை அடுத்து அந்த ஆலை விவசாயிகள் 11—3—1983 முதல் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இதனால் அப்பகுதி விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. கருப்பையாவைக் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, 1981—82 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுக்கக் கூடிய கரும்புக்கு 165 ரூபாய் என்று நம்முடைய மாநில அரசு



விலை நிர்ணயம் செய்தது. அதற்குப் பின்னால் நம்முடைய மாநில அரசு நிதியிலிருந்து 10 ரூபாய் உபரியாகக் கொடுத்து சென்ற ஆண்டு கரும்பு விலை நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஆண்டு கரும்பு உற்பத்திச் செய்யக் கூடிய விவசாயிகளுக்கு, செலவு அதிகமாகியிருக்கிறது. கரும்பு உற்பத்திக்குத் தேவையான இடு பொருள் விலை மிகவும் உயர்ந்து இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள். உரம் விலை உயர்ந்திருக்கிறது. விவசாயக் கூலி ஏறியிருக்கிறது. வெட்டுக் கூலி அதிகமாகியிருக்கிறது. வண்டி வாடகை, லாரி வாடகை உயர்ந்திருக்கிறது. ஆகையால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக விலை நிர்ணயிக்கப்பட வேண்டும், அதிக விலை தர வேண்டுமென்று கேட்டு தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய கரும்பு உற்பத்தியாளர்கள் போராட்டங்கள் நடத்தியதை அமைச்சரவர்கள் அறிவார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய மாநில அரசு 1982—83 ஆம் ஆண்டில் 155 ரூபாய் டன்னுக்கு என்று விலையை நிர்ணயித்திருக்கிறது. அதே நேரத்தில் சென்ற ஆண்டு ஒவ்வொரு ஆலையிலும் இருக்கிற கரும்பு விவசாயிகள் பெற்று வந்த விலையைப் பெறக் கூடிய வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து அந்த அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதிகமான விலை கேட்டிருக்கிற விவசாயிகளுக்கு மாநில அரசு இந்த விலையைக் கொடுத்திருக்கிறது. இது மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற அதே விலையை அடிப்படையாக வைத்து இந்த அடிப்படையிலே செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் பல்வேறு ஆலைகளில் விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய விலை என்ன என்பதை தமிழக அரசு நிர்ணயித்திருக்கிறது. 9.7 சதவீதம் சர்க்கரைச் சத்தைக் கொண்டிருக்கிற கரும்புக்கு ஆரூரான் சர்க்கரை ஆலை 204.10 ரூபாய் கிடைக்க கூடிய முறையிலே ஏற்பாட்டைச் செய்திருக்கிறது தமிழக அரசு. 10.1 சதவீதம் சர்க்கரைச் சத்தைக் கொண்டிருக்கிற கரும்புக்கு அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு ரூ. 192.50 கிடைக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரி 10.2 சதவீதம் சர்க்கரைச் சத்தைக் கொண்ட கரும்புக்கு ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு ரூ. 186.60; 10.3 சதவீதம் சர்க்கரைச் சத்தைக் கொண்ட கரும்புக்கு பெரம்பலூர் சர்க்கரை ஆலை ரூ. 188.60; 10.4 சதவீதம் சர்க்கரைச் சத்தைக் கொண்ட கரும்புக்கு தர்மபுரி சர்க்கரை ஆலைக்கு ரூ. 206.60 என்ற முறையிலே விவசாயிகளுக்கு தரக்கூடிய அளவுக்கு விலை நிர்ணயம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 10.6 சதவீதம் சர்க்கரைச் சத்துக் கொண்டிருக்கிற கரும்பை உற்பத்திச் செய்து காவேரி சர்க்கரை ஆலைக்கு கொடுக்கக்கூடிய கரும்பு விவசாயிகளுக்கு தமிழக அரசு நிர்ணயித்திருக்கிற விலை

193.30 ரூபாய். இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய விலை வித்தியாசத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 10.4 சதவீதம் சர்க்கரைச் சத்துக் கொண்டிருக்கிற கரும்புக்கு தர்மபுரி சர்க்கரை ஆலையில் ரூ. 206.60 கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏன் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்பதை சுருக்கமாகச் சொல்லுங்கள்.

(முற்பகல் 10–20.)

திரு. இரா. கருப்பையா : ஆனால் அதைவிட அதிகமாக 10.6 சதவீதம் சர்க்கரைச் சத்தைக் கொண்டிருக்கிற காவிரி சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு அதிக சர்க்கரைச் சத்தைக்கொண்டிருக்கிற கரும்பை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு, 10.4 சதவீதம் உற்பத்தி செய்கிற கரும்புக்கு கிடைப்பதை விட குறைவாக விலை கிடைக்கின்ற முறையிலே விலை நிர்ணயம் இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? அந்த காவிரி சர்க்கரை ஆலை நிர்வாகிகள் C.O.C. 671 என்ற ரக கரும்பைத்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தி அப்படி உற்பத்தி செய்தால்தான், ஆலைக்கு அதை எடுத்துக் கொள்வோம் என்று சொல்லி, அந்த முறையிலே அதிகமான சர்க்கரையை அந்த கரும்புகளின் மூலமாக பெற்றிருக்கிறார்கள்.

இப்படி தரமான கரும்பைத்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் மூலமாக, அங்கே உள்ள விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய யீல்டு, அதாவது சராசரி ஒரு ஏக்கருக்கு 40 டன் சாதாரணமாகக் கிடைக்கும் என்றால் இந்த C.O.C. 671 ரக கரும்பை உற்பத்தி செய்வதன் மூலமாக அது 30 டன்னாகவும், 25 டன்னாகவும் குறையக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்த வகையிலும் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய நட்டம் அதிகமாகிறது. சர்க்கரைச் சத்தின் அடிப்படையில் கரும்புக்கு விலை நிர்ணயிப்பதின் மூலமாகவே அந்த நட்டத்தை ஓரளவு ஈடு செய்யக்கூடிய முறை இருக்கிறது. தரமான கரும்பை உற்பத்தி செய்து தருகிற விவசாயிக்கு குறைந்த விலை தான் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசாங்க கொள்கையா? அது முறையா? அதிகமான சர்க்கரை சத்து கிடைத்தால்தான் அதிகமான சர்க்கரை மூட்டைகள் கிடைக்கும், அதன் மூலமாக ஆலை முதலாளிகளுக்கு அதிகமாக இலாபம்



கிடைக்கும் என்ற வகையில் உயர்ந்த ரக கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் தரமான கரும்பை உற்பத்தி செய்கிற அந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் போட்டிருப்பது சூடுதான். அதை பட்டைநாமம் என்று சொல்வதைக் காட்டிலும் அவர்களுடைய உடல்முழுவதும் சூடுபோடக்கூடிய நிலைமையிலே இந்த விலை நிர்ணயம் இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அதன் விளைவுக்கு........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இப்போதே 7, 8 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்று சுருக்கமாகச் சொன்னால் மட்டும் போதும்.

திரு. இரா. கருப்பையா : ஆகவே அந்த அடிப்படையில் கரும்பை உற்பத்தி செய்யக் கூடாது, அதன் மூலமாக ஆலைகளுக்கு லாபம் கிடைக்கக்கூடாது என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்க முடியாது. தற்போது தமிழகத்திலே பல சர்க்கரை ஆலைகளிலே குறிப்பாக காவிரி சர்க்கரை ஆலைக்கு கரும்பு உற்பத்தி செய்து தருகிற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக அங்கே உண்ணாவிரத போராட்டமும், மற்ற போராட்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே அமைதி குலைந்திருக்கிறது. தொடர்ந்து போராட்டம் நடைபெறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதன் விளைவாக ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை முழுவதுமாக பரிசீலித்து, நல்ல நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்வதற்குப் தற்போது அங்கே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் போக்குவதற்குமான விவரங்களை விரிவாக விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காவிரி சர்க்கரை ஆலையின் தேவைக்கு கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் தங்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக வேண்டி கடந்த 11 ஆம் தேதி முதல் திருச்சி மாவட்ட கலெக்டர் ஆபீஸ் முன்னாலே உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அந்த விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற கரும்புக்கு எப்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது, என்ற பலபுள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப் பார்க்கும் நேரத்தில், அதிக சத்துள்ள கரும்பு அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். அப்படி அந்த ஒரு குறிப்பிட்ட ரகத்தைத் தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஆலை உரி

மையாளர்கள் அவர்களை நிர்ப்பந்தம் செய்கிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் கேட்கிற மாதிரி உற்பத்தி செய்துக் கொடுக்கிற அந்த விவசாயிகளுக்கு கொடுக்கின்ற விலையைப் பார்த்தால், அதிக சத்துள்ள கரும்பை உற்பத்தி செய்து கொடுப்பதற்காக அவர்களுக்கு தண்டனை கொடுப்பது போல குறைந்த விலைதான் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. 10.3, 10.4 சத்துள்ள கரும்பை உற்பத்தி செய்தால் 206 ரூ. என்று சொல்கிற நேரத்தில் 10.6, 10.5 என்று உற்பத்தி செய்கிற கரும்புக்கு அதைவிடக் குறைந்த விலைதான் கொடுக்கப்படும் என்பது எப்படி சரியாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழகத்திலே உள்ள பல்வேறு ஆலைகளுக்கு கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள், தங்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை வேண்டும் என்று கேட்டு கிளர்ச்சி செய்வதை அரசு அறியும்.

அவர்கள் இன்றைக்கு வறட்சி காரணமாகவும் இடு பொருட்களின் விலை உயர்வு காரணமாகவும் தங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள். தமிழகத்திலே விவசாயிகளுக்காக பசுமைப் புரட்சியை எல்லாம் உண்டாக்கி இருக்கிறோம் என்று சொல்கின்ற நேரத்தில் இப்படி மிக அக்கமாக கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்காவிட்டால் எப்படி இருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவேதான் இன்றைக்கு காவேரி சர்க்கரை ஆலை மட்டுமல்ல எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற ஆம்பூர் சர்க்கரை ஆலை வேலூர் சர்க்கரை ஆலை ஆகியவற்றிற்குக் கரும்பு உற்பத்தி செய்து அளிக்கின்ற விவசாயிகளுக்கும் கிடைக்கின்ற விலை கட்டுப்படியாக இல்லை என்று சொல்கிறார்கள். ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு கரும்பினை அளிக்கின்ற விவசாயிகளுக்கு 60 பைசாதான் கொடுப்பதாகவும், அதிகமாகக் கொடுக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்த கரும்புக்கு மட்டுமல்லாமல் எங்களுடைய மாவட்டத்திலே கூட கரும்பினை உற்பத்தி செய்ததற்கு பிறகும் கூட கிடைக்க வேண்டிய பணம் கூட காலாகாலத்தில் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரச்சினை காவேரி சர்க்கரை ஆலையைப் பற்றியது. ஆகவே ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கெல்லாம் போக வேண்டாம்.





திரு. கே. ஆர். சுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே,
அந்த விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும்
என்பது குறித்து விவாதிக்க வேண்டி இருப்பதன் காரணத்
தால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது
குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, பேட்டைவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலை,
நடப்பாண்டுக்குக் கொடுக்க வேண்டிய விலை டன் ஒன்றுக்கு
193 ரூபாய் 30 காசாகும். கடந்த ஆண்டு காவேரி சர்க்கரை
ஆலைக்கு கரும்பினை அளித்த விவசாயிகளுக்குக் கிடைத்த
விலை 176 ரூபாய் 90 காசு. கடந்த ஆண்டில் இந்த அரசு
கரும்புக்கு குறைந்த பட்ச விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 125
கொடுக்கவேண்டும் என்று சர்க்கரை ஆலைகளைக் கேட்டுக்
கொண்டது. மேலும் கொள்முதல் வரித்தொகையில் இருந்து
டன் ஒன்றுக்கு ரூபாய் 10 என்றும் கரும்பு விவசாயிகளுக்கு
கொடுக்குமாறு அரசு ஆணையிட்டது. கடந்த ஆண்டு கரும்பு
விவசாயிகளுக்குக் கிடைத்த மொத்த விலையை விட இவ்வாண்டு
கரும்பு ஆணையாளர் டன் ஒன்றுக்கு ரூபாய் 155 என்று நிர்ண
யிக்கும் விலை குறைவாக இருந்தால் இரண்டுக்கும் உள்ள வித்தி
யாசத்தை அரசே ஈடு செய்யும் என்றும் கடந்த ஆண்டு கிடைத்த
விலையை விட இவ்வாண்டு கரும்பு ஆணையாளர் நிர்ணயிக்கின்ற
விலை கூடுதலாக இருந்தால் அந்த விலையை சம்பந்தப்பட்ட
சர்க்கரை ஆலையே அளிக்கும் எனவும் அரசு ஆணையிட்டது.
இவ்வாணையின்படி அரசு சுமார் ரூபாய் 8 கோடியினை மானிய
மாக அளிக்கும். அரசு ஆணையின்படி காவேரி சர்க்கரை
ஆலைக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளுக்குத்தான் மாநிலத்
திலேயே அதிக விலை கிடைக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு
உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் எடுத்துச் சொன்னது
போல் அங்கே இருக்கின்ற ஆலை ஒரு குறிப்பிட்ட ரகக்
கரும்பை உற்பத்தி செய்யவேண்டும் என்று விவசாயப் பெரு
மக்களை வேண்டுகின்றது. அதற்கு அதிகமான இடு
பொருட் செலவு ஆகும் என்ற கருத்தினை அவர்கள் எடுத்துச்
சொல்லி இருக்கிறார்கள். அதேபோல் சுந்தரம் அவர்கள்
ஆம்பூர் சர்க்கரை ஆலையும் ஒரு குறிப்பிட்ட ரகக் கரும்பை
உற்பத்தி செய்யவேண்டும் என்று விவசாயப் பெருமக்க
ளிடத்திலே வேண்டுகோள் விடுக்கின்றது என்று சுட்டிக்
காட்டி இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு அரசு எடுத்துக்
கொண்ட கொள்கை முடிவின்படி கடந்த ஆண்டு விவசாயப்
பெருமக்களுக்குக் கொடுக்கப்பட்ட விலையில் கொஞ்சம்
கூட குறையாத அளவுக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற
வகையில் அரசு ஆணையிட்டது. அந்த வகையிலேதான்

[டாக்டர் கா. காளிமுத்து] [1983 ஏப்ரல் 12

8 கோடி ரூபாய் செலவினை அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதனால் பெரும்பாலான ஆலைகள் பயன் அடைகின்றன. ஆனால் ஆலைக்கு ஆலை சர்க்கரையின் மற்றும் கரும்பின் தரம் வேறுபடுகிறது. அதற்கேற்ற வகையில் இடுபொருட்களின் செலவும் ஏற்ற இறக்கமாக இருக்கும். அந்த வகையில் காவேரி சர்க்கரை ஆலைக்கு அரசு கொடுக்கவேண்டிய தொகை எதுவும் இல்லை என்பது உண்மை. ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு டன் ஒன்றுக்கு 60 காசு மட்டும்தான் கொடுக்கப்படுகின்றது என்பதும் உண்மைதான். ஆனால் பெரும்பாலான சர்க்கரை ஆலைகள் இதனால் பயன் அடைகின்றன என்ற அடிப்படையில்தான் அந்தப் பெரும்பான்மையை மனதிலே கொண்டு அரசு இப்படி ஒரு செயல் திட்டத்தை வகுத்திருக்கின்றது. ஆனாலும் இதனால் விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. கரும்பு விவசாயிகளின் சார்பாகவும் இந்தக் கருத்தினை இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் சொன்னார்கள். ஆகவே அவர்களை அழைத்துப் பேசி உரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். அரசு அதைப்பற்றி ஆராயும், ஆகவே இது குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) சேலம் மாவட்டம், தாதம்பட்டியில் வரதட்சணை கொடுமைக்கு ஒரு பெண் பலியானது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், கே. எம். தங்கமணி, மற்றும் எஸ். இராசாராமன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



1983 ஏப்ரல் 12]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாதம்பட்டியில் வளர்மதி என்ற பெண் வரதட்சணைக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்டது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கண்ணன் குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஜாரி வீராணம் கிராமத்தைச் சேர்ந்த வளர்மதி என்ற பெண்மணி (வயது 20) பழனிவேல் என்பவரை மூன்று ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்து கொண்டார். கொஞ்ச காலத்திற்கு முன்னால் அவர்களிருவரிடையே ஏற்பட்ட சச்சரவு வளர்மதியின் பெற்றோர்களால் தீர்த்து வைக்கப்பட்டது.

(முற்பகல் 10–30)

சென்ற வருடத்தில் மறுபடியும் அவர்கள் தம்முள் சண்டை இட்டுக் கொள்ள வளர்மதி தன் பெற்றோர்கள் வீட்டிற்கு வந்தார். பஞ்சாயத்து ஒன்று நடைபெற்று வளர்மதி தன் கணவர் வீட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டார். வளர்மதி வீட்டு வேலைகள் செய்து கொண்டிருக்கும்போது தன் கணவரின் தாயால் ஏசப்பட்டதால் வீட்டில் சில நேரங்களில் சுமூக உறவின்மை இருந்து வந்தது. 13–3–1983 அன்று வளர்மதி வயிற்று வலியால் பாதிக்கப்பட்டதால், கொமாரசாமிபட்டியைச் சேர்ந்த டாக்டர் கலைசெல்வியால் சிகிச்சை அளிக்கப்பட்டார். அவர் 14–3–1983 அன்று தீவிர வயிற்று வலியின் உபாதை தாங்க முடியாமல் அரளி விதை விஷம் அருந்தினார். உடன் மருத்துவ சிகிச்சை அளித்தும் பலன் அளிக்காமல் அவர் மரணமடைந்தார். விசாரணையிலிருந்து, மரணம் அடைந்த வளர்மதி, வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்த காரணத்தாலும் தன் கணவரின் தாயார், வீட்டு வேலைகளைச் செய்யும்பொழுது திட்டி வந்ததாலும், இத்தொல்லைகள் பொறுக்க முடியாமல் அரளி விதை விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிய வருகிறது. இரசாயன பரிசோதனைக்குப் பிறகு மருத்துவரின் முடிவான கருத்து அறிவிக்கப்படும். கண்ணன் குறிச்சி போலீஸ் ஸ்டேஷன் வழக்கு குற்ற எண். 53/83-ன்படி ஆய்வு நடந்து வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தகவல் அல்ல எங்களுக்கு கொடுக்கப்பட்டதும் அதேபோல் பத்திரிகைகளில் வந்து இருப்பதும், ஒரு மில் தொழிலாளியின் மகள் 20 வயதான வளர்மதி என்பவரை பழனிவேல் என்பவருக்கு கல்யாணம் செய்து கொடுக்கும் நேரத்தில் 10 பவுன்கள் கொடுக்க வேண்டும் என்று பேச்சு இருந்ததாகவும் அந்த 10 பவுன்கள் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் கொடுமைப் படுத்தியதன் விளைவாக அவர்கள் தற்கொலை செய்து கொண்டதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கிறது. இந்த நேரத்தில் வரதட்சணைக் கொடுமையால் பல கொலைகள், தற்கொலைகள் நடந்து வருகிறது. கொலைகளைக் கூட காவல் துறையினர் தற்கொலையாக மாற்றி வழக்குகளை மூடி மறைத்து விடக்கூடிய நிலை ஏற்பட்டு விடுகிற காரணத்தால் பல ஏழை குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கல்யாணம் ஆகி 5 வருடங்களுக்குள்ளே ஒரு பெண் மரணம் அடைந்து அது சந்தேகத்திற்கு இடம் அளிக்குமானால் அரசு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கும் வரதட்சணைக் கொடுமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு தனி நீதிமன்றங்கள் அமைப்பதற்கும் அதே போல் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணம் அளிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கு பதிவு செய்யப் பட்டிருக்கிறது என்பதனை ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். வழக்கினுடைய ஆய்விலிருந்து தெரிகின்ற முடிவின் அடிப் படையில் மேற்கொண்டு நடவடிக்கை இது தொடர்பாக மேற்கொள்ளப்படும். மற்ற வரதட்சணைக் கொடுமைகள் குறித்து ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையால் பல நூற்றுக்கணக்கான பெண்கள் தற்கொலை செய்துக் கொண்டார்கள் என்று செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. அதைப்போலவே தான் வளர்மதி என்ற பெண்ணின் முடிவும் நமக்கு கிடைத்து இருக்கிறது. எனவே எதிர்காலத்தில் இது மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரவெண்டிவ் ஆக்ஷன் என்ற முறையில் இது குறித்து எத்தகைய சட்டத் திருத்தம் கொண்டு வரலாம் என்பது பற்றி மத்திய அரசு ஆய்ந்து வருகிறது. மாநில அரசினுடைய கருத்துக்களும் கேட்கப்பட்டிருக்கின்றன. கருத்துக்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. இந்த குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும் குடும்பச் சண்டை இருந்தது தெரிய வருகிறது. பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் இரண்டு இடங்களிலும் இந்த பெண்ணுக்கு நிம்மதி இல்லை என்பது தெரிய வந்திருக்கிறது. வரதட்சணைக் கொடுமை காரணமா என்பது குறித்து ஆய்வுக்கு பிறகுத் தெரியவரும். அந்த அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஆ) செவிலியர் பயிற்சிக்கு அனுமதிக்கப் பெற்ற இடங்கள் அனைத்தும் நிரப்பப் பெறாதது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் செ. செம்மலை, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " இந்த ஆண்டு செவிலியர் பயிற்சிக்கு அனுமதிக்கப்பெற்ற இடங்கள் முழுவதுக்கும் பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பெறாதது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

செவிலியர் பயிற்சியில் ஆண்டுக்கு 690 உதவித் தொகை பெறும் இடங்களுக்கும், 50 உதவித் தொகை பெறாத இடங்களுக்கும் மாணவியர்களை ஆண்டுக்கு இருமுறை அதாவது ஜனவரியிலும், ஜூலையிலும் சென்னை, மதுரை ஆகிய இரு தேர்வு மையங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவ்வாறு

அனுமதிக்கப்பட்டுள்ள உதவித்தொகை பெறும் இடங்களின் எண்ணிக்கை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் வாரியாகவும், ஜனவரி, ஜூலை பிரிவுகள் வாரியாகவும் கீழே தரப்பட்டுள்ளது.

உதவித் தொகை பெறும் இடங்கள்—690.

| | ஜனவரிப் பிரிவு. | ஜூலைப் பிரிவு. |
|---|---|---|
| | (1) | (2) |
| **சென்னை மையம்** | | |
| 1. அரசு பொது மருத்துவமனை, சென்னை. | 65 | 65 |
| 2. கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை. | 25 | 25 |
| 3. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை. | 40 | 45 |
| 4. மாவட்ட தலைமை மருத்துவமனை, சேலம். | 50 | 50 |
| **மதுரை மையம்** | | |
| 1. அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை. | 45 | 40 |
| 2. கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 35 | 35 |
| 3. மாவட்ட தலைமை மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி. | 50 | 50 |
| 4. தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர். | 35 | 35 |
| | 345 | 345 |

2. இந்த ஆண்டு (ஜனவரி 1983) மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் சேலம், திருச்சி இரண்டு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள அளவின்படி மாண





வியர்கள், சேர்க்கப்பட்டனர். அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களில், அதாவது 345 இடங்களில் 50 இடங்கள்தான் குறைக்கப்பட்டன. 295 மாணவியர்கள் சேர்க்கப்பட்டனர். திருச்சி செவிலியர் பயிற்சிப்பள்ளி, சேலம் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆகிய இவ்விரு பள்ளிகளிலும் பிரிவு ஒன்றிற்கு அனுமதிக்கப்பட்ட இடங்களான 50-க்கு பதிலாக 25 இடங்களுக்கு மாணவியர் சேர்க்கப்பட்டுள்ளனர். திருச்சியில் செவிலியர் பயிற்சிப்பள்ளி மற்றும் விடுதிக்கான கட்டிடம் கட்ட அரசினால் அனுமதிக்கப்பட்டு கட்டிட வேலையும் துரிதமாக நடைபெற்று வருகின்றது. அது முடிந்த பின்னர் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையின் படி பிரிவு (ses,ion) ஒன்றிற்கு 50 மாணவியர் விதம் சேர்க்கப்படுவர்.

3. சேலத்தைப் பொறுத்த வரையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி கட்டுவதற்கு தகுந்த இடமோ அல்லது வாடகைக்கு தனியார் கட்டிடமோ கிடைக்காததன் காரணத்தால், பயிற்சிப் பள்ளி ஆரம்பித்த காலத்திலிருந்து இவ்விட நெருக்கடி பிரச்சினை இருந்து வந்தது. அரசு கடந்த சில ஆண்டுகளாக எடுக்கப்பட்ட பலவித முயற்சிகளின் விளைவாக தற்போது மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து வந்த தகவலில் சேலம் தலைமையிட மருத்துவமனையிலேயே செவிலியர் பயிற்சிப் பள்ளி மற்றும் விடுதி கட்டுவதற்கான இடமிருப்பதாக தெரிவித்துள்ளார். மேலும் அங்கு கட்டிடம் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு, வரைபடம் இரண்டினையும் பொதுப் பணித்துறையிடம் கேட்கப் பட்டுள்ளதென சேலம் மாவட்ட மருத்துவ அலுவலர் தெரிவித்து உள்ளார். திட்ட மதிப்பீடும், வரைபடமும் வந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. தற்போதைய சூழ்நிலையில் சேலம், திருச்சி இவ்விரு இடங்களிலுள்ள செவிலியர் பயிற்சிப்பள்ளிகளிலும் இடநெருக்கடி பிரச்சினை தீரும்வரை பிரிவு ஒன்றிற்கு 25 மாணவியர் மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை தீர்ந்தவுடன் மீண்டும் அனுமதிக்கப்பட்ட அளவு மாணவியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த விவர அறிக்கையின்படி பயிற்சிப் பள்ளி நடத்துவதற்கு இட வசதி இல்லாத காரணத்திற்காக சேலம், திருச்சி ஆகிய 2 இடங்களில் 50 பயிற்சியாளர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை என்று குறிப்பு இருக்கிறது. ஏற்கனவே இருக்கிற 6 பள்ளிகளுக்கும் இந்த 50 இடங்களை 10 ஆக பிரித்து கொடுத்து பயிற்சி மாணவர்களை சேர்த்து இருந்தால் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்

டிருக்கும் அல்லது சேலத்தைப் பொறுத்த வரையில் எங்களுடைய
முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த பயிற்சிப்
பள்ளிக்கு இடத்தைக் கொடுக்க முன்வந்தும் இந்தத் துறை
அதைப் பயன்படுத்த முன்வரவில்லை. தற்போது இடம் என்று
தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அதுவரை
யில் சென்ற ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட ஏ.என்.எம். பயிற்சிப்
பள்ளியில் இடம் தேவைக்கு ,அதிகமாக இருப்பதால் அந்த
இடத்தை இதற்குப் பயன்படுத்திக்கொண்டு வருகிற ஜூலை
மாதத்திலே முழுமையாக பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்
படவும் முழுமையாக அந்தப் பயிற்சிபள்ளியை நடத்துவதற்கு
ஏற்பாடு செய்யவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா
என்பதை அறியவிரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்த விவர
அறிக்கையிலே ஏற்கெனவே கூறியமாதிரியாக சேலம் பகுதியிலே
நாம் இடத்திற்காக முயற்சி எடுத்துக்கொண்டோம். இடம்
கிடைக்கவில்லை. பிறகு அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்களை அணுகினோம். இடத்தைப் பார்த்துக்
கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். இப்போது டி.எம்.ஓ.,
மாவட்ட தலைமை மருத்துவர் அவர்கள் அந்த மருத்துவமனை
யின் எல்லைக் குள்ளேயே ஒரு இடம் இருக்கிறது என்றும் அதைப்
பயன்படுத்தலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக
நாம் பிளான்களை பி.டபிள்யு.டி. மூலமாக தயாரிக்கச் சொல்லி
அவர்கள் நமக்கு அனுப்ப இருக்கிறார்கள். இதற்கு இடையில்
ஏ.என்.எம். ஸ்கூலிலேயே இதை நடத்தலாமா என்ற யோச
னையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.
நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1983—84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள்,
தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர்,
அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்
கீழ் ரூ. 22,14,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு
வழங்கப்பெற வேண்டும்."





திரு. ந. வேணுகோபால் : தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் கொடுக்கும் கோரிக்கை மனுக்களின் மீது எடுக்கப்படும் நடவடிக்கையை தெரிவிப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,14,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு நான்காவது சம்பள கமிஷன் அமைப்பதைப்பற்றி விவாதிக்க I move that—

"The sum of Rs. 22,14,91,000 under Demand No. 9—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100"

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அமைச்சர்கள் மற்றும் அரசு செயலாளர்கள் ஆகியோருக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங்கள் பெறப்பெற்றதற்கான கடிதம் சில நேரங்களில் அனுப்பப்பெற்றாலும் அவை மீது எடுக்கப் பெற்ற நடவடிக்கை பற்றி ஏதும் தெரியப்படுத்தாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,14,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடைபெறாத நாட்களில் மாதத்திற்கு ஒரு நாள் தலைமையகத்தில் ஒதுக்கி தொகுதி பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு அமைச்சர்கள் தலைமையகத்தில் இருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,14,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,40,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருவண்ணாமலையை தலைநகரமாக கொண்டு ஒரு புதிய மாவட்டத்தை ஏற்படுத்தக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 28,40,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை விஸ்தரிப்பது பற்றி விவாதிக்க I move that—

"The sum of Rs. 28,40,79,000 under Demand No. 11—District Administration be reduced by Rs. 100."

திரு. எம். செல்லமுத்து : தலைவர் அவர்களே, ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை பல்வேறு அறக்கட்டளைகளாக பிரித்து எழுதிவைத்து கொண்டு இருக்கும் நிலைமையை மாற்ற அறக்கட்டளைக்கு உள்ள விதி விலக்குகளை ரத்து செய்யாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,40,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சிக் கூட்டங்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடைபெறுவதை மாற்றி மாதந்தோறும் நடைபெற வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,40,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் வைக்கப் பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொல்கிற கருத்துக்களின் அடிப்படையில் இறுதியில் என்னுடைய உரையை வைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இப்போது கூறலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன். இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள், அமைச்சர்கள் மீது ஊழல் புகார்கள் சொல்லப்படுமேயானால் கமிஷன் அமைக்கப்படுகிற போது பிற மாநிலங்களைச் சேர்ந்த நீதிபதிகள் அல்லது சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளைக் கொண்டு தான் விசாரணை நடத்த வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் பலமுறை வலியுறுத்தி இருக்கிறார்கள். இங்கே பாட்லிங், பிளென்டிங், ஐ.எம்.எப்., லைசென்ஸ் வழங்குவது சம்பந்தமாக ஊழல் குற்றச்சாட்டு சொல்லப்பட்ட போது அதற்காக இராமமூர்த்தி கமிஷன் அமைக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் சொல்லிய அந்த நடைமுறையை பின் பற்றினார்களா? என்றால் இல்லை. உள்ளூர் நீதிபதியை போட்டிருக்கிறார். நியாயம் கிடைக்குமா, கிடைக்காதா என்ற பிரச்னைக்கு நான் போகவில்லை. ஆனால் இப்போது திடீரென்று நீதிபதி இராமமூர்த்தி நீக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு உடல்நலம் சரியில்லை என்ற காரணம் சொல்லப் பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம் நீதிபதி இராமமூர்த்தி அரசிடம் விண்ணப்பித்தாரா "எனக்கு உடல் நலம் சரியில்லை; என்னை விடுவிக்க வேண்டும்" என்று" அரசிடம் விண்ணப்பித்தாரா அல்லது அரசாக அவரை விடுவித்திருக்கிறதா? காரணம் நாயுடு கமிஷன் என்று போட்டீர்கள்

கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் அதிகமான வயதானவர். பெரிய கிழவர். இன்னும் சொல்லப்போனால் உயிருக்குக் கூட போராடிக் கொண்டிருந்தார்கள். கண்ணைமூடுகின்ற வரை அவருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது. விசாரணை எல்லாம் நடத்தினார். ஆனால் கிருஷ்ணசாமி நாயுடு விசாரணை கமிஷன் பொறுப்பிலிருந்து விலக்கப்படாமல் இராமமூர்த்தி மட்டும் விலக்கப்பட்டிருக்கிறாரே ; அதற்கு என்ன பின்னனி என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே அமைச்சர்கள் சொத்துக் கணக்கு காட்ட வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொதுத்துறையிலே இருப்பவர்கள் எல்லோரும் சொத்துக் கணக்கு காட்ட வேண்டுமென்றுச் சொல்லி, எம். எல். ஏ., க்கள் மாவட்டச் செயலாளர்கள் யாராக இருந்தாலும் கணக்கு காட்ட வேண்டுமென்று எங்களைப் பார்த்து அன்றைக்கு கேட்டார். இப்போது மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்கள் சொத்துக் கணக்கு என்ன என்று தெரிய வேண்டும். அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த பலபேர் பல தொழில்களில் ஈடுபட்டிருக்கலாம். பல தொழில்கள் நடத்தலாம் ; அல்லது முதலீடு செய்திருக்கலாம். அவைகள் எல்லாம் அமைச்சர் ஆவதற்கு முன்பு எவ்வளவு ? அதற்குப் பிறகு எவ்வளவு என்ற விவரங்கள் தெரிய வேண்டும். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * எல்லாம் இங்கே பேசக்கூடாது. எனவே இதுவரை திரு. ரகுமான்கான் கூறியதிலிருந்து நான் குறிப்பிட்டதும் உட்பட எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ரகுமான்கான் தொடர்ந்து பேசலாம்.

திரு. அ. ரகுமான்கான் : அடுத்து, நான் குற்றச்சாட்டாக சொல்லக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆகவே, தகவலுக்காகச் சொல்கிறேன். ஆடம்பர விழாக்கள், அரசு நடத்துவது முறைதானா ? ஒரு அமைச்சர் கலந்துகொள்கிற ஒரு விழாவிலே அந்த அமைச்சருக்கு யானை, மாலை போடுவதற்கு ரூபாய் 20,000 செலவு. அந்த அமைச்சர் கலந்து கொள்வதற்குப் பத்திரிகைக்கு விளம்பரம் ரூபாய் 40,000 செலவு. ஒரு பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்திருக்கின்றார்கள். அந்த விழாவுக்கு மொத்தச் செலவு ரூபாய் 60,000 என்று எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சரிதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அதைப் போலவே இன்னொன்றையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு அமைச்சர் அதிகாரிகளிடத்திலே, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், தொகுதிகளில் குறைபாடுகளைக் கேட்டு, அரசாங்கக் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விழா என்று சொல்லுங்கள் ? யானை மாலை போட்டதற்கு ரூபாய் 20,000 என்று சொன்னால், நானே அதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். யானை விலையே ரூபாய் 20,000 தானே இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : கூட்டுறவு வங்கி 19-வது கிளை—ஆதம்பாக்கம்—அங்கே எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கிளை திறப்பு விழா நிகழ்ச்சியின்பொழுது—பத்திரிகையைக் கேட்டால், பத்திரிகையைச் சொல்கிறேன்—அது மாதிரி தகவல் தரப்பட்டிருக்கிறது. நான் சொல்வது தவறு என்றால், அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துதான் அதைச் சரி செய்ய வேண்டும். அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற பொழுது, யானை மாலை போடுவதற்கு ரூபாய் 20,000 செலவு என்று சொன்னார்கள். அவருக்குக் கிடைத்த தகவலையும் குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞராக இருக்கிறார்கள், யானை மாலை போடுவதற்கு ரூபாய் 20,000 என்று சொன்னால், அதை நம்புகிறாரா ?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அங்கே சொல்லப்பட்டிருக்கக்கூடிய கணக்குகளில் விழாச் செலவிற்காக ரூபாய் 60,000 ; பத்திரிகை விளம்பரத்திற்காக ரூபாய் 40,000 : யானை மாலை போடுகின்ற ஏற்பாட்டுக்காக என்றே—அந்த 'ஹெட்' டிலேயே காட்டியிருக்கிறார்கள். கூட்டுறவு வங்கியினுடைய கணக்குகள் விவரங்களிலேயே—அக்கவுண்டிலேயே அந்தக் கணக்குகள் இருப்பதாக நான் கருதுகிறேன். ஏற்கெனவே கூடச் சொன்னேன். ஒரு அதிகாரி, சோழா ஓட்டலிலே சாப்பிடுவதற்குக் கூட ரூபாய் 1,200-க்கு மேலே கணக்காக எழுதப்பட்டிருக்கிறது என்று, அந்த ரெக்கார்டுகளை எல்லாம் கொண்டு வந்தால், சபையிலே பரிசீலிப்பதற்குச் சரியாக இருக்கும், நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50.)

நான் அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன். அமைச்சர் ஒருவர், அதிகாரிகளை அழைத்துக்கொண்டு தொகுதியின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு வரக்கூடாது என்று சொல்லியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நாங்கள் பலமுறை கூப்பிட்டாலும் வருவதில்லை. முன்பொருமுறை, தண்டலம் என்ற கிராமத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபொழுது முதலமைச்சராக இருந்த காமராஜ் அவர்களை அழைத்துக் கொண்டு சென்று குறைகளையெல்லாம் சொன்னார்கள். பெருந்தன்மையோடு, முதலமைச்சராக இருந்த பெரியவர் அவர்கள் அன்றையத்தினம் சென்று குறைகளை தீர்த்து வைத்தார்கள். அதேபோன்ற முறை இங்கேயும் இருக்க வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மக்கள் யாருக்கு வேண்டுமானாலும் தங்களது வாக்குகளை வழங்கலாம்; அது அவர்களுக்கு இருக்கின்ற அடிப்படை உரிமையாகும். மக்களையும் சேர்த்துத்தான் மந்திரிகள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது இப்படிப்பட்ட அணுகுமுறைகளைக் கையாளுவது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

முன்னாள் தலைமைச் செயலாளர் திரவியம் அவர்கள் இருக்கிறார்கள். அவரைப் புண்படுத்தக் கூடாது. நான் புண்படுத்தவும் மாட்டேன்; மனிதாபிமான முறையில், ஆனால் அவரது பெயரில் உத்தரவு ஒன்று வந்தது. மந்திரிகள் அல்லது முதல் மந்திரி அல்லது அவர்களுடைய பி. ஏ.-க்கள் ஆகிய இவர்களிடத்திலேதான் குறைகள் சம்பந்தமான மனுக்களைக் கொடுக்க வேண்டுமே தவிர, மற்றவர்களிடத்திலே கொடுக்கக் கூடாது. என்ற உத்தரவு வந்தது. எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், மற்றுமுள்ள எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களும் அதைக் கண்டனம் செய்து அறிக்கை விட்டார்கள். கவர்னர் இருக்கிறார், எம். பி., எம். எல். ஏ., க்கள், எம். எல். சிக்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள், ஆனால் அவர்களெல்லாம் மனு வாங்க முடியாதா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு முட்டள்தனமாக—முட்டாள்தனமாக என்ற அந்த வார்த்தைகள் கூட அவைக் குறிப்பிலே வரக்கூடாது—உண்மைக்கு புறம்பான என்று வேண்டுமானால் சொல்லலாம்; அந்த வார்த்தையைப் பயன்படுத்திவிட்டு, முதலமைச்சரவர்கள், நடுவில் இடைத் தரகர்கள் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தவறான முறையில் ஈடுபடுவதால் இப்படிச் சொல்லப்பட்டது என்ற கருத்தைக் கூறிவிட்டு, அதில் எம். பி.-க்கள்,



எம். எல். ஏக்கள், எம். எல். சிக்கள் ஆகியோர்கள் இணைக்கப்படுவார்கள்; அவர்கள் எக்ஸ்குளூட் செய்யப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உத்தரவில் அப்படி இருக்கிறதா என்றால் இல்லை. இவைகள் சரிதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மகாராஷ்டிரா முதலமைச்சராக இருந்த அந்துலே பற்றிப் பொறுப்பான செய்திப் பத்திரிகைகள் எழுதியதற்குப் பிறகுதான் அந்த நடவடிக்கைகள் வெளியே வந்தன. எனவே, அமைச்சர் தவறு செய்தால் ஜனநாயக நாட்டிலே உள்ள பத்திரிகைகள் விமர்சனம் செய்வதற்கு உரிமை இருந்தாக வேண்டும். ஆனால் மந்திரிமார்கள் தவறு செய்தால் ஜனநாயக ரீதியாக அதைப்பற்றி பத்திரிகைகளில் விமர்சனம் செய்யக் கூடாது என்ற வகையில் பத்திரிகைச் சட்டம் என்ற ஒரு கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, இரண்டாண்டு ஜெயில் என்றும், தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் வரையில் ஜாமீனில் வர முடியாது, எடுத்தவுடன் கைது, வாரண்டே இல்லாமல் கைது செய்யலாம் என்ற வகையில் கொண்டு வந்தீர்கள். பீகாரிலே கொண்டு வந்த முதலமைச்சரவர்களே, அதை இப்பொழுது திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் பத்திரிகைகளைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில், உங்கள் ஊழல்கள் தவறுகள் வெளியே தெரியக் கூடாது என்பதற்காக அந்தச் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டிருப்பது ஜனநாயகத்திற்குக் கிடைத்த சம்மட்டி அடி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இருக்கின்ற விதிகளின்படி டெஃபமேஷன் போடலாம். அப்படியிருக்கின்றபொழுது அமைச்சர்கள் செய்கின்ற தவறுகள் பத்திரிகைகளின் மூலமாக வெளியே வரக்கூடாது என்பதற்காக அந்த ஆயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டிருப்பது எந்தவிதத்தில் நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

முதலமைச்சரவர்கள் இப்பொழுது இங்கே வரவில்லை. காரணம், உடல் நலமில்லை என்று சொல்லப்பட்டது. நான் அதை ஒப்புக்கொள்கிறேன். மனிதாபிமான அடிப்படையில் நான் பேசுகிறேன். ஆனால் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், இப்பொழுது இருக்கின்ற சந்தர்ப்பத்திற்காகக் கேட்கவில்லை. ஐந்தாண்டுகளில் என்றைக்காவது ஒருநாளாவது இந்த போலீஸ் மானியம் ஒத்தி வைக்கப்படாமல் நடந்திருக்கிறதா? முதலமைச்சரவர்கள் கேள்வி நேரத்தின்பொழுது எப்பொழுதாவது வந்து அவர் துறை சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறாரா? இது இந்தச் சபையை மதிக்காமல் உள்ள சூழ்நிலையைக் காட்டவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1983 ஏப்ரல் 12

முதலமைச்சர் மாநாடு டெல்லியிலே நடந்தது. மிக முக்கிய மான பிரச்னையாக காவிரி நீர்ப் பிரச்னை, அதில் முதலமைச்சர் கலந்து கொள்ளவில்லை. பொதுநலன் கருதிய பிரச்னை. அதில் ஏன் கலந்து கொள்ளவில்லை என்று எதிர்கட்சித் தலைவர் அவர் கள் கேட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சட்ட மன்றத்திலே கேட்டாலும், முதலமைச்சர் சொல்கிறார் பொது நலன் கருதி காரணம் சொல்ல விரும்பவில்லை என்று. போகாததற்கு என்ன பொது நலனுக்கான காரணம் இருக்கிறது?

டைரக்டர் பாலச்சந்தர் வீட்டில் நடக்கின்ற திருமணத்தில் கலந்து கொள்கிறார்; அதை நாங்கள் வேண்டாமென்று சொல்ல வில்லை. ஆனால் நாலரை கோடி தமிழக மக்களின் பிரச்னை முக்கியமானது இல்லையா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

கொச்சின் வரவேற்புக்குப் போகட்டும், அதை வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை ; ஆனால் அதைவிட காவிரி நீர்ப் பிரச்னை முக்கியமானதல்லவா?

குண்டுராவ் காவேரியில் தண்ணீர் தருவார், எனவே கைச் சின்னத்தில் ஓட்டுப் போடுங்கள் என்றும், அவருக்கு ஓட்டுப் போடாவிட்டால் அண்ணாவுக்கே துரோகம் செய்வதாகும் என்று சொல்லி ஓட்டுக் கேட்கப் போகட்டும்; அதை நாங்கள் வேண் டாமென்று சொல்லவில்லை. ஆனால் அதைக் காட்டிலும் காவிரி நீர்ப் பிரச்னை முக்கியமானதல்லவா?

காவிரி நீர்ப் பிரச்னைக்காக மறியல் செய்யச் சொன்னார் கள். இங்கே எல்லோரும் செய்தார்கள். மறியல் செய்யச் சொல்லிவிட்டு கல்கத்தாவிற்குப் போகிறார்; இரயிலிலே போகி றார். ஆனால் இதிலிருந்து என்ன தெரிகிறது என்று கேட்டால் அவர்களுக்கு ஏன் இதில் அக்கறை இல்லாமல் தமிழக மக்களின் தலையெழுத்தோடு விளையாடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல, கேட்க தமிழ்நாட்டில் குடிமகனாக இருக்கக் கூடிய எனக்கு உரிமை உண்டு. ஆகவே கேட்கிறேன்.

இதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் இராஜா முகமது. அவர் காவிரி நீர்ப் பிரச்னை சம்பந்தமாக, அந்தக் கூட்டத்திற்குப் போகவில்லை. அவருடைய இலாக்கா சம்பந்தப்பட்டதாக இருந்



1983 ஏப்ரல் 12] [திரு. அ. ரகுமான்கான்]

தும் அவரும் போகவில்லை. முதலமைச்சரும் போகவில்லை. நமது அமைச்சர் பண்ருட்டி அவர்கள் ஏதோ போய்விட்டு வந்திருக் கிறார்கள். போய்க்கூட ஏதோ பேசியிருப்பதாகப் பத்திரிகை களிலே செய்திகள் வந்திருக்கின்றன.

ஆனால் நான் கேட்கிறேன், போக வேண்டியவர்கள் போகா மல் இருந்ததற்கு என்ன காரணம்? அமைச்சர் இராஜா முகமது அவர்கள்கூட ஒரு முறை சொன்னார்கள், டெல்லியிலே இருக்கக் கூடிய மந்திரிகள் எங்களை மதிப்பதில்லை என்று சொன்னார்கள். நம்முடைய சர்க்கார் கூட கொத்தடிமைகளை ஒழிப்பதற்காக மந்திரிசபையிலே ஒரு இலாக்கா ஒதுக்கப்பட்டிருக்கிறது ஒரு மந் திரிக்கு. கொத்தடிமை ஒழிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் எல்லாவற்றிலேயும் கொத்தடிமை இருக்கக்கூடாது.

நான் மந்திரிசபையில் கொத்தடிமை இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. சொன்னால் நீங்கள் கோபிப்பீர்கள். இந்த மாதிரியான சூழ்நிலை இருப்பது தவறு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குக்கூட, கவர்னர்கள் மாநாட்டில் பிரதமர் இந்திரா கலந்துகொண்டு பேசுகையில், வறட்சி நிவாரணப்பணி, புயல், வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் செலவழிக்கக் கூடிய நிதிகளில் ஊழல்கள் நடை பெறாமல் இருக்க, கவர்னர் இவற்றைக் கண்காணிக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன்—மத்திய சர்க்காரை எதிர்த்து, வறட்சியை எதிர்த்து, குடிநீர்ப் பிரச் னையை எதிர்த்து, அரிசி கிடைக்காததை எதிர்த்து, சிறைச் சாலைக்கு செல்ல எல்லோரும் தயாராக இருங்கள் என்று சினிமா வசனங்கள் போல் பேசப்படுகிறது. ஆக கவர்னர் இன்று கண் காணிக்க வேண்டுமென்ற கருத்து மாநாட்டில் சொல்லப்பட்டி ருக்கிறது. ஏன் மௌன கீதம் பாடுகிறீர்கள்? ஏன் அமைதியாக இருக்கிறீர்கள்? ஆக சிறைச்சாலைக்குச் செல்கின்ற காலம் இன் றைக்குத் தணிந்திருப்பதாக கருதுகிறேன். நீங்கள் எதிர்த்து செல்வதாக இருந்தால், நாங்களும் அதற்கு மனப்பூர்வமாக தயாராகயிருக்கிறோம். நாவலரைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தயாராக இருங்கள். சிறைச்சாலை தயாராக இருப்ப தாகக் கேள்வி என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே இன்னொரு பிரச்னைச் சொல்ல விரும்பு கிறேன். (குறுக்கீடு)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது, கவர்னர் கண்காணிப்பதற்கான கருத்தைச் சொன்னார்கள். அதற்குப் போராட வருவோம் என்றும் சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்றத்திலே தலைவராக இருக்கின்ற சி. டி. தண்டபாணி கண்காணிப்பதற்கு குழு போடவேண்டும்; கண்காணிப்பதற்கு பணம் கொடுக்கின்ற மத்திய அரசிற்கு உரிமை இருக்கிறதென்று 1981 ஆம் ஆண்டு பேசியிருக்கிறார்கள். ஏன் இந்த கொள்கை முரண்பாடு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்பதை மட்டும் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா· நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்திய மாநிலங்களுடைய ஆளுநர்கள் மாநாட்டை இந்தியக் குடியரசுத் தலைவர் துவக்கி வைத்து, அதிலே இறுதியாகப் பேசுகின்ற போது, இந்தியப் பிரதமர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஏராளமாக வறட்சி நிவாரணப்பணிகளுக்காக மற்றவைகளுக்காக மத்திய அரசும், மாநில அரசுகளும், செலவழிக்கிறார்கள். இதில் ஊழல்கள் ஏதாவது இருந்தால், கண்காணிக்கவேண்டுமென்று தமிழக கவர்னரை மட்டும் தனியாகக் குறிப்பிட்டு சொல்லவில்லை. பொதுவாக எல்லா ஆளுநர்களையும் கடைபிடிக்க வேண்டிய ஒன்றாகச் சொன்னார்கள்.

இங்கே கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டுகின்றபோது, கீழ் மட்டத்தில் ஊழல்கள் நடைபெறாமல் இருக்க கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். பொதுவாக சொல்லப்பட்ட அறிவுரை. அதைப்போல அம்மையார் அவர்களும் கூறியிருக்கிறார்கள். தமிழகத்தில் என்று குறிப்பிடவில்லை. இந்தியாவிலேயே 22 மாநிலங்களில் 18 மாநிலங்கள் வறட்சியாக இருக்கின்றன. அந்த அறிவுரைகளைப்பற்றி எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. கண்டிக்க வேண்டிய அவசியமில்லை. உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் என்னவோ தயாராக இருக்க வேண்டுமென்று சிறைச்சாலை இருக்கிறது என்று. சிறைச்சாலை இப்போது எங்களிடத்தில்தான் இருக்கிறது. அதனுடைய பூட்டும் சாவியும் இப்போது எங்களிடத்தில் தான் இருக்கிறது. இன்றைக்கு நாங்கள் யாரையும் பிடித்து உள்ளே தள்ளுவதாக இல்லை. ஆக நீங்கள் எங்களைத் தயாராக இருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் செய்கின்ற தவறான காரியங்களை எதிர்த்து சிறைச்சாலைக்குச் செல்வோம் என்ற அறி



விப்பு சொல்லப்பட்ட காரணத்தினால்தான் மாநில சுயாட்சி புத்தகத்தின் ஆசிரியர் முரசொலி மாறன் அவர்கள் எழுதியதற்கு முன்னுரை எழுதிய, மாநில சுயாட்சி தத்துவரான மாண்புமிகு நாவலர் அவர்களை கேட்கிறேன்.—இதைக் கண்காணிப்பதற்கு கவர்னரைப் போடலாம் என்பது சரி என்ற வாதம் உங்களுக்கு இருக்குமேயானால், அதற்காக சிறைச்சாலைக்கு போக அவசியமில்லை என்று நீங்கள் சொல்வீர்களேயானால், வாழ்க மாநில சுயாட்சி, அதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நம் மாநிலத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் அத்தனையும் கண்காணிக்க கவர்னர் நியமிக்கப்பட்ட அந்த காலத்திலிருந்து தொடர்ந்து இருக்கிறது. நம்மை அறியாமலே வாரத்திற்கு ஒரு முறை அந்த ரிப்போர்ட்டு போகிறது. இங்கே என்னென்ன நடைபெறுகின்றன என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு உரிமை கொடுத்து, அந்த உரிமையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பது அல்ல. பல்வேறு வகைகளிலும் மாநில சுயாட்சியிலே தீவிரமாக பேசுகின்ற போது ஆளுநர் என்கின்ற ஒரு பொறுப்பே தேவையில்லை என்ற கருத்துக்கு கூட கருத்துக்கள் வழங்க வேண்டிய அவசியம் இருக்கிறது. பல தடவையும் அதை வழங்கியும் இருக்கிறோம். அதை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அது வேறு. ஆனால் கண்காணிப்பது என்பது இப்போது புதியதாக வந்து நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம் என்பது அல்ல. தொடர்ந்து இருந்து வருகிற ஒன்று. இப்போது கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கு முன்னாலும் கண்காணித்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

(முற்பகல் 11-00).

திரு அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, எங்களையும் கண்காணிப்பதாக அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் கண்காணிக்கின்ற வேலை எங்களிடத்திலே வேண்டாம் என்று அன்றைக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள். அது வேறு விவகாரம். அதற்குள் நான் போக விரும்பவில்லை. அடுத்து இன்னொரு பிரச்சனையைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ரகுமான்கான் எழுப்பியுள்ள பிரச்னை குறித்து அவையினுடைய முன்னவர் நாவலர் அவர்கள் அளித்த

விளக்கத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஏன் என்றால் மாநில சுயாட்சி பிரச்சனையோடு இந்தப் பிரச்னையை இணைப்பது சரியாகாது. நாம் எடுத்துக் கூறுக்கின்ற மாநில சுயாட்சிப் பிரச்னையில் கவர்னர்கள் என்ற பதவியே கூடாது என்றுதான் இந்த மன்றத்திலே 1974 ஆம் ஆண்டு கொண்டு வந்த மாநில சுயாட்சி தீர்மானத்தில் அன்று இருந்த கழக அரசின் சார்பாக எடுத்துச் சொல்லி இருக்கிறோம். ஆனால் கவர்னரே கூடாது, அந்தப் பதவியே கூடாது என்பது மாநிலசுயாட்சித் தீர்மானம். கவர்னர் என்று ஒருவர் இருக்கிற வரையிலே அவர்கள் மாநிலத்தினுடைய நிலவரங்களைக் கண்காணிப்பது என்பது இயல்பே ஆகும். எனவே அப்படி கண்காணிக்கிறார்கள், அதற்காக ஒரு போராட்டம் நடத்த வேண்டும், அதற்காக யாரோ சொன்னார்கள் என்பதற்காக அவையினுடைய முன்னவர் அவர்கள் சிறைச்சாலைக்குச் செல்லத் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்வது எல்லாம் அது பொருந்தக் கூடிய விவாதம் அல்ல என்பதை நான் என்னுடைய கட்சியின் சார்பாகவே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே இன்னொரு பிரச்னையையும் நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மாநில மாவட்ட நிர்வாகத்தினுடைய அடிப்படை கிராம அதிகாரிகளை வைத்துத்தான் இருக்கிறது. பல்வேறு கிராமங்களிலே கிராம அதிகாரிகள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுடைய தலையிலே தான் அந்தப் பொறுப்பு சுமத்தப்பட்டு இருக்கிறது. அதனாலே கிராம நிர்வாகம் பாதிக்கப்படுகிறது. சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பலரும் கூட இன்னும் நியமிக்கப்படாத ஒரு சூழ்நிலையில், கிராம நிர்வாகம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக அரசாங்கத்தினுடைய புறம்போக்குகளில் உள்ள மரங்கள் எல்லாம் வெட்டப்படுகின்றன. எனக்குக் கிடைத்த ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டம் தென்கனிகோட்டாவிலே ஒரு கோடி பெறுமான மரங்கள் வெட்டப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர் ஆளும் கட்சிக்காரரர் என்று தெரிய வருகிறது. வழக்குகள் கூட நடைபெறுவதாக நான் கேள்விப்படுகிறேன். ஆகையினாலே இன்றைக்கு கிராம அதிகாரிகள் இல்லாத காரணத்தால் தான் அது போன்ற தவறுகள் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அடுத்து, குடும்பத்திலே ஒருவருக்கு வேலை. உயிரைக் கொடுத்தாவது நிறைவேற்றுவேன் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குடும்பத்திலே ஒருவருக்கு



வேலை கொடுப்பது இருக்கட்டும். ஆனால் அதே நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன். வேலையில் இருந்து நீக்கப்பட்ட அந்தக் கிராம அதிகாரிகளுக்காவது தரக்கூடாதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதே போல் மாவட்ட வளர்ச்சிக் குழு, டிஸ்ட்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில், ஒரு கூடிக்கலைகிற கூட்டமாக இருக்கிறது. அங்கே சொல்லப்படுகின்ற ஆலோசனைகள் மீது நடவடிக்கை இல்லை. குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை இல்லை. தன்னிறைவுத் திட்டம், குற்றச்சாட்டுக்கள் சொல்ல முடியுமா என்று கூட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். ஆறுமுகம், நம்முடைய எம்.எல்.ஏ. அவர்கள், அரியலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர். அவர்களுடைய ஒன்றியத்திலே பல குற்றச்சாட்டுக்கள் இந்தத் தன்னிறைவுத் திட்டத்திலே. ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அங்கே இருக்கக் கூடிய இடத்திலே ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணம். அரியலூர் ஒன்றியம் அம்பாலூர் காவலூர் சாலை, பாலம் கட்ட அனுமதி வாங்கி, பாலம் கட்டியாகிவிட்டது. அப்படி பாலம் கட்டுவதற்கு—மன்னிக்க வேண்டும்—அனுமதி வாங்கி பாலம் கட்டிவிட்டதாக பட்டியல் போட்டு 13 ஆயிரம் ரூபாய் பணம் பெறப்பட்டது. ஆனால் அந்தப் பாலம் கட்டப்பட்டதா என்றால், பாலம் கட்டப்படவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. உதாரணத்திற்கு சொன்னேன். இதை சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே எடுத்துச் சொன்னார்கள். அப்படி எடுத்துச் சொல்லிய போது இதுவரைக்கும் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கலெக்டர் தான் இந்தக் குழுவிற்குத் தலைமை வகிக்கிறார். அது கூடாது. இன்னும் சொல்லப் போனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள், பிரதிநிதிகள் இதற்கு தலைமை வகிக்க வேண்டும். மாதம் ஒரு முறையாவது அது கூடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நீண்ட காலத்திற்கு முன்புதான் இந்த மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமாக இருக்கிற காரணத்தாலே மாவட்ட நிர்வாகத்தின் ஒர்க் லோடு, அதிகமாக இருக்கிற காரணத்தாலே சிரமமாக இருக்கிறது. எனவே மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். முகவை மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களும் இரண்டாகப் பிரிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து

கொள்கிறேன். அடுத்து திருச்சியிலே பேசிய நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் தலைநகரத்தை மாற்ற வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதே கருத்தை ஏற்கனவே கூட நம்முடைய அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்களும், அமைச்சர் ராகவானந்தம் அவர்களும் தமிழகத்தினுடைய தலைநகரம் நடு மையத்திலேதான் இருக்க வேண்டும் என்று பல முறை பேசியிருக்கிறார்கள்.

ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதை ஒரு சாதாரணப் பிரச்னையாகக் கருதக் கூடாது. இன்னும் சொல்லப் போனால், கல்கத்தாவில் ஒரு சாதாரண பாதாள ரயில் பாதை கட்டுவதற்கு ஏறத்தாழ 500 கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது. தலை நகரத்தை உருவாக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு 2,000 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். சென்னை தலைமைச் செயலகத்தில் 6,000 ஊழியர்கள் இருக்கிறார்கள். சென்னையில் இருக்கும் அரசு அலுவலகங்களில் 26,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு 5 பேர் என்று வைத்துக் கொண்டாலும் கூட 1½ இலட்சம் பேர் சென்னையை விட்டு புதிய தலைநகரத்திற்குச் செல்லவேண்டும். அவர்கள் அத்தனை பேருக்கும் பள்ளிக்கூடம், மருத்துவ மனை, தங்கும் விடுதி போன்றவைகள் அவர்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டும். ஜன நெரிசல் அதிகமாக இருக்கிறது என்று கருதினால், கிரேடர் பாம்பே என்று சொல்வது போல், கிரேடர் மெட்ராஸ் என்று ஏற்படுத்தலாம். மாவட்டங்களில் தொழிற்பேட்டைகள் அதிக அளவில் ஏற்படுத்தலாம். தலை நகரம் மையத்தில் இருக்க வேண்டும் என்று சொன்னால், டெல்லி இந்தியாவின் மையத்தில் இல்லை. ஹைதராபாத் ஆந்திராவின் மையத்தில் இல்லை. பெங்களூர் கருநாடக மாநிலத்தின் மையத்தில் இல்லை. திருவனந்தபுரம் கேரளாவின் மையத்தில் இல்லை. தலையில் இருக்கும் மூளை கூட மனிதனின் மையத்தில் இல்லை. இதை ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஆகவே, தலை நகரத்தை மாற்றுவது என்பது தேவையற்றது என்பதைச் சொல்லி இத்தோடு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. பி. ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தமைமையிடப் புணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மக்களாட்சி முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்கள் நலன் கருதி போடும் திட்டங்களை நிறைவேற்றும் மாபெரும் பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கிறது. சுதந்திரம்





கிடைத்து 35 ஆண்டுகள் ஆகியும் நாம் விரும்பிய நாட்டு முன்னேற்றம், வளர்ச்சி இல்லாமைக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், அவைகளில் அதிகாரிகளின் மெத்தனப் போக்கும் ஒரு காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகிறேன். நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. நாட்டு வளர்ச்சியில் அக்கரை கொண்டு அரசு போடும் திட்டங்களை விரைவில் நிறைவேற்ற ஒத்துழைக்கும் நல்ல மனம் படைத்த அதிகாரிகள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் அதற்கு மாறாக இருக்கிறார்கள். மக்களின் வரிப் பணத்தில் சம்பளம் பெறும் அதிகாரிகள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற கடமையுணர்வோடும், நாடு வளர வேண்டும் என்கிற நாட்டுப் பற்று உணர்வோடும் பணியாற்ற வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் வாக்களித்த தொகுதி மக்களின் தேவைகளை, பொதுத் தேவைகளை குறிப்பிட்ட 5 வருட காலத்தில் விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வோடு வேகமாக செயல்பட்டாலும் அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுவதால் பல நல்ல பொதுக் காரியங்கள் தாமதம் ஆகிற நிலையில் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர்கள் எதைச் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. மக்களின் எண்ணங்களை மக்களுக்குத் தேவையான நல்ல பொதுக் காரியங்களை அதிகாரிகளிடம் சொல்லும் போது அதை ஏற்க மறுப்பதும், வேண்டுமென்றே தாமதப் படுத்துவதும் அதிகாரிகள் மக்கள் விருப்பத்தையும் மக்களாட்சி முறைகளையும் ஏற்க மறுக்கிறார்கள் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அது நாட்டு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

விரைவான முன்னேற்றத்தை, வளர்ச்சியை காலத்திற்கொவ்வாத ஆங்கிலேய காலத்து நடை முறைகளை படிப்படியாக மாற்றி அமைப்பது அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். ரெவின்யூ போர்டை ஒழித்ததும், மக்களையும், அதிகாரிகளையும் மதிக்காமல் தாங்கள் தான் ராஜாக்கள் என்று செய்யப்பட்ட பகுதிநேர கிராம அதிகாரிகளை துணிவோடு நீக்கி, முழுநேர கிராமநிர்வாகஅதிகாரிகளை நியமிக்க திட்டமிட்டு இருப்பதும் இதய தெய்வம் புரட்சித் தலைவரின் நிர்வாக சீர்திருத்த கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

நிர்வாகம் திறமையாகவும், செம்மையாகவும் நடக்க மாவட்டங்களை, வட்டங்களை பிரித்து பரப்பை சிறிதாக்க வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில் தான் பெரியார் மாவட்டம்

ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மாவட்ட நிர்வாகத்தைப் பொ
வரையில் இப்பொழுது செயல்பட்டு வரும் டி.டி.சி.
மாவட்ட வளர்ச்சி மன்றம் பயனுள்ள வலுவுள்ள அமை
மாற்றப்பட வேண்டும்.

(முற்பகல் 11—10)

மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மா
களை எடுக்கின்ற முடிவுகளை அரசு மறுக்காமல் ஏற்று
வேற்றினால்தான் மாவட்டம் வேகமான வளர்ச்சி
பெற முடியும். மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு
அமைச்சரோ அல்லது யாராவது ஒரு மக்கள் பிரதிநிதி
தலைமை தாங்கி நடத்திடவும், அங்கே எல்லாத் து
அதிகாரிகளும் இருப்பதால் அவ்வப்போது எழுகின்ற பெ
முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைப் பற்றியும்
கனவே அறிவிக்கப்பட்ட பொருள்களோடு சேர்த்து வி
திக்க தேவையான மாற்றத்தை செய்ய வேண்டுமென்
இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட அளவில் வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க மாவட்
வளர்ச்சி அதிகாரி ஒருவரை நியமித்தால் வளர்ச்சிப் பணிக
செம்மையாகவும் விரைவாகவும் நடக்க வாய்ப்பாக இருக்கு
என நான் கருதுகிறேன். மாவட்ட நிர்வாகத்தில் ஒவ்வொ
துறையிலும் எழும் சட்டப் பிரச்சினைகளை ஆய்ந்து விரைந்
முடிவுகளை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு த
யாக ஒரு சட்ட ஆலோசகரை நியமனம் செய்தால் நன்றா
இருக்கும் என கருதுகிறேன்.

இப்பொழுது ஒவ்வொரு வட்டத்திற்கும் மூன்று அல்லது
நான்கு ஒன்றியங்கள் இருக்கின்றன. வட்ட நிர்வாகம்
திறமையாகவும் செம்மையாகவும் இருக்க ஒவ்வொரு ஒன்றி
யத்திற்கும் ஒரு வட்டாட்சியரை நியமித்தால் நன்றாக இருக்கும்
என்று நான் கருதுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வட்டாட்சியருக்கும்
இடையுள்ள கோட்டாட்சித் தலைவர் பதவி கூட தேவை
யில்லை என்று நான் கருதுகிறேன். இப்பொழுது இருக்கும்
வட்டாட்சித் தலைவருக்கு நாளுக்கு நாள் வேலைப்பளு
அதிகரித்துக்கொண்டு வருகிறது. வழக்குகளை விசாரிக்கும்
நீதிமன்ற வேலைகளை வட்டாட்சித் தலைவரிடமிருந்து
எடுத்துவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.



குத்தகை பதிவேடு, நியாய குத்தகை நிர்ணயம் செய்தல் போன்ற வழக்குகளை வட்டாட்சியர் நடத்தி முடித்த பிறகு மேல்முறையீடு செய்வதாய் இருந்தால் ஆர்.டி.ஓ. விடம் செல்ல வேண்டும். இவர்கள் முறையாக சட்டம் படிக்காததால் கோர்ட்டு நடைமுறைகள் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒருசிலர் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாகக் கூட இருக்கிறார்கள். சாட்சியங்களை வகைப்படுத்தி ஆய்வு செய்யும் திறன் (எவிடன்ஸ் அப்ரிசியேஷன்) அவர்களுக்கு இல்லாததால் ஏழை எளிய குத்தகைதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதி கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட அதிகாரிகளை செல்வாக்கு மிக்க நிலச்சுவாந்தார்கள் பயன்படுத்திக்கொள்ளும் அபாயமும் இருக்கிறது. ஆகவே வழக்குகளை விசாரித்து தீர்பளிக்கும் அதிகாரத்தை வட்டாட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர்களிடமிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலன் கருதி அரசு அறிவிக்கும் திட்டங்களை கிராம மட்டத்தில் மக்களுக்கு விளம்பரத்தின் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும். ஏழை எளிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு கடன் உதவி, தற்காலிக கடன் போன்ற சலுகைகள் கிராமத்தில் ஏழை எளிய மக்களிடத்தில் விளம்பரம் செய்து அறிமுகப்படுத்தப்படாத காரணத்தால் அத்திட்டங்களின் முழுப்பலன் ஏழை எளிய மக்களுக்கு கிடைக்காமல் விபரம்தெரிந்த பணக்காரர்கள் ஏழை மக்களிடம் கைநாட்டு பெற்று, கடன் தொகையைப் பெற்று, அதன் பலனை அனுபவித்து வரும் பரிதாப நிலையுள்ளது. ஆகவே மக்கள் தொடர்பு துறை மூலம் அரசுத்திட்டங்களை கிராம மட்டத்தில் ஏழை மக்களிடம் தெளிவாக விளம்பரம் செய்ய வேண்டும்.

நிர்வாகத்தில் உள்ள சில நடைமுறைச் சிக்கலை நீக்கினால் ஏழை மக்கள் சின்ன சின்ன காரியங்களுக்கு—உதாரணமாக அடங்கல் நகல் பெறுவது, சொத்து சம்பந்தமான சான்றிதழ் பெறுவது (சால்வன்சி சர்டிபிகேட்) போன்றவைகளுக்கு மாதக்கணக்கில் கூட அரசு அலுவலகங்களில் அலைந்து கொண்டு இருப்பதை தடுக்க முடியும்.

மக்கள் குறை தீர்க்கும் நாளில் பெறும் மனுக்களை பதிவு செய்து, குறித்த காலத்தில் மனுவில் கண்ட பிரச்சினைகளைத் தீர்க்க தற்சமயம் இருந்துவரும் நடைமுறைச் சிக்களை நீக்க தேவையான மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது செயல்பட்டு வரும் டி.டி.சி. என்கிற மாவட்ட வளர்ச்சி மன்றம் பயன்லுள்ள வலுவுள்ள அமைப்பாக மாற்றப்பட வேண்டும்.

(முற்பகல் 11–10)

மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங் களை எடுக்கின்ற முடிவுகளை அரசு மறுக்காமல் ஏற்று நிறை வேற்றினால்தான் மாவட்டம் வேகமான வளர்ச்சியைத் பெற முடியும். மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு ஒரு அமைச்சரோ அல்லது யாராவது ஒரு மக்கள் பிரதிநிதியோ தலைமை தாங்கி நடத்திடவும், அங்கே எல்லாத் துறை அதிகாரிகளும் இருப்பதால் அவ்வப்போது எழுகின்ற பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைப் பற்றியும் ஏற் கனவே அறிவிக்கப்பட்ட பொருள்களோடு சேர்த்து விவா திக்க தேவையான மாற்றத்தை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட அளவில் வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க மாவட்ட வளர்ச்சி அதிகாரி ஒருவரை நியமித்தால் வளர்ச்சிப் பணிகள் செம்மையாகவும் விரைவாகவும் நடக்க வாய்ப்பாக இருக்கும் என நான் கருதுகிறேன். மாவட்ட நிர்வாகத்தில் ஒவ்வொரு துறையிலும் எழும் சட்டப் பிரச்சினைகளை ஆய்ந்து விரைந்து முடிவுகளை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தனி யாக ஒரு சட்ட ஆலோசகரை நியமனம் செய்தால் நன்றாக இருக்கும் என கருதுகிறேன்.

இப்பொழுது ஒவ்வொரு வட்டத்திற்கும் மூன்று அல்லது நான்கு ஒன்றியங்கள் இருக்கின்றன. வட்ட நிர்வாகம் திறமையாகவும் செம்மையாகவும் இருக்க ஒவ்வொரு ஒன்றி யத்திற்கும் ஒரு வட்டாட்சியரை நியமித்தால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வட்டாட்சியருக்கும் இடையுள்ள கோட்டாட்சித் தலைவர் பதவி கூட தேவை யில்லை என்று நான் கருதுகிறேன். இப்பொழுது இருக்கும் வட்டாட்சித் தலைவருக்கு நாளுக்கு நாள் வேலைப்பளு அதிகரித்துக்கொண்டு வருகிறது. வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்ற வேலைகளை வட்டாட்சித் தலைவரிடமிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.





குத்தகை பதிவேடு, நியாய குத்தகை நிர்ணயம் செய்தல் போன்ற வழக்குகளை வட்டாட்சியர் நடத்தி முடித்த பிறகு மேல்முறையீடு செய்வதாய் இருந்தால் ஆர்.டி.ஓ. விடம் செல்ல வேண்டும். இவர்கள் முறையாக சட்டம் படிக்காத தால் கோர்ட்டு நடைமுறைகள் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒருசிலர் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாகக் கூட இருக் கிறார்கள். சாட்சியங்களை வகைப்படுத்தி ஆய்வு செய்யும் திறன் (எவிடன்ஸ் அப்ரிசியேஷன்) அவர்களுக்கு இல்லாததால் ஏழை எளிய குத்தகைதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதி கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட அதிகாரிகளை செல் வாக்கு மிக்க நிலச்சுவாந்தார்கள் பயன்படுத்திக்கொள்ளும் அபாயமும் இருக்கிறது. ஆகவே வழக்குகளை விசாரித்து தீர்பளிக்கும் அதிகாரத்தை வட்டாட்சித் தலைவர், கோட் டாட்சித் தலைவர்களிடமிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலன் கருதி அரசு அறிவிக்கும் திட்டங்களை கிராம மட்டத்தில் மக்களுக்கு விளம்பரத்தின் மூலம் அறி முகப்படுத்த வேண்டும். ஏழை எளிய மக்களின் பொரு ளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு கடன் உதவி, தற்காலிக கடன் போன்ற சலுகைகள் கிராமத்தில் ஏழை எளிய மக்களிடத் தில் விளம்பரம் செய்து அறிமுகப்படுத்தப்படாத காரணத்தால் அத்திட்டங்களின் முழுப்பலன் ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கா மல் விபரம்தெரிந்த பணக்காரர்கள் ஏழை மக்களிடம் கைநாட்டு பெற்று, கடன் தொகையைப் பெற்று, அதன் பலனை அனுபவித்து வரும் பரிதாப நிலையுள்ளது. ஆகவே மக்கள் தொடர்பு துறை மூலம் அரசுத்திட்டங்களை கிராம மட்டத்தில் ஏழை மக்களிடம் தெளிவாக விளம்பரம் செய்ய வேண்டும்.

நிர்வாகத்தில் உள்ள சில நடைமுறைச் சிக்கலை நீக்கினால் ஏழை மக்கள் சின்ன சின்ன காரியங்களுக்கு—உதாரணமாக அடங் கல் நகல் பெறுவது, சொத்து சம்பந்தமான சான்றிதழ் பெறுவது (சால்வன்சி சர்டிபிகேட்) போன்றவைகளுக்கு மாதக்கணக்கில் கூட அரசு அலுவலகங்களில் அலைந்து கொண்டு இருப்பதை தடுக்க முடியும்.

மக்கள் குறை தீர்க்கும் நாளில் பெறும் மனுக்களை பதிவு செய்து, குறித்த காலத்தில் மனுவில் கண்ட பிரச்சினைகளைத் தீர்க்க தற்சமயம் இருந்துவரும் நடைமுறைச் சிக்களை நீக்க தேவையான மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. பி. ஜி. நாராயணன்) [1983 ஏப்ரல் 12

தலைமைச் செயலகத்தில் அலுவலர்கள் இருக்கையிலிருந்து தேவையில்லாமல் வீணாக வெளியே செல்லக்கூடாது என்பதற்காக வெளியே செல்லும்போது பதிவேட்டில் காரணங்களை பதிந்துவிட்டு செல்ல வேண்டும் என்ற நடைமுறை வரவேற்கக் கூடிய ஒன்றாகும். மேலும் தலைமைச் செயலகத்தில் கோப்புகள் தாமதத்தை தடுக்க சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு துறையைச் சேர்ந்த கோப்புகளும் பொதுத்துறை, சட்டத் துறை, நிதித்துறை ஆகிய துறைகளுக்குத் தவறாமல் செல்வதால் வீண் காலதாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க ஒவ்வொரு துறையிலும் உதாரணமாக பொதுப் பணித் துறை என்று வைத்துக் கொண்டால், இந்தத் துறைக்கு நிதித்துறையிலிருந்து ஒருவரையும் சட்டத் துறையிலிருந்து ஒருவரையும் பொதுத் துறையிலிருந்து ஒருவரையும் போட்டுவிட்டால் பொதுப் பணித் துறை கோப்புகள் வீணாக நிதித்துறை, சட்டத் துறை, பொதுத் துறைகளுக்கு அனுப்பப்பட தேவையில்லை. இப்படி நிர்வாகத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்தால் நிர்வாகம் திறமையாகவும் விரைவாகவும் நடக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று அரசு ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்குகிறது. அந்த துறையைச் சார்ந்த அதிகாரிகள் திட்டம் தீட்டி அரசு அனுமதிக்காக அனுப்புகிறார்கள். சம்பந்தப்பட்ட அரசுத் துறை செயலாளர்களும் பரிந்துரை செய்கிறார்கள். ஆனால் நிதித்துறையிலே இருந்து ஒரு சின்ன 'கொறி' போட்டு திருப்பி அனுப்புகிறார்கள். அந்தத் துறையின் டெக்னிக்கல் ஆபீசர்ஸ் என்று சொல்லக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்த தொழில் நுட்பம் பெற்றவர்கள் போடும் திட்டத்தை நிதித்துறையிலிருந்து திருப்பி அனுப்புவது எந்த விதத்தில் சரி என்று எனக்கு புரியவில்லை. இதனால் பல திட்டங்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படுகிறது. காலதாமதம் ஆகிறது. ஏனென்றால், ஏற்கெனவே அந்தத் துறைக்கு அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. அந்த நிதியிலிருந்து தான் அந்த திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்கிறார்கள் செயலாளர்கள். ஆனால் அதை நிதித் துறையில் சின்ன சின்ன கொரி போட்டு, அதை திருப்பி விடுகிறார் கள். அது எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நல்ல சீர்திருத்தங் களை எல்லாம் நிர்வாகத்திலே செய்தால், நிர்வாகம் திறமை யாகவும், செம்மையாகவும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 12]

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மற்றும் மாவட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பினை தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக பேச்சைத் தொடங்குவதற்கு முன்பாக, நான் தமிழகத்தினுடைய முதலைமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும், நன்றியைத் தெரிவிக்கின்ற வகையில் என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். காரணம், பாரதத்தினுடைய முதல் பிரதமரும் நவ பாரத்தினுடைய சிற்பியுமான ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு சுமார் 10 லட்சம் ரூபாய் அளவிலே பிரம்மாண்டமான ஒரு சிலையை சென்னை மாநகரத்திலே அமைப்பதற்காக, இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2, 3 நாட்களாக சுகவீனமாக இருக்கிறார்கள். அவர்கள் விரைவிலே, குணம் அடைய வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில், நம்முடைய சட்டமன்றம் இங்கே கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ மாத காலமாக நடக்கிறது. இந்த $1\frac{1}{2}$ மாத காலத்தில், ஆளுநர் உரையிலே 1 மணி நேரமும், பட்ஜெட் உரையிலே 1 மணி நேரமும், அதைத்தவிர, கணக்கு எடுத்துப் பார்ப்போமேயானால் சுமார் ஒரு மணி நேரம் தான் ஒட்டு மொத்தமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்திருப்பார்கள் என்ற நிலை இருக்கிறது. (கூச்சல் குழப்பம்).

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எல்லாம் லாபியிலே பேசிக் கொள்ளுங்கள். இங்கே பேச வேண்டாம். அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

* * *

திரு. நா. சுந்தரராஜ் : சரி உங்கள் இஷ்டம் போல் செய்து கொள்ளுங்கள். அடுத்து, சென்ற மாதம் பெங்களூரிலே, மார்ச் 2 ஆம் தேதியன்று நினைக்கிறேன். ஒரு நிருபர்கள் கூட்டத்திலே

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

தமிழக முதல்வர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்களோடு பேசிய நேரத்திலே ஒரு கருத்தைச் சொல்கிறார்கள்.

I feel Jealous of the people of Karnataka for having such an efficient Chief Minister Thiru Ramakrishna Hegde என்று ராமகிருஷ்ண ஹெக்டேயைப் பற்றி சொல்லுகிறார்கள். இதிலே நான் தெரிந்துக் கொள்ள விரும்புவது, கர்நாடக மாநில மக்களைப் பார்த்து ராமகிருஷ்ண ஹெக்டேயை முதல்வராக அடைந்தற்காக நான் பொறாமைப் படுகிறேன் என்று நமது முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்றால், முதலமைச்சரை நான் கேட்க விரும்புகிறேன், அவர்கள் தமிழக மக்களைப் பார்த்து அனுதாபப்படுகிறார்களா?............ (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் தமிழக மக்களைப் பார்த்து அனுதாபப் படவில்லை, அந்த மாநிலத்திற்குப் பக்கத்திலே இருக்கிற, உத்திர பிரதேஷ், பீகார், ராஜஸ்தான் மாநில மக்களைப் பார்த்து அனுதாபப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

(முற்பகல் 11-20)

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இன்னொரு மாநிலத்தின் மக்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதன் அர்த்தம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எந்த கான்டெக்ஸிலே சொல்லப்பட்டது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே 'இப்படிப்பட்ட மாநில முதலைமச்சர்களின் மாநாட்டைக் கூட்டவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால் தேர்தல் நடந்து முடிந்த உடனயே திரு. ஹெக்டே அவர்கள் முந்திக் கொண்டு பெங்களூரிலே இந்த மாநாட்டைக் கூட்டியிருப்பதற்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன், அதற்காக அவர்களைக் கண்டு நான் பொறாமைப்படுகிறேன். அப்படிப்பட்டவரை முதலமைச்சராகத் தேர்தெடுத்தற்காக நான் பொறாமைப்படுகிறேன்'' என்று இவ்வளவையும் சொல்லிவிட்டுத் தான் சொன்னார்களே தவிர வேறல்ல. (குறுக்கீடு) உங்களுடைய பொறாமையை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்.





திரு நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அவ்வளவு பெரிய எபிசியன்ட் சீப் மினிஸ்டர் என்ன செய்திருக்கிறார் தெரியுமா? தமிழ்நாட்டிலே ஓசூரில் புதிதாகத் தொழில் துவங்குவதைத் தடை செய்வதற்கு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் என்ன சொல்கிறார் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்........

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முதலமைச்சராக இருக்கின்ற ஜனதா கட்சியினைச் சேர்ந்த திரு. ஹெக்டே அவர்கள் மட்டுமல்ல, இதற்கு முன்பிருந்த இந்திரா காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த திரு. குண்டுராவ் அவர்களும் ஒரு கடிதம் எழுதினார்கள். இதைப் போல தொழிற் சாலை ஏற்படுத்தினால் பாதிப்பு ஏற்படுகிறது என்று எழுதினார்கள். ஆகவே அவ்வாறு எழுதுகின்றவர்கள் என்ன வேண்டுமானாலும் எழுதலாம். அதைப் பரிசீலிப்பவர்கள் நாம். ஆகவே நாம் எந்த அளவுக்கு அங்கே தொழில்களை உண்டாக்க முடியுமோ அந்த அளவுக்கு உருவாக்குவதற்காக நம்முடைய மாநில அரசினர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது வேறு விவகாரம். ஆகவே ஹெக்டே அவர்கள் மட்டுமல்ல, திரு. குண்டுராவ் அவர்களும் எழுதினார்கள். எனவே இவர் மீது தவறு என்றால் அவர் மீதும் தவறுதான்.

திரு. நா, சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, யார் எழுதினாலும் தவறுதான். அவர் சொல்கிறார்.

They would have to persuade the Tamil Nadu Government to freeze the industrial development at Hosur at present stage. He had alread held a dialogue both with the Government of Tamil Nadu and that Centre in that regard

அப்படி பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடம் இல்லை. தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்கு எங்களுக்கு முழு உரிமை உண்டு, ஆகவே நாங்கள் தொழில்களைத் துவங்குவோம், இதற்கு மத்திய அரசோ அல்லது கர்நாடக அரசோ தலையிடுவதற்கு என்ன உரிமை இருக்கின்றது என்று சொல்வதற்கு ஏன் மாநில அரசு தயக்கம் காட்டுகின்றது என்று.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக பொறுத்தருள வேண்டுகிறேன். ஒரு மாநில முதலமைச்சரோடு இன்னொரு மாநில முதலமைச்சருக்கு கருத்துவேறுபாடு இருந்தாலும்கூட ஒருவரை ஒருவர் மதிக்கின்ற பண்பு வளர்வது நல்லது. ஆந்திராவிலே இருந்த

இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர் திரு. அஞ்சையா அவர்களுக்கு ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. அப்போது அஞ்சையா அவர்களுடைய பண்புகளைப் பற்றியும், அவருடைய குண நலன்களைப் பற்றியும் மிகச் சிறப்பாகத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். எனவே ஒரு மாநில முதலமைச்சர் இன்னொரு மாநில முதலமைச்சரைப் பாராட்டுவதில் தவறு இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் எடுத்துச் சொன்ன பிரச்சினை வேறு. ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஹோசூருக்குப் பக்கத்தில் தமிழகத்திலே ஏராளமான தொழிற்பேட்டைகளைக் கொண்டு வருவதன் காரணத்தால் பெரும்பாலோர் பெங்களூரிலேயே குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே பெங்களூரின் பாப்புலேஷன் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கின்றது. ஆகவே ஹோசூர் பகுதியிலே இனிமேல் புதிதாக தொழிற்சாலைகளைத் துவங்காமல் இருப்பது தான் தங்களுக்கு நல்லது என்று அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதைத் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அதற்காக நாம் தொழிற்சாலைகளைக் குறைத்துவிடப்போவதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று செய்யக்கூடாது என்று சொல்வதற்கு உரிமை அவர்களுக்கு இல்லை. அவர்களும் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கருத்தைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றதா என்றால் ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் நம்முடைய விருப்பப்படி, நம்முடைய தேவைப்படி எங்கெங்கு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டுமோ அந்த முறைப்படி ஆரம்பிக்கவேண்டிய வகையில் திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, அடுத்து நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டுக்குச் செல்லவில்லை. காவேரி நீர் சம்பந்தமாக விவாதிப்பதற்காக பாசனத்துறை அமைச்சரும் செல்லவில்லை. இதற்கிடையிலே இருக்கக்கூடிய மின்சாரத் துறை அமைச்சர் போனார். காவேரி நீர் சம்பந்தமாக பிரச்சினையில் என்ன முடிவை எடுத்தார்கள்? இன்னும் 4 மாதத்திற்குப் பிறகுதான் அடுத்த கூட்டம் நடக்கும் என்று சொன்னார்கள். ஆகஸ்ட் மாதத்தில் கூட்டம் நடக்கும்போது அதனுடைய முடிவு என்ன என்று தெரியாத நிலைமையிலே தமிழகத்திலே காவேரித் தண்ணீரை நம்பி இருக்கக்கூடிய விவசாயிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதைத் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சர் சென்றிருந்தால் இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாகவோ அல்லது





15 நாட்களுக்குள்ளாகவோ இந்தக் கூட்டத்தை நடத்தியோ அல்லது பேச்சுவார்த்தை நடத்தியோ அதில் ஒரு முடிவைக் காண்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள்தான் நடைபெறக்கூடிய கான்பிரன்ஸ் என்று சொல்லப்படக்கூடிய கூட்டங்களுக்குச் செல்ல வேண்டும்.

அடுத்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மாநிலத்தின் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வறட்சி காரணமாகத் தமிழக மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற வருமானமும் போய், வரவேண்டிய வருமானமும் போய் இன்றைக்கு அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது ஒருபுறம். இன்னொரு புறத்தில் செயற்கையாக இந்த அரசாங்கம் பல்வேறு வகையான இன்னல்களை உண்டாக்கி இருக்கின்றது.

இன்று சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் மதுவிலக்கு என்ற பெயராலே, மது விலக்கை ஒத்திவைக்கிறோம் என்ற பெயராலே கொண்டு வந்து அதன் மூலமாக ஆயிரக் கணக்கான இலட்சக் கணக்கானகடைகளைத் துவக்கி அதன் மூலம் மக்களுடைய வருமானங்கள் பூராவும் சாரயக்கடைகள், கள்ளுக் கடைகள் மூலமாக இன்றைக்கு வசதியாக இருக்கக்கூடியவர்கள் மேலும் வசதியாவதற்கும் அதேபோல் வெளி மாநிலங்களில் உள்ளவர்கள் இங்கே பினாமியாக தொழில் நடத்தி அதன் மூலமாக வரும் பணத்தை அவர்கள் வெளி மாநிலத்திற்கு எடுத்துச் சென்று அங்கே தொழில் நடத்த வாய்ப்பாக இன்றைக்கு இந்த அரசாங்கம் வழி செய்து இருக்கிறது.

அடுத்தபடியாக, சினிமாவைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு நடிகர்கள் பெரும் அளவு வருமானம் பெற்று இருந்தால் பரவாயில்லை. வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து சினிமா மூலமாக பல இலட்சக்கணக்கான ரூபாய்களை பெற்று அவர்கள் சொந்த மாநிலத்திற்குச் சென்று அங்கே பல்வேறு தொழில்களை ஆரம்பித்து குடியும் குடித்தனமுமாக இருக்கிறார்கள். இங்கே கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு அங்கே தொழில்களை ஆரம்பிக்கிறார்கள்.

அடுத்து, லாட்டரிச் சீட்டுகள். தமிழ்நாடு அடிக்கும் லாட்டிரிச் சீட்டுகளைவிட வெளி மாநில லாட்டரிச் சீட்டுகள் தான் இங்கே அதிகமாக விற்பனை ஆகிறது. பல்வேறு வெளி மாநிலங்கள் லாட்டரிச் சீட்டுகள், இங்கே மக்களுடைய பணத்தை எல்லாம் கறக்கலாம் என்று நம்பி கோடிக் கணக்கான ரூபாய்க்கான லாட்டரிச் சீட்டுகளை விற்பனைச்

செய்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் என்றால் அதனுடைய அளவே தெரியாது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட அளவு தெரியாது என்று 2, 3 நாட்களுக்கு முன்பு வெளி மாநில சீட்டுகள் எவ்வளவு விற்கிறது என்ற கேள்வி கேட்ட நேரத்தில் அதற்கான புள்ளிவிவரங்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு தமிழ்நாட்டில் வெளி மாநில லாட்டரிச் சீட்டுகள் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு சராசரி மனிதனும் இன்றைக்கு 4 சீட்டுகள், 5 சீட்டுகள் என்று ஒரு நாளைக்கு 10 ரூபாய் சம்பாதிக்கிறான் என்றால் அதில் 5 ரூபாய்க்கு பரிசு சீட்டு வாங்குகிறான். ஆகவே இதைக் கணக்கிட்டு பார்ப்போமானால் மாதம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவிலே தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு தமிழ்நாட்டுப் பணம் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்ல கடமைப்பட்டுள்ளேன். இதை நீங்கள் வளர்த்தீர்களானால் அல்லது நீங்கள் அனுமதிப்பீர்களானால் தொடர்ந்து இதுபோன்ற காரியங்கள் நடந்தால் இன்னும் 2 ஆண்டுகளுக்குப் பின்னால் தமிழ்நாட்டில் பணமே இல்லா நிலைமை—தமிழ்நாட்டு வறட்சியால் மட்டும் அல்ல, பஞ்சத்தால் மட்டும் அல்ல, இருக்கின்ற காசையே இழக்கக்கூடிய நிலைமை தான் ஏற்படும். அரசாங்கம் இதை கட்டுப்படுத்தியாக வேண்டும். ஒன்று, வெளி மாநில சீட்டுகளை தடை செய்யுங்கள். அல்லது அவர்களுக்கு வரியாவது விதியுங்கள். ஒரு சீட்டுக்கு ஒரு காசு என்று வரி போடுங்கள். இந்த மாதிரி வரி போட்டால் இப்போது போட்டு இருக்கிறீர்களே இந்த 26 கோடி ரூபாய் டாக்ஸ்க்கு மேலே இரண்டு மடங்காக 57, 60 கோடி ரூபாய்க்கு மேலே உங்களுக்கு வருமானம் வரும். வெளி மாநில சீட்டுகளுக்கு நுழைவு வரியாக ஒரு சீட்டுக்கு ஒரு காசு வரி போடுங்கள். அப்படி போட்டால் உங்களுக்கு 70 கோடி ரூபாய்க்கு மேலாக வருமானம் வரும். ஆகவே இதைச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினை சமீபத்தில் 3, 4 படங்கள் தமிழகத்தில் வெளியாகியிருக்கின்றன. தண்ணீர் தண்ணீர், ஈநாடு, இது எங்கள் நாடு, அனல்காற்று போன்ற 4 படங்கள் வெளியாகியிருக்கின்றன. அதிலே மைய கருத்து அரசியல்வாதிகள் அனைவரும் அயோக்கியர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் இருக்கிறது. அரசியல்வாதிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல மாட்டேன். மொத்தமாக ஆளுகின்ற கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், எல்லோரும் சுகபோகமாக வாழ்க்கை வாழ்கிறார்கள். ஊழல் செய்து உல்லாசமாக வாழ்கிறார்கள் என்று



மக்கள் சிந்திக்க வேண்டும் என்ற உணர்வோடு இந்தப் படங்கள் இன்றைக்கு வெளி வந்திருக்கின்றன. ஆனால் அந்தப் படங்களை நம் அரசாங்கம் தடை செய்யவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லை. ஆனால் அதேநேரத்தில் மக்கள் மத்தியில் அந்தப் படங்களுக்கு அதிகமான ஆதரவு இருக்கிறது. காரணம் என்ன? இன்றைக்கு எதார்த்தமான நிலைமையை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். ஆகவேதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் தயவு செய்து நீங்கள் அதுபோன்ற படங்களை தடை செய்வதற்கு பதிலாக நாமே சுத்தமானவர்கள் என்பதை மக்கள் முன்னால் நிருபிப்பதற்கான வழியை நீங்கள் செய்ய வேண்டும். அதற்கு நான் ஒரு யோசனையை சொல்ல விரும்புகிறேன். அது எந்த வகையாக இருந்தாலும் சரி, ஒட்டுமொத்தமாக முதலமைச்சரிடமிருந்து சாதாரண சட்டமன்ற உறுப்பினர் வரை—நேற்று கூட பீகார் மாநிலத்திலே ஜெகன்நாத் மிஸ்ரா என்ற முதலமைச்சர் அவர்கள் ஒரு அவசர சட்டம் மூலமாக ஆர்டினஸ் மூலமாக ஒரு சட்டம் நிறைவேற்றி இருக்கிறார்கள். லோக் ஆயுக் என்று சொல்லக்கூடிய அந்த விசாரணை கமிஷன் முன்பாக தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக அந்த முதலமைச்சர் அவர்கள் அதைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே முதலமைச்சர்மீது மட்டும் அல்ல, இங்கே இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய சுத்தமான நிலைமையை மக்கள் மத்தியில் எடுத்துக்காட்டி, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று ஆகவேண்டும். அரசியல்வாதிகள் என்றால் அயோக்கியர்கள் இல்லை என்பதை அவர்கள் மனதில் அழமாகப் பதியக்கூடிய வழியில் நாம் ஒரு அமைப்பை உருவாக்கவேண்டும். உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியின் தலைமையில் 3 நீதிபதிகளைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து ஆண்டுதோறும் நம்முடைய கணக்குகளையும் நம்முடைய சொத்துக்களையும் நம்முடைய பினாமிகள் இருக்குமானால் அதை விசாரணை செய்து அதன் மூலமாக முழு ரிப்போட்டை இந்த அவைக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கின்ற வகையில் நீங்கள் காரியங்களை ஆற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

அதைப்போலவே இன்றைக்கு சென்னை நகருக்கு, தமிழ்நாட்டுக்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடுவதற்குகாக நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கடந்த மாதம் 28 ஆம் தேதி வந்தார்கள். அதனை பல பேர் ஆதரித்தார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் அதைக் கிண்டலும் கேலியும் செய்தார்கள். 6 மணி நேரத்தில் தமிழ்நாட்டினுடைய வறட்சியை பார்க்க முடியுமா?

என்ன சாதித்து விடமுடியும் என்று கேட்டார்கள். ஆனால் திருமதி இந்திரா காந்தி போனதற்குப் பின்னால்தான் பாரதப் பிரதமரால் என்ன சாதிக்கமுடியும் என்பதை பாரத மக்கள், தமிழ்நாட்டு மக்கள், சென்னை நகர மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். வறட்சியின் பெயரால் 72 கோடி ரூபாய் வழங்கப் பட்டிருக்கிறது. 49 கோடி ரூபாய் தான் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு 72 கோடி ரூபாய் அதற்கு மேலும் கிடைக்கும். அது மட்டுமல்ல, நினைத்துக்கூட பார்க்காத அளவில் ரயில்வே வேகன்கள் மூலமாக, 30 இலட்சம் லிட்டர் தண்ணீர் கப்பல் மூலமாகத் தண்ணீர், நெய்வேலியிலிருந்து தண்ணீர் வருகிறது. ஏதோ அரசியல் பண்ணவேண்டுமென்ற நோக்கமில்லை. பாரதப் பிரதமர் என்ற முறையில் இந்த நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற முறையில் இந்திரா காந்தி அவர்களும் உங்களைப் போல தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் தான். அவருக்கும் இந்த நாட்டின்மீது, இந்த நாட்டு மக்கள்மீது அக்கறை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கான வகையிலே இந்தத் காரியங்களை செய்திருக்கிறார்கள். என்.எல்.சி. மூலமாக 1.8 இலட்சம் காலன் தண்ணீர் ஒரு நாளைக்கு சென்னை நகரத்திற்கு கொண்டுவரப்பட்டு பயன்படுத்துகின்ற முறையிலே—வீராணம் திட்டத்திற்கு போடப்பட்ட குழாய்கள் இருக்கின்றன, வெட்டப் பட்ட குழிகள் இருக்கின்றன. ஆகவே இதற்காக என்று புதிதாக எந்தத் திட்டமும் போடவேண்டாம், உடனடியாக 1, 2 மாதங்களுக்குள்ளாக அந்தக் குழாய்களைப் பதித்தாலே என்.எல்.சி.மூலமாக தண்ணீர் சென்னைக்குகொண்டுவரமுடியும். ஆகவே அரசாங்கம் போர்க்கால அடிப்படையிலே இதிலே ஈடுபட்டால் சென்னை நகர மக்களுக்கு விடிவுகாலம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்தைப் போட்டாலும் அல்லது வேறு எந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிலே போட்டாலும் தண்ணீர் எங்கேயிருந்து வரும் என்பது புரியாத புதிராக இருக்கிறது. மழை பெய்தால்தான், தண்ணீர் என்பதுதான் பிரச்சினையே தவிர, வீராணம் திட்டம் போட்டாலும் தண்ணீர் எப்படி வரும் ?

**திரு. நா. சுந்தரராஜ் :** வீராணம் திட்டம்தான் உங்களுக்குப் பிடிக்காதே, அதுதிராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்தது. நெய்வேலியிலிருந்து தண்ணீர்..........

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வீராணம் திட்டத்தை நிறுத்தினவர்களே மத்திய அரசு தான், திருமதி இந்திரா காந்தி தான்.





**திரு. நா. சுந்தரராஜ் :** நீங்கள் ஆரம்பியுங்களேன், நாங்கள் ஆட்சேபிக்கவில்லை.

**திரு. க. அன்பழகன் :** ஒரு நிமிடத்திற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் லிட்டர் தண்ணீர் நெய்வேலி சுரங்க வேலையிலிருந்து இறைக்கப்படுவதாகவும், ஒரு நிமிடத்திற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் லிட்டர். அந்தத்தண்ணீரை எந்தவிதமான ஏற்பாடு செய்தாவது சென்னைக்குக் கொண்டுபோவதாக இருந்தாலும் என்.எல்.சி. நிர்வாகம் ஒத்துழைக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் தண்ணீர் இப்போது வீணாகிறது என்ற கருத்துப்பட அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொள்ள வேறு எந்த வாய்ப்பை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று தெரிவித்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வறட்சி என்பது தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. நெய்வேலியிலிருந்து தண்ணீரை எடுத்துக்கொண்டு இங்கே வருகிற வரைக்கும் வழியிலே வறட்சி இல்லாத பகுதிகள் போலவும், அங்கேயெல்லாம் தண்ணீர் நிறைய கிடைத்துக்கொண்டிருப்பது போலவும், நேராக சென்னைக்குக் கொண்டு வந்தால் அங்கே இருக்கிற பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நினைப்பது தவறு. அது மட்டுமல்ல, அப்படி ஒரு முயற்சியை நாம் மேற்கொண்டாலும் வழியிலே இருக்கிற மக்கள் நிச்சயமாக அதை எதிர்த்துப் போராடுவார்கள். அது மட்டுமல்ல, வீராணம் திட்டம் நெய்வேலித் தண்ணீரை நம்பிப் போட்ட திட்டமல்ல, அகவே ஒன்றுக்கு ஒன்றை இணைத்து நாம் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தக்கூடாது.

**திரு. க. அன்பழகன் :** வீராணம் திட்டத்தின் பயனைப்பற்றியோ அல்லது அதைநிறைவேற்றுகிற முறையைபற்றியோ நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிற அக்கறை பற்றியோ முதல் கேள்வியல்ல. நெய்வேலியிலே இப்போது கிடைக்கிற தண்ணீரை சென்னைக்கு—கோதாவரியிலிருந்து. கிருஷ்ணாவிலிருந்து ஏறத்தாழ 15 இலட்சம் லிட்டர் கொண்டு வருவதுபற்றி சொல்லப்படுவதுபோல் அதைவிட இன்னும் அதிகமாக தற்காலிகத் தேவைக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறபோது அதைப் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது இரயில்வேக்கு பல்வேறு வகைகளுக்கு 15 இலட்சம் காலன் தண்ணீர் தினமும் தேவைப்படுகிறது என்றும் அதேபோல் துறைமுகத்திற்கும் தேவைப்படுகிறது என்றும் அதைக்கூட நாம் தான் வழங்கிக்கொண்டு வருகிறோம். ஆனாலும்கூட அவர்களுக்குப்

போதுமான அளவுக்கு வரவில்லை என்பதற்காக ரயில்வே இலாகா வேகன்கள் மூலமாகத் தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது, அதை வரவேற்கிறோம். அந்த வகையிலே அவர்களுடைய தேவையை அவர்களே நிறைவேற்றிக் கொண்டால் மிச்சப்படுகிற தண்ணீரை சென்னை நகரத்திற்குப் பயன்படும். அந்த முறையிலே கப்பல் மூலமாக வருகிற தண்ணீர் ஹார்பரின் தேவையை நிறைவேற்றலாம்.

இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல செய்தித் தாள்களில் நானும்கூட பார்த்தேன். நெய்வேலியிலிருந்து இறைக்கிற தண்ணீரை ரெயில்வே வேகன்களில் சென்னைக்கு அனுப்புவதற்கு கூட அங்கே இருக்கிற அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அதற்கு மத்திய அரசின் ரெயில்வே இலாக்கா உதவி செய்யுமேயானால் வாகன்கள் மூலமாக சென்னைக்கு அதை கொண்டு வந்து சேர்த்து இங்கே இருக்கிற தட்டுப்பாட்டை ஓரளவிற்கு நீக்க முயற்சி செய்ய முடியும். அந்தவகையிலே மாநில அரசு மத்திய அரசிடம், ரெயில்வே இலாக்காவிடம் பேசிக்கொண்டிருக்கிறது. அந்த கருத்தை எடுத்துச்சொல்லியிருக்கிறீர்கள். அப்படி பயன்படுகிற சூழ்நிலை எந்தெந்தவகைகளில் வருகிறதோ, அந்தந்த வகைகளில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை தான் மாநில அரசும் கொண்டிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : அதைப்போல ஆயில் நேச்சுரல் கேஸ் கமிஷன் என்ற நிறுவனம் தமிழ்நாட்டிலே பல பகுதிகளில் எண்ணெய் வளம் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்து, கிட்டதட்ட 3,000, 4,000 அடிகள் கீழே போர்-வெல்கள் போட்டிருக்கிறார்கள். அதற்கு பின்னால் அந்த பகுதிகளில் எண்ணெய் வளம் இல்லையென்று தெரிந்து அவற்றையெல்லாம் பூட்டிவிட்டு போய் விட்டார்கள். அரசாங்கம் மத்திய அரசோடு, அந்த இலாக்காவோடு பேச்சுவார்த்தை நடத்தி அந்த போர்-வெல்களிலிருந்து தண்ணீர் எடுக்க வாய்ப்பிருக்கிறது. இராச்சத மோட்டார்களை வைத்து தண்ணீர் எடுத்து மக்களுக்கு தண்ணீரை விநியோகம் செய்யலாம். ஆகவே அரசாங்கம் உடனடியாக அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ரெயில்வே நிர்வாகம் இப்போது டீசலிசேஷன் செய்து வருவதால் பெரிய பெரிய கிணறுகளில் இருக்கிற தண்ணீர் பயனில்லாமல் இருந்து வருகிறது. கிராமங்களில், நகரங்களில் இருக்கிற பொது மக்களுக்கு அந்த பெரிய பெரிய கிணறுகளில் இருக்கிற தண்ணீரை விநியோகம் செய்வதற்கு நம்முடைய



அரசு, மத்திய அரசாங்கத்திடம், ரெயில்வே இலாக்காவிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே நம்முடைய சீப் செகரட்டரி திரவியம் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனவரி மாதம் 24 ஆம் தேதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதற்கு பின்னால் இன்றுவரையில் செகன்ட் செகரட்டரியாக இருக்கிற திரு. சொக்கலிங்கம் அவர்கள் அந்த பொறுப்பை ஏற்றிருக்கிறார். தமிழ்நாட்டில் சீப் செகரட்டரி அந்தஸ்த்தில், ரிடையர் ஆனவர்கள் இரண்டு பேர்களை தவிர ஆறு பேர்கள் இருக்கிறார்கள். அதிலே ஒருவருக்காவது அந்த பொறுப்பைக் கொடுத்து ஆக்டிங் சீப் செகரட்டரியாக வைப்பீர்களானால் அது நன்றாக இருக்கும். ஏனென்றால் திரு. சொக்கலிங்கம் அவர்கள் 12 வது இடத்திலே இருக்கிற ஒரு ஜூனியர் அதிகாரி. சீப் செகரட்டரி அந்தஸ்த்தில் இருக்கக்கூடியவர் எங்கோ ஒரு இலாக்காவில் இருப்பார். 12-வது இடத்திலே இருக்கிறவர் சி. எஸ். பதவியை வகிக்கிற போது எப்படி நிர்வாகத்தை சிறப்பாக நடத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் ? அதிகாரிகள் மத்தியில் மனக்கசப்பு ஏற்படாதா ? சங்கடங்கள் ஏற்படாதா ? எனக்கும் சி. எஸ்.-க்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை, அவர் யார் என்று கூட எனக்கு தெரியாது. ஆனால் இருக்கிற நிலைமைகளைச் சொல்கிறேன். அதிகாரிகள் மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலையை உண்டாக்காதீர்கள் என்று சொல்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் எலெக்ட்ரிசிட்டி போர்டு நல்ல முறையில் செயல்பட ஆரம்பித்திருக்கிறது. இப்போது ஒரு நல்ல பங்ஷனிங், ஒரு பிராப்பர் டைரக்ஷன்ஸ் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது எலக்ட்ரிசிடி போர்டில்தான். அதனுடைய சேர்மேனாக ஒரு புதியவர் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் பொறுப்பேற்றதற்கு பின்னால் புதிய வழிவகைகளை உண்டாக்கி, பல நல்ல நடைமுறைகளை கொண்டு வந்து, நிர்வாகத்தில் ஒரு நல்ல நிலைமை உருவாக்கியிருக்கிறார். மக்கள் மத்தியிலே இருக்கிற பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த அதிகாரியை தயவுசெய்து மாற்றி விடாதீர்கள். அவர் தொடர்ந்து பணியாற்றி எலெக்ட்ரிசிட்டி போர்டு செம்மையாக நடப்பதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எம்.எல்.ஏ.,க்களை பொறுத்தவரையில் ஒரு பிரச்சினை இருந்து வருகிறது. அமைச்சர்களுக்கு கடிதம் எழுதினால் யாரும் அதைப்பற்றி சட்டையே செய்வதில்லை. சட்டமன்ற உறுப்

(திரு. நா. சுந்தரராஜ்) [1983 ஏப்ரல் 12

பினர்கள் என்றாலே ஏதோ ஒரு சாதாரண பிராணியாக கருது கிறார்கள். அவர்களை மதித்து அமைச்சர்கள் பதில் எழுது வதில்லை. ஆனால் மத்திய அரசாங்கத்திலே இருக்கிற அமைச் சர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், நாடாளு மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், யார் கடிதம் எழுதினா லும், சம்பந்தப்பட்ட துறைகளில் இன்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்று சொல்லி, 10 நாட்களுக்குள்ளாக பதில் வரும். அது ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கிறது. சென்ற முறை மட்டுமல்ல, கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக இது குறித்து சொல்லி வருகிறேன். இதுவரையில் எந்த நடவடிக்கை யும் மேற்கொள்ளப்படவில்லை. தயவுசெய்து இதுகுறித்து ஒரு நல்ல பழக்கத்தை கொண்டு வாருங்கள். சட்டமன்ற உறுப்பினர் களாகிய நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். நாங்கள் ஓ.சி.யில் வந்துவிடவில்லை. உறுப்பினர்களுக்கு பதில் எழுதுகிற நல்ல வழக்கத்தை கொண்டு வாருங்கள், கடைபிடி யுங்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் அரசு நிகழ்ச்சிகள் நடைபெற்றால், ஆளுங்கட்சி உறுப்பினராக இருந் தால் அவர் தலைமை தாங்குவார். எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தால் அவர் எட்டாவது இடத்திலே பேச்சாளராக இருப் பார். மதிப்பிற்குரிய இளையபெருமாள் அவர்கள் எங்களுடைய தலைவர் ; தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்தவர். அவருடைய தொகுதியில் ஒரு அரசு நிகழ்ச்சி நடைபெற்றது. அவருடைய பெயரே இல்லை. அங்கே ஒரு தாலுக்கா அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது. அதில் அவருடைய பெயரே இல்லை. தயவுசெய்து இதுபற்றி நீங்கள் சிந்திக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்களுக்காகத்தான் உழைக்கிறோம்.

(முற்பகல் 11–40).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஓசியில் வரவில்லையென் றார்கள். அப்படி என்றால் உறுப்பினர் காசு கொடுத்து வந்தார் என்று அர்த்தமா ?

திரு. நா. சுந்தரராஜ் : நான் யாரையாவது சொன்னால் பெரும் சங்கடம் வந்துவிடும். நாங்களும் மக்களாலே தேர்ந் தெடுக்கப்பட்டு வந்தோம், சும்மா வரவில்லையென்று சொன் னோம். ரோடுலே இருக்கக்கூடிய கல்லைப் பார்த்துக் கூட [illegible] ஓட்டு வாங்கி வந்தோம்.



1983 ஏப்ரல் 21] (திரு. நா. சுந்தரராஜ்)

இன்றைக்கு தமிழ்நாட்டில் மாவட்ட நிர்வாகம் இருக்கிற நிலையைப் பார்த்தால், அது பிரிக்கப்பட்டது, ஹைதர்அலி காலத் தில், வெள்ளைக்காரன் காலத்தில் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது, தமிழ்நாடு பூராவும் ஒட்டுமொத்தமாக ' ரீ ஆர் கனைசேஷன் ஆப் டிஸ்டிரிக்ட்ஸ் ' என்ற முறையிலே, புதிதாக, நகரங்கள், கிராமங்கள், ரெவின்யூ கிராமங்கள், தாலுக்காக்கள், ரெவின்யூ டிவிஷன்கள், மாவட்டங்கள் என்ற முறையிலே பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமெறால்.... (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிப்பதை நிறைய பிரிக்க லாம். மாவட்டம் பூராவும் நிறையப் பிரிக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற பொழுது ஆதம்பாக்கத்தினுடைய 19-வது கூட்டுறவு வங்கிக் கிளை திறந்தபொழுது யானைக்கு ரூபாய் 20,000 என்று கணக்கு எழுதப்பட்டதாகச் சொன்னார்கள். அது குறித்து, அதிகாரிகளிடம் விசாரித்தேன். யானைக்கு ரூ. 100 அவர்கள் வாடகை கொடுத்திருக்கிறார்கள் ஒட்டுமொத்த மாக, அந்த நிகழ்ச்சிக்கு ரூ 3,712 செலவாகியிருக்கிறது என்று அந்தக் கூட்டுறவு வங்கியினுடைய அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

திரு. அ. ரகுமான்கான் : நான் எழுப்பிய குற்றச்சாட்டுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அதிகாரியை விசாரித்து தகவல் சொல்கிறார். நீங்கள் கேட்டதற்கு அவர் பதில் சொல்லியாகிவிட்டது. அதைத் தவறு என்று நான் சொல்ல முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் அதிகாரியை விசாரித்து சபைக்குச் சொல்கிறார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நீங்கள் சொல்வதை தவறு என்று சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டுவிட்டுப் பிறகு சொல்லுங்கள். மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரியிடமிருந்து பெற்ற தகவலைச் சொல்கிறார். அந்த ரெக்கார்டுகளை அவர்கள் சபை யிலே வைத்து பரிசீலிக்கலாம். எந்த அதிகாரிமீது குற்றச்சாட்டு சொன்னேனோ, அந்த அதிகாரியிடமிருந்தே தகவலைப் பெற்று, அமைச்சர் சொல்கிறார். சம்பந்தப்பட்ட டாக்குமெண்டுகளை வாங்கி அவர் பரிசீலிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சென்னையிலே இருக்கிற மைய கூட்டுறவினுடைய ரெக்கார்டுகளை ஆய்ந்துதான் இதைக் குறிப்பிடுமாறு—மற்றொரு அதிகாரியை அங்கே அனுப்பினேன்—அந்த அடிப்படையில்தான் அவர்கள் தகவலை தந்திருக்கிறார்கள். யானைக்கு ரூ. 100 என்றும், சேருக்கு ரூ. 765 என்றும், லைட் அன்ட் மைக் ரூ. 505 என்றும், இன்விடேஷனுக்கு ரூ. 170 என்றும், ரேஃப்ரஷ்மென்ட்ஸ் ரூ. 852 ஆக ரூ. 3,712 என கணக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் வேறு ஆதாரங்களைத் தருவார்களானால், கண்டிப்பாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது. நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவருடைய சார்பில் இன்றைய தினம் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை ஒரு சிலவற்றை இங்கே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். திட்டங்களுடைய பயன்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால் நிர்வாகத்திலே தேவையான சீர்திருத்தங்களைச் செய்வது அவசியம் என்கிற உண்மையை இன்றைய தினம் நாம் அனுபவ ரீதியாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

பேரறிஞர் அண்ணா வழியில் புரட்சித் தலைவர் அவர்கள் இன்று பல்வேறு சீர்திருத்தங்களை நிருவாகத்திலே செய்து கொண்டு வருகிறார்கள். நிருவாக இயந்திரத்தை இயக்குபவர்கள் இன்றையதினம் அமைச்சர்களாக இருந்தாலும், இன்றைக்கு பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள் அதற்கேற்ப இயங்குபவர்களாக இருக்கவேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, ஆட்சியாளர்களுடைய எண்ணங்களைச் செயல்படுத்தபடுபவர்களாக இன்றைய அதிகாரிகள் இருக்கவேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வெறும் அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றித்தான் சிந்திப்பான் என்று சொல்வார்கள். ஆனால், ஒரு அரசியல் ஞானி அடுத்த தலைமுறையைப் பற்றி தன்னுடைய சிந்தனையை ஓட்டுவான் என்று ஒரு பழமொழி சொல்வார்க்ள். அதுபோல் இன்றையதினம் தமிழக முதல்வராகப் பொறுப்பிலே இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காமல், அடுத்த தலை முறையினுடைய நல்வாழ்வுக்கு இன்றைக்கு



நல்ல பல திட்டங்களைத் தீட்ட செயல்படுத்தி வருகிறார்கள். எனவே, அவர்கள் செய்திருக்கிற சீர்திருத்தங்களும் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிற சீர்திருத்தங்களும் அதை உறுதிப்படுத்துவதாக இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள், நிர்வாகத்திலே ஏதோ சீனியாரிட்டி ஓவர்லுக் செய்யப்பட்டிருப்பதாக சொன்னார்கள். காங்கிரஸ் நண்பர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவதெல்லாம் இன்றையதினம் மத்திய அரசாங்கத்திலே பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எத்தனையோ பேர்களை விட்டுவிட்டு, ஓவர்லுக் செய்து எத்தனை பேர்களை நியமித்து இருக்கிறார்கள் என்ற விவரங்களை பட்டியலாகப் போட்டுக் காட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரே அப்பாயின்ட்மென்ட் போன்ற நிலைமைகளில் கூட நீதித் துறையிலேயே ஓவர்லுக் செய்த நிலைமைகளையெல்லாம் எடுத்துக் காட்டாக எடுத்து வைக்க விரும்புகிறேன்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், மத்தியிலே இருக்கின்ற அவர்கள் சொல்லுகின்ற அதே தத்துவம் இங்கே மட்டும் பொருந்தாதா என்ற கேள்வியை அவர்களின் மேலான கவனத்திற்கு வைப்பதற்கு நான் விரும்புகிறேன. அவ்வாறு அவர்கள் செய்கின்றபொழுது, ஜூனியராக இருக்கின்ற அதிகாரிகள் நிர்வாகத் திறமை படைத்தவர்கள் என்ற காரணத்தை அவர்கள் சொல்லுகின்றபோது, அந்தக் காரணமும், விளக்கமும் இங்கேயும் பொருந்துவதாக அமையும் என்பதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

மாவட்ட நிர்வாகத்தை பொறுத்தவரையில் இன்றைய தினம் வருவாய்த் துறையும், வளர்ச்சித் துறையும் இரண்டு கண்களாக இருந்து வருகின்றன. இந்த இரண்டு துறைகளும் மக்களின் நலன்களுக்காக வெவ்வேறு வகைகளிலே இருந்து செயல்பட்டாலும்கூட, இன்றைக்குள்ள நிர்வாக அமைப்பிலே ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்கின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. இன்றைக்கிருக்கின்ற நிர்வாக அமைப்பின் காரணமாக அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக நிர்வாகத்திலே தேக்கம் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை நாம் அனுபவ ரீதியாக அறிந்திருக்கிறோம். எப்படி இரண்டு கண்கள் ஒரே நேரத்தில் இரண்டு காட்சிகளைக் காண முடியாதோ, அப்படி ஒரே பிரச்சனையில் இரண்டு துறையினரும் வெவ்வேறான முடிவுகளை எடுப்பது பொதுமக்களின் நலன்களுக்கு உகந்ததாக அமையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்தவரையில் நிலத்தையும், நீரையும் அடிப்படையாகக் கொண்டு அந்தத் துறை இயங்கி வருகிறது. ஆனால் இன்றைய தினம் நிலமும நீரும் வருவாய்த் துறையின் அதிகாரத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இரண்டு துறைகளும் ஒரே அதிகாரத்தில் செயல்படும் நேரத்தில் பல நேரங்களில் மோதல்கள் ஏற்படுகின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு புறம் போக்கு நிலத்திலே சாலைகள் அமைக்க வேண்டிய சூழ்நிலையில் வளர்ச்சித் துறை அந்தப் பணிகளைச் செய்கின்ற நேரத்தில் வருவாய்த் துறை அந்த நிலத்தை மற்றவர்களுக்குத் தருகின்ற சூழ்நிலை இருக்கிறது. பாதை போட வேண்டிய அந்தப் புறம் போக்கு நிலத்தை வேறொருவருக்கு பட்டா கொடுக்கின்ற நிலைமைகளில் அந்தத் துறை சில நேரங்களில் செயல்படுகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன.

புறம்போக்கு நிலங்களில் மரங்கள் இருக்கின்றன என்றால் அந்த மரங்கள் ரெவின்யூ துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இன்றைக்கு அந்த மரங்களினுடைய பராமரிப்பும், அதன் வருவாயும் குறிப்பிட்ட பஞ்சாயத்துக்கு வருமேயானால் வளர்ச்சித் துறைக்கு மிகவும் வசதியாக இருக்கும். 2—Cசிப் பட்டா என்ற முறையில் பல்வேறு தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் பொழுது வருமானமும் குறைகிறது ; பஞ்சாயத்திற்கு வருமானம் வராதது மட்டுமல்லாமல் வளர்ச்சிப் பணிகளும் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நான் சொல்ல விரும்புவதெல்லாம், இரண்டு துறைகளும் வெவ்வேறு நிலைமைகளிலே இருந்து செயல்படுவதைவிட, மாவட்ட அளவிலேயும், வட்டார அளவிலேயும், ஒன்றிய அளவிலேயும் இரண்டு துறை அதிகாரிகளையும் ஒரே அதிகாரியின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தால் நிச்சயமாக இந்தக் குழப்பங்கள், இப்படிப்பட்ட பிரச்சனைகள் எழாது என்பது என் கருத்து. ஆகவே, இரண்டு துறைகளையும் ஒன்றாக இணைத்து, மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் ஒரே அதிகாரியின்கீழ் கொண்டு வந்து செயல்படுத்தினால் பல பணிகள் நல்ல முறையில் நடக்கும் என்பது என்னுடைய கருத்து.

மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டு துறைகளையும் கண்காணிப்பாளராக இருந்தாலும், வட்டாரத்தைப் பொறுத்தவரையில் வெவ்வேறு அதிகாரிகளைக் கொண்டதாகத் தான் இருக்கிறது. எனவே, ஒன்றிய [illegible] ஒரு





டெபுடி கலெக்டரை நியமித்து அவருக்குக் கீழே இரண்டு துறைகளையும் சேர்ந்த பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதையொட்டித்தான் வர்க்கீஸ் கமிட்டி தன்னுடைய பரிந்துரைகளைச் செய்யும்பொழுதுகூட,

The Revenue Divisional Offices may be abolished and the Deputy Collector shifted to preside over the Taluk Office.

என்ற ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறது. அப்படிச் செய்யும் பொழுதுதான்,

The Deputy Collector in Taluk Office will be assisted on the Revenue and general administration side by a Headquarters Tahsildar and a number of Deputy Tahsildars equal to the number of Panchayat Unions in Taluks என்றும் அதே போல—

The Deputy Collector will be assisted by the Taluk panchayat Officers and the Extension Officers (Panchayat) in the Panchayat Development work.

என்றும் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். வட்டார அளவில் மட்டுமல்லாமல் ஒன்றிய அளவிலேயும் குறிப்பிட்ட அதிகாரியின்கீழ் அந்த இரண்டு துறைகளைச் சேர்ந்த பணியாளர்களை நியமிக்கின்ற அளவிலே நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

(மூற்பகல் 11–50)

இப்படி இரண்டு துறைகளிலும், அதிகாரிகளை ஒரு அமைப்பின்கீழ் கொண்டு வருவோமேயானால், சில பிரச்சனைகளுக்கு முடிவு காணமுடியும். அதைப்போல கல்வித் துறையில் 'ஏ' விங் 'பி' விங் என்ற இரண்டு விங்குகளை ஒன்றாக இணைக்கின்றபோது, இப்படிப்பட்ட பிரச்சனைகளை எடுத்துச் சொன்னார்கள். அந்த இரண்டு விங்குகளை இணைக்கும்போது பேச்சு வார்த்தை மூலம் மேற்கொண்டு, அவர்களுடைய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, அவர்களுக்கு இன்னென்ன அதிகாரங்கள் என்று பிரிக்கப்பட்டு, இந்தப் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இவைகளையெல்லாம் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இப்படி நிலைமைகளை செய்வதன் மூலம், காரியங்களை நாம் ஆற்ற முடியும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பித் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. செ. செம்மலை) [1983 ஏப்ரல் 12

மேலும் இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு நிதி
யமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு
வருவதெல்லாம், இன்றைக்கு மாவட்டத் தலைநகரிலே
பல்வேறு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலே இயங்கி
வருகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமை
யில் இந்த அரசு கோடிக்கணக்கான அளவிலே தொகையை
வாடகையாக கொடுத்துக் கொண்டு வருகிறது. அதனால் மக்க
ளுக்கும் சிரமம். அரசுக்கும் பல்வேறு வகையிலே இழப்பு ஏற்
படுகிறது. அரசைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு பெரிய
திட்டத்தைத் தீட்டி மாவட்ட அளவில் ஒரு பொதுவான இடத்
தைப் பார்த்து, பல மாடிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு உலக
வங்கியின் மூலமாகவோ அல்லது வேறு ஒரு அமைப்பின் மூல
மாகவோ கடனைப் பெற்று பல மாடிக் கட்டிடங்களைக் கட்ட
வேண்டும். அவ்வாறு அந்த பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி
னால், அங்கே பல அரசு அலுவலகங்க்ளை ஒரே இடத்தில் வைத்து
விட்டால், அரசுக்கு நிரந்தரமான சொத்தாக அமையும் என்று
கூறிக்கொள்ளவிரும்புகிறேன். அதோடு பொதுமக்களுக்கும் அதி
காரிகளை நேரடியாகச் சந்தித்து, தங்கள் பிரச்சினைகளை சொல்
வதற்கும் ஏதுவாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவரும்,
எல்லாத்துறைகளையும் கண்காணிக்கின்ற ஒரு வாய்ப்பும் 'வசதியும்
ஏற்படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு மாவட்டங்களிலே மாவட்ட வளர்ச்சி
மன்றக் கூட்டம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நடைபெற்று
வருகிறது. இன்றைக்கு மாவட்ட வளர்ச்சி மன்றத்தைப் பொறு
த்த வரையில், அதற்கு எந்த அதிகாரமும் இல்லை. இது ஒரு
பரிந்துரை செய்கின்ற குழுவாக இருக்கிறதே தவிர, வேறு எந்த
அதிகாரமும் அதற்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் இன்
றைக்கு அரசு பல்வேறு திட்டங்களையெல்லாம் கொண்டு வந்
தாலும், மாவட்டங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மா
வட்டத்திலும் ஒரே பிரச்சினை பல்வேறு ரூபத்தில் அமைந்து
விடுவதனால், அல்லது இதைத் தீர்க்க வேண்டிய வழிமுறைகள்
பல்வேறு விதத்தில் அமைந்து விடுவதால் பிரச்சினைகள் தீர்க்கப்
படத்தக்க வகையில் அந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு அதி
காரங்கள் கொடுக்கப்படவேண்டும். அதிகாரங்கள் கொடுப்ப
தோடு மட்டுமல்லாமல், அந்த வளர்ச்சி மன்றங்கள் கூடுகின்ற
போது, ஒரு அமைச்சர் தலைமை தாங்கவேண்டும். அப்படி
அமைச்சர் தலைமை தாங்குவதன்மூலம் பல்வேறு பிரச்சினை
களை அங்கங்கேயே அதிகாரிகளை வைத்து தீர்க்க தக்க அளவிலே
நிலைமைகளை இந்த அரசு உருவாக்கவேண்டும் என்று வேண்டி
விரும்பி கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதை
நான் சொல்வதற்குக் காரணம், மாவட்ட அளவிலே வெவ்வேறு



1983 ஏப்ரல் 12] (திரு. செ. செம்மலை)

விதமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய வழிமுறை
களை அப்போதுதான் பிரச்சினைகளுக்குத் தகுந்தவாறு காண
முடியும்.

அதைப்போலவே இன்றைக்குமாவட்ட அளவிலே ஆட்சித்தலை
வருக்குஅடுத்தபடியாக, ரெவின்யூத்துறையைப்பொறுத்தவரையில்,
அங்கே மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி செயல்பட்டு வரு
கிறார். ஆனால் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில்,
அங்கே அனைத்துப் பொறுப்புகளையும், மாவட்ட ஆட்சித்தலை
வரே நேரடியாக கவனிக்க வேண்டியிருக்கிறது. அவருக்கு உதவி
யாக, மாவட்ட அளவில், ஒரு மாவட்ட வளர்ச்சி அதிகாரியை
நியமிப்பதன் மூலம், அந்த வளர்ச்சிப் பணிகளை தங்குதடையின்றி
செயல்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட பத
வியை உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே
கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், ஊராட்சி மட்டத்திலே இன்
றைக்கு 'குருப் எக்சிகியூடிவ் ஆபீசர்' என்ற ஒரு பதவியை இந்த
அரசு வந்த பிறகு ஏற்படுத்தியிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட
பதவியில் நியமிக்கிறபோது, அந்த பதவியினுடைய பணியை
வரைமுறைப்படுத்தி, அவர்களுக்கு இன்னென்ன அதிகாரங்கள்
இருக்கிறது, என்பதை எடுத்துச் சொல்லி, அப்படி பல கிராமங்
களிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளை அந்த அதிகாரிகளே தீர்க்
கத் தக்க அளவிலே ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அதைக் கூட வர்க்கீஸ் கமிட்டியிலே

There should be a Public Village Office in every enlarged Revenue group. In the same building could be located the offices of Grama-sevak and Village Panchayat.

என்று ஒரு பரிந்துரையில் சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி
களைப்பொறுத்தவரையில், இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு பொது
வான அலுவலகத்தை அங்கே ஊராட்சியில் கட்டி, அங்கே
ஒரு 'குருப் எக்சிகியூடிவ் ஆபீசர்' என்ற பதவியை உருவாக்கிய
தைப் போல, ரெவின்யூ துறையைச் சார்ந்த வி.ஏ.ஓ. கிராம
அலுவலர்களை அங்கே பணியாற்றச் செய்து, மக்களுடைய பிரச்
சினைகளை அங்கேயே தீர்க்கக்கூடிய வகையிலே ஒரு ஏற்பாட்
டைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களைப்
பொறுத்தவரையில், அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே
இந்த அரசு பல்வேறு சீர்திருத்தங்களை, குறிப்பாகச் சொல்ல
வேண்டுமானால் வர்கீஸ் கமிட்டியினுடைய பல்வேறு பரிந்துரை
களை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது. எனவே இன்னும்

(திரு. செ. செம்மலை) [1983 ஏப்ரல் 12

இந்தக் கமிட்டி சொல்லியிருக்கிற பரிந்துரைகளை நிர்வாக நலன் கருதி, செயல்படுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்று என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் சம்பந்தமாக ஒருசில கருத்துக்களை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எடுத்து வைப்பதற்கு முன்வருகிறேன்.

இந்த மாவட்ட நிர்வாகம் என்பது வெள்ளைக்காரர்கள் இந்தியாவிற்கு விட்டுச் சென்ற ஒரு அமைப்புத்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அன்று அவர்களைப் பொறுத்த அளவிலே வருவாய், நீதி, நிர்வாகம் போன்ற வேலைகளைத்தான் கவனித்தது என்றால் இந்தியா விடுதலை அடைந்ததற்குப் பிறகு திட்ட அபிவிருத்தி என்ற பொறுப்புக்கூட அவர்களுக்கு வந்திருக்கிறது. அப்படி அந்தப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், இன்று பல மாவட்டங்கள் பெரிய மாவட்டங்களாக இருப்பதை சிறிய மாவட்டங்களாக மாற்றப்படவேண்டும் என்று பொதுவாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்த நேரத்திலே நான் ஒன்றை இங்கே சொல்ல விரும்புவது என்னவென்றால், 1964-லே இந்தியாவினுடைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இது சம்பந்தமாக என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,

"In regard to developmental activities the difficulty at the present moment is that there is no proper co-ordination, Formerly, the District Collector used to be the co-ordinating authority. He was in overall charge of every activity in the district.

The Collector is there, but there are also at the district level, officers of different departments like P.W.D., Agriculture, Co-operation, Education etc. There is also some one in charge of community development work. These different units function in a district, but they are not under the direct control or supervision of the District Collector. They have their direct connection with the respective heads of departments sitting in the State secretariat or in some cases with the departmental officers at the divisional level. The result is that there is no proper co-ordination. . . ."

ஆகவே இன்று இந்தவேலைகளைச்செய்வதற்கு அதிகாரிகளிடையே ஒரு ஒருங்கிணைப்பு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தை, வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1964-லேயே பிரிக்கப்பட வேண்டும் என்ற ஒரு



1983 ஏப்ரல் 12] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

கருத்தைப் பிரதமர் அவர்களே, சொன்னதற்குப் பிறகும் இன்னும் பல ஆட்சிகள் தமிழகத்திலே ஏற்பட்டதற்குப் பிறகும் அமுல் படுத்தப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்தான் இந்த அபிவிருத்திப் பணிகளை பரிசீலனை செய்யவேண்டிய மன்றங்களாக இருக்கின்றன. ஆனால் அந்த மன்றங்களிலே எல்லா என்ன நடக்கிறது என்றால், அங்கே எடுக்கக்கூடிய முடிவுகளை அமுல் படுத்தமுடியாத ஒரு நிலைமைதான் இருந்து கொண்டு இருக்கிறது. அரசே இந்த முடிவுகளைப் புறக்கணித்துக் கொண்டு இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் எடுத்துக் கூறுகின்ற முடிவுகளை அமுல்படுத்தக்கூடிய ஒரு கட்டாயமான ஒரு நிலையை அரசு ஏற்படுத்தித்தரவேண்டும். இன்னும் சொல்லப்போனால் அந்த கூட்டங்களுடைய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருக்கவேண்டும். மற்றும் பல மாநிலங்களிலே கலெக்டர் நிர்வாக பொறுப்பாளராகத்தான் இருக்கிறாரே தவிர, தலைவராக இல்லை. அந்த நிலைமைகள் தமிழகத்திலே ஏற்படுத்தப்படவேண்டும்.

அதேபோன்று மனுநீதி என்ற முறை இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. மனுநீதியிலே முடிவு செய்யப்படக்கூடிய விஷயங்கள்கூட அமுல்படுத்தப்பட முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள், மனுநீதி விழாக்கள் ஒரு சடங்காக இன்றைக்கு அது மாற்றப்பட்டு இருக்கிறதே தவிர அதை அமுல்படுத்துவதற்கான தேவையான எண்ணத்தை அரசு காட்டுவதில்லை.

(நண்பகல் 12—00.)

50 மைல் தொலைவில் இருப்பவர்களை அழைத்துக் கொண்டு வந்து பட்டா தரும் நிலை இருக்கிறது. இது மாற்றப்பட வேண்டும். அந்தந்த வட்டத்திற்குள்ளேயே பட்டா வழங்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

முடிவுகளை அமல்படுத்தும் விஷயத்தில் அரசு காலதாமதம் செய்து கொண்டு இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப் போனால் மாவட்ட நிர்வாகத்திலே பொறுப்பாளராக இருப்பது 'கிராம அதிகாரி' தான். அவர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. ஆகவே, ரெவின்யூ ரிக்கார்ட்டுகள், மற்ற ரிக்காட்டுகள் நகல்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டியது கிடைப்பதில் மிகவும் சங்கடங்கள் ஏற்படுகின்றன. பல அலுவலகங்களுக்கு அவர்கள் சென்று வந்தாலும் அலைந்து திரிந்தாலும் அது கிடைக்காத நிலைமை இருக்கிறது. இது மாற்றப்பட வேண்டும்.

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1983 ஏப்ரல் 12

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே புகார் செய்யப் பட்டு, 1980 ஆம் ஆண்டிலே கட்டப்படும் என்று ஒப்புக் கொண்டு, பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பாலங்கள் கூட இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட் டம் மாரப்பாடி பாலம் இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில், அவர் களை அடிக்கடி மாற்றம் செய்யக்கூடிய நிலை ஏற்படக் கூடாது. மாவட்டத்தில் உள்ள நிலைமைகளைப் பற்றி அவர்கள் நன்கு அறிந்தால்தான், திட்டங்களை நிறைவேற்ற முடியும். அவர்களை அடிக்கடி மாற்றம் செய்து கொண்டு இருந்தால் அது சரியாக வராது என்று பல்வந்த்ராய் மேத்தா குழு கூறியிருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் குறைந்த பட்சம் 2 ஆண்டு களாவது இருக்க வேண்டும். கலெக்டர் ஆபீஸ், ஆர். டி. ஓ. ஆபீஸ், மற்றும் தாலுக்கா ஆபீஸ் போன்ற இடங்களில் பொதுமக்கள் சென்றால் மனுக்களை எங்கே கொடுக்கவேண்டும் என்று தெரிந்துக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு வரவேற் பாளர் ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு ஆர்.டி.ஓ., கலெக்டர், தாசில்தார் ஆகியோருக்கு அதிகமான வேலை இருக்கிறது. துப் பாக்கி லைசென்சு கொடுக்கும் வேலையில் இருந்து, வறட்சி நிவாரணப் பணிகளை கவனிக்கும் வேலை வரையில் அவர்களுக்கு இருக்கிறது. இப்படி சின்னச்சின்ன பொறுப்புகளை அவர்களிட மிருந்து மாற்ற வேண்டும். ரெவின்யூ பதிவு சட்டங் களை அமல்படுத்தும் வேலை மிக முக்கியமான வேலை, கலெக் டர் கவனிக்க வேண்டிய முக்கியமான வேலை. இதை அவரால் கவனிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர், ஆர்.டி.ஓ., மற்றும் தாசில்தார் ஆகியோரைப் பொறுத் தவரையில், அவர்கள் மக்களைச் சந்திக்கவும், மக்களுடைய குறைகளைக் கேட்பதற்கும் அதன் மீது முடிவுகளை எடுப்பதற் கும் நேரத்தை ஒதுக்கி அது ஒரு முக்கியமான வேலை என்று அமைத்துக் கொள்ள வேண்டும்.

அடிக்கடி அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்வதால் சில மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களின் வேலை பாதிக்கப் படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அமைச்சர் களின் தேவைக்கு காலத்தில் அவர்களைச் சந்திப்ப தற்குப் பதிலாக அமைச்சர்கள் பின்னாலேயே போகும் நிலைமை துரதிருஷ்டவசமாக இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது.



1983 ஏப்ரல் 12] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

இதனால், மக்கள் கலெக்டர்களைச் சந்திப் பதற்கும், முடியாத நிலைமை ஏற்படுகிறது. அவர் களுடைய குறைகளைத் தெரிவிக்க முடியாத நிலைமை இருக்கிறது. சட்டமன்றக் கூட்டம் இல்லாத நேரங்களில் வரு கின்ற மக்களுக்கு ஆபீசிலேயே அமைச்சர்களைச் சந்திப்பதற்கு உரிய வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அவர்களைச் சந் திப்பதற்கு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதற்கான ஏற்பாடுகளை அமைச்சர்களின் அறைகளிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல் அமைச்சர் அவர்களை சந்திப்பது என்பது மிக மிக கஷ்ட மான வேலையாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பார்க்க வேண்டுமென்றால் கூட அவர்கள் பேட்டி கிடைப்பதில்லை ; இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

சமீப காலத்திலே இந்த சட்டமன்றத்திலே கூட காவல் துறை சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் சம்பந்தமாகக் கேள்விகள் போடப்படுவதில்லை. ஏனென்றால் முதலமைச் ருக்கு பதில் சொல்ல நேரம் இல்லை என்கிறார்கள். முதலமைச் சர் பதில் சொல்லாவிட்டாலும் மற்ற அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். இன்றைக்கு காவல் துறை சம்பந்தமான விவரங்களை சட்டமன்றத்தில் கேட்க முடியாத நிலை ஏற் பட்டிருப்பது சட்டமன்றத்திற்கு அழகு அல்ல.

அதைப்போன்று அமைச்சர்களுக்கு கடிதம் எழுதினால் அதற்கு அக்னாலட்ஜ்மெண்ட் காலாகாலத்தில் வருவதில்லை ; வந்தால் கூட அந்த கடிதத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை பல நேரங்களில் தெரிந்துக் கொள்ள வாய்ப்பில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை ஏற்படுவது சரியல்ல. அதன் முடிவு என்னவாயிற்று என்று கூட தெரிய முடியவில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் கடிதங்களுக்கு அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை தெரிவிக்க வேண்டும்.

அதைப்போன்று மாற்று அரசியல் கட்சிக்காரர்கள் அமைச்சர் களைப் பார்க்க வந்தால் அவர்களுக்கு தனியாக சந்தித்துப் பேச வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு இருக்கக்கூடிய மற்ற முக்கியமான வேலைகளில் ‘ சட்டம் ஒழுங்கு ’ வேலையை பராமரிக்க முடியவில்லை. அவர்களுக்கு இன்றைக்கு மாஜிஸ்டிரேட் அதிகாரம் செய்வதற்கு பொறுப்பு இருக்கிறது. ஆனால்

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1983 ஏப்ரல் 12

இன்றைக்கு நிலைமை என்னவென்றால் அவர்கள் சட்டம் ஒழுங்கு
பராமரிப்பு வேலை வெறும் சம்பிரதாயத்துக்கே உள்ளது.
அவர்களுடைய முக்கியமான வேலை சட்டம் ஒழுங்கு பரா
மரிப்பாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அந்த
நிலை இன்று போய்விட்டது. குற்ற நிர்வாகவியல் பொறுப்பு
பல மாவட்டங்களில் இன்றைக்கு கலெக்டருக்கு இல்லாத நிலை
இருக்கிறது. எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒரு
கொலை சம்பந்தமாக கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம்
கருத்து தெரிவித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அதை
கவனிக்க வேண்டுமென்று போலீஸ் சூப்பிரண்டிடம் சொன்ன
பிறகும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதைப் போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் சமீபத்தில்
காவல் துறையின் அத்து மீறல் போக்கு இருக்கிறது. மாவட்ட
ஆட்சித் தலைவரிடம் அதைச் சுட்டிக் காட்டினோம். எங்கள்
கட்சியைச் சேர்ந்த ஒரு மாவட்டக் குழு உறுப்பினர் மத கல
வரத்தை ஒட்டி, குலசேகரம் உதவி ஆய்வாளரால் கைது
செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டது சரியல்ல என்
பதைச் சுட்டிக் காட்டினோம். அங்கே பிப்ரவரி 26, 27 ஆகிய
இரண்டு நாட்களும் மக்கள் மீது தடியடிப் பிரயோகம் நடந்
தது. அது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார்
கொடுக்கப்பட்டது. நானே நேரில் விளக்கினேன். ஆனால் இன்று
வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. மாவட்ட
ஆட்சித் தலைவர் தவறு என்று ஏற்றுக் கொண்டாலும்,
அவரால் எதுவும் செய்ய முடிய வில்லை. சட்டங்களை ஒழுங்
காக அமுல் நடத்த வேண்டிய காவல் துறை அதிகாரிகள் அவர்
ளுக்கு கீழே இருக்கிற சிப்பந்திகள் அத்துமீறி நடக்கும்போது
அதைக் கண்டிக்காமல் அதற்குப் பதிலாக அவர்களுக்கு ஊக்க
மளிக்கின்ற காரணத்தால் கலெக்டரைப் பொறுத்தவரையில்
இன்றைக்கு அவர்களுடைய அதிகாரத்தை சரியாகச் செயல்
படுத்த முடியாமல் இருக்கிறது.

மாவட்ட நிர்வாகத்தை [illegible] பொறுத்தவரையில் அரசு
ஊழியர்களுக்கும் [illegible] உறவு இருக்க வேண்
டும். அதற்கான நடவடிக்கை [illegible] எடுக்கப்பட வேண்டும். அரசு
ஊழியர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு பரிவோடு
கவனிக்க வேண்டும். [illegible] உயர்வு, தற்காலிக
பணியாளர்களை நிரந்தரமா[illegible] போன்றவற்றிற்கு நட
வடிக்கை எடுக்க வேண்டும். [illegible] நட
[illegible] இடையே நல்ல [illegible] ஊழியர்களுக்கும் பொது
[illegible] இருக்க நடவடிக்கை



1983 ஏப்ரல் 12] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

(பிற்பகல் 12-10)

அதே போன்று; மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்று கீழே இருக்கக் கூடிய சிப்பந்திகளுக்கு பதவி உயர்வுக்கு சிபாரிசு செய்து மேலே அது சம்பந்தமாக சிபாரிசு செய்து அனுப்பும் போது, என்ன நடக்கிறது என்று அதை ஒரு எடுத்துக் காட்டு மூலமாக என்னால் விளக்கிச் சொல்ல முடியும். கன்னியாகுமரி மாவட்டத்திலே, உள்ளாட்சித் துறையிலே வேலை செய்யும் 3 பெண்கள், இள நிலை உதவியாளர் களாக இருந்து வருகிறார்கள், அவர்களுக்கு பல நாட்களாக கொடுக்கப்பட வேண்டிய பதவிஉயர்வு கொடுக்கப்படவே யில்லை. அதைக் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்து, அவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்தால், இங்கே அமைச்சர்கள் அதை தடை செய்கிற நிலைமை ஏற் படுகிறது. ஏதோ ஆளும் கட்சியின் ஆட்கள் தலையிட்டு இதிலே நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இன்று அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் பாரபட்சமான நிலைமை இருக்கக் கூடாது. எல்லோருக்கும் முறையாக பதவி உயர்வு போன்றவை வழங்கப் பெற வேண்டும்

இந்த நேரத்தில் இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப் பொறுத்தவரையிலே, அவர்கள் தேர்வு நடத்துவதற்கு வேண்டிய நிலையிலே மாற்றி யிருக்கிறார்கள். ஏற்கெனவே ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் முடிக்கப்பட வேண்டிய இந்த தேர்வு, கேள்வித்தாள் அவுட் ஆகிவிட்ட காரணத்தால், மாற்றப்பட்டுவிட்டது. அப் படியே மாற்றினாலும் 1 மாத காலத்திற்குள் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இன்று அது பல மாதங் களுக்குப் பிறகு, ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்திலேதான் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப் படிப்பட்ட நடவடிக்கைகள் நிச்சயமாக பொது மக்களுக்கு ஏமாற் றத்தை ஏற்படுத்தக்கூடிய முறையிலே உள்ளது. இவைகள் தவிர்க் கப்பட வேண்டும் (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகளை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த நிலைமையிலே இருக்கிறார்கள் என்றால், பல்வேறு இடங் களிலேயும் பேப்பர் அட்வர்டைஸ்மெண்ட் வருகிற முறையிலே பேப்பர்களிலே அறிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் கள். அரசியல்வாதிகளைப் போல ஒவ்வொரு நாளும் பேப்பரில்

அறிக்கைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருசில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, சில இடங்களிலே நிர்வாகம் நன்றாக இருந்தாலும் கூட, பணிகள் ஒழுங்காக இருந்தாலும் கூட, அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடி கண்டு பிடிக்க வேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்ட கலெக்டர் சந்தானம் அவர்கள் 11 மாதங்களுக்குள்ளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஏன் மாற்றப்பட்டிருக்கிறார்கள், எப்படி மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டால், அதற்கு அரசியல் காரணம் என்று சொல்லுகிறார்கள். அப்படி இருந்தால், இதுபோன்ற அரசியல் காரணங்களுக்காக செயல்படுகிற மாற்றல்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால் அந்த மாவட்டம் கடுமையான வறட்சி பிரதேசமாகும். ஒரு பின் தங்கிய மாவட்டமாகும். அந்தக் கலெக்டர் ஏற்கெனவே அந்தப் பகுதிகளில் இருக்கும் நுணுக்கங்களை அறிந்தவர். எந்தெந்தப் பகுதிகளிலே எப்படி எப்படி பணிகளைப் செய்ய வேண்டும் என்று நன்றாக அறிந்தவர். இந்த நேரத்திலே திடீர் என்று அவரை மாற்றுவதன் காரணமாக, புதியதாக வந்திருக்கக் கூடியவருக்கு, எல்லா விஷயங்களையும் உடனே தெரிந்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை ஏற்படும். அந்த நிலைமையைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல, சில பகுதிகளிலே, விழாக்கள் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அந்த நிகழ்ச்சிகளுக்கு எதிர்க் கட்சி எம்.எல்.ஏக்களை கூப்பிடாத நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலைமைகள் போக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு, குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், ஏதாவது நிகழ்ச்சிகளுக்கோ அல்லது சுற்றுப்பயணமாகவோ அமைச்சர்கள் வர வேண்டும் என்று பல முறை வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் இது போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் மற்ற பகுதிகளிலும் நடந்துக் கொண்டேயிருந்தாலும் கூட, எந்த அமைச்சரும் அங்கே வரவில்லை. அரசியல் நிகழ்ச்கிகள் விழாக்கள் என்று எதற்கும் வருவதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்துத் தான் விழாவை நடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி, எல்லாப் பகுதிகளுக்கும், அது எதிர்கட்சியினர் தொகுதியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியினர் தொகுதியாக இருந்தாலும் சரி, எல்லா இடங்களுக்கும் அமைச்சர்கள் சென்று வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்,





அது மட்டும் அல்ல தபால்களுக்கு பதில் அனுப்பக் கூடிய நிலை சம்பந்தமாக என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால், இங்கே உள்ள அரசு தலைமைச் செயலகமாக இருந் தாலும் சரி, மாவட்ட தலைமை அலுவலகமாக இருந்தாலும் சரி, பதில்கள் வருவது முதலிலே காலதாமதம் ஆகிக் கொண் டிருக்கிறது. அப்படியே 2, 3, 6, மாதங்களுக்கு பின்னாலே வரும் பதில்களிலே கூட, என்ன சொல்லி வருகிறது என்றால், உங்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

பல்வேறு நிலைகள் குறித்து மீண்டும் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்று ஒரு வார்த்தையை அதில் போட்டு அதிலே ஒரு அண்டர் செகரட்டரி கூட கையெழுத்துப் போடவில்லை, அண்டர் செகரட்டரிக்காக வேறு ஒருவர் கையெழுத்துப் போட வருகின்றது. இப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கின்றது. இவை எல்லாம் சரியான நிர்வாகம் என்று சொல்ல முடியாது. ஆகவே நிர்வாகம் திறமையோடு நடப்பதற்காக நேரடியாக என் னென்ன வேலைகள் நடக்கின்றன என்பதைக் கண்காணிக்க, வேண்டும் என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து டீ. டீ. சி. கூட்டங்களிலே தீர்மானங்கள் போடப் படுகின்றன. அந்தக் கூட்டங்களிலே முக்கியமான பிரச்சனைகள் எல்லாம் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் போடப்பட்டு அரசுக்கு அனுப்பப்படுகின்றன. அந்த வகையில் மாவட்ட ஆட்சி நிர் வாகம் என்ற முறையில் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் கிட்டதட்ட 12 தீர்மானங்களை அரசுக்கு அனுப்பி இருப்பதாகக் குறிப்பிடப் பட்டு இருக்கின்றன. ஆனால் அந்தப்பனிரெண்டுதீர்மானங்களும் பல வருடங்களாக போடப்பட்ட தீர்மானங்கள். அவை சம்பந் தப்பட்ட வகையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல வருஷங்களாக அவை அமல் நடத்தப்படாமல் இருக்கின்றன. உடனடியாக அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து சின்ன விஷயங்களாக இருந்தாலும் சென்னைக்கு வரவேண்டி இருக்கின்றது. ஆகவே சின்ன சின்ன விஷயங்களை எல்லாம் அந்தந்த மாவட்ட அளவிலேயும், டிவிஷன்கள் நிலைமையிலேயும் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொகுதிகளுக்கு வரக்கூடிய நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந் தாலும்சரி, முன்பே இன்னின்ன தொகுதிகளுக்கு நான் வருகிறேன் என்று தகவல்கொடுக்கின்றநிலைமை இருக்கவேண்டும். அப்போது தான் அவரவர்கள் அங்கு இருந்து பிரச்சனைகளைச் சொல்லக்

(திரு. செ. சிவசாமி) [1983 ஏப்ரல் 12

கூடிய வாய்ப்பு இருக்கும். எனவே வருகின்றவர்களும் மக்களைச் சந்தித்துப் பிரச்சனைகளைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையகத்திலே இன்னும் சில வேடிக்கைகள் நடக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே ஒரு அடிஷனல் கலெக்டர் இருக்கிறார். எந்த அளவுக்குத் தவறான முறைகளில் செயல்பட முடியுமோ அந்த முறைகளில் அவர்கள் செயல்படுகிறார். உதாரணமாக பெருவண்டல், கார்காத்தகுடி என்ற கிராமங்களிடையே 50 வருஷ காலமாகத் தகராறு இருந்து வருகின்றது. ஆனால் ஏற்கெனவே 40, 50 வருஷங்களுக்கு முன்பிருந்த அமைப்புக்களை மாற்றி ஒரு கிராமத்திற்கு சாதகமாகவும் மற்றொரு கிராமத்திற்கு பாதகமாகவும் உள்ள நடவடிக்கைகளை அவர் தேவகோட்டை ஆர்.டி.ஓ. மூலம் எடுத்து வருகிறார். அப்படிப்பட்ட அமைப்புகளை மாற்றுவதன் காரணத்தால் அரசாங்கத்திற்கும் நஷ்டம் ஏற்படக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அடுத்து பரமக்குடியில் உள்ள இரண்டு ஒயின்ஸ் கடைகளைப் பொறுத்தவரையில் ஒரு கடைக்கு ஆதரவாகவும் மற்றொரு கடைக்குப் பாதகமாகவும் நடவடிக்கைகளை எடுக்கிறார். வைகை ஒயின்ஸ் என்ற கடைக்கு ஆதரவாக, தம்பி ஒயின்ஸ் என்ற கடைக்குப்பாதகமாக, தம்பி ஒயின்ஸ் என்ற கடையில் பாட்டிலிங் தவறு இருக்கின்றது என்று சொல்லி தேவையில்லாமல் ஒரு உண்மைக்குப் புறம்பான கேஸ் தயாரிக்கப்பட்டு போடப்பட்டு இன்றைக்கு வரை அது இழுத்துக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அதாவது வைகை ஒயின்ஸ் கடையில் பிஸ்னஸ் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மினிஸ்டர் வரையில் இந்தப் பிரச்சனை குறித்து தகவல் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்படி ஒரு சில அதிகாரிகள் அங்கே தவறான முறையில் காரியங்களைச் செய்கிறார்கள். அதே நேரத்தில் திரு. சந்தானம் போன்றவர்கள் 11 மாதத்திலேயே மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 3 ஆண்டுகள் இராமநாதபுரம் மாவட்டத்திலே அந்த மாவட்ட அதிகாரி இருந்துகொண்டு நரித்தனமான வேலைகள் செய்து கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும். அதுமட்டுமல்ல. என்னுடைய தேர்தல் சம்பந்தப்பட்ட [illegible] கூட நேரடியாக அவர் தலையிட்டிருக் [illegible] முடிவினைப் பொறுத்தவரையில் [illegible] தமான கிரவுண்ட்ஸும் இல்லாத



1983 ஏப்ரல் 12] (திரு. செ. சிவசாமி)

நிலைமையில் 127 ஓட்டுக்கள் இந்த மாதிரியான சந்தேகத்திற்குரிய ஓட்டுக்கள் என்று சொல்ல வேண்டும் என்று ரிட்டர்னிங் ஆஃபிஸரிடம் ஏற்பாடு செய்திருக்கிறார். எந்தவிதமான கிரவுண்ட்ஸ் இல்லாத நிலைமையில் கிரவுண்ட்ஸ் தயாரிப்பதற்கு ஆதரவாக இருந்து இவர் ரிட்டர்னிங் ஆஃபிஸருக்குத் தவறாக வழிகாட்டி அரசியல் உள்நோக்கத்தோடு சில வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டம் மட்டும் அல்ல. இன்னும் தஞ்சை மாவட்டம், வடஆற்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களை இரண்டாக பிரிக்கவேண்டும் என்று இன்று கோரிக்கை தொடர்ந்து வந்திருக்கிறது. அதை எல்லாம் அரசாங்கம் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிறது. இரண்டாக பிரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—20)

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டாக பிரிப்பது மட்டும் அல்ல, ஏற்கெனவே 1981-82ல் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதை கிழக்கு, மேற்கு மட்டும் அல்ல; வடக்கு, தெற்கு ஆக கூட பிரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாங்கள் செய்வோம், பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்று இந்த சபையில் சொன்னார்கள். ஆனால் கொள்கை அளவிலே அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரை பிரிப்பதற்கு என்ன சிக்கல் என்று எங்களுக்குத் தெரியவில்லை. பிரிப்பதன் மூலமாக—மாவட்டத்திற்கு உள்ளே தலைமையகத்தைக் கொண்டு வருவதன் மூலமாக நாங்கள் எல்லாம்—ஏழை எளிய சாதாரண மக்கள் எல்லாம்—வறட்சியால் கஷ்டப்படும் மக்கள் எல்லாம் மதுரைக்கு இன்றைக்கு டிக்கெட் எடுத்துக் கொண்டு கட்டுச்சோறை கட்டிக்கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்படாமல் இராமநாதபுரம் மாவட்டத்தில் தலைமையிடம் இருந்தால் அங்கு பார்த்து பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். இந்த ஆண்டாவது அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, எமனேஸ்வரம் என்ற முக்கியமான ஊர் பரமக்குடி முனிசிபாலிட்டியோடு சேர்க்கப்பட்டு கிட்டத்தட்ட 15, 16 வருடங்கள் ஆகின்றன. ஆனால் முனிசிபாலிட்டிக்குள்ளே இருக்கக்கூடிய அந்தப்பகுதி இன்னும் இளையாங்குடி தாலூகாவில் இருந்துகொண்டிருக்கிறது. இது இன்று மாவட்ட அளவில் தீர்க்கக்கூடிய ஒரு சாதாரண பிரச்சினை. 16 வருடமாக அந்தக் கோரிக்கையை வைத்தாலும் கூட இன்றுவரை அந்த முனிசிபாலிட்டியில் இருக்கக்கூடிய அந்த ஒரு பகுதி இளையாங்குடி

(திரு. செ. சிவசாமி) [1983 ஏப்ரல் 12

தாலூகாவிலிருந்து ஒரே முனிசிபாலிட்டி பரமக்குடி தாலூகா ஆபிசில் இருக்கக்கூடிய நேரத்தில் லோனாக இருந்தாலும் சரி அல்லது தாலூகா ஆபிஸ் போக வேண்டிய விஷயமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தக் காரியமாக இருந்தாலும் சரி, 8 மைல், 10 மைல் தள்ளி இருக்கக்கூடிய இளையாங்குடிக்கு இன்று நடந்து போய் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாவட்ட நிர்வாகத்தில் மிகப்பெரிய கோளாறுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். உதாரணமாக ஒரு சின்ன விஷயம். பாம்பு கடித்து ஒரு சாதாரண விவசாயி செத்தால் அவனுக்கு 5 ஆயிரம் கொடுப்பது என்று ஏற்கனவே அரசு தீர்மானித்திருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒரு அம்சம். ஆனால் அந்த விவசாயி செத்த பிறகு வாங்க முடியாத ஒரு நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஒரு ஜி. ஓ. இருக்கிறது. இந்த ஜி.ஓ.விலே

The Collectors are requested to ensure that the reports of the enquiry are sent along with the recommendations f.r the sanction of financial assistance from the Chief Minister's Public Relief Fund and also to enclose post-mortem certificate as to the cause of death

என்று இருக்கிறது. இதில் ca se of death என்று இருப்பதால் இன்றைக்கு போக்குவரத்து வசதி இல்லாத கிராமத்திலிருந்து தாலூகா ஆஸ்பத்திரி இருக்கக்கூடிய இடத்திற்குச் செல்லவேண்டும் என்றால் 10 மைல், 15மைல் கடந்து செல்லவேண்டும். ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி செத்தான் என்றால் அந்தப் பிணத்தை பரமக்குடிக்கோ இளையாங்குடிக்கோ தாலூகா ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து அவனை அறுத்து போஸ்டு மார்ட்டம் செய்து மீண்டும் 10 மைல் 15, மைல், கொண்டு போகக்கூடிய சாத்தியக் கூறு இன்றைக்கு இல்லை. அங்கே எந்த வண்டிக்காரனும் வரமாட்டான். கார் பக்கம் போகமுடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த விவசாயி குடும்பத்தினர் செத்த பிணத்தை அறுப்பதற்குப் பதிலாக போஸ்ட் மார்ட்டம் வேண்டவே வேண்டாம் என்று சொல்லி கிராமத்திலேயே புதைத்து விடுகிறார்கள். இப்படிப் பட்ட சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக இந்த ஜி. ஓ. போட்டும் இன்றைக்கும் [illegible] வாங்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே



1983 ஏப்ரல் 12] (திரு. செ. சிவசாமி)

இந்த ஜி. ஓ.,வை மாற்றுவதற்குத் தயவுசெய்து மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் நிதித்துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ம் எண் மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நீண்ட நாட்களாக தலைமையிடத்தில் தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற பணியாளர்களைத் தயவுசெய்து உடனடி ாக நிரந்தரம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் வேலையில்லாத் திண்டாட்டம் மிகப்பெரிய ஒரு கொடுமையான பிரச்னையாக நாடு முழுவதும் ஆராயப் பட்டு வருகிறது. அதற்கு உடனடியாக பரிகாரம் காணுகின்ற வகையில் ஓய்வு பெறுகின்ற வயதை அரசு ஊழியர்களுக்கு 55 என்று குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றுசொல்லிக்கொண்டு ஏறத்தாழ 4 ஆண்டுக் காலம் 5 ஆண்டுக் காலம் ஆகியும் தேர்வாணைக்குழுவின் முடிவுககளை நிறுத்தி வைத்து இருப்பதன் காரணமாக பல ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்களை எல்லாம்—ஒரு ஆண்டுக்கு மேல் யார்யார் தற்காலிகமாகப்பணியில் இருக்கிறார்களோ, அவர்களை எல்லாம்—உடனடியாக நிரந்தரம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று அரசு ஊழியர்களுக்கு இந்த ஆண்டு விலைவாசி குறியீட்டு எண் உயர்வுக்கு ஏற்ப ஊதிய உயர்வு—அதற்கு நிகராக அலவன்ஸ்கள்—அளிக்கப்படாதது வருந்தத் தக்கது. எனவே அவர்களுக்கு ஊதிய உயர்வும் அலவன்[illegible]ம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கடந்த 31 ஆம் தேதி முதலமைச்சருடைய நிகழ்ச்சி நடைபெற்றது. முதலமைச்சரும் ஏனைய சில அமைச்சர்களும் அந்த விழாவிலே கலந்து கொண்டார்கள். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானோ அல்லது அந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரோ அந்த விழாவிற்கு அழைக்கப்படவில்லை. அந்த அழைப்பிதழில் எங்களுடைய பெயர்கள் போடப்படவில்லை.

மனுநீதி நாள் நடத்தப்படுவதில்லை. எனவே தொடர்ந்து இந்த மனுநீதி நாள் திட்டத்தை நடத்தி, கிராமங்களில் இருக்கிற குறைபாடுகளைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டும். கீழத்தஞ்சை, மேலத்தஞ்சை என்று இரண்டுமாவட்டங் களை உருவாக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்பு வனம் விழாவிற்கு போனது பற்றி இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அங்கே நடைபெற்றது ஒரு அரசு விழா அல்ல. அங்கு அரசு விழா எதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. ஒரு திருமண விழாவிலே கலந்து கொண்டு அதற்குப் பின்னாலே அந்தப் பகுதி யிலேஇருக்கிற பட்டு உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள் ஏற்பாடு செய்திருந்த விழாவிலே கலந்து கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டந்திற்கு நிதியளிப் பதற்காக தனியார்கள் ஏற்பாடு செய்திருந்த விழாவிலே கலந்து கொண்டாரே தவிர அங்கே அரசு விழா எதுவும் நடக்கவில்லை. இரண்டாவது, முதலமைச்சர் அவர்கள் போகிறபோது அவர் பின்னாலே எப்போதும் தீயணைப்பு வண்டி போனதில்லை ; போவதுமில்லை ; அப்படிப்பட்ட வரலாறே இல்லை. அங்கே என்ன நடந்திருக்கிறது என்றால், பட்டு உற்பத்தியாளர்கள் சொசைட்டி தீயணைப்பு வண்டி கேட்டிருக்கிறது. அங்கே எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற் காக கும்பகோணத்திலிருந்து, திருப்புவனத்திற்கு ஒரு தீயணைப்பு வண்டி அவர்களால் ஏற்கெனவே வரவழைக்கப்பட்டு அங்கே நின்றிருந்தது. ஊர்வலத்தில் முன்னால் போகவுமில்லை; பின்னால் போகவுமில்லை. இதுபோன்ற தவறான தகவல்களைத் தரவேண்டாம் என்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம் :** நான் சரியான தகவலைத் தான் சொல்கிறேன். முதலமைச்சர் வருவதற்கு முன்னாலே திருமண வீட்டின் முன்னால் அந்தத்தீயணைப்பு வண்டி நிறுத்தப் பட்டிருந்தது. பிறகு முதலமைச்சர் வண்டி கூடவே கூட்டுறவுச் சங்கத்திற்குச் சென்றதை நானே பார்த்தேன். நான் தெரிந்து பேசுகிறேன். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்ப விசாரித்து அதற்குப் பதில் சொன்னால் நலமாக இருக்கும்



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தெரிந்துதான் சொல்கிறேன். நிகழ்ச்சியிலே நீங்கள் தூர நின்று பார்த்ததாகச் சொல்கிறீர்கள். அந்த நிகழ்ச்சிக்கு வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும் சென்றிருக்கிறார். அந்த நிகழ்ச்சியிலே அவர்கள் முதல்வர் கூடவே இருந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகிறபோது அங்கே ஏராளமான கூட்டம் கூடுகிறது. அந்த சொசைட்டியில் பட்டுத் துணிகள் இருந்திருக் கின்றன. அவை எளிதில் தீப்பிடிக்கக் கூடியவை. ஆகவே தான் அவர்கள் கேட்டு முதலமைச்சர் வருவதற்கு முன்னாலேயே அந்தத் தீயணைப்பு வண்டி வந்திருக்கிறது. அதற்குப் பின்னால் அந்த வண்டி போயிருக்கலாம். அதை நீங்கள் பார்த்திருக்கலாம். அதை வைத்துக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் போகிறபோது தீயணைப்பு வண்டி கூடவே போகிறது ; இது மிக கேவலமாக இருக்கிறது ; மக்கள் நகைக்கிறார்கள் என்று உங்கள் கதையைச் சேர்த்து ஒரு தவறான தகவலைத் தரக்கூடாது என்றுதான் சொல்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்ன நோக்கத்திலே சொல்கிறேன் என்பதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து புரிந்து கொள்ள வேண்டும். கும்பகோணத்தில் இருப்பது ஒரே ஒரு தீயணைப்பு வண்டி. அந்தத் தீயணைப்பு வண்டியும் முதலமைச்சர் பின்னாலே சென்றதைப் பார்த்தேன். அதைப் பார்த்து விட்டுச் சொல் கிறேன். ஆகவே மீண்டும் மறுக்க வேண்டும் என்ற எண்ணத் திலே பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்வது உங்களுடைய எண்ணத்திலே தவறு இருப்பதால்தான் சொல்கிறேன். கும்பகோணத்திலே ஒரே ஒரு வண்டிதான் இருக்கிறது. தீயணைப்புப் பணிகளுக்காக பயன்பட வேண்டிய வண்டி அது ; முதலமைச்சர் போகிற போது அவர் பின்னாலே அந்த வண்டி போகிறது ; ஆகவே மக்கள் மத்தியிலே நகைப்பிற்கு இடமாகிவிட்டது என்று சொல்கிறீர்கள். முதலமைச்சர் பின்னாலே தீயணைப்பு வண்டி எப்போதும் வரவேண்டுமென்று அங்கே நிறுத்தப்பட்டு, அவர் பின்னாலேயே போனதைப் போல் சொல்கிறீர்கள். ஆனால் நிகழ்ச்சி அப்படி நடக்கவில்லை. அந்த சொசைட்டியிலே தீயணைப்பு வண்டி வேண்டுமென்று கேட்டு அங்கே போயிருக் கிறது. பிறகு கும்பகோணத்திற்கு திரும்பிப் போகவேண்டுமென்று போயிருக்கலாம். அப்படி போகிறபோது நீங்கள் அதைப் பார்த் திருக்கலாம். பல லட்சம் பேர்கள் கூடுகிற கூட்டத்திற்கு

முதலமைச்சர் போகிறபோது கூட தீயணைப்பு வண்டி போன தில்லை. இப்படி அந்தத் தீயணைப்பு வண்டி போகிற வழக்கமே இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இதை நீட்டிக்க விரும்பவில்லை. கும்பகோணம் திருவிடைமருதூர் தொகுதியில் அன்றையதினம் அதைப் பார்த்த மக்களுக்கு அது தெரியும். எனவே, அந்த அளவோடு இதை நான் நிறுத்தி விடுகிறேன்.

அதே போன்று முதலமைச்சர் என்னுடைய தொகுதிக்கு வருகிறார். வழக்கமாக எந்த அமைச்சர் வந்தாலும் சம்பந்தப் பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரல் அனுப்பப்படுவது வழக்கம். ஆனால், 31—3—1983 அன்று வந்தபொழுது எனக்கு மட்டுமல்ல, வேறு எந்த அதிகாரிக்கும் நிகழ்ச்சி நிரல் தரவில்லை. என்னையே சில அதிகாரிகள் கேட்டார்கள். எங்களுக்கே கிடைக்கவில்லை. எங்களுக்கு அனுப்பப்படவில்லையென்று சொன்னேன். அமைச்சர்கள் கலந்து கொள்கிற நேரத்தில் தொகுதி சம்பந்தப்பட்ட பல பிரச்னை களை அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய ஒரு நிலைமையிருக்கும். எனவே, சரியான முறையில், அப்படிப்பட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சி பற்றி எங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்..... (மணியடிக்கப்பட்டது).

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குச் செம்மையான நிர்வாகம் நடைபெறுவதற்கு மூலகாரணமாக இருப்பது செம்மையான நிர்வாக அதிகாரிகளைப் பெற்றிருக்கிற இந்தத் தமிழக அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகள் எல்லாம் நல்ல முறையில் செயல்படுவதால், நாட்டுக்கும் அரசுக்கும் நல்ல பெயர் வரக்கூடிய நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டு வருகிறது. ஆனாலும் ஒருசில இடங்களில் இருக்கிற குறைபாடு களைச் சுட்டிக்காட்டுவது என்னைப் போன்ற சட்டமன்ற உறுப் பினர்களுடைய கடமை என்பதால், ஒருசில சொல்ல விரும்பு கிறேன்.

இன்றைக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் எல்லாம் அங்கங்கே 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்படுகின்றன. ஆனால், என்னுடைய தெற்கு செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி



மன்றக் கூட்டமானது கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளில் பலமுறை கூட்டப் பட்டாலும், அங்கே கோரம் ஏற்படவில்லையென்பதால், அக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டன. அதனால், எந்த ஒரு தீர்மான மும் அங்கு நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அக்குறையைப் போக்க, வேண்டிய வழிவகைகளைச் செய்து, அந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் எல்லாம் செம்மையான முறையில் நடை பெற, அவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற சட்டமன்ற உறுப்பி னர்கள் தலைமை தாங்குவதற்கு வேண்டிய வழிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் தற்போது மாவட்ட அளவிலே வாரத்தில் ஒரு நாள் தலைமை யிடத்திலேயிருந்து மக்களுடைய குறைகளைக் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், என்னுடைய பகுதியிலே கூட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை அணுகி கோட்ட வளர்ச்சி அலுவலகத்திலே மாதத்தில் இரண்டு முறை மக்களுடைய குறை களைக் கேட்க வேண்டுமென்று விண்ணப்பம் வைத்தோம். அதற்கு அவரும் செவி சாய்த்து, அந்தக் கோரிக்கையை நிறை வேற்றினார்கள். ஆனால், அதற்குப் பிறகு வந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த முறையை மாற்றி மீண்டும் வாரத் திற்கு ஒரு முறை அவர்கள் எல்லாம் மாவட்டத் தலைமை இடத்தில்தான் மக்களது குறைகளைக் கேட்க ஏற்பாடு செய் திருக்கிறார்கள். அதனால், கிராமப் புறத்திலே வாழ்கின்ற ஏழை மக்கள் தங்களுடைய குறைகளை நேரிடையாகவே, மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துச் சொல்ல முடியாத நிலைமையிருக்கிறது. அதற்கு தக்க வழிவகைகளைச் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் குறைந்தது மாதத்திற்கு இரண்டு முறை கோட்ட வளர்ச்சி அலுவலகத்திலேயும்—மாதம் ஒரு முறையாவது வட்ட அலுவலகத்திலேயும் அமர்ந்து மக்க ளுடைய குறைகளைக் கேட்க, தக்க உத்தரவுகளை இட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மாவட்ட அளவிலே இன்றைக்குப் பல்வேறு புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அங்கே இருக்கிற கீழ்மட்ட சிப்பந்திகள் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதேபோன்று சர்வேயர்கள் எல்லாம் நியமிக்கப்படாமல் இன் றைக்குப் பல்வேறு பட்டாக்கள் வழங்கப்படுவது எல்லாம் கால தாமதம் ஆகிறது. அதற்காக சர்வேயர்களைத் தேவையான அளவுக்கு நியமிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. எஸ். டி. உகம்சந்த்) [1983 ஏப்ரல் 12

அதே போன்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், உட்பட சுற்றுப்பயணங்கள் செய்கிற நேரத்தில், அந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரலைத் தெரியப்படுத்தி, அதன் மூலமாக, அவர்களும் அதிலே பங்கு கொண்டு மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அதற்காகத்தான் ஜமாபந்தி முறையானது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால், அதை ஜமாபந்தி முறை என்று சொல்வதை விட, அவர்கள் வெறும் கணக்குகளைப் பார்த்து விட்டுப் போகிறார்களே தவிர, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கிறது. ஒவ்வொரு ஜமாபந்தியிலும் பல்லாயிரக்கணக்கான மனுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(பிற்பகல் 12-40)

ஆனால், அந்த ஜமாபந்திகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் எதுவும் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை. அதுமட்டுமல்லாமல், மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. ஆகவே, ஜமாபந்தி முறையை மாற்றியமைத்து அல்லது அதைச் செம்மைப்படுத்த வேண்டிய வழிவகைகளைச் செய்து, அங்கே கொடுக்கப்படுகின்ற மனுக்களில் கூறப்படுகின்ற விஷயங்களை உடனடியாக தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அடுத்த முறை அந்தக் குறைகள் ஜமாபந்தியிலே வராத அளவிற்கு அரசு நிர்வாகம் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாகம் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால், மாவட்டங்கள் சிறிய அளவில் இருந்தால்தான் முடியும். பெரிய மாவட்டங்களாக இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சரியான முறையில் அந்தப் பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க முடியாது. எனவே, பெரிய மாவட்டங்களாக இருப்பதை மாற்றி ஒவ்வொரு மாவட்டத்தையும் சிறிய சிறிய மாவட்டங்களாகப் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

செங்கற்பட்டு மாவட்டத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தையும் இரண்டாகப் பிரித்து, ஒரு மாவட்டத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரையும் வைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, மதுராந்தகம் வட்டமானது தமிழ் நாட்டிலேயே பெரிய வட்டமாக இருக்கிறது. அந்த வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கும் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சரவர்கள்



1983 ஏப்ரல் 12] (திரு. எஸ். டி. உகம்சந்த்)

உத்தரவிட்டிருக்கிறார்கள். இதே மன்றத்திலே அதற்கு உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள் ஆனால் இதுவரையில் அது பிரிக்கப்படவில்லை. எனவே. அதற்கு வேண்டிய வழிவகைகளை விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில உச்சவரம்பு சட்டத்திற்கு இருக்கின்ற அலுவலகம் எங்கள் பகுதியில் இல்லாமல் விழுப்புரத்தில் இருக்கிறது. நில உச்சவரம்பு சட்டத்தால் ஏமாற்றப்பட்டிருக்கின்ற ஜனங்கள் எங்கள் பகுதியில்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, எங்கள் பகுதியில் அந்த அலுவலகம் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் சொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதியில் மட்டும் நகர ஈட்டுப்படி கொடுக்கப்பட்டு வருகிறது; மாவட்டம் முழுவதும் அதை விஸ்தரித்து அங்கே வசிக்கின்ற, வேலை செய்கின்ற அனைத்து அரசு ஊழியர்களுக்கும் நகர ஈட்டுப்படி கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து வரிகளை வசூல் செய்வதில் ரெவின்யூ அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால், அவர்கள் சரியாக வசூல் செய்யாத காரணத்தினால் பஞ்சாயத்துக்கள் போதிய நிதிவசதி இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி, இந்தப் பஞ்சாயத்து வரிகளை வசூல் செய்வதற்கு தனியாகப் பில் கலெக்டர்களை நியமிப்பதற்கு அரசு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்... (மணியடிக்கப்பட்டது)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சார்பிலே மாண்புமிகு அவை முன்னவரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அண்மைக் காலத்திலே நம்முடைய மாநில அரசுக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் இருக்கின்ற நிர்வாகம் கொஞ்சம் கொஞ்சமாகச் சீர்கெட்டு கொண்டு வருகிறது என்பதை நான் வேதனையோடு சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு இங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் தமிழகத்தை எதிர்நோக்கி இருக்கின்ற கடும் வறட்சியைக் கருதி மத்திய அரசாங்கத்தோடு சுமுகமான, இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி,

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1983 ஏப்ரல் 12

அதன் மூலமாக நாம் பெற வேண்டிய உரிமைகளையும், நிதி
ஆதாரங்களையும் பெறுவதில் அதிகமான அக்கறை காட்டுவதை
விட்டுவிட்டு, தங்களுடைய இயலாமையை மறைப்பதற்காக
ஊர்வலங்களை நடத்துவதும், கோஷங்களை எழுப்புவதும்,
பொதுக் கூட்டங்களைப் போடுவதும், சரியான முன்மாதிரியாக
இருக்காது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்குப் பல்வேறு
வாய்ப்புக்கள் இருக்கின்ற காரணத்தால் ஒரு நல்ல சூழ்நிலையை
உருவாக்கி மாநில அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்
கும் உள்ள உறவு நல்ல முறையில் இருப்பதற்கான முயற்சிகளை
வருகின்ற காலத்திலேயாவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று
நான் விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன்பு, இந்த மாமன்றத்திலே, பெங்க
ளூரிலே கூடிய தென் மாநில காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்
களின் மகாநாட்டைப் பற்றியும், அங்கே எடுத்துக் கூறப்பட்ட
கருத்துக்களைப் பற்றியும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.
எனக்குள்ள ஐயமெல்லாம் தமிழக முதலமைச்சரவர்கள் பெங்க
ளூரிலே நடந்த மகாநாட்டில் கலந்து கொள்வதில் காட்டிய
அக்கறையையும், அவசரத்தையும் அண்மையிலே டெல்லியிலே
நடந்த இந்தியா முழுவதிலும் உள்ள முதலமைச்சர்கள் கலந்து
கொண்ட மகாநாட்டிற்குச் செல்வதில் காட்டிக் கொள்ளவில்
லையே, அவர்கள் தமிழகத்தின் சார்பில் அங்கே சென்றிருந்தார்
களேயானால், பெங்களூர் மகாநாட்டில் என்ன முடிவை எடுத்
தார்களோ, என்ன கருத்தைச் சொன்னார்களோ அதை அங்கே
முன் வைத்துப் பேசியிருந்தால் அதற்கான பதிலும் கிடைத்திருக்
கும்; அது நல்ல முயற்சியாகவும் இருந்திருக்கும். ஆனால்
என்ன காரணத்தினால் அங்கே போகவில்லை என்பது தெரிய
வில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

இப்பொழுது சர்க்காரியா கமிஷனை மத்திய அரசு நியமித்
திருக்கிறது. மத்திய அரசாங்கம் நியமித்திருக்கின்ற அந்தக்
கமிஷனின் முன்னால் நாம் சொல்ல வேண்டிய விவரங்களையும்
வாதங்களையும், கருத்துக்களையும் சொல்வதை விட்டுவிட்டு,
ஆளுகின்ற கட்சியே மத்திய அரசாங்கத்திற்கு எதிராக ஊர்வலங்
களை நடத்துவதும், அதிலே தரக் குறைவான கோஷங்களை
எழுப்புவதும், பிறகு அவ்வாறு எழுப்பவில்லை என்று சொல்வ
தும் நல்ல சுமுகமான சூழ்நிலையை உருவாக்காது என்பதை
நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 12] (திரு. என். எஸ். வி. சித்தன்)

உண்மையிலேயே இந்த அரசுக்கு தமிழக மக்களுடைய எதிர்
காலத்திலே அக்கறை இருக்குமானால், மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள், காவிரி நீர்ப் பிரச்சினை, கையெழுத்திற்குத் தயாராக இருக்கின்ற கிருஷ்ணா நீர் போன்ற பிரச்சினைகளில் அதிக அக்கறையை வருகின்ற காலத்திலாவது காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில நாட்களுக்கு முன்னால், தமிழக முதலமைச்சரவர்கள், தமிழக அமைச்சரவை திருத்தி அமைக்கப்படவிருக்கிறது என்று சொன்னார்கள். ஆண்டுக்கு ஒரு முறை என்று கூட நான் கருதுகிறேன் ; அதுமாதிரியான அறிவிப்பைச் சொல்லவேண்டிய அவசியம் என்ன என்றே தெரியவில்லை. இதுமாதிரி அடிக்கடி சொல்லப்படுகின்ற காரணத்தால் அமைச்சர்கள் மத்தியிலே ஊசலாடுகிற நிலைமை இருக்கிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஓராண்டிற்கு ஒரு தடவை மந்திரி சபையில் மாற்றம் இருக்கிறதே, அதனை டில்லியிலே உள்ள அமைச்சர்கள் எப்படித் தாங்கிக்கொள்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒரு உதாரணத்திற்கு இன்னொரு உதாரணம் சொல்வது பொருத்தமாக இருக்காது. எப்போதும் நீங்கள் டில்லியையும், உத்தரப்பிரதேசத்தையும் சொல்கிறீர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, டில்லியிலே ஆளுகின்ற கட்சி அவருடைய கட்சி என்பதால்தான் சொல்கிறோமே தவிர, மற்றபடி டில்லியைப் பற்றி சொல்ல வேண்டிய தேவையில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழகத்திலே உள்ள நிர்வாகம், சிறப்பாக இருக்க வேண்டும், திறமையாக இருக்க வேண்டும், மக்களுக்கு நல்லமுறையிலே இந்த அமைச்சரவை பாடுபட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு ஆட்சிப் பொறுப்பை தலைமையேற்று நடத்துகிறவர்களுக்கு என்னென்ன சங்கடங்கள் இருக்கும், என்னென்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்களுக்கு என்னென்ன சங்கடங்கள் இருக்குமென்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தச் சங்கடங்கள் எல்லாம்
அடிக்கடி அறிவிப்பு செய்வதனால், நின்றுவிடும் என்று கருது
கிறீர்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : யாருக்கு யார் பதில்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றே புரியவில்லை.
இன்றைக்குப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் சில மாறுதல்
களைச் செய்வதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள். மாறுதல்
செய்யாமலும் இருக்கலாம். அதைப்பற்றி அவர்கள் பேசுவ
தற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள். அது எந்த விதத்திலே
உங்களுடைய கடமைகளைப் பாதிக்கிறது, கவலைக்கு உள்
ளாக்குகிறது, நிதானம் இழக்கச் செய்கிறது என்பது எனக்குப்
புரியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : எங்களுடைய நிதானத்தைப்
பற்றி யாருக்கும் சந்தேகம் வரவில்லை. அங்கே உள்ளதைப்
பேசுவதனால் சங்கடம் தீர்ந்துவிடப் போகிறதா ? இந்த
நிர்வாகம் நன்றாக இருக்க வேண்டும். அதற்குத் துணையாக
இருக்க வேண்டுமென்று சொல்லி வருகிறார்களே தவிர, வேறு
இல்லை.

நீண்ட நாட்களாக ஊராட்சித் தேர்தல் நடைபெற
வில்லை. மொத்த மேலவை உறுப்பினர்கள் 63 பேர்கள்.
21 பேர்கள் பல ஆண்டுக்காலமாக இல்லாமல் இருக்கிறார்கள்.
உள்ளாட்சித் துறையில் அங்கே பிரதிநிதிகள் இல்லாத காரணத்
தால், 3-ல் ஒரு பங்கு காலியாக இருக்கிறது. உங்களைக்
கேட்டுக்கொள்வதெல்லாம் 10, 12 ஆண்டுகளாக உள்ளாட்சித்
தேர்தல் இல்லாத காரணத்தால், இன்றைய தினம் மக்களுக்குச்
சரியான பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால். தமிழகத்திலே
நிர்வாகம் நல்ல முறையிலே இடங்கவில்லை. இதுமாதிரியான
தேர்தல்களை நடத்தி, அதன் மூலமாக மக்களுக்குப் பிரதிநிதித்து
வம் கொடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.
மாண்புமிகு அமைச்சர்களுக்கு நாங்கள் கடிதம் எழுதுகிற
போது, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முறையாக
பதில் வரவில்லை. பல்வேறு பிரச்சினைகளிலே பொதுமக்கள்
பிரச்சினைகளைக் கவனத்திற்குக் கொண்டுவருகிற நேரத்திலே:
அது ஆய்வில் இருக்கிறது. விசாரணை செய்து கொண்டிருக்கி
றோம். நடவடிக்கை எடுக்கிறோம் என்ற பதில் கூட வர
வில்லை என்று தெரிவித்திருக்கிறோம். எனவே மக்களுடைய
பிரதிநிதிகளுக்கு பதிலளிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 12—50)

அரசாங்க விழாக்களிலே அமைச்சர்கள் கலந்து கொள்கின்ற
நேரத்திலே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சரியான மதிப்பு
கொடுக்கப்படவில்லை, உரிய இடம் கொடுக்கப்படுவது இல்லை.
திரு இளையபெருமாள் அவர்கள் தொகுதியிலே, எழும்பூரிலே,
சிறுவர் மருத்துவ மனைத் தொடக்கவிழாவில் இளைய
பெருமாள் அவர்கள் பெயர் கூட போடவில்லை. அதிலே
கூட அவர்கள் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலையை
உருவாக்கி இருக்கிறார்கள். இதை அரசாங்கம் உடனடியாக
மாற்ற வேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஊட்டியிலே
பிளவர் ஷோ என்று ஒவ்வொரு ஆண்டும் நாம் நடத்துகிறோம்.
எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர் கல்லன் அவர்கள் பேசு
வதாக அறிவிக்கப்பட்டு இருந்தும்கூட, நம்முடைய மாண்பு
மிகு முதல் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட அந்த விழா
விலேகூட அவர்களை பேசச்சொல்ல முடியாத ஒரு நிலைமையை
உருவாக்கி இருக்கிறார்கள். இந்த மாதிரியான நிலைமை
களை அரசாங்கம் மாற்ற வேண்டும். என்னுடைய தொகுதி
யிலேகூட 25 ஆண்டுகள் முடிந்து வெள்ளிவிழா கொண்டாடு
கிற ஒரு நிகழ்ச்சியிலேகூட என்னுடைய பெயர் ஏதோ பத்-
தோடு பதினொன்றாகப் போடப்பட்டு இருந்ததே தவிர தொகுதி
யினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே இந்தத்
தேதியிலே இந்த விழா நடைபெறுகிறது, உங்களுக்குச் சௌகரி
யப்படுமா என்றுகூடஎன்னைக் கேட்காமலேகூட அந்த அழைப்பி
தழைத்தயாரித்து அச்சடித்து விட்டார்கள். இது போன்ற முறை
கள் மாற்றப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

தமிழகத்திலே இன்றைக்கு வறட்சி மிகக் கடுமையாக
இருக்கிறது. பல்வேறு காலகட்டங்களிலே நாம் சொல்லியிருக்கி
றோம். வருகின்ற மாதங்களிலே வறட்சி இன்னும் கடுமை
யாக இருக்கும், ஆகவே அரசாங்கம் முன் எச்சரிக்கையாக, இந்த
வறட்சியைப் போக்குவதிலே பல கோடிக்கணக்கான ரூபாய்களை
செலவழிக்கிற நேரத்திலே அது முறையாக செலவழிக்கப்
படுகிறதா என்பதை நல்லமுறையிலே ஆய்ந்து பார்த்துச் செல
வழிக்க வேண்டும். இன்னும்கூட ஒன்று சொல்வேன். இந்த
வறட்சி தீருகின்ற வரையிலே அமைச்சர் அவையிலே இருக்கின்ற
அமைச்சர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சர் என்று
பொறுப்பேற்றுக்கொண்டு அவர்களுக்கு இருக்கிற பல்வேறு
பணிகளை எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு இந்தச் செலவுகளை
முறையான முறையிலே செய்வதற்கான முயற்சியிலே, எங்கெங்கெ
உதவிகள் தேவைப்படுகின்றனவோ, அங்கே எல்லாம் அந்த

(திரு. என். எஸ். வி. சித்தன்)    [1983 ஏப்ரல் 12

வியை வழங்குவதிலே அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நேற்றுகூட மாலை பத்திரிகை
யிலே நான் பார்த்தேன். தமிழகத்திலே இருக்கிற வறட்சி
வேலைக்கு அந்தநிகழ்ச்சிபானை சோற்றுக்குஒருசோறுபதம் என்ற
முறையிலே மேலும்ஆந்திராவிலே இருந்து அண்மையிலே கொத்
தடிமைகளாக இருந்தவர்கள் தமிழகத்திற்கு மீட்கப் பட்டு வந்
தார்கள். 500, 600 பேர்கள் மீட்கப்பட்டு வந்தார்கள். அவர்
கள் எல்லாம் சேலம் மாவட்டத்திலே ஒரு பகுதியிலே குடி
வைக்கப்பட்டார்கள். ஆனால் கடந்த சில மாதங்களாக தமி
ழகத்திலே இருக்கிற நிகழ்ச்சியை வறட்சியைக் கண்டு அவர்
கள் ஆந்திராவிற்குப் போய் பழையபடி வேலை செய்கின்ற
நிலைமைக்குப் போய் இருக்கிறார்கள். தமிழகத்திலே இன்
றைக்குக் குடிநீர் கிடையாது. அரிசி கிலோ 6 ரூபாய் என்று
இருக்கிற காரணத்தாலே மீண்டும் ஆந்திரா போகின்ற
நிலைமை இருக்கிறது. எனவே இந்த நிலையை மாற்றுவதற்கு
அரசாங்கம் பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளிலே தேவைப்
பட்டவர்களுக்கு அந்த உதவிகள் போகின்ற அளவிற்கு முயற்சி
களை எடுத்துக்கொள்ள ,வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணி என்று சொல்லு
கின்ற நேரத்திலே மதுரைக்குப் பக்கத்திலே விமான நிலையத்
திற்கு அருகிலே முழுவதும் அரிசனங்களாக இருக்கின்ற கிராமம்.
சின்ன ஓடை என்ற கிராமம். அந்தக் கிராமத்திலே இருக்கிற
இறைப் பணியாளர்கள் ஓர்ல்ட் விஷன் என்ற வெளிநாட்டு நிறு
வனத்தோடு, அதன் உதவியோடு அந்த ஊரிலே இருக்கின்ற
மக்கள் இனாமாக சமுதாயக் கிணறு வெட்டிக் கொடுப்பதற்கான
முயற்சியை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் தண்ணீர்
வசதிகள் வேறு இடத்திலே இல்லாத காரணத்தாலே கண்மாயின்
ஒரு ஓரத்திலே அவர்கள் வெட்ட ஆரம்பித்தார்கள். அதற்கு
தகுந்த அதிகாரிகள் இடத்திலே கொண்டுவந்து கொடுத்து, அதற்
குப் பின்னாலே அவர்கள் வெட்ட ஆரம்பித்து இருக்கிறார்கள்.
ஆனால் என்ன காரணத்தாலோ அந்தக் கிணறை முக்கால்வாசி
வெட்டி முடித்ததற்குப் பின்னாலே இன்றைக்கு அரசாங்
கம் அதற்குத் தடை உத்தரவு வழங்கி இருக்கிறது. மேலும்
வெட்டக்கூடாது என்று சொல்லி, அதை வெட்டுகின்றவர்கள்
நாங்கள் அதை இனாமாக வெட்டி, அதை அரசாங்கத்தின் கையிலே
கொடுத்துவிடுகிறோம் என்று சொல்லியதற்குப் பின்னாலேகூட
அரசியல் காரணமாகவோ, அல்லது வேறு காரணமாகவோ அது
தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர் அவர்களிடம் நான் 2 மாத கால
மாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். இது ஒரு நியாயமான
முயற்சி, ஏழைகளுக்கு உதவி செய்கிற முயற்சி, நமக்கு சல்லிப்
பைசாகூட இதிலே செலவு கிடையாது, அரசாங்கம் இதை
ஊக்கப்படுத்த வேண்டும். அவர்கள் அந்தக் கிணற்றை வெட்டி



1983 ஏப்ரல் 12]    (திரு. என். எஸ். வி. சித்தன்)

முடிக்கச் சொல்லவேண்டும், அல்லது அரசாங்கமே அதை ஏற்றுக்
கொண்டு, அந்தக் கிணற்றை வெட்டிக்கொடுத்து அந்தப் பகுதி
யிலே இருக்கின்ற அந்த ஆதி திராவிட மக்களுக்கு இந்த உதவி
யைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இனியா
வது அந்த வேலையைத் துரிதப்படுத்துவார்கள் என்று நான்
நினைக்கிறேன்.

அடுத்து இங்கே பல உறுப்பினர்கள் சொன்னதைப் போல
இன்றைக்கு மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு சடங்காக இருந்து
கொண்டு இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தினுடைய
தலைவராக இருப்பவர் நிச்சயமாக மக்கள் பிரதிநிதியாகத்
தான் இருக்கவேண்டுமே தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர்
இருக்கக் கூடாது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தினுடைய பணிகள்
இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டும். அது ஒரு ஆலோசனைக்
குழு என்ற அளவிலேதான் இருந்து கொண்டிருக்கிறது.
அதனுடைய முடிவுகளுக்கு, அங்கே எடுக்கப்படுகிற தீர்மானங்
களுக்கு எல்லாம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சி
களை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சிக்கு கடந்த 14 ஆண்டுகளாக
தேர்தல் இல்லை. இங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத கார
ணத்தால் ஆலோசனைக் குழு ஒன்றை நியமித்து அதன்
மூலமாக சென்னையிலே இருக்கின்ற பல்வேறு குறைகளை எல்லாம்
கவனிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற
கருத்தை பலர் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். மதுரை
மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். அதை இரண்டாகப்
பிரித்து, திண்டுக்கல்லை தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்ட
மும், மற்றும் மதுரைக்கு வடக்கே இருப்பவற்றை ஒரு மாவட்ட
மாகவும் என்று அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்
டுக்கொள்கிறேன். அடுத்து நீண்ட காலமாக சொல்லிக்கொண்டு
இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் தமிழ
கத்திலே பல இடங்களிலே, பல மாவட்டங்களில் உள்ள இடங்
களிலே ஒரு தெரு நம்முடைய மாநிலத்திற்கும், இன்னொரு
தெரு வேறு மாநிலத்திற்கும் என்ற நிலை இருக்கிறது.
கன்னியாகுமரி மாவட்டத்திலேகூட இது மாதிரி ஒரு கிராமம்
இருக்கிறது. நம்முடைய வட ஆற்காடு மாவட்டத்திலே டி. என்.
பாளையம் என்ற ஊரில் உள்ள ஒரு தெரு அதனுடைய வடபகுதி
வட ஆர்க்காடு மாவட்டத்திற்கும், தென் பகுதி பாண்டிச்சேரி

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1983 ஏப்ரல் 12

மாவட்டத்திலும் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே அபிவிருத்திப் பணிகளை மிகச் செம்மையாக செய்யமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தக் கிராமத்தை நமது மாநிலத்தோடு அல்லது பாண்டிச்சேரி மாநிலத்தோடு இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இன்றைக்குக் கிராம அதிகாரிகள் இல்லை. பல மாதங்களாக கிராம அதிகாரிகள் இல்லை. இதனால் கிராமத்தில் உள்ள மக்கள் அடைகின்ற தொல்லைகள் ஏராளம். ஒரு சாதாரண சர்ட்டிபிகேட் வாங்குவதற்கு முடியவில்லை. கிராம அதிகாரிகள் இருந்த நேரத்தில் ஒரு சர்ட்டிபிகேட் பெற வேண்டும் என்பதற்கு ரூ. 2 ரூ. 3 கொடுப்பார்கள் என்று சொன்னால், இன்றைக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைத் தேடிக்கொண்டு செல்ல வேண்டியிருப்பதால் அந்த ரேட் உயர்ந்து 25 ரூ. 50 ரூ. என்ற நிலைமைகள் இருக்கின்றன. இதனால் ஏழை மக்கள் சான்றிதழ் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களால் சான்றிதழ் பெறமுடியவில்லை. அரசாங்கக் கணக்குகள் சரியாக எழுதப் பெறவில்லை. தமிழக அரசிற்கு வரவேண்டிய கடன் எவ்வளவு இருக்கிறது? வரிவசூல் எவ்வளவு இருக்கிறது? அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன? என்பவை கூட தெரியாமல் இன்றைக்கு நிர்வாகம் ஸ்தம்பித்துக் கிடக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஆயிரக்கணக்கான கோப்புகள் பைசல் ஆகாமல் தேங்கிக்கிடப்பதாக அறிகிறேன். இப்படி நிலைமைகள் இருந்தால் அது எப்படி இருக்கும். எனக்கு பழைய காலத்துப் பாடல் ஒன்றுதான் நினைவுக்கு வருகிறது.

முன்னே கடிவாள மூன்றுபேர் தொட்டுஇழுக்கப்
பின்னே இருந்து இரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி.

என்பதைப்போல இன்றைக்கு நிர்வாகம் மெல்ல ஊர்ந்துகொண்டு இருக்கிறது. இதனால் மக்கள் படும் அல்லல் அவதிகள் நிறைய இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதற்காக ஒரு தொகையை அவர்கள் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம் என்றும் சொல்கிறார்கள். இது ஒரு நியாயமான கோரிக்கை. அது மட்டுமல்ல, மத்திய அரசாங்கம் நான்காவது ஊதியக் குழுவை நியமிக்க இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலும் அரசு ஊழியர்களின் விகிதங்களை மாற்றியமைக்க ஊதியக் குழு நியமிக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்



1983 ஏப்ரல் 12] (திரு. என். எஸ். வி. சித்தன்)

கிறேன். பல்வேறு இலாகாக்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாளர்கள் தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க துரித நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேர்முகத் தேர்வுகள் நடத்தும் அதிகாரிகள் அந்தத் தேர்வுக்கு வருபவர்களின் திறமையை ஆய்வு செய்கிறநேரத்தில் அந்த மதிப்பெண்களை பென்சிலால் எழுதவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதாக அறிகிறேன். இது பல்வேறு ஊழல்கள் ஏற்படுவதற்கு வழிகோலுகிறது. ஆகவே, அந்தப் பட்டியல் தயாரிக்கின்ற நேரத்திலேயே அதைச்சரியான முறையில் தயாரிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் வெளியிடும்போது, யார் யார் எவ்வளவு மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறார்கள் என்ற பட்டியலும் வெளியிடப்படவேண்டும்.

தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுகா அரகண்டநல்லூரில் உள்ள அரிசி ஆலை அரசிடமிருந்து நெல்லைப் பெற்றுக் கொண்டு அரிசியை அரைத்துக்கொடுக்காமலேயே பல லட்சக்கணக்கான பணம் மோசடி செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது குறித்து மதிப்பீட்டுக் குழு—டாக்டர் சமரசம் தலைமையில் இருந்தபோது அதைப் பற்றி நாங்கள் எல்லாம் பார்த்து, அதற்குக் காரணமாக இருந்தவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூடப் பரிந்துரை செய்து இருக்கிறோம். அப்படியிருந்தும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுமாதிரி நிலைமைகள் நடந்து கொண்டே இருந்தால் பல லட்சக்கணக்கான பணம் கொள்ளை அடித்துக் கொண்டு போகப்படும் சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதிலே அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்து, இனி இத்தகைய மோசடிகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் ஆதிதிராவிட மக்களுக்காக ஒரு சமுதாயக் கூடம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தச் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான கட்டுமான வேலைகள் கூட தொடங்கப் பட்டன. அங்கே சில ஆக்கிரமிப்புகள் நடைபெற்றுவிட்ட காரணத்தால் அந்த சமுதாயக் கூடம் கட்டமுடியாமல் போய்விட்டது. ஆகவே, அந்தச் ஆக்கிரமிப்புகளை நீக்கி, அரசாங்கம் விரைவில் அங்கே அந்தச் சமுதாயக் கூடத்தைக் கட்ட வேண்டும் என்று கேட்டு, இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவாக்கிக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

[1983 ஏப்ரல் 12

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாநில ஆட்சித்
தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்
ஆகிய மானியக் கோரிக்கைகளுக்காக ரூ. 22,14,91,000 கோரப்
பட்டு இருப்பதை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச்சொல்ல
விழைகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொறுத்த
வரையில், இன்றைக்கு ஏற்கனவே பல ஆண்டுகளுக்குமுன்னால்—
சொல்லப்போனால் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்
களையும் பிரபுக்கள் என்று அழைக்கப்படும் சூழ்நிலை மாற்றப்
பட்டு, இன்றைக்குக் குடியானவன் கூட, ஏழை எளிய மக்கள் கூட
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி தங்களுடைய
கருத்துக்களைச் சொல்ல முடியும், அவர்களிடத்தில் சென்று
நியாயம் கேட்டுப் பெறமுடியும். அந்த வகையில் இன்றைக்கு
நல்ல முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணியாற்று
கிறார்கள். அதேநேரத்தில் இன்றைக்கு மாவட்ட வளர்ச்சி மன்
றக் கூட்டங்களைப் பொறுத்தவரையில், இங்கே பேசிய மாண்பு
மிகு உறுப்பினர்கள் அது நல்லமுறையில் செயல்படுத்தப்பட
வேண்டும் என்று சொன்னார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றச்
கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பெற வேண்டும் என்றும் கருத்தைச்
சொன்னார்கள்.

(பிற்பகல் 1–00)

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் பல்வேறு மாவட்
டங்களில் நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
அந்தந்த பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகிற தவிர்க்க முடியாத பணிகள்
அல்லது வேறு நிலைமைகள் காரணமாக அந்தக் கூட்டத்தில்
கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டு, கூட்டத்திற்கு
கோரம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு அதன் காரணமாக
வளர்ச்சி மன்றக் கூட்டம் பல சந்தர்ப்பங்களில் நடைபெற
முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அதற்கு ஒரு மாற்று
ஏற்பாடாக ஒரு மாதத்திலே இந்த தேதி அல்லது இரண்டு
மாதத்திற்கு ஒரு தடவை இந்தத் தேதியில் வளர்ச்சி
மன்றக் கூட்டம் நடைபெறும் என்று முடிவுசெய்து அந்த
அடிப்படையிலே குறிப்பிட்ட தேதியில் மாவட்ட வளர்ச்சிமன்றக்
கூட்டம் நடைபெறுவதாக இருந்தால் சட்டமன்ற உறுப்பினர்கள்
அந்தத் தேதியைக் குறித்து வைத்துக் கொண்டு அந்த நாளில்
கூட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். அல்லது
வளர்ச்சி மன்றக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னால் சம்பந்தப்
பட்ட உறுப்பினர்களைத் தொலைபேசி மூலம் கேட்டு, கூட்டத்தை
வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.



1983 ஏப்ரல் 12] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

அதே நேரத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற முடிவுகள், பற்றி என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன, அதிலே என்னென்ன பணிகள் நடைபெறுகின்றன அல்லது நடத்தி முடிக்கப்பட்டன என்ற விவரங்களைச் அதற்கு அடுத்த கூட்டத்திலே சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள ஓரளவுக்கு அக்கறை ஏற்பட்டு, இதிலே அதிகமான கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போன்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சற்று கூடுதல் அதிகாரம் இருக்க வேண்டும். இந்த வறட்சி நிவாரணப் பணிகளை முன்னிட்டாவது மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கூடுதல் அதிகாரம். தந்தாக வேண்டும். குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் காலதாமதம் ஆகாமல், பொது மக்கள் மனம் தளராமல் இருக்க வேண்டுமென்றால் அந்தப் பகுதியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட குடிநீர் வடிகால் வாரிய பொறியாளரோடு தொடர்பு கொண்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பு இருக்கிறது என்று கருதினால், பொறியாளரை கலந்து பேசி, இதுதான் முறை என்று மாவட்ட ஆட்சித் தலைவரே முடிவு செய்து, ஆணை பிறப்பிக்கின்ற அதிகாரத்தை இந்த நேரத்தில் அவருக்குத் தந்தாக வேண்டும்.

அதைப்போன்று வளர்ச்சித் திட்டப் பணிகள் மிகுதியாக இருப்பதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே அதிகமான பணியாளர்களை அமர்த்தியாக வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்னால் நியமிக்கப்பட்ட பணியாளர்களின் அளவிலேயே இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். நடைபெற வேண்டிய பணிகளை உத்தேசித்து இன்னும் அதிகமான பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

மேலும் வளர்ச்சித் திட்டப் பணிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் மாவட்டத்திலே டி. ஆர். ஓ., பி.டி. ஓ., போன்ற அதிகாரிகள் இருந்தாலும் இந்தப் பணிகளைச் சரியாகவும் விரைவாகவும் செய்ய மாவட்ட வளர்ச்சி அதிகாரி என்று தனியாக ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும். உள்ளாட்சித் துறையிலிருந்து ஒருவரை புரமோட் செய்து, அவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்களைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த அமைச்சர்களை எல்லாம் மக்கள் பார்க்க முடியுமா ? பார்த்தாலும் அவர்களிடம் பேச முடியுமா? அமைச்சர்கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்றுசாதாரண மக்களுக்கு தெரியாமல் இருந்த சூழ்நிலை போய், இன்றைக்கு ஏழை எளிய

மக்களும் சாதாரன மக்களும் கூட அமைச்சர்களைப் பார்த்து பேசும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் கட்டிலுக்கு வந்தபிறகுதான் தமிழ்நாட்டிலே அமைச்சர்களும் சாமானியர்களே என்ற சூழ்நிலையை உருவாக்கி, இந்த நாட்டு மக்கள் மத்தியிலே இருந்து வந்த ஒரு சாதாரண மனிதன்தான் அமைச்சர், அவர் ஒரு தெய்வம் அல்ல, மக்களால் பார்க்க முடியாதவர் அல்ல என்ற உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தினார்கள். அதற்கு முன்னாலே இருந்தவர்கள் படகு கார்களிலே பவனி வந்து, அமைச்சர் எங்கே இருக்கிறார் என்று தெரியாமல் வீட்டின் ஓரத்திலே ஒளிந்துகொண்டு , மக்கள் மத்தியில் சஞ்சாரம் இல்லாமல், மக்கள் தொடர்பு இல்லாமல் இந்த நாட்டிலே வாழ்ந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் இன்றைக்கு ஜனநாயகத்திற்கு விளக்கம் அளிக்கிறோம் என்று சொல்லி அரசியல் சித்துக்களை ஆடிக் கொண்டிருக்கிறார்கள். நான்கு தினங்களுக்கு முன்னால் கூட** தொலைக் காட்சியிலும், வானொலியிலும் தினந்தோறும் சொல்லுகின்ற அல்லது சொல்ல வைக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நாங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக ஊர்வலம் நடத்தியதைப் பற்றி அவர்களுக்கு சொல்ல முடியவில்லை ; அத்தகைய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது. நீங்கள் உட்காருங்கள். அவர் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் பேசிய கருத்தின் அடிப்படையில்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னால் அமைச்சர்களை மக்கள் பார்க்க முடியாது என்று சொன்னார்கள். இப்போது சட்டமன்ற உறுப்பினர்களாலேயே பார்க்க முடியாத அமைச்சர்களும் இருக்கிறார்கள், என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி திடீரென்று எழுந்து கருத்து பரிமாற்றம் செய்யக்கூடாது ; என்னுடைய அனுமதி பெற்றே பேச வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



டாக்டர் கே. பி. இராமலிங்கம் : புரட்சித் தலைவர்
அவர்கள், ஆட்சிக்கு வந்ததற்கு பின்னாலே, புரட்சித் தலைவர்
அவர்களுடைய அமைச்சரவையை மக்கள் வந்து அமைச்சர்களைப்
பார்க்க வேண்டிய கட்டாயம் இல்லாமல், அமைச்சர்களாகவே
சென்று மக்களைப் பார்க்கின்ற சூழ்நிலையை, புரட்சித் தலைவர்
அவர்களுடன் ஊர்வலம் வந்தவர்கள் நேரிடையாக சந்தித்தார்கள்
நியாயமாக ஊர்வலம் வந்தவர்கள், நேர்மையாக ஊர்வலம்
வந்தவர்கள், நாணயமாக பணிவோடு ஊர்வலம் வந்தவர்கள்,
நேரிலேயே சென்று அவரை சந்தித்தார்கள். பண்பற்ற தன்மையோடு நாகரிகம் இல்லாமல் வந்தவர்களைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. அப்படி நாணயத்தோடு ஊர்வலத்தில் வந்த பெண்களை, தாய்மார்களை, பரிவோடு, பாசத்தோடு, தாய் உள்ளத்தோடு, தாய்மார்களின் ரட்சகன் என்ற அந்த அடிப்படையிலே அவர்களுடைய குறைகளை கேட்டார்கள். அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள்.

பல்வேறு வகையான தேவையில்லாத ஊர்வலங்கள் உண்டு. நாகரிகம் இல்லாத ஊர்வலங்கள் உண்டு. நேர்மையற்ற ஊர்வலங்கள் உண்டு. **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அச் சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : அதை எல்லாம் பார்க்கிறோம். ஆகவேதான் நியாயமான ஊர்வலங்களை புரட்சித் தலைவர் அவர்கள் நேரிலேயே கண்டார்கள். அமைச்சர் பெருமக்களும் மக்களோடு மக்களாக நின்று, மக்களை சந்திக்க என்றைக்கும் தயாராக இருக்கிறார்கள் அப்படி அவர்கள் சந்திக்கின்ற நேரத்திலே எல்லாம், அவர்களிடம் வருகின்ற பல்வேறு கோரிக்கைகளை, அல்லது மக்களின் நலன்களுக்காக போடுகின்ற பல்வேறு திட்டங்களை செயலாக்குகின்ற நேரத்திலே, ஒவ்வொரு பிரச்னைக்கும் செயலாளர்களோடு நேரிடையாக பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டு வருகிறது. இதனால் ஒரு மாற்றம் ஏற்படுத்துகின்ற வகையில், அமைச்சர்களின் சீனியர் பி.ஏக்கள் எல்லாம் சாதாரண சூப்பிரண்டென்டின் கேடர்களிலே உள்ளனர். அவர்கள் ஆபிசர்களாக இருக்கின்ற செயலாளர்களோடு, கலந்து பேசுகின்ற தன்மையிலே வரும்போது, அவர்கள் அச்ச உணர்வு இல்லாமல் பேச முடியாது. ஆகவே, குறைந்தபட்சம் ஐ. ஏ. எஸ். என்று இல்லாவிட்டாலும், ஒரு டி. ஆர். ஓ. கேடரிலாவது, ஒரு சப்-கலெக்டர் கேடரிலாவது அமைச்சர்களின் சீனியர் பி. ஏக்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஏனென்று சொன்னால், பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்திலே பல இன்னல்களை அமைச்சர் பெருமக்கள் சந்திக்க நேரிடுகிறது. இவர்கள் பேசி, அவர்கள் சட்டச் சூழ்நிலைகளின் காரணமாக மறுப்பு கொடுத்துவிட்டால், மக்களுக்கு நியாயமாக ஆற்ற வேண்டிய பணிகளுக்கு தடங்கல் ஏற்படும். சட்ட பிரச்சினைகள் காரணமாக, அமைச்சர்கள் பி. ஏக்களால் நேரிடையாக கலந்து பேசுகிற சூழ்நிலை இல்லாமல் போய்விடும். ஆகவே அமைச்சர்களுக்கு, சற்று கூடுதலான பதவியில் உள்ளவர்களை சீனியர் பி.ஏக்களாக, கெஜட்டட் பி. ஏக்களாக அமர்த்த வேண்டியது அவசியம் என்று சொல்லி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சி தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியங்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். எனக்கு முன்னாலே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் என்னுடைய அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள், அமைச்சர்கள் எல்லாம் பொது மக்கள் மத்தியிலே இருந்து ஒதுங்கியிருந்த காலம் ஒன்று இருந்தது என்று குறிப்பிட்டு பேசினார்கள். நிச்சயமாக அவர் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையை சொல்லியிருக்க மாட்டார் என்று நம்புகிறேன்.... ....(குறுக்கீடு)

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டபோது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே அந்த முறை மாறியிருக்கிறது என்று சொன்னேன். அதற்குப் பின்னாலே தான் அவர்களும் ஆண்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விட மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : 1980 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது முறையாக தமிழகத்தை ஆள வந்தபோது, ஆளுநர் உரையிலே மாண்புமிகு பட்வாரி அவர்கள் தெரிவித்த கருத்தை நான் முன்னுரையாக வைக்க விரும்புகிறேன். 'தாழ்வோடு உள்ள மக்களுக்கு துடிப்போடு என்னுடைய அரசு பணியாற்றும் என்றும், வறுமை கோட்டிற்கு கீழே வாழும் அனைத்து மக்களின் வாழ்விலும் விளக்கேற்றி வைக்க தன்னால் ஆன எல்லாவற்றையும், தமிழக அரசு செய்ய உறுதி கொண்டிருக்கிறது என்றும்' அவர் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டுள்ளார்கள்.



ஆனால் இன்றைக்கு இந்த விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசிய முதல் முதலாக பேசிய ஆளும் கட்சி உறுப்பினர், நிர்வாகம் தேவையான அளவுக்கு நல்ல முறையிலே நடை பெறவில்லை, நிர்வாகம் முன்னேற்ற பணிகளிலே செல்ல வில்லை, அதற்குக் காரணம் அதிகாரிகளின் மெத்தனப் போக்கு தான் என்று குறிப்பிட்டார். ஆக, ஆளும் கட்சி எடுத்துக் கொண்ட உறுதி மொழிக்கும், நடைமுறைக்கும் மிகப் பெரிய பள்ளம் இடையிலே இருக்கிறது என்பதை துவக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார்கள். ஆளும் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் மட்டும் அல்ல, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்த கருத்தினையும்—நிர்வாகத்தைப் பற்றி—மாதிரிக்காக நான் அவைக்கு வைக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

தலைமைச் செயலகத்தில் நாங்கள் போடும் உத்தரவைக் கூட அமலாக்குவதற்கு தலைமைச் செயலகத்தில் இருப்பவர்கள் 6 மாதங்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்று நம்முடைய முதல்வர் ஒரு முறை வருத்தப்பட்டுக் குறிப்பிட்டார். கடந்த ஆண்டு கூட வேறு ஒரு கருத்தைச் சொன்னார்கள். கடமை உணர்ச்சியற்ற அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டால் கூட பரவாயில்லை என்று ஒரு கருத்தையும் அவர் சொன்னார். யாரும் அதை மறுக்க முடியாது. இதை நாங்கள் அனுபவத்திலேயே உணருகிறோம். கலெக்டர்களாக இருப்பவர்கள், டி.ஆர்.ஓ. ஆக இருப்பவர்கள் தலைமைச் செயலகத்திலே இருப்பவர்களுக்கு அர்ஜண்ட் என்றோ, இம்மிடியட் என்றோ, ஸ்பெஷல் என்றோ குறிப்பு கொடுத்து விவரங்களை எழுதினாலும் கூட அதற்கு பதில் அல்லது நிவாரணம் கிடைப்பதற்கு ஓராண்டுக்குமேல் ஆகின்றது என்பதை நான் வேதனையோடு ஆதாரங்களோடு தெரிவித்துக்கொள்ள முடியும். ஆகவே இன்று இருக்கின்ற பிரச்சினை நிர்வாக அமைப்பிலே புதிய மாறுதல் தேவை. புதிய சிந்தனை தேவை. சோசலிசம், சமதர்மம், ஜனநாயகம் என்ற தத்துவங்களை ஏற்றுக்கொண்ட இந்த நாட்டில் அதை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு இந்தத் தத்துவங்களால் ஏற்படக்கூடிய நன்மை கிட்டவேண்டும். ஆனால் இன்றைக்கு நிர்வாகம் மிக அதிகமான அளவுக்கு முடக்கப்பட்டு விட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து வீராணம் திட்டம் பற்றிய ஒரு சர்ச்சை இங்கே இந்த அவையிலே வந்தது. வீராணம் திட்டத்தினைப் பொறுத்தவரையிலே அண்ணா அவர்கள் காலத்திலே உருவாக்கப்பட்ட கலைஞர் காலத்திலே பணி தொடங்கப்பட்ட ஒரு அருமையான

திட்டம். 20, 30 அல்லது 50 ஆண்டுகளுக்குப் பின்னால் கூட
சென்னையில் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு முன்
எச்சரிக்கையாக போடப்பட்ட அருமையான திட்டம். 1976
ஆம் ஆண்டிலே கவர்னர் ஆட்சி இருந்தபோது நியமிக்கப்பட்ட
குழு இந்தத் திட்டம் குறைபாடு உடையது என்றோ, திட்டத்
திற்கு தேவையான தண்ணீர் காவிரியிலிருந்து கிடைக்காது
என்றோ சொல்லவில்லை. திட்டம் நல்ல திட்டம் என்று அந்த
நிபுணர் குழு சொல்லி இருக்கின்றதே தவிர வேறு எந்தவிதமான
தவறும் அந்தத் திட்டத்திலே கிடையாது. ஆகவே அதையும்
நம்முடைய தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் அரசு ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டு
வந்தால் சென்னை நகரில் இருக்கின்ற குடிநீர் பிரச்சினையைத்
தீர்ப்பதற்கு எதிர்காலத்திலே வசதிகள் ஏற்படும். அதோடு
ஒரு புதிய செய்தி வந்திருக்கின்றது. நெய்வேலியிலிருந்து
இன்றைய தினம் வெளியேறுகின்ற இலட்சக்கணக்கான லிட்டர்
உள்ள தண்ணீர் கூட அதிலே இணைக்கப்பட்டு சென்னைக்குக்
கொண்டுவர இயலும். அப்போது சென்னையிலே உள்ள
தண்ணீர் கஷ்டம் தீரும். ஆகவே இந்தத் திட்டத்தினை ஏற்று
நடத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து பொதுவான ஒரு கருத்தினைத் தெரிவிக்க விரும்பு
கிறேன். திருச்செந்தூர் தேர்தலாக இருந்தாலும், பெரியகுளம்
தேர்தலாக இருந்தாலும் தேர்தலிலே கட்சிக் காரர்கள் என்ற
முறையில் அமைச்சர்கள் பணியாற்றுவதை யாரும் குறை சொல்ல
முடியாது. ஆனால் தேர்தல் முடிந்த பிறகும் கூட அங்கே
மினிஸ்டர்ஸ் கேம்ப் செய்வது என்பது எந்த காலத்திற்கும் நம்
முடைய ஜனநாயக நாட்டிலே முறையாக இருக்க முடியாது.
உங்களுடைய குட் ஆபீஸ்—உங்களுடைய கவனத்திற்கு அப்
பாற்பட்டும் கூட நீங்கள் அங்கே இருக்கிறீர்கள் என்ற அந்த
நம்பிக்கையில் கூட தேர்தலின் முடிவுகள் பாதிக்கப்படலாம்.
ஆகவே உங்களுடைய கட்சிக்காரர்களிடத்திலே நம்பிக்கை
வைத்து மீதி இருக்கின்ற பொறுப்பை அவர்களிடத்திலே
ஒப்படைத்துவிட்டு நீங்கள் எல்லாம் தலைநகரத்திற்குத் திரும்ப
லாம். அல்லது தேர்தலிலே பணியாற்றிய காரணத்தால்
களைப்பு இருக்குமேயானால் உல்லாச இடங்களுக்குப் போய்
சற்று ஓய்வாக இருக்கலாம் என்பதை ஒரு முறையாக வைத்துக்
கொள்ளலாம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நம்முடைய
நாட்டின் நிலைமையைப் பார்த்தால் வறுமைக் கோட்டுக்குக்
கீழே உள்ளோர் இந்தியாவிலே 48·44 சதமானம் இருக்கிறார்கள்.



ஆனால் தமிழகத்தில் 52·12 சதமானம் இருக்கிறார்கள். வேலை
யற்றோர், பதிவு செய்தோர் இன்றைய கணக்குப்படி 13 இலட்
சத்திற்கு மேல் இருக்கிறார்கள். நிலமற்றோர், வேலையற்றோர்,
பதிவு செய்யாத வேலையற்றோர் ஆகியவர்களைப் பொறுத்த
வரையில் அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் வர
வேண்டும் என்றால் மிகப்பெரிய தீவிரமான சிந்தனை தேவை,
நிர்வாகம் தேவை என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அடுத்து பொதுவாக இன்றைய நிர்வாகம் என்பது மக்களை
வெற்றிகரமாக அடக்கி ஆளவேண்டும், வரியை ஒழுங்காக
வசூலிக்கவேண்டும் என்பதுதான் பண்டமெண்டல் ஆக நாம்
ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு நிலைமை. நம்முடைய நாட்டை
மன்னர்கள் ஆண்டார்கள், அதன் பின்னர் வெள்ளைக்காரர்கள்
ஆண்டார்கள். அவர்கள் போட்ட சட்டங்களையும், வெள்ளைக்
காரர்கள் போட்ட சட்டங்களையும் சேர்த்துதான் ஒருகலவை
யான சட்டத்தை ஏற்படுத்தி நாம் நிறைவேற்றி இருக்கிறோம்.
அதன்மூலமாகத்தான் இந்த நாட்டை ஆண்டு வருகிறோம்.
ஆனால் இந்தத் திட்டத்தின் மூலமாக நாம் எதிர்பார்க்கக்
கூடிய அளவுக்கு பொதுமக்களுக்கு இலாபம் கிடைக்குமா என்
பதை எண்ணிப்பார்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நிர்
வாகத்திலே ஒரு பார்ட்டிசிபேஷன் அதாவது ஒரு பங்கு இல்லை.
அல்லது ஒரு இன்வால்வ்மென்ட் கிடையாது. பொதுவாக நிர்
வாகம் எப்படி நடக்கின்றது என்பதைப் பார்த்தற்குக்கூட ஒரு
முயற்சி ஒரு ரெஸ்பான்ஸ் இல்லாத தன்மை நம்முடைய
நாட்டிலே இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். பொதுவாக அதிகாரத்தை டீசென்ட்ரலைஸ் பண்ணி
ஸ்தல ஸ்தாபனங்களை உருவாக்கினோம். ஆனால் அதல்லாமல்
இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாய் மக்களுடைய வரிப்
பணம் எந்தவிதமான கண்காணிப்பும் இல்லாமல் அதிகாரி
களால் மட்டும் செலவழிக்கப்படுகின்றது. அந்தக் குறையைப்
போக்கவேண்டும். விரைவாக பஞ்சாயத்து தேர்தல்களையும்
யூனியன் தேர்தல்களையும், மாநகராட்சித் தேர்தல்களையும்,
நகராட்சித் தேர்தல்களையும் நடத்தவேண்டும் என்று .இந்த
நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுவாக இருக்கிற ஒரு குறை 'இன்டெஸிஷன்'
முடிவு எடுப்பதிலே மிகப் பெரிய தயக்கம் இங்கே இருக்கிறது.
இங்கே கூட ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசினார்; கொரி
போடுவது. டிஸ்கஸ் என்று போடுவது, பிறகு பார்க்கலாம்

[திரு. ஜே. எஸ். இராசு] [1983 ஏப்ரல் 12

என்று போடுவது இந்த முறை எல்லாம் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து வருகிற முறை. இதை தவிர்க்கமுடியாது என் பது எனக்குத் தெரியும் ஆனாலும் கூட இவைகளை இன்னும் ஸ்பீடு செய்வதற்கு இன்னும் வேகப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு முறையை நீங்கள் கையாளவேண்டும். அதிகாரிகள் யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு பைல் வந்தால் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்கு முன்னால் தங்கள் கையெழுத்தைப் போடுபவர்கள் இன்றைக்கு அதிகமாக இருக்கிறார்கள். அது அதிகாரி மேல் இருக்கிற புகார் ஆக கூட இருக்கலாம். ஒரு பைல் வந்தால் பேனாவைத் திறப்பது என்ற அளவுக்கு நிர்வாகத்தில் ஒரு கன்வென்ஷன், ஒரு முறை, ஒரு மரபு இருக்கிறது. அதை எல்லாம் மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். நிர்வாகத்தில் கூட இல்லை அமைச்சரவையில்கூட முடிவு எடுப்பதற்கு தயக்கம் காட்டுவதற்கு உதாரணமாக கூறமுடியும். வட்டி இல்லாக் கடன், இரண்டரஸ்டு ப்ரீ லோன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரப்படு கிறது பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து, அதை டைரக்டர் மூலம் கொடுக்கலாமா மாவட்ட அளவில் இருக்கிற டிஸ்ட்ரிக் அரி சன வெல்பேர் ஆபிஸர்கள் மூலம் கொடுக்கலாமா என்று முடிவு எடுக்க மாண்புமிகு நாவலர் அவர்களே ஒரு வருடம் ஆகியிருக்கிறது நம்முடைய அரசாங்கத்திற்கு. இதற்கு அதிகாரி களை மட்டும் சொல்லி பயன் இல்லை. அரசாங்கம் முடிவு எடுக்க வில்லை ஆகவே இத்தகைய மந்தன போக்கை விட்டுவிட வேண்டும்என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். இப் படிப்பட்ட போக்கால் மக்களை யார் காப்பாற்றுவது என்ற கேள்வி கூட சமுதாயத்தில் வரும். இன்றைக்கு ஏதேனும் ஒரு காரியத்தால் மக்கள், அதிகாரிக்கோ அதிகார வட்டாரத்திற் கோ ஒத்துக்கொள்ளவில்லை என்றால் பச்சையாகச் சொன் னால் அதிகார விருப்பத்திற்கு குடிமகன் இணங்கவில்லை என்றால் அந்த அதிகாரிக்கு என்ன என்ன சட்டங்கள் உண்டோ அவைகளை எல்லாம் ஒன்றாக்கி சமயம் வரும் போது பழி வாங்கிக்கொள்ள பலி வாங்கிக்கொள்ளக்கூடிய ஒரு கட்டம் இன்றைக்கு சமுதாயத்தில் இருக்கிறது. சான்றுகள் வேண்டு மானால் நான் எடுத்துக் காட்டிக்கொண்டே போகலாம் நேரம். இல்லாததால் குறைத்துக்கொள்கிறேன். அதிகாரிகள் விரும்பினால் போலீஸ் துறையோ, அல்லது ரெவின்யூ துறையோ அல்லது வேறு எந்த துறையோ விரும்பினால் எந்த ஒரு குடி மகனையும் காரணம் இன்றி கைது செய்ய முடியும் அவர்கள் மீது கேஸ் போட முடியும் ஏன் சொல்லப்போனால் கொலை வழக்குக்கூட பதிவு செய்ய முடியும் என்பதற்கு நம்முடைய நாட்டில் ஏராளமான அண்மைக்கால நிகழ்ச்சிகளை நாம் எடுத்துக் காட்ட முடியும்.



1973 ஏப்ரல் 12] [திரு. ஜே. எஸ். இராசு]

அடுத்தது, ஒரு முக்கியமான விஷயம், நிர்வாகத்தில் எவ் வளவு கவனமாக இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு. இந்தத் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை பற்றி கூட இன்னும் நமக்கு தெளிவான சிந்தனை இல்லை. ஆபத்து நேரத்தில் உதவுவது, உயிரை பணயமாக வைத்து பணியாற்றுவது, தீயிலே குளிப்பது, மக்களை காப்பாற்றுவது, பொருள்களை காப்பாற்றுவது ஆகிய பணிகளை எல்லாம் இன்று தீ ஆணைப்புத் துறைக்கு கொடுக்கப்பட்டு அது நடந்துகொண்டு வருகிறது. ஆனால் அந்த தீ அணைப்புத் துறைக்கு தருகின்ற சம்பளம் மிகவும் குறைவானது என்பதை மெத்த வருத்தத்தோடு நான் சொல்லிக் கொள்கிறேன். எது முக்கியமோ எது ஆபத்துக் காலத்தில் உதவி செய்வதோ அதற்கு நல்ல சம்பளம் இல்லை. அவர்களுக்கு சம்பளம் கொடுப்பது மட்டும் அல்ல அந்த தீ அணைப்பு நிர்வாகத்தில் ஓடாத வண்டி, தள்ளுவண்டி, குழாய் ஓட்டை எந்தவிதமான உபகரணங்களும் பழுதுபார்க்க வில்லை. புதிதாக வாங்கித்தரப்பட வேண்டும் அதற்கு கொடுக்கிற பணமும் குறைவு. அதுவும் மாண்புமிகு முதல மைச்சர் அவர்களிடம் தான் அந்தத் துறையும் இருக்கிறது. ஆகவே 2 காரியங்களைச் செய்யவேண்டும். ஒன்று அவர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கவேண்டும். அடுத்து, அவர்களைப் பார்த்தால் ஒல்லியாக ஓடமுடியாமல் பார்த்தால் பாவமாக இருக்கிறது. அவர்கள் குண்டாக இருந்தால் தான் ஓடுவார்கள் திறமையாக பணியாற்ற முடியும். ஆகவே அந்தத் துறையில் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டுள்ளேன்.

அடுத்தது, நிர்வாகத்தில் பொதுவாக யாரும் மறுக்க முடியாது. கம்யூனிஸ்டு கட்சி, இந்திரா காங்கிரஸ், தி.மு.க., அனைத்திந்திய அண்ணா தி.மு.க. எந்த கட்சியும் மறுக்க முடி யாது. நிர்வாகத்தில் லஞ்ச ஊழல் இருக்கத்தான் செய் கிறது. இல்லை என்று யாரும் மறுக்கமுடியாது. அது எப்படி இப்போ டெவலப் ஆகியிருக்கிறது என்றால் யாசகம் போல் இருக்கிற கட்டம் மாறி கொடுத்தால் பண்ணுவேன் என்று உருஎடுத்து கொடுக்க விட்டால் தொலைத்து விடுவேன் என்று மாறி இன்று தமிழ்நாட்டில் ஊழல் பெருகி இருக்கிற என் பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். சான்றுகள் வேண்டுமானால் நான் ஆயிரம் காட்ட முடியும், ஆனால் இது உணர்ந்து பார்க்கக்கூடிய விஷயம். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இது தெரியும். எந்த கட்சியாந் இருந்தாலும் இது தெரியும். ஆகவே லஞ்சத்தைப் போக்குவதற்கு. லஞ்சத்தை ஒழிப்பதற்கு மன்னிக்க வேண்டும் முடிக

[திரு. ஜே. எஸ். இராசு] [1983 ஏப்ரல் 1

தால் குறைப்பதற்கு தமிழக அரசு நல்ல முறையில் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு காரியம் பண்ணவேண்டும் என்று பணம் கொடுப்பவன் கொஞ்சம் தான் கொடுக்கிறான். ஆனால் அந்த காரியத்தை கெடுப்பதற்கு சொல்கிறவன் நிறைய பணம் கொடுக்கிறான். இது ஒரு புதிய டிஸிஸ். மிடில்மேன் நிறைய இருக்கிறார்கள். தாலுக்கா ஆபிஸிலும், போலீஸ் ஸ்டேஷனிலும் வேறுபல நிர்வாக அலுவலகங்களிலும் அவனுக்கு தமிழில் சொன்னால் நாட்டு வக்கீல் என்று சொல்லாம். நாட்டு வக்கீல் இல்லாத அலுவலகமே கிடையாது. நாட்டு வக்கீலை தெரியாத ஆபிஸர்களே கிடையாது. தெரியாமல் விதிவிலக்கு ஒரு சிலர் இருக்கலாம் நான் பாராட்டுகிறேன். நாட்டு வக்கீல்களை ஒழிக்கவேண்டும். இந்த மிடில்மேன்களை ஒழிக்கவேண்டும். என்று சொல்வார்கள். அது ஆக்ட் கட இருக்கிறது. டவுட் சிஸ்டம் ஆக்டை பயன்படுத்தி நீங்கள் நிச்சயமாக நல்ல நிர்வாகத்திற்கு வழி வகுக்கவேண்டும்.

அடுத்தது, ரெவின்யூ டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில் கணக்குப்பிள்ளை, முனிசிப், தாசில்தார் யாராக இருந்தாலும் ஒரே நிலத்தை 2 பேருக்கு கொடுத்து விடுகிறார்கள். இதற்கு காரணம் லஞ்சம்தான். இதற்கு ஆதாரம் கேட்டால் உயர்நீதிமன்றத்தில் ஆயிரக்கணக்கான வழக்குகள் இருக்கின்றன. சிட்டா, அடங்கல், பட்டா புத்தகம் இரண்டு பேரிடம் இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? பணம் பெறவேண்டும் என்பதற்காக ஒரே நிலத்தை பலருக்கு தரக்கூடிய ஒரு மோசமான சூழ்நிலை இருப்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தது, வறட்சி நடக்கிறது, நிவாரணம் செய்து கொண்டு இருக்கிறோம். வறட்சிப் பணி ஆற்றுகிறோம். ஆனாலும் கூட வரி வசூலிலே நீங்கள் சொல்வதைப் போல் இலகுவாக வரி வசூல் செய்யவில்லை.

(பிற்பகல் 1—20)

'கோ ஸ்லோ பாலிசி'யும் இல்லை. ஆனால் கடுமையாக வரி வசூலிக்கப்படுகிறது. திருச்சியிலே நாகமங்கலத்திலே கூட்டுறவுக் கடன்கட்டி ரசீதைக் காண்பித்தும் பூபாலன் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார். வட ஆற்காடு மாவட்டத்திலே பள்ளிப்பட்டு கிராமத்திலே தலையனுக்காக சமரசம் பேசிய ஜெயராமன் என்ற ஆசிரியர் அடித்துப்போடப்பட்டிருக்கிறார். அவர்மீது



1983 ஏப்ரல் 12] [திரு. ஜே. எஸ். இராசு]

நக்சல்பாரி என்று குற்றஞ்சாட்டி கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. திருமயம் வட்டத்திலே அமைச்சர் திருநாவுக்கரசு பகுதி, கீழவனேரி என்ற ஊரில் பாக்கியலட்சுமி, விதவை............

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அநாவசியமாக வம்புக்கு இழுக்கவேண்டாம். அது என்னுடைய பகுதியல்ல, என்னுடைய தொகுதியும் அல்ல.

திரு. ஜே. எஸ். இராசு : உங்கள் மாவட்டம் என்பதற்காகச் சொன்னேன். அதை நீங்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். கீழவனேரி விதவை பாக்கியலட்சுமி. 30 போலீஸார்களும் கூட்டுறவு அதிகாரிகளும் பூட்டிய வீட்டை உடைத்து, அண்டா குண்டா பானை ஜப்தி வெங்கிடாசலம் மனைவி அழகம்மாள் வீட்டில் கடனுக்காக 2 கட்டில், மரப்பலகை, குத்துவிளக்கு எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள். பேரையூரில் துப்பாக்கியோடு மாலை 6 மணி வரைக்கும் ஜப்தி நடைபெற்று இருக்கிறது. கோவை மாவட்டத்திலேயும் உண்டு. தஞ்சாவூர் மாவட்டத்திலே வரகூர் என்ற ஊர், புகழ்மிக்க ஊர். அங்கு லாரியிலே போய் போலீஸ்காரர்களும் கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் நெல்மூட்டைகளையெல்லாம் அள்ளிக்கொண்டு போய் இருக்கிறார்கள். நாகமங்கலம் நம்மாழ்வார் குடும்பத்தில் யாருமே கடன் வாங்கவில்லை, அவர்கள் கடன் வாங்கியதாகச் சொல்லி 45 மூட்டை நெல்லை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இப்படி ஆயிரக்கணக்கான உதாரணங்களை நான் தரமுடியும். எண்ணிப்பார்ப்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். இத்தகைய கடுமையான வசூலை இந்தத் துறை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிய உணவுக்கு கட்டாய வசூல் செய்கிறார்கள். இந்த அறிவிப்பை நாவலர் அவர்கள் எடுத்துக்காட்டியபோது அரசுப் பணத்திலிருந்து போடப்படும் என்ற சொன்னார்கள், முதல்வர் அவர்களும் சொன்னார்கள். ஆனால் அதற்கு நேர் மாறாக விரும்பிக் கொடுத்தால் வாங்கிக்கொள்ளுங்கள், அடியில்லை, நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. இதற்காக திட்டத்தை எதிர்க்கிறோம் என்று குற்றமும் சாட்டக்கூடாது. ஆனால் போக்குவரத்துத்துறை ஊழியர்கள் மத்தியிலே ஆசிரியர்களிடமிருந்து அரசுத் துறை நிறுவனங்களிடமிருந்து அங்கே பணியாற்றக்கூடியவர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபாய் பெறப்பட்டு இருக்கிறது. எல்லா தொழிற்சங்கங்களும் எல்லா கட்சி தொழிற்சங்கங்களும், எக்சப்ட் ஏ. டி. எம். கே, தீர்மானம்

[திரு. ஜே.எஸ். இராசு] [1983 ஏப்ரல் 12

போட்டிருக்கிறார்கள். அரசுப் பணத்திலே மட்டும் நடத்து வதாகச் சொல்லி விட்டு கம்பல்சரியாக டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனிலே கொடுக்கிறீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். கொடுக்கமுடியாது என்று யார் சொல்வார்கள்? கொடுக்க முடியாது என்று சொன்னால் அவர்கள்மீது பழிவாங்குகிற வாய்ப்பை அரசு தேடுகிறது என்று பொருள். ஆகவே அத்தகைய குறுக்கு வழிகளிலே திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புத் தரவேண்டாம். நம்முடைய ஜயேந்திர சுவாமிகள் காஞ்சி சின்னப் பெரியவாள் கோயில் நிதியிலிருந்து 59 லிருந்து 60 லட்சத்தை மதிய உணவுத் திட்டத்திற்கு தரப்படுவது கண்டிக்கத் தக்கது என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். குன்றக்குடி அடிகளார் கண்டித்து இருக்கிறார்கள். ஆகவே அந்த எண் ணத்தை பதிய வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத சாதி இன கலவரப் பிரச்சினை முளைவிடும் போதே முன்கூட்டியே எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அரசு தவறிவிட்டது. அவர்கள் திட்டமிட்டே பெயரைக் குறிப்பதற்கு மன்னிக்கவேண்டுகிறேன். தெரிந்தும் சொல்கிறேன், திட்ட மிட்டே ஆர். எஸ். எஸ். விஸ்வ இந்து பரிஷத், இந்து முன்னணி தூண்டுகிறது. ஆனால் அத்தகையோர்களின் கூட்டங்களில் நம் முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு கடுமையாக உணர்ச்சியோடு பேசியதை அய்யா, அண்ணா அவர்கள் பெயரால் ஏற்றுக்கொள்ள இயலுமா என்பதை நாவலர் அவர்களுக்கே நான் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மதிய உணவுக்கு ஆலயங்களிலிருந்து பணம் கொடுத்ததை மடாதிபதிகள் கண்டித் திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கண்டிக்கிறாரா?

திரு. ஜே. எஸ். இராசு : நான் கண்டிக்கிறேனா எதிர்க் கிறேனா என்பது நான் பேசிய பிரச்சினையல்ல. ஒவ்வொரு திட்டத்திலேயும் எங்களுக்கு தனிக் கருத்து இருக்கும். ஆனால் பொதுநலன்கருதி நாங்கள் வரவேற்றிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அதிலே உங் களுடைய கருத்து உங்களுடைய கட்சியினுடைய கருத்து குழந் தைகளுக்குக் கொடுக்கப்பட்டது சரி என்கிறீர்களா ? அல்லது ஆலயங்களில் தான் இருக்கவேண்டும், தெய்வங்களுக்குதான் இருக்கவேண்டும் என்கிறீர்களா ? அல்லது குழந்தை தெய்வத் தந்து இதுபோன்ற செய்யவேண்டும் என்கிறீர்களா? உங்கள் கட்சியின் கருத்தைக் கேட்கிறேன்.



1983 ஏப்ரல் 12]

திரு. ஜே. எஸ். இராசு : அமைச்சர் திருநாவுக்கரசு என்னை திசைதிருப்பப் பார்க்கிறார், நான் பேசவந்த கருத்தை...... (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு திரு. இராசு அவர்களே திறமையாக பேசக்கூடியவர் தான். அவரே பேசலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : அவருக்காக இன்னொருவர் பேச வேண்டியதில்லை. அவரே பேசட்டும். திரு. ரகுமான்கான் உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் இதில் எப்படி பேசினார் ? ஆகவே எனக்கும் வாய்ப்பு தரவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : அமைச்சர்களுக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு. உறுப்பினர்களுக்கு அப்படி கிடையாது. உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பார்ட்டி இருக்கிறது. அடிப்படையாக ஆதரிக்கிறோம். அதில் ஊழல் இருக்கிறது என்று தான் சொல்கிறோம்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை].

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பிரச்னையை திசை திருப்பவில்லை ; அதே சமயத்தில் சமாளிப்பதற்காகவும் நான் இங்கே பேசவில்லை. அந்த அவசியமும் எனக்கில்லை. இந்தத் திட்டத்தை அறிவித்த போது கலைஞர் அவர்கள் வரவேற்கிறோம் என்றுகூறி, ஒரு மாற்றுக் கருத்து ஒன்றை சொன்னார்கள். அது வேறு விஷயம். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நான் சொல்வது, இந்த அவையில் ஸ்டேட்மெண்ட் நாவலர் அவர்களால், முதல்வர் அவர்களால் வைக்கப்பட்டது. அரசுப் பணத்திலேயிருந்து போடுவோம் என்று சொல்லிவிட்டு இப்போது கம்பல்சரியாக வேறு இடங்களிலிருந்து எப்படி பணத்தை எடுக்கலாம் அல்லது வரவழைக்கலாம் என்பதற்குதான் நான் உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறேன். இந்த கருத்தை நானே பலமுறை சொல்லி யிருக்கிறேன்.

அடுத்து ஒரு சமுதாயப் பிரச்னை........

[1983 ஏப்ரல் 12

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மக்களாகவே விரும்பி நன்கொடையாக தந்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா? அந்த பெரும் உள்ளத்தைப் பாராட்டலாம் அல்லவா? ஆகவே கொடுக்கிறபோது கொடுக்க மாட்டேன் என்று அவர்கள் பிடிவாதமாகவும் இருக்கலாம் அல்லவா?

திரு. ஜே. எஸ். இராசு : அடுத்து ஒரு முக்கியமான பிரச்னை. அதற்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் சற்று நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் தான் நேரம் கொடுக்கவேண்டும்.

திரு. ஜே. எஸ். இராசு : நீங்கள் தான் டைம் கொடுக்க வேண்டும். இன்னும் சிறிது நேரம் கொடுக்கவேண்டுமென்று தங்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு உபயோகமாக இருக்குமென்று தான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்; தவிர யாரையும் கோபித்து நான் எதையும் சொல்லவில்லை. மக்கள் மீது தயவுசெய்து நாவலர் அவர்கள் பிரச்னையை திசை திருப்பக் கூடாது. எல்லோரும் மக்கள் தான். ஆனால் நீங்கள ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களில் ஒரு சுற்றறிக்கை விடுகிறீர்கள். '' நாங்கள் ஒரு திட்டத்திற்காக பணத்தை சேகரிக்கிறோம் ; நீங்கள் தருகிறீர்களா ? இல்லையா ? இல்லையென்றால் விளக்கம் சொல் '' இப்படியென்றால் எப்படி ஒரு ஊழியன் இல்லையென்று சொல்ல முடியும்? ஆகவேதான் அவர்களை ஒரு இக்கட்டிலே வைக்காதீர்கள் என்று தான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயம். ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டியதில்லை. நாவலர் அவர்கள் இங்கே இருப்பதால் சொல்கிறேன். வர்ணாச்ரம தர்மத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்ட ஜாதிகள் அப்படியே நீடிப்பது தான் நல்லது என்று காஞ்சிப் பெரியவாள் அப்படிகூறிஇருக்கிறார்கள். அத்தகையபெரியவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில், ஐயாவின் பெயரால், அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகிற நம்முடைய அமைச்சர்கள், முதலமைச்சர் உள்பட போய் பங்கெடுத்துக் கொள்ளலாமா ? எதைக் கொடுத்தாலும் ஒரு சூத்திரனுக்கு கல்வியை கொடுக்காதே என்று சொன்ன இன்ஸ்ட்டிடியூஷனுடைய அத்தாரிட்டி அவர். அவர் கலந்துகொள்கிற மாநாட்டில் பகுத்தறிவுச் சிங்கங்களும், அண்ணாவின் தம்பிகளும், பெரியவரின் பிள்ளைகளுமான நீங்கள் கலந்துகொள்ளலாமா என்று, '' யூ ப்ளீஸ் ரீ-கன்சிடர் '' என்று மட்டும் நான் கேட்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நடந்த இந்திய கலாச்சார விழாவிலே கலந்து கொண்ட அமைச்சர்களில் நானும் ஒருவன். நாங்கள் அந்த விழாவில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டோம். அங்கே மட்டுமல்ல, மிலாடி நபி விழாவிலே அழைக்கப்படுகிற போது அங்கே போய் பேசுகிறோம் ; அதேபோல கிறிஸ்துவ மதத்தின் சார்பில் பாதிரியார்கள் ஏற்பாடு செய்கிற கூட்டங்களில் போய் பேசுகிறோம் ; அதைப்போல தந்தை பெரியார் அவர்கள் பெயரால் நடத்தப்படுகிற பகுத்தறிவுக் கூட்டங்களுக்கு, அழைக்கப்படுகிறபோது அங்கே போய் பேசுகிறோம். ஒரு ஆட்சி என்பது எல்லா மதத்தினருக்கும் பாதுகாப்பு கொடுக்க கடமைப்பட்டுள்ளது. அதைப்போல நாத்திகர்களுக்கும் பாதுகாப்பு உண்டு. செக்குலர் ஸ்டேட் என்ற வகையில் யார் அழைத்தாலும் அங்கே சென்று கலந்துகொள்கிறோம். சங்கராச்சாரியார் அவர்கள் அந்த விழாவிலே ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்குகிற நிகழ்ச்சியையும் வைத்திருந்தார். எங்கேயும் சூத்திரன் படிக்கக்கூடாது என்று சங்கராச்சாரியார் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. அந்த விழாவிலே ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகங்கள்வழங்குவதற்கும்,உடல் ஊனமுற்றவர்களுக்கு சில வசதிகளை செய்து கொடுப்பதற்கும் வழிவகை செய்திருந்தார்கள். இவைகளை எல்லாம் அந்த நிகழ்ச்சியிலே இணைத்து வைத்திருந்தார்கள்.

[பிற்பகல் 1-30].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு நீண்ட பதிலைச் சொல்ல வில்லை. மதத் தலைவர்களுடைய நினைவு நாளிலே; பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வது என்பது வேறு. ஆனால், நீங்களும் நானும் மசூதிக்குப் போக முடியாது. அதைப் போல, நாம் தலைவர்களுடைய விழாக்களிலே, மதங்களுடைய விழாக்களிலே கலந்து கொள்ளலாம். அது வேறு விஷயம். ஆனால், நான் தெளிவாகக் குறிப்பிடுகிறேன், ஜாதிகள் இருந்தே தீர வேண்டும். அதை மாற்றக் கூடாது என்று சொல்பவர்கள் திராவிட இனத்திற்கு எதிரி என்பதை நான் ஒரு உணர்ச்சியுள்ள திராவிடன் என்ற முறையில் தெரிவித்துக் கொண்டு அந்த உணர்ச்சி எல்லோருக்கும் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 12

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, சங்கராச்சாரியாருக்குச் சிலபல
கொள்கைகள் இருக்கக் கூடும். மாண்புமிகு திருநாவுக்கரசு
அவர்கள் தெரிவித்ததெல்லாம், அந்த மாநாட்டுக்குச் சென்றது
அந்தக் கொள்கைகளை அவர்கள் பரப்புவதை ஏற்றுக்கொள்
வதற்காக, அல்ல, என்பது. அந்தக் கொள்கையை இப்பொழுதும்
நாம் ஏற்றுக்கொள்ளவில்லை, இப்பொழுதும் மறுக்கிறோம்.
எந்த ஒரு கூட்டத்திற்கு வந்தாலும், வருகின்றவர்களில் கருத்து
வேறுபாடுகள் கொண்டவர்கள் இருப்பார்கள். இன்னமும் ஒரு
படி மேலே போய் சொல்கிறேன், குன்றக்குடி அடிகளாருக்கும்
பெரியாருக்கும் கொள்கையிலே ஒத்து வரவே வராது. ஆனால்,
இரண்டுபேரும் சேர்ந்து கலந்து கொண்டு பாராட்டப்பட்ட கூட்
டங்கள் உண்டு. அதற்காக, சேர்ந்து கொண்டதன் காரணமாக,
குன்றக்குடி அடிகளார் கருத்துக்கள் அத்தனையும் பெரியார் ஏற்
றுக் கொண்டார் என்றோ, அல்லது பெரியார் கருத்துக்கள் அத்
தனையையும் குன்றக்குடி அடிகளார் ஏற்றுக் கொண்டார்
என்றோ பொருள் அல்ல. அது மாதிரி கிருபானந்த வாரியார்
கலந்து கொள்கிற கூட்டத்திலே நாம் கலந்து கொள்கிறோம்.
அவர் கருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம், நம் கருத்தை
அவர் ஏற்றுக் கொள்கிறார் என்று பொருள் அல்ல. ஆனால்,
நோக்கத்திலே கூட்டப் படுகிற மாநாடுதான் முக்கியமே தவிர,
எத்தனையோ கல்யாணங்களுக்குப் போகிறோம். வைதீகக் கல்
யாணத்துக்குக் கூடப் போகிறோம். அந்தக் கல்யாணத்திலே
இருப்பவைகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று பொருள்
அல்ல. ஆனால், ஒரு கருத்து கொண்டு வந்து அதை நாம்
ஆதரித்து அதற்கு உடந்தையாக இருப்போமானால், மாண்பு
மிகு உறுப்பினர் இராசு சொல்கிற மாதிரி குற்றச்சாட்டைச்
சொல்லலாம். அந்தக் கருத்தை இப்பொழுதும் நாம் மறுக்
கிறோம். அந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை ;
என்றும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆகவே, கருத்து
வேறுபாடு உடையவர்களோடு கலந்து வருவது என்று பார்ப்
போமானால், நாமே கூட, பலபேர் ஒருவரோடு ஒருவர்
கலக்க முடியுமா என்பது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது.
நம்மவர்களிலே திருப்பதிக்குப் போய்விட்டு வருபவர்கள்
இருக்கிறார்கள். திருத்தணிக்குப் போய்விட்டு வருபவர்கள் இருக்
கிறார்கள் என்று சொல்லும்போது கருத்து வேறுபாடு வருகிறது,
அதை நாம் ஏற்றுக்கொண்டோமோ, இல்லையா என்பதுதான்
பிரச்னையே தவிர, அது ஒரு மாநாடு. அதிலே சிலபல பொருள்
கள் வழங்கப்பட்டன. அந்த அளவுக்குத் தானே தவிர அவர்கள்
சொல்கிற கருத்தை நாம் ஏற்றுக் கொண்டோம் என்றோ
அல்லது நாம் சொல்கிற கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள
வைக்க அங்கே சென்றோம் என்றோ பொருள் அல்ல என்பதை
மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 12]

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் கூட நாவலர் இருக்கிறார்
என்பதற்காகத்தான் அந்தக்கருத்தை பேசினேனே தவிர, முதல்வர்
இருந்திருந்தால்கூட நான் பேசி இருக்கமாட்டேன். இந்துக்
களை முஸ்லிம்களிடமிருந்து காக்கவே இந்து முன்னணியை நடத்து
கிறேன் என்று சொல்லிக்கொள்பவர்கள் அவர்கள். நாம் கலக்க
வேண்டிய இடத்திலே கலந்து, ஒதுங்க வேண்டிய இடத்திலே
ஒதுங்கி இருந்தால் இந்தப் பிரச்னை வராது என்பதுதான் என்
னுடைய கருத்தாகும்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்குச் சில கோரிக்கைகள் இருக்
கின்றன. அவற்றை மட்டும் சுருக்கமாகவேச் சொல்லிவிட்டு
நான் முடிக்கிறேன். அரசுப் பணியிலே இருந்து இறந்தவர்களின்
குழந்தைகளுக்கு — வாரிசுகளுக்குக் காலம் தாழ்த்தாமல் வேலை
கொடுக்கவேண்டும். பஞ்சாயத்து ஒன்றியத்திலே, பள்ளியிலே
பணிபுரிந்த ஆசிரியர்கள் இறந்து போனால் அவர்களுடைய
வாரிசுகளுக்கு சி.இ.ஓ. (கல்வி) இலாகா வேலை தருவதா,
அல்லது பஞ்சாயத்து யூனியன் வேலை தருவதா என்பதில் இன்ன
மும் கிளியரன்ஸ் கிடைக்கவில்லை. அதற்குத் தெளிவான உத்த
ரவுகள் வரவில்லை. தெளிவாக உத்தரவுகள் போட வேண்டும்.

சர்ட்டிபிகேட்கள் பெறுவதில் எத்தனையோ விதமான
இடைஞ்சல்களைப் பொது மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்
கிறார்கள். அதற்குத் தெளிவான உத்தரவு போட்டு, அதற்
கென்று தனியாகவே ஒரு அதிகாரியை நியமித்து, சர்ட்டிபிகேட்
வழங்க்வேண்டும்.

அடுத்து, மைய அரசு தன் கீழ் பணி புரிபவர்களுக்கு இரண்டு
தவணைகள் பஞ்சப்படி கொடுத்துள்ளது. அதே போல், மைய
அரசு கொடுத்த செப்டம்பர் 1 மற்றும் டிசம்பர் 1 திங்களிலிருந்து
மாநில அரசு ஊழியர்களுக்கு இரண்டு தவணை பஞ்சப்படி
கொடுக்கவேண்டும்.

மின்சார வாரியத்திலே பணி புரியும் ஊழியர்கள் ஓய்வுபெறும்
போது, கிராச்சுவிட்டி என்னும் பணிக்கொடை தவிர, ரூ.
10,000 வழங்கப்படுகிறது. அதைப் போல் மாநில அரசு ஊழியர்
களுக்கும் வழங்க வேண்டும்.

அரசு ஊழியர்கள் தற்போது 300 கிலோ மீட்டருக்கு மேல்
போவதற்குத் தான் வழியிருக்கிறது, வருவதற்கு வழியில்லை.
ஆகவே, அதற்கும் டி. எ., இரு பயணங்களுக்கும் கொடுக்க
வேண்டும்.

அடுத்து, என் ஜி. ஓக்கள் 524 பேர்கள் மீது வழக்கிருக்கிறது. அந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டும்.

சட்டமன்றப் பேரவையிலே சில வகை பணியாளர்களுக்கு மாதாந்திரச் சம்பளம் கொடுப்பதற்குப் பதிலாக, தினக் கூலி கொடுக்கப்படுகிறது. நம்முடைய விதிகளுக்கே இது முறை யானது. ஆகவே, அவர்களுக்கு முழுச் சம்பளம் மாதச் சம்பளம் அடிப்படையில் கொடுக்க வேண்டும். சர்வீஸ் சர்ட்டிபிகேட் சரிவர வழங்கப்படுவதில்லை. நேரடியாகப் பணியில் அமர்த்த. சட்டப் பேரவைத் துறையினர் விதி விலக்கு வாங்கியுள்ளனர்கள். இருப்பினும் நேரடியாக அமர்த்தப்படுவதனால், அந்த சர்ட்டி பிகேட்டை வைத்து, வேலையில் எந்தவிதமான உரிமையும் கோர முடியாது. என்பது சட்ட ரீதியில் குற்றமாகும். இதனால் பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து பணியாற்றி வரும் ஏழைகள் கொத்தடிமைகளாக காலம் தள்ள வேண்டியிருக்கிறது. அந்தத் தவறுகளை நீக்கி, அவர்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள் கிறேன்.

தட்டெழுத்தர்கள், இளநிலை உதவியாளர்களாகக் கருதப் படுவதால் அவர்களுக்கு சிறப்புச் சம்பளம் வழங்கப்பட வில்லை. தட்டெழுத்தர்களுக்குச் சிறப்புச் சம்பளம் படி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைமைக் காவலர்களை உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்துகிற திட்டத்தின்கீழ், கடந்த மூன்றாண்டுகளில் 96 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். நியமிக்கவில்லை. அவர்களையும் நியமிக்க வேணடுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய கருத்துக்களை யெல்லாம் தமிழக அரசாங் கத்தின் சிந்தனைக்கு விட்டு, நிர்வாகச் சீர்திருத்தத்திற்கு அந்தக் கருத்துக்கள் உபயோகமாக இருக்குமேயானால் அதற்காக நான் மகிழ்வேன். என்று கூறி, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களே, உங்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெற்றுக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதும், மாவட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்க ளுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆட்சியின் பொறுப்பை அமைச்சர்களாகிய எங்களிடத்



திலே விட்டிருந்தாலும், இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பை இங்கேயுள்ள மன்ற உறுப் பினர்கள் 35 பேர்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார் களே என்பதில் நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சிதான். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மிக்க ஊக்கத் தோடு, அந்த அளவிற்கு வீற்றிருக்கின்ற 35 பேர்களையும் பெரு மனதோடு நம்புகிறார்களே, நம்மிடத்தில் பெரும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்களே என்பதில் நமக்குப் பெரு மகிழ்ச்சிதான்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். இது மிகவும் முக்கிய மான துறை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய நாடு மிகப் பெரிய ஜன நாயக நாடு. ஜனநாயக பண்புகளுக்கும், முறைகளுக்கும், தத்துவங்களுக்கும் நாம் மதிப்பளித்து வருகிறோம். அது மட்டுமல்லாமல் அதைக் கட்டிக் காப்பாற்றி வளர்ப்பதில் முனைப் புள்ளத்தோடு இருந்து வெற்றி பெற்றும் வருகிறோம். ஜன நாயகத்தில் சட்ட மன்றம், நிர்வாகத் துறை, நீதித் துறை ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்றாலும், தனித் தனியாக இயங்குகின்ற தன்மைகளை உடையது என்ற முறையில், மூன்று கால்களில் ஜனநாயகம் நின்று கொண்டிருக் கிறது. ஒரு பக்கம் சட்டமன்றத் துறையும், மற்றொரு பக்கத்தில் நிர்வாகத் துறையும், வேறொரு பக்கத்தில் இந்த இரண்டுக்கும் அகப்படாத அளவிற்கு நீதித் துறையும் ஆக இந்த மூன்று துறை களும் செவ்வனே நடைபெறுகின்ற அடிப்படையிலேதான் ஜன நாயகம் வளர முடியும்.

அந்த வகையிலே நிர்வாகத் துறையைப் பொறுத்த வரை யிலே, இந்த மானியக் கோரிக்கையின் அடிப்படையிலே மாண்பு மிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே குறைபாடுகள் இருக்கக்கூடும்; சிலபல குற்றங்கள் ஆங்காங்கு இருக்கக் கூடும். அவைகள் இல்லை என்று நான் கூறவில்லை. இருக்கின்ற குறைகள் சுட்டிக் காட்டப்படதான் வேண்டும். அப்படிச் சுட்டிக் காட்டுவதற் காகத்தான் இந்த மன்றமும் இருக்கிறது; சுட்டிக் காட்டுவதற்காகத்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வீற்றிருக் கிறார்கள். குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டுவதன் வாயி லாகத்தான் அவைகள் அமைச்சர்களின் கவனத்திற்கும், மற்றவர் களின் கவனத்திற்கும் வந்து அவைகள் களையப்படக் கூடிய முயற்சிகளை மேற்கொண்டு செய்ய வேண்டியவைகளைச் செய் வதற்கு உறுதுணையாக இருக்கும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 12

செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் விட்டு விடுவது குறை; செய்யக் கூடாதவைகளைச் செய்வது குற்றம். இப்படிச் செய்ய வேண்டியவைகள்ளச் செய்யாமல் விட்டு விடுகின்ற குறைகளும் சுட்டிக் காட்டப்பட வேண்டும். செய்யக் கூடாதவைகளைச் செய்திருப்பதான குற்றங்களையும் சுட்டிக் காட்ட வேண்டியதுதான்.

ஆனால் குறைகளைச் சொல்ல வேண்டுமென்பதற்காக, ஏதாவது ஒரு குறையை சொல்லவேண்டுமென்பதற்காக ஏதாவது (சால்வதோ, குற்றம் சுமத்த வேண்டுமென்பதற்காக ஏதாவது ஒரு குற்றத்தைச் சுமத்துவதோ நல்ல ஜனநாயக மரபுகளை வளர்ப்பதற்குப் பயன்படாது என்பதைப் பொதுப்படையாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் நிர்வாகத் துறையைப் பொறுத்த வரையிலே நாம் எல்லோருடைய ஒத்துழைப்பின், ஆதரவின் அடிப்படையிலே பணியாற்றி வருகிறோம்.

இன்னும் தெளிவுபடச் சொல்ல வேண்டுமானால், சிலபல் குறைபாடுகளை இங்கே சொன்னாலும் அவைகளை நீக்க வேண்டிய கடப்பாட்டுடன் நீக்கி, அதைச் செம்மைபடுத்தி சிறப்பாகச் செய்ய வேண்டிய பாங்குகளிலே நாம் இருக்கிறோம். இங்கே இறுதியாகப் பேசிய திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் பலவற்றை பற்றிக் குறிப்பிட்டார்கள்; பல உறுப்பினர்களும் இங்கே சொன்னார்கள். நான் இன்றைக்கும் சொல்வேன், இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களின் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொண்டால் அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி தமிழகம் தான் மிகச் சிறந்த நிலைமையில் இருக்கிறது. ''இன்ஸ்பைட் ஆஃப் ஆல் டிஃபெக்ட்ஸ்'' என்று சொல்லும் அளவிற்கு தமிழகத்தின் நிர்வாகம் அவ்வளவு எளிதில் இழித்தும் பழித்தும் குறைவாகப் பேசுகின்ற அளவிற்கு இல்லை. வாரன் ஹேஸ்டிங்க்ஸ் காலத்திலேயிருந்து கணக்குப் போட்டுப் பார்த்தால் கூட, வெள்ளைக்காரர்கள் காலத்திலேயிருந்து கல்கத்தா, பம்பாய், மெட்ராஸ் என்று மாநிலங்கள் வரும்பொழுது சென்னை தான் பிற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியிருக்கிறது. கவர்னர்-ஜெனரல்கள் அந்த அடிப்படையில் தான் உத்தரவுகளைப் போட்டிருக்கிறார்கள். ரிக்கார்டுகளைப் பார்க்கின்ற போது, சென்னை மாநிலத்தைப் பின்பற்றி நடங்கள் என்ற அடிப்படையில் தான் உத்தரவு போடப்பட்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், கூடுமான வரையில் பெருமைப்படத்தக்க அளவிற்கு, பூரிப்பு அடையத்தக்க அளவிற்குத் தான் நிர்வாகங்கள் நடந்து வந்திருக்கின்றன.



1983 ஏப்ரல் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதனால் நாம் திருப்தி அடைந்துவிட வேண்டுமென்று சொல்ல
முன்வர வில்லை. இருக்கின்ற குற்றங்களையும், குறைகளையும்
மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு வகைகளில் சுட்டிக்
காட்டினார்கள். அவைகள் அத்தனையும் நாம் அத்தனை பேர்
களும் சேர்ந்து களைந்து தீர வேண்டிய அவசியத்தில் இருக்கி
றோம். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்புக்கள்
ஆண்டுக்காண்டு, காலத்திற்குக் காலம், ஆட்சிக்கு ஆட்சி
மிகுந்து கொண்டேயிருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்
தில், வருவாய் திரட்ட வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்
ததால்தான் அவர்களைக் கலெக்டர்கள் என்று வைத்து, டிஸ்
டிரிக்ட் கலெக்டர் என்றுதான் வைத்தார்கள்.

(பிற்பகல் 1-40)

அவ்வளவுதான் அவர்களிடத்திலே எதிர்பார்த்தது. வெள்ளை
காரர்களிடத்திலே, ஈஸ்ட் இந்தியன் கம்பெனியிலே, அதற்குப்
பிறகு வந்த வெள்ளைக்காரர்கள் அவர்கள் இடத்திலே
அதைத்தான் எதிர்பார்த்தார்கள். அதனால் தான் கலெக்டர்
என்ற பெயர் வைத்தார்கள். அதைத் தமிழ் படுத்தும்போது
தான் நாம் பொருத்தமான ஒரு பெயர் வைத்திருக்கிறோம்.
மாவட்டத் ஆட்சித் தலைவர் என்ற பெயர் கொடுத்திருக்
கிறோம். ஆக கலெக்டர் நேர் மொழி பெயர்ப்பு அல்ல
என்றாலும்கூட, அவர்களுடைய பணிக்கேற்றபடி. நாம் கொடுத்
திருக்கிறோம், என்றாலும் ஏராளமான பணிகளை நாம்
மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே ஒப்படைத்திருக்
கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த அடிப்
படையில் நிறைவேற்றிக் கொண்டுவருகிறார்கள். அந்தத்
தன்மையைப்பற்றியும், மாவட்ட நிர்வாகத்தைப் பற்றியும்
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டுகின்ற வளர்ச்சி மன்றங்
களைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துக்
களை இங்கே எடுத்து வழங்கி இருக்கிறார்கள்.

கிராம அதிகாரிகள் நியமனம் பற்றி எல்லாம் இங்கே
மாண்புமிகு உறுப்பினர்கள் ரகுமான்கான், சௌந்தரராசன்
போன்றவர்கள் எடுத்து தெரிவித்தார்கள். அதனுடைய
வரலாறுகள் எல்லாம் இங்கே அடிக்கடி பேசப்பட்டு, தீர்க்கப்
பட்டிருக்கிறது. ஆக உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று
அந்த வழக்குகள் ஓரளவிற்கு முடிந்து, நாம் எடுத்துச்
சொன்ன சமாதானங்களை அவர்கள் ஏற்று, அவர்கள் சிலபல
வழிமுறைகளைக் கூறி, அதை நடைமுறைப் படுத்துகிற
அளவிற்கு நாம் வந்திருக்கிற நிலைமைகளைக் கூறி, ஆக
கிராம அதிகாரிகள் 12,500 பேர்கள் ஆகும். இதுவரை
5,246 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மீதி 7,304
இடங்களுக்கான ஆட்களை தேர்ந்தெடுக்கும் பணியிலே

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 12

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிற்கு விடப்பட்டு, அது
தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறது. இதற்கிடையில் இது சம்மந்
தமான சில வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் இருப்பதன்
காரணமாக இது முடிந்ததற்குப் பிறகு அந்த இடங்களை
நிரப்பலாம் என்ற ஒரு தன்மை இருப்பதன் காரணமாகத்
தான் இது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலேயே
இதை முடித்து, அந்த இடங்கள் கிராம அதிகாரிகளிடம்
ஒப்படைக்கப்பட்டு, இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற
வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். அதற்
கான முயற்சிகளை ஆயத்தப்படுத்துவதற்கான தன்மையிலே
அரசு ஈடுபடும் என்பதை இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள
நான் விரும்புகிறேன்.

மாநிலத்தினுடைய தலைநகரை மாற்றுவது பற்றி மாண்பு
மிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும், மற்ற உறுப்பினர்
களும் எடுத்துச் சொன்னார்கள். அதை மாற்ற வேண்டு
மென்ற எண்ணம் ஒரு கருத்தினுடைய அடிப்படையில்தான்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்
கிறது. சென்னையில் மக்கள் தொகை நாளுக்கு நாள்
பெருகிக் கொண்டு வருவதன் காரணமாகவும், குடிதண்ணீர்
பற்றாக்குறை ஏற்பட்டு இருப்பதன் காரணமாகவும், ஆக
குடிதண்ணீர் வசதியாக கிடைக்கக் கூடிய இடத்திலே மைய
மாக ஒரு இடம் இருக்கவேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்
பட்டிருக்கிறதே தவிர, அந்த கருத்து இன்னும் முடிவாக்கப்
படவில்லை என்பதையும், ஆக அந்தக் கருத்தினுடைய
அடிப்படையில் யாரும் தங்களுடைய அபிப்பிராயங்களை
தெரிவிக்கலாம் என்ற அளவிற்கு எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த
கருத்தினுடைய அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்
ரகுமான்கான் தெரிவித்தபடி, ஒரு பெரும் தலைநகரை
உடனடியாக இன்னொரு இடத்திற்கு அவ்வளவு எளிதாக
மாற்றிவிட முடியுமா, ஏராளமான, அதிகக் கணக்கான,
கோடிக்கணக்கான ரூபாய் செலவாகுமே என்ற கருத்தை
யெல்லாம் எடுத்து வைத்தார்கள். அது மையப் பகுதியாக
இருக்கவேண்டுமென்ற ஒரு கருத்தல்ல. இந்தப் பிரச்சனையை
எடுத்து வைத்து, எல்லோரும் தங்கள் தங்கள் கருத்துக்களைச்
சொல்லவேண்டும் என்று சொன்ன வகையிலே, சில பல சிறிய
கருத்துக்கள்கூட, யோசனைகளாகக் கூட, வந்திருக்கின்றன.
ஆக அவர்கள் சில பேர் எடுத்துச் சொல்லியதில் நாம்
ஓரளவிற்கு நெருக்கடியைக் குறைக்கவேண்டும். இங்கே அதிக
மான அலுவலகங்கள், மற்றவைகள் ஏற்படுவது மட்டு
மல்ல, சென்னையைச் சுற்றியுள்ள பெரிய பெரிய தொழிற்



1983 ஏப்ரல் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சாலைகள், தொழிற்பட்டறைகள், இங்கே துறைமுகம் இருப்
பதன் காரணமாக ஏற்றுமதி இறக்குமதி வசதிகளை ஒட்டி
அவைகளும் வளர்ந்து வருவதன் காரணமாகவும், இந்தத்
தொழிற்சாலைகளில் பணிபுரிகிறவர்கள் பெரும்பாலும் இந்த
நகரத்தில் வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டு, உண்டி,
உறையுள், இவைகளுக்கு இடம் தரப்பட்டுவருவதன் காரணமாக
இந்த நிலைமைகளைக் கண்டறிந்து, சிலர் சில
யோசனைகளை எல்லாம் சொல்லி இருக்கிறார்கள்.
சில நாடுகளில் சில இடங்களில் இருப்பதைப் போல,
சென்னையை முதலாவது நகரமாக வைத்து, திருச்சியை இரண்
டாவது நகரமாக வைத்து, முதல் தலைநகரம் சென்னையாக
இருந்து, இரண்டாவது தலைநகரம் திருச்சி என்ற எண்ணத்தில்
மேற்கொண்டு, மெல்ல மெல்ல படிப்படியாக ரீஜினல் ஆபீஸ்
போன்றவைகளை அகற்றி, முக்கியமானவைகளை இங்கே
வைத்துக் கொள்ளலாம். உதாரணமாக வாஷிங்டன் தலை
நகரமாக இருந்தாலும், பல்வேறு வகையில் நியூயார்க்தான்
தலைநகரமாக விளங்குகின்ற அளவிற்கு இருக்கிறது. காங்கிரஸ்
இருப்பது, பார்லிமெண்ட் இருப்பது, தூதர்கள் எல்லாம் இருப்
பது வாஷிங்டன் ஆக இருந்தாலும், மற்ற விவகாரங்கள்
அத்தனையும் நடத்துவது நியூயார்க்கில் தான் இருக்கிறது.
இந்தியாவில் கூட காஷ்மீரில் ஒரு 6 மாதம் அரசாங்கம்
இருந்தாலும், ஸ்ரீநகரில் 6 மாதம் இருந்தாலும், ஜம்முவை
இரண்டாவது நகரமாக வைத்திருக்கிறார்கள்.

மாஸ்கோவிற்கு எவ்வளவு பெருமை இருக்கிறதோ, அதை
விட அடுத்த அளவிற்கு லெனின்கிரேடிற்குத் தந்து அங்கே கூட
வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணம் வருகின்ற
போது உடனடியாகச் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை.
மாநிலம் முழுவதும் கண்காணிப்பு செய்கின்ற சிலபல சூபர்விஷன்
அலுவலகங்களை அங்கே கொண்டு போனாலும், முதல் இடம்
நகரம் சென்னை என்று வரலாற்றினுடைய அடிப்
படையில் வைத்துக் கொண்டாலும், அது தலைமைச் செயலகம்
சட்டமன்றம் போன்றவைகள் எல்லாம் எப்போதும்போல்
இருக்கத் தக்க அளவில் ஆக்கி, சில இடங்களில், ஏன் சொல்
கிறேன் என்றால், அப்படியும் சில கருத்துக்கள் வந்திருக்கின்றன.
இன்னும் முடிவு எடுக்கவில்லை என்பதையும், ஆனால் அது எல்
லோருடைய ஒப்புதலின் அடிப்படையிலே, சௌகரியம், வசதி
வாய்ப்புகளின் அடிப்படையிலே அது முடிவு எடுக்கப்படுமே தவிர,
கருத்துக்கள் பரிமாறப்பட்டு இருக்கிறது என்பதை மட்டும் நான்
இப்போது கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பரிசுச் சீட்டு வழங்குதலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். நான் பதில்
சொல்லுகின்றபோது பல வினாக்களுக்கு பதில் சொல்லியிருக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 12

கிறேன். இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்கிற இடம் தமிழகம் என்று நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். ஆனால் இதிலே ஒரு நன்மை உண்டு. அது என்னவென்றால் தனிப்பட்டவர்கள் ஒரு ஊருக்கு 10, 15 பேர்கள் என்று வேலை வாய்ப்பு பெற இந்த அரசு நடத்துகிற பரிசுச் சீட்டுகள் ஓரளவுக்குப் பயன்பட்டு வருகின்றன. இதிலே ஒரு கருத்து என்னவென்றால், அந்தந்த மாநிலத்தினுடைய பரிசுச் சீட்டுக்கள் அங்கங்கே விற்கத்தக்க அளவிற்கு ஒரு சூழ்நிலை ஏற்படுத்த வேண்டுமென்றால், அதற்கு மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வந்தாலும் அவ்வளவு சுலபத்திலே அதை நடைமுறைப் படுத்த முடியுமா என்ற சந்தேகம் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றாலும்கூட, தமிழக மாநிலத்தினுடைய அனுமதி பெறாமலே பாண்டிச்சேரி மாநிலத்தினுடைய பரிசுச் சீட்டு தனிப்பட்டவர்கள் ஏஜெண்ட் எடுத்து இங்கே கொண்டுவந்து விற்கும்போது, அதை இங்கே விற்கக் கூடாது என்று அதைத் தடுத்து நிறுத்தியவுடனேயே அவர்கள் ரிட் போட்டு, உயர்நீதி மன்றத்திலே போய் உத்தரவு கேட்டு, அதைத் தடுக்கக் கூடாது என்று வைத்திருக்கிறார்கள். அது வழக்கு மன்றத்திலே இருந்து கொண்டு இருக்கிறது. அவர்கள் சொல்லுகின்ற கருத்தின்படி பார்க்கின்ற போது ஏராளமான பணம் தமிழகத்திலேயிருந்து பிற மாநிலங்களுக்கு போகிறதே என்பதிலே மாண்புமிகு உறுப்பினர்களைப் போல எனக்கும் வருத்தம் உண்டு. இதற்கு நான் அடிக்கடி காரணம் எடுத்துச் சொல்வது உண்டு. பிற மாநிலங்களிலே இல்லாமல் முக்கால்வாசி பரிசுச் சீட்டோ, அல்லது அரைவாசிப் பரிசுச் சீட்டோ விற்பதற்கு ஏற்ற இடம் தமிழகம்தான் என்ற அளவிற்கு திட்டமிட்டு அவர்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதன் மூலமாக ஒரு நன்மை என்ன என்று கேட்டால், ஒரு 45 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் பேர்கள் இந்த பரிசுச் சீட்டுக்கள் மூலமாக, அதை விற்பனை செய்வதன் மூலமாக வேலை வாய்ப்பு பெற்று பிழைக்கிறார்கள் என்ற நன்மை இருக்கிறது. பெரும்பாலான முதல் பரிசுகள் இங்கேதான் விழுகின்ற அளவிற்கு இருக்கிறது. இப்போது நடந்த 77 லட்சம் பரிசுச் சீட்டுகூட இங்கேதான் விழுந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து 8, 1 லட்ச ரூபாய் பரிசுச் சீட்டுகள் இங்கே தான் விழுந்துகொண்டிருக்கின்றது. அதை வைத்துக்கொண்டு மேலும் மேலும் வாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்று நாம் ஆராயும்போது, இதற்கு நான் முன்பே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதற்குக் காரணம் நம்முடைய இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகத்திலே இருக்கிற பத்திரிகையிலேதான் இந்த ராசிபலன் போட்டுப் போட்டு, தினமும் ஒரு பக்கம் போட்டு, மேஷம், ரிஷபம், கன்னி, துலாம் என்ற அவனவன் ராசியை அவனவன்



1983 ஏப்ரல் 12] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

ஒழுங்குபடுத்தி வைத்து இந்த ராசி ஜெயிக்கிறதா இல்லையா, என்று பார்க்க 4 சீட்டுக்கள் வாங்குகிறோம் என்று அவன் வாங்கி அது ஜெயிக்காததைப் பற்றி அவன் கவலைப்படாத காரணத்தால் ஏராளமாக வாங்கி அவரவர்கள் அதிர்ஷ்டத்தை அவர்கள் பரிட்சை பண்ணியதிலே இந்தப் பணம் போனது, சில பேருக்குக் கிடைக்கிறது. அதை எப்படித் தடுக்கலாம். ஒழுங்குபடுத்தலாம் என்பதை நாம் யோசிக்கவேண்டும். போகிற போக்கைப் பார்த்தால் இது எங்கே போய் முறிந்துவிடுமோ என்று கூட கவனிக்க வேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு எல்லா மாநிலங்களும் சேர்ந்து, 77 லட்சம், ஒரு கோடி என்கிறார்கள், 1½ கோடி என்கிறார்கள். நான் சொன்னேன் நிதானமாக போவோம், அவனைப் பார்த்து நாம் தாவ வேண்டாம். இந்த 10 லட்சத்தோடு இருப்போம். கொஞ்சம் கொஞ்சமாக போய்ப் பார்ப்போம். இருக்கிற சூழ்நிலையைப் பார்ப்போம் என்று சொல்லியிருக்கிறேன். அதை ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த, மக்கள் வஞ்சிக்கப்படாமல் அதிலிருந்து வருகிற தொகை அரசுக்கு பயன்படுகிற அளவுக்கு, அரசின் காரியங்களுக்கு பயன்படுகிற அளவுக்கு இருக்கும். 1968-லே இருந்து தொடர்ந்து நடத்தி வருவதன் மூலமாக கிட்டத்தட்ட 16, 18 கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அதன் மூலமாக ஆதி திராவிடர்களுக்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு, இதிலேயிருந்து வருகின்ற தொகையை நாம் செலவழித்துக்கொண்டு வருகிறோம். தனியாருக்குப் போகாமல்அரசுக்கு வருகிறதே என்கிற மகிழ்ச்சியான ஒரு தன்மையைத்தான் நாம் பெற்றிருக்கிறோம்.

(மீற்பகல் 1-50)

திரைப்படங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி வருகின்ற அளவிலே மக்களுடைய தன்மைகளிலே மக்களை சிரிக்க வைத்து கேலி செய்வதற்கு அரசியல் தலைவர்கள், அரசியலிலே ஈடுபட்டவர்கள்தான் அதற்கு அகப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது வருந்துவதற்குரிய ஒன்றுதான். ஒரு ஜனநாயக நாட்டிலே அரசியல் தலைவர்கள், மற்றவர்கள், மதிக்கப்படுகிற அளவிற்கு, போற்றப்படுகிற அளவிற்கு, பாராட்டப்படுகிற அளவிற்கு பொது மக்கள் இடத்திலே பண்பு வளர்ந்தால் தான், ஜனநாயகம் தழைக்குமே தவிர, துணிந்து தங்களுடைய நேரம், நினைப்பு, உழைப்பு, அறிவு ஆற்றல்களை எல்லாம் பயன்படுத்துகிற அளவுக்கு இதிலே ஈடுபடுகிறார்கள், ஒருசிலர்தான் என்று சொன்னாலும் குறைபாடுகள் ஒரு சிலரிடம் இருக்கக்கூடும். ஆகவே ஒரு பர்ட்டிகுலர் பெர்சன் என்று இருப்பதை ஜெனரலைஸ் பண்ணி, அதிலே இருக்கிற அத்தனை பேருக்குமே அது பொருந்தி வருகிறது என்ற சூழ்நிலை ஏற்படுத்துகின்றபோது, எதிர்காலத்திலே ஒரு சிறந்த ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியாத அளவுக்கு, எந்த அரசியல்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13

தலைவர்களைப் பார்த்தாலும் சந்தேகம் கொள்கிற அளவுக்கு, எந்த அரசியல் தலைவர்களைப் பார்த்தாலும் அவர்களை இழித்துப் பழித்து, பேசுகின்ற அளவிற்கு சூழ்நிலை ஏற்பட்டு விடுமேயானால், கடைசியில் கேடு யாருக்கு என்றால், இந்தியாவுக்கும், ஜனநாயகத்திற்கும்தான் கேடு வந்து சேரும். ஆனால் அவர்கள் எடுத்துச் சொன்ன மாதிரி அரசியல் தலைவர்கள் மதிக்கப்பட வேண்டும், பாராட்டப் படவேண்டும், போற்றப் படவேண்டும், மதிக்கப்படுகிற அளவிற்கு அரசியல் தலைவர்களும் நடத்துகொள்ளவேண்டும் என்பதையும் நான் ஒப்புக்கொள்கி றேன். பாராட்டப்பட வேண்டிய அளவிற்கு போற்றப்பட வேண்டிய அளவிற்கு நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும்கூட தவறு செய்பவர்கள் கண்டிக்கப்படவும், மற்ற தன்மைகள் ஏற்படுகிற சூழ்நிலைகள் ஏற்படுதல் வேண்டும். ஆனால் இத்தகைய படங்களைப் பொறுத்த வரையிலே அனுமதி தராமல் இருப்பது நல்லதுதான்.

ஆனால் இந்தப் பொறுப்பு கூட மத்திய அரசாங்கத்தின் தணிக்கைக் குழுதான் கவனித்து வருகிறது. பெண்கள் கூட பல்வேறு பெரு நகரங்களிலே எங்களை முக்கிய காரணமாக வைத்து, எங்களை இழிவுபடுத்தி, எங்களை அவமானப்படுத்து கின்ற அளவிற்கு பால் உணர்ச்சியை ஊட்டி பல்வேறு படங்கள் எடுக்கிறார்கள் என்று சொல்லி, பெரும் பெரும் ஊர்வலங்களை நடத்தியிருக்கிறார்கள். ஆனால் படத்தின் மூலமாக ஏற்படும் நன்மையையும் நாம் பார்க்கவேண்டும். உதாரணமாக அண்மை யில் மகாத்மா காந்தி அவர்களின் படத்தை நாம் எல்லாம் பார்த்தோம். அந்தப் படம் எத்தகைய நன்மையை ஏற்படுத்தி யிருக்கிறது. அதிலே கூட சிலபல குறைகளைச் சொன்னார்கள். ஆனால் காந்தியடிகளின் வரலாற்றை காந்தியடிகளின் புகழை, பெருமையை அவர்கள் பாடுபட்ட தன்மையை உலக மக்கள் அத்தனை பேரும் தெரிந்து கொள்வதற்கு மிக எளிமையான வழி அந்தப் படத்தைத் தவிர வேறு எந்த வகையிலும் பெற முடியாது. காந்தியடிகளைப் பற்றி ஏராளமான புத்தகங்களை எழுதியிருந்தாலும், அதைப் படிக்காதவர்கள்தான் ஏராளம் உண்டு. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும். அதை எடுத்த வர் கூட அறிக்கை விட்டு இருக்கிறார். அந்தப் படத்தை எடுத்ததன் மூலமாக இதுவரையில் அவர்கள் அதற்காகப் போட்ட 20 கோடி ரூபாய் வந்து விட்டது என்றும், அதற்கு மேலும் பல கோடி ரூபாய் வருமானம் வரும் என்கிற நம்பிக்கை இருக் கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் படத்தை அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், மிகச் சிறப்பாக வர வேற்கின்றனர் என்றும், அதற்காக அவார்ட் [illegible] வரும் என் [illegible] ஆஸ்கார் அவார்ட் கூட வரலாம் என்றும் கூட கூறி [illegible]றார்கள். (குறுக்கீடு) அந்தப் படத்திற்கு ஆஸ்கார் [illegible] கொடுக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். நமக்கு அது



[illegible] 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

[illegible] தான். காந்தியடிகளைப் பற்றி எத்தனை புத்தகங் [illegible]ம் எழுதினாலும், உலக மக்களிடத்திலே போய் அவர் [illegible] அளவிற்கு புரிய வைக்க முடியாது. [illegible] புரிய வைக்கும் [illegible] பணியை இந்தப் படம் செய்து இருக்கிறது.

[illegible] அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், சில பல நல்ல படங் [illegible] எடுத்து இருக்கிறார்கள். ஆப்பிரஹாம் லிங்கனைப் பற்றி [illegible] எடுத்து இருக்கிறார்கள். உட்ரோ வில்சனைப் பற்றி எடுத்து [illegible] இருக்கிறார்கள். ஜியார்ஜ் வாஷிங்டனைப் பற்றி எடுத்து இருக் கிறார்கள். ஷேக்ஸ்பியர் நாடகங்களை எடுத்து இருக்கிறார்கள். [illegible] படங்கள் இருக்கின்றன. இலக்கிய கர்த்தாக் [illegible] படங்கள் இருக்கின்றன. தமிழர்கள் அதன் பக்கம் போக [illegible] என்கிறார்களே என்பது தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

[illegible] திரைப்படம் என்பது ஒரு சிறந்த கருவி. அந்தக் [illegible] ரஷ்யா தான் உலகத்திலேயே இருக்கும் நாடுகளிலே [illegible] சிறப்பாக பயன்படுத்தி, மக்களுடைய உள்ளத்திலே பதிய [illegible] வேண்டிய கருத்துக்களை, மக்களிடத்திலே பாராட்டப் [illegible] வேண்டிய, போற்றப்படவேண்டிய கருத்துக்களை, மக்களிடத் [illegible] எடுத்துச் சொல்வதற்கு ரஷ்யாதான் அதை மிகச் சிறந்த [illegible] பயன்படுத்திக்கொண்டு இருக்கிறது. அதிலே வெற்றி [illegible] இருக்கிறது. வெற்றி பெற்றுக்கொண்டு இருக்கிறது. [illegible] பெற வேண்டும் என்று கருத்தையும் அழுத்தம் [illegible] எடுத்துச் சொன்னவர் மாவீரன் லெனின் அவர்களும், [illegible] பின்பற்றி வந்தவர்களும் தான். ஆகவே, அவர்கள் [illegible] சொல்கிற மாதிரி, இதை ஒரு கட்டுக்கோப்புக்குள் [illegible] வந்து ஒழுங்குபடுத்துகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் [illegible]டியே நல்ல பல நிலைகள் ஏற்படும்.

[illegible] மாவட்ட வளர்ச்சி மன்றங்களைப் பற்றி மாண்புமிகு உறுப் [illegible] எடுத்துச் சொன்னார்கள். மாவட்ட வளர்ச்சி [illegible] இப்போது பரிந்துரைக்கும் குழுவாகத்தான் இருக் [illegible] தொடர்ந்து பல காலமாக அது எப்படி இருந்து [illegible] அதிலே வந்து பதில் சொல்லவேண்டியவர் [illegible] ஆட்சித் தலைவர் என்று இருக்கிற காரணத்தால்தான் [illegible] அதைப் பற்றி யோசித்து, யோசித்து பார்த்தும் [illegible] அதிலே மாற்றம் எதுவும் செய்ய முடியாமல், பதில் [illegible] கலெக்டராக இருப்பதால், அவரையே [illegible] அந்தக் கூட்டத்தை நடத்தவேண்டி [illegible]

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 13]

ஆனால் சட்டமன்றத்திற்கு இருப்பதைப் போன்று அவைத் தலைவர் தேர்ந்தெடுத்து விட்டால், அவர் பதில் சொல்ல முடியாது. அங்கே கேள்வி கேட்கிறவர்களை கேள்வி கேட்க வைத்து விட்டு, அங்கு வருகின்ற இன்ஜினியர்களையோ மற்றவர் களையோதான் பதில் சொல்லச் சொல்ல முடியும். அல்லது கலெக்டரேதான் பதில் சொல்லவேண்டும். அங்கே பரிந்துரை கள் செய்யப்படுவது ஒன்றும் நடைமுறைப்படுத்துவது இல்லை என்று சொன்னார்கள். அந்தக் கூட்டம் நடத்தியது, அங்கே விவாதிக்கப்பட்டது மினிட்ஸ் புக்கில் எழுத வேண்டும் என்று விதி இருக்கிறது. அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அதிலே எழுதி, அந்தத் துறைகளுக்கு அனுப்பவேண்டும் என்று இருக்கிறது. அப்படி அனுப்பப்பட்ட தீர்மானத்தின் மீது நட வடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இருக்கிறது. அப்படி என்ன நடவடிக்கைகள் அதன் மீது எடுக்கப்பட்டன என்பது குறித்து அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கப்படவேண்டும் என்றும் இருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்காவிட்டால் ஏன் எடுக்க வில்லை என்றும் காரணம் சொல்லவேண்டிய நிலை இருக்கிறது. அதற்கு எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் முனைப் பான உள்ளத்தோடு இருந்து, அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கும் நிர்வாகப் பொறும் புக்களுக்கும், பொதுமக்களின் பிரதிநிதிகளாக இருக்கிற மக்க ளோடு பழகி நிலைமைகளைப் புரிந்து கொண்டு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்படவும், நிலைமைகளைப் புரிந்து கொள்ளவும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்தவற்றை அதிகாரி களின் கவனத்திற்குக் கொண்டு வரவும், அவர்கள் எடுத்துச் செயல்படுகின்றவற்றை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக் கவும் பயன்படும் ஒரு ஃபோரம்மாகத்தான், ஒரு அமைப்பாகத் தான் நாம் இந்த வளர்ச்சி மன்றங்களைப் பயன்படுத்தி, அல்லது கருதிக்கொண்டு வருகிறோம்.

இதிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், மற்ற வர்களும் இடைவிடாது கலந்து கொண்டு அதை இன்னும் செம்மைப்படுத்தவும், சீர்மைப்படுத்தவும் சூழ்நிலைகளை மேற் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது கோரம் வருவது இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

அப்படி கோரம் வருவதற்கு ஒன்றிய அதிகாரிகளை எல்லாம் அதிலே இடம் பெறச்செய்வது நல்லது என்று சொன்னார்கள். அந்த மன்றத்திலே அதிகாரிகளைக் [illegible] [illegible] [illegible] நல்லதல்ல. பதில் சொல்லும் அதிகாரிகள் [illegible] [illegible] [illegible] வேண்டும். காரண, காரிய விளக்க[illegible]



[1983 ஏப்ரல் 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

எடுத்துச் சொல்லக் கூடிய அதிகாரிகள் தான் அங்கே இருக்க வேண்டும். ஆனால் பொது மக்களின் பிரதிநிதிகள் அதிலே இருந்து செம்மைப் படுத்தினால் தான் அது மக்களுக்கு, அரசுக்கு மிக மிக நல்லது. பல பிரச்சினைகளை எங்களுடைய அளவிற்குக் கொண்டு வராமல், செக்ரடேரியட்டுக்கு கொண்டு வராமல், மாவட்ட அளவிலே முடிவு எடுக்கக் கூடிய அந்தப் பிரச்சினை களை அந்த வளர்ச்சி மன்றத்திலேயே எடுத்துச் சொல்லி, விவா தித்து, முடிவு எடுத்து, எவ்வளவு சிறப்பாக அதை நடைமுறைப் படுத்த முடியுமோ அவ்வளவு சிறப்பாக அதை நடைமுறைப் படுத்தினால், அரசாங்கத்தின் நரமும் குறையும்; நினைப்பும் குறையும். தலைமைச் செயலகம் மற்ற இடங்களில் பல தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும். ஆனால் இதைச் செம் மைப் படுத்துகின்ற அளவிற்கு மாவட்டங்களிலே உள்ள இந்த வளர்ச்சி சிறப்புற நடைபெற வேண்டும் என்பதில் நாம் சீரான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய விருப்பம் தான் அவர்கள் எடுத்துக் கொள்கிற முயற்சியிலே வெற்றி பெறுவதும் வெற்றி பெறாததுமாக இருக்கிறது. ஆளைப் பொறுத்து, ஆற்ற லைப் பொறுத்து, அவர்களுடைய திறமையைப் பொறுத்து அமைந்து விடுவதால் சிலபல மாவட்டங்கள் செம்மையாக இருக் கின்றன; சிலபல மாவட்டங்கள் கணங்கிக் கிடக்கின்றன. இந்த நிலைமை இல்லாத அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அடிப்படையிலே நிர்வாகத் தன்மையில் சிலபல சீர் திருத்தங்கள் செய்தால் நல்ல வழி ஏற்படும் என்றால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

மனுநீதி திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்த நோக்கம் சிறப்பானது. அதிகாரிகள் சென்று அங்கே நேரடி யாக மக்களைச் சந்தித்து, விசாரித்து, அந்த இடத்திலேயே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக இருந்தால் அங்கேயே தீர்த்து, தீர்க்க முடியாவிட்டால் அதற்குரிய வழிமுறைகளைக் கண்டு, ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் இடைவெளி கொடுத்து, தீர்ப்பதற்கான உறுதிமொழி கொடுத்தால், இடை வெளிமுடிந்தவுடன் உறுதிமொழி நிறைவேற்றப்படுமானால் பெரும் பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும். ரெவின்யு இன்ஸ்பெக்டர், தாசில்தார் மூலமாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளுக்கு மகஜர் தயார் செய்து, அமைச்சர்களிடம் கூட வந்து விடுகிறார்கள். [illegible] அதற்கு நோட்டு போட்டு மறுபடியும் தாசில் தாருக்கு [illegible] ரெவின்யு இன்ஸ்பெக்டருக்குப் போய் அவர்கள் [illegible] நடக்கிறது. ஆகவே, மனுநீதி திட்டம் சிறப்பாகச் செயல்பட்டால் இந்தக் காலதாமதம் ஏற்படாமல் காரியங்கள் [illegible] நடக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த டி.டி.சி. கூட்டம் வடார்க்காடு போன்ற மாவட்டங்களில் நடைபெறுகிறது. கோரம் வருவதை பொறுத்தவரையில் ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எண்ணிக்கையை வைத்து கோரம் கணக்கிடப்படுகிறது. யூனியன் தலைவர்கள் இல்லாத காரணத்தால் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுடைய கணக்கை வைத்து கோரம் கணக்கிட்டால் சபை கூடுவதற்கு ஏதுவாக இருக்குமே. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற ஒரு கருத்து நடைமுறைக்கு சாதமகாக இருக்குமானால் அதைப்பற்றிக்கூட யோசிக்கலாம். ஆனால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் அவையிலே உட்காரும்போது ஒரளவுக்கு கோரத்தை வைத்துக் கொள்கிற சூழ்நிலையையும், அவர்கள் வராத சூழ்நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கிற அளவுக்கு அவர்களுடைய எண்ணிக்கையைத் தகுந்தாற் போல் ஒரு கோரத்தை அமைத்துக் கொள்கிற சூழ்நிலையும் அமைத்துக் கொள்வதிலே எனக்கு ஆட்சேபம் இல்லை. அதை அரசு சிந்தித்து செயலாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாவட்டத்தின் அளவு சுருங்க, சுருங்க நிர்வாகத் திறன் பெருகும் என்ற நோக்கத்தோடு இந்த கருத்து மேற்கொள்ளப்பட்டது என்றாலும் இந்தக் கருத்துக்கள் பற்றி வருவாய்த் துறையின் சார்பாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கிற சூழ்நிலையின் உடனடியாக நிதி அமைச்சர் என்ற முறையில் நான் மாவட்டத்தைப் பிரிக்க அனுமதிக்கவும் மாட்டேன் ; அனுமதிப்பதாகவும் இல்லை. ஆனாலும் கூட இந்த கருத்து செம்மைப்பட வேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்கிறேன். அதற்கு முன்னேற்பாடுகள் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றால் நமக்கு நிதி ஆதாரங்கள் எல்லாம் சீர்படுகிற நேரத்தில், நிர்வாகத்தை சீர்படுத்துவதற்கு பல்வேறு தன்மைகள் ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

வறட்சியைப் பற்றி, வறட்சி நிவாரணப் பணிகளைப் பற்றி சொன்னார்கள். 1982-83 வறட்சி நிவாரணப் பணிக்கு அரசு [illegible] 100 கோடி ரூபாய் [illegible] [illegible] [illegible] 17 [illegible] ரூபாய் [illegible]





[illegible] அனுப்பி வைத்தோம். 18—3—1983 அன்று மத்திய அரசு 5 கோடி ரூபாய் நமக்கு வறட்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசு [illegible] அதில் 3·5 கோடி ரூபாய் கடன் ; 1·5 கோடி ஒதுக்கித் தந்தது. 31—3—1983-லே 10 கோடி ரூபாய் மத்திய ரூபாய் மானியம். [illegible] பணிகளுக்கு என்று அளித்தது. அதிலே அரசு வறட்சி நிவாரணப் [illegible] கோடி மானியம். இப்போது 75 கோடி ரூபாய் 7 கோடி கடன், [illegible] அனுமதித்திருப்பதாக செய்தி வந்தது. இன்னும் மத்திய அரசு [illegible] நமக்கு வரவில்லை என்றாலும் விரைவில் அதிகாரப் பூர்வமாக [illegible] நம்புகிறோம். இருந்தாலும் 75 கோடியில் கடன் வரும் என்று [illegible] எவ்வளவு என்று அறிவிப்பார்கள். அப்படி எவ்வளவு, மானியம் போதாது என்று தொடர்ந்து வற்புறுத்துவோம். கொடுத்தாலும் நாம் கேட்ட தொகை ஓரளவுக்கு வந்தால் தொடர்ந்து வற்புறுத்தி [illegible] பணிகள் எல்லாம் சிறப்பாக நடைபெறும் என்பதைத் நம்முடைய [illegible] தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமைச் செயலாளர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். இப்போது இரண்டாம் செயலாளராக இருந்தவர் செயலாளராக இருக்கிறார் என்று சொன்னார்கள். தலைமைச் செயலாளருக்கு உடல் நலம் சரியில்லை என்ற காரணத்தால் தற்காலிகமாக இரண்டாம் செயலாளராக இருந்தவருக்கு அந்தப் பொறுப்பை (இன்சார்ஜ்) கொடுத்திருக்கிறோம். எந்த அடிப்படையில் அப்படிச் செய்திருக்கிறோம் என்றால் தலைமைச் செயலாளர் உடல் நலம் பெற்று மறுபடியும் வருவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான். அதுவரையில் இரண்டாம் செயலாளரின் பொறுப்பு தற்காலிகமாகத்தான் இருக்கும். ஏற்கெனவே திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமைச் செயலாளராக இருக்கும்போது அவர் அதிலிருந்து விடுபட்ட போது அல்லது விடுமுறையில் சென்றபோது கூட இரண்டாம் செயலாளராக இருந்த திரு. திரவியம் அவர்களைத்தான் பொறுப்பாக வைத்தோம்.

(பிற்பகல் 2-00)

அந்த வகையிலேதான் இரண்டாவது செயலாளராக இருப்பவரை பொறுப்பாகத்தான் வைத்திருக்கிறோமே தவிர, நிரந்தரமாக தலைமைச் செயலாளராக ஆக்குவது என்றால், அப்போது பல காரியங்களையும், பல நிலைமைகளையும் நாம் சிந்தித்துச் செய்ய வேண்டும் என்ற நிலைமைகளை மட்டும் நான் சொல்லிக்காட்ட விரும்புகிறேன். மற்றொன்றையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தர்மபுரியிலே மரம் வெட்டப்படுவதைப் பற்றி.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 12

தர்மபுரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டத்தில் புறம்
போக்கு நிலங்களில் பெரும் அளவுக்கு மரங்கள் வெட்டப்பட்
டிருப்பது செப்டம்பர் 1982ல் கண்டு பிடிக்கப்பட்டது. ரூபாய்
3 லட்சம் பெறுமான மரங்கள் வெட்டப்பட்டிருந்தது கைப்பற்றப்
பட்டன. சுமார் 10 லட்சம் ரூபாய் பெறுமான மரங்கள்
வெட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆல், புளி,
மா, இலுப்பை போன்ற மரங்கள் வெட்டப்படுவதாக சொல்லப்
படுகிறது. அது மட்டும் அல்லாமல், திருவாளர்கள் சாதிக்
அலி, ஸ்ரீராம் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது
வழக்கு விசாரணையில் உள்ளது. அரசு ஊழியர்களில், ஒரு
வட்டாட்சியர், ஒரு துணை வட்டாட்சியர், ஒரு உதவியாளர்,
3 வருவாய்த் துறை ஆய்வாளர்கள் மற்றும் ஒரு சர்வேயர் தற்
காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித்
தலைவர், மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.
ஆகவே, இதில் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்
கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க உறுதியாக இருக்கிறது
என்பதையும் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் இனிமேல் நடை
பெறாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது என்
பதையும், இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை நகருக்கு குடிதண்ணீர் கொண்டு வருகின்ற பிரச்
னைப் பற்றி எடுத்துச் சொல்கிறபோது, கிருஷ்ணா நதி தண்
ணீரைக் கொண்டு வருவதுபற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள்
இங்கே எடுத்துச் சொன்னார்கள். 1976 ஆம் ஆண்டு
இந்தியாவினுடைய பிரதமர் இங்கே வந்தபோது, மற்ற
மாநில அமைச்சர்களையும் அழைத்து வைத்து, கேரளம் கர்நாட
கம், மகாராஷ்டிராவிடம் ஒரு பங்கு, கர்நாடகமும் ஒத்துக்கொண்டு
ஆந்திராவிலிருந்து ஒரு பங்கு என்று சேர்ந்து நமக்கு குடிதண்ணீர்
தருவது என்ற நிலைமையை ஏற்படுத்தினார்கள். அப்படி ஏற்
படுத்திய அந்தச் செயலை நாம் அப்போதே பாராட்டியிருக்
கிறோம். மத்திய அரசு தரக்கூடிய நன்மைகளை மற்றவைகளை
நாம் பாராட்டத் தவறியதே இல்லை. ஆனால் கேட்கவேண்டிய
வைகளை கேட்காமல் விடுவதும் இல்லை. அப்படி வற்புறுத்திக்
கேட்க வேண்டியவைகளை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுதான்
இருக்கிறோம்.

கிருஷ்ணா நதி தண்ணீரைப்பற்றி, அதற்குப் பின்னாலே வந்த
எல்லா அமைச்சரவைகளும், சென்னாரெட்டி வந்தபோதும் சரி,
அதற்குபிறகு, அஞ்சையா அவர்கள் வந்த போதும் சரி, உட்கார்ந்து
பேசி அதிலே முதலிலே ஒரு முடிவுக்கு வந்து, அதற்குப் பிறகு
வெங்கட்டராமன் அவர்கள் வந்த பிறகும் கூட, இதைத் தருவதி
லே தகராறு இல்லை என்று சொல்லி, கையெழுத்து இடுகின்ற
அளவுக்கு அதிகாரிகள் மட்டத்திலே பேசி ஒரு முடிவுக்கு கொண்டு



1983 ஏப்ரல் 12] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

வரப்பட்டது. அதற்குப் பிறகு உயர்திரு, விஜயபாஸ்கரரெட்டி
அவர்கள் முதலமைச்சரானார்கள். அவர்களும் இதற்கு இணக்கம்
தெரிவிக்கின்ற நிலைமைக்கு வந்தார்கள். அதற்குள்ளே அங்கே
தேர்தல் ஏற்பட்டு இப்போது, அங்கே முதலமைச்சராக வந்திருக்
கக்கூடிய மாண்புமிகு என். டி. ஆர். அவர்களும், அந்த கிருஷ்ணா
நதி தண்ணீர் கொடுப்பது சம்பந்தமான கருத்துக்களை, அவரு
டைய கேபினட் அளவிலே, அமைச்சர்களை உட்கார வைத்து
பேசி அதற்கு ஒப்புதல் வாங்கி விட்டதாக, பத்திரிகை செய்தி
களிலே பார்த்தோம். அது பற்றி பேசுவதற்கு கிருஷ்ணா நதி
நீரைக் கொண்டு வருவது பற்றி, ஆந்திர முதலமைச்சருடன்
பேச ஏப்ரல் மாதம் 18 ஆம் தேதி, ஹைதராபாத்துக்கு வர
வேண்டும், என்று ஆந்திர மாநில முதல்வரிடமிருந்து நமது
முதலமைச்சருக்கு கடிதம் வந்திருக்கிறது. ஏப்ரல் மாதம் 18-ஆம்
தேதி ஹைதராபாத்திலே இதை வைத்துப் பேசலாம் என்று அவர்
கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த திட்டம் ஓரள
விற்கு நமக்கு பலன் அளிக்கத்தக்க அளவிற்கு சாதகமாக அமை
யும் என்று கருதுகிறேன்.

அது மட்டும் அல்லாமல், நிர்வாகத்தைப் பொறுத்தவரை
யிலும் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.
இருக்கிற குறைபாடுகள் மற்றவைகள் எல்லாம் களைந்து எறிந்து
மற்றவர்கள் பாராட்டத்தக்க அளவுக்கு ஆகவேண்டும் என்பது
தான் அரசினுடைய எண்ணமும். அதற்கு அரசோடு மற்றவர்
களின் ஒத்துழைப்பு எல்லாம் கூட தேவை. மாண்புமிகு உறுப்
பினர் சித்தன் அவர்கள் கூட தன்னுடைய உரையை முடிக்கும்
போது சொன்னார்கள். இப்போது நிர்வாகம் ரொம்ப ஸ்தம்பித்து
இருக்கிறது என்று சொல்லி ஒரு தனிப்பாடலையும் எடுத்துச்
சொல்லி—காளமேகப் புலவருடைய பாடல் என்று கருதுகிறேன்
அதையும் எடுத்துச் சொன்னார்கள்.

முன்னே கடிவாள மூன்று பேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்துஇரண்டு பேர்தள்ள எந்நேரம்
வேதம் போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி

என்று சொன்னார்கள்.

குதிரை விகடராமன் குதிரை. அதைத் தள்ளுவதற்கு பின்னே
இரண்டு பேர் இழுப்பதற்கு முன்னே மூன்று பேர் வேண்டும்.
நீங்கள் கொடுத்த அந்தக் குதிரையை நாங்கள் என்ன செய்வது,
அப்படிப்பட்ட குதிரையாக வந்து சேர்ந்திருக்கிறது. மூன்
பேர்கள் அந்தக் குதிரையை முன்னாலே இருந்து இழுக்கத்தாறு
வேண்டும்.........(சிரிப்பு)

[1983 ஏப்ரல் 12

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க துணைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் நாங்கள்
கொடுத்த குதிரை என்று சொல்லுகிறார்கள். நான் உங்கள்
மூலமாக அவருக்குச் சொல்லுவது, நாங்கள் கொடுக்கும்போது
நல்ல குதிரையாகத்தான் கொடுத்தோம். இப்போது அப்படி
ஆகிவிட்டது....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குதிரையை
ரொம்ப நாளாக ஓட்டிக் கொண்டிருந்தது நீங்கள்தான். அந்தக்
குதிரையைத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கஷ்டப்
பட்டு நகர்த்திக் கொண்டு வந்தார்கள். இப்போதும் அதை கஷ்டப்
பட்டுத்தான் நடத்த வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) குதிரை
என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் சொன்
னதில், அந்த உதாரணத்தை எடுத்துக் கொண்டு நான் சென்னேனே
தவிர, வேறு இல்லை. நிர்வாகம் ஸ்தம்பித்து இருக்கவில்லை.
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் விரைவாக பணிகள்நடை
பெறவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதனால்
காலதாழ்வு ஏற்படக்கூடிய பல்வேறு நிலைமைகளை எடுத்துச்
சொன்னார்கள். அதை ஏற்றுக் கொள்கிறேன்.

அதை வைத்துத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களும்
கூட சில விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். ஒரு மாதம்
இரண்டு மாதத்திலே நடைபெறவேண்டிய செயல்கள் கூட
6 மாதம், 7 மாதம் ஆகின்ற அளவுக்கு இருக்கின்றதே என்ற
வேதனைப்பட்டு இவர்களை நம்பி ஆட்சி செய்யவேண்டி
இருக்கின்றது என்ற ஒரு நிலைமையை அவர்கள் எடுத்து
வைத்தார்கள். ஆகவே எல்லாம் விரைவாக நடப்பதற்கு
மேல் மட்டத்திலே இருந்து அடி மட்டம் வரையிலும்
எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். மிகச் சிறப்பாகச்
செம்மையாகப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று நினைப்
பவர்கள் எல்லா மட்டங்களிலும் இருக்கிறார்கள்.
அலட்சியப் போக்கிலே விட்டுவிட்டுப் போகிறவர்களும் எல்லா
மட்டங்களிலும் இருக்கிறார்கள். ஆகவே இந்தக் குறைபாடு
களை எல்லாம் போக்கவேண்டும் என்பதற்காகத்தான் அதாவது
மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிட்டபடி அவர்கள்
கேட்டதற்கு பதில் வருவதில்லை; நடவடிக்கைகள் எடுக்கப்
படுவதில்லை என்ற நிலைமை இல்லாமல் இருப்பதற்காகத்
தான் ஒரு ஜெனரல் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கப்பட்டு இருக்
கின்றது. அதாவது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்
சட்டமன்ற மேலவை உறுப்பினர் அல்லது பாராளுமன்ற
உறுப்பினர் மகஜரோ அல்லது கோரிக்கையோ கொடுத்தால்
அவர்களுக்கு உடனடியாகப் பதில் எழுத வேண்டும் என்றும்
அவை பற்றிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அப்படி



1983 ஏப்ரல் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எடுத்த உள்ள நிலையை அவர்களுக்குச் சொல்ல
நடவடிக்கை எடுத்து அந்தவகையில் நடவடிக்கைகளை மேற்
வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறோம்.
கொள்ளவேண்டும் என்றும்

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத்
தலைவர் அவர்களே, இதுவரை சட்டமன்ற உறுப்பினர்களாகிய
நாங்கள் பல்வேறு மனுக்களை அனுப்பி இருக்கிறோம்.
நம்முடைய நாவலர் அவர்கள் ஒரு ஸ்டேன்டிங் இன்ஸ்ட்ரக்
ஷன் கொடுத்து பதில் கொடுக்கவேண்டும் என்று சொல்லி
இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் எந்த
விதமான பதிலும் வரவில்லை. ஆகவே இனிமேலாவது
அதை நடைமுறைப்படுத்துவதற்கு நாவலர் அவர்கள் முயற்சி
எடுப்பாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, எடுக்கவேண்டிய நடவடிக்கை
களை எடுக்கிறோம். ஆனால் அவரை எடுத்துக்கொள்ள
வேண்டும், இவரை மாற்றவேண்டும் என்று வருவதெல்லாம்
(குறுக்கீடு). அதற்கெல்லாம் பதில் தர முடியாது. ஆக
பொதுவான பணிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு
அமைச்சரும் உடனடியாக நோட் போட்டு டிப்பார்ட்மென்டுக்கு
அனுப்புகிறார்கள். அப்படி எல்லா அமைச்சர்களும் செய்ய
வேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். கூடுமான வரையில்
செய்கிறோம். எல்லா அமைச்சர்களும் செய்கிறோம். அவற்
றின் மீது குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று
எழுதுகிறார்கள். அப்படி எழுதும்போது தக்க நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தியினையும் அதற்குப் பிறகு
என்ன நிலைமை என்பதையும் தெரிவிக்கின்ற சூழ்நிலை இருப்பது
உங்களுக்கும் நல்லது. (குறுக்கீடு) ஏனென்றால் ஒரு தடவை
சொல்லி விட்டுவிட்டால் மறுபடியும் நீங்கள் வராமல் இருப்பீர்
கள் என்பதில் எங்களுக்கும் நல்லது. இல்லை என்பதை இல்லை
என்று முதலிலேயே சொல்லிவிட்டாலும் மறுபடியும் வரமாட்டீர்
கள். ஆகவே அந்த வகையில் ஒரு திருப்தி ஏற்படும். அந்தந்தத்
தொகுதி மக்களிடத்திலே சென்று அவர்கள் இது நடை
பெறும் என்ற நம்பிக்கையை அவர்கள் ஊட்டுவதற்கு வாய்ப்பு
ஏற்படும். அந்தந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் அந்தத் தொ
குதியைப்பற்றியபணிகளின் நிலைமையை அறிந்து கொள்ள விரும்
புவது இயற்கை. அவற்றைச் சட்டமன்ற உறுப்பினர்கள் மூல
மாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று கருதுவது இயற்
கை. அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை
அவர்கள் அறிந்து கொள்ள விரும்புவது இயற்கை. அதற்காகத்
தான் இன்ஸ்ட்ரக்ஷன் இருக்கிறது. எல்லாத் துறைகளுக்கும்
அனுப்பி வைத்திருக்கிறோம். எல்லா அமைச்சர்களுக்கும் அனுப்பி

வைத்திருக்கிறோம். அதனை எல்லா அமைச்சர்களும் கடைப் பிடிக்க வேண்டும் என்று நான் இந்த அவையின் மூலமாக வேண்டு கோளை விடுக்க நான் ஆசைப்படுகிறேன்.........

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எழுதுகின்ற பொதுக் காரியங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் வராமல் இருப்பதை உணர்ந்து மீண்டும் நாங்கள் கடிதம் எழுதுகின்ற போது அருள் கூர்ந்து இந்தத் துறை எடுத்த நடவடிக்கைகளை எங்களுக்கு பதிலாக அனுப்ப வேண்டும் என்று ஒரு வேண்டுகோளையும் அத்தோடு சேர்த்து அனுப்பியும் கூட பதில் வரவில்லை. தப்பித் தவறி வருகின்ற கடிதங்கள் தேதி கூட போடாமல் வரு கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, தேதி போடாமல் வருவது எல்லாம் சாதாரணக் குற்றங்களாக இருக்கும். ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது கடமை என்பதை உணர்கிறேன். அவர்கள் தெரிந்து கொள்வதன் மூலமாக ஒரு நிலைமையை அவர்கள் எடுத்துச் சொல்லவும் முடியும். அந்தத் தன்மையை உணர்ந்துக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து தலைமைச் செயலாளர் அவர்கள் எல்லா துறையினருக்கும் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்த வரையில் இங்கே உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்களையும், நான் அவற்றுக்குச் சொன்ன பதில்களையும் வைத்துக்கொண்டே அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என் பதையும் நான் இந்த அவையிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே மேலும் பல பிரச்சினைகளைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றிலே பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் அவ்வப்போது வினாக்கள் மூலமாக எடுத்துச் சொல்கிறோம். மேலும் எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலேதான் போக வேண்டும். அந்த வகையிலே அமைச்சர்கள், உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒத்துழைப்புத் தந்து பொதுமக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய செயல்களைச் சிறப்பாகவும், செம்மையாகவும் ஆற்றுவதற்கு இந்த நிர்வாகத் துறையும், ஆட்சித் துறையும், தலைமைத் துறையும் மற்றைய துறைகள் எல்லாம் பாடுபட வேண்டும். இப்படி அத்தனை பேருடைய ஒத்துழைப்பிலேதான் நாங்களும் ஆட்சி புரிய வேண்டும், அந்த வகையிலேதான் எடுத்துச் சொல் வார்கள்.



(பிற்பகல் 2–10)

சான்னார்
சம்பள உயர்வு, படி உயர்வு மற்றவை எல்லாம் முடியாத
கள். ஆகவே எந்த ஒரு துறைக்கும் இப்போது உயர்த்த க்கிறேன்
நிலைக்கு இப்போது நிதி அமைச்சர் நின்று கொண்டிரு இந்த
என்பதையும் ஆனால் சூழ்நிலை சரியாக வருகின்றபோதிலதையும்
பிரச்சினைகளை எல்லாம் கவனிக்கப்படும் என்ப றேன்.
சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கி
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி வுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச் சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

திருவாளர்கள் த. வேணுகோபால், கே. கல்லன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேர வையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,14,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. கல்லன், எம். செல்வமுத்து ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேர வையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற் றன.

[பேரவைத் துணைத் தலைவர்] [1983 ஏப்ரல் 12

திரு. எம். ஆறுமுகம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

" மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,40,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (13-4-1983) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப் படிக்கான விதிகளும் ஆணைகளும்.

தமிழ்நாடு 19 2 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள்
248. தமிழ்நாடு 19 2 ஆம் ஆண்டு செய்வது குறித்து
அங்காடிகள் விதிகளில் சில திருத்தங்கள் வேளாண்மைத் துறையின்
12-11-1983 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிக்கை [தமிழ்
42 ஆம் எண் அரசாணையில் வெளியான பொருள் அங்காடிகள்
நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை 29 (4) பிரிவின் கீழ்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959)
பேரவை முன் வைக்கப் பெற்றது.]

இறன் முறை தனியார் நிறு
249. திருவாளர்கள் பம்பனாடி பொருட்களை வாங்கு
வனத்தினரால் தயாரிக்கப்படும் கச்சாப் விலக்களிப்பது குறித்து
வதில் விற்பனை வரி விதிப்பதிலிருந்து வணிக வரிகள்-சமய அறக்
24-12-1982 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணையில் வெளி
கட்டளைகள் துறையின் 1421 ஆம் எண் ஆண்டு பொது விற்
யான அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் 1/1959) 53 (5)
பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

பொது விற்பனை வரிச் சட்டத்தின்
250. 1959 ஆம் ஆண்டு செய்வது குறித்து
முதல் அட்டவணையில் சில திருத்தங்கள் வணிக வரிகள் சமய அறக்
27-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணையில் வெளி
கட்டளைகள் துறையின் 245 ஆம் எண் ஆண்டு பொது விற்
யான அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் 1/1959) 53 (5)
பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம்
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

முந்தைய முதல் அட்ட
251. 1-7-1981 ஆம் ஆண்டுக்கு 147 இன்படி ஏற்கெனவே
வணையின் பதிவுகள் 144, 145 பொருட்களின் மீது வரி
வரி விதிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள 13-8-1982 ஆம் தேதி
விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து, அறக்கட்டளைகள் துறையின்
யிடப் பெற்ற வணிக வரிகள்-சமய அறிவிக்கை
947 ஆம் எண் அரசாணையில் வெளியான வரிச் சட்டத்தின்
[தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை பேரவை முன்
(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ்
வைக்கப் பெற்றது.]

இயந்திரங்களின் மீது ஒரு முனை
252. நிறுவை அளவை ஆண்டு பொது விற்பனை
வரி விதிப்பது குறித்து, 1959 ஆம் திருத்தம் செய்வது
வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் வணிக வரிகள்-
குறித்து 25-8-1982 ஆம் தேதியிடப் பெற்ற எண் அரசாணை
சமய அறக் கட்டளைகள் துறையின் 897 ஆம்

யில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

253. 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 19 ஆவது படிவத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, 2–8–1982 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 898 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

254. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் விதி 16, உள் விதி (12) இல் சில திருத்தங்கள் செய்வது குறித்து 11–8–1982 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 779 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

ஆவணக்காப்பக
136035
சென்னை-600 008
Y211,31 N83
N83 49.2 f3;1